P31
M89
162935

உ

கடவுள்துணை.

# முத்துவீரியம்.

இதில்

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி

என்னும்

ஐந்திலக்கணமும்

அடங்கியிருக்கின்றன.

---

நூலாசிரியர்

திரிசிரபுரம்

உறையூர் வித்வான்

முத்துவீர உபாத்தியாயர்.

உரையாசிரியர்

திருநெல்வேலி

திருப்பாற்கடனாதன் கவிராயர்.

---

Madras:

PRINTED AT THE ALBINION PRESS,

BACK OF MEMORIAL HALL.

1889.

*All Rights Reserved.*

P31
M89
162935

# PUBLISHER'S NOTE.

The first two parts of this Grammar were published in 1881, by the kind aid of Mr. Pattabiram Pillay, a Deputy Collector in Government service.

It will be admitted that a *complete* Tamil Grammar, treating of the 5 parts in a style like that of the present work, is a desideratum amongst the present scholars; and I have therefore ventured to publish the "Muthuviryam" in full, by obtaining the work in manuscript from the author.

S. PULNEY ANDY, M.D., F.L.S.

# விளம்பரம்.

---

## இந்நூல் பதிப்பித்தற்குக் காரணம்.

அகத்தியம், தொல்காப்பிய முதலிய முன்னூல்களும், இலக்கணவிளக்க முதலிய பின்னூல்களும், ஐந்திலக்கணத் தனவாயினும், அவை, மூலமும் உரையும் மிகக்கற்றுவல்ல சான்றோர்க்கே றி ஏனையோர்க்கு அரிதுணர்பான்மைத்தாய் அருநடையுள்ளனவாதலானும், இது, எளியநடையுள்ளதும், பழையனகழிதலால், அக்காலத்து வழங்கிய சில விதிகள், இக்காலத்து வழங்கிப் பெரும்பயன்றராமை கருதி ஒழித்தும், புதியனபுகுதலால், அக்காலத்து வழங்காதிருந்து இக்காலத்துப் பெரும்பயன்றருதல் கருதிச்சேர்த்தும் செய்யப்பட்டிருப்பதுமா யிருத்தலானும், இக்காலத்து, ஐந்திலக்கணமும் முறையே யொருவாறு கற்கப்புகுமாணாக்கர்க்கு மிகவும் பயன்படுமென்பதுகருதி, யாம் இதனை அச்சிட்டு வெளியிடலாயிற்று.

S. P. A.

# முத்துவீரியம்.

## சிறப்புப்பாயிரம்.

அகனுலகுவப்பப் பகல்கான்றெழுதரு
மிரவியிற்றொரு முதலேயாகி
நிலவணிவேணிய னலர்தருதன்மையி
னகவிருடொலைதர வறம்பொருளின்பம்வீ
டோவறவருளிய மூவறுமொழியுளும்
வடவேங்கடந்தென் குமரியாயிடைத்தமி
ழெழுத்தொடுசொற்பொரு ளியாப்பணியைக் கூ
மெளிதிற்புலப்பட வியற்றித்தருகென
வுகளிளவராலின மகணிசூழ்நெல்லைப்
பதியினனிலக்கண விதிமுழுதுணர்ந்தோன்
சங்கரன்மிலைந்த கங்கையில்வந்தோன்
சுப்பிரமணியதே சிகன்கவிப்பெருமா
னறைந்தனனுக வகத்தியநூல்வழி
முத்துவீரியமெனத் தற்பெயர்நிறீஇ
வகுத்தனனுறந்தை யகத்தெழுந்தருளிய
முத்துவீரமா முனிவனென்பவனே.

என்பது யாதெனில்,

யாதானுமோர் நூலுரைப்புழிப் பாயிரமுரைத்துரைக்க வென்பதிலக்கணம். என்னை, "ஆயிரமுகத்தா னகன்றதாயினும்-பாயிரமில்லது பனுவலன்றே" என்றாராகலின்: நூல் கேட்கப்புகு மாணாக்கன் பாயிரங்கேட்கவேண்டும்; கேளாக்கால் குன்றுமுட்டியகுரீஇப்போல இடர்ப்படும்.

# பொதுப்பாயிரம்.

அப்பாயிரம் பொதுப்பாயிரமெனவும் சிறப்புப்பாயிரமெனவும் இருவகைப்படும். அவற்றுள், பொதுப்பாயிரம் எல்லா நூன்முகத்தும் உரைக்கப்படும்; அது நான்குவகைப்படும்.

என்னை,

ஈவோன் றன்மை யீதலியற்கை
கொள்வோன்றன்மை கோடன்மரபென
வீரிரண்டாகும் பொதுவின்றொகையே

என்றாராகலின்.

ஈவோர், கற்பித்தற்குரியரும் கற்பித்தற்குரியரல்லரும் என இருவகையர். அவருள், கற்பித்தற்குரியர் நான்குதிறத்தரும், கற்பித்தற்குரியரல்லர் நான்குதிறத்தருமாம்.

என்னை,

மலைநிலம்பூவே துலாக்கோலென்றின்ன
ருலைவிலுணர்வுடை யோராகுவரே
கழற்பெய்குடமே மடற்பனைமுடத்தெங்கு
குண்டிகைபருத்தியோ டிவையெனமொழிப

என்றாராகலின்.

ஈதலியற்கை, பொழிப்புமுதலிய வுரைகளிற் பயின்று தெளிந்த அறிவினனாய்க் கற்பிக்கப்புகுங்காற் றன்றெய்வம்வாழ்த்தி மாணாக்கனுளங்கொள்ளுமாறு அறிவுறுத்தலாம்.

என்னை,

ஈதலியல்பே யியல்புறக்கிளப்பிற்
பொழிப்பேயகல நுட்பமெச்சமெனப்
பழிப்பில்பல்லுரை பயின்றநாவினன்
புகழ்ந்தமதியிற் பொருந்துமோரையிற்
றிகழ்ந்தவறிவினன் றெய்வம்வாழ்த்திக்
கொள்வோனுணர்வகை யறிந்தவன்கொள்வரக்
கொடுப்பதியல்பெனக் கூறினர்புலவர்

என்றாராகலின்.

கொள்வோர், கற்பிக்கப்படுவோரும், கற்பிக்கப்படாதோரும் என இருவகையர்; அவருள், கற்பிக்கப்படுவோர் அறுவகையர், கற்பிக்கப்படாதோர் எண்வகையர்.



என்னை,

தன்மகனாசான் மகனேமன்மகன்
பொருணனிகொடுப்போன் வழிபடுவோனே
யுரைகோளாளற் குரைப்பதுநூலே.
மடிமானிபொச்சாப்பன் காமுகன்கள்வ
னடுநோய்ப்பிணியாள ஞருச்சினத்தன்
றடுமாறுநெஞ்சத் தவனுள்ளிட்டோரெண்மர்
நெடுநூலைக்கற்க லாகாதாரே

என்றாராகலின்.

கோடன்மரபு, பொழுதொடுசேறல் முதல் கேட்டவை கேட்டவைபோற்றிக்கோடல் இறுதியாகவுள்ள குணங்களையுடையனாதலாம்.

என்னை,

கோடன்மரபு கூறுங்காலைப்
பொழுதொடுசென்று வழிபடன்முனியான்
முன்னும்பின்னு மிரவினும்பகலினு
மகலானாகி யன்பொடுபுணர்ந்தாங்
காசறவுணர்ந்தோன் வாவெனவந்தாங்
கிருவெனவிருந்து சொல்லெனச்சொல்லிப்
போவெனப்போகி நெஞ்சுகளனாகச்
செவிவாயாகக் கேட்டவைகேட்டவை
போற்றிக்கோட லதுவதன்பண்பே

என்றாராகலின்.

சிறப்புப்பாயிரம் ஆக்கியோன் பெயர் முதலிய எட்டுப் பொருளையும் விளக்கித் தன்னாலுரைக்கப்படும் நூற்கின்றியமையாதிருப்பது.

என்னை,

ஆக்கியோன்பெயரே வழியேயெல்லை
நூற்பெயர்யாப்பே நுதலியபொருளே
கேட்போர்பயனோ டாயெண்பொருளும்
வாய்ப்பக்காட்டல் பாயிரத்தியல்பே

என்றாராகலின்.

நூல்செய்தான் பாயிரஞ்செய்யில் தன்னைப் புகழ்ந்தானாம்.

என்னை,

தோன்றாதோற்றித் துறைபலமுடிப்பினுந்
தான்றற்புகழ்த றகுதியன்றே

என்றாராகலின்.

பாயிரஞ்செய்வார் தன்னாசிரியனும், தன்னோடொருங்குகற்ற ஒருசாலை மாணாக்கரும், தன் மாணாக்கரும், தகுந்த உரைகாரருமாகிய விவராம், இவருள் இந்நூற்பாயிரஞ்செய்தார் சகுமுறைகாரராகிய திருநெல்வேலி மகாவித்துவானாகிய திருப்பாற்கடனாதன் கவிராயர்.

விசாலமாகிய உலகோர் வியப்புற ஒளியைக்கக்கிவரும் இரவியினொளியைத் தரும் திருமேனியையுடைய தானொரு முதலேயாகி, இளம்பிறைவேய்ந்த சடிலச் சிவபிரான் அலர்தரு தன்மையின் அகக்கட்டோன்றிய அக்கியான இருள் நீங்க, அறம்பொருள் இன்பம் வீடாகிய நாற்பொருளும் நீக்கமறக்கூறிய பதினெண்ணிலத்து மொழிகளுள்ளும், வடக்குத் திருவேங்கடமும், தெற்குக் கன்னியாகுமரியும் ஆகிய எல்லைக்குட்பட்ட தமிழ் ஐந்தையும் விளங்கச்செய்து தருகென, இளவராலுகளுங் கழனிசூழ்நெல்லையிலிருப்போன், வியாகரணம்வல்லோன், சிவபிரான்வேய்ந்த கங்கையில் வந்தோன், சுப்பிரமணியதேசிகன் கேட்க, அகத்தியநூல்வழி முத்துவீரியம், எனத் தன்னாம நிறீஇக் கூறினான்; உறையூர்வாசமாகிய 'முத்துவீரமாமுனி' என்னும் இயற்பெயருடையான் எனவறிக.

## தற்சிறப்புப்பாயிரம்.

எப்பொருள்வயினுயி ரெதிர்ந்துமறைகுவ
அப்பொருளடிதொழு தறைகுவனெழுத்தே.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், தற்சிறப்புப்பாயிரம் உணர்த்துதனுதலிற்று.

என்னை,

தெய்வவணக்கமுஞ் செயப்படுபொருளு
மெய்தவுரைப்பது தற்சிறப்பாகும்

என்றாராகலின்.

இதன் பொழிப்புரை.

ஐம்பெரும் பூதங்களும், அவற்றின்கண் தோன்றிய சராசரங்களும் எப்பொருளின்கண் தோன்றி ஒடுங்குவ, அப்பொருளினடியை வணங்கி யான் எழுத்திலக்கணத்தைக் கூறுவேனென்க. ஏகாரம் ஈற்றசை.

# முத்துவீரியம்.

## முதலாவது
## எழுத்ததிகாரம்.

எழுத்ததிகாரமென்பது, எழுத்தினது அதிகாரத்தையுடையதென அன்மொழித்தொகையாய்ப் படலத்திற்குக் காரணக்குறியாயிற்று. அதிகாரமென்பது அதிகரித்தல்; அஃது இருவகைப்படும். அவற்றுள், ஒன்று அரையனிருந்துழியிருந்து தன்னிலமுழுதும் தன்னாணையினடப்பச்செய்வதுபோல, ஒருசொன்னின்றுழிநின்று பலசூத்திரங்களும் பலவோத்துக்களும் தன்பொருளை நுதலிவரச்செய்வது. ஒன்று சென்றுநடாத்தும் தண்டத்தலைவர்போல ஓரிடத்துநின்ற சொல் பலசூத்திரங்களோடு சென்றியைந்து தன்பொருளைப் பயப்பிப்பது. எழுத்தை நுதலிவரும் பலவோத்தினது தொகுதிஎழுத்ததிகாரம் என்றாயிற்றென்க.

### க-வது எழுத்தியல்.

க. எழுதப்படுதலி னெழுத்தாகும்மே.

(இதன்பொருள்.) கையில் எழுத்தாணியைக்கொண்டு மடன்மேல் எழுதப்படுதலால் எழுத்தாகுமென்க.

உ. எழுத்தொலிவடிவரி வடிவையுமேற்கும்.

(இ-ள்.) எழுத்துச் செவிப்புலனால் அறியும் ஓசைவடிவையும், கட்புலனால் அறியும் வரிவடிவையும் ஏற்குமென்க.

ங. இரேகைவரிபொறி யெழுத்தின்பெயரே.

(இ-ள்.) இரேகையெனினும், வரியெனினும், பொறியெனினும் எழுத்தென்னும் ஒருபொருட்கிளவி.

௪. அதுமுதல்சார்பென வாயிருபாலன.

(இ-ள்.) அவ்வெழுத்து, முதலெழுத்தெனவும் சார்பெழுத்தெனவும் இருபகுதியவாகுமென்க.

௫. உயிருடலெனமுத லோரிருவகைய.

(இ-ள்) முதலெழுத்து, உயிரெழுத்தெனவும் மெய்யெழுத்தெனவும் இரண்டு பிரிவினவாமென்க.

௬. அகரமுதலுயி ராறிரண்டாகும்.

(இ-ள்.) உயிரெழுத்து அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ ஆகிய பன்னிரண்டுமாமென்க.

௭. அச்சாவிசுரம்பூத மாமுயிரென்ப.

(இ-ள்.) அச்செனினும், ஆவியெனினும், சுரமெனினும், பூதமெனினும் உயிரென்னும் ஒருபொருட்கிளவி.

௮. அ, இ, உ, எ, ஒக்குறிலாகும்.

(இ-ள்.) முற்கூறிய உயிர் பன்னிரண்டனுள், அ, இ, உ, எ, ஒ இவை ஐந்தும் குற்றெழுத்தாமென்க.

௯. குறுமையிரச்சுவங் குறிலெனப்படுமே.

(இ-ள்.) குறுமையெனினும், இரச்சுவமெனினும், குற்றெழுத்தென்னும் ஒருபொருட்கிளவி.

௰. ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔநெடில்.

(இ-ள்.) மேற்கூறிய உயிர் பன்னிரண்டனுள், ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ இவ்வேழும் நெட்டெழுத்தாமென்க.

௧௧. நெடுமையுந்தீர்க்கமு நெட்டுயிராகும்.

(இ-ள்.) நெடுமையெனினும் தீர்க்கமெனினும் நெட்டெழுத்தென்னும் ஒருபொருட்கிளவி.

௧௨. ககரமுதன்மூவாறுங் காத்திரமாகும்.

(இ-ள்.) மெய்யெழுத்து க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ழ, ள, ற, ன ஆகிய பதினெட்டுமாமென்க.



௧௩. ஊமையுமொற்று முடலெனப்படுமே.

(இ-ள்.) ஊமையெனினும், ஒற்றெனினும், மெய்யென்னும் ஒருபொருட்கிளவி.

அவற்றுள்,

௧௪. வல்லெழுத்தென்மனார் கசடதபற.

(இ-ள்.) முற்கூறிய பதினெட்டு மெய்யினுள் க, ச, ட, த, ப, ற ஆகிய ஆறும் வல்லெழுத்தாகும்.

௧௫. வன்மைவன்கணம்வலி வல்லெழுத்தாகும்.

(இ-ள்.) வன்மையெனினும், வன்கணமெனினும், வலியெனினும், வல்லெழுத்தென்னும் ஒருபொருட்கிளவி.

௧௬. மெல்லெழுத்தென்மனார் ஙஞணநமன.

(இ-ள்.) ங, ஞ, ண, ந, ம, ன ஆறும மெல்லெழுத்தாமென்க.

௧௭. மென்மைமென்கணமெலி மெல்லெழுத்தாகும்.

(இ-ள்.) மென்மையெனினும், மென்கணமெனினும், மெலியெனினும் மெல்லெழுத்தென்னும் ஒருபொருட்கிளவி.

௧௮. இடையெழுத்தென்மனார் யரலவழள.

(இ-ள்.) ய, ர, ல, வ, ழ, ள ஆறும் இடையெழுத்தாகும்.

௧௯. இடைமையிடைக்கண மிடையிடையெழுத்தே.

(இ-ள்.) இடைமையெனினும், இடைக்கணமெனினும், இடையெனினும் இடையெழுத்தென்னும் ஒருபொருட்கிளவி.

௨௰. உயிர்முதன்முப்பது மொன்றற்கொன்றினம்.

(இ-ள்.) அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ—க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ழ, ள, ற, ன ஆகியமுப்பதெழுத்துக்களுள், குறிலுக்கு நெடிலும், வல்லினத்துக்கு மெல்லினமும் இனமாகும். இடையினத்துக்கு இனமிலவாமென்றுணர்க.

அவற்றுள்,

**௨௧. இ, உ, ஐ, ஔக்கினமெனமொழிப.**

(இ-ள்.) முற்கூறிய முப்பதெழுத்துக்களுள் ஐகாரத்துக்கு இகரமும், ஔகாரத்துக்கு உகரமும் இனமாகும்.

உ-ம். ஐ இ, ஔ உ.

**௨௨. சார்புயிர்மெய்தனி நிலையிருபாலன.**

(இ-ள்.) சார்பெழுத்து, உயிர்மெய் ஆய்தம் என இரண்டுவகைப்படுமென்க.

**௨௩. புல்லல்சார்தல் புணர்தல் சார்பெனலே.**

(இ-ள்.) புல்லலெனினும், சார்தலெனினும், புணர்தலெனினும் சார்பென்னும் ஒருபொருட்கிளவி.

**௨௪. உயிரோமெய்யூர்ந் துயிர்மெய்யாகும்.**

(இ-ள்.) பன்னிரண்டு உயிர்களும், பதினெட்டு மெய்களின் மேலும் ஏறி நடப்பது உயிர்மெய்யாகுமென்க.

வரலாறு. க்-அ க, க்-ஆ கா, க்-இ கி, க்-ஈ கீ, க்-உ கு, க்-ஊ கூ, க்-எ கெ, க்-ஏ கே, க்-ஐ கை, க்-ஒ கொ, க்-ஓ கோ, க்-ஔ கௌ பிறவுமன்ன.

**௨௫. தனிநிலைகுறில்வலி தனக்கிடைவருமே.**

(இ-ள்.) ஆய்தம் குற்றெழுத்துக்கு முன்னும் உயிரேறியவல்லினத்துக்குப் பின்னும் வரும்.

உ-ம். எஃகு.

**௨௬. அ, இ, உச்சுட் டாமெனமொழிப.**

(இ-ள்.) அவன் என அகரமும், இவன் என இகரமும், உவன் என உகரமும் தனித்துச் சுட்டுப்பொருளைத்தரின் சுட்டெழுத்தாமென்க.

**௨௭. எயாவினாவென் றிசைக்கப்படுமே.**

(இ-ள்.) எவன் என எகரமும், யாவன் என யாகாரமும் தனித்து வினாப்பொருளைத் தரின் வினாவெழுத்தாகும்.



**௨௮. அஃகேனந்தனி நிலையாய்தமாகும்.**

(இ-ள்.) அஃகேனமெனினும் தனிநிலையெனினும் ஆய்தமென்னும் ஒருபொருட்கிளவி.

**௨௯. காட்டல்குறித்தல் சுட்டாங்கருதிடினே.**

(இ-ள்.) காட்டலெனினும், குறித்தலெனினும், சுட்டென்னும் ஒருபொருட்கிளவி.

**௩௰. வினவல்கடாவல் வினாவெனப்படுமே.**

(இ-ள்.) வினவலெனினும் கடாவலெனினும் வினாவென்னும் ஒருபொருட்கிளவியாமெனவறிக,

**௩௧. இசைகெடினெட்டெழுத் தெல்லாந்தமக்கின
மாகியகுறிலொடு மளபெழுமெனலே.**

(இ-ள்.) பாட்டின் ஓசை கெடவரின் நெட்டுயிரேழும் தமக்கினமாகிய குற்றுயிரோடு ஆ அ வலவன். ஈ இரிலை எனத்தன்மாத்திரையின் மிகுந்தொலிக்குமென்க,

அதுதான்,

**௩௨. இயற்கைசெயற்கை யின்னிசைசொல்லிசை
நெடில்குறிலொற்றள பெழுத்துப்பேறள
பெண்வகைப்படும் என்மனார்புலவர்.**

(இ-ள்.) அவ்வளபெடை இயற்கையளபெடை, செயற்கையளபெடை, இன்னிசையளபெடை, சொல்லிசையளபெடை. நெடிலளபெடை, குறிலளபெடை, ஒற்றளபெடை, எழுத்துப்பேறளபெடை என எட்டுவகைப்படும்.

வரலாறு. அழைத்தல், விலைகூறல், புலம்பல் எழுத்துச்செயற்கையின்றிப் பிறந்தது இயற்கையளபெடை. செய்யுளில் சீர் தளை கெட்டவிடத்துப் புலவன் கொள்ளுதல் செயற்கையளபெடை. கெடுப்பதூஉம். குற்றுகரமளபெடுத்த இன்னிசையளபெடை. தளைஇ. ஐகாரக்குறுக்கமளபெடுத்த சொல்லிசையளபெடை. ஆஅ. நெடிலளபெடை, மணீ இ. குற்றெழுத்து

நெட்டெழுத் தாகியளபெடுத்த குறிலளபெடை. சிந்து, ஒற்றளபெடை. சந்திரனை யராஅப்பற்றிற்று. விகாரத்தெழுந்த எழுத்துப் பேறளபெடை," வந்தமை காண்க.

௩௩. அளபும்புலுதமு மளபெடைப்பெயரே.

(இ-ள்.) அளபெனினும், புலுதமெனினும், அளபெடையென்னும் ஒருபொருட்கிளவி.

௩௪. யகரம்வரும்வழி யிகரங்குறுகும்.

(இ-ள்.) யகரமுதன் மொழிவரக் குற்றியலுகரம் திரிந்த இகரம் தன்மாத்திரையில் குறுகும்.

வரலாறு. ஆகியாது, எஃகியாது, வரகியாது, கொக்கியாது, சங்கியாது, தெள்கியாது, சுண்ணும்பியாது.

௩௫. அசைச்சொன்மியாவி னிகரமுமற்றே.

(இ-ள்.) அசைச்சொல்லாகிய மியாவின் மகரமெய்யிலிருக்கிற விகரமும் தன்மாத்திரையில் குறுகும்.

உ-ம். கேண்மியா.

௩௬. நெட்டெழுத்திம்பருந் தொடர்மொழியீற்றுங்
குற்றியலுகரம் வல்லாறூர்ந்தே.

(இ-ள்.) ஆகு என நெட்டெழுத்துக்கு முன்னும் எஃகு என ஆய்தம், வரகு என உயிர், கொக்கு என வலி, சங்கு என மெலி, தெள்கு என இடை, ஆகிய அறுவகைத்தொடர் மொழியீற்றினும் வல்லினத்திலேறிய உகரம் தன்மாத்திரையில் குறுகுமென்றுணர்க.

௩௭. மொழிமுதலிடைகடை மூவிடத்தினுமை
யஃகுமுதலிடத் தௌவுமற்றே.

(இ-ள்.) ஐகாரமொழிக்கு முதலினும் நடுவினும் கடையினும் தன்மாத்திரையில் குறுகும் ஔகாரமுதலில் குறுகும்.

உ-ம். ஐப்பசி, மடையன், குவளை, ஔவை என வரும்.

௩௮. மகரம்ளனக்கீழ் வம்மேற்குறுகும்,



(இ-ள்.) மகரமெய், மருண்ம் போன்ம் என ணகரனகரங்களுக்கு முன்னும், தரும் வளவனென வகரத்துக்குப் பின்னும் தன்மாத்திரையில் குறுகுமெனவறிக.

௩௯. லளவிறுபுணர்ச்சியி னாய்தமஃகும்.

(இ-ம்.) கஃறீது முஃடீதென லகரளகர வீற்றுப்புணர்ச்சியி னாகிய ஆய்தம் தன்மாத்திரையில் குறுகுமென்க.

௪௰. மெய்யீறெல்லாம் புள்ளியொடுநிலையல்
இறுதியாகியபதினெட்டு மெய்களுமேலே.

(இ-ள்.) க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என ஒரு புள்ளியைப் பெறுமென்க.

௪௧. எகர ஒகரத் தியற்கையுமற்றே.

(இ-ள்.) எ, ஒ, இரண்டுயிரு மேலே ஒரு புள்ளியைப் பெறும்

௪௨. குற்றியலுகாமு மற்றெனமொழிப.

(இ-ள்.) குற்றியலுகரமும் மேலே ஒரு புள்ளியைப்பெறும்.

உ-ம். நாகு.

௪௩. உயிரிடையின மிடறாம்வலியுச்சி
மெலியிடமாமென வேண்டப்படுமே.

(இ-ள்.) உயிர் பன்னிரண்டுக்கும், இடையினம் ஆறுக்கும் கழுத்திடமாகும். வல்லினம் ஆறுக்கும் நெஞ்சிடமாகும். மெல்லினம் ஆறுக்கும் தலையிடமாகுமென்க:

அவற்றுள்,

௪௪. அ, ஆ, வங்காப் பொடுவருமென்ப.

(இ-ள்.) அகரமும், ஆகாரமும் வாயைத்திறத்தலால் பிறக்கும்

௪௫. இ, ஈ, எ, ஏ, ஐயங்காப்பொடு
மேல்வாய்ப்பல்லடி நாவிளிம்புறவரும்.

(இ-ள்.) இகர ஈகார, எகர ஏகார, ஐகாரங்கள் வாயைத் திறத்தலோடு மேல்வாய்ப் பல்லடியை நாவோரம் பொருந்தப் பிறக்கும்.

சசு. உ, ஊ, ஒ, ஓ, ஔவிதழ்குவிவே.

(இ-ள்.) உகர ஊகார, ஒகர ஓகார ஔகாரங்கள் மேல் உதடும் கீழ்உதடும் குவிதலால் பிறக்கும்.

சஎ. அடிநாவடியண மழுத்தக்கஙவரும்.

(இ-ள்.) ககர ஙகரங்கள் அடிநாவடி மேல் வாயை அழுத்தப் பிறக்கும்.

சஅ. இடைநாவிடையண மிறுக்கச்சஞவெழும்.

(இ-ள்.) சகரஞகரங்கள் நடுநா நடு மேல் வாயைப் பொருந்தப்பிறக்கும்.

சகூ. நுனிநா நுனியண நோக்கடணவரும்.

(இ-ள்) டகர ணகரங்கள் நுனிநாநுனிமேல்வாயைப் பொருந்தப் பிறக்கும்.

ருய. அண்பல்லடிநா முடியுறத்தநவரும்.

(இ-ள்.) தகர நகரங்கள் மேல்வாய்ப் பல்லடியை நாநுனி பொருந்தப்பிறக்கும்.

ருக. இரண்டிதழுறப்பம வெழுமெனமொழிப.

(இ-ள்.) பகர மகரங்கள் மேலுதடும் கீழுதடும் பொருந்தப் பிறக்கும்.

ருஉ. அடிநாவடியண முறவரும்யகாரம்.

(இ-ள்.) யகரம் அடிநாவடியணத்தைப் பொருந்தப் பிறக்கும்.

ருங. அண்ணநுனிநா வருடரழவரும்.

(இ-ள்.) ரகர ழகரங்கள் மேல்வாயை நாநுனிதடவப் பிறக்கும்.



ருச. லகரமணப்பல்லடி நாவிளிம்புறவரும்.

(இ-ள்.) லகரம் மேல்வாய்ப்பல்லடியை நாவோரம் தடித்துப் பொருந்தப் பிறக்கும்.

ருரு. ளகரமேல்வாயை நாநுனிதடவப்
பிறக்குமென்மனார் பெரிதுணர்ந்தோரே.

(இ-ள்.) ளகரம் மேல்வாயை நாவோரம் தடித்துத் தடவப் பிறக்கும்.

ருசு. மேற்பல்லிதழுற மேவிடும்வவ்வே.

(இ-ள்.) வகரம் மேல்வாய்ப் பல்லைக் கீழுதடு பொருந்தப் பிறக்கும்.

ருஎ. அண்ணநுனிநா வழுத்தறனவரும்.

(இ-ள்). றகர னகரங்கள் மேல்வாயை நாநுனி மிகவழுத்தப் பிறக்கும்.

ருஅ. உந்திதனிநிலை யுற்றங்காந்தெழும்.

(இ-ள்.) ஆய்தத்துக் குந்தியிடமாம், வாயைத்திறத்தலாற் பிறக்கும்.

ருகூ. எடுத்தல்படுத்த லிரண்டேயோசை.

(இ-ள்) ஓசையெடுத்துக் கூறலும், படுத்துக்கூறலுமென இரண்டுவகைப்படுமென்க.

சுய. முந்நான்குயிரு மொழிமுதலாகும்.

(இ-ள்.) பன்னிரண்டுயிரும் மொழிக்கு முதலாகும்.

வரலாறு. அணி-ஆசை, இருள்-ஈகை, உலகு-ஊமை, எருமை-ஏறுதி, ஐயம்-ஒருவன், ஓகை-ஔவியம்.

சுக. பன்னீருயிரொடுங் க, ச, த, ந, ப, ம வரும்.

(இ-ள்.) க, ச, த, ந, ப, மக்களாகிய ஆறு மெய்யும் பன்னிரண்டுயிரோடு மொழிக்கு முதலாகும்.

வரலாறு. சலே-காமன், கிளி-கிரி, குருகு-கூகை, கெருவம்-கேகயம், கைத்தாளம், கொறுக்கை, கோதை-கௌவை எ-ம். சடை-சாரிகை, சித்திரம்-சீனம், சுக்கு-சூகை, செக்கு-சேனை, சையம்-சொக்கு-சோமன், சௌரி பிறவுமன்ன.

௬௨. அ, ஆ, எ, ஒ, வ்வோ டாகுஞம்முதல்.

(இ-ள்.) ஞகரமெய் அ, ஆ, எ, ஒ ஆகிய நான்குயிரோடு மொழிக்கு முதலாகும்.

வரலாறு. ஞமலி-ஞாயிறு, ஞெகிழி-ஞொள்கிற்று எனவரும்.

௬௩. அ, ஆ, உ, ஊ, ஒ, ஔவோடு
யகரமொழி முதலாகுமென்ப,

(இ-ள்.) அ, ஆ, உ, ஊ, ஒ, ஔ ஆகிய வாறுயிரோடும் யகர மெய்மொழிக்கு முதலாகும்.

வரலாறு. யவனர்—யாகம், யுகம்-யூகம், யோகம்-யௌவனம்.

௬௪. உ, ஊ, ஒ, ஓ வலவொடுவவ்வரும்.

(இ-ள்.) உ, ஊ, ஒ, ஓ, ஆகிய நான்குயிருமல்லாத வெட்டுயிரோடும், வகரமொழிக்கு முதலாகும்.

வரலாறு. வசை-வாகை, விலை-வீமன், வெளி-வேதம், வையகம்-வௌவால் எனவரும்.

௬௫. வேற்றுநிலை க, ச, த, ப, வல்லனமெய்பதி
னென்குமென்மனார் நற்றமிழ்வல்லோர்.

(இ-ள்.) க, ச, த, ப க்க ளல்லனவாகிய பதினென்கு மெய்யும் தன்னினத்தோடும் பிறமெய்யோடுங் கூடுங்கூட்டம் வேற்றுநிலை மெய்ம்மயக்காகுமென்க.

௬௬. சங்கம்புணர்ச்சி சையோகமயக்கம்
புல்லல்கலத்தலும் பொருளொன்றேயாம்.

(இ-ள்.) சங்கமெனினும், புணர்ச்சியெனினும், சையோகமெனினும், மயக்கமெனினும், புல்லலெனினும், கலத்தலெனினும். இடைநிலையென்னும் ஒருபொருட்கிளவி.



௬௭. ஙகாரமுன்னர்க் ககாரமயங்கும்.

(இ-ள்) ஙகரத்துக்கு முன்னர்க் ககரம்வந்து மயங்கும்.

வரலாறு. புங்கம், கொங்கம்.

௬௮. வருஞ்சயஞகாரமுன் மருவியென்ப.

(இ-ள்.) ஞகரத்துக்கு முன்னர்ச் சகர யகரங்கள் வந்து மயங்குமென்க.

வரலாறு. கஞ்சன, உரிஞ்யாது.

௬௯. க, ச, ப, ட கரமுற் கலந்துமயங்கும்.

(இ-ள்.) டகரத்துக்கு முன்னர்க் க, ச, ப க்கள் வந்து மயங்கும்.

வரலாறு. வெட்கம், புட்சிறை, நுட்பம்.

௭௰. ணனமுன்னினங் க, ச, ஞ, ப, ம, ய வவ்வரும்.

(இ-ள்.) ண, ன க்களுக்கு முன்னர்க் க, ச, ஞ, ப, ம, ய, வ இவ்வேழு மெய்யும் வந்து மயங்கும்.

வரலாறு. குண்டலம், தென்றிசை ; வெண்கலம், சோறு, ஞமலி, பல், மலர். மணயாது, மண்வலிது. பொன்கலம், சாடி, ஞமலி, பல், மலை, யாது, வலிது.

௭௧. யகரமுந்தகரமு நகாமுன்னுகும்.

(இ-ள்.) நகரத்துக்கு முன்னர் யகரமுந் தகரமும் வந்துமயங்கும்.

வரலாறு. பொருந்யாது, சந்தம்.

௭௨. மம்முன் ப், ய, வ, மயங்குமென்ப,

(இ-ள்.) மகரத்துக்கு முன்னர் ப, ய, வ் க்கள் வந்து மயங்கும்

வரலாறு. கம்பன், கலம்யாது, நிலம்வலிது.

௭௩. ய. ர, ழ, முன்னர் மொழிமுதன்மெய்வரும்.

(இ-ள்.) ய, ர, ழ க்களுக்குமுன்னர்க் க, ச, த, ந, ப, ம, வ, ய, ங, ஞ க்களும் வந்து மயங்கும்.

வரலாறு. வேய், வேர், வீழ், குறிது, சிறிது, தீது, நீண்டது, பெரிது, மலிது, வலிது, வேய்ங்குழல், ஆர்ங்கோடு, பாழ்ங்கிணறு.

எச. ல், ள முனர்க் க, ச, ப, வ, ய வருமென்ப.

(இ-ள்.) ல, ள முனர்க் க, ச, ப, வ, யக்கள் வந்து மயங்கும்.

வரலாறு. வேல், வாள், கடிது, சிறிது, பெரிது, வலிது, யாது, வேல்கடிது, வாள்கடிது, சிறிது, பெரிது, எனப் புணர்த்தி நோக்குக.

எரு. வகரமுன்னர் யகரமயங்கும்.

(இ-ள்.) வகரத்துக்கு முன்னர் யகரம் வந்து மயங்கும்.

வரலாறு. தெவ்யாது எனவரும்.

எசு. க, ச, ப, றகர முற்கலக்குமென்ப.

(இ-ள்.) றகரத்துக்கு முன்னர்க் க, ச, பக்கள் வந்து மயங்கும்

வரலாறு. கற்க, பொற்சிலை, கற்பு.

எஎ. ரகரழகரங் குற்றொற்றொற்றா.

(இ-ள்.) ர, ழ க்கள் குற்றெழுத்தைச் சாராவாம்.

வரலாறு. வேர்பெரிது, வீழ்சிறிது, வேய்செய்.

எஅ. ர, ழ, வல்லன வுடனிலையென்மொழிப.

(இ-ள்.) ர, ழ, க்களல்லாதனவாகிய பதினாறு மெய்யுந் தம்மொடு தாங்கூடுங் கூட்டமுடனிலை மெய்மயக்காகும்.

வரலாறு. அக்கம், அச்சம், அங்ஙனம், அஞ்ஞானம், அட்டை, அண்ணல், அத்தம், அந்நூல், அப்பம், அம்மை, அய்யம், அல்லி, அவ்வை, அள்ளல், அற்றம், அன்னை.

எகூ. உயிர்மெய்மயக்கிற் கோரளவின்றே.

(இ-ள்.) உயிர்மெய் மயங்கு மயக்கத்திற்கு வரையறையில்லையாம்.



அய. ல, ள, மெய்திரிந்த ன, ண, முன்மகர
நைந்தீரொற்றுஞ் செய்யுளுள்ளே.

(இ-ள்.) ல, ள க்கடிரிந்த ன ண க்களுக்கு முன்னின்ற மகரந் தன்மாத்திரையிற் குறுகி இரண்டொற்றாக மயங்கும்.

வரலாறு. போன்ம், மருண்ம்.

அக. தம்பெயர்மொழியின் முதலுமயக்கமு
மிம்முறைமாறிய மியலுமென்ப.

(இ-ள்.) தம்பெயருரைக்குங்கான் மொழிக்குமுதலினு மிடையினுமிம்முறையை மாறியுநடக்கும்.

வரலாறு, ல, ள மெய்திரிந்த.

அஉ. ஈராறுயிரு மிறுதியாமெனவே.

(இ-ள்) பன்னிரண்டுயிரு மொழிக்கீறாகும்.

வரலாறு. விளா, பலா. கிளி, குரீ, கடு, மரூ, சே, தை, நொ, கோ, வெள.

அங. அளபிற்குற்றுயி ரந்தமாகும்.

(இ-ள்.) முற்கூறியவற்றுட் குற்றுயிரைந்து மளபெடுப்புழியீறாகும்.

வரலாறு. ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஓஒ,

அச. எகரம்புள்ளியோ டிணைந்தீறாகா.

(இ-ள்.) எகரவுயிர் மெய்களோடு கூடியீறாகாவாம்.

அரு. ஒகரநகரமெய் யோடிறுவாகும்.

(இ-ள்.) ஒகரவுயிர் நகரமெய்யோடீறாகும்.

வரலாறு. நொ.

அசு. ஔகான்ககர வகரமோடன்ன.

(இ-ள்.) ஔகாரவுயிர் ககரவகரங்களோடீறாகும்.

வாலாறு. கௌ, வௌ.

அஎ. உ, ஊ, நகரமோ டுறுமெனமொழிப.

(இ-ள்.) உகர ஊகாரஉயிர் நகரமெய்யோடீறுகாவாம்.

அஅ. எஞ்சியவெல்லா மிறுதியாகும்.

(இ-ள்.) இவையொழிந்த வுயிர்கள் எல்லா மெய்களோடு மீறு கும்.

அகூ. அந்தமா ஞ, ண, ந, ம, ன—ய, ர, ல, வ, ழ, ள, வே.

(இ-ள்.) ஞ, ண, ந, ம, ன—ய, ர, ல, வ, ழ, ள இப்பதினொரு மெய்யுமீறுகும்.

வாலாறு. உரிஞ, மண், வெரிந், நிலம், பொன், வேய், வேர், வேல், தெவ், வீழ், வாள்.

அவற்றுள்,

கூய. ஞ, ந வொருமொழிக் குரித்தாமெனமொழிப.

(இ-ள்.) முற்கூறியவற்றுள் ஞ, ந க்கொரு சொற்குரிய வாம்.

உ-ம். உரிஞ், பொருந்.

கூக. வகரநான்மொழிக் குரியனவாகும்.

(இ-ள்.) வகரமெய் நான்குசொற் குரியவாம்.

வாலாறு. அவ், இவ், உவ், தெவ்.

கூஉ. எஞ்சியவுகரமு மிறுதியாகும்.

(இ-ள்.) குற்றியலுகரமு மீறுகும்.

வாலாறு. நாகு.

கூங. ஒற்றுமுன்னுயிர் பின்னுறுமுயிர்மெய்யே.

(இ-ள்.) உயிர்மெய், ஒற்றொலிமுன்னு முயிரொலி பின்னு மாக வரும்.



கூச. மெய்யொடுமேவினும் வேறுபடாவுயிர்.

(இ-ள்.) உயிர் மெய்களோடு கூடினும் வேறுபடாவாம்.

வாலாறு. கோ, பூ, தீ. பா, கௌ.

கூரு. மெய்யினியக்க மகரமொடுசிவணும்.

(இ-ள்.) மெய் பதினெட்டும் அகரவுயிரோடியலும்.

வாலாறு. க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ழ, ள, ற, ன.

கூசு. இயல்பெழுமாந்த ரிமைநொடிமாத்திரை.

(இ-ள்.) மக்கள் சுபாவமாக வெழுங்கண்ணிமைத்தலும், கைந் நொடித்தலு மாத்திரைக்களவாம்.

கூஎ. மட்டளவொடுமிதம் வரைமாத்திரையே.

(இ-ள்.) மட்டெனினும், அளவெனினும், மிதமெனினும், வரை யெனினும், மாத்திரையென்னு மொருபொருட்கிளவி.

கூஅ. உன்னல்காலே யூன்றலரையே
முறுக்கன்முக்கால் விடுத்தலொன்றே.

(இ-ள்.) உன்னல் கான்மாத்திரை, ஊன்றல் அரைமாத்திரை, முறுக்கல் முக்கால்மாத்திரை, விடுத்த லொருமாத்திரையாம்.

கூகூ. ஒன்றேகுறினெடி லிரண்டளபாகும்.

(இ-ள்.) குற்றெழுத்துக் கொருமாத்திரை, நெட்டெழுத்துக் கிரண்டுமாத்திரையாம்.

உ-ம். அ, ஆ.

ர. ஐ, ஔ க்குறுக்கமொற் றளபெடையொன்றே.

(இ-ள்.) ஐகாரக் குறுக்கத்துக்கும், ஔகாரக் குறுக்கத்துக் கும், ஒற்றளபெடைக்கும் தனித்தனி ஒரு மாத்திரையாம்.

வாலாறு. ஐப்பசி, ஔவை, சங்ங்கு.

ரக. அஃகிய இ, உ, வாய்ந மெய்யரையே.

(இ-ள்.) குற்றியலிகரத்துக்கும், குற்றியலுகரத்துக்கும், ஆய்தத்துக்கும், மெய்க்கும், தனித்தனி யரைமாத்திரையாம்.

வாலாறு. நாகியாது, நாகு, ஃ, க்.

ாஉ. அஃகியமகரமு மாய்தமுங்காலே.

(இ-ள்.) மகரக்குறுக்கத்துக்கும், ஆய்தக்குறுக்கத்துக்கும் தனித்தனி மாத்திரை காலாம்.

வாலாறு-. போன்ம், கஃறீது.

ாங. ஓரெழுத்தொருமூன் றளிப்பதின்றே.

(இ-ள்.) ஓரெழுத்து மூன்று மாத்திரை யாகாவாம்.

ாச. அளபெடைமூன்றன்மே லாமெனமொழிப.

(இ-ள்.) உயிரளபெடை மூன்றுமாத்திரை யேயன்றி நான்கு மாத்திரையுமாகும்.

வாலாறு. ஓ ஒதல், பதா அ அகை.

ாரு. விற்கைபுலம்பிசை விளியினுமிகுமே.

(இ-ள்.) விலைகூறலினும், புலம்பலினும், இசையினும், விளியினு மளவைக் கடந்திசைக்கும்.

ாசூ. இகரமும்யகரமு மிறுதியில்விரவும்.

(இ-ள்.) இகரவுயிரும், யகரமெய்யு மிறுதியில் விரவிவரும்.

வாலாறு. பேஇ-பேய், நாஇ-நாய்.

ாஎ. அகரமுமிகரமு மைகாரமாகும்.

(இ-ள்.) அகரமு மிகரமும் புணர்ந்தைகாரமாக வொலிக்கும்.

வாலாறு. அ + இ = ஐ.

ாஅ. அகரமுமுகரமு மௌகாரமாகும்.

(இ-ள்.) அகரமுமுகரமும் புணர்ந் தௌ காரமாகவொலிக்கும்.



வாலாறு. அ + உ = ஔ.

ாசூ. நெட்டெழுத்தெல்லாங் காரமொடுநிலையும்.

(இ-ள்.) நெட்டெழுத்துக்க ளெல்லாங் காரச்சாரியைபெறும்.

வாலாறு. ஆகாரம், பீரவுமன்ன.

அவற்றுள்.

ாய. ஐ, ஔக்கானு மடையவும்பெறுமே.

(இ-ள்.) முற்கூறியவற்றுள், ஐயும் ஔவும் கான்சாரியையும் பெறும்.

வாலாறு. ஐகான், ஔகான்.

ாயக. காரங்கான்கரம் பெறுமிருமைக்குறில்.

(இ-ள்.) உயிர்க்குறிலும், உயிர்மெய்க்குறிலும் காரம், கான், கரமும் பெறும்.

வாலாறு. அகரம்- அகாரம் அஃகான். மகரம் - மகாரம், மஃகான்.

ாயஉ. ச, ஞ, ய, முன் அ, ஐ, யாகுமுதலிடை.

(இ-ள்.) ச, ஞ, யக்களுக்கு முன்னின்ற அகர முதலினு நடுவினும் ஐகாரமாகத்திரியும்.

வாலாறு. பசல்-பைசல், முரஞ்சு, முரைஞ்சு, பயல் - பையல்: அரயர், அரையர்.

ாகங. ஐகான்யவ்வழி நவ்வொடுசில்வழி
ஞஃகானுறழு மென்மனார்புலவர்.

(இ-ள்.) தனியைகாரத்துக்கு முன்னும் யகரமெய்க்குமுன்னும் வருகிற நகரம் ஞகரமாகுஞ் சில விடங்களில்.

வாலாறு. ஐநூறு-ஐஞ்ஞூறு, நெய் நின்று-நெய்ஞ்ஞின்று.

ாயச. அஃறிணைப்பெயர்ச்சொ லிறுதிமகாரம்
னகரமாமொரோவழி நாடுங்காலே.

(இ-ள்.) மகரமெய்யிறுதியாகிய வஃறிணைப் பெயர்ச்சொற்களிற் சில மகரம் னகரமாகத்திரியும்.

வாலாறு. அகம்-அகன், முகம்-முகன்.

## உ-வது. மொழியியல்.

சொன்னவெழுத்தினுற் சொல்வதேசொல்லாம்.

(இ-ள்.) மேற்கூறிப்போந்த வெழுத்துக்களாலியம்புவதே மொழியாகுமென்க.

க. உயிர்நெடிலேழு மோரெழுத் தொருமொழி.

(இ-ள்.) நெட்டெழுத்தேழு மோரெழுத் தொருமொழியாம்.

வாலாறு. ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ, ஆ—பசு, ஈ—தேன்வண்டு, ஊ—இறைச்சி, ஏ—அம்பு, ஐ—அழகு, ஓ—மதகுநீர் தாங்குபலகை, ஔ—கடித்தல்.

உ. குற்றெழுத்தைந்துங் கொளாமொழியென்ப.

(இ-ள்) அ, இ, உ, எ, ஒ ஆகிய குற்றுயிரைந்து மொழியாகாவாம்.

ங. உயிர்போற் க, ச, த, ந, ப, ம, வ வென்மொழி
யாகுமென்மனு ரறிந்திசினோரே.

(இ-ள்.) நெட்டுயிரோ ரெழுத்தொரு மொழியானதுபோலக் க, ச, த, ந, ப, ம, வ வேழு மெய்களினெடிலு மோரெழுத்தொரு மொழியாகுமென்க.

வாலாறு. கா, கூ, கை, கோ—சீ, சே, சை, சோ-தா, தீ, தூ, தே, தை-நா, நீ, நை, நோ-பா, பூ, பே, பை, போ-மா, மீ, மே, மை, மோ-வா, வீ, வை, வௌ.

ச. மொழிபெயர்வினையென மொழியப்படுமே.

(இ-ள்.) மொழிபெயரெனவும், வினையெனவும் இருவகையாம்.



ரு. பொருளிடங்காலஞ் சினைகுணந்தொழிலொடு
வருவதுபெயரென வழுத்தப்படுமே.

(இ-ள்.) பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகிய வறுவகையான் வருவது பெயராகுமென்க.

வாலாறு. பொன்னன், பொருளால் வருபெயர். அகத்தன், இடத்தால் வருபெயர். வேனிலான், காலத்தால் வருபெயர். மூக்கன், சினையால் வருபெயர். கரியன், குணத்தால் வருபெயர். ஓதுவான், தொழிலால் வருபெயர்.

சா. வினைபலநிகழினும் வினையெனப்படுமே.

(இ-ள்.) பலவாக வினைகணடப்பினும் வினையாகுமென்க.

வாலாறு. நட, வா, மடி, சீ, விடு கூ, வே, வை, நொ, போ, வௌ, உரிஞ், உண், பொருந், திரும், தின், தேய், பார், செல், வவ், வாழ், கேள், அஃகு.

எ. பெயரிருதிணையைம்பான் மூவிடம்பெறும்.

(இ-ள்.) பெயர், உயர்திணை அஃறிணையாகிய விருதிணையும், ஆண்பால் பெண்பால் பலர்பால் ஒன்றன்பால் பலவின்பாலாகிய வைம்பாலையும், தன்மை முன்னிலை படர்க்கையாகிய மூவிடனையும் பெறும்.

வாலாறு. அவன், அவள், அவர் உயர்திணை. அது, அவை, அஃறிணை. நான், தன்மை, நீ முன்னிலை. அவன்படர்க்கை.

மொழியே,

அ. தனியிணைதுணைபொது தணங்கணங்கலப்புறு
மொழியோரேழென மொழிநருமுளரே.

(இ-ள்.) தனிமொழி, இணைமொழி, துணைமொழி, பொதுமொழி, தணமொழி, கணமொழி, கலப்புறுமொழி யேழென்றுரைப்பவரும் சிலருளரமெனவறிக.

வாலாறு. நிலம், நீர் இவை பிரிக்கப்படாத தனிமொழி. தேரன், ஊரன் இவை பிரிக்கப்படுமிணைமொழி. மூவர்வம்தார். அரசர்கூடினார் இவை தொடர்ந்துவந்த துணைமொழி. நங்கை, வேங்கை இவை இருபொருள்கொண்ட பொதுமொழி. முனிவர்கள், தேவர்கள் இவை பன்மையைக்ககாட்டுங் கணமொழி. இந்திரன், சந்திரன் இவை யொருமையைக்காட்டுந் தணமொழி. ஆண், பெண் இவை இருதிணையிலுங் கலந்துபொதுவாகவந்த கலப்புறுமொழி.

மொழியே,

௯. ஒரெழுத்தாதியொன் பானெழுத்தந்தமாம்,

(இ-ள்.) மொழி, ஒரெழுத்துமுதலாக வொன்பதெழுத்திறுதியாகத் தொடர்ந்துவருமென்க.

வாலாறு. கா, அணி, அறம், அகலம், அருப்பம், அம்பலவன், அரங்கத்தான், உத்திராடத்தான் - உத்திரட்டாதியான்.

௰. இடையினுன்கு மீற்றிலிரண்டு
மல்லாவுயிர்பொது வாமெனமொழிப.

(இ-ள்.) ஆரியவுயிர் பதினாறனுள் நடுவிலிருக்கு நான்குயிருங் கடையிலிருக்கு மிரண்டுயிருமல்லாத பத்துயிருமாரியத்திற்குந் தமிழிற்கும் பொதுவெழுத்தாமென்க.

அவற்றுள்,

௰௧. ஏழாமுயிரிய்யு மிருவுமாகும்.

(இ-ள்.) மேற்கூறியவற்று ளேழாமுயிராகிய ரு-இகரமாகவாவனும், இருவாகவானுலுந் திரியும்.

வாலாறு. இடபம், இருடி எனவரும்.

௰௨. ஐந்துவருக்கத் தாதியுமந்தமும்,
யரலவளக்களும் பொதுவெழுத்தாகும்.



(இ-ள்.) ஆரியமெய் முப்பத்தேழனுள், ககரமுதலைந்து வருக்கங்களின் முதலிலிருக்கின்ற க, ச, ட, த, ப, க்களுங்கடையிலிருக்கின்ற ங, ஞ, ண, ந, ம க்களும், ய, ர, ல, வ, ள க்களு மிருமைக்கும் பொதுவெழுத்தாகும்,

௰௩. ஏனையவெழுத்துக ளெல்லாந்திரியும்.

(இ-ள்.) இவையொழிய மற்றைய வெழுத்துக்களெல்லாந் திரிந்துவந்து வடமொழியாகும்.

அவற்றுள்,

௰௪. எட்டாமெய்யே யகாரமாகும்.

(இ-ள்.) மேற்கூறிப் போந்தவற்று ளெட்டாவதுமெய்யாகிய-ஜயகரமாகத்திரியும்.

வாலாறு. பங்கயம்.

௰௫. ஆறைந்தாமெய் சயவாகும்மே.

(இ-ள்.) முப்பதாமெய்யாகிய ஸ முதலிற் சகரமு நடுவில் யகரமுமாகத்திரியும்.

வாலாறு. சாலை, மயானம்.

௰௬. ஒருமுப்பானொன் றுடல்சடவாகும்.

(இ-ள்.) முப்பத்தொன்றுமெய்யாகிய ஷமுதலிற் சகரமும், நடுவில் டகரமுமாகத்திரியும்.

வாலாறு, சட்டி, இடபம்.

௰௭. ஆறைந்திரண்டுட லாகுஞ்சதவே.

(இ-ள்.) முப்பத்திரண்டாமெய்யாகிய ஸமுதலிற் சகரமும், நடுவில் தகரமுமாகத்திரியும்

வாலாறு. சித்தி, வாதனை.

௰௮. ஆகுமுப்பான்மூன் றுக்கையகவே.

(இ-ள்.) முப்பத்து மூன்றுமெய்யாகிய ஹமுதலில் அகரமும், நடுவிற் ககரமுமாகத்திரியும்.

வாலாறு. அரன், மோகம்.

௰௯. ஐந்துதலையிட்ட வாறைந்திருகவ்வே.

(இ-ள்.) முப்பத்தைந்தா மெய்யாகிய க்ஷ இரண்டு ககரமாகத் திரியும்.

வாலாறு. அக்கரம்.

உ௰. ஆகாரவிறுபெய ரைகாரமாகும்.

(இ-ள்.) ஆகாரவிறுதிப்பெயர்களைகாரமாகத்திரியும்.

வாலாறு. மாலை.

உக. ஈகாரவிறுபெய ரிகரமாமென்ப.

(இ-ள்.) ஈகார விறுதிப்பெயர்க ளிகரமாகத்திரியும்.

வாலாறு. புரி.

உஉ. ரவ்விற்கம்முத லாமுக்குறிலு
மொழிமுதலாகி முன்வரப்பெறுமே.

(இ-ள்.) ரகரமெய்க்கு அ, இ, உ ஆகிய மூன்றுகுற்றெழுத்துக் களிலொன்று மொழிக்குமுதலாகி முன்னர்ப்போதரும்.

வாலாறு. அரங்கம், இராமன், உரோமம்.

உங. இ, உ, லகரமுன் னெதிர்தருமென்ப.

(இ-ள்.) லகரமெய்க்கு இ, உ ஆகிய விரண்டு குற்றெழுத்துக் களிலொன்று மொழிக்கு முதலாகி முன்னர்ப்போதரும்.

வாலாறு. இலாபம், உலோபம்.

உச. யகரக்கிகரமு மாகிமுன்வருமே.

(இ-ள்.) யகரமெய்க்கு இகரம் மொழிக்கு முதலாகி முன்னர்ப் போதரும்.

வாலாறு. இயக்கன்.



உரு. இணைந்தியல்காலை யாலக்கிகரமு
மவ்வக்குகரமு நகரக்ககரமு
மிசைவரும் ரவ்வழி யுவ்வுமாம்பிற.

(இ-ள்.) ஆரியமொழியு ளிரண்டெழுத் திணைந்தோரெழுத் தைப்போல நடக்குங்காலைப் பின்னின்ற, ய, ர, ல க்களுக்கு இகரமும், மவக்களுக்கு உகரமும், நகரத்திற்கு அகரமும், மேலேவரும். ரகரத்திற்கு உகரமும் வரும்.

வாலாறு. வாக்கியம், வக்கிரம், சுக்கிலம், பதுமம், பக்குவம்; அரதநம்; அருத்தம்.

உசா. சங்கதம்பாகதஞ் சநுக்கிரகம்மவப்
பிரஞ்சனநான்கெனப் பேசுங்கிளவி.

(இ-ள்.) சொல், சங்கதமெனவும், பாகதமெனவும், சநுக்கிரகமெனவும், அவப்பிரஞ்சனமெனவும் நான்குவகைப்படும்.

உஎ. சங்கதஞ்சநுக்கிரகந் தருநிலத்தவருரை.

(இ-ள்.) சங்கதமுஞ் சநுக்கிரகமுந் தேவர்மொழியாகும்.

உஅ. அவப்பிரஞ்சனமலேச்சர்மொழியாகும்.

(இ-ள்.) அவப்பிரஞ்சன மிலேச்சனர் மொழியாகும்.

உகூ. எல்லாநாட்டினு மியல்வதுபாகதம்.

(இ-ள்.) நாடுகளெல்லாம் வழங்குவது பாகதமாம்.

௩௰. தற்பவந்தேசிகந் தற்சமமெனப்படும்.

(இ-ள்.) பாகதம், தற்பவமெனவும், தேசிகமெனவும், தற்சமமெனவும் மூன்றுவகைப்படுமெனவறிக.

௩க. ஆரியச்சிறப்பெழுந் தாற்பொதுச்சிறப்பா
லானவீரெழுத்தா லமைவதுதற்பவம்.

(இ-ள்.) ஆரியச் சிறப்பெழுத்தானும் பொதுவுஞ் சிறப்புமாகிய விரண்டெழுத்தானுந் தமிழிற் சிதைந்துவருவது தற்பவமாமெனவறிக.

வாலாறு. (சுகி. போகி, சிறப்பு,) (அரன், அரி, பொது.)

௩௨. தேசிகமென்பது திசைச்சொல்லாகும்.

(இ-ள்.) தேசிகமென்பது திசைச்சொல்லாம்.

வாலாறு. தாய், தள்ளை, தந்தை, அச்சன், பிறவுமன்ன.

௩௩. ஆரியந்தமிழ்பொது வாமொழிதற்சமம்.

(இ-ள்.) ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொதுவெழுத்தாலாகிய மொழி தற்சமமாமென்க.

வாலாறு. அமலம், கமலம், காரணம், பிறவுமன்ன.

௩௪. சந்திதீர்க்கங் குணமேவிருத்தி
யெனமூவகைப்படு மென்மனார்புலவர்,

(இ-ள்.) சந்தி, தீர்க்கசந்தியெனவும், குணசந்தியெனவும், விருத்திசந்தியெனவும் மூவகைப்படுமென்க.

௩௫. அ, ஆ, விறுதிமுன் அ, ஆ, வரினே
யிருமையுங்கெடவா வேற்குமென்ப.

(இ-ள்.) அகர ஆகாரங்களை இறுதியாகிய மொழிக்குமுன், அகர ஆகாரங்களை முதலாகிய சொல்வரி னிலைமொழியீறும் வருமொழி முதலுங்கெட்டு ஆகாரமாகும்.

வாலாறு. பத+அம்புயம்=பதாம்புயம். சேனா+அதிபதி=சேனாதிபதி எனவரும்.

௩௬. இ, ஈ, யிறுதிமுன் இ, ஈ, வரினே
யிருமையுங்கெடவீ யேற்குமென்ப.

(இ-ள்,) இகர ஈகாரங்களை இறுதியாகிய மொழிக்குமுன் இகர ஈகாரங்கள் முதலாகிய சொல்வரி னிலைமொழியிறுதியும் வருமொழி முதலுங்கெட்டு ஈகாரமாகும்.

வாலாறு. மகி+இந்திரன்,=மகீந்திரன். கரி+இந்திரன்=கரீந்திரன் எனவரும்,

௩௭. உ, ஊ, விறுதிமுன் உ, ஊ, வரினே
யிருமையுங்கெடவூ வேற்குமென்ப



(இ-ள்.) உகர ஊகாரங்களை இறுதியாகிய மொழிக்குமுன், உகர ஊகாரங்களை முதலாகிய சொல்வரி னிலைமொழியிறுதியும் வருமொழி முதலுங்கெட்டு ஊகாரம் வரும்.

வாலாறு. குரு+உபதேசம்=குரூபதேசம். சுயம்பூ+உபதேசம்=சுயம்பூபதேசம் எனவரும்.

௩௮. அ, ஆ, விறுதிமுன் இ, ஈ, வரினே
யிருமையுங்கெடவே யேற்குமென்ப

(இ-ள்.) அகர ஆகாரங்களை இறுதியாகிய மொழிக்குமுன், இகர ஈகாரங்களை முதலாகிய சொல்வரி னிலைமொழியிறுதியும் வருமொழி முதலுங்கெட்டு ஏகாரம் வரும்.

வாலாறு. நர+இந்திரன்=நரேந்திரன். உமா+ஈசன்=உமேசன் எனவரும்.

௩௯. அ, ஆ, விறுதிமுன் உ, ஊ, வரினே
யிருமையுங்கெடவோ வெய்துமென்ப.

(இ-ள்) அகர ஆகாரங்களை இறுதியாகிய மொழிக்குமுன், உகர ஊகாரங்களை முதலிலேயுடைய சொல்வரி னிலைமொழியிறுதியும் வருமொழி முதலுங்கெட்டு ஓகாரம் வரும்.

வாலாறு. தாம+உதரன்=தாமோதரன். கங்கா+உற்பத்தி,=கங்கோற்பத்தி எனவரும்.

௪௰. அ, ஆ, விறுதிமுன் எ, ஐ, வரினே
யிருமையுங்கெடவை யெய்துமென்ப.

(இ-ள்.) அகர ஆகாரங்களை இறுதியாகிய மொழிக்குமுன், எகர ஐகாரங்களை முதலிலேயுடைய சொல்வரி னிலைமொழியிறுதியும் வருமொழி முதலுங்கெட்டு ஐகாரம் வரும்.

வாலாறு. சிவ+ஐக்கியம்,=சிவைக்கியம். மகா+ஐச்சுவரியம்,=மகைச்சுவரியம் எனவரும்.

௪௧. அ, ஆ, விறுதிமுன் ஒ, ஔ, வரினே
யிருமையுங்கெடவௌ வெய்துமென்ப.

(இ-ள்.) அகர ஆகாரங்களை இறுதியாகிய மொழிக்குமுன், ஒகார ஔகாரங்களை முதலிலேயுடைய சொல்வரி னிலைமொழியிறுதியும் வருமொழி முதலுங்கெட்டு ஔகாரம்வரும்.

வாலாறு. கலச + ஓதனம்,=கலசௌதனம். மந்திரா + ஔடதம்=மந்திரௌடதம் எனவரும்.

௪௨. இ, எ, முதற்கை யாமெனமொழிப.

(இ-ள்.) மொழிமுதல் இகர எகாரங்கள் ஐகாரமாகும்.

வாலாறு. கிரியினுள்ளன=கைரிகம்; வேரம்=வைரம்.

௪௩. முதலில் உ, ஊ, ஒ, ஔவாகும்மே.

(இ-ள்.) மொழிமுதல், உகர ஊகார, ஒகாரங்கள் ஔகாரமாகும்.

வாலாறு. குருகுலத்தார்=கௌரவர்; சூரன்மகள்,=சௌரி; சோமன்மகன்=சௌமியன்.

௪௪. அகரமுதன்மொழி ஆகாரமாகும்.

(இ-ள்.) முதன்மொழி அகரம் ஆகாரமாகும்.

வாலாறு. சனகன்மகள்=சானகி எனவரும்.
இயல் உ-க்குச் சூத்திரம் ௧௩௧.

## ௩-வது. புணரியல்.

நிலைவருமொழியொடு நேர்வதுபுணர்ப்பே.

(இ-ள்.) நிலைமொழி வருமொழியோடொன்றுபட்டுப் புணருவது புணர்ச்சியாகுமெனவறிக.

வாலாறு. விளகுறிது, ஒளிமணி, கலைமதி, சிவகாமி, பாலாழி, மதகளிறு, புதுமதி எனவரும் பிறவுமன்ன.

அதுதான்,

௧. இயல்புவிகார மெனவிருபாலன.

(இ-ள்.) அப்புணர்ச்சி இயல்புப்புணர்ச்சி யெனவும், விகாரப்புணர்ச்சியெனவு மிருபகுதியவாகுமென்க.

௨. விகாரமனைத்து மேவலதியல்பே.



(இ-ள்.) மேல்வரும் விகாரவகையெல்லாமடையாத தியல்புப் புணர்ச்சியாகும.

வாலாறு. கால் + ஆழி=காலாழி.

௩. ஆக்கந்திரிபழி வாகும்விகாரம்.

(இ-ள்.) விகாரம் தோன்றலும், திரிதலும், கெடுதலுமாம்.

வாலாறு. அவரைக்காய, பஃறலை, மரவேர்.

௪. மருவின்றொகுதிய மயங்கியன்மொழியு
முரியவையுளவே புணர்நிலைச்சுட்டே.

(இ-ள்.) மருவிய சொற்களும், மயங்குதலியன்ற சொற்களும், புணருநிலைமைக் கணுரியனவுளவாமென்க.

வாலாறு. முன்றில், மீகண், மரூஉ, தெய்வமால்வரை.

௫. அல்வழிவேற்றுமை யாமிருபாலன.

(இ-ள்.) புணர்ச்சி-அல்வழிப்புணர்ச்சி, வேற்றுமைப் புணர்ச்சியென இருபகுதியவாமென்க.

அவற்றுள்,

௬. அல்வழிவினைத்தொகை யன்மொழியுவமை
யும்மைகுணமெழு வாய்விளியிடையுரி
யடுக்கிரெச்சமுற் றீரெடுமெட்டே.

(இ-ள்.) மேற்கூறிப்போந்தவற்றுள், அல்வழிப்புணர்ச்சி, வினைத்தொகையும், அன்மொழித்தொகையும், உவமைத் தொகையும், உம்மைத்தொகையும், பண்புத்தொகையும், எழுவாய்த் தொடரும், விளித்தொடரும், இடைத்தொடரும், உரித்தொடரும், அடுக்குத்தொடரும், பெயரெச்சத்தொடரும், வினையெச்சத்தொடரும், தெரிநிலை வினைமுற்றுத் தொடரும், குறிப்பு வினைமுற்றுத் தொடருமெனப் பதினான்கு வகைப்படும்.

வாலாறு. அடுகளிறு, பொற்றொடி, கிளிமொழி, ஒன்றனை, ஆதிபகவன், சாத்தன்மகன், கொற்றாபோகேல், தருங்கொல், நனிபேதை, பாம்பு பாம்பு, வந்தசாத்தன், வந்துபோனான், நடந்தான்சாத்தன், குழையினன் கொற்றன் எனவரும்.

எ. ஐயொடுகுவ்வின் னதுகண்வேற்றுமை.

(இ-ள்.) வேற்றுமைப்புணர்ச்சி ஐயும், ஒடுவும், குவ்வும், இன்னும், அதுவும், கண்ணுமென அறுவகையாம்.

வரலாறு. மரம்வெட்டினான், மகன்றந்தைவந்தான், சாத்தன் மகன், மலைவீழருவி, தன்கை, குன்றக்குகை.

அ. ஏழுநான்குமொற் றிடைமிகுமென்ப.

(இ-ள்) ஏழாம்வேற்றுமையும், நான்காம்வேற்றுமையும், வல்லொற் றிடையின் மிக்குமுடியும்.

வரலாறு. மணி + கண்,=மணிக்கண். மணி + கு,=மணிக்கு.

கூ. ஆறனுருபி னகாமுனைகெடும்.

(இ-ள்.) ஆறும்வேற்றுமையுருபின ாமுனையழியும்.

வரலாறு. தம் + அது,=தமது.

௰. பெயர்க்குப்பின்வரும் வேற்றுமையுருபே.

(இ-ள்.) வேற்றுமையுருபுகள் பெயர்கட்குப்பின்வரும்.

வரலாறு. நம்பியை, நம்பியொடு, நம்பிக்கு, நம்பியின், நம்பியது, நம்பிக்கண் எனவரும்.

௰௧. உயர்திணை யஃறிணை யோரிருவகையன.

(இ-ள்.) திணை, உயர்திணையும், அஃறிணையுமென விருவகையனவாம்.

வரலாறு. உயர்திணை, உயர்குலம், அஃறிணை, இழிகுலம்.

அவற்றுள்,

௰௨. உயர்திணையென்மனார் மக்கட்சுட்டே
யஃறிணையென்மனாரவாலபிறவே.

(இ-ள்.) மேற்கூறிப்போந்தவற்றுண் மக்களுந் தேவரு நரகருமுயர்திணையாம். அவரல்லாத பிறவெல்லா மஃறிணையாம்.



அவைதாம்,

௰௩. சாரியைச்சொற்களைச் சார்ந்துநின்றியலும்.

(இ-ள்.) மேற்கூறிப்போந்த விருதிணைகளுஞ் சாரியைச்சொற்களைச் சார்ந்தொழுகும்.

வரலாறு. ஆஉக்கை. ஆஉவின்கை. மகஉக்கை, மகஉவின் கை.

௰௪. அத்தம்மானக் கின்னன்னொன்னிக்
கற்றுத்தநம் நும்முமாம்பிற.

(இ-ள்.) அத்து, அம், மான், அக்கு, இன், அன், ஒன், இக்கு, அற்று, தம், நம், நும் ஆமெனவறிக.

அவற்றுள்,

௰௫. ஆமாகோவின் னடையவும்பெறுமே.

(இ-ள்.) மேற்கூறிய சாரியைகளுள் ஆ, மா, கோ இவை இன் சாரியை பெறுதலுமாம்

வரலாறு. ஆவை, ஆவினை. மாவை, மாவினை. கோவை, கோவினை.

௰௬. அற்றுறிற்சுட்டைகானழிதருமே.

(இ-ள்.) அற்றுச்சாரியையுறிற்சுட்டைகாரங்கெடும்.

வரலாறு. அவை, அவற்றை. இவற்றை, உவற்றை.

௰௭. னகாவிறுதிநாற் சாரியைனகரமும்
றகரமாகு நான்கனுருபிற்கு.

(இ-ள்.) னகரவிறுதியாகிய இன், ஒன், அன், ஆன் ஆகியநாற் சாரியையினகரமும் றகரமாகத்திரியும், நான்காம்வேற்றுமை யுருபிற் கெனவறிக.

வரலாறு. விளவிற்கு, கோஒற்கு, அதற்கு, ஒருபாற்கு.

௰௮. அத்துறினகாவீறழியுமென்ப.

(இ-ள்.) அத்துச்சாரியை அகரம் அகர வீற்றுச்சொன் முன் இல்லையாகும்,

வாலாறு. மகத்தை எனவரும்.

௰௯. இக்குறினிகர விறுதியுமற்றே.

(இ-ள்.) இக்குச்சாரியை இகரம் இகரவீற்றுச்சொன் முன் னில்லையாம்.

வாலாறு. ஆடிக்குக்கொண்டான்.

௨௰. ஐகான்முன்னரு மவ்வியனிலையும்.

(இ-ள்.) இக்குச்சாரியை இசரம் ஐகாரவீற்றுச்சொன் முன்னு மில்லையாம்.

வாலாறு. சித்திரைக்குக்கொண்டான்.

௨௧. அக்கிறுகெடும்வலி யடையுங்காலே.

(இ-ள்.) வல்லெழுத்துவரிற் கடைநின்றஅக்குச்சாரியைகெடும்.

வாலாறு. குன்று + அக்கு, கூகை = குன்றக்கூகை.

௨௨. இன்னின்றைந்தாம் வேற்றுமையியலும்.

(இ-ள்.) ஐந்தாம்வேற்றுமை யின்சாரியையின்றி நடக்கும்.

வாலாறு. பலாவின்கோடு.

௨௩. இ, ஈ, ஐவழியவ்வு மேனை
யுயிர்வழிவவ்வுமே முன்னிவ்விருமையு
முயிர்வரினுடம்படு மெய்யென்றாகும்.

(இ-ள்.) இ, ஈ, ஐ முன் உயிர்வரின் யகரமும், மற்றைய வுயிர் முன் உயிர்வரின் வகரமும், ஏ முன் உயிர்வரின் யகரவகரமு முடம் படுமெய்யாகும்.

வாலாறு. கரியழகு, தீயழகு, பனையழகு, விளவழகு, பலா வழகு, கடுவழகு, கூவழகு, கோவழகு, சேவேறி, அ வனேயவன்.

௨௪. கோமாமுன்வரின் யகரமுங்குதிக்கும்,

(இ-ள்.) கோ, மா முன்னுயிர்வரின் வகரமேயன்றியகரமு மு டம்படுமெய்யாம்.



வாலாறு. கோயில், மாயிருஞாலம்.

௨௫. இருவழியினுமுயி ரிறுதிமுன்னர்
ஞ, ந, ம, யவரினியல் பாமெனமொழிப.

(இ-ள்.) அல்வழிவேற்றுமையினு முயிரீறுகிய சொற்களுக்கு முன் ஞ, ந, ம, யக்கள்வரி னியல்பாகும்.

வாலாறு. விள, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, பிறவு மன்ன.

அவற்றுள்,

௨௬. மெல்லெழுத்தியற்கை யுறழினும்வரையார்.

(இ-ள்.) மேற்கூறிப்போந்தவற்றுள் மெல்லெழுத் துறழ்ந்து முடியினு நீக்காது கொள்வார் புலவர்.

வாலாறு. கதிஞெரி-கதிஞ்ஞெரி. நொமாடா-நொம்மாடா.

௨௭. வலிவரின்முன்னிலை வினையுறழ்தலும்விதி.

(இ-ள்.) முன்னிலை வினைமுன் க, ச, த, பக்கள்வரி னியல்பு மிகலுமாம்.

வாலாறு. நடகொற்றா-நடக்கொற்றா.

௨௮. ண, ன முனர்வருஞ்ப வொருவினைகொள்ளும்.

(இ-ள்.) ண, னக்களுக்கு முன்வரும் ஞ, ய க்களொரு வினை யைக்கொண்டு முடியும்.

வாலாறு. மண்யார்த்த கோட்டமழகளிறு = மண்யார்த்தகோ ட்டம். பொன்ஞார்த்ததார் புரவிபரிக்குமே = பொ ன்யார்த்தார் புரவி எனவரும்.

௨௯. அல்வழியிவ்விரு மையுமுதலாகெழுத்
தெல்லாமுன்வரி னியல்பாகும்மே.

(இ-ள்.) அல்வழிக்கண் ண, னக்களை யீறுகிய சொற்களுக்கு முன், மொழிக்குமுதலாகிய வெழுத்துக்களையுடைய சொற்கள்வரி னியல்பாம்.

வரலாறு. பொன், மண், அரிது, குடம், ஞமலி, வலிது, பொன்னரிது, மண்ணரிது, பொன்குடம், மண்குடம்.

௩௰. வல்லெழுத்தல்வழி யியல்பாம்வேற்றுமை.

(இ-ள்.) வேற்றுமைக்கண் வல்லெழுத்தை முதலாகவுடைய சொற்களல்லாத வெழுத்துக்களையுடைய சொற்களுக்குமுன், ண, னக்களை இறுதியாகிய சொற்களியல்பாம்.

வரலாறு. மண், பொன், வலிது, நீட்சி, யாப்பு.

௩௧. ண, ள, டணவாம் ன, ல, றனவாந்தநவரின்.

(இ-ள்.) ண, ள க்களுக்குமுன் த, நக்கள்வரின் ட, ணக்களாம். ன, லக்களுக்குமுன் த நக்கள்வரின் ற, னக்களாம்.

வரலாறு. மண் + தீது,=மண்டீது. தென் + நலம்,=தென்னலம். பொன் + தீது,=பொன்றீது. கல் + நலம்,=கன்னலம். வாள் + தீது,=வாடீது. வான் + நன்மை,=வானன்மை, வேல் + தீது,=வேறீது. வேல் + நன்மை,=வேனன்மை.

௩௨. ஔவிறு ஞ, ந, ம, வ விறுதியுமுகர
முற்றுகரமுன்னிலை யுறழ்தலும்விதியாகும்.

(இ-ள்.) ஔவீறும் ஞ, ந, ம, வவீறும், முற்றுகர முன்னிலையாயி னுகரச்சாரியை பெற்றொருகா லியல்பு மொருகான் மிகலுமாம்.

வரலாறு. கௌவுகொற்று=கௌவுக்கொற்று; உரிஞுகொற்று=உரிஞுக்கொற்று; பொருநுகொற்று=பொருநுக்கொற்று; திருமுகொற்று=திருமுக்கொற்று; தெவ்வுகொற்று=தெவ்வுக்கொற்று; எனவரும்.

௩௩. இருவழியினுமுட லுயிரையுமிறுதியா
முயர்திணைமுனசொலா முறுவியல்பாகும்.

(இ-ள்.) அல்வழிவேற்றுமை யிரண்டிடத்து மெய்யையு முயிரையு மிறுதியாகிய வுயர்திணைப் பெயர்க்குமுன் வன்கண மென்கண மிடைக்கண முயிர்க்கணமாகிய நாற்கணமும் வரினியல்பாம்.

வரலாறு. நம்பிபெரியன், நம்பிநல்லன், நம்பிவலியன், நம்பியவன், அவன்சிறியன், அவனல்லன், அவன்வலியன், அவனரியன்.



அவற்றுள்,

௩௪. இ, ஐ யிறுதிமுன் வன்கண மிகுமே.

(இ-ள்.) மேற்கூறிப்போந்தவற்றுள் இ, ஐ இறுதிமுன் வன்கணம்வரின் மிக்குமுடியும்.

வரலாறு. செட்டிக்கூத்தன், நங்கைப்பெண்

௩௫. இருமைக்கும்பொது வியல்பாதலுமுள.

(இ-ள்.) அஃறிணைக்கு முயர்திணைக்கும் பொதுவாகிய பொதுத்திணை யியல்பாதலுமுள.

வரலாறு. சாத்தன்பெரியன், சாத்தனல்லன், சாத்தன்வலியன், சாத்தனரியன், சாத்திபெரியள், சாத்திநல்லள், சாத்திவலியள், சாத்தியரியள். எனவரும்.

௩௬. இனமாந்தொழிற்பெய ரெய்தின்வேற்றுமை
வழியியல்பாதலு முறழ்தலுமாகும்.

(இ-ள்.) வேற்றுமைக்கண், மெய்யையுமுயிரையு மீறுகியமொழிக்குமுன், மூன்றுவதற்குரிய வினைமுதற்பொருளா னுளவாகிய தொழிற்சொற்கள்வரி னியல்பாதலுமுறழ்தலுமாம்.

வரலாறு. பேய்கோட்பட்டான்=பேய்க்கோட்பட்டான்.
புலிசடிக்கப்பட்டான்=புலிக்சடிக்கப்பட்டான்.

௩௭. வலிமிகும்வழிமெலி மிகுதலுமெலிமிகும்
வழிவலிமிகுதலு மியல்பின்வழிமிகு
தலுமுயிர்வழியுயிர் கெடுதலுஞ்சாரியை
வரும்வழிசாரியை கெடுதலும்மெய்வே
றுகிடத்தியற்கை யாதலும்பொதுப்பெயர்க்
கவ்வியனிலையலு மையுருபியல்பே.

(இ-ள்.) வன்கணமிகும்வழி மென்கணமிகுதலும்; மென்கணமிகும்வழி வன்கணமிகுதலும், இயல்பின்வழிமிகுதலும்; உயிர்வரும்வழி யுயிர்கெடுதலும், சாரியை வரும்வழி சாரியை கெடுதலும், மெய்வேறுகிடத்தியற்கையாதலும், பொதுப்பெயர்க்குருபு தொகாதே நிற்றலும் ஐயுருபினியல்பாம்.

வாலாறு. மரங்குறைத்தான், வலிவழிமெலிமிகல்; விளக்குறைத்தான், மெலிவழிவலிமிகல்; தாய்க்கொலை, இயல்பின்வழிமிகல்; சழூக்கொணர்ந்தான், உயிர்வரும்வழி உயிர்கெடல்; வண்டுகொணர்ந்தான், சாரியைவரும்வழி சாரியைகெடல்; புளிகுறைத்தான், மெய்வேறுகிடத்தியற்கையாதல்; கொற்றனைக்கொணர்ந்தான், உருபுதொகாது நிற்றல் எனவரும்.

௩௮. அல்வழி இ, ஐமுன ரியல்பாதலு
மிகுதலுமுறழ்தலும் வேண்டப்படுமே.

(இ-ள்.) அல்வழிக்கண் இ, ஐ, முன் க, ச, த, பக்கள்வரினியல்பாதலு மிகுதலும், ஒருகான்மிகுதலு மொருகான் மிகாமையுமாம்.

வாலாறு. பருத்திகுறிது, காரைகுறிது, மாசித்திங்கள், சித்திரைத்திங்கள், கிளிகுறிது,=கிளிக்குறிது, திணைகுறிது=திணைக்குறிது எனவரும்.

௩௯. இகரச்சுட்டு மைகானிறுதியு
மிகுதலுமுறழ்தலு முளவெனமொழிப.

(இ-ள்.) சுட்டுமுதலாகிய விகரமு மைகாரமு மிகுதலு முறழ்தலுமாம்.

வாலாறு. அதொளிக்கொண்டான், ஆண்டைக்கொண்டான். அவ்வழிகொண்டான - அவ்வழிக்கொண்டான். ஆங்கவைகொண்டான்-ஆங்கவைக்கொண்டான்.

௪௰. ஆறுநான்கு மிரட்டுதலிலவே.

(இ-ள்.) ஆறனுருபு நான்கனுருபுமிரட்டுதலிலவாமென்க.

வாலாறு. தமது-தமக்கு, நமது-நமக்கு.

௪௧. நும்மெனிறுதியு மந்நிலைதிரியாது.

(இ-ள்.) நும்மென்னு மகரவீ றிரட்டுதலிலவாமென்க.

வாலாறு. நுமது-நுமக்கு எனவரும்.

௪௨. எண்ணிறையளவு மேயொடுசிவணும்,



(இ-ள்) எண்ணுப்பெயரு நிறைப்பெயரு மளவுப்பெயரு மேகாரச்சாரியைபெறும்.

வாலாறு. காலேகாணி, தொடியேகஃசு, கலனேதூணி எனவரும்.

௪௩. அரைவரினேயகன் றேடுமற்றே.

(இ-ள்.) அரையென்னுஞ் சொல்வரி னேகாரச்சாரியை பெறுவாம்.

வாலாறு. காலரை, களஞ்சரை, உழக்கரை.

௪௪. குறைவரின்வேற்றுமை கொளின்மிகுமென்ப.

(இ-ள்.) வேற்றுமைக்கண் குறையென்னுஞ் சொல்வரின் மிக்குமுடியும்.

வாலாறு. காணிக்குறை, தொடிக்குறை, உரிக்குறை.

௪௫. குற்றியலுகரக் கின்னேசாரியை.

(இ-ள்.) குற்றியலுகரம் இன்சாரியைபெறுமென்க.

வாலாறு. நாகின்வளர்ச்சி, எஃகின்கால், வரகின்கதிர், கொக்கின்கால, குரங்கின்கண், தெள்கின்கால், ஒன்றின்குறை, களஞ்சின்குறை, ஆழாக்கின்குறை.

௪௬. கலமென்னளவே யத்தொடுசிவணும்.

(இ-ள்.) கலமென்னு மளவுப்பெயர் அத்துச்சாரியைபெறும்.

வாலாறு. கலம்-குறை,=கலத்துக்குறை.

௪௭. பனையுங்காவு மின்னொடுசிவணும்.

(இ-ள்.) பனையென்னு மரப்பெயரும், காவென்னும்பொழிற்பெயரு மின்சாரியைபெறும்.

வாலாறு. பனையின்கோடு, காவின்சோலை எனவரும்.

௪௮. யாவரவர்மு னடுப்பினடுநிலை
வகரங்கெடுதலும் யாததுமுன்வரின்
வகரம்வருதலு மதனியல்பாகும்.

(இ-ள்.) அவரென்னு மொழிக்குமுன் யவரென்னுஞ்சொல்வரி னடுநின்ற வகரங்கெடுதலும், அதுவென்னு மொழிக்கு முன்யாதென் னுஞ் சொல்வரின் வகரவுயிர்மெய் தோன்றலு மதனியல்பாம்.

வாலாறு. அவர்யாவர், அவர்யார், அதுயாது, அதுயாவது.

௪௯. அ. ஆ, உ, ஊ, ஏ, ஔ விறுபெயர்
முன்வருமுருபிற் கின்னேசாரியை.

(இ-ள்.) அ, ஆ, உ, ஊ, ஏ, ஔ விறுவாகிய மொழிக்குமுன் வருகிற வேற்றுமையுருபுகட் கின்சாரியை வரும்.

வாலாறு. விளவினை, பலாவினை, கருவினை, தழூவினை, சேவினை, வௌவினை யெனவரும்.

௫௰. அகரவிறுபெய ரற்றொடுசிவணும்.

(இ-ள்.) பன்மைப்பொருளைக் கருதிய வகரவீற்றுச் சொற்கள் அற்றுச்சாரியை பெறுமென்க.

வாலாறு. பலவற்றை-பல்லவற்றை, சிலவற்றை-சில்லவற்றை.

௫௧. யாகாரவினாவு மவற்றோரற்றே.

(இ-ள்.) வினாப்பெயரைத் தராநின்ற யாவு மற்றுச்சாரியை பெறுமென்க.

வாலாறு. யாவற்றை.

௫௨. உவ்விறுசுட்டன் னொடுவருமென்ப.

(இ-ள்.) சுட்டு முதலாகிய உகரவீற்றுச்சொற்கள் அன்சாரியை பெறும்.

வாலாறு. அதனை, இதனை, உதனை.

௫௩. நீயெனுமொருபெயர் நின்னெனத்திரியும்.

(இ-ள்.) நீயென்னு முன்னிலை யொருமைப்பெயர் நின்னெனத் திரியுமெனவறிக.

வாலாறு. நின்னை.

௫௪. ஓகரவிறுதிக் கொன்னேசாரியை.

(இ-ள்.) ஓகாரவிறுதிப்பெய ரொன்சாரியைபெறுமென்க.



வாலாறு. கோஒனை, கோஒனொல், கோஒற்கு.

௫௫. அ, ஆ விறுமர மத்தொடுசிவணு
மேழனுருபுவந் திசையுங்காலே.

(இ-ள்.) மரப்பெயரையுணர்த்தும் அ, ஆ வீற்றுமொழிகள் ஏழாம்வேற்றுமை வந்தியையுங்கால் அத்துச்சாரியைபெறும்.

வாலாறு. விளவத்துக்கண், பலாவத்துக்கண்.

௫௬. ஞநவிறுமொழியின் னொடுநடைபெறுமே.

(இ-ள்.) ஞநக்களை இறுதியாகிய மொழிகள் இன் சாரியை பெறுமென்க.

வாலாறு. உரிஞினை, பொருநினை.

௫௭. சுட்டுமுதல்வகர மற்றொடுசிவணும்.

(இ-ள்.) அவ், இவ், உவ் என்னுஞ் சுட்டெழுத்தை முதலாக வுடைய வகரவீற்றுச்சொற்க ளற்றுச்சாரியை பெறும்.

வாலாறு. அவற்றை, இவற்றை, உவற்றை, அவ் + அற்று + ஐ =
அவற்றை எனவரும்.

௫௮. ஏனையவகரக் கின்னேசாரியை.

(இ-ள்.) இவையொழிந்த தெவ்வென்னுஞ்சொல் இன்சாரியை பெறும்.

வாலாறு. தெவ்வினை.

௫௯. மஃகான்புள்ளிமுன் னத்தேசாரியை.

(இ-ள்.) மகரமெய் இறுதியாகிய சொற்கள் அத்துச்சாரியை பெறுமென்க.

வாலாறு. மரத்தை.

௬௰. இன்னொடுவருதலு மதனியல்பாகும்.

(இ-ள்.) மகரவீற்றுச்சொற்க ளத்துச்சாரியையே யன்றி இன்சாரியையும் பெறும்.

வாலாறு. உருமினை.

௬௧. நும்மத்தின்னையு நோக்காதியலும்.

(இ-ள்.) நும்மென்னு மகரவீற்றச்சொல் மேற்கூறிய அத்துச் சாரியையும் இன்சாரியையும் பெறாதியல்பாமென்க.

வரலாறு. நும்மை.

௬௨. தாமுநாமு நெடுமுதல்குறுகும்.

(இ-ள்.) தாம் நாம் என்னுந் தன்மைப்பன்மைப் பெயர், அத்தும் இன்னும் பெறாது நெடுமுதல் குறுகுமெனவறிக.

வரலாறு. தம்மை, நம்மை.

௬௩. யாமெம்மாகுமா ராயுங்காலே.

(இ-ள்.) யாமென்னும்பெயர் எம்மாகும் ஆராயுமிடத்து.

வரலாறு. எம்மை.

௬௪. அற்றெல்லாம்பெறு மாயிடையும்மை
யிறுதியொடுசிவணு மென்மனார்புலவர்.

(இ-ள்.) எல்லாமென்னும் பொதுப்பெயர் அற்றுச்சாரியை, பெறும், சாரியையீற்றில் உம்மை நிலைபெறும்,

வரலாறு. எல்லாவற்றையும் எனவரும்.

௬௫. உயர்திணையாயி னம்மிடைதோன்றும்.

(இ-ள்.) எல்லாமென்னும் பொதுச்சொலுயர்திணையாயின், நம்முச்சாரியை பெற்றுக் கடையில் உம்மை நிலைபெறுமென வறிக.

வரலாறு. எல்லா நம்மையும்.

௬௬. எல்லாருமெல்லீரு மென்பவற்றும்மை
தள்ளிநிரலே தம்நும்சாரப்
புல்லுமுருபின் பின்னரும்மே.

(இ-ள்.) எல்லாருமென்னும் படர்க்கைப்பெயரும் எல்லீருமென்னு முன்னிலைப்பெயருமாகிய இரண்டுபெயர்க ளீற்றினும்மையை நீக்கி, முறையே தம்மும் நும்மும் பொருந்தவுருபின் பின் உம்மைவரும்.



வரலாறு. எல்லார் தம்மையும், எல்லீர் நும்மையுமெனவரும்.

௬௭. தான்முதல்குறுகும் யானென்றாகும்.

(இ-ள்.) தானென்னுந் தன்மை யொருமைப்பெயர் நெடுமுதல் குறுகும், யானென்னுந் தன்மையொருமைப்பெயர் என் எனத்திரியும்.

வரலாறு. தன்னை, என்னை.

௬௮. எல்லாவெண்களு மின்னொடுசிவணும்.

(இ-ள்.) எண்ணுப்பெயரெல்லாம் இன்சாரியைபெறும்.

வரலாறு. ஒன்றினை, இரண்டினை, மூன்றினை, நான்கினை, பிறவுமன்ன.

௬௯. ஒற்றிடைமிகூஉங் குற்றுகரமுமுளவே.

(இ-ள்.) இடையிலொற்றுமிக்குமுடியுங் குற்றியலுகரங்களும் உளவாம். 1-10-52

வரலாறு. ஆட்டை, கயிற்றை.

௭௰. ஒன்றுமுதலெட்டீறாமெண்களோ
டூர்ந்துவரும்பத்தாறொடுசிவணிப்
பகரவொற்றொழியமேலெல்லாமோடும்.

(இ-ள்.) ஒன்றுமுத லெட்டீறாகிய வெண்களையூர்ந்துவரும் பத்தென்னு மெண் ஆனொடு சிவணிப் பகரமெய்யொன்று நிற்க மற்றைய வெழுத்துக்களெல்லாங் கெடும்.

வரலாறு. ஒன்று + பத்து + ஐ = ஒருபானை, இருபானை, முப்பானை, நாற்பானை, ஐம்பானை, அறுபானை பிறவுமன்ன.

௭௧. ஒன்பதுமானொடு மொத்துநடக்கும்.

(இ-ள்.) ஒன்பதென்னு மெண்ணுப்பெயரும் ஆனைப்பெறும்.

வரலாறு. ஒன்பது + ஐ = ஒன்பானை.

௭௨. ஆய்தச்சுட்டும் யாதுமன்பெறு
மாவயினாய்த மழியுஞ்சுட்டே.

(இ-ள்.) சுட்டுமுதலாகிய வாய்தவீறும், யாதெனவருங் குற்றிய லுகரவீறும் அன்சாரிபைபெறும் ஆயிடைச்சுட்டாய்தங்கெடும்.

வரலாறு. அஃது + ஐ = அதனை; இதனை; உதனை; யாதனை.

௭௩. திசைப்பெயர்முன்வரு மேழனுருபிற்
கின்னென்சாரியை யின்றியுமியலும்.

(இ-ள்.) திசைப்பெயர்க்கு முன்வரு மேழாம்வேற்றுமை யுருபிற் கின்சாரியை யின்றியும் வரும்.

வரலாறு. வடக்கின்கண், வடக்குக்கண் எனவரும்.

௭௪. அகரச்சுட்டு மாங்கவு முவமையு
மெனவென்னெச்சமு மிருவழியினுமிகும்.

(இ-ள்.) அல்வழிவேற்றுமையினும், அகரச்சுட்டும், ஆங்க என்னுமுரையசைக்கிளவியும், உவமையுருபும், எனவென்னும் வினையெச்சமும், க, ச, த, பக்கள்வரின் மிக்குமுடியும்.

வரலாறு. அக்கொற்றன், ஆங்கக்கொண்டான், புலிபோலக் கொண்டான், கொள்ளெனக்கொண்டான்.

௭௫. வினையெஞ்சுகிளவியு மிகுமெனமொழிப.

(இ-ள்.) வினையெச்சமொழிகளு மிக்குமுடியும்.

வரலாறு. கூவப்போயினான்; செய்யப்போனான் எனவரும்.

௭௬. அகரச்சுட்டின்முன் ஞ, ந, மத்தோன்றிற்
றத்தமொற்றிடைமிகு மென்மனார்புலவர்.

(இ-ள்.) அகரச்சுட்டின்முன் ஞ, ந, மக்கள்வரின், தத்தமெய்களிடையின் மிக்குமுடியுமெனவறிக.

வரலாறு. அ + ஞாண் = அஞ்ஞாண்; அந்நூல்; அம்மணி எனவரும்.

௭௭. வயவரின்வகரம் வருமெனமொழிப.

(இ-ள்.) அகரச்சுட்டின்முன், வ, யக்கள்வரின், வகரவொற்றிடையில் வரும்.

வரலாறு. அவ்வளை, அ + யாழ் = அவ்யாழ்.



௭௮. ஆவிவரினு மவ்வியனிலையும்.

(இ-ள்.) அகரச்சுட்டின்முன் உயிர்வரினும், வகரவொற்றிடையில்வரும்.

வரலாறு. அ + அடை = அவ்வடை பிறவுமன்ன.

௭௯. யாப்பினுள் அ, ஆவாகுமென்ப.

(இ-ள்.) செய்யுளில் அகரம் ஆகாரமாகும்.

வரலாறு. அ + இடை = ஆயிடை எனவரும்.

௮௰. சாவவென்மொழியீற்றுயிர்மெய்சாதலும்விதி.

(இ-ள்.) சாவவென்னும் வினையெச்சச் சொல்லினிறுதிமெய் கெடுதலுமாம்.

வரலாறு. சாவக்குத்தினான் = சாக்குத்தினான்.

௮௧. வியங்கோளண்மை விளியுமுவமையுஞ்
செய்தசெய்யியவெனுமீரெச்சமு
மம்மவும்பலவுமிகாதியல்பாகும்.

(இ-ள்.) வியங்கோளும், அண்மைவிளியும், உவமையும், செய்தவென்னும் பெயரெச்சமும், செய்யியவென்னும் வினையெச்சமும், அம்மவென்னு முரையசைக்கிளவியும், பலவும் மிகாதியல்பாம்.

வரலாறு. வாழியகொற்றா, ஐயபோகேல், பால்போல்சொல், செய்தசாத்தன், செய்யியபோனான், அம்மகொற்றா, பலகுதிரை.

௮௨. அம்மவிறுதி நீட்டமும்வரையார்.

(இ-ள்.) அம்மவென்னு முரையசைக்கிளவியிறுதி நீட்டமும் வரையாது கொள்வார்.

வரலாறு. அம்மா கொற்றா.

௮௩. வாழியவிறுதி கெடுதலுமுரித்தே.

(இ-ள்.) வாழியவென்னும்வியங்கோளிறு கெடுதலுமாம்.

வரலாறு. வாழியகொற்றா, வாழிகொற்றா எனவரும்.

௮௪. பலசிலவெனுமிவை தம்முன்றாம்வரி
னியல்புமிகலு மகரமேக
லகரம்றகர மாகலும்பிறவரி
னகரம்விகற்ப மாகலுமுளபிற.

(இ-ள்.) பலசிலவென்னும் பலவின்பெயர் தமக்குமுன்னர்த் தாம்வரின் இயல்பாதலும், மிகுதலும், அகரங்கெட லகரமெய் றகரமெய்யாதலும், பிறசொற்கள்வரின் அகரம் விகற்பமாதலுமுள வாம்.

வாலாறு. பலபல-பலப்பல, சிலசில-சிலச்சில, பற்பல-சிற்சில, பலமணி-பன்மணி, சிலமணி-சின்மணி.

௮௫. அவைநாம்பாவினு ணீட்டமும்வரையார்.

(இ-ள்.) அப்பலவுஞ் சிலவுஞ் செய்யுளினீட்டமு நீக்காது கொள்வார் புலவர்.

வாலாறு. பலாம், சிலாம்.

௮௬. வலிவரின்மரப்பெயர் மெலிமிகுமென்ப.

(இ-ள்.) மரப்பெயருக்குமுன்னர்க் க, ச, த, ப, க்கள்வரின் தமக்கினமாகிய மெல்லெழுத்து மிக்குமுடியும்.
வாலாறு. விளங்கோடு.

௮௭. இன்சாரியைமக வேற்குமென்ப.

(இ-ள்.) மகவென்னுஞ்சொல் இன்சாரியைபெறும்.

வாலாறு. மகவின்கை.

௮௮. எச்சவும்மை யிருபெயர்த்தொகைச்சொற்
ககரச்சாரியை யுரித்தாகும்மே.

(இ-ள்.) உம்மைதொக்குநின்ற விருபெயர்த் தொகைச்சொற்கு அகரச்சாரியையுரித்தாகும.

வாலாறு. இரா அப் பகல்.

௮௯. ஆவுமாவு மழைப்பும்வினவு
மியாவும்பலவு மிகாதியலபாகும்.



(இ-ள்.) ஆவென்னும் பசுப்பெயரும், மாவென்னும் பலபொரு ளொருசொல்லும், விளிப்பெயரும், வினாப்பெயரும், யியாவென்னு முன்னிலையுரை யசைக்கிளவியும், பலவையுணர்த்தும் பலவுமிகா தியல்பாகும்.

வாலாறு. ஆகுறிது, மாகுறிது, ஊரா கொள், கேண்மியா கொற்று, உண்ணு குதிரைகள் எனவரும்.

௯௰. ஓரெழுத்துமொழியுங் குறிற்கீழாவு
மகரச்சாரியை பெறுமெனமொழிப.

(இ-ள்.) ஓரெழுத்தொருமொழியும், ஒற்றெழுத்தின் முன் னின்ற ஆவும் அகரச்சாரியைபெறும்.

வாலாறு. கா அக்கோடு, பலா அக்கோடு எனவரும்.

௯௧. குறியதன்கீழாக் குறுகலுமதனோ
டுகரமேற்றலு மியல்புமாந்தூக்கின்.

(இ-ள்.) குற்றெழுத்துக்கு முன்னின்ற ஆ, அ அதலும், அவ்வகரத்தோடு உகரம்பெறதலு மியல்பாதலுஞ் செய்யுட்கணும்.

வாலாறு. நிலா, நில, நிலவு எனவரும்

௯௨. நிலாப்பெயரின் [illegible]

(இ-ள்.) நிலாவென்னும்பெயர் இன்சாரியைபெறுமென்க,

வாலாறு. நிலாவின்காந்தி எனவரும்.

௯௩. இராப்பெயருக்கிலவா மெனமொழிப.

(இ-ள்.) இராவென்னும் பெயர்ச்சொல் இன்சாரியைபெறுவா மென்க.

வாலாறு. இராக்கொண்டான்.

௯௪. யாவும்பிடாவுந் தளாவுமெலிமிகும்.

(இ-ள்.) மரப்பெயராகிய யாவும், பிடாவும், தளாவும் மெல் லெழுத்து மிக்குமுடியுமெனவறிக.

வாலாறு. யா அங்கோடு, பிடா அங்கோடு, தளா அங்கோடு.

கூரு. வல்லெழுத்துமிகினு மானமில்லை.

(இ-ள்.) மேற்கூறிப்போந்த மரப்பெயர்கள் வல்லெழுத்து மிக்குமுடியினும் குற்றமில்லையாமென்க.

வரலாறு. யா அக்கோடு, பிடா அக்கோடு, தளா அக்கோடு.

கூசு. ஆமாவனகரமெய் யடையப்பெறுமே.

(இ-ள்.) ஆவென்னும்பெயரும், மாவென்னும்பெயரும், னகரச்சாரியைபெறும்.

வரலாறு. ஆன் கோடு, மான் கோடு.

கூஎ. ஆனொற்றகரமொடு நிலையிடனுடைய.

(இ-ள்.) ஆமுன்னின்ற னகரமெய், அகரச்சாரியையோடு நிலை பெறுமிடனுடையனவாம்.

வரலாறு. ஆனநெய்தெளித்து.

கூஅ. ஆமுன்பகரவீ யனைத்தும்வரக்குறுகும்.

(இ-ள்.) ஆவென்னும்மொழிக்கு முன்னின்ற ஈகார பகரம் நாற்கணமும்வரின் இ-இய்யாம்.

வரலாறு. ஆப்பீகுறிது=ஆப்பிகுறிது; ஆப்பிநன்மை, ஆப்பி வலிது, ஆப்பியரிது.

கூகூ. இனியணியிகரச்சுட்டு மொற்றிடைமிகும்.

(இ-ள்.) இனியென்னும் பெயரும், அணியென்னும் பெயரும், இகரச்சுட்டுப்பெயரும் ஒற்றிடைமிக்குமுடியும்.

வரலாறு. இனிக்கொண்டான், அணிக்கொண்டான, இக் கொற்றன்.

ச. யாப்பினுளின்றியு மன்றியுமுகர
மாய்வரின்மிகாதியல் பாமெனமொழிப.

(இ-ள்.) செய்யுட்கண் இன்றி, அன்றியென்னுங் குறிப்புவினை யெச்சமொழிகள் உகரமாகத்திரிந்துவரின் மிகாதியல்பாமென்க.

வரலாறு. காளன்றுபோகி, உப்பின்று புற்கையுண்கமா கொற்கையோனே.



சக. பதக்குவரின் மிகுந்தூணிக்கிளவி.

(இ-ள்.) தூணியென்னு முகத்தலளவைப் பெயருக்குமுன் பதக்கென்னு முகத்தலளவைப் பெயர்வரி னொற்றிடைமிக்குமுடியு மென்க.

வரலாறு. தூணிப்பதக்கு.

சஉ. உரிவரினாழியி னீற்றுயிர்மெய்கெட
மருவும்டகரமாம் வல்லினப்புள்ளி.

(இ-ள்.) நாழியென்னுமுகத்தலளவைப் பெயருக்குமுன் பதக் கென்னு முகத்தலளவைப் பெயர்வரின், நாழியீற்றுயிர்மெய்கெட வல்லொற்றாகிய டகரமெய்தோன்றும்.

வரலாறு. நாழி + உரி—நாடுரி எனவரும்.

சங. இன்னுமத்தும் பனியொடுசிவணும்.

(இ-ள்.) பனியென்னுங்காலப்பெயர் இன்சாரியையும் அத்துச் சாரியையும்பெறுமென்க.

வரலாறு. பனியிற்கொண்டான், பனியத்துக்கொண்டான்.

சச. வளிப்பெயர்க்கிளவியு மவற்றோரற்றே,

(இ-ள்.) வளியென்னும்பூதப்பெயர்க்கிளவியும் இன்சாரியையும் அத்துச்சாரியையும் பெறுமெனவறிக

வரலாறு. வளியிற்கொண்டான், வளியத்துக்கொண்டான்.

சரு. உதியெனுமரமெலி மிகுமெனமொழிப.

(இ-ள்.) உதியென்னு மரப்பெயர்க்கிளவி மெல்லெழுத்து மிக்கு முடியும்.

வரலாறு. உதி + கோடு=உதிங்கோடு.

சசு. அம்முச்சாரியை யடையுமரப்புளி.

(இ-ள்.) புளியென்னு மரப்பெயர்க்கிளவி யம்முச்சாரியை பெறுமென்க.

வரலாறு. புளி + கோடு=புளியங்கோடு.

௱௭. சுவைப்புளிமுன்னின மென்மையுந்தோன்றும்.

(இ-ள்.) சுவையையுணர்த்தும் புளியென்னும் பெயர் முன் றமக்கினமாகிய மெல்லெழுத்துந்தோன்றுமென்க.

வரலாறு. புளிக்கறி=புளிங்கறி எனவரும்.

௱௮. தொழிற்பெயர்வரினு ளாவொடுசிவணும்,

(இ-ள்.) ஈாவென்னுஞ்சொற்கு முன்றொழிற்பெயர்வரின் ஆன் சாரியைபெறும்.

வரலாறு. பரணியாற்கொண்டான்.

௱௯. ஈகாரபகாரமு நீயுமியல்பே.

(இ-ள்.) ஈகாரபகரமாகிய இடக்கர்ப்பெயரும், நீயென்னுமுன் னிலையொருமைப்பெயரு மிகாதியல்பாம்.

வரலாறு. பீகுறிது, நீகுறியை.

௱௰. ஈகாரபகாரமி டக்கராய்வழங்கும்

(இ-ள்.) ஈகாரபகரமென்பது பீ யென்னுந் தகாதமொழியாம்

௱௰௧. மீயியல்பாதலு மெலிவலிமிகுதலு
மாகுமென்மனா ரறிந்திசினோரே.

(இ-ள்.) மீயென்னுமேலிடப் பெயரியல் பாதலுமொருகான் மெல்லெழுத்துமிகுதலும் ஒருகால் வல்லெழுத்துமிகுதலுமாம் எனறுசொல்லுவரறிவுடையோர்.

வரலாறு. மீகண், மீந்தோல், மீத்தோல் எனவரும்.

௱௰௨. அன்றதுமுன்வரி னாவாகலுமை
வரினுகரங்கெடு தலுமாந்தூக்கின்.

(இ-ள்.) செய்யுளில் அதுவென்னுஞ் சுட்டுப்பெயருக்குமுன் அன்றென்னும் குறிப்பெச்சவினைவரின் ஆவாதலும், ஐ வரின் உ கரங்கெடுதலுமாம்.

வரலாறு, அது+அன்று=அதான்று; அது+ஐ= அதை என வரும்.



௱௰௩. செருவுமெருவு மம்மொடுசிவணும்.

(இ-ள்.) செருவென்னும்பெயரும், எருவென்னும்பெயரும். அம்முச்சாரியைபெறும்.

வரலாறு. செருவங்களம், எருவங்குழி.

௱௰௪. அம்மிறுமகரஞ் செருவயினழியும்.

(இ-ள்.) முற்கூறியவற்றுள் அம்முச்சாரியை இறுதி மகரமெய் செருவிற்கெடும்.

வரலாறு. செருவக்களம்.

௱௰௫. ஒடுமரப்பெயருதி மரவியனிலையும்.

(இ-ள்.) ஒடுவென்னுமரப்பெயர்க்கிளவி, உதியென்னுமரப் பெயரியல்பிற்றாய் மெல்லெழுத்துமிக்குமுடியும்.

வரலாறு. ஒடு+கோடு=ஒடுவங்கோடு.

௱௰௬. உகரழகார நீடிடனுடைத்தே.

(இ-ள்.) ழகரமெய்யோடுகூடிய உகரம் நீடுமிடனுடைத்தாகும்.

வரலாறு. எழு+கள்=எழூஉக்கள் எனவரும்.

௱௰௭. ஊகாரவிறுதி முன்னிலைமொழியும்
வினையெஞ்சுகிளவியு மிகுமெனமொழிப.

(இ-ள்.) ஊகாரவீற்று முன்னிலை வினைச்சொற்குமுன்னும் வினையெச்சச்சொற்குமுன்னுங்: க,ச,த, பக்கள்வரின் மிக்குமுடியும்.

வரலாறு. உண்ணூக்கொண்டான், கைதூக்கொற்று.

௱௰௮. பூப்பெயர்முன்னின மென்மையுந்தோன்றும்.

(இ-ள்.) பூவென்னு மலர்ப்பெயர்க்கிளவி தமக்கினமாகிய மெல்லெழுத்தோடுந் தோன்றுமென்க.

வரலாறு. பூ+கொடி=பூக்கொடி; பூங்கொடி, எனவரும்.

௱௰௯. ஊனகரத்தொடு மொழுகுமென்ப.

(இ-ள்.) ஊவென்னுமிறைச்சிப்பெயர்க்கிளவி, னகரச்சாரியை யோடுநடக்கும்.

வாலாறு. ஊ + குறை = ஊன்குறை.

௱௨௰. அக்கொடுவருதலு மதனியல்பாகும்.

(இ-ள்.) அவ்வூவென்னும் பெயர்க்கிளவி யக்குச்சாரியை பெறுதலு மதனியல்பாகும்.

வாலாறு. ஊனக்குறை.

௱௨௧. ஆடூஉமகடூஉ வின்னொடுநிலையும்.

(இ-ள்.) ஆடூஉவென்னு மாண்பாற் படர்க்கைப்பெயரும், மகடூஉவென்னும் பெண்பாற் படர்க்கைப்பெயரும், இன்சாரியை பெறும்.

வாலாறு. ஆடூஉவின்கை, மகடூஉவின்கை.

௱௨௨. ஏகாரத்தேற்ற மியல்பாகும்மே.

(இ-ள்.) தேற்றவேகாரத்துக்கு முன்வருகிற வல்லினமியல்பா மெனவறிக.

வாலாறு. அவனேகொண்டான்.

௱௨௩. எகரச்சாரியை யேயேற்கும்மே.

(இ-ள்) ஏயென்னு மாயுதப்பெயர்க்கிளவி யெகரச் சாரியை பெறுமென்க.

வாலாறு. ஏஎக் கொட்டில்.

௱௨௪. சேமரமொடுமரச் செய்கையினியலும்.

(இ-ள்.) சேவென்னு மரப்பெயர், ஒடுவென்னு மரப்பெயரைப் போல மெல்லினமிகும்.

வாலாறு. சேங்கோடு.

௱௨௫. ஆன்பெயராயினின் னடையப்பெறுமே.

(இ-ள்.) சேவென்பது பசுவின் பெயராயின் இன்சாரியை யடையப் பெறுமென்க.



வாலாறு. சேவின்கோடு.

௱௨௬. விசைஞெமைநமையொடு விருக்கத்தியல்பே.

(இ-ள்.) மரப்பெயராகிய விசையும், ஞெமையும், நமையும் ஒடுவென்னு மரப்பெயரைப்போல் மெல்லெழுத்துமிக்கு முடியும்.

வாலாறு. விசை + கோடு—விசைங்கோடு. ஞெமைங்கோடு; நமைங்கோடு.

௱௨௭. ஆவிரைபனையரை யம்மொடுசிவணும்.

(இ-ள்.) ஆவிரையும் பனையும் அரையு மம்முச்சாரியை பெறுமென்க.

வாலாறு. ஆவிரங்கோடு, பனங்கோடு, அரையங்கோடு.

அவற்றுள்,

௱௨௮. ஆவிரைபனையிறு வையுயிரழியும்.

(இ-ள்.) மேற்கூறிப் போந்தவற்றுள், ஆவிரை, பனையிறுதி யாகிய ஐகார வுயிர்கெடும்.

வாலாறு. ஆவிரங்காய், பனங்காய்.

௱௨௯. பனைமுன்கொடிவரின் மிகுமெனமொழிப.

(இ-ள்.) பனையென்னு மரப்பெயர்க்குமுன், கொடி யென்னுஞ் சொல்வரின் மிக்குமுடியும்.

வாலாறு. பனைக்கொடி.

௱௩௰. அட்டுவரினு வாகுமென்ப.

(இ-ள்.) பனையென்னும் பெயர்க்குமுன் அட்டென்னுஞ் சொல் வரின் ஆகாரமாகத் திரியும்.

வாலாறு. பனாட்டு.

௱௩௧. இன்னொடுமழையெதிர்ந் தியலுமென்ப.

(இ-ள்.) மழையென்னுங் கார்காலப்பெயர் இன்சாரியை பெறும்.

வாலாறு. மழையிற்கொண்டான்.

௩௨. ஐயவோவினாவலி மிகாதியல்பாகும்.

(இ-ள்.) ஐயப்பொருண்மையையுடைய வோகாரவினா மிகாது இயல்பாகுமென்க.

வரலாறு. யானோகொண்டேன்.

௩௩. அவாவரின்வேட்கையி றுயியுமெய்யு
மழிந்துடகரமெய் ணகரவொற்றாகும்.

(இ-ள்.) ஆசைப்பெருக்கத்தை யுணர்த்து மவாவென்னுஞ் சொல்வரின் வேட்கையென்னு,மொழியிறுதி யைகார வுயிரும், ககர வொற்றுங்கெட்டு நடுநின்ற டகரமெய் ணகரவொற்றாகத்திரியும்,

வரலாறு. வேட்கை + அவா = வேணவா.

௩௪. ஒழியிசையோவு மாறுகொளெச்சமு
மிகாதியல்பாகு மென்மனார்புலவர்.

(இ-ள்.) ஒழியிசையைத்தரு மோகாரமும், மாறுகொ ளெச்சமும் மிகாதியல்பாகும்.

வரலாறு. புற்றோ புதலோ,

௩௫. இல்லொடுகிளப்பி னியல்பாகும்மே.

(இ-ள்.) ஒ, இல்லென்னும் பெயரோடு புணரினியல்பாகும்.

வரலாறு. கோவில்.

௩௬. ஔகாரவிறுதி மிகுதலுமுகரச்
சாரியைபெறுதலுந் தனக்குரித்தாகும்.

(இ-ள்.) ஔகார வீற்றுச்சொன் மிகுதலும், உகரச் சாரியை பெறுதலுமாம்.

வரலாறு. கௌவுக்கடிது.

௩௭. ஞகாரவிறுதித் தொழிற்பெயருகரம்
பெறுதலுமிகுதலும் பெற்றித்தாகும்.



(இ-ள்.) ஞகரமெய் யிறுதியாகிய தொழிற் பெயர்க்குமுன் க, ச, த, ப, க்கள்வரின் அல்வழி வேற்றுமையினும் உகரச் சாரியை பெறுதலு மிகுதலுந்தனக் குரித்தாமென்க.

வரலாறு. உரிஞ் + கடிது = உரிஞுக்கடிது.

௩௮. ஞ, ந, ம, வ வரினு முகரமொடுநிலையும்.

(இ-ள்.) ஞ, ந, ம, வக்கள் வரினும், உகரச்சாரியை பெறு மென்க.

வரலாறு. உரிஞுஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது.

௩௯. உகரச்சாரியை யொடுவருநகாரம்.

(இ-ள்.) நகரமெய் யிறுதியாகிய மொழி, உகரச்சாரியைபெறு மெனவறிக.

வரலாறு. பொருநுக்கடிது.

௪௰. வேற்றுமைக்கண்ணகரத்தொடுசிவணும்.

(இ-ள்.) வேற்றுமையாயின் அகரச்சாரியை பெறும்.

வரலாறு. பொருநக்கடுமை எனவரும்.

௪௧. வெரிநீறழிந்துமெல் லினமிகுமென்ப.

(இ-ள்.) வெரிந் என்னுஞ் சொல்லிறுதிகெட்டு மெல்லெழுத்து மிக்குமுடியும்.

வரலாறு. வெரிங்குறை.

௪௨. வல்லினமிகுதலு மற்றதனியல்பே.

(இ-ள்.) முற்கூறிய வெரிந் என்னுஞ்சொல் வல்லெழுத்துமிக்கு முடிதலுமாம்.

வரலாறு. வெரிக்குறை.

௪௩. ணகரமெய்டகரவொற் றாகத்திரியும்.

(இ-ள்.) க, ச, த, பக்கள்வரின், ணகரமெய் டகரமெய்யாகத் திரியுமென்க.

வரலாறு. மண் + குடம் = மட்குடம்.

௱௪௪. ஆணும்பெண்ணு மிகாதியல்பாகும்.

(இ-ள்.) ஆணும்பெண்ணுமாகிய பொதுப்பெயரியல்பாம்.

வரலாறு. ஆண்கை, பெண்கை, எனவரும்.

௱௪௫. இயல்பாதலுந் திரிதலுமுரணியல்பே.

(இ-ள்.) முரணென்னுஞ்சொல் இயல்பாதலுந் திரிதலும் இயல்பாகுமென்க.

வரலாறு. முரண்கடுமை, முரட்கடுமை.

௱௪௬. ஆண்மரமாயி னம்மொடுசிவணும்.

(இ-ள்.) ஆணென்னுஞ்சொல் மரப்பெயராயின் அம்முச் சாரியைபெறுமென்க.

வரலாறு. ஆணங்கோடு.

௱௪௭. தொழிற்பெயர்வரின்விண் ணத்தொடுசிவணும்.

(இ-ள்.) விண்ணென்னு மிடப்பெயர்க்குமுன் தொழிற் பெயர் வரினத்துச்சாரியை பெறும்.

வரலாறு. விண்ணத்துக் கொட்கும்.

௱௪௮. தொழிற்பெயரெல்லாந் தொழிற்பெயரியல.

(இ-ள்.) தொழிற்பெயரெல்லா முகரச்சாரியைபெறும்.

வரலாறு. பண்ணுக்கடிது, உண்ணுக்கடிது.

௱௪௯. இயல்பாங்கிளைப்பெய ரெல்லாமென்ப.

(இ-ள்.) கிளைப்பெயரெல்லா மிகாதியல்பாகும்.

வரலாறு. அமண்குடி, உமண்குடி.

௱௫௰. அல்வழியுணவெண் டகரமாகும்.

(இ-ள்.) அல்வழிக்கண், உணவாகிய வெண்ணென்னும் பெயர்ச்சொல் டகரமெய்யாகும்,



வரலாறு. எட்கோல்.

௱௫௧. மகரவிறுபெயர் மிகலுமீறழிதலு
மாகும்வேற்றுமைக் கண்ணெனமொழிப.

(இ-ள்.) மகரமெய்யிறுதியாகிய மொழிகள் வேற்றுமைக் கண் மிகுதலுமீறு கெடுதலுமாமெனவறிக.

வரலாறு. மரக்கோடு, மரநூல், மரவேர்.

௱௫௨. அ, ஆ வரினீற் றயனிளலுமாம்.

(இ-ள்.) அகர ஆகாரங்கள் வரினீற்றயனிளலுமாமென்க.

வரலாறு. மரம் + அடி = மராடி, குளம் + ஆம்பல் = குளாம்பல்.

௱௫௩. மெல்லினமுறழ்சில மொழிகளுமுளவே.

(இ-ள்.) மெல்லெழுத்து றழ்ந்துமுடியுஞ்சொற்களும் சிலவுள வாம்.

வரலாறு. குளம் + கரை = குளங்கரை, குளக்கரை.

௱௫௪. இல்லாமரமெனின் மெல்லெழுந்துமிகுமே.

(இ-ள்.) இல்லாமென்னுஞ் சொல்மரப்பெயராயின் மெல் லெழுத்து மிக்குமுடியும்.

வரலாறு. இல்லாங்கோடு.

௱௫௫. வேற்றுமையல்வழி மெல்லெழுத்தாகும்.

(இ-ள்.) வேற்றுமையல்லாத அல்வழிக்கண் மெல்லெழுத் தாகுமென்க.

வரலாறு. மரம் + குறிது = மரங்குறிது.

௱௫௬. அகமுனர்ச்செவிகை வரினிடையனகெடும்.

(இ-ள்.) அகமென்னுஞ் சொற்குமுன், செவி, கை, என்னுஞ் சினைப்பெயர்வரின், நடுநின்ற ககரவொற்றும், அகரவுயிருங்கெடும்.

வரலாறு. அகம் + செவி = அஞ்செவி. அகம் + கை = அங்கை எனவரும்.

௱௫௭. இலமுன்படுவரி னியல்பாகும்மே.

(இ-ள்.) இலமென்னுஞ் சொற்குமுன்னர்ப் படுவென்னுஞ் சொல்வரி னியல்பாம்.

வாலாறு. இலம்படுபுலவர்.

௱௫௮. எண்வரினுயிர மத்தொடுசிவணும்.

(இ-ள்.) ஆயிரமென்னு மெண்முன், எண்ணுப்பெயர்கள் வரின் அத்துச்சாரியைபெறும்.

வாலாறு. ஆயிரத்தொன்று, ஆயிரத்திரண்டு, ஆயிரத்தைந்து.

௱௫௯. அளபொடுநிறையும் வரின்மிகுமென்ப.

(இ-ள்.) ஆயிரமென்னு மெண்முன், அளவுப்பெயரும் நிறைப்பெயரும் வரின் மிக்குமுடியும்.

வாலாறு. ஆயிரக்கலம், ஆயிரக்கழஞ்சு.

௱௬௰. ஈம், கம், உரும் உகரத்தொடுநிலையும்.

(இ-ள்.) ஈமும், கம்மும், உருமும் உகரச்சாரியை பெறுமென்க

வாலாறு. ஈமுக்கடிது, கம்முக்கடிது, உருமுக்கடிது.

அவற்றுள்,

௱௬௧. ஈம் கம் மக்கையு மேற்குமென்ப.

(இ-ள்.) முற்கூறியவற்றுள், ஈமும், கம்மும் அக்குச்சாரியையும் பெறும்.

வாலாறு. ஈமக்குடம், கம்மக்குடம்.

௱௬௨. அத்துமானு நாளொடுசிவணும்.

(இ-ள்.) நாளென்னுஞ்சொல், அத்துச்சாரியையும் ஆன் சாரியையும் பெறும்.

வாலாறு. மகத்தாற்கொண்டான்.

௱௬௩. ணகரம்வேற்றுமைக்கண் றகரமாகும்.



(இ-ள்.) வேற்றுமைக்கண், ணகரமெய் க, ச, த, ப க்கள்வரின் றகரவொற்றாகத்திரியும்.

வாலாறு. பொற்குடம்.

௱௬௪. மன்னுஞ்சின்னு மானுமீனு
மன்னவியல்பின வாமெனமொழிப.

(இ-ள்.) மன், சின், ஆன், ஈன் ஆகிய் நான்குபெயரு முற்கூறிய வாறே றகரமாகத்திரியுமென்க.

வாலாறு. அதுமற்கொண்கன், காப்பும் பூண்டிசிற்கடையும் போகேல், ஆற்கொண்டான், ஈற்கொண்டான், எனவரும்.

௱௬௫. சுட்டுமுதல்வயினும் வினாமுதல்வயினு
மப்பண்பினவா மாயுங்காலே.

(இ-ள்.) சுட்டெழுத்தை முதலாகவுடைய வயினென்னுமொழியும், வினாவெழுத்தை முதலாகவுடைய வயினென்னுமொழியும் றகரமாகத்திரியும்.

வாலாறு. அவ்வயிற்கொண்டான், இவ்வயிற்கொண்டான், உவ்வயிற்கொண்டான், எவ்வயிற்கொண்டான், யாவயிற்கொண்டான்.

௱௬௬. எகின்மரமாயி னம்மொடுசிவணும்.

(இ-ள்.) எகினென்னுஞ் சொன் மரப்பெயராயி னம்முச்சாரியைபெறும்.

வாலாறு. எகினங்கோடு.

௱௬௭. இருவழியினுங்குயி னியல்பாகும்மே.

(இ-ள்.) அல்வழிவேற்றுமை யிரண்டிடத்துங் குயினென்னுஞ் சொன் மிகாதியல்பாகும்.

வாலாறு. குயின்கால்.

௱௬௮. மரமல்லெகின்மொழி வலிமெலிமிகுதலு
மகரச்சாரியை யடையவும்பெறுமே.

(இ-ள்.) மரப்பெயரல்லாத எகினென்னுஞ் சொல்லொருகால் வல்லினமு மொருகால் மெல்லினமு மிகுதலுமதனோ டகரச்சாரியை பெறுதலுமாம்.

வாலாறு. எகின்கால், எகினக்கால், எகினங்கால், எனவரும்.

௱௬௯. கிளைப்பெயரெல்லா மிகாதியல்பாகும்.

(இ-ள்.) கிளைப்பெயர்க்கிளவிகளெல்லாமியல்பாகும்.

வாலாறு. எயின்குடி, எயின்சேரி, எனவரும்.

௱௭௰. மீன்வல்லெழுத் துறழ் வும்பெறுமென்ப.

(இ-ள்.) மீனென்னுஞ்சொல் வல்லெழுத் துறழ்ந்துமுடியுமென வறிக.

வாலாறு. மீன்கண்—மீற்கண்.

௱௭௧. தேன்மொழிமெய்வரி னியல்புமென்மை
மேவினிறுதி யழிவும்வலிவரி
னீறுபோய்வலிமெலி மிகலுமாமிருவழி.

(இ-ள்.) அல்வழிவேற்றுமை இரண்டிடத்துந் தேனென்னுஞ் சொன்முன் மெய்யெழுத்துக்கள்வரி னியல்பாதலு மெல்லெழுத் துக்கள்வரி னீறுகெடுதலும் வல்லெழுத்துக்கள்வரி னீறுகெட்டு வலியுமெலியு மிகலுமாம்.

வாலாறு. தேன்குடம், தேமலர், தேக்குடம், தேங்குடம்.

௱௭௨. இறால்வரினியல்பா தலுமின்னடைதலு
மீறழிந்திரண்டு தகரமெய்யொற்றலு
மற்றதனியற்கையாம் வழுத்துங்காலே.

(இ-ள்.) தேனென்னுஞ்சொன்மு னிறாலென்னுஞ் சொல்வரி னியல்பாதலு மின்சாரியை பெறுதலு மிறுதிகெட்டு இரண்டு தகர வொற்றடைதலுமாமென்க.

வாலாறு. தேனிறால்; தேனினிறால், தேத்திறால்.

௱௭௩. மின்பின்பன்கன் னெழிற்பெயரனைய
கன்னவ்வேற்று மென்மையோடுறழும்.



(இ-ள்.) மின்னும் பின்னும் பன்னுங் கன்னு முகரச்சாரியை பெறும், அவற்றுட்கன் அகரச்சாரியைபெற்று மெல்லெழுத் துறழ்ந்து, முடியும்.

வாலாறு. மின்னுக்கடிது, பின்னுக்கடிது, பன்னுக்கடிது, கன்னுக்கடிது, கன்னத்தட்டு, கன்னந்தட்டு என வரும்.

௱௭௪. தந்தைவரிற் பொதுப்பெயர் மொழியிறுதியும்
வருமொழியாதியு மடியுமென்ப.

(இ-ள்) தந்தையென்னு முறைப்பெயர்வரின், பொதுப்பெயர் ஈறும் வருமொழி முதலுங்கெடும்.

வாலாறு. சாத்தன் + தந்தை=சாத்தந்தை எனவரும்.

௱௭௫. ஆதனும்பூதனு மவ்வியல்பாதலு
மவற்றொடுதகர மாவியுங்கெடுதலு
மெனவிருவிதி களுமேற்குமென்ப.

(இ-ள்) ஆதனென்னும்பெயரும், பூதனென்னும்பெயரும், பொதுப்பெயரைப்போல நிலைமொழியிறுதியும் வருமொழிமுதலுங் கெட்டு அவற்றோடிடைநின்ற தகரவொற்று முயிருங்கெடும்.

வாலாறு. ஆதன் + தந்தை=ஆந்தை; பூதன் + தந்தை=பூந்தை.

௱௭௬. அவ்வியற்பெயர் சிறப்படுக்குங்காலை
யிவ்விருவிதிகளு மேலாதம்முறும்.

(இ-ள்.) அவ்வியற்பெயர் சிறப்புப்பெயரோடு புணருங்கால் இவ்விரண்டு விதிகளையும்பெறா தம்முச்சாரியைபெறும்.

வாலாறு. கொற்று+கொற்றன்=கொற்றங்கொற்றன்.

௱௭௭. அழனிறுகெடவலி யாயிடைமிகுமே.

(இ-ள்.) அழனென்னும் பெயரிறுதிகெட வல்லெழுத்துமிகும்.

வாலாறு. அழன் + குடம்=அழக்குடம்.

௱௭௮. கோனும்பேனுந் தானுமியல்பே.

(இ-ள்.) கோனென்னும் பெயரும் பேனென்னும் பெயரும் தானென்னும்பெயரு மிகாதியல்பாம்.

வரலாறு. கோன்றந்தை, பேன்றந்தை, தான்றந்தை.

௱௭௯. தான்முதல்குறுகலும் யானென்னாகலு
மாகுமல்வழி யல்லாக்காலே.

(இ-ள்.) தானென்னும் படர்க்கை யொருமைப்பெயர் நெடு முதல் குறுகலும், யானென்னுந்தன்மை யொருமைப்பெயரென்னாகத் திரிதலுமாமெனவறிக.

வரலாறு. தான்+கை=தன்கை; யான்+கை=, என்கை என வரும்.

௱௮௰. குறுகலுந்திரிதலு மல்வழிக்கிலவே.

(இ-ள்.) அல்வழிக்கண் மேற்கூறிய விரண்டுபெயரும் நெடு முதல் குறுகலுமென்னாகத் திரிதலுமிலவாம்.

வரலாறு. யான்குறியேன், தான்பெரியன்.

௱௮௧. முன்னொடுசிவணி லின்முதலிலோர் றவ்வுறும்.

(இ-ள்.) முன்னொடுபுணரின், இன்முதலிலொரு றகரவொற் றுத் தோன்றும்.

வரலாறு. முன்+இல்=முன்றில்.

௱௮௨. பொருளெனப்பெயர்பெறும் பொன்னிறுகெட
வொரு, லகாரமகாரமுந் தோன்றுமென்ப.

(இ-ள்.) பொருளென்று பெயர்பெற்ற பொன்னிறுதிகெட ஒரு லகரவொற்று மகரமெய்யுந்தோன்றும்.

வரலாறு. பொன்+பட=பொலம்படப் பொலிந்த.

௱௮௩. வேற்றுமைபல்வழி யகரவீறியல்பே.

(இ-ள்.) அல்வழிக்கண் யகரமெய்யிறுதியாகிய சொற்களுக்கு முன் வருகிற க, ச, த, பக்கண் மிகாதியல்பாகும்.

வரலாறு. நாய்குறிது, நாய்சிறிது, நாய்தீது, நாய்பெரிது.

௱௮௪. இயல்பாந்தாய் வேற்றுமைவழியென்ப.

(இ-ள்.) வேற்றுமைக்கண் தாயென்னுமுறைப்பெயர் மிகாது இயல்பாகுமென்க.

வரலாறு. தாய்கை.

௱௮௫. மிகுமகன்றாய்ப்பினர் மேவுங்காலே.

(இ-ள்.) தாயென்னு மொழிக்குப்பின் மகனென்னுஞ் சொல் வரின் மிக்குமுடியும்.

வரலாறு. மகன்றாய்க்கலாம்.

௱௮௬. மெல்லினமுறழ்தரு மொழிகளுமுளவே.

(இ-ள்.) மெல்லெழுத்துக்க ளுறழ்ந்துமுடியுஞ் சொற்களு முளவாமென்க.

வரலாறு. வேய்க்குறை-வேய்ங்குறை.

௱௮௭. வெதிரார்பீர்சார் மெல்லெழுத்துமிகுமே.

(இ-ள்.) வெதிரும், ஆரும், பீரும், சாரும் மெல்லெழுத்து மிக்குமுடியும்.

வரலாறு. வெதிர்ங்கோடு, ஆர்ங்கோடு, பீர்ங்கோடு, சார்ங் கோடு எனவரும்.

அவற்றுள்,

௱௮௮. பீரங்கிளவி யம்மொடுஞ்சிவணும்.

(இ-ள்.) மேற்கூறியவற்றுள் பீரென்னுஞ்சொல் அம்முச்சாரி யையும்பெறும்.

வரல்ாறு. பீரங்கோடு.

௱௮௯. காழ்வரிற்சார்மிகுங் கருதுங்காலே.

(இ-ள்.) சாரென்னுஞ்சொல் காழென்னுஞ் சொல்லொடுபுண ரின் மிக்குமுடியும்.

வரலாறு. சார்க்காழ்.

௱௯௰. லகாரம்வேற்றுமைக்கண் றகாரமாகும்.

(இ-ள்.) வேற்றுமைக்கண், லகரமெய் றகரவொற்றாகத் திரியுமென்க.

வரலாறு. கல் + குறிது = கற்குறிது.

௱௬௧. மெல்லெழுத்தியையி னகரமாகும்.

(இ-ள்.) மெல்லெழுத்துக்களோடு புணரின், னகரமெய்யாகத் திரியுமென்க.

வரலாறு. கன்ஞெரி, கன்முரி.

௱௬௨. நெட்டெழுத்திம்ப ரியல்பாகும்மே.

(இ-ள்.) நெட்டெழுத்துக்கு முன்னின்ற லகரமெய் மிகாதியல் பாகுமென்க.

வரலாறு. பால்கடிது.

௱௬௩. தகரம்வரும்வழி தனிநிலையாகும்.

(இ-ள்.) அல்வழிக்கண், தகரமெய்ம்முதன் மொழியாகவரின், றகரமாதலேயன்றி யாய்தமாகவுந் திரியுமென்க.

வரலாறு. கற்றீது-கஃறீது.

௱௬௪. அல்வழியெல்லா முறழுமென்ப.

(இ-ள்.) அல்வழிக்க ணெல்லாத்திரிபும் வல்லெழுத்துக்களே தொழ்ந்தமுடியும்.

வரலாறு. கல் + குறிது = கற்குறிது, வில் + குறிது = விற்குறிது.

௱௬௫. நெல்லுஞ்செல்லுங் கொல்லுஞ்சொல்லு
மல்வழியானும் றகரமாகும்.

(இ-ள்.) நெல், செல், கொல், சொல் நான்குமொழியும் அல்வழிக்கண்ணும் றகரமாகத்திரியும்.

வரலாறு. நெற்காய்த்தது, செற்கடிது, கொற்கடிது, சொற் கடிய.

௱௬௬. இன்மையுணர்த்து மில்லென்கிளவிக்
கைகான்வரும்வழி யியல்பொடுமிகலு
மாகாரம்வரும்வழி மிகலுமாம்வேற்றுமை.



(இ-ள்.) வேற்றுமைக்கணில்லாமையையுணர்த்து மில்லென்னுஞ்சொல் ஐ காரச்சாரியைபெறுங் காலியல்பாதலு மிகுதலுமா காரச்சாரியைபெறுங் கான்மிகுதலுமாமென்க.

வரலாறு. இல்லைபொருள்; இல்லைப்பொருள்; இல்லாப்பொருள்.

௱௬௭. வல்லுகரத்தொடு வருமெனமொழிப.

(இ-ள்.) வல்லென்னுங் குதாடு கருவிப்பெயருகரச்சாரியை பெறுமென்க.

வரலாறு. வல்லுக்கடிது.

௱௬௮. பலகையுநாயும் வரூஉங்காலை
யகரச்சாரியை யடையுமென்ப

(இ-ள்.) வல்லென்னு மொழிக்குமுன், பலகையென்னும் பெயரும், நாயென்னும்பெயரும் வந்துபுணரின் அகரச்சாரியை பெறும்.

வரலாறு. வல்லப்பலகை; வல்லநாய்.

௱௬௯. ஆலும்வேலு மம்மொடுசிவணும்.

(இ-ள்.) மரப்பெயராகிய ஆலென்னுமொழியும் வேலென்னு மொழியும் அம்முச்சாரியைபெறும்.

வரலாறு. ஆலங்கோடு, வேலங்கோடு.

௱௭௦. பூலுமம்மொடு பொருந்துவதியல்பே.

(இ-ள்) பூலென்னுஞ்சொல்லு மம்முச்சாரியை பெறுமென்க.

வரலாறு. பூலங்கோடு.

௱௭௧. தொழிற்பெயரெல்லாந் தொழிற்பெயரியல.

(இ-ள்.) தொழிற்பெயரெல்லா முகரச்சாரியை பெறுமென வறிக.

வரலாறு. புல் + கடிது = புல்லுக்கடிது.

௱௭௨. அத்துமின்னு மடையும்வேயிலே.

(இ-ள்.) ஒளியையுணர்த்தும் வெயிலென்னும்பெயர் அத்துச்சாரியையும் இன்சாரியையும்பெறும்.

வரலாறு. வெயிலத்துக்கொண்டான், வெயிலிற்கொண்டான்

௨௱௩. வவ்விறுசுட்டிற் கற்றுறலவ்வழியே.

(இ-ள்.) வகரமெய்யீறாகிய சுட்டுப்பெயர்க ளற்றுச்சாரியை பெறுமென்க.

வரலாறு. அவற்றை, இவற்றை, உவற்றை எனவரும்.

௨௱௪. ஆய்தமாகு மல்வழியான.

(இ-ள்) அல்வழிக்க ணாய்தமாகத்திரியும்.

வரலாறு. அவ்கடிய=அஃகடிய, இஃகடிய, உஃகடிய.

௨௱௫. மெல்லெழுத்தியையின் மெல்லெழுத்தாகும்.

(இ-ள்.) மெல்லெழுத்துக்கள் வந்துபுணரி னவ்வெழுத்தாகத் திரியும்.

வரலாறு. அவ்+ஞாண்=, அஞ்ஞாண், இஞ்ஞாண், உஞ்ஞாண்; அம்மணி, அந்நூல்.

௨௱௬. இடையுமுயிரும் வரினியல்பாகும்.

(இ-ள்.) இடையெழுத்தும் உயிரெழுத்தும் வந்து புணரின் இயல்பாமென்க.

வரலாறு. அவ்யாழ், இவ்யாழ், உவ்யாழ், அவ்வடை, இவ்வடை.

௨௱௭. தெவ்வென்மொழியே தொழிற்பெயரற்றே
மவ்வரின்வஃகான் மவ்வுமாகும்.

(இ-ள்.) தெவ்வென்னுஞ்சொல் உகரச்சாரியைபெறும். மகரமெய்வரின் வகரமெய் மகரமெய்யாகும்.

வரலாறு. தெவ்வுக்கடிது, தெம்மன்னர்.

௨௱௮. சிறப்புழகரமெய் யிருவழியினுமிகும்.

(இ-ள்.) சிறப்பாகிய ழகரவொற் றல்வழிவேற்றுமையினுமிகும்



வரலாறு. கீழ்ச்சாதி, பூழ்க்கால் எனவரும்.

௨௱௯. டகாரமாகும் வேற்றுமைப்பொருட்கே.

(இ-ள்.) வேற்றுமைக்கண் டகரமெய்யாகத் திரியுமென்க.

வரலாறு. கிழ்+திசை=கீட்டிசை எனவரும்.

௨௱௰. தநவரின்டணவா மென்[illegible]புலவா.

(இ-ள்.) தகரம்வரின் டகரமாகவும், நகரம்வரின் ணகரமாகவுந்திரியும்.

வரலாறு. திகழ்+தசக்கரம்=திகடசக்கரம்; சோழ+நாடு=சோணாடு.

௨௱௰௧. தாழ்முன்கோல்வரி னக்கொடுசிவணும்.

(இ-ள்.) தாழென்னுஞ் சொற்குமுன், கோலென்னுஞ்சொல்வரி னக்குச்சாரியைபெறும்.

வரலாறு. தாழ்+கோல்=, தாழக்கோல்.

௨௱௰௨. தமிழுமவற்றோ ரற்றாகும்மே.

(இ-ள்.) தமிழென்னுமொழியு மக்குச்சாரியைபெறும்.

வரலாறு. தமிழ்+கூற்று=தமிழக்கூற்று.

௨௱௰௩. குமிழென்கிளவி யம்மொடுசிவணும்.

(இ-ள்.) குமிழென்னுஞ்சொல் அம்முச்சாரியைபெறும்.

வரலாறு. குமிழ்+கோடு=குமிழங்கோடு.

௨௱௰௪. பாழென்கிளவி மெல்லெழுத்துறழும்.

(இ-ள்.) பாழென்னுஞ்சொன் மெல்லெழுத்துறழ்ந்து முடியும்.

வரலாறு. பாழ்+கிணறு=, பாழ்ங்கிணறு.

௨௱௰௫. ஏழென்கிளவி யன்னொடுசிவணும்.

(இ-ள்.) ஏழென்னுமெண்ணுப்பெய ரன்சாரியைபெறும்.

வாலாறு. எழ்+காயம்=எழன்காயம்.

௨௱௰௬. எண்ணிறையளவும் வரூஉங்காலை
குறுகலுமுகரம் வருதலுமுரிய.

(இ-ள்.) எழென்னு மெண்ணுப்பெயர்க்குமுன் எண்ணுப்பெயரும, நிறைப்பெயரும், அளவுப்பெயரும்வரி னெடுமுதல்குறுகலும் உகரச்சாரியை வருதலுமாம்.

வாலாறு. எழ்+மூன்று,=எழுமூன்று; எழுகழஞ்சு; எழுகலம் எனவரும்.

௨௱௰௭. ஆயிரம்வரிற்கெடு முகரச்சாரியை.

(இ-ள்.) ஆயிரமென்னு மெண்ணுப்பெயர்வரி னுகரச்சாரியை கெடும்.

வாலாறு. எழாயிரம்.

௨௱௰௮. கீழின்முன்வன்மை விகற்பமுமாகும்.

(இ-ள்.) கீழென்னுந் திசைப்பெயர்முன் வருகிற வல்லெழுத்து விகற்பமுமாகும்.

வாலாறு. கீழ்+குலம்=கீழ்க்குலம்.

௨௱௰௯. ளகரம்டகரமாம் வேற்றுமைப்பொருட்கே.

(இ-ள்.) வேற்றுமைக்கண், க, ச, த, பக்கள் வரின் ளகரமெய் டகரவொற்றாகத்திரியும்,

வாலாறு. முள்+குறை=முட்குறை.

௨௨௰. மெல்லெழுத்தியையின் ணகரமாகும்.

(இ-ள்.) மெல்லெழுத்துவந்து புணரின் ணகாரமாகும்.

வாலாறு. முள்+மரம்=முண்மரம்.

௨௨௧. அல்வழியெல்லா முறழ்வாகும்மே.

(இ-ள்.) அல்வழிக்க ணுறழ்ந்துமுடியும்.

வாலாறு. முள்+கடிது=முட்கடிது.



௨௨௨. தகரம்வரும்வழி தனிநிலையாகும்.

(இ-ள்.) தகரவொற்றுவரி னாய்தமாகத்திரியுமென்க.

வாலாறு. முள்+தீது, முஃடீது எனவரும்.

௨௨௩. இயல்பாநெடுமைமுன் னென்மனார்புலவர்.

(இ-ள்,) நெடுமைக்குமுன்னின்ற ளகரமெய்யியல்பாம்.

வாலாறு. கோள்கடிது எனவரும்.

௨௨௪. தொழிற்பெயரெல்லாந் தொழிற்பெயரியல.

(இ-ள்.) தொழிற்பெயரெல்லாம் உகரச்சாரியைபெறும்.

வாலாறு. துள்கடிது, துள்ளுக்கடிது.

௨௨௫. இன்னுமத்து மிருளொடுசிவணும்.

(இ-ள்.) இருளென்னுங் காலப்பெயர்,இன்சாரியையும் அத்துச்சாரியையும் பெறுமெனவறிக.

வாலாறு. இருளிற்கொண்டான், இருளத்துக்கொண்டான்.

௨௨௬. வள்ளும்புள்ளு முகரமொடுசிவணும்.

(இ-ள்.) வள்ளென்னும்பெயரும்,புள்ளென்னும்பெயரும் உகரச்சாரியைபெறும்.

வரலாறு. வள்ளுக்கடிது. புள்ளுக்கடிது எனவரும்.

௨௨௭. ஈரெழுத்தொருமொழி
யிடைத்தொடருயிர்த்தொட
ராய்தத்தொடர்மொழி
வன்றொடர்மென்றொட
ராமிருமூன்றேயுகரங்குறுகிடன்.

(இ-ள்.) இரண்டெழுத்தொரு மொழியும், இடைத்தொடர்மொழியும்,உயிர்த்தொடர்மொழியும்,ஆய்தத்தொடர்மொழியும்,வன்றொடர்மொழியும், மென்றொடர்மொழியுமாகிய வாறுமே உகரந்தன்மாத்திரையிற் குறுகுமிடமாம்.

அவற்றுள்,

உ௨அ. ஈரெழுத்தொருமொழி யிடைத்தொடராகா.

(இ-ள்.) மேற்கூறிப்போந்தவற்று ளிரண்டுமெய்க டொடர்ந்த மொழியிடைத்தொடர்க் குற்றியலுகரமாகாவாம்.

வரலாறு. பார்க்கு.

உ௨௯. இருவழிமருங்கினுங் குற்றியலுகர
மெல்லாங்குறுகா தென்மனார்புலவர்.

(இ-ள்.) அல்வழி வேற்றுமையினு மறுவகைக் குற்றியலுகரமுந் தன்மாத்திரையிற் குறுகாவாம்.

உ௩௰. இடைப்படிற்குறுகு மிடனுமாருண்டே.

(இ-ள்.) இடைப்படிற்கூறிய அரைமாத்திரையிற் குறுகுமிடனுமுண்டாம்.

வரலாறு. சுக்குக்கோடு.

உ௩க. யகரம்வரும்வழி யிகரங்குறுகும்.

(இ-ள்.) யகரமுதன்மொழிபாய்வரி னுகரங்கெட்டு இகரந்தன் மாத்திரையிற்குறுகும்.

வரலாறு. நாகியாது.

உ௩௨. நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுகரங்களுட்
டறவொற்றிரட்டும் வேற்றுமைப்பொருட்கே.

(இ-ள்.) வேற்றுமைக்கண், நெடிற்றொடர்க்குற்றிய லுகரமும் உயிர்த்தொடர்க் குற்றியலுகரமும் டகர றகரங்க ளிரட்டிக்கும்.

வரலாறு. ஆட்டுக்கால்; முயிற்றுக்கால்.

உ௩௩. ஒற்றிடைமிகாக்குற் றுகரமுமுளவே
வல்லினமிகலத் திறத்தினுளிலவே,

(இ-ள்.) முற்கூறிய விரண்டனுண் மெய்யெழுத்திடையின் மிக்குமுடியாத மொழிகளுமுளவா மக்கூற்றினில் வல்லின மிகா தியல்பாகும்.



வரலாறு. நாகுகால்; வரகுகதிர் எனவரும்.

உ௩௪. இடைத்தொடராய்தத் தொடரியல்பாகும்.

(இ-ள்.) இடைத்தொடர்மொழிக் குற்றியலுகரமும் ஆய்தத் தொடர்மொழிக் குற்றியலுகரமும் மிகாதியல்பாம்.

வரலாறு. தெள்குகால்; எஃகுகால்.

உ௩௫. வன்றொடர்மென்றொட ரிற்சிலவலிக்கும்.

(இ-ள்.) வன்றொடர்மொழிக் குற்றியலுகர மென்றொடர் மொழிக் குற்றியலுகரங்களிற் சிலமிகும்.

வரலாறு. கொக்குக்கால், பாம்புக்கால்.

அவற்றுள்,

உ௩௬. மென்றொடர்மொழியுட் சிலவேற்றுமையிற்
றம்மினம்வன்றொட ராகாமன்னே.

(இ-ள்.) முற்கூறியவற்றுண் மென்றொடர்மொழிக் குற்றிய லுகரங்களுட் சிலவேற்றுமைக்கண் தமக்கினமாகிய வன்கணமாகி மிக்குமுடியும்.

வரலாறு. குரங்கு+கால்=குரக்குக்கால்.

உ௩எ. மரப்பெயர்க்கிளவி யம்மொடுசிவணும்.

(இ-ள்.) குற்றியலுகர மரப்பெயர்மொழி யம்முச்சாரியை பெறும்.

வரலாறு. அரசு+காய்=அரசங்காய்.

உ௩அ. தெங்குநீண்டீற்றுயிர் மெய்கெடுங்காய்வரின்.

(இ-ள்.) மென்றொடர்மொழிக் குற்றுகரமாகிய தெங்கென்னு மரப்பெயருக்குமுன் காயென்னுஞ்சொல்வரின் முதனீண்டு ஈற்று யிர் மெய்கெடும்.

வரலாறு. தெங்கு+காய்=தேங்காய் எனவரும்.

உ௩௯. மெல்லொற்றுவலியா மரப்பெயருளவே.

(இ-ள்.) மெல்லொற்று வல்லொற்றாகத் திரியாத மரப்பெயர்களுஞ் சிலவுளவாம்.

வரலாறு. புன்கங்கோடு.

௨௪௰. நெடிற்றொடர்வன்றொட ரிற்சிலவம்மிடை
வரற்குமுரியனவாகுமென்ப.

(இ-ள்.) நெடிற்றொடர்க் குற்றியலுகரம் வன்றொடர்மொழிக் குற்றியலுகரங்களிற்சில அம்முச்சாரியை நடுவில் வருதற்கு முரியனவாம்.

வரலாறு. எறு+கோடு=எறங்கோடு, புற்று+சோறு=புற்றஞ் சோறு.

௨௪௧. அக்கொடுவரூஉ மொழியுமாருளவே.

(இ-ள்.) அக்குச்சாரியை பெற்றுவருங் குற்றியலுகரமொழிகளுமுளவாம்.

வரலாறு. குன்றக்கூகை.

௨௪௨. எண்ணுப்பெயரெலா மன்னொடுசிவணும்.

(இ-ள்.) குற்றியலுகர வெண்ணுப்பெயரெல்லா மன்சாரியை பெறும்.

வரலாறு. ஒன்றன்கூட்டம், பிறவுமன்ன.

௨௪௩. வண்டும்பெண்டு மின்னொடுசிவணும்.

(இ-ள்.) வண்டென்னும் பெயரும் பெண்டென்னும் பெயரும் இன்சாரியைபெறும்.

வரலாறு. வண்டின்கால், பெண்டின்கை.

அவற்றுள்,

௨௪௪. பெண்டன்னொடுவரூஉம் பெற்றித்தாகும்.

(இ-ள்.) மேற்கூறிப்போந்தவற்றுள், பெண்டென்னு மொருபெயர் அன்சாரியையும் பெறுமென்க.

வரலாறு. பெண்டன்கால் எனவரும்.



௨௪௫. யாதுமாய்தச் சுட்டுமன்பெறு
மாவயினாய்த மழியுஞ்சுட்டே.

(இ-ள்.) யாதென்னும் வினாப்பெயரு மாய்தச் சுட்டுப்பெயரும் அன்சாரியைபெறும் ஆயிடைச்சுட்டின் முன்னாகிய வாய்தங்கெடும்.

வரலாறு. யாதன்கோடு; அஃது+கோடு=அதன்கோடு, இதன்கோடு, உதன்கோடு.

௨௪௬. ஆவிவரினிலையு மாய்தப்புள்ளி.

(இ-ள்.) உயிர்முதன் மொழிவரி னாய்த நிலைபெறுமென்க.

வரலாறு. அஃதடை, இஃதடை, உஃதடை.

௨௪௭. ஏனையகணம்வரி னிலவாகும்மே.

(இ-ள்.) உயிர்க்கணமல்லாத வன்கணமென்கண மிடைக்கணங்களுக்குமுன் னாய்தநிலைபெறாவாம்.

வரலாறு. அஃது+கடிது=அதுகடிது, அதுமலிது, அதுவலிது.

௨௪௮. அல்வழிக்கண்ணெலா மிகாதியல்பாகும்.

(இ-ள்.) அல்வழிக்க ணாறீற்றுக் குற்றுகரமு மிகாதியல்பாகும்.

வரலாறு. நாகுகடிது. எஃகுகடிது, வரகுகடிது, தெள்குகடிது, குரங்குகடிது.

௨௪௯. வல்லெழுத்தியையின் வன்றொடர்மிகுமே.

(இ-ள்.) வன்றொடர்மொழிக் குற்றியலுகரத்துக்குமுன் வல்லெழுத்துவரின் மிகும்.

வரலாறு. கொக்குக்கடிது.

௨௫௰. சுட்டுமுதனீடிய மென்றொடர்மொழியும்
யாகாரவினாமுதன் மென்றொடர்மொழியு
மவ்வியனிலைபெறு மாயுங்காலே.

(இ-ள்.) சுட்டுமுதனீண்ட மென்றொடர்மொழிக் குற்றியலுகரமும், யாகாரவினாமுதலாகிய மென்றொடர்மொழிக் குற்றியலுகரமு மிக்குமுடியும்.

வரலாறு. ஆங்குக்கொண்டான், ஈங்குக்கொண்டான், ஊங்குக்கொண்டான், யாங்குக்கொண்டான்.

அவற்றுள்,

௨௫௧. யாகாரவினா வியல்பாதலுமுளவே.

(இ-ள்.) முற்கூறியவற்றுள் யாகாரவினாமுதலாகிய மென்றொடர்மொழிக் குற்றியலுகரமொழி யியல்பாதலு முளவாம்.

வரலாறு. யாங்குகொண்டான்.

௨௫௨. அந்நான்குமொழியுந் தந்நிலைதிரியா.

(இ-ள்.) மூன்றுசுட்டும் யாவினாமுதலுமாகிய நான்குபெயரு மெல்லொற்றுந் தன்மை திரிந்து வல்லொற்றாகாவாம்.

வரலாறு. அங்குக்கொண்டான் பிறவுமன்ன.

௨௫௩. உண்டென்பெயரே யுண்மைசெப்பி
னியல்பாதலுமீ றழிதலும்ணகாரம்
ளகாரமாதலு முரியனவாகும்.

(இ-ள்.) உண்டென்னும்பெய ருண்மைப்பொருளைக் கூறின் இயல்பாதலு மீறுகெடுதலும், ணகரமெய் ளகரமெய்யாகத் திரிதலு முரியவாம்.

வரலாறு. உண்டுபொருள்; உள்பொருள் எனவரும்.

௨௫௪. இருதிசைபுணரி னேயிடைவருமே.

(இ-ள்.) இரண்டு பெருந்திசைகளுந் தம்மிற் புணரின் ஏகாரச் சாரியை இடையில் வருமெனவறிக.

வரலாறு. வடக்கே, தெற்கே, கிழக்கே, மேற்கே.

௨௫௫. திசையொடுதிசையும் பிறவுஞ்சேரி
னிலையீற்றுயிர்மெய் கவ்வொற்றுநீங்கலும்
றகரம்னலவாத் திரிதலுமாம்பிற.

(இ-ள்.) திசையொடு திசையும் பிறபெயரும்புணரி னிலைமொழியிறுதி யுயிர்மெய்யுங் ககரவொற்றுங் கெடுதலும், றகரமெய் னகரமெய்யாகவேனும் லகரமெய்யாகவேனுந் திரிதலுமாம்.



வரலாறு. வடகிழக்கு, தென்மலை, மேல்பால்.

௨௫௬. இரண்டொழித்தேனைய விருநான்கெண்களும்
பத்தின்முன்வருங் காலையான
குற்றியலுகர முற்றக்கெடுமே
யொன்பானொழியவின் னொடுவருமென்ப.

(இ-ள்.) இரண்டென்னு மெண்ணொழியமற்றையவெட்டெண்களும் பத்தென்னு மெண்முன்வருங்காற் குற்றியலுகர மெய்யொடுங்கெடும், ஒன்பதென்னு மெண்ணொழிய மற்றைய வெண்களெல்லா மின்சாரியை பெறுமெனவறிக.

வரலாறு. பதினொன்று, பதின்மூன்று, பதினான்கு.

௨௫௭. இரண்டுமுன்வரிற் பத்தினீற்றுயிர்மெய்
கரந்திடவொற்று னவ்வாகுமென்ப.

(இ-ள்.) பத்தென்னுமெண்மு னிரண்டென்னு மெண்வரிற் பத்தினீற்றுயிர் மெய்கெடத் தகரவொற்று னகரவொற்றாகத் திரியும்.

வரலாறு. பன்னிரண்டு.

௨௫௮. ஆயிரம்வரினு மின்னொடுநிலையும்.

(இ-ள்.) ஆயிரமென்னு மெண்வரினு மின்சாரியை பெறுமென்க.

வரலாறு. பதினாயிரம் எனவரும்.

௨௫௯. நிறையுமளவு நேருங்காலைக்
குறையாதாகு மின்னென்சாரியை.

(இ-ள்.) நிறைப்பெயரு மளவுப்பெயரும் வந்துபுணரின் இன் சாரியைபெறும்.

வரலாறு. பதின்கழஞ்சு, பதின்கலம்.

௨௬௰. ஒன்றுமுதலொன் பான்முற்பத்திடை
மெய்கெடவாய்த மாறல்லாவழியே.

(இ-ள்.) ஒன்றுமுத லொன்பதீறாகக் கிடந்தவெண்ணுப் பெயர்களின் முன்னின்றபத்தினிடை யொற்றுக்கெட வாய்தம் பெறும் ஆறென்னு மெண்ணொழிய.

வரலாறு. ஒருபஃது, இருபஃது, முப்பஃது பிறவுமன்ன.

உசுக. ஒன்றுமுதலெட் டீறுமெண் ணுண்
முதலீரொண்முத னீளுமூன்றாறேழ்
குறுகுமாறே ழல்லவற்றி
னீற்றுயிர்மெய்யு மேழனுயிரு
மேகுமேற்புழி யென்மனார்புலவர்.

(இ-ள்.) ஒன்றுமுதலெட்டீறாகியவெண்களுளொன்றுமிரண்டு முதனீளும், ஆறுமேழுமுதல்குறுகும், ஆறுமேழுமல்லாதவெண்களி னிறுதி யுயிர்மெய்யு மேழனுயிருங் கெடுமெனவறிக.

வரலாறு. ஒன்=ஓன்; இரண்=ஈரண்; மூன்=மூன்; அறு எழ்=எழ்.

உசுஉ. ஒன்றனொற்றே ரகாரமாகு
மிரண்டனொற்றுயி ரேகவுவ்வருமே.

(இ-ள்.) ஒன்றென்னு மெண்ணின் மெய் ரகரமெய்யாகும், இரண்டென்னு மெண்ணின்மெய்யு முயிருங்கெட வுகரச்சாரியை வரும்.

வரலாறு. ஒருபது, இருபது.

உசுங. மூன்றன்மெய்யே பகாரமாகும்.

(இ-ள்.) மூன்றென்னு மெண்ணின்கணின்ற னகரமெய் பகர மெய்யாகத்திரியும்.

வரலாறு. முப்பது.

உசுச. நான்கன்மெய்யே றகாரமாகும்.

(இ-ள்.) நான்கென்னு மெண்ணின்கணின்ற னகரமெய் றகர மெய்யாகத்திரியும்.

வரலாறு. நாற்பது.

உசுரு. ஐந்தனொற்றே மகாரமாகும்.

(இ-ள்.) ஐந்தென்னு மெண்ணின்கணின்ற நகரமெய் மகரமெய் யாகத்திரியும்.

வரலாறு. ஐம்பது.



உசுசு. எட்டனுடம்புணவ் வாகுமென்ப.

(இ-ள்.) எட்டென்னு மெண்ணின்கணின்ற டகரமெய்ணகர மெய்யாகத்திரியும்.

வரலாறு. எண்பது.

உசுஎ. பத்துமுன்வருங் காலையான.

(இ-ள்.) பத்தென்னு மெண்ணுப்பெயர் வருங்காலென்க.

உசுஅ. அளவுநிறையும் வரினியல்பாகும்.

(இ-ள்.) அளவுப்பெயரு நிறைப்பெயரும் வரினியல்பாம்.

வரலாறு. ஒருகலம், ஒருகழஞ்சு, இருகலம்.

உசுகூ. மூன்றன்புள்ளி வந்ததுமாகும்.

(இ-ள்.) மூன்றென்னு மெண்ணின்கணின்ற னகரமெய் வந்த மெய்யாகத்திரியும்.

வரலாறு. முக்கலம், முக்கழஞ்சு எனவரும்.

உஎ௰. ஐந்தனொற்றே மெல்லெழுத்தாகும்.

(இ-ள்.) ஐந்தென்னுமெண்ணின்கணின்ற நகரமெய் வருமொழி வல்லெழுத்துக்கேற்ற மெல்லெழுத்தாகத்திரியும்.

வரலாறு. ஐங்கலம், ஐங்கழஞ்சு.

உஎக. வல்லெழுத்துவரூஉங் காலையான.

(இ-ள்.) க, ச, த, பக்கள்வருங் காலெனவறிக.

உஎஉ. ஐந்துமூன்று நமவருகாலை
யொற்றியனிலைகெட வந்ததுமாகும்.

(இ-ள்.) ஐந்தென்னுமெண்ணு மூன்றென்னுமெண்ணும், நகர மகரங்கள் வருங்கால்வந்த மெய்யாகத்திரியும்.

வரலாறு. ஐந்நாழி=ஐம்மண்டை; மூந்நாழி=மும்மண்டை.

உஎங. மூன்றனொற்றே வகாரம்வரும்வழி
தோன்றியவகரத் துருவாகும்மே.

(இ-ள்.) மூன்றென்னு மெண்ணின் கணின்ற னகரமெய் வகரம் வருங்கால் வந்த வகரவடிவாமென்க.

வரலாறு. மூவட்டில்.

உஎச. நான்கன்மெய்யே லகாரமாகும்.

(இ-ள்.) நான்கென்னு மெண்ணின் கணின்ற னகரமெய்லகர மெய்யாகத்திரியும்.

வரலாறு. நால்வட்டில்.

உஎரு. ஐந்தனொற்றே யடியொடுகெடுமே.

(இ-ள்.) ஐந்தென்னு மெண்ணின் கணின்ற நகரமெய்முன்வடிவு கெடும்.

வரலாறு. ஐவட்டில்.

உஎகா. ஒன்றுமிரண்டு முயிர்வருகாலை
யுகரங்கெடுத லாவயினான.

(இ-ள்.) ஒருஇருவென முடித்துநின்ற விரண்டெண்களின்முன் னுயிர்வரி னுகரங்கெடும்.

வரலாறு. ஓரகல், ஈரகல் எனவரும்.

உஎஎ. மூன்றுநான்கு மைந்துந்தோன்றிய
வகரத்துருவாய் வழுங்குமென்ப.

(இ-ள்.) மூன்றென்னுமெண்ணும், நான்கென்னுமெண்ணும், ஐந்தென்னுமெண்ணும் முற்றோன்றி நின்றவகரம் வருமொழிக்குக் கூறியவியல்பாக மூன்றுக்கு வகரமும், நான்குக்கு லகரமும் ஐந்து கெடுதலுமாம்.

வரலாறு. முவ்வகல், நாலகல், ஐயகல் எனவரும்.

உஎஅ. உழக்குவரின்முத னீளுமூன்றெண்ணே.

(இ-ள்.) உழக்கென்னுஞ் சொல்வரின் மூன்றென்னு மெண் முதனீளும்.

வரலாறு. மூவுழக்கு எனவரும்.



உஎகூ. ஆறுமவ் வியல்பிற்றாகும்.

(இ-ள்.) ஆறென்னுமெண்ணு முதனீளும்.

வரலாறு. ஆறகல்.

உஅ0. ஒன்பானின்னொடு மொழுகுமென்ப.

(இ-ள்.) ஒன்பதென்னு மெண்ணுப்பெயர் இன் சாரியை பெறு மென்க.

வரலாறு. ஒன்பதின்கலம்.

உஅக. நூறென்கிளவி வரினியல்பாகும்.

(இ-ள்.) நூறென்னு மெண்ணுப்பெயர்வரி னியல்பாகும்.

வரலாறு. ஒருநூறு, இருநூறு.

உஅஉ. மூன்றன்மெய்யே நகாரமாகும்.

(இ-ள்.) மூன்றென்னு மெண்ணின்கணின்ற னகரமெய் நகர வொற்றாகத்திரியும்.

வரலாறு. முந்நூறு.

உஅங. நான்குமைந்து முதனிலைதிரியா.

(இ-ள்.) நான்கென்னுமெண்ணு மைந்தென்னுமெண்ணுந்தம் மொற்றுக்க ணிலைதிரியாவாமென்க.

வரலாறு. நானூறு, ஐந்நூறு எனவரும்.

உஅச. ஒன்பானொடுபத்து நூறுமொன்றின்
முன்னதினேனைய முரணியொவ்வொடு
தகரநிறீஇப்பஃ தகற்றினவ்வை
நிரலேணளவாய்த் திரிப்பதுநெறியே.

(இ-ள்.) ஒன்பதென்னு மெண்ணொடு பத்தென்னுமெண்ணும் நூறென்னுமெண்ணும் வந்து புணரின் பத்தென்னுமெண்ணை நூறாகவும், நூறென்னுமெண்ணை யாயிரமாகவுந்திரித்து, ஒகரத்தொடு தகரமெய்யை நிறுத்திப் பத்தைநீக்கி னகரமெய்யை முறையே ணகரமெய்யாகவும், ளகரமெய்யாகவுந் திரிப்பது நெறியாமென்க.

வரலாறு. தொண்ணூறு, தொள்ளாயிரம்.

உ௮௫. உகரங்கெடுமுத லோடுமிரண்டு
மாயிரமுன்வருங் காலையான.

(இ-ள்.) ஆயிரமென்னு மெண்வரி னொன்றென்னு மெண்ணி னுகரமு மிரண்டென்னுமெண்ணி னுகரமுங்கெடும்.

வரலாறு. ஓராயிரம், ஈராயிரம்.

உ௮௬. மூன்றன்மெய்யே வகாரமாகும்.

(இ-ள்.) மூன்றென்னுமெண்ணி னகரமெய் வகரமெய்யாகத் திரியுமென்க.

வரலாறு. மூவாயிரம்.

உ௮௭. நான்கன்மெய்யே லகாரமாகும்.

(இ-ள்.) நான்கென்னு மெண்ணினகரம் லகரமெய்யாகத் திரியுமென்க.

வரலாறு. நாலாயிரம்.

உ௮௮. ஐந்தன்மெய்யே யகாரமாகும்.

(இ-ள்.) ஐந்தென்னுமெண்ணின் நகரம் யகரமெய்யாகத் திரியுமென்க.

வரலாறு. ஐயாயிம்.

உ௮௯. ஆறென்கிளவி யதனிலைதிரியா.

(இ-ள்.) ஆறென்னுமெண் ணதனிலைகெடாவாம்.

வரலாறு. ஆறாயிரம்.

உ௯௰. ஒன்பானின்னொடு வருமெனமொழிப.

(இ-ள்.) ஒன்பதென்னுமெண் இன்சாரியை பெறுமென்க.

வரலாறு. ஒன்பதினாயிரம்.

உ௯௧. நூறாயிரம்வரி னியல்பாகும்மே.



(இ-ள்.) நூறாயிரமென்னு மெண்வரி னியல்பாமெனவறிக.

வரலாறு. ஒருநூறாயிரம், இருநூறாயிரம்.

உ௯௨. நூறென்கிளவி யொன்றுமுதலொன்பாற்-றீறு
சினையொழிய வினவொற்றுமிகுமே.

(இ-ள்) நூறென்னுமெண்ணுப்பெய ரொன்றுமுத லொன்பான்களோடு புணருங்காலீறாகிய குற்றியலுகரங்கெடாது அதற்கினமாகிய றகரமெய் மிக்குமுடியும்.

வரலாறு. நூற்றொன்று, நூற்றிரண்டு.

உ௯௩. அவையூர்பத்தினு மத்தொழிற்றாகும்.

(இ-ள்.) அந்நூறென்பது நின்று முற்கூறியவொன்று முதலொன்பானெண்களை யூர்ந்துவந்த பத்தென்பதனோடு புணருங்காலீறுசினையொழிய வினவொற்றுமிகும்.

வரலாறு. நூற்றொருபஃது. நூற்றிருபஃது.

உ௯௪. அளவொடுநிறைவரி னவ்வியனிலையும்.

(இ-ள்.) நூறென்னு மெண்ணினோடு அளவுப் பெயரும் நிறைப் பெயரும் வந்து புணரின் மிக்குமுடியும்.

வரலாறு. நூற்றுக்கலம், நூற்றுக்கழஞ்சு.

உ௯௫. ஒன்றுமுதலாகிய பத்தூர்கிளவி
யொன்றுமுதலொன்பாற் கொற்றிடைமிகுமே.

(இ-ள்.) ஒன்றுமுதலெட்டீறாகப் பத்தேறியொரு சொல்லாய் நின்ற வொருபது முதலாகிய வெண்க ளொன்றுமுத லொன்பான்கள்வரின் மிகும்.

வரலாறு. இருபத்தொன்று, இருபத்திரண்டு, இருபத்துமூன்று.

உ௯௬. ஆயிரம்வரினே யின்னேசாரியை
யாவயினொற்றிடை மிகாதியல்பாகும்.

(இ-ள்.) அவ்வொன்று முதலாகிய பத்தூர்கிளவி யாயிரத்தினோடு புணரினின்சாரியைபெறும், ஆயிடைத் தகரமெய் மிகாதியல்பாம்.

வரலாறு. பதினாயிரம், இருபதினாயிரம்.

உ௯௭. அளவுநிறையு மாயியறிரியா.

(இ-ள்.) அளவுப்பெயரு நிறைப்பெயரும் புணரின் மிகும்.

வரலாறு. நூற்றுக்கலம், நூற்றுக்கழஞ்சு.

புணரியன் முற்றும்.

இரண்டாவது:

# சொல்லதிகாரம்.

## பெயரியல்.

சொல்லதிகாரமென்பது சொல்லினததிகாரத்தையுடையதெனப் படலத்திற்குக் காரணக்குறியாயிற்று. சொல்லென்றது எழுத்தினாலாக்கப்பட்ட டிருதிணைப் பொருட்டன்மையு மொருவனுணர்தற்குக் கருவியாமோசையாகிய பெயர்வினையிடையுரியென நால்வகைச்சொல்லும் பிறவுமாம்.

### தற்சிறப்புப்பாயிரம்:

உருபமுமருபமு முருபருபமுமுள
னிலனெவனவற்றொழு தியம்புவன்சொல்லே.

(இ-ள்.) வடிவமும் வடிவமின்மையும் வடிவுவடிவின்மையு முள னிலனெவ னவனைவணங்கி யான்சொல்லிலக்கணத்தைக் கூறுவேனெனவறிக. ஏகார மீற்றசை.

௧. எல்லாச்சொல்லும் பொருள்குறித்தனவே.

(இ-ள்.) மேற்கூறிப்போந்த சொற்களெல்லாம் பொருளைக் குறித்தனவேயாம்; பொருளைக்குறியாதனில்லாவாமென்றுணர்க.

௨. சொல்லையும்பொருளையுஞ் சொல்லானுணர்தல்.

(இ-ள்.) சொற்றானே யறியப்படுதலுந் தன்னின் வேறாகிய பொருளா லறியப்படுதலுமாகிய விருமையுஞ் சொல்லாம்.

அதுதான்,

௩. பெயர்வினையிடையுரி யெனச்சொன்னான்கே.

(இ-ள்.) அச்சொல் பெயர்ச்சொல்லெனவும், வினைச்சொல்லெனவும், இடைச்சொல்லெனவும், உரிச்சொல்லெனவும் நான்குவகைப் படுமென்றுணர்க.

அவற்றுள்,

௪. பெயரெனப்படுபவை தெரியுங்காலை
யுயர்திணைக்குரிமையு மஃறிணைக்குரிமையு
மாயிருதிணைக்கு மோரன்னவுரிமையு
மாகுமென்மனா ரறிந்திசினோரே.



(இ-ள்.) மேற்கூறிப்போந்த பெயர்வினை யிடையுரியாகிய நான்கனுட் பெயரென்றுகூறப்படுவது - உயர்திணைக்குரிய வாய்வருவனவும், அஃறிணைக்குரியவாய் வருவனவும், இருதிணைக்கு மொத்த வுரிமையாய்வருவனவுமாகிய மூன்று வேறுபாட்டனவாம்,

௫. ஒருமைதொடர்பொது வுமைபடுமிருதிணை
யைம்பான்மூவிட மறுவகைவழக்கு
வெளிப்படைகுறிப்பின் விளக்குவதுமையே.

(இ-ள்.) ஒருமொழியும், தொடர்மொழியும், பொதுமொழியும், இருதிணையாகிய வைம்பாலும், மூவிடனும், அறுவகைவழக்கும் வெளிப்படையானும் குறிப்பானும் விளக்குவது சொல்லாம்.

௬. ஒருபொருள்பயப்ப தோருமையாகும்.

(இ-ள்.) ஒருபொருளைத்தருவது ஒருமொழியா மென்க.

வாலாறு. நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம்.

௭. பலபொருள்பயப்பது தொடர்சொற்கிளவி.

(இ-ள்.) பலபொருளைத்தருவது தொடர்மொழியாகும்.

வாலாறு. நிலங்கடந்தான், நிலத்தைக்கடந்தமால்.

௮. இருமையும்பயப்பது பொதுவெனமொழிப.

(இ-ள்.) ஒருபொருளையும், பலபொருளையும் தருவது பொதுமொழியாகும்.

வாலாறு. நங்கை, தங்கை.

௯. மக்கடேவர் நரகருயர்திணை
மற்றுயிருள்ளவு மில்லவுமஃறிணை.

(இ-ள்.) மக்களும் தேவரும் நரகரும் உயர்திணையாம், இவரல்லாத பிறவெல்லா மஃறிணையாம்.

வாலாறு. ஆடூஉ, மகடூஉ, தேவன், நரகன், மரம், மிருகம், பறவை, நிலம், நீர்.

௰. ஆண்பெண்பலரென முப்பாற்றுயர்திணை.

(இ-ள்.) ஆண்பாலும் பெண்பாலும் பலர்பாலும் எனவுயர்திணை மூன்றுபாலினையுடைத்தாம்.

வாலாறு. அவன், அவள், அவர்.

௪௧. ஒன்றேபலவென் றிருபாற்றஃறிணை.

(இ-ள்.) ஒன்றன்பாலும் பலவின்பாலுமென வஃறிணை இரண்டுபாலினையுடைத்தாம்.

வாலாறு. அது, அவை.

௪௨. படர்க்கைப்பெயர்வினை முற்றிருதிணைபா
லனைத்தும்பெறப்படு மல்லனவிரண்டு
மொருமையும்பன்மையும் பெறுமெனமொழிப.

(இ-ள்.) படர்க்கைப்பெயர்ச்சொல்லும் படர்க்கைவினை முற்றுச்சொல்லும் இருதிணையைம் பாலும்பெறும்; தன்மையும் முன்னிலையும் ஒருமையும் பன்மையும் பெறும்.

வாலாறு. அவன், அவள், அவர், அது, அவை, படர்க்கைப் பெயர். நடந்தான், நடந்தாள், நடந்தார், நடந்தது படர்க்கைவினைமுற்று. நீ, நீர், முன்னிலைப்பெயர் யான், யாம், தன்மைப்பெயர். நடந்தாய், நடந்தீர் முன்னிலை வினைமுற்று. நடந்தேன், நடந்தேம் தன்மைவினைமுற்று.

௪௩. முன்னிலைதன்மை படர்க்கைமூவிடனே.

(இ-ள்.) முன்னிலையும் தன்மையும் படர்க்கையுமென விடம் மூன்றாம.

வாலாறு. நீ நடந்தாய், முன்னிலை; நான் நடந்தேன், தன்மை; அவன் நடந்தான், படர்க்கை.

௪௪. இயல்புந்தகுதியு மெனவழக்கிருமைய.

(இ-ள்.) வழக்கு - இயல்புவழக்கெனவும், தகுதிவழக்கெனவும் இரண்டுபிரிவினையுடையவாம்.

அவற்றுள்,

௪௫. இயல்புமரூஉவிலக் கணமுடையனவிலக்
கணப்போலியென்மனார் கற்றுணர்ந்தோரே.

(இ-ள்.) மேற்கூறிய விரண்டனுள், இயல்புவழக்கு மரீஇயதும், இலக்கணவழியால் வருவதும், இலக்கணமுடையதுபோல வருவதும் எனமூவகையாம்.



வாலாறு. அருமந்தபிள்ளை, சோணாடு, மராடி.

௪௬. தகுதிகுழூஉக்குறி மங்கலமிடக்க
ரடக்கலென்மனா ரறிந்திசினோரே.

(இ-ள்.) தகுதிவழக்கு, குழூஉக்குறி, மங்கலம், இடக்கரடக்கல் ஆம்.

வாலாறு. பொன்-பறி, ஆடை-காரை-குழூஉக்குறி, ஓலை-திருமுகம்-மங்கலம், ஈகாரபகரம் ஆமுன்பகரவீ, இடக்கரடக்கல்.

௪௭. கற்றுணர்வல்லோர் கற்பித்துரைப்பது
செய்யுளென்மனார் தெளிந்திசினோரே.

(இ-ள்.) பலநூல்களையுமோதி அவற்றின்பொருணன்குணர்ந்த பெரியோர் கற்பித்துப்பாடுவது செய்யுளாம்.

வாலாறு. இருநோக்கிவளுண்க ணுள்ளதொருநோக்கு-நோய் நோக்கொன் றந்நோய் மருந்து.

௪௮. தொகையொன்றொழிபொதுச்சொல்லேமுதனிலை
தகுதிவினைக்குறிப் பன்மொழியாகு
பெயரேகுறிப்புரை யல்லனவெளிப்படை.

(இ-ள்.) தொகைக்குறிப்புச்சொல்லும், இருதிணையாண் பெண்ணென்றனையொழிக்கும் பொதுச்சொல்லும், முதற்குறிப்புச் சொல்லும், மூவகைத்தகுதி வழக்குச்சொற்களும், வினைக்குறிப்புச் சொல்லும், அன்மொழித் தொகைச்சொல்லும், ஆகுபெயரும், குறிப்பினாலிருதிணை யைம்பாற் பொருள்களையும் தருகிறசொற்களாம். இவையல்லனவெல்லாம் வெளிப்படையாக அப்பொருளைத் தருகிற சொற்களாம்.

வாலாறு. அலங்குளைப்புரவி யைவரொடுசினை இ=தொகைப் குறிப்பு; ஆயிரமக்கள் பொருதார்=ஒன்றொழி பொதுச்சொல்; அறத்தாறிதுவென=முதற்குறிப்பு; ஈகாரபகரம்=தகுதி; பொன்னன்=வினைக்குறிப்பு; பொற்றொடி=அன்மொழித்தொகை; உலகு=ஆகுபெயர்.

௪௯. னகாரவிறுதி குடிநிலங்குழூஉவினை
திணைநிலைசினைநிலை பண்புகொள்பெயரே

யெண்ணுப்பெயரொடு சுட்டுவினாப்பெய
ருயர்திணையாண்பாற் படர்க்கைப்பெயரே.

(இ-ள்.) லகாரமெய்யீறாகிய குடிப்பெயரும் நிலப்பெயரும் குழுவின்பெயரும் வினைப்பெயரும் திணைநிலைப்பெயரும் சினைநிலைப்பெயரும் குணப்பெயரும் எண்ணுப்பெயரும் சுட்டுப்பெயரும் வினாப்பெயரும் உயர்திணையாண்பாற் படர்க்கைப்பெயராம்.

வலாறு. மலயமான், சேரமான், குடி; அருவாளன், சோழியன் நிலம்; அவையத்தான், அத்திகோசத்தான் குழு; வருவான், போவான், வினை; வெற்பன், சேர்ப்பன், திணை; பெருங்காலன், திணிதோளன், சினை; கரியன், செய்யன், பண்பு; ஒருவன், எண்; அவன், இவன், உவன், சுட்டு; எவன்? யாவன்? வினா.

உ௰. கோவேள்விடலை குருசிறோன்ற
லாடூஉநம்பியு மதன்பாலவென்மனார்.

(இ-ள்.) கோ, வேள், விடலை, குருசில், தோன்றல், ஆடூஉ நம்பி உயர்திணையாண்பாற் படர்க்கையாம்.

உக. உரைத்தகுடிமுத லுற்றளகார

வீற்றவுமகர விறுதிக்கிளவியு
மத்திணைப்பெண்பாற் படர்க்கையாகும்.

(இ-ள்.) மேற்கூறிப்போந்த குடிப்பெயர் முதலிய பத்துப் பெயர்களினிறுதி, ளகரவொற்றுப்பெயரும், இகரவிறுதிப்பெயரும் உயர்திணைப்பெண்பாற் படர்க்கைப்பெயராம்.

வலாறு. சோழியன், சேரமான், அவையத்தாள். வருவாள், வெற்பன், திணிதோளான், கறுப்பி, ஒருத்தி, அவள், இவள், உவள், எவள், யாவள் எனவரும்.

உஉ. தையன்மகடூஉ நங்கைசெவிலி
தோழியுமதன்பால வென்மனார்புலவர்.

(இ-ள்.) தையல், மகடூஉ, நங்கை, செவிலி, தோழி, உயர்திணைப் பெண்பாற் படர்க்கைப்பெயராம்.

உங. குடிமுதலாகக் குறித்தவற்றிறுதி
ரகாரைப்பெயரு மாரைக்கிளவியு
முயர்திணைப்பலர்பாற் படர்க்கைப்பெயரே.



(இ-ள்.) குடிமுதலாகக் கருதிய பெயர்களினிறுதி ரகரவொற்றுப்பெயரும் மார்விகுதிப்பெயரும் உயர்திணைப்பலர்பாற் படர்க்கைப்பெயராம்.

வலாறு. சோழியர், சேரலர், அவையத்தார், வருவார், வெற்பர், திணிதோளர், கரியர், இருவர், அவர், இவர், உவர், எவர், யாவர், கொண்மார்.

உச. துவ்விறுசுட்டொடு சுட்டணையாய்தமும்
யாதுமொன்று மஃறிணையொன்றன்
பாற்படர்க்கைப்பெய ரென்மனார்புலவர்.

(இ-ள்) துவ்விகுதிச் சுட்டுப்பெயரும், சுட்டணை யாய்தப்பெயரும், யாதென்னும் வினாப்பெயரும், ஒன்றென்னுமெண்ணுப்பெயரும் அஃறிணை ஒன்றன்பாற் படர்க்கைப்பெயராமென்க.

வலாறு. அது, இது, உது, அஃது, இஃது, உஃது, ஒன்று, யாது எனவரும்.

உரு. வகாரவிறுதியும் வையிறுமொழியுங்
கள்ளெனிறுதியுங் கணக்கும்பிறவு
மத்திணைப்பலவின் படர்க்கைப்பெயரே.

(இ-ள்.) வகரவொற்றிறுதியாகிய பெயரும், வைவிகுதிப்பெயரும், கள்ளிறுதிப்பெயரும், எண்ணுப்பெயரும், இவைபோல்வனவாகிய பிறபெயரும் அஃறிணைப் பலவின்பாற் படர்க்கைப்பெயராம்.

வலாறு. அவ்-இவ்-உவ், அவை-இவை-உவை, நரிகள்-புலிகள், இரண்டு-மூன்று-நான்கு-ஐந்து-ஆறு-எழு.

உசு. பல்லபலசில வென்னும்பெயரு
முள்ளவில்ல வுளவிலவென்னும்
பெயருமத்திணைப் பலவின்மேன.

(இ-ள்.) பல்ல-சில்ல, பல-சில: உள்ள-இல்ல, உள-இல அஃறிணைப் பலவின்பாற் படர்க்கைப்பெயராம்.

உஎ. சினைப்பெயர்முதற்பெயர் சினைமுதற்பெயரே
முறைப்பெயர் தன்மை முன்னிலைப்பெயரோ
டெல்லாம்பொதுப்பெய ரென்மனார்புலவர்.

(இ-ள்.) சினைப்பெயரும், முதற்பெயரும், சினைமுதற்பெயரும், முறைப்பெயரும், தன்மைப்பெயரும், முன்னிலைப்பெயரும், எல்லாமென்னும்பெயரும் இருதிணைக்கும் பொதுவாகிய பெயராம்.

அவற்றுள்,

௨௮. சினைப்பெயர்நான்கே சினைமுதற்பெயரொரு
நான்கேயியற்பெயர் நான்கேமுறைப்பெய
ரோரிரண்டென்மனா ருணர்ந்திசினோரே.

(இ-ள்.) சினைப்பெயர் நான்கு, சினைமுதற்பெயர் நான்கு, இயற்பெயர் நான்கு, முறைப்பெய ரிரண்டாகும்.

௨௯. ஆண்மைச்சினைப்பெயர் பெண்மைச்சினைப்பெய
ரொருமைச்சினைப்பெயர் பன்மைச்சினைப்பெய
ரந்நான்கென்ப சினைப்பெயர்க்கிளவி.

(இ-ள்.) ஆண்மைச் சினைப்பெயர், பெண்மைச் சினைப்பெயர், ஒருமைச் சினைப்பெயர், பன்மைச் சினைப்பெயரெனச் சினைப்பெயர் நான்காமென்க.

வரலாறு. முடவன் - ஆண்மைச்சினைப்பெயர், முடத்தி - பெண்மைச்சினைப்பெயர், செவியிலி-ஒருமைச்சினைப் பெயர், செவியிலிகள்-பன்மைச்சினைப்பெயர்.

௩௰. ஆண்மையியற்பெயர் பெண்மையியற்பெய
ரொருமையியற்பெயர் பன்மையியற்பெய
ரந்நான்காகு மியற்பெயர்மொழியே.

(இ-ள்.) ஆண்மையியற்பெயர், பெண்மையியற்பெயர், ஒருமையியற்பெயர், பன்மையியற்பெயர் என இயற்பெயரொருநான்காமென்க.

வரலாறு. சாத்தன்-ஆண்மையியற்பெயர், சாத்தி-பெண்மையியற்பெயர், கோதை-ஒருமையியற்பெயர், கோதைகள்-பன்மையியற்பெயர்.

௩௧. ஆண்மைச்சினைமுதல் பெண்மைச்சினைமுத
லொருமைச்சினைமுதல் பன்மைச்சினைமுத
லெனநான்காகுஞ் சினைமுதற்கிளவி.

(இ-ள்.) ஆண்மைச்சினைமுதல், பெண்மைச்சினைமுதல், ஒருமைச்சினைமுதல், பன்மைச்சினைமுதலெனச் சினைமுதற்பெயர் நான்காகும்.



வரலாறு. முடக்கொற்றன்-ஆண்மைச்சினைமுதல், முடக்கொற்றி-பெண்மைச்சினைமுதல், கொடும்புறமருதி-ஒருமைச்சினைமுதல், கொடும்புறமருதிகள்- பன்மைச்சினைமுதல்.

௩௨. ஆண்மைமுறைப்பெயர் பெண்மைமுறைப்பெய
ரெனவிருதிறத்தவா முறைப்பெயர்க்கிளவி.

(இ-ள்.) ஆண்மைமுறைப்பெயர் பெண்மைமுறைப்பெயர் என முறைப்பெயரிரண்டாகும்.

வரலாறு. தந்தை-ஆண்மைமுறைப்பெயர், தாய் - பெண்மைமுறைப்பெயர்.

௩௩. ஒன்றேயிருதிணைத் தன்பாலேற்கும்.

(இ-ள்.) முதற்பெயர் முதலாகக் கூறப்படு மிருபத்தாறும் பிறவுமாகிய பொதுப்பெயர்களு ளொவ்வொன்றே யிருதிணையினுந் தன்றன்பாலை யேற்றுவரும்.

வரலாறு. சாத்தன்வந்தான், சாத்தன்வந்தது, தாயிவன், தாயிப்பசு, பிறவுமன்ன.

௩௪. மகடூஉக்குறித்த வெல்லாப்பெயரு
மொன்றற்குமொருத்திக்கு மொன்றியநிலையே.

(இ-ள்.) பெண்மையைப்பற்றி வருகிறநான்குபெயரும், அஃறிணையொன்றற்கும், உயர்திணையொருத்திக்கு முரியவாம்.

வரலாறு. சாத்திவந்தது – சாத்திவந்தாள், முடத்திவந்தது - முடத்திவந்தாள் பிறவுமன்ன.

௩௫. ஆடூஉக்குறித்த வெல்லாப்பெயரு
மொன்றற்குமொருவற்கு மொன்றியநிலையே,

(இ-ள்.) ஆண்மையைப்பற்றி வருகிறநான்கு பெயரும் அஃறிணையொன்றற்கும், உயர்திணையொருவனுக்கு முரியவாம்.

வரலாறு. சாத்தன்வந்தது - சாத்தன்வந்தான், முடவன் வந்தது-முடவன்வந்தான்.

௩௬. பன்மையைக்குறித்த பெயரெல்லாமு
மொன்றுபலவொரு மைக்குமுரிய.

(இ-ள்.) பன்மையைப்பற்றி வருகிற மூன்றுபெயரும், அஃறிணையொருமைக்கு மத்திணைப் பன்மைக்கும் உயர்திணை யொருமைக்கு முரியவாமென்க. மூன்றுவன: பன்மையியற்பெயரும், பன்மைச்சினைப்பெயரும், பன்மைச்சினை முதற்பெயருமாம்.

வாலாறு. யானைவந்தது, யானைவந்தன, யானைவந்தான்.

௩௭. ஒருமையைக்குறித்த வொருமுப்பெயரு
மொன்றற்கு மொருவர்க்கு முரியவாகும்.

(இ-ள்.) ஒருமையைப்பற்றி வருகிற மூன்றுபெயரும், அஃறிணையொருமைக்கும், உயர்திணை யொருமைக்கு முரியவாம்.

வாலாறு. கோதைவந்தது, கோதைவந்தான், கோதைவந்தாள்.

௩௮. தாமெனுமொருபெயர் பன்மைக்குரிய.

(இ-ள்.) தாமென்னும்பெய ரிருதிணைக்கண்ணும் பன்மைப்பாற் குரியவாம்.

வாலாறு. தாம்வந்தன.

௩௯. தானெனுமொருபெய ரொருமைக்குரிய.

(இ-ள்.) தானென்னும் பெயரிருதிணைக்கண்ணு மொருமைப் பாற் குரியவாம்.

வாலாறு. தான்வந்தான், தான்வந்தது.

௪௰. எல்லாமென்ப திருதிணைப்பன்மைப்
பெயரொடுநிலையும் பெற்றித்தாகும்.

(இ-ள்.) எல்லாமென்னும்பெய ரிருதிணைக்கண்ணும் பன்மையைக்குறித்துவரும்

வாலாறு. எல்லாம்வந்தேம், எல்லாம்வந்தீர், எல்லாம்வந்தன.

௪௧. நீயிர்நீபாறெளி விலவாமென்ப.

(இ-ள்.) நீயிர்-நீயென்னுமிரண்டுபெயரும், திணைப்பகுதிதெரியவில்லாவாம்; இருதிணையும் உடன்றோன்றும் பொருளவாம்.

வாலாறு. நீயிர்வந்தீர், நீவந்தாய் என இருதிணைக்கும் பொதுவாய் நின்றனமகாண்க.



அவற்றுள்,

௪௨. நீயென்கிளவி யொருமைக்குரிய.

(இ-ள்.) மேற்கூறிப்போந்த விரண்டனுள், நீயென்னு மொருபெயர் ஒருமைக்குரியவாம்.

வாலாறு. நீவந்தாய் எனவரும்.

௪௩. நீயிரெனும்பெயர் பன்மையொடுநிலையும்,

(இ-ள்.) நீயிரென்னுமொருபெயர் பன்மைக்குரியவாம்.

வாலாறு. நீயிர் வந்தீர் எனவரும்.

௪௪. ஒருவரென்ப துயரிருபாற்றாய்ப்
பன்மைவினைகொளும் பாங்கிற்றென்ப.

(இ-ள்.) ஒருவரென்னும்பெய ருயர்திணைமுப்பாலு ளொருபால் விளக்காது ஒருவனொருத்தியென்னு மிருபாற்கும் பொதுவாய் நிற்கும்.

வாலாறு. ஒருவர் வந்தார்.

௪௫. இன்னபெயரே யிவையெனல்வேண்டின்
முன்னஞ்சேர்த்தி முறையானுணர்க.

(இ-ள்.) நீயிர், நீ, ஒருவர் என்பனவற்றை யின்னபாற்பெயரென்றறியலுறிற் சொல்லுவான் குறிப்பொடு கூட்டி முறையானறிக.

வாலாறு. ஒருசாத்தனொருவனும், ஒருத்தியானும், பலரானும், ஒன்றானும், பலவானும், தன்னுழைச்சென்றவழி, நீ வந்தாய், நீயிர்வந்தீரென்னு மன்றேயாண்டது கேட்டான் இவனின்னபால் கருதிக் கூறினானென்பதுணரும்.

௪௬. பெண்மகளென்னும் பெயர்வினைகொள்ளுங்
காலதற்குரிய வினையொடுசிவணும்.

(இ-ள்.) பெண்மகளென்னும்பெயர் வினைகொள்ளுங்கால் பெண்மைக்குரிய வினைகொள்ளும்.

வாலாறு. பெண்மகள்வந்தாள் எனவரும்.

சஎ. யாப்பினுள் ஆ, ஒ வாகலுமுளவே.

(இ-ள்.) செய்யுளுள் ஆகாரம் ஓகாரமாய்த் திரிதலுமுளவா மென்க.

வாலாறு. வில்லான், வில்லோன், தொடியான், தொடியோன், நல்லார், நல்லோர்.

சஅ. எல்லாப்பெயரும் வேற்றுமையேற்கும்.

(இ-ள்.) பெயர்ச்சொல்லெல்லாம் வேற்றுமைபெறும்.

சகூ. வேற்றுமைதானே விளியோடெட்டே.

(இ-ள்.) விளிவேற்றுமையோடு வேற்றுமையெட்டாகும்.

ருo. பெயரையொடுகுவ் வின்னதுகண்விளி.

(இ-ள்.) எட்டெனக்கூறிய வேற்றுமையாவன பெயரும், ஐயும், ஒடுவும், குவ்வும், இன்னும், அதுவும், கண்ணும், விளியுமாமென்க.

ருக. ஆறனுருபு மேற்குமவ்வுருபே.

(இ-ள்.) பெயராய்நிற்கின்ற வெழுவாயுருபே ஐம்முதலாகிய வாறுவேற்றுமை யுருபுகளையு மேற்கும்.

வாலாறு. மரம், மரத்தை, மரத்தொடு, மரத்துக்கு, மரத்தின் மரத்தது, மரத்துக்கண்.

ருஉ. நீயிர்நீவிர்நா னெழுவாயலபெறா.

(இ-ள்.) நீயிர், நீவிர், நான், எழுவாயல்லாத வேற்றுமை யுருபுகளைப் பெறாவாம்.

வாலாறு. நீயிர் வந்தீர், நீவிர் வந்தீர், நான் வந்தேன்.

ருங. எழுவாயுருபு பெயர்தோன்றுநிலையே.

(இ-ள்.) மேற்கூறிப்போந்த வேற்றுமையுருபுகளுண் முதற்கட்பெயரென்று கூறப்பட்ட வேற்றுமையுருபாவது பெயர்தோன்றிய துணையாய் நிற்குநிலைமையா மெனவறிக.



ருச. வியங்கோள்வினைநிலை வினாவேபெயர்பண்
பதன்பொருளென்மனா ரறிந்திசினோரே.

(இ-ள்.) வியங்கோளும், வினைநிலையும், வினாவும், பெயரும், பண்பும் அதன்பொருளாம்.

வாலாறு. ஆ வாழ்க, ஆ வந்தது, ஆ யாது, ஆ கன்று, ஆ கரிது.

ருரு. ஐயேயிரண்டா வதனுருபாகும்.

(இ-ள்.) இரண்டாம்வேற்றுமை யுருபுஐயொன்றேயாம்.

ருசு. காப்பினொப்பி னாக்கலினழித்தலி
னடைதலினீத்தலி னஞ்சலினுடைமையி
னன்னபிறவு மதன்பயனிலையே.

(இ-ள்.) காப்பும், ஒப்பும், ஆக்கலும், அழித்தலும், அடைதலும், நீத்தலும், அஞ்சலும், உடைமையும் இவைபோல்வன பிறவுமிரண்டாம் வேற்றுமைப் பொருணிலையாமென்க.

வாலாறு. ஊரைப்புரக்கும், வேலையொக்கும், மரத்தைவளர்க்கும், வேலியைப்பிரிக்கும், பதியையடையும், மாயைநீக்கும், பேயையஞ்சும், பொருளையுடையன் பிறவுமன்ன

ருஎ. ஆலானொடொடுமூன்றனதுருபே.

(இ-ள்.) மூன்றும்வேற்றுமை யுருபாவது ஆல், ஆன், ஓடு, ஒடு ஆம்.

ருஅ. கருவியுடனிகழ்வு கருத்தாவதன்பொருள்.

(இ-ள்.) கருவியும், உடனிகழ்ச்சியும், கருத்தாவும் மூன்றும்வேற்றுமைப் பொருணிலையாமென்க.

வாலாறு. வாளால்வெட்டினான், மகனொடு தந்தைவந்தான், அகத்தியனாற் றமிழுரைக்கப்பட்டது எனவரும்.

ருகூ. குவ்வேநான்கனதுருபாகும்மே.

(இ-ள்.) நான்காம்வேற்றுமை யுருபாவது குவ்வொன்றேயா மென்க.

௬௰. கொடைபகைசிறப்புக்காதறகுதி
யதுவாதன்முறை பொருட்டதன்பயனிலையே.

(இ-ள்.) கொடையும், பகையும், சிறப்பும், காதலும், தகுதியும், அதுவாதலும், முறையும், பொருட்டும் நான்காம் வேற்றுமைப் பொருணிலையாமென்க.

வரலாறு. இரவலர்க்குப் பொன்கொடுத்தான், பாம்புக்குக்கருடன்பகை, கற்பார்க்குச் சிறந்தனசெவி, கட்டார்க்குக் காதலன், அருங்கல னரசர்க்குரித்து, குண்டலத்திற்குப்பொன், சாத்தனுக்கு மகனிவன், கூலிக்குக் குற்றேவல்.

௬௧. இல்லுமின்னுமைந் தாவதனுருபே.

(இ-ள்.) ஐந்தாம்வேற்றுமை யுருபாவது இல், இன் ஆம்.

௬௨. அச்சமாக்க மதனொடுதீர்தல்
பற்றுவிடனீங்க லொப்பெல்லையேது
பிறவுமதன்பொரு ணிலையாகும்மே.

(இ-ள்.) அச்சமும், ஆக்கமும், தீர்தலும், பற்றுவிடலும், நீங்கலும், ஒப்பும், எல்லையும், ஏதுவும், ஐந்தாம்வேற்றுமைப் பொருணிலையாம்.

வரலாறு. கள்ளரினஞ்சும், வாணிகத்தினாயினான், ஊரிற்றீர்ந்தான், காமத்திற் பற்றுவிட்டான், மலையின்வீழருவி, காக்கையிற்கரிது களம்பழம், மதுரையின் வடக்கு சிதம்பரம், கல்வியிற் பெரியன் கம்பன் எனவரும்.

௬௩. ஒருமைக்கதுவு மாதுவும்பன்மைக்
கவ்வுமாறு வதற்குருபாகும்.

(இ-ள்.) ஆறும்வேற்றுமை யுருபாவது ஒருமைக்கு அதுவும் ஆதுவும், பன்மைக்கு அகரமும் ஆகுமென்க.

௬௪. அதன்பொருள்குணமுறுப் பொன்றன்கூட்டந்
திரிபினாக்கமொடு பலவினீட்ட
மாந்தற்கிழமையும் பிறிதின்கிழமையு
மாகுமென்மனா ரறிந்திசினோரே.



(இ-ள்.) பண்பும், அவயவமும், ஒருபொருட் கூட்டமும், ஒன்றுதிரிந்தொன்றாகலும், பலபொருட்கூட்டமும் ஆகியவைந்துதற்கிழமைப்பொருள்களையு மவையல்லாத பிறிதின் கிழமைப்பொருள்களையு முடையனவாக வவ்வுருபுகளையேற்ற பெயர்ப்பொருள்கள் வேறுபட்ட விவ்விருவகைச் சம்பந்தப்பொருள்களுமாமென்க.

வரலாறு. சாத்தனதுகருமை, நெல்லதுகுட்டை, நெல்லினது பொரி, பறவைகளதுகூட்டம், தற்கிழமை; சாத்தனது பசு, பொருள்; சாத்தனதுவீடு, இடம்; சாத்தனது நாள், காலம்; மூவகைப்பிறிதின்கிழமை, எனது கை, தனகைகள். 29.10

௬௫. கண்முதலியனவே யேழனுருபாகும்.

(இ-ள்.) ஏழாம்வேற்றுமை யுருபாவது கண்முதலியனவாம்.

௬௬. அதன்பொருள்பொருண்முத லாறிருகிழமையி
னிடனாய்நிற்ப தென்மனார்புலவர்.

(இ-ள்.) பொருளும், இடமும், காலமும், சினையும், குணமும், தொழிலும் ஆறும் தற்கிழமைப்பொருள் பிறிதின் கிழமைப்பொருள்களுக்கும் இடமாய்நிற்கின்ற வுருபேற்றபெயர்ப்பொருள் வேறுபட்ட வவ்விடப் பொருணிலையாம்.

வரலாறு. மணியின்கணிருக்கின்றதொனி, தற்கிழமை—பனையின்கண்வாழ்கின்ற தன்றில், பிறிதின்கிழமை—பொருள்; ஊரின்கணிருக்கு மில்லம், தற்கிழமை - ஆகாயத்தின்கட் பறக்கின்றது பருந்து, பிறிதன்கிழமை - இடம்; நாளின்கணுழிகையுள்ளது, தற்கிழமை - வேனிற்கட்பாதிரிபூக்கும், பிறிதின்கிழமை - காலம்; கையின்கணுள்ளது விரல், தற்கிழமை - கையின்கண்விளங்குகின்றது கடகம், பிறிதின்கிழமை - சினை; கறுப்பின்மிக்கதழகு, தற்கிழமை - இளமையின்கண் வாய்த்ததுசெல்வம், பிறிதின்கிழமை - பண்பு; ஆடற்கணுள்ளது சதி, தற்கிழமை - ஆடற்கட்பாடப்பட்டது பாட்டு, தொழில்.

௬௭. கண்கால்புறமக முள்ளுழைகீழ்மேல்
பின்சாரயல்புடை யாறேவகையெனா அ
முன்னுவிடைகடை வலமிடமெனா அ
வன்னபிறவு மதன்பாலவென்மனார்.

(இ-ள்.) கண்முதலிட மீறாகக்கூறிய பத்தொன்பது மவைபோல்வனபிறவு மேழாவதன் றிறத்தனவாம்.

**வரலாறு.** கண்ணகல், ஊர்க்கால், ஊர்ப்புறம், எயிலகம், இல்லுள், அரசனுழை, ஆலின்கீழ், மரத்தின்மேல், ஊர்ப்பின், காட்டுச்சார், உறையூர்க்கயல், எயிற்புடை, வடபால், புலிமுன், நூலினிடை, நூலின்கடை, நூலின்றலை, கைவலம், தன்னிடம், அவ்விடப்பொருள்பற்றி யேழாம் வேற்றுமை வந்தவாறு காண்க.

௬௮. வேற்றுமைப்பொருளை விரிக்குங்காலை
யீற்றினின்றியலுந் தொகைவயிற்பிரிந்து
பல்லாறாகப் பொருள்புணர்ந்திசைக்கு
மெல்லாச்சொல்லு முரியவென்ப.

(இ-ள்.) வேற்றுமைத்தொகைப்பொருளை விரிக்குமிடத்து வேற்றுமையேயன்றி யன்மொழித்தொகையும் விரிப்புழிப் பல்லாற்றானன்மொழிப்பொருளோடு புணர்ந்துவரு மெல்லாச் சொல்லும் விரிக்கப்படும்.

**வரலாறு.** தாழ்குழல் - தாழ்குழலையுடையாள், கருங்குழல் - கருங்குழலையுடைய பேதைபிறவுமன்ன.

௬௯. சினைநிலைக்கிளவிக் கிரண்டுமேழும்
வினைநிலையொக்கு மென்மனார்புலவர்.

(இ-ள்.) சினைமேனிற்குஞ் சொல்லிற்கிரண்டாவது மேழாவதும் வினைநிலைக்கணொக்கும்.

**வரலாறு.** கோட்டைக் குறைத்தான், கோட்டின் கட்குறைத்தான்.

௭௰. கன்றலிற்செலவி னொன்றுமார்வினையே.

(இ-ள்.) கன்றற்பொருண்மேல் வருஞ்சொல்லும், செலவுப்பொருண்மேல் வருஞ்சொல்லும் இரண்டாவதற்கு மேழாவதற்குந் தொழிலாம்.

**வரலாறு.** சூதினைக்கன்றினான், சூதின்கட்கன்றினான், நெறியைச்சென்றான், நெறிக்கட்சென்றான்.

௭௧. முதற்காறாயிற் சினைக்கிரண்டாகும்.

(இ-ள்.) முதலுக்காறாம்வேற்றுமை வருமாயிற் சினைக்கிரண்டாம்வேற்றுமை வரும்.

**வரலாறு.** யானையது கோட்டைக்குறைத்தான்.



௭௨. முதலிவைசினையிவை யெனவேறுளவில
வுரைப்போர்குறிப்பி னவற்றேபிண்டமும்.

(இ-ள்.) முதற்பொருள்களிவை சினைப்பொருள்களிவை யென்கிறதற் கிரண்டாகப் பிரித்துச்சொல்வோரது குறிப்பின் மாத்திரையனவேயாம், பிண்டப்பொருளு மத்தன்மைத்தாம்.

**வரலாறு.** யானையைக் குறித்தபோ தியானையுண்டாகவதனது கைகான் முதலியவைவேறில்லையா மவயவத்தைக்குறித்தபோதியானை வேறில்லையா மாதலாலிவ்வாறு கூறப்பட்டன; இனிப்பிண்டப் பொருணெல்லைப் பொலியின்கண்வாரினான் பிண்டப்பொருளாகிய பொலிக்குப்பையும் பிண்டித்த பொருளாகிய நெல்லும் வேறாகாமையா லவ்விரண்டிடத்தும் ஐயுருபு வருவது சிறப்பன்றாம்.

௭௩. மூன்றிற்கோதிய வொருவினையொடுச்சொ
லுயர்திணையுணர்த்தும் பெயர்வழித்தோன்றும்.

(இ-ள்.) மூன்றாவதற்குக்கூறிய வொருவினையொடு மொழி யுயர்திணைப்பொருளைத் தெரிவிக்கும்பெயர் வழித்தோன்றும்

**வரலாறு.** ஆசிரியனோடு மாணாக்கர்வந்தார்.

௭௪. ஐந்தினுமூன்றினு மறையுமாக்க
மொடுபுணரேதுப் பெயர்ச்சொற்கிளவி
நோக்குநோக்கொரு தன்மையவாகும்.

(இ-ள்.) ஐந்தாம்வேற்றுமைக்கண்ணு மூன்றாம் வேற்றுமைக்கண்ணுங்கூறிய வாக்கத்தோடுகூடிய வேதுச்சொ லவ்வேதுப்பொருண்மையே நோக்குநோக் கொருதன்மையவாம்.

**வரலாறு.** வாணிகத்தினாயினான் - வாணிகத்தினாயபொருள், வாணிகத்தானாயினான் - வாணிகத்தானாயபொருள்.

௭௫. இரண்டனோக்கமு மவற்றொடுநிலையும்.

(இ-ள்.) இரண்டாவதற்குக்கூறிய நோக்கப்பொருண்மைநோக்கிய நோக்கமு மைந்தாவதற்கு மூன்றாவதற்குமுரிய வேதுப் பொருண்மையுமாம்.

**வரலாறு.** வானோக்கிவாழு முலகெல்லா மன்னவன், கோனோக்கிவாழுங்குடி, வானை நோக்கிவாழும், வானானோக்கிவாழும், வானினோக்கிவாழும்.

எசு. உயர்திணைமருங்கி லாறுமொத்தியலும்.

(இ-ள்.) உயர்திணைக்க ணான்காம்வேற்றுமையுருபும் ஆறாம்வேற்றுமை யுருபு மொருதன்மையவாம்.

வரலாறு. நம்பிக்குமகன், நம்பியதுமகன்.

எஎ. இரண்டுமூன்றுந் தடுமாறுதொழில்வயிற்
கடிநிலையின்றே பொருள்வயினான.

(இ-ள்.) இரண்டாம்வேற்றுமையு மூன்றாம் வேற்றுமையும் தனக்கேயுரித்தாய்நில்லா தொருகாலீற்றுப் பெயரொடுஞ்சென்றும் தடுமாறுந் தொழிலொடு தொடர்ந்தபெயர்க்குக் கடியப்படாவாம், அவ்வேற்றுமைதொக்க அவற்றின் பொருணிற்குந் தொகைக்கண்.

வரலாறு. புலிகொன்றயானை, புலியைக்கொன்றயானை, புலியாற்கொன்றயானை.

எஅ. ஆறுமேழும் வாழ்ச்சியொடுசிவணும்.

(இ-ள்.) ஆறாம்வேற்றுமையும், ஏழாம்வேற்றுமையும் வாழ்ச்சிக் கொக்குமென்க.

வரலாறு. காட்டதியானை, காட்டின்கண்யானை.

எகூ. இரண்டுமூன்று மோம்படைக்கொக்கும்.

(இ-ள்.) ஓம்படைப் பொருண்மைக்கு இரண்டாம்வேற்றுமையும் மூன்றாம்வேற்றுமையுமொத்த வுரிமையவாமென வறிக.

வரலாறு. புலியைப்போற்றிவா, புலியாற்போற்றிவா.

அய. நான்குமாறுங் கொடையெதிர்க்கொக்கும்.

(இ-ள்.) கொடையெதிர்ப் பொருண்மைக்கு நான்காம்வேற்றுமையு மாறாம்வேற்றுமையு மொக்கும்.

வரலாறு. நாகர்க்குப்பலி, நாகரதுபலி எனவரும்.

அக. அச்சப்பொருண்மைக் கைந்துமிரண்டு
மெச்சமிலவே பொருள்வயினான.

(இ-ள்.) அச்சப்பொருண்மைக்கு ஐந்தாம் வேற்றுமையும் இரண்டாம்வேற்றுமையும் வரும்.



வரலாறு. பழியினஞ்சும், பழியையஞ்சும்.

அஉ. வேற்றுமையீற்றினு நிற்பினும்வரையார்.

(இ-ள்.) வேற்றுமைத் தொடரிறுதிக்கண்ணு நிற்றலை நீக்கார்.

வரலாறு. கடந்தானிலத்தை, வந்தான்சாத்தனொடு, கொடுத்தான் சாத்தற்கு, வலியன் சாத்தனின், ஆடைசாத்தனது, கூகைகுன்றக்கண்.

அங. யாதனுருபிற் கூறிற்றாயினும்
பொருள்சென்மருங்கின் வேற்றுமைசாரும்.

(இ-ள்.) எவ்வுருபிற் கூறிற்றாயினும் பொருள்போம் வழியே வேற்றுமை பொருந்துமென்க.

வரலாறு. மணற்கின்ற நாணற்கிழங்கின்முளை, மணற்கணின்ற நாணற்கிழங்கின்முளை.

அச. ஒருருபேனைய வுருபொடு சிவணலுந்
தொக்குநின்றொழுகலும் வழுவாகாவே.

(இ-ள்.) ஒருவேற்றுமையுருபு வேறொரு வேற்றுமையுருபோடு பொருந்தலும் தொக்குநின்று நடத்தலும குற்றமில்லையாம்.

வரலாறு. சாத்தனதனை, சாத்தனதனொடு, சாத்தனதற்கு, சாத்தனதனின், சாத்தனதுவது, சாத்தனதன்கண், நிலங்கடந்தான், தாய்மூவர், கருப்புவேலி, வரைவீழருவி, சாத்தன்கை, குன்றக்கூகை.

அரு. எதிர்மறுத்துரைப்பினும் பொருணிலைதிரியா.

(இ-ள்.) விதிமுகத்தாற்கூறா தெதிர்மறுத்துக் கூறினுந் தத்தமிலக்கணத்தான்வரும் பொருணிலைதிரியா வேற்றுமையுருபுகள்.

வரலாறு. மரத்தைக்குறையான், வேலாலெறியான், குறையான், எறியான், என்றவழிவினை நிகழாமையின், மரமும், வேலும், செயப்படு பொருளும், கருவியுமெனப்படாவாயினும் எதிர் மறைவினையும் விதிவினையோ டொக்குமென்பது நூன்முடிபாகலால்' ஆண்டுவந்தவுருபும், செயப்படு பொருண்முதலாயின வற்றுமேல் வந்தனவெனப்படுமென வழுவமையியாம்.

௮௬. ஐ, கு, ஆ னென வருஉமி றுதி
அவ்வொடுசிவணும் யாப்பின்மருங்கே.

(இ-ள்.) ஐ, கு, ஆன் எனவரு மூன்றுருபுந் தொடரிறுதிக் கணின்றவழி அகரத்தோடு பொருந்தி நிற்றலுமுடையனவாஞ் செய்யுட்கணென்க.

வாலாறு. காவலோனைக் களிறஞ்சும்மே, காவலோனக் களிறஞ்சும்மே, கடிநிலையின்றேயாசிரியர்க்கு, கடிநிலையின்றேயாசிரியர்க ; புலைதீர்கேள் விப்புலவரான், புலைதீர்கேள்விப் புலவரான எனவரும்.

௮௭. அஃறிணைமருங்கி னான் அவாகும்.

(இ-ள்.) அஃறிணைக்கண் ஆன் உருபொன்றுமே அகரத்தோடு பொருந்துமென்க.

வாலாறு. புள்ளினான், புள்ளினான எனவரும்.

௮௮. குச்சிலவுருபொடு கூடிநின்றொழுகும்.

(இ-ள்.) நான்காம்வேற்றுமை யுருபு சிலவுருபுகளோடுகூடி நடக்கும்.

௮௯. இதனதிதுவித் தன்மைத்தென்னு
மாறுவதன்பொருண் மையினுமாகும்.

(இ-ள்.) இதன திஃதித்தன்மைத் தென்னு மாறுவதன் பொருண்மையோடும் வரும்.

வாலாறு. யானையது கோடுகூரிது, யானைக்குக்கோடுகூரிது

௯௦. ஒன்றனையொன்றுகொள் ளிரண்டினும்வருமே.

(இ-ள்.) ஒன்றனையொன்று கொள்ளுமென்னு மிரண்டாவதன் பொருண்மையோடும் வரும்.

வாலாறு. இவளைக்கொள்ளுமிவ்வணி, இவட்குக்கொள்ளுமிவ்வணி.

௯௧. ஒன்றினொலொன்று தொழிற்படற்கொத்த
மூன்றுவதனொடு முடிந்துநின்றொழுகும்.

10



(இ-ள்.) ஒன்றினொலொன்று தொழிற்படற் கொக்குமென்னு மூன்றுவதன் பொருண்மையோடும் வரும்.

வாலாறு. அவராற்செய்யத் தருமக்காரியம், அவர்க்குச்செய்யத் தருமக்காரியம்.

௯௨. நிலம்வரைக்கிளவி யைந்தொடு நிலையும்.

(இ-ள்.) நிலத்தைவரைந்துகூறு மைந்தாவதன் பொருண்மையோடும் வரும்.

வாலாறு. கருவூரின்கிழக்கு, கருவூர்க்குக்கிழக்கு.

௯௩. முறைப்பெயராறினு முளைக்குமென்ப.

(இ-ள்.) முறைப்பொருண்மையைத் தருமாறுவதன் பொருண்மையோடும் வரும்.

வாலாறு. சாத்தனது மைந்தன், சாத்தனுக்கு மைந்தன்.

௯௪. பண்பினுக்கத் தைந்தொடுஞ்சிவணும்.

(இ-ள்.) பண்பினுக்கத் தைந்தாவதன் பொருண்மையோடும்வரும்.

வாலாறு. சாத்தனினெடியன், சாத்தற்குநெடியன் எனவரும்.

௯௫. காலமுணர்த்து மேழொடுநிலையும்.

(இ-ள்.) காலத்தின் கணறியப்படு மேழாம்வேற்றுமைப் பொருண்மையினும் வருமென்க.

வாலாறு. காலைக்கண்வரும். காலைக்குவரும்.

௯௬. பற்றுவிடுபெய ரைந்தொடுஞ்சிவணும்.

(இ-ள்.) பற்றுவிடுபொருண்மைப் பெயராகிய வைந்தாம்வேற்றுமைப் பொருண்மையோடும் வரும்.

வாலாறு. மனைவாழ்க்கையின் பற்றுவிட்டான், மனைவாழ்க்கைக்குப் பற்றுவிட்டான்.

௯௭. மற்றையவுருபு மவற்றோரற்றே.

(இ-ள்.) நான்கனுருபல்லாத பிறவுருபுகளுந் தொகையல்லாத தொடர்மொழிக்கணுன்றன் பொருள் சிதையாமலொன்று மயங்குதற்கட் குற்றமிலவாமென்க.

வரலாறு. நூலதுகுற்றங் கூறினனென்னுந் தொடர்மொழிக்கணூலைக் குற்றங்கூறினனெனவும், அவட்குக் குற்றேவல்செய்யுமென்னுந் தொடர்மொழிக்கண் அவ[illegible]மெனவும் வரும்.

௯௮. விளியெனப்படுப வேற்கும்பெயரொடு
விளங்கத்தோன்று மியற்கையவென்ப.

(இ-ள்.) விளியென்று கூறப்படுவன தம்மை யேற்கும்பெயரொடு விளங்கத்தோன்று மியல்புடையனவாமென்க.

அதுவே,

௯௯. விளிகொளும்பெயரும் விளிகொளாப்பெயரு
மெனவிருதிறத்தவா மென்மனார்புலவர்.

(இ-ள்.) அதுவே விளிகொளும்பெயரும், விளிகொளாப்பெயருமென விரண்டுதிறத்தனவாம்.

அவைதாம்,

௱. இ, உ, ஐ, ஓ விறுதிக்கிளவி
யுயர்திணைமருங்கின் விளியேற்கும்மே.

(இ-ள்.) மேற்கூறப்படுவனவாகிய பெயர்தாம் இ, உ, ஐ, ஓக்களையிறுதியாகிய நான்குபெயரும் உயர்திணைக்கண் விளியேற்குமெனவறிக.

அவற்றுள்,

௱௧. இ, ஈ யாகும் ஐ, ஆவாகும்.

(இ-ள்.) முற்கூறிய நான்கிற்றினுள் இ, ஈ யாயும் ஐ, ஆ வாயும் விளிக்குமென்க.

வரலாறு. நம்பி, நம்பீ, நங்கை, நங்காய்.

௱௨. உகரமோகார மேயொடுசிவணும்.

(இ-ள்.) உ, ஓ, ஏ பெற்றுவிளிக்கும்.



வரலாறு. (வேந்து, வேந்தே,)(கோ, கோவே.)

௱௩. உகரந்தானே குற்றியலுகரம்.

(இ-ள்.) முற்கூறிய வுகரமானது குற்றியலுகரமாம்.

௱௪. உயர்திணைமருங்கினே னையவுயிர்விளியா

(இ-ள்.) உயர்திணைக்கண் முற்கூறிய நான்கிறுமல்லாத வுயிர் விளியேலாவா மெனவறிக.

௱௫. அளபெடைமிகூ மிகரவிறுபெய
ரியற்கையவாகு மென்மனார்புலவர்.

(இ-ள்.) அளபெடை தன்மாத்திரையின் மிக்கும் இகரவிறுதிப் பெய ரியல்பாய்விளிக்குமென்க.

வரலாறு. தோழீ இ, இ, இ, இ.

௱௬. ஐகாரவிறுதி முறைப்பெயர்மருங்கி
னாவொடுவருதற்கு முரியவாகும்.

(இ-ள்.) ஐகாரவிறுதி முறைப்பெயர்க்கண் ஆவோடு விளியேற்று வருதற்குரியவாம்.

வரலாறு. அன்னை, அன்னா, உம்மையால், அன்னாய்.

௱௭. அண்மைப்பெயரியல் பாகவிளிக்கும்.

(இ-ள்.) சமீபப்பெயரியல்பாய் விளிக்கும்.

வரலாறு. நம்பி வாழி, வேந்து வாழி, நங்கை வாழி, கோ வாழி.

௱௮. உயர்திணைமருங்கின் னரலளவிறுதி
விளிக்குமென்மனார் மெய்யுணர்ந்தோரே.

(இ-ள்.) உயர்திணைக்கண் ன, ர, ல, ள க்களிறுதிப் பெயர்கள் விளியேற்குமென்க.

௱௯. ஏனையபுள்ளிகள் விளியேலாவே.

(இ-ள்.) அந்நான்குமல்லாத மெய்களை யிறுதியாகிய பெயர்கள் விளியேலாவாமென்க.

௱௰. அன்னெனிறுதி யாவாகும்மே.

(இ-ள்.) முற்கூறியவற்றுள் அன்னென்னும் னகரவிறுதி ஆவாகவிளிக்கும்.

வரலாறு. சோழன், சோழா.

௱௰௧. அண்மைக்கின விக்ககரமாகும்.

(இ-ள்.) அண்மைவிளிக்கண் அகரமாய்விளிக்கும்.

வரலாறு. துறைவன், துறைவ, ஊரன், ஊர.

௱௰௨. ஆனென்னிறுதி யியற்கையாகும்.

(இ-ள்.) ஆனென்னும் னகரவிறுதிப்பெயர் இயல்பாய் விளிக்கும்.

வரலாறு. மலயமான், சேரமான்.

௱௰௩. பண்புகொள்பெயரா னாயாகும்மே.

(இ-ள்.) ஆனிறுதி னகரவீற்றுப் பண்புப்பெயர் ஆயாக க்கும்.

வரலாறு. கரியான், கரியாய்.

௱௰௪. தொழிற்பெயர்க்கிளவி யவற்றோரற்றே.

(இ-ள்.) ஆனிறுதித்தொழிற்பெயர் னகரவீற்றுப் பண்புப்பெயரைப்போல ஆயாகவிளிக்கும்.

வரலாறு. வந்தான், வந்தாய்; சென்றான், சென்றாய்.

௱௰௫. அளபெடைப்பெயரோ யளபெடையியல.

(இ-ள்.) ஆனீற்றளபெடைப்பெயர் இகரவீற்றளபெடையைப்போல மூன்று மாத்திரையினீண்டு இயல்பாய்விளிக்கும்.

வரலாறு. உம்பர்கிழா அ, அ, அன்.

௱௰௬. முறைப்பெயர்க்கிளவி யேயொடுசிவணும்.

(இ-ள்.) னகரமெய்யீற்று முறைப்பெயர்ச்சொல் ஏகாரம் பெற்றுவிளிக்கும்.



வரலாறு. மகனே.

௱௰௭. யானவனிவனுவன் விளியேலாவே.

(இ-ள்.) யான், அவன், இவன், உவன் விளியேலாவாம்.

௱௰௮. யாவனுமவ்வியல் பிற்றாகும்மே.

(இ-ள்.) யாவனென்னும் வினாப்பெயரும் விளியேலாவாம்.

௱௰௯. ஆருமருவு மீரொடுசிவணும்.

(இ-ள்.) ரகரமெய்யிறுதியாகிய ஆர், அர், ஈராக விளிக்கும்.

வரலாறு. பார்ப்பார், பார்ப்பீர், கூத்தர், கூத்தீர்.

௱௨௰. தொழிற்பெயர்க்கிளவியேயொடுசிவணும்.

(இ-ள்) தொழிற்பெயர்க்கு ஈரோடு ஏகாரமும்வந்து விளிக்கும்.

வரலாறு. வந்தார், வந்தீரே.

௧. பண்புப்பெயரு மவ்வியல்பாகும்.

(இ-ள்.) பண்புப்பெயரு மேயொடுவிளிக்குமென்க.

வரலாறு. கரியார், கரியீரே, இளையீரே.

௱௨௰௨. அளபெடைப்பெயரே யளபெடையியல.

(இ-ள்.) ரகரவீற் றளபெடைப்பெயரியல்பாய் விளிக்கும்.

வரலாறு. சிறா அ அர், மகா அ அர்.

௱௨௰௩. அவரிவருவர்விளி யடையாவாகும்.

(இ-ள்.) அவர், இவர். உவர், விளியே லாவாகும்.

௱௨௰௪. யாவருநீயிரு மவற்றோரற்றே.

(இ-ள்.) யாவர், நீயிர், விளியே லாவாமென்க.

௱௨௰௫. லளக்களினீற்றய னீண்டுவிளிக்கும்.

(இ-ள்.) ல, ள க்களையீறாகிய பெயரீற்றயலெழுத்து நீண்டுவிளிக்கும்.

வரலாறு. குருசில், மக்காள்.

௱௨௬. அயனெடிதாயி னியல்பாகும்மே.

(இ-ள்.) ஈற்றயலெழுத்து நெட்டெழுத்தாயி னியல்பாய் விளிக்கும்.

வரலாறு. பெண்பால், கோமாள்.

௱௨௭. ஆளெனிறுதிப் பண்புப்பெயரும்
வினைப்பெயர்க்கிளவியு மாயொடுவிளிக்கும்.

(இ-ள்.) ஆளீற்றுப்பண்புப்பெயரும் வினைப்பெயரும் ஆயாக விளிக்கும்.

வரலாறு. கரியாள், கரியாய், நின்றாள், நின்றாய் எனவரும்.

௱௨௮. முறைப்பெயர்க்கிளவி முறைப்பெயரியல.

(இ-ள்.) ளகாரவீற்று முறைப்பெயர் னகாரவீற்றுமுறைப் பெயரைப்போல ஏகாரம்பெற்று விளிக்கும்.

வரலாறு. மகள், மகளே எனவரும்.

௱௨௯. யாவளவளிவ ளுவள்விளியாவே.

(இ-ள்.) யாவள், அவள், இவள், உவள், விளியேலாவாம்.

௱௩௰. அளபெடைப்பெயரே யளபெடையியல.

(இ-ள்.) ளக்களீறாகிய வளபெடைப்பெயர் நீண்டுவிளிக்கும்.

வரலாறு. உழாஅ அல், கோஒ ஒள்.

௱௩௧. மெய்யுயிரிறுதி விரவுப்பெயர்ச்சொ
லுயர்திணைப்பெயரொடு மொத்துநடக்கும்.

(இ-ள்.) மெய்யையு முயிரையு மீறாகிய பொதுப்பெயர்முற் கூறிய வுயர்திணைநெறியான் விளியேற்கும்.

வரலாறு. சாத்தீ, பூண்டே, தந்தாய், எ-ம்; சாத்தா, கூந்தால்,
மக்காள், எ-ம்; சாத்தி, பூண்டு, தந்தை, சாத்த,
பிறவுமன்ன.



௱௩௨. ஆவியுமொற்று மந்தமாகிய
வஃறிணைப்பெயரெலா மேயொடுசிவணும்.

(இ-ள்.) உயிரையு மெய்யையு மீறாகிய வஃறிணைப்பெய ரெல்லா மேகாரம்பெற்று விளிக்குமென்க.

வரலாறு. மரமே, நரியே, புலியே, பிறவுமன்ன.

௱௩௩. அம்மவசைச்சொ னீட்டமும்விளிக்கும்.

(இ-ள்.) அம்மவென்னு மசைச்சொனீட்டமும் விளிக்கும்.

வரலாறு. அம்மாகொற்றா.

௱௩௪. இருதிணைமருங்கினு மெல்லாச்சொற்களுஞ்
சேய்மையினளவைக் கடந்துசென்றிசைக்கும்.

(இ-ள்.) இருதிணைக்கண்ணும் விளிக்குங்காற் சேய்மையிற்றத்த மளவைக் கடந்துசென்றொலிக்கும்.

வரலாறு. நம்பீ இ இ, நங்கா அய் பிறவுமன்ன.

௱௩௫. தமர்நுமர்தமனுமன் றமணமணுமள்விளி
யேலாநமர்நம ளென்பதுமற்றே.

(இ-ள்.) தமர், நுமர், தமன், நுமன், தமள், நமள், நுமள், நமர் விளியேலாவாமெனவறிக.

பெயரியல் முற்றும். 11-11-52

# இரண்டாவது வினையியல்.

வினையெனப்படுவது வேற்றுமைகொள்ளாது
நினையுங்காலைக் காலமொடுதோன்றும்.

(இ-ள்.) வினையென்று கூறப்படுவது வேற்றுமையோடுபொருந்தாது, ஆராயுங்காலை முக்காலத்தோடும் புலப்படும். ஈண்டு வேற்றுமையென்றதுருபை.

வாலாறு. உண்டான், உண்ணாநின்றான், உண்பான், கரியன், வேற்றுமைகொள்ளாது காலமோடு தோன்றியவாறு காண்க.

௧. காலந்தாமே மூன்றெனமொழிப.

(இ-ள்.) மேற்சொற்றுவாய் செய்யப்பட்டகால மூன்றென்று கூறுவர் புலவரெனவறிக.

௨. இறப்புநிகழ்வு மெதிர்வுமென்று
சொலப்படுமூன்று காலமுங்குறிப்பு
வினையொடுபொருந்து மெய்ந்நிலையுடைய
வினைமொழிபிறக்கும் விழுமியநெறிக்கே.

(இ-ள்.) இறந்தகாலமும், நிகழ்காலமும், எதிர்காலமுமெ[illegible] கூறப்படு மூன்றுகாலமும் குறிப்புவினையோடும்பொருந்து[illegible] நிலைமையையுடைய வினைச்சொல்லானவை தோன்றுநெறி[illegible]. எனவே காலமூன்றாவன இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்[illegible]ம் வெளிப்படக்காலம் விளக்காதன குறிப்பு வினையென்[illegible]ரும் பெற்றாம்.

வாலாறு. தெரிநிலைவினை உண்டான், உண்ணாநின்றான், உண்பான்; குறிப்புவினை கரியன், காலமொடு தோன்றுங்கால், பண்டுகரியன், இப்பொழுதுகரியன், நாளைக்கரியன் எனமூன்றுகாலமும் வருதலுமறிக.

௩. குறிப்பினும்வினையினுந் தோன்றிக்காலமொடு
வரும்வினைச்சொல்லெலா முயர்திணைக்குரிமையு
மஃறிணைக்குரிமையு மாமிருதிணைக்கு
மொப்பவுரிமையு மெனமுக்கூற்றன.



(இ-ள்.) குறிப்புப்பொருண்மைக்கண்ணும், தொழிற்பொருண்மைக்கண்ணும் தோன்றிக் காலத்தோடுவரு மெல்லாவினைச்சொல்லு முயர்திணைக்குரியனவும், அஃறிணைக்குரியனவும், இரண்டுதிணைக்கு மொப்பவுரியனவு மென மூன்றுகூற்றனவாந் தோன்றுநெறிக்கண்.

வாலாறு. கரியன், செய்யன்என்புழி, தொழின்மை தெற்றென விளங்காது குறித்துக் கொள்ளப்படுதலிற் குறிப்பென்றார், உண்டான்கரியன், சென்றது செய்யது, வந்த வினையெளிமை.

௪. அம்மாமென்பன விறுதிக்கிளவியுங்
கும்டும்தும்றும்மிறுதிக்கிளவியும்
பன்மையுணர்த்துந் தன்மைப்பெயரே.

(இ-ள்.) மேன் மூவகையவெனப்பட்ட வினைச்சொற்கடாம் அம், ஆம், எம், ஏம் என்னுமீற்றவாகிய மொழியையும் கும், டும், தும், றும் என்னுமீற்றவாகிய மொழியுமாகியவெட்டும் பன்மை யுணர்த்துந் தன்மைச்சொல்லாமென்க.

வாலாறு. உண்டனம், உண்டாம், உண்டனெம், உண்டேம், உண்கும், வந்தும், சென்றும், வருதும்யாம்.

அவற்றுள்,

௫. அம்மாமென்பன முன்னிலையோடும்வரும்.

(இ-ள்.) முற்கூறியவெட்டனுள் அம், ஆம் என்கிற இரண்டும் தன்னிலையி னிற்கையன்றி முன்னிலையையு முடன்படுக்கும்.

வாலாறு. உண்டனம், உண்டாம், யாம், யானும், நீயும்

௬. எம்மேம்படர்க்கை யிடத்தையுமேற்கும்.

(இ-ள்.)எம், ஏம் என்கிற விரண்டும், தன்னிலையினிற்கையன்றிப்படர்க்கையு முடன்படுக்கும்.

வாலாறு. உண்டனெம், உண்டேம், யாம், யானும், அவனும்.

௭. கும்டும்தும்றும் மாகியநான்கும்
படர்க்கைமுன்னிலையொடும் படருமென்ப.

(இ-ள்.) கும், டும், தும், றும் ஆகிய நான்கீறும் தன்னிலையினிற்கையன்றி, முன்னிலையும் படர்க்கையு முடன்படுக்கும்.

வரலாறு. உண்கும், உண்டும், வருதும், சேறும், யாம், யானும், நீயும் அவனும்.

அ. குடுதுறுவென்னுங் குன்றியலுகர
விறுதியுமென்னே னல்லிருகிளவியுந்
தன்வினையுரைக்குந் தன்மைச்சொல்லே.

(இ-ள்.) கு, டு, து, று என்னுங் குற்றியலுகரத்தை யிறுதி யாகிய மொழியும், என், ஏன், அல் என்னு மீற்றவாகிய மொழியு மொருமையைத் தெரிவிக்குந் தன்மைக்கிளவியாம்.

வரலாறு. உண்கு, உண்டு, வருது, சேறு, உண்டனென், உண்டேன், உண்பல்.

கூ. செய்கென்கிளவி வினையொடுமுடியினும்
விளம்பியமுற்றா மென்மனார்புலவர்.

(இ-ள்.) முற்கூறிய வொருமைத்தன்மையேழனுள் செய்கென்னுஞ் சொல்வினையோடு முடியுமாயினு முற்றுச்சொல்லாதலிற் றிரியாவாம்.

வரலாறு. காண்கு வந்தேன்.

௰. அன்ஆன்அள்ஆ ளிறுதிக்கிளவி
யுயர்திணையொருமைப் படர்க்கைச்சொல்லே.

(இ-ள்.) அன், ஆன், அள், ஆள் என்னு மீற்றவாகிய நான்கு சொல்லும் உயர்திணை யொருமையுணர்த்தும் படர்க்கைச் சொல்லாம்.

வரலாறு. உண்டனன், உண்டான், உண்டனள், உண்டாள் எனவரும்.

௰௧. அர்ஆர்பகர விறுதிக்கிளவி
யத்திணைமருங்கிற் பல்லோர்படர்க்கை.

(இ-ள்.) அர், ஆர், ப என்னு மீற்றையுடையவாய் வருமூன்று சொல்லு முயர்திணைக்கட் பல்லோரையுணர்த்தும்படர்க்கைச்சொல்லாம்.

வரலாறு. உண்டனர், உண்பார், உண்ப.

௰௨. மாரைக்கிளவியு மவற்றோரற்றே.



(இ-ள்.) முன்னையனவேயன்றி மாரீற்றுமொழியும் பல்லோர் படர்க்கையை யுணர்த்தும்.

வரலாறு. கொண்மார் வந்தார்.

௰௩, ஆண்பெண்பலரொடும் யாரெனுமொழிவரும்.

(இ-ள்.) யாரென்னும் வினாப்பொருளையுணர்த்துஞ் சொல் உயர்திணைக்க ணாண்பெண் பலரொடும்வரும்.

வரலாறு. அவன்யார், அவள்யார், அவர்யார் எனவரும்.

௰௪. ஆன்ஆள்ஆர்முத லாவோவாகும்.

(இ-ள்.) பால்விளக்க வருமியல்பையுடைய ஆன், ஆள், ஆர் முதலாகார மோகாரமாமென்க.

வரலாறு. வினவிநிற்றந்தோனே, நல்லைமன்னெனக்கூட்பெயர்ந்தோளே, பாசிலை வாடாவள்ளியங் காடிறந்தோரே.

௰௫. ஆயென்கிளவியு மவற்றோரற்றே.

(இ-ள்.) முன்னிலையீற்றுள், ஆயென்னுமீறு முற்கூறப்பட்டனபோல ஆ, ஓவாகுமென்க.

வரலாறு. வந்தோய்மன்றத் தெண்கடற்சேர்ப்ப.

௰௬. உண்மையினின்மையின் வன்மையினன்மையின்
வருவனகாலங் குறிப்பாற்றோன்றும்.

(இ-ள்.) உண்மை, இன்மை, வன்மை, அன்மை, யென்னும் பொருள்பற்றி வருவனகாலங் குறிப்பானறியப்படும்.

வரலாறு. ஊன், இலன், வலன், அலன்.

௰௭. பன்மையுமொருமையும் பாலறிவந்த
குறிப்புப்பொருண்மையைக் கொடுவருவினைச்சொன்
மேல்வருமுயர்திணை மருங்கிற்கூறிய
தெரிநிலைவினையொடு சிவணுமென்ப.

(இ-ள்.) பன்மையுமொருமையுமாகிய பால்விளக்கிக் குறிப்புப் பொருண்மையை யுடையவாய்வரும் வினைச்சொன்மேல்வரு முயர்திணைக்கட்கூறிய தெரிநிலை வினையோடொக்கும்.

வரலாறு. கரியன், கரியான், கரியள், கரியாள், கரியர், கரியார், கரியம், கரியாம், கரியெம், கரியேம், கரியென், கரியேன்.

௰௮. அ ஆ வகர விறுதிக்கிளவி
யஃறிணைப்பன்மைப் படர்க்கைச்சொல்லே.

(இ-ள்.) அகர, ஆகார, வகர மெய்யீறாகிய மொழிகளஃறிணைப் பன்மைப் படர்க்கைச்சொல்லாம்.

வரலாறு. உண்டன, உண்ணா, வருவ.

௰௯. துடுறுக்குற்றிய லுகரவீற்ற
வஃறிணையொன்றன் படர்க்கைச்சொல்லே.

(இ-ள்.) து, டு, றுக் குற்றியலுகரத்தை யீறாகியமொழி யஃறிணையொன்றன்பாற் படர்க்கைச்சொல்லாம்.

வரலாறு. உண்டது, குறுந்தாட்டு, கூயிற்று எனவரும்.

௨௰. எவனென்வினாவே யிருபாற்குமுரிய

(இ-ள்.) எவனென்னும் வினாச்சொன் மேற்கூறிய அஃறிணை யிருபாற்கு முரியவாமென்க.

வரலாறு. அஃதெவன், அவையெவன்.

௨௧. இன்றிலவுடைய வன்றுடைத்தல்ல
வென்பவும்பிறவும் வினைக்குறிப்பாகும்,

(இ-ள்.) இன்று, இல, உடைய, அன்று, உடைத்து, அல்ல என்பவும் இவைபோல்வன பிறவுங் குறிப்புவினைச்சொல்லாமென்க.

வரலாறு. கோடின்று, செவியில, தோடுடைய, அதுவன்று, கோடுடைத்து அவையல்ல.

௨௨. வியங்கோண்முன்னிலை வினையெஞ்சுகிளவி
செய்ம்மனவேறு செய்தசெய்யு
மொருகாலுயர்திணை யுணர்த்தியொருகா
லஃறிணையுணர்த்தியு மாயிருதிணைக்கு
மொத்தவுரிமைய வாகுமென்ப.



(இ-ள்.) வியங்கோள், முன்னிலை, வினையெச்சம், செய்ம்மன, செய்த, செய்யும், வேறு ஆகிய வேழுசொல்லும், ஒருகாலுயர்திணையுணர்த்தியும், ஒருகாலஃறிணையுணர்த்தியும், இருதிணைக்கு மொத்தவுரிமையவாம். வியங்கோள் ஏவற்பொருட்டாய் வருவது; முன்னிலை, எதிர்நின்றான் றொழிலுணர்த்துவது; வினையெச்சம், வினையையொழிபாகவுடையவினை; செய்ம்மன, மனவீற்றுமுற்று யெதிர்காலமுணர்த்துவது; வேறு, தன்னை யுணர்த்திநின்றது; செய்த அகரவீற்றெச்சமா யிறந்தகாலமுணர்த்தியது.

௨௩. ஐயாயிறுதி முன்னிலைக்கிளவி
யொருவனொருத்தி யொன்றற்குமுரிய.

(இ-ள்) முற்கூறியவற்றுள் ஐயும், ஆயும், இறுதியாகிய முன்னிலை வினைச்சொல், ஒருவற்கும், ஒருத்திக்கும், ஒன்றற்குமுரியவாம்.

வரலாறு. உண்டனை, உண்டாய்.

௨௪. இகரவிறுதியு மவற்றோரற்றே.

(இ-ள்.) இகரவீற்று முன்னிலைப்பெயரும், ஒருவற்கும், ஒருத்திக்கும், ஒன்றற்குமுரியவாம்.

வரலாறு. உரைத்தி.

௨௫. இர் ஈர் மின்னீ றும்பெயர்க்கிளவி
பல்லோர்மருங்கினும் பலவொடுஞ்சிவணும்.

(இ-ள்.) இர், ஈர், மின், ஈறாகியமொழி பல்லோர்கண்ணும் பலவற்றின் கண்ணும் பொருந்தும்.

வரலாறு. உண்டனிர், உண்டீர், உண்மின்.

௨௬. முன்னிலையொழியமற் றேனையவெல்லா
மைம்பான்மூவிடத் தொடுநிலைபெறுமே.

(இ-ள்.) முன்னிலை வினையொழிய மற்றையவாறும் மூன்றிடம் ஐம்பாற்கு முரியவாம்.

வரலாறு. அவன்செல்க, அவள்செல்க, அவர்செல்க, அது செல்க, அவைசெல்க, நான்செல்க, நீசெல்க, அவன் செல்க.

அவற்றுள்,

உ௭. தன்மைமுன்னிலையொடு சாராவியங்கோள்.

(இ-ள்.) வியங்கோள் தன்மையினும், முன்னிலையினும், நிலை பெறாவாமென வறிக.

உ௮. பல்லோர்படர்க்கை முன்னிலைதன்மையிற்
செல்லாதாகுஞ் செய்யுமென்முற்றே.

(இ-ள்.) பல்லோர்படர்க்கையினும், முன்னிலையினும், தன்மையினும், செய்யுமென் முற்று நிலைபெறாவாமென்க.

வாலாறு. அவன் செய்யும், அவள் செய்யும், அது செய்யும், அவை செய்யும்.

உ௯. செய்துசெய்யூ செய்புசெய்தெனச்
செய்யியர்செய்யிய செயின்செயச்செயற்கென
வவ்வகையொன்பதும் வினையெஞ்சுகிளவி.

(இ-ள்.) செய்து, செய்யூ, செய்பு, செய்தென, செய்யியர், செய்யிய, செயின், செய, செயற்கு ஒன்பதும் வினையெச்சச் சொல்லாம்.

வாலாறு. செய்துவந்தான், உண்ணூவந்தான், நகுபுவந்தான் சோலைபுக்கென வெப்ப நீங்கிற்று, உண்ணியர் வருவார், உண்ணிய வந்தான், மழைபெய்யிற் குளநிறையும், உண்ணவந்தான், உணற்கு வந்தான் எனவரும்.

௩௰. பின்முன்கால்கடை யொடுவான்பானிட
மன்னகிளவியு மவற்றியல்பினவே.

(இ-ள்.) பின், முன், கால், கடை, வான், பான், ஈற்றவாய் வருவனவும் வினையெச்சமாமென்க.

வாலாறு. கூதிர்போய்ப் பின்வந்தார், வருமுன் போயினர், காண்டுங்கால் வருவார், வருங்கடை செல்வார், வருவான் போவான், உண்பான் வந்தான் எனவரும்.

௩௧. செய்துசெய்யூ செய்புவினைமுதன்
முடிபினவாகு மொழியுங்காலே.

இ-ள்.) மேற்கூறியவற்றுள் செய்து, செய்யூ, செய்பு, தம்வினை முதல்வினையான்முடியும்,



வாலாறு. உண்டு வந்தான், உண்ணூவந்தான், உண்குபு வந்தான்.

௩௨. அம்மூப்பெயருஞ் சினைவினைநின்று
சினைவினையொடுமுடி யாதுமுதலொடு
முடியினும்வினையா ஞெருதன்மையவே.

(இ-ள்.) வினைமுதன் முடிபினவா யம்மூன்றுமொழியுஞ் சினைவினை நின்று சினைவினையோடு முடியாது முதல்வினையோடு முடியினும் வினையாஞெருதன்மையவாம்.

வாலாறு. கையிற்று வீழ்ந்தான், கையிறாவீழ்ந்தான், கையிறுபு வீழ்ந்தான்.

௩௩. செய்தெனச்செய்யியர் செய்யியசெயிற்செய
செயற்குப்பிறவினை முதலொடுஞ்சிவணும்

(இ-ள்.) செய்தென, செய்யியர், செய்யிய, செயின், செய, செயற்கு, இவை பிறவினையோடு முதல்வினையோடும் பொருந்தும்.

வாலாறு. மழைபெய்தெனப் புகழ்பெற்றது, மழைபெய்தென மரங்குழைத்தது; மழைபெய்யியர் பயிரெழுந்தது, மழைபெய்யியர் பலிகொடுத்தார்; மழைபெய்யிய முழங்கும், மழைபெய்யிய வான்பழிச்சுதும்; மழை பெய்யிற் குளநிறையும், மழைபெய்யின் வளமோங்கும்; மழைபெய்யப் புகழ்பெற்றது, மழைபெய்ய மரங்குழைத்தது; மழைபெயற்கு முழங்கும், மழை பெற்குக் கடவுள் வாழ்த்துதும்.

௩௪. செய்தசெய்கின்ற செய்யுமென்பாட்டிற்
காலமுஞ்செயலுந் தோன்றிப்பாலொடு
செய்வதாதி யறுபொருட்பெயரு
மெஞ்சநிற்பது பெயரெச்சம்மே.

(இ-ள்.) செய்த, செய்கின்ற, செய்யும் என்னு மூவகை மொழிகளிலே மூக்காலமும் தொழிலும் தோன்றிச்செய்பவன் முதலிய வைகளொழிய நிற்பன பெயரெச்சவினைக் குறிப்புகளாம்.

வாலாறு. உண்டசாத்தன், உண்கின்றசாத்தன், உண்ணுஞ் சாத்தன்.

௩௫. காலம்பொருணிலங் கருவிவினைமுதல்
வினையோராறுவகைப் பொருட்குமுரிய.

(இ-ள்.) அப்பெயரெச்சம் காலமும், பொருளும், நிலமும், கருவியும், வினைமுதலும், வினையும் ஆகிய வாறுபொருட்கு மொத்த வுரிமையவாம்.

வாலாறு. துயிலுங்காலம், காலம்; ஓதும்பார்ப்பான், பொருள்; பிறவுமன்ன.

௩௬. தத்தங்குறைவா மிருவகைப்பெயருட
னியையுங்குறிப்புடை யெச்சொலாயினு
மிடைநிலைவரையா ரென்மனார்புலவர்.

(இ-ள்.) தத்தமெச்சமாகிய பெயரொடும் வினையொடு மியையுங் குறிப்பையுடைய வெச்சொலாயினுந் தமக்கு நடுநிற்றலை நீக்காதுகொள்வார் புலவர்.

வாலாறு. உழுதுவந்தான், கொன்றகாட்டுள் யானை.

௩௭. பெயரும்வினையு மெதிர்மறுத்துரைப்பினும்
பொருணிலைதிரியா தெச்சக்கிளவி.

(இ-ள்.) பெயரெச்சமும் வினையெச்சமும் எதிர்மறுத்துக் கூறினும், அவ்வெச்சப்பொருண்மையிற் றிரியாவாம்.

வாலாறு. உண்ணாவில்லம்; உண்ணாச்சோறு, உண்ணாக்காலம் வளையாக்கோல், ஓதாப்பார்ப்பான், உண்ணாவூண் எ-ம் உண்ணாதுவந்தான், உண்ணா என்பது உண்ணும் எனவரும்.

௩௮. செய்யுமென்னெச்சவீற் றுயிர்மெய்சேறலுஞ்
செய்யுளுளும்முந் தாகலுமுற்றே
லுயிருமுயிர்மெய்யு மேகலுமுளவே.

(இ-ள்.) செய்யுமென்னும் பெயரெச்சத்திறுதி யுயிர்மெய் கெடுதலும், பாவினுள், உம் உந்தாகலும், அதுமுற்றாயின், உயிராயினும் உயிர்மெய்யாயினும் கெடுதலுமுளவாம்.

வாலாறு. வாவும்புரவி, வாம்புரவி, கூப்பெயர்க்கு நீர்க்கோழி, கூப்பெயர்க்குந்துகலுழும், கலுழும் மொழியுமே, மொழிமே.

௩௯. செய்தெனுமெச்சத் திறந்தகால
மெய்தவும்பெறாஉ மெதிர்பொழுதென்ப.



(இ-ள்.) செய்தென்னும் வினையெச்சத்தி னிறந்தகால மெதிர் காலத்தைப்பொருந்தும்.

வாலாறு. நீயுண்டுவருவாய், உழுதுவருவாய்.

௪0. முக்காலத்தினு மொத்தியல்பொருளைச்
செப்புவர்நிகழுங் காலத்தானே.

(இ-ள்.) மூன்றுகாலத்துமுளதா மியல்பையுடைய வெல்லாப் பொருண்மையு நிகழுங்காலத்துப் பொருண்மையையுடைய செய்யுமென்னுஞ்சொல்லாற் கூறப்படும்.

வாலாறு. மலைநிற்கும், ஞாயிறியங்கும், திங்களியங்கும்.

௪௧. நிகழ்வினு மெதிர்வினும் வரும்வினைக்கிளவி
யிறப்பினுமுரைப்பர் விரைவிற்பொருள.

(இ-ள்.) நிகழ்காலத்தும் எதிர்காலத்தும் வரும் வினைச்சொற் பொருண்மையை யிறந்தகாலத்தினுங் கூறுவர், விரைவிற் பொருண்மையின் கண்.

வாலாறு. உண்டிலை, உண்டே னுண்டேன், எதிர்விறப்பாயிற்று, அவனெடுபகைக்கிற் செத்தாய், எதிர்விறப்பாயிற்று.

௪௨. குறித்துப்போதரும் வினைமுதலில்லாக்
காலைவினைமுத னிகழ்வினிற்செல்லும்.

(இ-ள்.) குறித்துவரும் வினைசொலில்லாதவிடத்து நிகழ்காலத்திற்செல்லும்.

வாலாறு. அவன் சுவர்க்கம்புகும், நிரயம்புகும்.

௪௩. இதுசெயல்வேண்டு மென்னுங்கிளவி
யிருவயினிலையும் பொருட்டாகும்மே.

(இ-ள்.) இது செயல்வேண்டுமென்பது படவருமொழிதன் பாலானும், பிறன்பாலானு மெனவிரிடத்து நிலைபெறும் பொருண்மையை யுடையனவாம்.

வாலாறு. ஓ ஓதல்வேண்டும், ஓதற்கு வினைமுதலாயினாற்கும், அவனோதலைவிரும்புந் தந்தைக்கு மேற்றவாறு காண்க.

௪௪. வன்மைப்பொருள்வயின் வரும்வினைவினையை
யெதிர்மறுத்துரைப்பினு மிழுக்காவாகும்.

இ-ள். கடினப்பொருட்கண்வரும் வினாவையுடைய வினைச் சொல்லை யெதிர் மறுத்துரைப்பினுங் குற்றமிலவாம்.

வரலாறு. வைதாய், வைதேனோவென வினாவொடுவந்த வினைச் சொல், வைதிலேனென்னு மெதிர்மறைப்பொருள் பட வந்தமைகாண்க.

௪௫. எதிர்விற்குரிய வினைச்சொற்கிளவி
தெளிவுமியற்கையுஞ் செப்புங்காலை
யிறப்பினுநிகழ்வினு மியம்பப்படுமே.

(இ-ள்.) எதிர்காலத்துக்குரிய வினைச்சொல்லைத் தெளிவுமியற்கையுங் கூறுங்கா லிறந்தகாலச் சொல்லானு நிகழ்காலச் சொல்லானுங்கூறுப.

வரலாறு. இக்காட்டிற் போகிற்கூறை கோட்பட்டான், கூறை கோட்படும் இயற்கை, எறும்பு முட்டைகொண்டு திட்டையேறின், மழைபெய்தனாலாற் றெளிந்தான், அவை முட்டைகொண்டேறியவழி மழை பெய்யா முன்னு மழைபெய்தது, மழைபெய்யும்.

௪௬. செயப்படுபொருளைச் செய்ததுபோலத்
தொழிற்படக்கிளத்த றொல்லியன்மாபே.

(இ-ள்.) செயப்படுபொருளைச் செய்த வினைமுதலைப்போலத் தொழிற்படக்கூறல் வழக்கின் கணியலும்.

வரலாறு. திண்ணைமெழுகிற்று.

௪௭. இறப்புமெதிர்வு மயங்கியுமியலும்.

(இ-ள்.) இறந்தகாலமும் எதிர்காலமு மயங்கு மொழிப்பொருளவாம்.

வரலாறு. இவர் பண்டிப்பொழிற்கண் விளையாடுவார், நாளை யவன் வாளோடு வெகுண்டுவந்தான், பின்னீ யென் செய்குவை எனவரும்.

௪௮. நிகழ்வுமவற்றொடு நிலவுதல்வரையார்.

(இ-ள்.) நிகழ்காலமு மவற்றொடு மயங்கும்.

வரலாறு. இவன் பண்டிப்பொழிற்கண் விளையாடும், நாளை வரும்.

வினையியன் முற்றும்.
இயலிரண்டுக்குச் சூத்திரம், ௧௮௩.



## மூன்றாவது ஒழிபியல்.

பெயர்வினையிடத்துப் பிறப்பதிடைச்சொல்.

(இ-ள்.) பெயரிடத்தும் வினையிடத்துந் தோன்றுவ திடைச் சொல்லாமென்க.

௧. வேற்றுமைவினை சாரியையொப்புருபுக
ளிசைநிறையசைநிலையிரு மூன்றுதிறத்தன.

(இ-ள்.) ஐ முதலியவாறுருபுகளும், அன் முதலியசாரியையுருபுகளும், போலமுதலிய வுவமையுருபுகளும், செய்யுளிசைநிறைத்து வருவனவும், அசைத்தலே பொருளாக நிற்பனவும், அன், ஆன் முதலிய வினையுருபுகளும், ஆகிய வாறுதிறத்தனவா மச்சொலெனவறிக.

வரலாறு. நம்பியை பெயரின் புறத்துறுப்பாய் ஐயுருபும், முடியினன் அகத்துறுப்பாய் விகுதியும் இடைநிலையும், உண்ணான் வினையினகத்துறுப்பாய் விகுதியுருபும் வந்தன

௨. ஆக்கமொழியிசை கழிவையுந்தருமன்.

(இ-ள்.) மன்னென்னுமிடைச்சொல், ஆக்கங்குறித்து நிற்பதும், ஒழியிசைப் பொருண்மையைக்குறித்து நிற்பதும், கழிவைக்குறித்துநிற்பதும், ஆகிய மூன்றையுந் தருமெனவறிக.

வரலாறு. பண்டு காடுமன், ஆக்கம்; கூரியதோர் வாண்மன், ஒழியிசை; சிறியகட்பெறினே யெமக்கீயுமன்னே கழிவு.

௩. விழைவேகால மொழியிசைதில்லே.

(இ-ள்.) தில்லென்னுமிடைச்சொல், விழைவைக் குறித்துநிற்பதும், காலத்தைக்குறித்து நிற்பதும், ஒழியிசையைக்குறித்து நிற்பதும் ஆகிய மூன்றையுந் தரும்.

வரலாறு. அரிவையைப்பெறுக தில்லம்மயானே, விழைவு; பெற்றாங்கறிக தில்லம்ம, காலம்; வருக தில்லம்ம, ஒழியிசை.

௪. அச்சம்பயமிலி காலம்பெருமையென்
றப்பாலான் கே கொன்னைக்கிளவி.

(இ-ள்.) கொன்னென்னுமிடைச்சொல், அச்சப்பொருளதும், பயமின்மைப் பொருளதும், காலப்பொருளதும், பெருமைப்பொருளதுமாகிய, நான்கையும்தரும்.

வரலாறு. கொன்முனை யிவ்வூர்போல, அச்சம்; கொன்னே கழிந்தன்று, பயமின்மை; கொன்வரல் வாடை, காலம்; கொன்னூர் துஞ்சினும், பெருமை.

௫. எதிர்மறையெச்சமுற் றெண்ணேதெரிநிலை
ஐயஞ்சிறப்பாக் கமுமளிக்குமும்மை.

(இ-ள்.) உம்மென்னு மிடைச்சொல், எதிர்மறையும் எச்சமும் முற்றும், எண்ணும், தெரிநிலையும், ஐயமும், சிறப்பும், ஆக்கமும் ஆகியவெட்டுப்பொருளையுந் தரும்.

வரலாறு. சாத்தன்வருதற்கு முரியன் - எதிர்மறை; சாத்தனும் வந்தான் - எச்சம்; தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார் - முற்று; நிலனு நீருந்தீயும் - எண்; திருமகளுமல்லள் - தெரிநிலை; இனிவந்துஞ் சொல்லும் - ஐயம்; குறவருமருளுங் குன்று. சிறப்பு; ஆக்கம், வந்துழிக்காண்க.

௬. தெரிநிலையெதிர்மறை சிறப்புப்பிரிநிலை
யொழியிசைவினாவா மோகாரம்மே.

(இ-ள்.) தெரிநிலையும், எதிர்மறையும், சிறப்பும், பிரிநிலையும், ஒழியிசையும், வினாவுமாகிய ஆறுபொருளையும் ஓவென்னும் இடைச்சொல்தரும்.

வரலாறு. திருமகளோவல்லள் - தெரிநிலை; சாத்தனுண்டானோ. எதிர்மறை; ஓ ஓ பெரியன் - சிறப்பு; யானோ தேறேனவர் பொய் - பிரிநிலை; கொளலோ கொண்டான்- ஒழியிசை; சாத்தனுண்டானோ - வினா.

௭. எண்ணேபிரிநிலை யீற்றசைதேற்றம்
வினாவோரைந்தும் விளக்குமேகாரம்.

(இ-ள்.) ஏ யென்னுமிடைச்சொல்லும், எண்ணும், பிரிநிலையும், ஈற்றசையும், தேற்றமும், வினாவுமா கிய ஐந்துபொருளையுந் தருமென்க.

வரலாறு. நிலனே நீரே தீயே, எண்; அவருளிவனே கள்வன், பிரிநிலை; காடிறந்தோரே, ஈற்றசை; உண்டேமறுமை, தேற்றம்; நீயே கொண்டாய், வினா எனவரும்.



௮. எண்ணேகுறிப்பே யிசையேபண்பே
வினையேபெயரே யெனவோராறினு
மெனவெனுமொழிவரு மென்றுமற்றே.

(இ-ள்.) எனவென்னுமிடைச்சொல்லும், என்றென்னுமிடைச்சொல்லும், எண்ணும், குறிப்பும், இசையும், பண்பும், வினையும், பெயருமாகிய ஆறுபொருளையுந்தரும்

வரலாறு. நிலனென நீரெனத்தீயென, எண்; துண்ணெனத் துடித்தது, குறிப்பு; ஒல்லென வொலித்தது, இசை; வெள்ளென வெளுத்தது, பண்பு; மழைவான் கொள்கென, வினை; அழுக்காறெனவொருபாவி, பெயர்; என்றும் இவ்வாறே யொட்டிக்காண்க.

௯. மற்றையதென்பது சுட்டியதற்கினம்.

(இ-ள்.) மற்றையதெனப்பெயர்க்கு முதனிலையாய் வரும் மற்றையென்னும் ஐகார வீற்றிடைச்சொல், சுட்டப்பட்டதனை யொழித்து, அதனினங் குறித்து நிற்கும்.

வரலாறு. ஆண்டுகொணர்ந்தவழி யவ்வாடை வேண்டாதான் மற்றையது கொணாவெனினும் அஃது அச்சுட்டிய வாடை யொழித்ததற் கினமாகிய பிறவாடை குறித்தது.

௰. மற்றென்கிளவி வினைமாற்றசைநிலை.

(இ-ள்.) மற்றென்னுமிடைச்சொல், வினைமாற்றும், அசைநிலையுமாகிய விரண்டுபொருளையுந் தரும்.

வரலாறு. மற்றறிவா நல்வினை, வினைமாற்று; அதுமற்றவலம், அசைநிலை.

௰௧. எற்றென்கிளவி யிறந்தபொருட்டே.

(இ-ள்.) எற்றென்னு மிடைச்சொல் இறந்தபொருளைத்தரும்

வரலாறு. எற்றெனுடம்பி னெழில் எனவரும்.

௰௨. மன்றக்கிளவி தெளிவைவிளக்கும்.

(இ-ள்.) மன்றவென்னு மிடைச்சொல் தெளிவுப்பொருண்மையைத்தரும்.

வாலாறு. கடவுளாயினுமாக மடவை மன்றவாழிய முருகே எனவரும்.

௰௩. தஞ்சக்கிளவி யெண்மைப்பொருட்டே.

(இ-ள்.) தஞ்சமென்னுஞ்சொல் எளிமைப் பொருளைத்தரும்.

வாலாறு. முரசு[illegible] தஞ்சம்.

௰௪. அந்திலாங்கசைநிலை யிடப்பொருளவ்வே.

(இ-ள்.) அந்திலென்னுமிடைச்சொல்லும், ஆங்கென்பதும், அசைநிலைப்பொருளையும் இடப்பொருளையும், தருவனவாம்.

வாலாறு. அந்திற் கழலினன், அசைநிலை; சேயிழையந்திற் கொழுநற்காணிய, இடம்.

௰௫. கொல்லேயைய மெல்லேவிளக்கம்.

(இ-ள்.) கொல்லென்னுமிடைச்சொல் ஐயப்பொருளையும், எல்லென்னுமிடைச்சொல்விளக்கப் பொருளையுந்தரும்.

வாலாறு. குற்றிகொல், ஐயம்; எல்வளைத்தோளி, விளக்கம்.

௰௬. இயற்பெயர்முன்ன ராரைக்கிளவி
பலர்க்குறியெழுத்தின் வினையொடுமுடியும்.

(இ-ள்.) இயற்பெயர் முன்வரும் ஆரென்னு மிடைச்சொல் பலரறிசொல்லான் முடியும்.

வாலாறு. பெருஞ்சேந்தனார் வந்தார்.

௰௭. அசைநிலைப்பொருண்மையாகும் வழியறிதல்.

(இ-ள்.) ஆரையென்னுஞ்சொல், அசைநிலையாய் நிற்குமறிக.

வாலாறு. எல்லாவுயிரொடு சொல்லுமார் முதலே.

௰௮. ஏவுங்குரையு மிசைநிறையசைநிலை.

(இ-ள்.) ஏ யென்னு மிடைச்சொல்லும், குரை யென்னு மிடைச்சொல்லும், இசை நிறையும் அசை நிலையுந் தரும்.



வாலாறு. ஏ ஏ யிஃதொத்தல், இசை நிறை; ஏ ஏ யெனக் கூறுக. அசை நிலை; பேரலருங் குரைத்தே, இசை நிறை; பல்குரைத் துன்பங்கள், அசைநிலை.

௰௯. மாவென்கிளவி வியங்கோளசைச்சொல்.

(இ-ள்.) மாவென்னு மிடைச்சொல் வியங்கோ ளசை நிலையாம்.

வாலாறு. உண்கமா கொற்கையோனே.

உ௰. இகுமியாயிகமதி மோசின் முன்னிலை
யசைச்சொல்லென்மனா ரறிந்திசினோரே.

(இ-ள்.) இகு, மியா, இக, மதி, மோ, சில் ஆகிய வாறிடைச் சொல்லும், முன்னிலை யசைச்சொல்லாம்.

வாலாறு. புலம்பளைக் கண்டிகும், கேண்மியா, கண்பனி யான்றிக, கேண்மதி, கண்டது மொழிமோ, காப்பும் பூண்டிசில்.

உக. ஆங்கவுரையசை யம்மகேட்பிக்கும்.

(இ-ள்.) ஆங்கவென்னு மிடைச்சொல் உரையசையும், அம்ம வென்னுமிடைச்சொற் கேட்பிக்குந் தரும்.

வாலாறு. ஆங்கக் குயிலும், அம்மவாழி தோழி.

உஉ. இகுஞ்சினுமேனை யிடத்தொடுஞ்சிவணும்.

(இ-ள்.) இகும், சினும், படர்க்கைத்தன்மைச் சொல்லோடும் பொருந்தும்.

வாலாறு. புகழ்ந்திகுமல்லரோபெரிதே, யாரஃதறிந்திசினோரே.

உ௩. ஒப்பில்போலியு முரையசையாகும்.

(இ-ள்.) ஒப்புமையுணர்த்தாத போலியுமுரையசையாம்.

வாலாறு. மங்கலமென்பதோ ரூருண்டுபோலும்.

உ௪. யாகாபிறபிறக் கரோபோமாதெ
வருமொருவேழு மசைநிலைமொழியே.

(இ-ள்.) யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது எழுமசை நிலை மொழியாம்.

வாலாறு. யாபன்னிருவர், இவட்குக்காண்டிகா, தான் பிற வரிசை, அது பிறக்கு குயிலாலுமரோ, வாழாதென் போதெய்ய, விளிந்தன்று மாதவற்றெளிந்த வென் னெஞ்சே எனவரும்.

உரு. ஆகலாகல் பிரிவிலசைநிலை.

(இ-ள்.) ஆகல், ஆகல் இரண்டிசைச்சொல்லும் பிரிவிலசை நிலையாமென்க.

வாலாறு. ஆகலாகல்-எனவரும்.

உசு. உரிச்சொற்கிளவியை விரிக்குங்காலை, யிசையினுங் குறிப்பினும் பண்பினுந்தோன்றிப், பெயரினும்வி னையினு மெய்தடுமாறி, யொருசொற்பலபொருட் குரிமைதோன்றினும், பல சொல்லொருபொருட் குரிமைதோன்றினும், பயிலாதவற்றைப் பயின் றவைசாத்தித், தத்தமருங்கிற் சென்றுநிலைமருங்கி, னெச்சொலாயினும் பொருள்வேறுகிளத்தல்.

(இ-ள்.) உரிச்சொல்லை விரிக்குங்கால், இசை, குறிப்பு, பண் பென்னும் பொருண்மேற்றோன்றி, பெயரினும் வினையினும் தம் முருபு தடுமாறி, ஒருசொற் பலபொருட்குரித்தாய்வரினும், பல சொல் லொருபொருட் குரித்தாய்வரினும், பயிலப்படாதசொல்லைப் பயின்றவற்றொடுசார்த்திப் பெயரும் வினையுமாகிய தத்தமக் குரிய நிலைக்களத்தின்கண் யாதாயினு மொருசொல்லாயினும், வேறுபொ ருளுணர்த்தப்படுமென்க.

உஎ. உறுதவநனிமிகு திப்பொருளுணர்த்தும்.

(இ-ள்.) உறுவென்பதும், தவவென்பதும், நனியென்பது மிகுதிப்பொருளைத்தரும்.

வாலாறு. உறுபுனறந்து, ஈயாதுவாழு முயிர்தவப்பலவேர் வந்து, நனிவருந்தினைவாழி.

உஅ. புரையுயர்பாமுரு வுட்காகும்மே.

(இ-ள்.) புரை, உயர்பாகும், உருவு, உட்காகுமென்க.



வாலாறு. புரையமன்ற புரையோர்கேண்மை.

உகூ. செல்லலுமின்னலு மின்னாமையே.

(இ-ள்.) செல்லலும், இன்னலும், இன்னாமையென்னுங்குறிப் பையுணர்த்தும்.

வாலாறு. மணங்கமழ்வியன்மார் பணங்கியசெல்லல், வெ யில்புறந்தரூஉ மின்னலியக்கற்று.

௩௰. மல்லல்வளனே யேபெற்றாகும்.

(இ-ள்.) மல்லலென்பது வளமும், ஏயென்பது பெற்றும் ஆகிய குறிப்பைத் தெரிவிக்கும்.

வாலாறு. மல்லன்மால்வரை, ஏகலடுக்கல்.

௩க. உகப்பேயுயர்த லுவப்பேயுவகை.

(இ-ள்.) உகப்பென்பது-உயர்தலும், உவப்பென்பது-உவகையும் தரும்.

வாலாறு. விசும்புகந்தாடாது, உவந்துவந்து எனவரும்.

௩உ. பசப்பேநிறம்பயப் பேபயனாகும்.

(இ-ள்.) பசப்பென்பது-நிறம் வேறுபாடும், பயப்பென்பது-பய னுந்தரும்.

வாலாறு. பசப்பூரும்மே, பயவாக்களரனையர் கல்லாதவர்.

௩௩. இசைப்பிசையியையே புணர்ச்சியாகும்மே.

(இ-ள்.) இசைப்பென்பது-இசைவும், இயையென்பது-புணர்ச் சியும் தரும்.

வாலாறு. யாழிசை யூர்ப்புக்கும், இயைந்தொழுகும்.

௩ச. அலமாறெருமா லாகுஞ்சுழற்சி.

(இ-ள்.) அலமரலென்பதும், தெருமாலென்பதும் சுழர்சி யாகிய குறிப்பைத்தெரிவிக்கும்.

வாலாறு. அலமரலாயம், தெருமரலுள்ளம்.

௩ரு. மழவுங்குழவு மிளமைப்பொருள.

(இ-ள்.) மழவென்பதும், குழவென்பதும், இளமைக் குறிப்பை யுணர்த்தும்.

வரலாறு. மழகளிறு, குழக்கன்று.

௩௬. சீர்த்திமிகும்புகழ் மாலையியல்பே.

(இ-ள்.) சீர்த்தியென்பது, மிகுந்தபுகழையும், மாலையியல்பை யுந்தரும்.

வரலாறு. வயக்கஞ்சால்சீர்த்தி, இரவின்வரன்மாலையனே.

௩௭. கூர்ப்புங்கழிவு முள்ளதுசிறக்கும்.

(இ-ள்.) கூர்ப்பென்பதும், கழிவென்பதும், ஒன்றனது சிறத்தலாகிய குறிப்பையுணர்த்தும்.

வரலாறு. துனிவரெய்வமொடு கழிகண்ணோட்டம்.

௩௮. அதிர்வும்விதிர்ப்பு நடுக்கப்பொருள.

(இ-ள்.) அதிர்வென்பதும், விதிர்ப்பென்பதும், நடுக்கமாகிய குறிப்பைத்தெரிவிக்கும்.

வரலாறு. அதிரவருவதோர்நோய், விதிர்ப்புறவறியாவேம் எனவரும்.

௩௯. தீர்தறீர்த்தல் விடற்பெயர்க்கிளவி.

(இ-ள்.) தீர்தலென்பதும், தீர்த்தலென்பதும் ஆகிய விரண்டும், விடுதலாகிய குறிப்பைத்தெரிவிக்குமென வறிக.

வரலாறு. துணையிற்றீர்ந்தகடுங்கண்யானை.

௪௰. தடவொடுகயநளி பெருமைப்பொருள.

(இ-ள்.) தடவும், கயவும், நளியும், பெருமையென்னும் பண்பைத்தெரிவிக்கும்.

வரலாறு. வலிதுஞ்சுதடக்கை, கயவாய்ப்பெருங்கண்யானை, நளிமலைநாடன்.

௪௧. பிணையும்பேணும் பெட்பாகும்மே.



(இ-ள்.) பிணையும்பேணும் பெட்பின்பொருளாகிய வுறந்தருதலென்னுங் குறிப்பைத் தெரிவிக்கும்.

வரலாறு. அரும்பிணையகற்றி, அமராப்பேணும்பகுதி.

௪௨. தாவேவலியும் வருத்தமுந்தரும்.

(இ-ள்.) தாவென்பது-வலியும், வருத்தமுமாகிய குறிப்பை யுணர்த்தும்.

வரலாறு. தாவினன்பொன்றை இயபாவை, கருங்கட்டாக் கலை.

௪௩. கம்பலைசும்மை கலியேயழுங்க
லென்றிவைநான்கு மரவப்பொருள.

(இ-ள்.) கம்பலை, சும்மை, கலி, அழுங்கல் நான்குமரவமாகிய விசைப்பொருண்மையை யுணர்த்தும.

வரலாறு. கம்பலைமூதூர், ஒலிபெருஞ்சும்மையொடு, கலிகொளாயம், அழுங்கலூரோ-எனவரும்.

௪௪. கறுப்புஞ்சிவப்பும் வெகுளிப்பொருள.

(இ-ள்.) கறுப்பும், சிவப்பும், வெகுளியாகிய குறிப்பையுணர்த்தும்.

வரலாறு. நீ கறுப்பதோ ரங்கடிமுனையா, நீ சிவந்திறுத்த நீரழியாக்கம்.

௪௫. பாவும்பழிச்சும் வழுத்தன்மேன.

(இ-ள்.) பரவும், பழிச்சும், வழுத்தலாகிய குறிப்பையுணர்த்தும்.

வரலாறு. செல்லுக்குத்துப்பாவுங்கடவுளுமில், கைதொழும் பழிச்சி.

௪௬. கடியென்கிளவி காப்பேகூர்மை
விரைவேவிளக்க மிகுதிப்பொருள.

(இ-ள்.) கடியென்பது, காவல், கூர்மை, விரைவு, விளக்கம் மிகுதியாகிய குறிப்பையுணர்த்தும்,

வாலாறு. கடிநகர், கடிதுனைப்பகழி, கடிவிடுதும், கடிமார்பன்; கடிசெழுங்குரல்.

சஎ. இயம்பனுவற்சி யிசைகூற்றுவிளம்பறை
பாட்டுக்கரைநொடி பகர்ச்சிசொல்லே.

(இ-ள்.) இயம்பல், நுவற்சி, இசை, கூற்று, விளம்பு, அறை, பாட்டு, கரை, நொடி, பகர்ச்சி, சொல்லென்னு மொருகுணத்தை யுணர்த்தும்.

வாலாறு. இயம்பலுற்றேன், நுவலலாமே, இசைத் தனர்புலவர், கூறலாமே, விளம்பப்படுமே, அறைந்தனர்மாதோ, பாடலாமே, கரையப்படுமே, நொடிக்கலாமே, பகரலாமே.

சஅ. இயற்சொற்றிரிசொற் றிசைச்சொல் வடசொ
லென்றனைத்தேசெய்யு ளீட்டச்சொல்லே.

(இ-ள்.) இயற்சொல்லும், திரிசொல்லும், திசைச்சொல்லும் வடசொல்லுமென வத்துணையே செய்யுளீட்டுதற்குரிய சொல்லாவனவாம்.

அவற்றுள்,

சகூ. செந்தமிழ்நிலத்து வழக்கொடுசிவணித்
தம்பொருள்விளக்குந் தன்மையவியற்சொல்.

(இ-ள்.) மேற்கூறிப்போந்த நான்கனுள் இயற்சொல்லாவன செந்தமிழ்நிலத்து வழக்காதற்குப் பொருந்திக்கொடுந்தமிழ்நிலத்துந் தம்பொருள்வழுவாமலுணர்த்துஞ் சொல்லாமென்க.

வாலாறு. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்.

ருய. ஒருபொருள்குறித்த பலசொல்லாயும்
பல பொருள்குறித்த வொருசொல்லாயு
மெனவிருபாற்றே திரிசொற்கிளவி.

(இ-ள்.) ஒருபொருளைக்குறித்துவரும் பலசொல்லும், பலபொருளைக்குறித்துவரு மொருசொல்லுமென விருவகைப்படுந் திரிசொல்லென்க.



வாலாறு. கிள்ளை, சுகம், தத்தை, இவை கிளியென்னுமொரு பொருள்குறித்த பலசொல், காப்பு, கூர்மை, விரைவு, அச்சம், வாசம், இவை பலபொருள்குறித்த வொருசொல், வந்தமைகாண்க.

ருக. பொதுவெழுத்தானுஞ் சிறப்பெழுத்தானு
மீரெழுத்தானு மியைவனவடசொல்.

(இ-ள்.) ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொதுவெழுத்தானும், சிறப்பெழுத்தானும், ஈரெழுத்தானும், இயைவன வடசொல்லாமென்க.

வாலாறு. அமலம், கமலம், பொதுவெழுத்து; சுகி, போகி, சிறப்பெழுத்து; அரன், ஈரெழுத்து.

ருஉ. செந்தமிழ்நிலனைச் சேர்ந்தவீராறு
நிலத்தினுந்தங்குறிப் பினதிசைக்கிளவி.

(இ-ள்.) செந்தமிழ் நிலனைச்சேர்ந்தபன்னிரண்டு நிலத்துந் தாங்குறித்தபொருளை விளக்குவன திசைச்சொல்லாமென்க. பன்னிரண்டுநிலமாவன பொதுங்கர்நாடு, ஒளிநாடு, தென்பாண்டிநாடு, குட்டநாடு, குடநாடு, பன்றிநாடு, கற்காநாடு, அருவாநாடு, அருவா வடதலைநாடு. தென்பாண்டி நாட்டார் ஆவைப் பெற்றமென்பார், குட்டநாட்டார்-தாயை தள்ளையென்பார், குடநாட்டார்-தந்தையை அச்சனென்பார், கற்காநாட்டார்-வஞ்சகரை கையரென்பார், பிறவு மன்ன.

ருங. அந்நாற்சொல்லுந் தொடுக்குங்காலை
வலித்தன்மெலித்த னீட்டல்குறுக்கல்
விரித்தறொகுத்தலும் வருஞ்செயுள்வேண்டுழி.

(இ-ள்.) இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகிய நான்குசொல்லையும் செய்யுளாகத்தொடுக்குங்கால், மெலியை வலிக்கவேண்டும் வழிவலித்தலும், வலியைமெலிக்கவேண்டும் வழி மெலித்தலும், குறைவைவிரிக்கவேண்டும் வழிவிரித்தலும், மிகுவதைத்தொகுக்கவேண்டும் வழித்தொகுத்தலும், குறிலைநீட்டவேண்டும் வழிநீட்டலும், நெடுமையைக்குறுக்கவேண்டும் வழிக்குறுக்கலுமாகிய அறுவகைவிகாரமும் செய்யுளின்பம்பெறச் செய்வானுட்டுதலை வலியாகவுடையனவாம்.

வாலாறு. குறுங்கை - குறுக்கை, வலித்தல்; குற்றியலுகரம்- குன்றியலுகரம், மெலித்தல்; தணந்துறைவன் - தண்ணந்துறைவன், விரித்தல்; மழவரோட்டியர், தொகுத்தல்; விடுமின்-வீடுமின், நீட்டல்; தீயேன்- தியேன், குறுக்கல்.

௫௪. தகுதியும்வழக்கையுந் தக்கோர்வரையார்.

(இ-ள்.) தகுதியைப்பற்றியும் வழக்கைப்பற்றியும் நடக்குமிலக் கணத்திற்குப் பக்கச்சொல்லைக் கடியார் பெரியோர்,

வாலாறு. செத்தாரைத் துஞ்சினாரென்றலும், சுடுகாட்டை நன் காடென்றலும், ஓலையைத் திருமுக மென்றலுமாம்.

௫௫. இயற்கைப்பொருளை யிற்றெனக்கிளத்தல்.

(இ-ள்.) தன்னியல்பிற் றிரியாதுநின்ற பொருளையதனி னியல்பு கூறுங்காலாக்கமுங் காரணமுங் கெடாதிற்றெனக்கூறுக.

வாலாறு. நிலம்வலிது, நீர்தண்ணிது, பிறவுமன்ன.

௫௬. செயற்கைப்பொருளை யாக்கமொடுசெப்பல்.

(இ-ள்.) காரணத்தாற் றன்மைதிரிந்தபொருளை யத்திரிபு கூறுங்கா லாக்கங்கொடுத்துக் கூறுக.

௫௭. ஆக்கந்தானே காரணமுதற்றே.

(இ-ள்.) செயற்கைப் பொருளை யாக்கமொடு கூறுங்காற் காரணத்தை முற்கூறி யதன்வழி யாக்கங்கூறுக.

வாலாறு. மயிர் நல்லவாயின, எருப்பெய்து களைகட்டு நீர் கால்யாத்தமையாற் பைங்கூழ் நல்லவாயின.

௫௮. வழக்கினுளாக்கங் காரணமின்றியும்
வருமாராயுங் காலத்தானே.

(இ-ள்.) வழக்கினுட் காரண முதற்றெனப்பட்ட வாக்கச்சொல் காரணமின்றியும் வரும்.

வாலாறு. பயிர் நல்லவாயின, மயிர் நல்லவாயின.

௫௯. திணைதுணிந்ததன்பா றுணியப்படாத
வையக்கிளவி யவ்வப்பொருள்வயிற்
பன்மைகூற லென்மனார்புலவர்.



(இ-ள்.) திணை துணிந்து அதன்பா றுணியப்படாத வையப் பொருளை யவ்வத்திணைப் பன்மையாற் கூறுக.

வாலாறு. ஆண்மகன் கொல்லோ, பெண்மகள் கொல்லோ, இஃதோ தோன்றுவார் ஒன்றோ பலவோ செய் புக்கன எனவரும.

௬௰. ஐயமாமிருதிணை யகத்துமுருபைச்
செப்பினுமென்மனார் தெளிந்திசினோரே.

(இ-ள்.) உருபெனக் கூறுமிடத்து மொருமையும் பன்மை யுமாகப்படு மஃறிணைப்பொதுச்சொற்கண்ணு மிவ்விருகூற்றினு மையப்புலப் பொதுச்சொல்லாதலு முரித்தாம்.

வாலாறு. ஆண்மகன் கொல்லோ, பெண்மகள் கொல்லோ, இஃதோ தோன்றுமுருபு ஒன்றோ பலவோ செய் புக்கவுருபு.

௬௧. ஐயுற்றுத்துணி தரும்வழியன்மைத்
தன்மையைச்சுட்டலு முரியவாகும்.

(இ-ள்.) ஐயுற்றுத்துணியும் வழியன்மைக்கிளவி யன்மைத்தன் மையைச் சுட்டிநிற்றலு முரியவாம்.

வாலாறு. குற்றி கொல்லோ மகன் கொல்லோ வென்றானும், ஒன்று கொல்லோ பல கொல்லோ வென்றானும், ஒருவன் கொல்லோ வொருத்தி கொல்லோ வென் றானும், ஐயம் நிகழ்ந்த வழித் துணிதலு முண்டு; பிற கடையுட்டுணிந்தவழி மறுக்கப்படும் பொருண்மே லன்மைத் தன்மை யேற்றினு மமையும், மகனென்று துணிந்தவழி குற்றியன்று மகனெனவும், குற்றி யென்று துணிந்தவழி மகனல்லன் குற்றியெனவும், ஆண்மகனெனத் துணிந்தவழி பெண்மகளல்லள் ஆண்மகனெனவும், பெண்மகளென்று துணிந்த வழி யாண்மகனல்லன் பெண்மகளெனவும், ஒன் றெனத் துணிந்தவழி பலவல்ல ஒன்றெனவும், பலவெனத் துணிந்தவழி யொன்றன்று பலவெ னவும் மறுக்கப்படும் பொருண்மே லன்மைக்கிளவி யன்மைத் தன்மையைச் சுட்டி நின்றமைகாண்க.

௬௨. பண்புஞ்சினையு முதலுமுறையே
மயங்காதியலும் வண்ணச்சினைச்சொல்.

(இ-ள்.) பண்புச்சொல்லும், சினைச்சொல்லும், முதற்சொல்லும் ஆகிய மூன்றுங் கூறப்பட்ட முறை மயங்காமல் வழக்கைப் பொருந்தி நடக்கும் வண்ணச் சொல்லோடு தொடர்ந்தசினைச் சொல்லையுடைய முதற்சொல்லென வறிக.

வாலாறு. செங்காலனை, பெருந்தலைச்சாத்தன்.

௬௩. ஒருவரையுரைக்கும் பன்மைக்கிளவியு
மொன்றனையுரைக்கும் பன்மைக்கிளவியும்
வழக்கினுளுயர்த்தல் வழுவாகாவே.

(இ-ள்.) ஒருவனையும், ஒருத்தியையுங் கூறும் பன்மைச்சொல்லும், ஒன்றனைக் கூறும் பன்மைச் சொல்லும், வழக்கின்கணுயர்த்திக் கூறுஞ் சொல்லாம்.

வாலாறு. நீயிர் வந்தீர், யாம் வந்தேம், இவர் வந்தார்.

௬௪. தரல்வரல்கொடைசெலல் சாரும்படர்க்கை
யெழுவாயிரண்டு மெஞ்சியவேற்கும்.

(இ-ள்.) தரலும், வரலும், கொடையும், செலலும் படர்க்கையைப் பொருந்தும், இவற்றுள் முதலிற் கூறிய தரலும் வரலும் தன்மை முன்னிலைகளைப் பொருந்தும்.

வாலாறு. அவனுக்குத் தந்தான், அவனிடத்து வந்தான், அவனுக்குக் கொடுத்தான், அவனிடத்துச் சென்றான் எனவும்; எனக்குத் தந்தான், என்னிடத்து வந்தான், உனக்குத் தந்தான், உன்னிடத்து வந்தான் எனவும் வரும்.

௬௫. யாதெவனறியாப் பொருளொடுசிவணும்.

(இ-ள்.) யாதும், எவனும், அறியாப்பொருட்கண் வினவாக நிலையுமென்க.

வாலாறு. இச்சொற்குப் பொருள் யாது ;இச்சொற்குப் பொருளெவன்.

அவற்றுள்,

௬௬. யாதையநீக்கற் பொருளொடுநிலையும்,

(இ-ள்.) முற்கூறிய விரண்டனுள் யாதையநீக்கற் பொருளொடு நிலைபெறும்.



வாலாறு. இம்மரங்களுட்குங்காலியாது, எனவரும்.

௬௭. இனைத்தெனவறிந்த சினைக்குமுதற்கும்
வினைப்படுதொகுதியி னும்மைவேண்டும்.

(இ-ள்.) கேட்போராலித்துணையென் றறியப்பட்ட சினைப்பெயர்க்கும், முதற்பெயர்க்கும், வினைப்படுதொகுதிக்க ணும்மை கொடுத்தியம்புக.

வாலாறு. பன்னிருகையும் பாற்படவியற்றி; முரசு முழங்கு தானைமூவேந்தரும் வந்தார்.

௬௮. இல்லாப்பொருளு மன்னவியற்றே.

(இ-ள்.) இல்லாப்பொருட்கு மிடமுங் காலமும் பொருளுமுதலாயினவற்றொடு பகுத்தின்மை கூறுதற்க ணும்மைகொடுத்துக் கூறுக.

வாலாறு. பவளக்கோட்டு நீலயானை; சாதவாகனன் கோயிலுள்ளு மில்லை; குருடு காண்டல் பகலு மில்லை.

௬௯. யாதெனுமொருபொரு ளல்லதில்லென்பா
னஃதலபிறபொரு ளுறைவதுவழக்கே.

(இ-ள்.) யாதானு மொருபொரு டம்பாலில்லாத பொருளை யில்லையென்பவ னஃதல்லாத பிறபொருளைக் கூறுவதுவழக்காம்.

வாலாறு. பயறுளவோ வணிகீரென்று வினயவழி யஃதில்லையென்பான் உழுந்துண்டெனக் கூறல்.

௭௰. இயற்பெயர்ச்சுட்டுப் பெயருமிரண்டும்
வினைகொளற்கொருங்கியல் காலத்தானே
சுட்டுப்பெயரை முற்படக்கிளவார்.

(இ-ள்.) இயற்பெயரும், சுட்டுப் பெயருமாகிய விரண்டுபெயரும் வினைகோடற்கொருங்கு நிகழுங்காலம், சுட்டுப்பெயரை முற்கூறார்.

வாலாறு. சாத்தனவன் வந்தான், சாத்தன் வந்தானவன் போயினான்.

௭௧. முற்படக்கூறல் யாப்பினுளுரித்தே.

(இ-ள்.) இயற்பெயரும், சுட்டுப்பெயரும், வினைகோடற்கொருங்கு நிகழுங்காலம், சுட்டுப்பெயரை முற்படக் கூறல் செய்யுட்கணுரித்தாம்.

வரலாறு. அவளணங்கு நோய் செய்தாள்.

௭௨. சுட்டுமுதலாகிய காரணப்பெயரு
முற்படக்கிளத்தன் முறையன்றாகும்.

(இ-ள்.) சுட்டுமுதலாகிய காரணப்பெயரும், சுட்டுப்பெயரைப் போலப் பின்னாக்கப்படும்.

வரலாறு. சாத்தன் கையெழுதுமாறு வல்லனதனாற் றந்தை யுவக்கும்; சாத்தி சாந்தரைக்குமாறு வல்லளதனாற் கொண்டானுவக்கும்.

௭௩. வினைக்கொருங்கியலும் விழுமியபொருட்கு
மியற்பெயர்முற்பட வியம்பினும்வழுவே.

(இ-ள்.) வினைகோடற் கொருங்கியலும்வழி சிறப்பானாகிய பெயர்க்கு மியற்பெயரை முற்படக்கூறல் வழுவாம்.

வரலாறு. ஏனாதி, நல்லுதடன், காவிதி, கண்ணந்தை, முனிவன், கத்தியன், தெய்வப்புலவன் றிருவள்ளுவன் எனவரும்.

௭௪. ஒருபொருள்குறித்த பலபெயர்க்கிளவி
யொருவினைமுடிபறை யாதப்பெயர்தொறும்
வேறொருவினைதந் துரைப்பதுவிதியே.

(இ-ள்.) ஒருபொருளைக் குறித்துவந்த பல பெயர்ச்சொற்களொருதொழிலே முடிபாகக் கூறாது பெயர் தொறும் வேறாகிய தொழில்களைக் கொடுத்துரைப்பி னொருபொருளனவாம்.

வரலாறு. ஆசிரியன் பேரூர்க்கிழான் வந்தான்.

௭௫. உயர்திணைத்தன்மையு மஃறிணைப்பெயருந்
தொகைவயின்விரவி வரப்பெறுமென்ப.

(இ-ள்.) உயர்திணைத் தன்மைப்பெயர்க்கிளவியும், அஃறிணைப் பெயர்க்கிளவியும், எண்ணுதற்கண் விரவி வருமென்க.

வரலாறு. யானுமென் வயினஃகமுஞ் சாறும்.



௭௬. ஒருமையெண்ணொருமைக் கண்ணலதியலா.

(இ-ள்.) ஒருவன் ஒருத்தி யென்னு மொருமை யெண்ணை யுணர்த்து மொழிக ளொருமைக்கணல்லது இருமைமுதலாகிய வெண்முறைக்க ணில்லாவாம்.

வரலாறு. ஒருவன், ஒருத்தி, எனவரும்.

௭௭. வியங்கோளொடுதொட ரெண்ணுக்கிளவி
திணைவிரவியும்வருஞ் செப்புங்காலே.

(இ-ள்.) வியங்கோளோடு தொடருமெண்ணுப் பெயர் திணை விரவியும் வரும்.

வரலாறு. ஆவுமாயனுஞ் செல்க.

௭௮. வேறுவினைப்பல் பொருட்குப்பொதுப்பெயர்
பொதுவினைகொடுத்துப் புகல்வதுநெறியே.

(இ-ள்.) வேறுபட்ட வினையையுடைய பல பொருட்குப் பொதுவாகிய சொல்லைப் பொதுவினையைக் கொடுத்துக் கூறுவது நெறியாகுமென வறிக.

வரலாறு. அடிசில், அணி, இயம், படை என்னுந் தொடக்கத்தன. அடிசிலென்பது - உண்பன, தின்பன, பருகுவன, நக்குவன வென்னும் நால்வகைக்கும், அணியென்பது - கட்டுவன, கவிப்பன, செறிப்பன, பூண்பன வென்னுந் தொடக்கத்தனவற்றிற்கும், படையென்பது - எய்வன, எறிவன, வெட்டுவன, குத்துவன வென்னுந் தொடக்கத் தனவற்றிற்கும், இயமென்பது - கொட்டுவன, ஊதுவன, எழுவன வென்னுந் தொடக்கத் தனவற்றிற்கும் பொதுவாகலின், அடிசிலயின்றார், அணியணிந்தார், இயமியம்பினார், படை வழங்கினார்.

௭௯. எண்ணுழியும்பொது வினையானியலும்.

(இ-ள்.) வேறு வினைப்பொருள்களைப் பொதுமொழியாற் கூறாது பிரித்தெண்ணுங்காலு மதனதிலக்கண மொருவினையாற் கூறாது பொதுவினையால் வரும்.

வரலாறு. சோறுங் கறியுமயின்றார்; யாழுங்குழலுமியம்பினார்.

௮௰. இரட்டைக்கிளவி யிரட்டிற்பிரிந்திசையா.

(இ-ள்.) இரட்டித்து நின்ற பொருளுணர்த்துஞ் சொற்களி ரட்டித்து நிற்றலிற் பிரிந்து நில்லாவாம்.

வரலாறு. மொடு மொடுத்தது; துடி துடித்தது.

அக. அஃறிணையுயர்திணை யாமிருமருங்கினு [மொழி
மொருபொருளாய்ப்பல பெயர்க்குப்பொது
பொதுமைவேறியம்பல் புலவோர்நெறியே

(இ-ள்.) அஃறிணைக்கண்ணு முயர்திணைக்கண்ணும், ஒருபெ யராய்ப் பலபொருட்குப் பொதுவாகிய சொல்லைப் பொதுமையின் வேறுகக்கூறுவரென்க.

வரலாறு. பிறரும் வாழ்வாருளரேனும் பார்ப்பனச் சேரி, உயர்திணை, பிறபுல்லு மரனுமுளவேனும், கமுகந் தோட்டம்.

அ௨. பெயரினும்வினையினும் பிரிபவையெல்லாம்
வழுவிலவாமிரு திணைமருங்கினுமே.

(இ-ள்.) உயர்திணைக்கண்ணும், அஃறிணைக்கண்ணும், பெயரி னானும் வினையினானும் பொதுமையிற்பிரிந்து ஆண்மைக்கும் வழு வாகாவாம்.

வரலாறு. தொடியோர் - கொய்குழையரும்பியகுமரி ஞாழல்- உயர்திணைக்கட்பெயரிற் பிரிந்த வாணொழிமிகு சொல்; வடுகரசராயிரவர் மக்களையுடையர், பெய ரிற்பிரிந்த பெண்ணொழிமிகுசொல்; இவர் வாழ்க் கைப்பட்டார், தொழிலிற் பிரிந்தவாணொழிமிகு சொல்; நம்பிநூறெருமையுடையன், அஃறிணைக் கட்பெயரிற் பிரிந்தவாணொழிமிகுசொல்; நம்மர சன் ஆயிரம்யானையுடையன், பெயரிற் பிரிந்த பெ ண்ணொழி மிகுசொல்.

அங. திணைவிரவுப்பெயர் செய்யுண்மருங்கே
யஃறிணைமுடிபின வாகுமென்ப.

(இ-ள்.) திணைவிரவி யெண்ணப்பட்டபெயர் செய்யுட்கண் பெரும்பான்மையு மஃறிணைப்பெயரைக்கொண்டு முடியும்.



வரலாறு. வடுகரருவாளர் வான்கருநாடர், சுடுகாடு பேயெ மையென் றிவையாறுங், குறுகாரறிவுடையார் கடுஞ்சினத்தகொல்களிறுங் கதழ்கலினப். பரிமா வும், நெடுங்கொடிய நிமிர்தேரு. நெஞ்சுடையமற வரு மென நான்குடன் மாண்டதாயினும்.

அச. வினைவேறுபடூஉம்பல பொருளொருமொழியும்
வினைவேறுபடாப்பல பொருளொருமொழியு
மெனவிருதிறத்தவாம் பலபொருளொருமொழி.

(இ-ள்.) வினைவேறுபடும் பல்பொருளொருசொல்லும் வினைவே றுபடாப் பலபொருளொருசொல்லுமெனப் பலபொருளொரு மொழி இருவகைப்படுமென்க.

அவற்றுள்.

அரு. வினைவேறுபடூஉம் பலபொருளொருமொழி
வேறுபடுவினையினு மினத்தினுஞ்சார்பினுந்
தேறத்தோன்றும் பொருடெரிநிலையே.

(இ-ள்.) மேற்கூறிப்போந்த வவ்விரண்டனுள் வினைவேறுபடும் பலபொருளொருசொல் லொருபொருட்கேசிறந்த வினையானு மினத் தானுஞ் சார்பானும் பொருடெரி நிலைக்கட்பொதுமை நீங்கித் தெ ளியத்தோன்றும்.

வரலாறு. மாவென்பதொருசார் விலங்கிற்கும், மரத்திற்கும், வண்டிற்கும், பிறபொருட்கும்பொது; மாப்பூத்தது, மாவுமருதுமோங்கின வென் வேறுபடுவினை யானு மினத்தானு மாமரமென்பது விளங்கிற்று. பிறவு மன்ன.

அசு. வினைவேறுபடாஅப் பலபொருளொருமொழி
யாயுங்காலைக் கிளந்தாங்கியலும்.

(இ-ள்.) வினைவேறுபடாப் பலபொருளொருசொல் ஆராயுங் காலைக் கிளந்து கூறப்படுமென்க.

வரலாறு. மாமரம்வீழ்ந்தது, வில்குழாவீழ்ந்தது.

அஎ. ஒருபொருள் வேறுபாடுணருங்காலை
விளங்காதாயின். விளங்கவிளம்புப.

(இ-ள்.) ஒருபொருள் வேறுபாடறியுங்காலை யஃதாற்றன் முத்லியவற்றான் விளங்காதாயினதனை விளங்கக்கூறுவர் புலவரென்க.

வாலாறு. அரிதாரச்சாந்தங் கலந்ததுபோல் வருகெழுத்தோன் றிவருமே, முருகுறழுமன்பன் மலைபெய்தீர். பிறவு மன்ன.

௮௮. ஆண்மைகுடிமை யடிமைமூப்பே
விருந்தேயின்மை வெண்மையுறுப்பே
குழுவேயன்மை குருடேமகவே
யடுசேகாத வஃறிணைமுடிபின.

(இ-ள்.) ஆண்மைமுதலாகக் காதலீறாகக்கூறிய பதினான்கு பெயரு மஃறிணைமுடிபினவாம்.

வாலாறு. ஆண்மைநன்று, குடிமைநன்று, அடிமைநன்று, மூப்புநன்று, விருந்துநன்று, இன்மைநன்று, வெண்மைநன்று.

௮௯. உயிரோகால முலகேயுடம்பே
தெய்வம்பூதந் திங்கள்வினையே
ஞாயிறுபிறவு மவற்றோரற்றே.

(இ-ள்.) உயிர்முதலாக ஞாயிறீறாகக்கூறியவொன்பது பெயரும், முற்கூறியவைபோலவே யுயர்திணைப்பெயராயினு மஃறிணைமுடிபினவாம்.

வாலாறு. உயிர்போயிற்று, காலமாயிற்று, உலகம் பசித்தது, உடம்புநுணுகிற்று, தெய்வஞ்செய்தது, பூதம்புடைத்தது, திங்களெழுந்தது, வினைவிளைந்தது, ஞாயிறுபட்டது, எனவரும்.

௯௰. உயர்திணைமுடிபா தலுமுரித்தாகும்.

(இ-ள்.) காலமுதலாகியசொல் லுயர்திணை முடிபாத லுமுரித்தாம்.

வாலாறு. காலன்கொண்டான், உலகர்பசித்தார், உடம்பிழந்தான்.

௯௧. எடுத்தமொழியின மியம்பலுமுரிய.

(இ-ள்.) இனமாகிய பலபொருட்களொன்றினை வாங்கிக்கூறிய வழி யச்சொல்தன்பொருட்கினமாகிய பிறபொருளைக் குறிப்பாலுணர்த்தலு முரியவாம்.



வாலாறு. அறஞ்செய்தான் றுறக்கம்புகும், இழிவறிந்துண்பான்கணின்பமெய்தும்.

௯௨. கண்ணும்முலையுங் கையும்பிறவும்
பன்மைசுட்டிய சினைநிலைக்கிளவி
பன்மையுரைக்குங் கடப்பாடிலவே.

(இ-ள்.) கண்முதலாகிய பிறவும் பன்மையைக்குறித்து நின்ற சினைநிலைச்சொல் பன்மையாற்கூறப்படும்யாப்புறவுடையவல்ல, முதலொன்றாயி னொருமையானும் பலவாயிற் பன்மையானுங் கூறப்படும்.

வாலாறு. கண்ணல்லன், கைநல்லள், முலைநல்லள், கண்ணல்லர், கைநல்லர், முலைநல்லர்.

௯௩. அசைநிலையிசைநிறை யடுக்கிருதிறத்தன.

(இ-ள்.) அசைநிலையும், இசைநிறையும் எனவடுக்கு இரண்டு திறத்தனவாம்.

வாலாறு, மற்றோ மற்றோ, அன்றோ வன்றோ, அசைநிலை; ஏ யேம்பன் மொழிந்தனளே இசைநிறை.

௯௪. வேற்றுமைவினை பண்புவமையும்மை
யன்மொழியெனத்தொகை யறுவகைப்படுமே.

௯௫. இரண்டுமுதலா மிடைப்பாறுருபும்
வெளிப்படவில்லது வேற்றுமைத்தொகையே.

(இ-ள்.) எழுவாய்க்கும் விளிக்குமிரண்டு முதலாறுருபுகளுந் தொக்க தொடர்மொழி வேற்றுமைத்தொகையாம்.

வாலாறு. நிலங்கடந்தான், ஐ; தாய்மூவர், ஒடு; கருப்புவேலி, கு; வரைபாய்தல், இன்; சாத்தன்புத்தகம், அது; மன்றப்பெண்ணை, கண்; எனவரும்.

௯௬. காலங்கரந்த பெயரெச்சம்வினைத்தொகை.

(இ-ள்.) இறப்பெதிர்வு நிகழ்வாகிய முக்காலங்களுந் தொக்க பெயரெச்சவினை வினைத்தொகையாம்.

வாலாறு. கொல்யானை, கொன்றயானை, கொல்லும்யானை, கொல்கின்றயானை.

௯௭. வண்ணஞ்சுவையே வடிவேயளவே
யென்பவும்பிறவு மிதன்குண நுதலி
வருஉமியற்கை பண்பின்றொகையே.

(இ-ள்.) வண்ணம், சுவை, வடிவு, அளவு, முதலியனவுமி வைபோல்வன பிறவு மிதனது குணத்தைக் கூறிவருவன பண்புத் தொகையாம்.

வாலாறு. கருங்குதிரை, வண்ணம்; தீங்கரும்பு, சுவை; வட்டப்பலகை, வடிவு; நெடுங்கோல், அளவு.

௯௮. உவமவுருபில துவமைத்தொகையே.

(இ-ள்.) வினைபயன்மெய் யுருவென்பனவற்றைப் பற்றிவருமுவமையுருபு தொக்கதொடர்மொழி யுவமைத்தொகையாம்.

வாலாறு. புலிக்கொற்றன், வினை; கற்பகவள்ளல், பயன்; குரும்பைமுலை, மெய்; பவளவாய், உருபு.

௯௯. எண்ணலெடுத்த னீட்டன்முகத்த
லளவையுளும்மில தத்தொகையாகும்.

(இ-ள்.) எண்ணலளவை, எடுத்தலளவை, நீட்டலளவை, முகத்தலளவைகளுள், உம்மைதொக்க தொடர்மொழி, உம்மைத்தொகையாம்.

வாலாறு. ஒன்றேகால், எண்ணல்; தொடியே கஃசு, எடுத்தல்; சாணரை, நீட்டல்; கலனே தூணி முகத்தல்.

௱. ஐந்தொகைமொழிமேற் பிறதொகலன்மொழி.

(இ-ள்.) வேற்றுமைத்தொகைமுதலிய வைவகைத் தொகை நிலைத்தொடர் மொழிகளுக்குப் புறத்து அவையல்லாத பிறமொழி யுருபு தொக்குவருவன அன்மொழித்தொகையாகும்.

வாலாறு. மலர்க்குழல், ஐ; பொற்றொடி, ஆல்; கவியில்க்கணம், கு; பொற்றாலி, இன்; கிள்ளிகுடி, அது; கீழ்வயிற்றுக்கழலை, கண்; வேற்றுமைத்தொகை யுருபுகளின் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை; பிறவுமன்ன.

௱௧. முன்மொழிபின்மொழி யிருமொழிபிறமொழி
நிலைபெறலத்தொகை மரபுநான்காகும்.



(இ-ள்.) முன்மொழிமேனிற்றலும், பின்மொழிமேனிற்றலும், இருமொழி மேனிற்றலும், பிறமொழிமேனிற்றலும் அத்தொகையு மவற்றதுபொருளு நான்காகும்.

வாலாறு. வேங்கைப்பூ என்புழி, பூவென்னுமுன்மொழிக் கட்பொருணின்றது, அது நறிதென்னும் வினையொடியையுமாற்றான், மேறப்பட்டுத்தோன்றியவாறு காண்க. மேல்வருவன வற்றிற்கு மிஃதொக்கும், இடவகையான் முன்மொழியாயிற்று, அடையென்னும் பின்மொழிக்கட்பொருணின்றது, இடவகையாற்பின்மொழியாயிற்று. முன்பினென்பன காலவகையாற்றமொழி நிற்கும். வேங்கைப்பூ, முன்மொழி; கண்ணிமை, பின்மொழி; புலிக்கெண்டை, இருமொழி; கருங்குழல், பிறமொழிகளிற் பொருள்சிறந்து நின்றனவாமறிக.

௱௨. எல்லாந்தொகையு மொருசொன்னடைய.

(இ-ள்.) அறுவகைத்தொகைச் சொற்களு மொருசொல்லாய் நடத்தலை யுடையவாமென்க.

வாலாறு. யானைக்கோடு, கொல்யானை, நிலங்கடந்தான், குன்றத்திருந்தான்.

௱௩. வல்லொற்றுவரினே யிடத்தொகையாகு
மெல்லொற்றுவரினே பெயர்த்தொகையாகும்.

(இ-ள்.) வல்லொற்றுவரி னிடத்தொகையாம் மெல்லொற்று வரிற் பெயர்த்தொகையாமென்க.

வாலாறு. வடுகக்கண்ணன் - இடம்; வடுகங்கண்ணன்-பெயர்.

௱௪. உயர்திணையும்மைத் தொகைப்பலரீறே.

(இ-ள்.) உயர்திணைக்கண்வரு மும்மைத்தொகை பலர்க்குரிய வீற்றானடக்கும்

வாலாறு. பாணர், நக்கிரர், மாமூலர், கபிலர்.

௱௫. வாராமரபின வரவியம்புதலு
மென்னாமரபின வெனவியம்புதலு
மன்னவையெல்லா மவற்றவற்றியல்பா
னின்னவென்னுங் குறிப்புரையாகும்.

(இ-ள்.) வாரா வியல்பினவற்றை வருவனவாகக் கூறலும், என்னாவியல்பினவற்றை யென்பனவாகக் கூறலும், அத்தன்மைய னவெல்லா மவ்வப்பொருளியல்பா னித்தன்மையவென் றுரைக்கும் குறிப்புச்சொல்லாம்.

வரலாறு. அந்நெறியீண்டு வந்துகிடந்தது; அம்மலையிதனோடு வந்து பொருந்திற்று; அவலவலென்கின்றன; மழை மழையென்கின்றன பைங்கூழ்.

௱௬. விரைவுமுன்றிசை நிறைநான்கடுக்கே.

(இ-ள்.) மேற்கூறிப்போந்த வொருசொலடுக்கினுள், விரைவுப் பொருள்பட வடுக்குவது மூன்றுவரம்பையுடைத்து, இசை நிறையடுக்கு நான்காகிய வரம்பையுடைத்தாம்.

வரலாறு. தீத்தீத்தீ, விரைவு; பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ நாமகள், இசைநிறை.

௱௭. பிரிநிலைவினையே பெயரேயொழியிசை
யெதிர்மறையும்மை யெனவேசொல்லே
குறிப்பேயிசையே யாயீரைந்து
நெறிப்படத்தோன்று மெச்சச்சொல்லே.

(இ-ள்.) பிரிநிலையெச்சம், வினையெச்சம், பெயரெச்சம், ஒழியிசையெச்சம், எதிர்மறையெச்சம், உம்மையெச்சம், எனவெச்சம், சொல்லெச்சம், குறிப்பெச்சம், இசையெச்சம் ஆகிய பத்தும் எச்சப்பொருண்மையைத் தருமொழியாம்.

௱௮. தத்தமெச்சத்தொடு சார்ந்துநின்றியலும்.

(இ-ள்.) மேற்கூறிப்போந்த பத்தெச்சங்களுந் தத்தமெச்சங்களோடு கூடிநடக்கும்.

வரலாறு. தானேகொண்டான்-பிரிநிலை; உழுதுவந்தான் வினையெச்சம்; உண்ட சாத்தன் - பெயரெச்சம்; கூரியதோர்வாண்மன் - ஒழியிசையெச்சம்; யானோ கள்வன் - எதிர்மறையெச்சம்; சாத்தனும் வந்தான் - உம்மையெச்சம்; ஒல்லென வொலித்தது - எனவெச்சம்; கற்றதனாலாயபயனென்கொல் - சொல்லெச்சம்; இளையதாக முண்மரங்கொள்க - குறிப்பெச்சம்.

௱௯. ஈதாகொடுவிரப் புரையாகும்மே.



(இ-ள்.) ஈயென்பதும், தாவென்பதும், கொடுவென்பதும் ஆகிய மூன்றுசொல்லும் ஒருவனொன்றை யிரத்தற்கண் வருமொழியாம்.

அவற்றுள்.

௱௰. ஈயென்கிளவி யிழிந்தோனிரப்புரை.

(இ-ள்.) முற்கூறியவற்றுள், ஈயென்னுஞ்சொல் இழிந்தவனிரப்புரையாகும்.

வரலாறு. சோறீ.

௱௰௧. தாவென்கிளவி சமானன்மேற்றே.

(இ-ள்.) தாவென்னுஞ் சொல்லொப்போனிரப்புரையாம்.

வரலாறு. ஆடைதா - எனவரும்.

௱௰௨. கொடுவென்கிளவி யுயர்ந்தோன் கூற்றே

(இ-ள்.) கொடுவென்னுஞ்சொல்லுயர்ந்தோனிரப்புரையாகும்.

வரலாறு. சாத்துகொடு.

௱௰௩. ஒன்றன்பெயரா னதற்கியைபிறிதை
யறைகுவவாகு பெயராகும்மே.

(இ-ள்.) ஒன்றனது பெயராலதற்கியைபிறிதொன்றனைக் கூறலாகுபெயராம்.

வரலாறு. உலகு - உயிர்; தாமரை - தாமரைப்பூ.

௱௰௪. கேட்குநபோலவுங் கிளக்குநபோலவு
மியற்றுநபோலவு மியங்குநபோலவு
மஃறிணைமருங்கினு மறையப்படுமே.

(இ-ள்.) கேளாதனவற்றைக் கேட்பனபோலும், மொழியாதனவற்றை மொழிந்தனபோலும், செய்யாதனவற்றைச் செய்தனபோலும், இயங்காதனவற்றை யியங்குவனபோலு மஃறிணைக் கண்ணுங் கூறப்படும்.

வரலாறு. நன்னீனைவாழியனிச்சமே; பகைமையுங் கேண்மை
யுங் கண்ணுரைக்கும்; தன்னெஞ்சே தன்னைச்சுடும்;
இவ்வழியெங்கேபோம்.

௱௰௫. ஒருதிணைப்பெயரொரு திணைக்காய்வருநவும்
திசைச்சொல்வாய்பாடு திரிந்துவருநவு
மியைபில்லனவியைந் தனவாய்வருநவுந்
திணைமுதலாயின திரிந்துவருநவு
மன்றியனைத்துங் கடப்பாடிலவே.

(இ-ள்.) ஒருதிணைப்பெயரொருதிணைக்காய்வருவன - ஒரெருதை நம்பி - ஒரு கிளியை நங்கையெனல்; திசைச்சொல்வாய்பாடு திரிந்துவருவன - புலியான் - பூசையானென்ல்; தொன்னென்றிக்கணியைபில்லன வியைந்தனவாய் வருவன - ஆற்றுட்செத்த வெருமையீர்த்தல் ஊர்க்குயவர்க்குக்கடன்; செய்யுட்கட்டிணைமுதலாயின திரிந்துவருவன - எழுதுவரிக்கோலத்தாரீவார்க்குரியார், தொழுதிமைக்கண்ணமைந்தோட்டார், முழுதகலா - நாணிற்செறிந்தார் நலங்கிளவி நாடோறும் - பேணற்கமைந்தார் பெரிது.

௱௰௬. செய்யாவென்னு முன்னிலைவினைச்சொல்
செய்யென்கிளவியாகிடனுடைத்தே.

(இ-ள்.) செய்யாவென்னும் வாய்பாட்டதாகிய முன்னிலைவினைச்சொல் - ஆவென்னுமீறுகெடச் செய்யென்னுஞ் சொல்லாய் நிற்றலுமுடைத்தாம்.

வரலாறு. நடவாய், வாராய், உண்ணாய், தின்னாய், என்பன
வீறுகெட்டு - நட, வா, உண், தின், எனச் செய்
யென் கிளவியாயினவாறு காண்க.

௱௰௭. முன்னிலைமுன்ன ரீயுமேயு
மந்நிலைமரபின்மெய் யூர்ந்துவருமே.

(இ-ள்.) முன்னிலைவினைச் சொன்முன் வருமீகாரமு மேகாரமு மம்முன்னிலைச் சொற்கேற்ற மெய்யையேறிவரும்.

வரலாறு. சென்றீபெரும நிற்றகைக்குநர் யாரே; அட்டி
லோலைதொட்டனையின்மே; எனவரும்.

௱௰௮. ஒருமொழிமூவழிக் குறைதலும்வரையார்.



(இ-ள்.) ஒருசொல்முதலினு மிடையினுங்கடையினுங் குறைதலை நீக்கார்.

வாலாறு. மரை - ஓதி - நீல்.

௱௰௯. குறைந்தனவாயினு நிறைந்தனவாகும்.

(இ-ள்.) அம்மூன்றுமொழியுங் குறைந்தனவாயினு நிறைந்தனவேயாம்.

வாலாறு. மரை - தாமரை; ஓதி - ஓந்தி; நீல் - நீலம்.

௱௨௰. இடைச்சொல்லெல்லாம் வேற்றுமைச்சொல்லே.

(இ-ள்.) பிறிதோர் சொல்லை வேறுபடுப்பனவும்; பிறிதோர் சொல்லான் வேறுபடுக்கப்படுவனவும் எனச்சொல்லிருவகைப்படும். பிறிதோர்சொல்லை வேறுபடுத்தலாவது விசேடித்தல்; பிறிதோர் சொல்லான் வேறுபடுக்கப்படுதலாவது விசேடிக்கப் படுதல்; இடைச்சொல்லெல்லாம் பிறிதோர் சொல்லை விசேடிக்குமொழியாமெனக.

௱௨௰௧. உரிச்சொன்மருங்கினு முரியவையுரிய.

(இ-ள்.) உரிச்சொற்கண்ணும் வேறுபடுக்குஞ் சொல்லாதற்கு முரியனவுரியவாம். எல்லாமாகாவாமெனவே யுரிச்சொல்லுள் வேறுபடுத்தும் வேறுபடுக்கப்பட்டு மிருநிலைமையு முடை[illegible]ய் வருவனவே பெரும்பான்மை யென்பதாம். வேறுபடுக்குஞ் சொல்லேயாவன—உறு, தவ, நனி; இருநிலைமையுமுடையன—குரு, கெழு, செல்லல், இன்னல், என்னுந்தொடக்கத்தன; உறுபொருள், தவப்பல, நனிசெய்தது என வினையொன்றனை விசேடித்தல்லது வாரா மையும், குருமணிவிளங்கு, குருகேழ்கிளரகலம், செங்கேழ், செல்லலுழப்ப, அருஞ்செல்லல், இன்னற்குறிப்பு, பேரின்னல் எனவவை யொன்றை விசேடித்தும் விசேடிக்கப் பட்டு மிருநிலைமையு முடையவாய் வருமாறும் காண்க.

௱௨௰௨. வினையெஞ்சுகிளவியும் வேறுபல்குறிய.

(இ-ள்.) மேற்கூறிய வினையெச்சமும் வேறுபட்டபலவிலக்கணத்தையுடையவாம்.

வாலாறு. ஞாயிறுபட்டுவந்தான்; ஓடிவந்தான்.

௱௨௰௩. முன்னத்தினுணருங் கிளவியுமுளவே

(இ-ள்.) குறிப்பாற் பொருளறியப்படுஞ் சொற்களு முளவாம்

வாலாறு. குழைகொண்டு கோழிபெறியும் வாழ்க்கையர்.

௲உச. ஒருபொருளிருசொல் பிரிவிலவரையார்.

(இ-ள்.) ஒருபொருண்மேல்வரு மிரண்டுசொல் பிரிவின்றித் தொடர்ந்தவற்றை நீக்காரென்க.

வாலாறு. நிவந்தோங்குபெருமலை.

௲உரு. ஒருமைசுட்டிய பெயர்நிலைக்கிளவி
பன்மைக்காகு மிடனுமாருண்டே.

(இ-ள்.) ஒருமைக்குரியசொல் பன்மைக்காகு மிடனுமுண்டு.

வாலாறு. ஏவலிளையர் தாய்வயிறுகறிப்ப எனவரும்.

ஒழிபியன் முற்றும்.

இயல்மூன்றுக்கு சூத்திரம், ௯௱௭.

மூன்றாவது:

# பொருளதிகாரம்.

---

## அகவொழுக்கவியல்.

### தற்சிறப்புப் பாயிரம்.

மெய்ப்பொருள் பகாப்பொருள் வேதமுதற்பொரு
ளப்பொருளகத்தணிந் தறைகுவன்பொருளே.

என்பது,

மெய்யாகியபொருளும் பகுக்கப்படாதபொருளும் வேதமுதற் பொருளுமான அப்பொருளை யிதயக் கண்ணிருத்திப் பொருளிலக்கணத்தை யானியம்புவன். (க)

அகப்பொருள் கைக்கிளை யைந்திணை பெருந்திணை
யெனவெழுவகைப்படு மென்மனார்புலவர்.

என்பது,

அகப்பொருள் - கைக்கிளையும், குறிஞ்சி - முல்லை - பாலை - மருதம்-நெய்தலாகிய ஐந்திணையும், பெருந்திணையும் என வெழுவகைப் படும். (உ)

தொல்காப்பியம்.

கைக்கிளைமுதலாப் பெருந்திணையிறுவா
முற்படக்கிளந்த வெழுதிணையென்ப.

என்றாராகலின்.

அவற்றுட்கைக்கிளை யொருதலைக்காமம்.

என்பது,

முற்கூறியவற்றுள் கைக்கிளையென்பது-தலைவன், தலைவி இருவருள் ஒருதலை நிகழும் காமம். (௩)

அன்புடைக்காமமைந் திணையிற்படுமே.

என்பது,

குறிஞ்சியும் - முல்லையும் - பாலையும் - மருதமும் - நெய்தலும் ஆகிய ஐந்திணையும் - அன்புடைக்காமம். (௪)

பொருந்தாக்காமம் பெருந்திணைப்பொருட்டே.

என்பது,

பெருந்திணை பொருந்தாக்காமம். (௫)

முதல்கருவுரிப் பொருண்மூன்றாகும்மே.

என்பது,

பொருள் - முதற்பொருளும், கருப்பொருளும், உரிப்பொருளும் என மூன்றுவகைப்படும். (௬)

அவற்றுள்,

முதனிலம்பொழுதிரு வகைப்படுமெனலே.

என்பது,

முற்கூறியவற்றுள் முதற்பொருள் - நிலமும் பொழுதும் என இரண்டு பொருள்களையுடையன. (௭)

முல்லைகுறிஞ்சி பாலைமருதம்
நெய்தலைந்திணைக் கெய்தியபெயரே.

என்பது,

முல்லையெனவும் - குறிஞ்சியெனவும் - பாலையெனவும் - மருதமெனவும் - நெய்தலெனவும் - ஐந்திணைக்குப் பொருந்திய பெயராம்.

வரையேவனமே சுரமேமருதந்
திரையே யவையவை சேர்தருமிடனே.

என்பது,

மலையும் மலையைச்சார்ந்த இடமும் குறிஞ்சியாம்; காடும் காட்டைச்சார்ந்த இடமும் முல்லையாம்; பாலையும் பாலையைச்சார்ந்த இடமும் சுரமாம்; வயலும் வயலைச்சார்ந்த இடமும் மருதமாம்; கடலும் கடலைச்சார்ந்த இடமும் நெய்தலாம். (௯)

தொல்காப்பியம்.

மாயோன்மேய காடுறை யுலகமும்
சேயோன்மேய மைவரையுலகமும்



வேந்தன்மேய தீம்புன லுலகமும்
வருணன்மேய பெருமண லுலகமும்
முல்லைகுறிஞ்சி மருதநெய்தலெனச்
சொல்லியமுறையாற் சொல்லவும்படுமே.

என்றாராகலின்.

காலம்பருவம் பொழுதிருவகைப்படும்.

என்பது,

பொழுது-காலமும் பருவமும் என இரண்டு வகைப்படும்; அவற்றைப் பெரும்பொழுது சிறுபொழுது என்ப. (௧௦)

அவற்றுள்,

பருவங்காரே கூதிர்முன்பனி
பின்பனி யிளவேனின் முதுவேனிலாறே.

என்பது,

முற்கூறியவற்றுள், பருவம் - கார் கூதிர் முன்பனி பின்பனி இளவேனில் முதுவேனில் எனவாறு. (௧௧)

அவைதாம்.

ஆவணிமுதலா வாடியீறாக
விரண்டிரண்டாக வேற்குமென்ப.

என்பது,

முற்கூறியவை, ஆவணி புரட்டாசி கார்காலம்; ஐப்பசி கார்த்திகை கூதிர்க்காலம்; மார்கழி தை முன்பனிக்காலம்; மாசி பங்குனி பின்பனிக்காலம்; சித்திரை வைகாசி இளவேனிற்காலம்; ஆனி ஆடி முதுவேனிற்காலம்; இளவேனிலெனினும் வசந்தமெனினும் ஒக்கும்.

மாலையாமம் வைகறையெற்பாடு
நண்பகற்சிறுபொழுதை வகைத்தாகும்.

என்பது,

சிறுபொழுது-மாலை யாமம் வைகறை எற்பாடு நண்பகல் என ஐந்துவகைப்படும்; எற்பாடெனினும் விடியலெனினு மொக்கும். (௧௨)

காருமாலையுங் காட்டிற்குரிய.

என்பது,

கார்காலமும் மாலைப்பொழுதும் முல்லை நிலத்துக்குரியன. (௧௫)

கூதிரும்யாமமுங் குறிஞ்சிக்குரித்தே.

என்பது,

கூதிர்க்காலமும் யாமப்பொழுதும் குறிஞ்சி நிலத்துக்குரியன.

பனியெதிர்பருவமு முரியவாகும்.

என்பது,

முன்பனிக்காலமும் அக்குறிஞ்சிக்குரியன. (௧௬)

வைகுறுவிடியன் மருதக்குரிய.

என்பது,

வைகறையும் விடியற்பொழுதும் மருதநிலத்துக்குரியன. (௧௭)

எற்பாடுநெய்தற்குரியவாகும்.

என்பது,

விடியற்பொழுது நெய்தனிலனுக்குரியன. (௧௮)

நண்பகல்வேனி லடுத்திணைக்குரிய.

என்பது,

நண்பகற்பொழுதும் வேனிற்காலமும் பாலை நிலனுக்குரியன.

பின்பனிதானு முரித்தெனப்படுமே.

என்பது,

பின்பனிக்காலமும் அந்நிலத்துக்குரியன. (௨௦)

மருதநெய்தலென்றிவை யிரண்டிற்கு
முரியபெரும்பொழுதிரு மூன்றுமே.



என்பது,

மருதம் நெய்தல் ஆகிய விரண்டு நிலனுக்கும் பெரும்பொழுதாகிய காரும் கூதிரும் முன்பனியும் பின்பனியும் இளவேனிலும் வேனிலுமுரியன. (௨௧)

வாடையடித்தன் மயில்கேகயப்பு
ளிந்திரகோப மெழுந்தகமகிழ்த
லன்னங்கிளிமயி லகன்றுவருதல்
காந்தள்கொன்றை காயாமலர்தல்
கமலமேங்கல் கார்காலக்குரித்தே.

என்பது,

வாடையடித்தல்; மயில் கேகயம் இந்திரகோபம் தோன்றிமகிழ்தல்; அன்னம் கிளி மயில் அகன்றுவருதல்; காந்தள் கொன்றை காயா மலர்தல்; தாமரையேங்கல் கார்காலத்துக்குரியன. (௨௨)

கூதிருலவைவீசல் கொக்கொடுவா
லன்னஞ்சங்கு மகிழ்வுறலுந்தகந்
தெளிதன்மீனினஞ் செனித்தன்முகிற்குழாஞ்
சூற்கொளல் சிறுசண்பகம்பாரிசாத
மலர்தன்மானவர் வருந்துதல்கூதிர்க்
காலக்குரிமையாங் காணுங்காலே.

என்பது,

கூதிர்க்காற்றடித்தல்; கொக்கு அன்னம் சங்குமகிழ்தல்; நீர்தெளிதல்; மீனினஞ்சனித்தல்; மேகங்கள் சூற்கொளல்; சிறுசண்பகம் பாரிசாதம் மலர்தல்; மானிடர்வருந்தல் கூதிர்க்காலக்குரியன. (௨௩)

கோடைவீசல் கூகையுமாந்தையு
மகிழ்தல்செவ்வந்தி மாமரமலர்த
லிலந்தைபழுத்த லிக்குநென்முதிர்தன்
முன்பனிக்குரியவா மொழியுங்காலே.

என்பது,

கோடைக்காற்றடித்தல்; கோட்டான் ஆந்தை மகிழ்தல்; செவ்வந்திமரம் மாமரம் மலர்தல்; இலந்தை பழுத்தல்; கரும்பு நெல் முதிர்தல் முன்பனிக்காலக்குரியன. (௨௪)

வீங்குலவைக்கால் வீசல்கான்கோழி
புறவமகிழ்தல் பொங்கருங்கோங்கு
மலர்தல்பேரீந்து மடற்பனைபழுத்தல்
பின்பனிக்குரியவாம் பேசுங்காலே.

என்பது,

உலவைக்காற்றடித்தல்; காட்டுக்கோழி புறவு மகிழ்தல்; இலவு கோங்கு மலர்தல்; பேரீந்து பனை பழுத்தல் பின்பனிக்காலக் குரியன.

தென்றலடித்ததேன் குயிலோடே
யன்றிலீமகிழ்தன் மாங்கனியுதிர்தல்
மயின்மகிழ்ந்தாடன் மலர்தல் புனலின்
றாழைவசந்தந் தனக்குரித்தாகும்.

என்பது,

தென்றற்காற்றடித்தல்; வண்டு குயில் அன்றில் மகிழ்தல்; மாங்கனி யுதிர்தல்; மயின்மகிழ்ந்தாடல்; புன்னை தாழை மலர்தல் இளவேனிற்காலக்குரியன: (௨௬)

கானமேருன்றல் காற்கோடைவீசல்
வலியான்காடை வான்பாடிமகிழ்தன்
மல்லிகைபாதிரி மலர்தலும்பிறவு
முதிர்வேனிற்குரியவா மொழியுங்காலே.

என்பது,

பேய்த்தேரோடல்; கோடைக்காற்றடித்தல்; வலியான் காடை வானம்பாடி மகிழ்தல்; மல்லிகை பாதிரி மலர்தல் ஆறுகாலங்களுக்கும் முதிர்வேனிற்கும் உரியன. (௨௭)

குவளைமலர்தல் குருகினமொலித்தல்
கன்றையுள்ளிக் கறவைபோதால்
வனசங்கூம்பன் மாலைக்குரிய.

என்பது,

குவளைமலர்தல்; பறவைகள் சத்தித்தல்; கன்றைநினைத்துக்கறவைப்பசுப்போதல்; தாமரைகூம்பல் மாலைப்பொழுதிற் குரியன. (௨௮)



கூகைசகோரங் குழுமியுண்மகிழ்தல்
கடனீர்பொங்கல் களவுமேம்படுதல்
யாமக்குரிமைய வாகுமென்ப.

என்பது,

கோட்டான் சகோரம் மகிழ்தல் கடனீரதிக்ப்படல் களவதிகமாதல் யாமப்பொழுதிற்குரியன. (௨௯)

வைகறைக்குரிய வான்மீனொளிமழுங்கல்
வெள்ளிமுளைத்தல் வாரணங்கூவுதலே.

என்பது,

வான்மீனொளிகெடல் வெள்ளிமுளைத்தல் கோழிகூவல் வைகறைப்பொழுதிற் குரியன. (௩0)

விடியற்குரிய விலங்கு புள்ளினமுதன்
மகிழ்தருமரை மலர்தலுமாகும்.

என்பது,

மிருகங்கள் பறவைகள் முதலியன. மகிழ்தல் தாமரைமலர்தல் விடியற்பொழுதிற்குரியன. (௩௧)

கானனீரோடல் களிப்புறச்சக்கர
வாகமெருமை மாடுநீர்க்கிடந்த
லுச்சிக்குரியவா முணருங்காலே.

பேய்த்தேரோடல் சக்கரவாகமகிழ்தல் எருமைநீரிற் கிடத்தல் கண்பகற்பொழுதிற்குரியன. (௩௨)

ஏ-19

கருப் பொருள்,
தெய்வஞ்செல்வர் சேர்குடிபுள்விலங்
கூர்நீர் பூமரமுணப்பறையாழ் பண்
தொழிலெனக்கருவீ ரெழுவகைத்தாகும்.

கருப்பொருள், தெய்வம் தலைவன் தலைவி குடி பறவை மிருகம் ஊர் நீர் பூ மரம் உணு பறை யாழ் இசைப்பாட்டு தொழில் ஆகப் பதினான்குவகைப்படும். (௩௩)

வேற்காமுருகன் வெற்பன் சிலம்பன்
குறத்திகொடிச்சி குறவர்கானவர்
குறத்தியர்கிளிமயில் கொல்சினக்களிறு
வரிமாச்சிறு குடியருவியகன்சுனை
யாரந்தேக்ககில சோகமைவன
முறுத்தொண்டகந் தினையோம்பல்குறிஞ்சியாழ்
குறிஞ்சிக்கருப் பொருளாங்குறித்திடினே.

என்பது,

குறிஞ்சித்திணைக் கருப்பொருள் தெய்வமுருகன் வெற்பன் சிலம்பன் குறத்தி கொடிச்சி தலைவர் குறவர் கானவர் குறத்தியர் குடி கிளி மயில் பறவை யானை சிங்கம் விலங்கு சிறுகுடி ஊர் அருவி சுனைநீர் சந்தனம் தேக்கு அசோகு மரம் பூ மலைநெல் உணு தொண்டகம் பறை தினைகாத்தல் தொழில் குறிஞ்சியாழ் யாழ் இசை (௩௪)

விமலைகாளை விடலைமீளி
யெயினரெயிற்றியர் மறவர்மறத்திய
ரெருவைபருந்து செந்நாய்குறும்புழிஞை
யிருப்பைகூவலிரும் பதிகவர்தல்
பறைத்துடிபாலையாழ் பஞ்சுரம்வெஞ்சமம்
பகற்சூறையாடல் பாலைக்கருப்பொருளே.

பாலைத்திணைக் கருப்பொருள், காளி காளை விடலை மீளி எயினர் எயிற்றியர் மறவர் மறத்தியர் கழுகு பருந்து செந்நாய் சிறுபூளை இருப்பை கிணறு பிறர்பெரும்பதியிற்றிருடல் பறைத்துடி பாலையாழ் பஞ்சுரம் வெஞ்சமம் பகற்சூறையாடல். (௩௫)

திருமால்குறும்பொறை நாடன் செம்மல்
இல்லாள்கிழத்தி யிடையரிடைச்சிய
ராயராய்ச் சியரடவிவாரண
மான்முயல் பாடிவருமாறகன்சுனை
கொன்றைகாயா குருந்தமுல்லை
சாமைவரகு தாமுடன்விதைத்த
லேற்றுப்பறை முல்லையாழ்சாதாரி
முல்லைக்கருப்பொருளா மெனமொழிப.

என்பது,

முல்லைத்திணைக்கருப்பொருள், திருமால் குறும்பொறை நாடன் தோன்றல் மனைவி கிழத்தி இடையர் இடைச்சியர் ஆயர் ஆய்ச்



சியர் காட்டுக்கோழி மான் முயல் பாடி ஆறு சுனை கொன்றை காயா குருந்து முல்லை சாமை வரகுவிதைத்தல் ஏற்றுப்பறை முல்லையாழ் சாதாரி. (௩௬)

இந்திரனூரனெழின் மிகுகிழவன்
மனைவிகிழத்தியுழ வருழத்தியர்
கடையர் கடைச்சியர் கம்புள்வெண்குருகு
எருமைநீர்நா யெழிற்பெருமூதூ
ராறுமனைக்கிணறிலஞ்சிதாமரை
மன்றன்முழவ மருதயாழ்மருதஞ்
செந்நெல் வெண்ணெறிருவிழாவயர்தன்
மருதக்கருப் பொருளாம்வழுத்திடினே.

என்பது,

மருதத்திணைக்கருப்பொருள், இந்திரன் ஊரன் கிழவன் மனைவி கிழத்தி உழவர் உழத்தியர் பறவை கொக்கு எருமை நீர்நாய் பேரூர் மூதூர் ஆறு மனைக்கிணறு மகிழ் தாமரை மணப்பறை மருதயாழ் மருதவிசைப்பாட்டு செந்நெல் வெண்ணெல் திருவிழவயர் தல். (௩௭)

திரைநீர்வருணன் சேர்ப்பன் புலம்பன்
பரத்திநுளைச்சி பரதர் பரத்தியர்
நுளையர் நுளைச்சியரள வரளத்தியர்
பாக்கம்பட்டினம் வாயசஞ்சுறவ
முவர்நீர்க்கேணி கவர்நீர்நெய்தல்
கண்டகங்கைதை முண்டகமடம்பு
மீனுப்புப்படுத்தல் விளரியாழ் செவ்வழி
நளிமீன்கோட்பறை நாவாய்ப்பம்பை
நெடுநீர்நெய்தற் கருப்பொருளாகும்.

நெய்தற்றிணைக்கருப்பொருள், வருணன் சேர்ப்பன் புலம்பன் பரத்தி நுளைச்சி பரதர் பரத்தியர் நுளையர் நுளைச்சியர் அளவர் அளத்தியர் பாக்கம் பட்டினம் காக்கை சுறவு உவர்நீர்க்கேணி நெய்தல் தாழை முட்செடி அடம்பு மீன் உப்புப்படுத்தல் விளரியாழ் செவ்வழியிசை கோட்பறை பம்மை. (௩௮)

திணைமயக்குறு தலுங்கடிநிலையின்றே.

என்பது,

குறிஞ்சிமுதலிய ஐந்து திணைகளும் ஒன்றோடொன்று மயங்கினும் நீக்கலில்லவாம். (௩௯)

புணர்தலும் பிரிதலுமிருத்தலுமிரங்கலு
மூடலுமிவற்றினிமித் தமுமென்றிவை
தேருங்காலைத் திணைக்குரிப்பொருளே.

என்பது,

புணர்தல் புணர்தனிமித்தம் பிரிதல் பிரிதனிமித்தம் இருத்தல் இருத்தனிமித்தம் இரங்கல் இரங்கனிமித்தம் ஊடல் ஊடனிமித்தம் இவை திணைக்குரிய பொருள். (௪௦)

குடவரைக் குறிஞ்சியுங்குணகடனெய்தலுங்
கூடவதாகுங் களவினீர்மைக்கே.

என்பது,

மேலைமலைக்குறிஞ்சித்திணையும் கீழைக்கடல் நெய்தற்றிணையுங் களவிற்புணர்ச்சிக்குரியன. (௪௧)

வடனில்மருதமுந் தென்னிலமுல்லையுந்
துன்னிருகற்பொடு தோன்றுமென்ப.

என்பது,

நல்லநிலமாகிய மருதத்திணையும் அழகியநிலமாகிய முல்லைத்திணையும் கற்பிற்புணர்ச்சிக்குரியன. (௪௨)

மறையோர் மன்னர் வணிகர் வேளாள
ரோதற்றொழி லுரித்துயர்ந்தோர் மேன.

என்பது,

அந்தணர் அரசர் வைசியர் வேளாளர் நான்கு வருணத்தாருள் வேதமோதுந்தொழில் பின்னவரொழிய முன்னுயர்ந்தோராகிய மறையோர் மன்னர் வணிகர் இம்மூவருக்கு முரியன. (௪௩)

எல்லார்க்கு முரியன விவையலபிறவே.



என்பது,

வேதநூலல்லாத பிறவாகிய நூல்களெல்லாம் முற்கூறிய அந்தணர் முதலிய நான்குவருணத்தார்க்குமுரியன. (௪௪)

அயில்வேலத்திரமவா ளொடுபயிறல்
கலினவாம்புரவி கரிதேரூர்த
லுடைத்தொழிலவர்க் கெனவுரைத்திசினோரே.

என்பது,

அத்திர சத்திர வித்தைத் தொழிலைக்கற்றலும் யானையேற்றம் குதிரையேற்றம் தேரேறிச்செலுத்தல் நாவினாற் கற்குந்தொழில் அல்லாத தொழில்கள் அந்தணரொழித்தொழிந்த மூவர்க்குமுரியன.

காவலறப்புறங் காவலுநாடு
காவலுமெனவிருவகைப்படுமெனலே.

என்பது,

காவல் அறப்புறங்காவல் நாடுகாவல் என இரண்டுவகைப்படும்.

அவற்றுள்,

அறப்புறங்காவலனைவர்க்குமுரித்தே.

என்பது,

முற்கூறியவற்றுள் அறப்புறங்காவல் அந்தணர் முதலிய நால்வர்க்கு முரியன. (௪௭)

ஏனையகாவ லிறைவர்க்குரிய.

என்பது,

நாடுகாவல் அரசருக்குரியன. (௪௮)

இருபிறப்பாளரிறைவனென்றிருவர்க்குந்
தூதுபோதற் றொழிலுரித்தாகும்.

என்பது,

வேற்றரசர்க்குத் தூதுபோய்க் கூறல் அந்தணர் அரசர்க்கு முரியன. (௪௯)

பெருமானுற் சிறப்புப்பெயர்பெறினே
யொழிந்தோரிருவர்க்கு முரியவாகும்.

என்பது,

நாடுகாவல் தூதுபோதல் அரையனுற் சிறப்புப் பெயர் பெற்றவ ராயின் வணிகர் சூத்திரர்க்கும் உரியன. (௫௦)

புறத்திணை யகத்திணைப்புறமாகும்மே.

என்பது,

அகத்திணைப்புறன் புறத்திணை. (௫௧)

அதுதான்,

வெட்சிகரந்தை வஞ்சிகாஞ்சி
நொச்சியுழிஞை தும்பைவாகை
யெச்சப்படல மோடிவையெனமொழிப.

என்பது,

அதுதான் வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி நொச்சி உழிஞை தும்பை வாகை ஆம். (௫௨)

அவற்றுள்,

போகிப்பகைவ ரூர்ப்புக்கவர்நிரையைக்
கவர்தல்வெட்சியாங் கிளறுங்காலே.

என்பது,

பகைவர் நாட்டிற் போய்ப்புக்கு அவர் நிரையை ஓட்டிக்கொண் டுவரல் வெட்சிமாலை. (௫௩)

பகைவர்கவர்ந்த தன்பசுக்களைமீட்டல்
கரந்தையென்மனுர் கற்றுணர்ந்தோரே.

என்பது;

பகைவ ரோட்டிக்கொண்டுபோன தனது நிரையை மீட்டல் கரந்தை. (௫௪)



மாற்றார்மேற்செலல் வஞ்சியாகும்மே.

என்பது,

பகைவர்மேற்செலல் வஞ்சி. (௫௫)

இரைந்துபகைவரோ டெதிர்ப்பதுகாஞ்சி.

என்பது,

ஆரவாரித்துப் பகைவரோடெதிர்த்தல் காஞ்சி. (௫௬)

காமருதன்னரண் காப்பதுநொச்சி.

என்பது,

தனது கோட்டையைக் காத்தல் நொச்சி. (௫௭)

பகைஞரரணைப் பற்றுதலுழிஞை.

என்பது,

பகைவர் கோட்டையைப் பிடித்துக்கொள்ளல் உழிஞை. ()

அதிரப்பொருவது தும்பையாகும்.

என்பது,

பகைவர் நடுங்க யுத்தஞ்செய்தல் தும்பை. (௫௯)

மாற்றாரோட வருத்திவெல்வது
வாகையெனப்பெயர் வைக்கப்படுமே.

என்பது,

வருத்தமெய்திப் பகைவர் பின்னிட்டோட வெற்றிகொளல் வாகை. (௬௦)

அகவொழுக்கவியன் 13-12

முற்றும்.

## இரண்டாவது.

# களவொழுக்கவியல்.

அளவிலின்பத் தைந்திணைமருங்கிற்
களவுகற்பெனவிரு கைகோள்வழங்கும்.

என்பது,

அளவில்லாத வின்பத்தையுடைய குறிஞ்சி முதலிய ஐந்திணைக்கண் களவு கற்பு எனவிரண்டு கைகோள் வழங்கும். (௧)

அவற்றுட்களவந்தணர் மறைமன்ற
லெட்டனுள்யாழோ ரியல்பினதாகும்.

என்பது,

முற்கூறியவிரண்டனுள் களவாவது பூசுரர்வேதம் ஓரிடத்துக்கூறிய கலியாணம் பிரமம் பிரசாபத்தியம் ஆரிடம் தெய்வம் காந்தருவம் ஆசுரம் இராக்கதம் பைசாசம் எட்டனுள் யாழினையுடைய பிரிவின்மையோரது தன்மையாம். (௨)

தொல்காப்பியம்.

இன்பமும்பொருளு மறனுமென்றாங்
கன்பொடுபுணர்ந்த வைந்திணைமருங்கிற்
காமக்கூட்டங் காணுங்காலை
மறையோர்தேஎத்து மன்றலெட்டனுட்
டுறையமைநல்யாழ்த் துணைமையோரே.

என்றாராகலின்

பெருமையுமுரனு மாடூஉமேன.

என்பது,

அறிவும் ஆற்றலும் புகழும் கொடையும் ஆராய்தலும் பண்பும் நண்பும் பழிபாவக் கஞ்சன் முதலியனவாய் மொழிமேற்படும் பெருமைப்பகுதியும் கடைப்பிடியும் நிறையும் கலங்காது துணிதலும் முதலிய வலியினது பகுதியுந்தலைவனிடத்ததாம். (௩)

அச்சமுநாணு மடனுந்துறத்த
நிச்சமும்பெண்பாற் குரியவென்ப.



என்பது,

அன்புகாரணத்திற்றோன்றிய அச்சமும் காமக்குறிப்பு நிகழ்ந்தவழிப்படுவதோருள்ள வொடுக்கமும், செவிலியர் கொளுத்தக்கொண்டு கொண்டது விடாமையும் இம்மூன்றுமுதலியன நிச்சமும் பெண்பாற் குரியன. (௪)

வேட்கையொருதலை யுள்ளுதன்மெலித
லாக்கஞ்செப்ப னாணுவரையிறத்த
னோக்குவவெல்லா மவையேபோறன்மறத்தன்
மயக்கஞ்சாக்கா டென்றிச்சிறப்புடை
மரபினவைகள வாமெனமொழிப.

என்பது,

புணராதமுன்னும் புணர்ந்தபின்னும் இருவருக்கு நிகழ்ந்து ஒருதன்மைத்தாகிய நிலைபெறும் வேட்கையும், ஒருவரொருவரை இடைவிடாது சிந்தியாநிற்றலும்; அங்ஙனமுள்ளுதல் காரணத்தான் உடம்புவாடுதலும், யாதானுமோரிடையூறு கேட்டவழி அதனையாக்கமாக நெஞ்சிற்கூறிக்கோடலும், ஆற்றாந்துணையுநாணி அல்லாத வழியதன் வரையிறத்தலும், பிறர்தம்மைநோக்கிய நோக்கெல்லாந்தம்மனத்துக்கரந்தொழுகுகின்றவற்றையறிந்து நோக்குகின்றாரெனத் திரியக்கோடலும், விளையாட்டு முதலியவற்றான் மறத்தலும், செய்திறனறியாதுகையற்றுப் புள்ளுமாவு முதலியவற்றொடு கூறலும், மடலேறுதலும் வரைபாய்தலும் போல்வன கூறலும் என்றுகூறப்பட்ட அத்தச்சிறப்புடைத்தான முன்றமையினையுடைய ஒன்பதும் களவொழுக்கமாம். (௫)

அகப்பொருள்விளக்கம்.

இயற்கைப்புணர்ச்சி யிடந்தலைப்பாடு
பாங்கற்கூட்டம் பாங்கியிற்கூட்டமென்
றுணர்த்தியகளவிற் புணர்ச்சிநால்வகைத்தே.

என்றாராகலின்.

இயற்கைப்புணர்ச்சி தெய்வத்தினெய்துழி
முயற்சியின்றி முடிவதாகும்.
காட்சியையந்துணிவு குறிப்பறிவென
மாட்சிநான்கு வகைத்தேதகைக்கிளை.
கலந்துழிமகிழ்தலு நலம்பாராட்டலு
மேற்புறவணிதலு மென்னுமிம்மூன்றும்
போற்றியதெய்வப் புணர்ச்சியின்விரியே.

### தொல்காப்பியம்.

நாட்டமிரண்டுமறிவுடன் படுத்தற்குக்
கூட்டியுரைக்குங் குறிப்புரையாகும்.

என்றுராகலின்.

இயற்கைபாங்க னிடந்தலைமதியுட
னிருவருமுள்வழி யவன்வரவுணர்தன்
முன்னுறவுணர்தல் குறையுறவுணர்த
னன்னிலைநாண நடுங்கநாட்ட
மடல்குறைநயப்பு வழிச்சேட்படுத்த
லிடமிகுபகற்குறி யிரவுக்குறியோ
டொருவழித்தணத்த லுடன்கொண்டேகல்
வரைவுமுடுக்கம் வரைபொருட்பிரிதன்
மணஞ்சிறப்போதல் வார்புவிகாவ
லிணங்கலர்ப்பொருத்த வேந்தற்குற்றுழிப்
பொருள்வயிற்பிரிதல் பரத்தையிற்பிரிதலென்
றருள்வயிற்சிறந்த வகத்திணைமருங்கி
னிருள்றுநிகழ்ச்சி யிவையெனமொழிப.

என்பது,

இயற்கைப்புணர்ச்சி, பாங்கற்கூட்டம், இடந்தலைப்பாடு, மதியுடன்படுத்தல், இருவருமுள்வழியவன் வரவுணர்தல், முன்னுறவுணர்தல், குறையுறவுணர்தல், நாணநாட்டம், நடுங்கநாட்டம், மடல், குறை நயப்பித்தல், சேட்படை, பகற்குறி, இரவுக்குறி, ஒருவழித்தணத்தல், உடன்போக்கு, வரைவுமுடுக்கம், வரைபொருட்பிரிதல், மணஞ்சிறப்புரைத்தல், ஓதற்பிரிதல், காவற்பிரிதல், பகைதணிவினைப்பிரிதல், வேந்தற்குற்றுழிப்பிரிதல், பொருள்வயிற்பிரிதல், பரத்தையிற்பிரிதல் ஆகிய விருபத்தைந்தும் அகத்திணை நிகழ்ச்சியாம். (௬)

முற்கூறியவற்றுள் இயற்கைப்புணர்ச்சியென்பது, தலைமகனும் தலைமகளும் பொழிலிடத்தெதிர்ப்பட்டுத் தெய்வமிடைநிற்பப் பான்மைவழியோடி ஓராவிற் கிருகொம்பு தோன்றினாற்போலத் தம்முளொத்த வன்பினராய் அவ்விருவரொத்தார் தம்முட்டாமே கூடுங் கூட்டம்.

காட்சியையந் தெளிதனயப்பே
யுட்கோடெய்வந் துணிதல்கைக்கிளை

என்பது,

காட்சி ஐயம் தெளிதல் நயப்பு உட்கோள் தெய்வத்தை மகிழ்தல் புணர்ச்சி துணிதல் ஆகிய, ஏழுங் கைக்கிளை.



காட்சியென்பது,

தலைமகளைத் தலைமகன் கண்ணுற்றது.

வாலாறு: திருவளர்தாமரை. திருக்கோவையார் முதனிலைப்பு.

ஐயமென்பது

கண்ணுற்றபின்றை இங்ஙனந்தோன்றிய இம்மாது யார்கொல்லென ஐயுற்றது.

வாலாறு. போதோ விசும்போ. (உ)

தெளிதல் என்பது,

ஐயுற்றபின் அவயவமியங்குநோக்கித் தெய்வமல்லளெனத் தெளிதல்.

வாலாறு. பாயும் விடையரன். (௩)

நயப்பு என்பது.

தெய்வமல்லளெனத் தெளிந்தபின்றை மக்களுள்ளாளென்று நயந்துசென்று எய்த நினையாநிற்றல்.

வாலாறு. அகல்கின்ற வல்குல். (௪)

உட்கோள் என்பது.

மக்களுள்ளாளென்று நயந்துசென்றெய்த நினையாநின்றவன், தன்னிடத்து அவளுக்குண்டாகியகாதல் அவள் கண்ணிற்கண்டு தன்னுட்கொள்ளாநிற்றல்.

வாலாறு. அணியுமமிழ்தும். (௫)

தெய்வத்தை மகிழ்தல் என்பது.

உட்கொண்டு நின்று, என்பால் விருப்பமுடைய இவளைத்தந்த தெய்வத்தையல்லது வேறொருதெய்வத்தை விரும்பேனெனத் தெய்வத்தை மகிழ்ந்துகூறல்.

வாலாறு. வளைபயில் கீழ்கடல். (௬)

புணர்ச்சிதுணிதல் என்பது,

தெய்வத்தை மகிழாநின்றவன், இது நமக்குத் தெய்வப்புணர்ச்சியெனத் தன்னகக்கட்கூறி அவளொடு புணரத்துணியாநிற்றல்.

வாலாறு. ஏழுடையான்பொழில். (எ)

கலவியுரைத்தலு மிருவயினொத்தலுங்
கிளவிவேட்டலு நலம் புனைந்துரைத்தலும்
பிரிவுணர்த்தலொடு பருவரலறிதலு
மருட்குணமுரைத்தலு மணிமைகூறலு
மாடிடத்துய்த்தலு மருமையறிதலும்
பாங்கியையறிதலும் பகருங்காலை
நீங்காவியற்கை நெறியெனமொழிப.

என்பது,

கலவியுரைத்தல், இருவயினொத்தல், கிளவிவேட்டல், நலம் புனைந்துரைத்தல், பிரிவுணர்த்தல், பருவரலறிதல், அருட்குணமுரைத்தல், இடமணித்தென்றல், ஆடிடத்துய்த்தல், அருமையறிதல், பாங்கியையறிதல், ஆகிய பதினொன்றும், இயற்கைப்புணர்ச்சியாம்.

கலவியுரைத்தல் என்பது,

தெய்வப்புணர்ச்சி புணர்ந்த தலைமகன், புணர்ச்சியின் பத்தினியல்புகூறா நிற்றல்.

வாலாறு. சொற்பாலமுதிவள்யான். (க)

இருவயினொத்தல் என்பது,

புணராதமுன்னின்ற வேட்கையன்பு, புணர்ந்தபின்னும், அப்பெற்றியேநின்று, வளர்ந்துசேறலால், தலைமகளை மகிழ்ந்துகூறல்.

வாலாறு. உணர்ந்தார்க் குணர்வரியோன். (உ)

கிளவிவேட்டல் என்பது,

இருவயினொத்து இன்புற்றதலைமகன் உறுதன்முதலிய நான்கு புணர்ச்சியும் பெற்றுச் செவிப்புணர்ச்சி பெறாமையினொருசொல் விரும்பிவருந்தல்.

வாலாறு. அளவியையார்க்கும். (ங)

நலம்புனைந்துரைத்தல் என்பது.

கிளவி விரும்பி வருந்தக்கண்ட தலைமகள் முறுவல் செய்யத், தலைமகனது பெற்றுச், சொல்லாடாமையான் உண்டாகிய வருத்த நீங்கி, இவள்வாய்போனறும் ஆம்பற்பூக்களும் உளவோவென வண்டொடு வினவல்.

வாலாறு. கூம்பலங் கைத்தலத்து. (ச)



பிரிவுணர்த்தல் என்பது.

ஐவகைப்புணர்ச்சியும் பெற்று ஒத்தவன்பினனாய் நின்ற தலைமகன், தனதாதரவினால் நலம்பாராட்டக் கேட்டுத், தலைமகள் நாணி வருந்தாநிற்பக்கண்டு, அவட்குப் பிரிவின்மைகூறல்.

வாலாறு. சிந்தாமணிதெண். (ரு)

பருவரலறிதல் என்பது.

பிரிவின்மை கூறக்கேட்ட தலைமகள், பிரிவென்பதும் ஒன்றுண்டுபோலுமென வுட்கொண்டு, முன்னுணினாற் சென்றெய்திய வருத்தநீங்கிப் பெரியதோர் வருத்தமெய்த, அதுகண்டிவள் மேலுமேலும் வருந்துகின்றது பிரிந்தாற்கூடுதல் அரிதென்றோ? அறிகிலேனென அவள் வருத்தமறியாநிற்றல்.

வரலாறு. கோங்கிற்பொலியரு. (சா)

அருட்குணமுரைத்தல் என்பது.

இற்பழியாமென்று நினைந்தோ என்று கூறக்கேட்ட தலைமகள், இது நந்தோழியறியின் என்னாங்கொலெனப் பிரிவுட்கொண்டு பிரிவாற்றாதுவருந்த, அக்குறிப்பறிந்து, அவள் பிரிவுடம்படுவது காரணமாகத்தலைமகன் யாம் பிரிந்தேமாயினும் பிரிவில்லையெனத் தெய்வவருள் கூறல்.

வரலாறு. தேவரிற் பெற்றநம். (எ)

இடமணித்தென்றல் என்பது.

அருட்குணங்கூறி வற்புறுத்தவும் ஆற்றாமைநீங்காத தலைமகட்கு, நம்மூரிடத்திற் கெம்மூரிடமித் தன்மைத்தெனத் தன்னூரின்அணிமைகூறி வற்புறுத்தல்.

வரலாறு. வருங்குன்றமொன்று. (அ)

ஆடிடத்துய்த்தல் என்பது.

அணிமைகூறி நீங்கினேன், இனிநீமுற்பட்டு விளையாடு, யானிங்ஙனம்போய் அங்ஙனம் வருகிறேனென அவளையாடிடத் துய்த்தல்.

வரலாறு. தெளிவளர் வான்சிலை. (கூ)

அருமையறிதல் என்பது.

ஆடிடத்துய்த்து அகன்றவன், ஆயவெள்ளத்தையும் அவ்விடத்தையும் நோக்கி, இவளையா னெய்தினேனென்பது இன்னதென்றறி

யேன், இனியிவள் நமக்கெய்தற்கரியவளென, அவளருமை யறிந்து வருந்தல்.

வரலாறு. புணர்ப்போனிலனும். (க0)

பாங்கியையறிதல் என்பது.

அருமையறிந்து வருந்திய தலைமகன், ஆயத்தோடு செல்லும் தலைமகளை நோக்க, அந்நிலைமைக்கண் அவளுமிப்புணர்ச்சி இவளுக்கு வெளிப்படுமோவென வுட்கொண்டு, எல்லாரையும்போலன்றித் தன் காதற்றோழியைப் பல காற்கடைக் கண்ணோக்க நோக்கி, இவள் போலும் இவட்குச்சிறந்தாள், இதுவுமெனக்கோர் சார்பாமெனவுட்கொண்டு, அவள் காதற்றோழியை யறியாநிற்றல்.

வரலாறு. உயிரொன்றுளமும். (கக)

அ. இயற்கைப்புணர்ச்சி முற்றும்.

இனிப்பாங்கற்கூட்டம் வருமாறு.

புணர்ச்சி புணர்ந்த தலைமகன் தெருண்டு வரைதலைத் தெருளானாயின், தன் பாங்கனானுதல், இடந்தலைப் பாட்டானுதல், இரண்டனுளொன்றாற் சென்றெய்தன் முறை.

பாங்கற் கூட்டம்=பாங்கற் கூட்டமாவது,

நினைதலும் வினுதலு முற்றதுரைத்தலும்
கழறன்மறுத்தலுங் கவன்றுரைத்தலும்
வலியழிவுரைத்தலும் விதியொடுவெறுத்தலு
நொந்துகூறலு நோதனீங்கி
யியலிடங்கேட்டலு மியலிடங்கூறலும்
வற்புறுத்தலுங் குறிவழிச் சேறல்காண்டலும்
வியந்துரைத்தலு மெல்லியறன்னைக்
கண்டமைகூறலுங் கருத்துக்கேற்பச்
செவ்விசெப்பலு மவ்விடத்தேகலு
மீங்கிவை நிற்பவிடந்தலைதனக்கு
மாங்கவண் மெலிதலும் பொழில்கண்டுமகிழ்தலு
நீங்காமகிழ்வொடு நிலைகண்டுவியத்தலுந்
தளர்வகன்றுரைத்தலு மொழிபெறவருந்தலுங்
கண்புதைக்கவருந்தலு நாணிடவருந்தலு
நண்பொடுசென்றுபோய் நன்மருங்கணைதலு
மின்றியமையாமை யியம்பலுமாயத்
துய்த்தலுநின்று வருந்தலும்பிறவுந்
துன்றுபாங்கற் றுறையெனமொழிப



என்பது,

பாங்கனைநினைதல், பாங்கன்வினுதல், உற்றதுரைத்தல், கழறியுரைத்தல், கழற்றெதிர்மறுத்தல், கவன்றுரைத்தல், வலியழிவுரைத்தல், விதியொடுவெறுத்தல், பாங்கனொந்துரைத்தல், இயலிடங்கேட்டல், இயலிடங்கூறல், வற்புறுத்தல், குறிவழிச்சேறல், குறிவழிக்காண்டல், தலைவனை வியந்துரைத்தல், கண்டமைகூறல், செவ்விசெப்பல், அவ்விடத்தேகல் இப்பதினெட்டுக்கிளவியும் நிற்க, இடந்தலைதனக்கும், மின்னிடைமெலிதல், பொழில்கண்டுமகிழ்தல், உயிரெனவியத்தல், தளர்வகன்றுரைத்தல், மொழிபெறவருந்தல், நாணிக்கண் புதைத்தல், கண்புதைக்கவருந்தல், நாணிடவருந்தல், மருங்கணைதல், இன்றியமையாமைகூறல், ஆயத்துய்த்தல், நின்றுவருந்தல், ஆகிய முப்பதும் பாங்கற் கூட்டமாம்.

பாங்கனைநினைதல் என்பது.

தெய்வப்புணர்ச்சியி னிறுதிக்கட்சென்றெய்துதற் கருமைநினைந்து வருந்திய தலைமகன், அவள் கண்ணுலறியப்பட்ட காதற்றோழியை நயந்து, இவளவட்குச் சிறந்ததுணையன்றே, அத்துணை எனக்குச் சிறந்தாளல்லள், எனக்குச் சிறந்தானைக்கண்டு கூறின், பின்னிவளைச் சென்றெய்தக் குறையில்லையெனத் தன் காதற்பாங்கனை நினைதல்.

வரலாறு. பூங்கனையார்புனல். (க)

பாங்கன்வினுதல் என்பது.

தன்னை நினைந்துவாராநின்ற தலைமகனைத்தானெதிர்ப்பட்டு, அடிமுடிகாறநோக்கி, நின்னுடைய தோள்கண்மெலிந்து நீயிவ்வாறுதற்குக் காரணமென்னோவென்று பாங்கன்முற்பட்டு வினவல்.

வரலாறு. சிறைவான் புனற்றில்லை. (உ)

உற்றதுரைத்தல் என்பது.

எதிர்ப்பட்டுவினவியபாங்கனுக்கு, நெருநல்லைகலைப்பொழிற் கட்சென்றேன், அவ்விடத்தொரு சிற்றிடைச் சிறுமான் விழிக்குறத்தியால் இவ்வாறுயினேனெனத் தனக்குற்றது கூறல்.

வரலாறு. கோம்பிக்கொதுங்கி. (௩)

கழறியுரைத்தல் என்பது.

உற்றதைப்பக்கேட்டபாங்கன், இவன் தலைமைப்பாட்டிற்குப் போதாதென வுட்கொண்டு, நீயொருசிறுமான்விழிக்கு யானிவ்வாறுயினேனென்றல் நின்கற்பனைக்குப் போதாதெனக்கழறியுரைத்தல்.

வரலாறு. உளமாம்வகைகம்மை. (ச)

## கழற்றெதிர்மறுத்தல் என்பது.

காதற்பாங்கன் கழறவுங்கேளானாய்ப் பின்னும் வேட்கைவயத்தனாய் நின்று, என்னாற், காணப்பட்டவடிவை நீகண்டிலை கண்டனையாயிற் கழறாயென்று, அவனோடு மறுத்துரைத்துவருந்தல்.

வரலாறு. சேணிற்பொலி செம்பொன். (ரு)

## கவன்றுரைத்தல் என்பது.

மறுத்துரைத்து வருந்தாநிற்பக்கண்ட பாங்கன், ஒருகாலத்துங் கலங்காத உள்ளமிவ்வாறு கலங்குதற்குக் காரணமென்னோவெனத் தலைவனொடு கூறல்.

வரலாறு விலங்கலைக்கால்விண்டு. (சு)

## வலியழிவுரைத்தல் என்பது.

பாங்கன்கவன்றுரையாநிற்ப, முன்பு இத்தன்மையேனாகியயானின்றொருசிறுமான்விழிக்கு இவ்வாறாயினேனெனத், தலைமகன்றன் வலியழிந்தமை கூறிவருந்தல்.

வரலாறு: தலைப்படுசால்பி. (எ)

## விதியொடுவெறுத்தல் என்பது.

வலியழிந்தமை கூறிவருந்திய தலைமகன், பாங்கனோடுபுலந்து வெள்கி, யான்செய்தநல்வினையும் வந்துபயன்றந்ததில்லையென விதியொடுவெறுத்துக்கூறல்.

வரலாறு. நல்வினையுநயம். (அ)

## பாங்கனேர்ந்துரைத்தல் என்பது.

விதியொடுவெறுத்து வருந்தி நிற்பக்கண்டபாங்கன், அமுதமுமழையும் தங்குணங்கெடினும் நின்குணங்கெடாதநீ, ஒருத்திகாரணமாகநின்சீலத்தை நினையாதவாறு இவ்வாறாகியது, எனது தீவினையின் பயனோ மித்தனையன்றோவெனத், தானுமவனொடுகூடவருந்தாநிற்றல்.

வரலாறு. ஆலத்தினலமிர். (கூ)



## இயலிடங்கேட்டல் என்பது.

தலைமகனோடு கூடவருந்தும் பாங்கன், நானும் இவனோடுவருந்தினாலிவனை ஆற்றுவிப்பாரில்லையென, அதுபற்றுக்கோடாகத்தானாற்றி நின்று, நின்னாற்காணப்பட்ட வடிவுக்கியல்யாது, இடம்யாது, கூறுகவென, அவனுடைய இயலும் இடமும் கேளாநிற்றல்.

வரலாறு. நின்னுடைநீர்மையும். (கo)

## இயலிடங்கூறல் என்பது.

இயலிடங் கேட்டபாங்கனுக்குத், தானவளை எய்தினாற்போலப் பெரியதோர் ஆற்றுதலையுடையனாய், என்னாற்காணப்பட்ட வடிவுக்கு இயலிவை, இடமிது என்று இயலும் இடமும் கூறல்.

வரலாறு. விழியாற் பிணையாம். (கக)

## வற்புறுத்தல் என்பது.

இயலிடங்கூறக் கேட்டபாங்கன், நீசொன்னகைலையிற்சென்று இப்பெற்றியாளைக்கண்டு இப்பொழுதேவருவன், அவ்வளவும் நீ யாற்றவேண்டுமெனத்தலைமகனை வற்புறுத்தல்.

வரலாறு. குயிலைச்சிலம்படி. (கஉ)

## குறிவழிச்சேறல் என்பது.

தலைமகனை வற்புறுத்தி, அவன் குறிவழிச் செல்லாநின்ற பாங்கன், இத்தன்மையாளை யான் அவ்விடத்துக் காணலாங்கொல் என, அந்நினைவோடு செல்லாநிற்றல்.

வரலாறு. கொடுங்கால் குலவரை. (கங)

## குறிவழிக்காண்டல் என்பது.

குறிவழிச் சென்றபாங்கன், தன்னை யவள் காணாமல் தானவளைக்காண்பதோர் அணிமைக்கண் நின்று, அவன் சொன்னவிடமும் இதுவே, இயலும் இவையே, இவளுமவளே என்று ஐயமறத்தெளியக்காணா நிற்றல்.

வரலாறு. வடிக்கணிவைவஞ்சி. (கச)

## தலைவனை வியந்துரைத்தல் என்பது.

குறிவழிக்கண்டபாங்கன், இவ்வுருப்புக்களையுடைய இவளைக் கண்டுபிரிந்து இங்குநின்றங்குவந்து, யான்கழறவுமாற்றி, அத்தனையுந்தப்பாமல் சொன்ன அண்ணலே திண்ணியானெனத், தலைமகனை வியந்துகூறல்.

வரலாறு. குவளைக்களத்தம். (௧௫)

### கண்டமைகூறல் என்பது.

தலைமகனை வியந்துரைத்த பாங்கன், விரைந்துசென்று, தானவளைக்கண்டமை தலைமகனுக்குப் பிடிமிசைவைத்துக் கூறாநிற்றல்.

வரலாறு. பணந்தாழரவரை. (௧௬)

### செவ்விசெப்பல் என்பது.

பிடிமிசைவைத்துக் கூறக்கேட்ட தலைமகன், தனக்குச் செவ்விபோதாமையிற் பின்னும் ஆற்றாமை நீங்கானாயினான், அதுகண்டு அவனையாற்றுவிப்பது காரணமாக அவனுக்கு அவயவம் கூறாநிற்றல்.

வரலாறு. கயலுளவேகமல. (௧௭)

### அவ்விடத்தேகல் என்பது.

செவ்வி செப்பக்கேட்ட தலைமகன், இவ்வாறு காணப்பட்டது உண்டாயின், அஃதென்னுயிரெனத் தானவ்விட நோக்கிப்போதல்.

வரலாறு. எயிற்குல மூன்றிரும். (௧௮)

### மின்னிடைமெலிதல் என்பது.

நெருநல் தலையளிசெய்து, நின்னிற்பிரியேன், பிரியினும் ஆற்றேனென்றுகூறிப் பிரிந்தவர், வேட்கைமிகுதியால் இடமறியாது ஆயத்திடை வருவார்கொல்லோ என்னும் பெருநாணினானும், ஆற்றாமையான் இறந்துபட்டார் கொல்லோவென்னும் பேரச்சத்தினானும், யாருமில்லொரு சிறைத்தனியே நின்று, தலைமகனை நினைந்து, தலைமகள் மெலியாநிற்றல்.

வரலாறு. ஆவியனாய்கவ. (௧௯)

### பொழில்கண்டுமகிழ்தல் என்பது.

தலைமகளைநோக்கிச் செல்லாநின்ற தலைமகன், முன்னைநாளவளைக் கண்ணுற்றபொழிலைச் சென்றணைந்து, பொழிலிடைய வளுறுப்புக்களைக்கண்டு, இப்பொழிலென் சிந்தனைக்கவடானே யெனத் தோன்றாநின்றதென்று, அளவில்லாத இன்பமடைந்துநிற்றல்.

வரலாறு. காம்பிணையார்களி. (௨௦)

### உயிரெனவியத்தல் என்பது.

பொழில்கண்டுமகிழ்ந்து, அப்பொழிலிடைச்சென்று புக்கு, அவளைக்கண்டதுணையான், என்னுயிரிவ் வாறுசெய்தோநிற்பதென வியந்துகூறாநிற்றல்.



வரலாறு. நேயத்ததாய். (௨௧)

### தளர்வகன்றுரைத்தல் என்பது.

உயிரெனவியந்து சென்று, பூக்கொய்தன் முதலிய விளையாட்டையொழிந்து, யாருமில்லொரு சிறைத்தனியே நின்று, இவர் செய்யாநின்ற பெரிய தவம்யாதோவென, அவளைப் பெரும்பான்மைகூறித்தளர்வு நீங்காநிற்றல்.

வரலாறு. தாதிவர்போது. (௨௨)

### மொழிபெறவருந்தல் என்பது.

தளர்வுநீங்கியபின்னர் சார்தலுறாநின்றவனோடு, சொற்பெறுமுறையாற்சென்று சாரவேண்டிப், பின்னும் அவளைப் பெரும்பான்மைகூறி, ஒரு சொல்வேண்டிவருந்தாநிற்றல்.

வரலாறு. காவிநின்றேர்தரு. (௨௩)

### நாணிக்கண்புதைத்தல் என்பது.

தலைமகன் தன்முன்னின்று பெரும்பான்மைகூறக்கேட்ட தலைமகள் பெருநாணினளாதலின், அவன் முன்னிற்கலாகாது நாணி, ஒருகொடியினொதுங்கித், தன்கண்புதைத்து வருந்தாநிற்றல்.

வரலாறு. அகலிடந்தாவிய. (௨௪)

### கண்புதைக்கவருந்தல் என்பது.

தலைமகள்நாணிக் கண்புதைக்க, இவள் கண்புதைக்கின்றது தன்னுடைய கண்களென்னை வருத்தத்தைச் செய்யுமென்றாகாதேயென வுட்கொண்டு, யான்வருந்தாதொழிய வேண்டுவையாயின், நின் மேனிமுழுதும் புதைப்பாயெனத் தலைமகன் வருத்தமிகுதிகூறல்.

வரலாறு. தாழச்செய்தார்முடி. (௨௫)

### நாண்விடவருந்தல் என்பது.

தலைமகன் தனதாற்றாமை மிகுதிகூறக்கேட்டு, ஒருநாளுந் தன்னைவிட்டு நீங்காத நாண் அழலைச்சேர்ந்தமெழுகுபோலத் தன்னைவிட்டு நீங்கா நிற்பத், தலைமகளதற்குப் பிரிவாற்றாது வருந்தல்.

வரலாறு. குருநாண் மலர்ப்பொழில். (௨௬)

### மருங்கணைதல் என்பது.

தலைமகள் நாணிழந்து வருந்தச்சென்று கூடலாகாமையின், தலைமகன்றன்னாதரவினால் வருத்தந் தணிப்பான்போன்று, முலையொ

டுமுனிந்து, ஒருகையாலிருமருங்குல் தாங்கியும், ஒருகையாலளிக் குலம்விலக்கி யளகந்தொட்டும் சென்றணையாநிற்றல்.

வரலாறு. கோலத்தனிக்கொம்பர். (உஎ)

இன்றியமையாமைகூறல் என்பது.

புணர்ச்சியிறுதிக்கண், விசும்புநிலனு மொருங்குபெறவரினும், இம்மூவுலகனை மறந்து அதன்கண் முயலேனென்னப், பிரிவு தோன்றத் தலைமகன் இன்றியமையாமை கூறல்.

வரலாறு. நீங்கரும்பொற்கழல். (உஅ)

ஆயத்துய்த்தல் என்பது.

இன்றியமையாமை கூறிப் பிரியலுற்றான், இனிப்பல சொல்லியென்னை, என்னுயிர் நினக்கடிமையாயிற்று, இனிச்சென்று நின்னாயத் திடைச்சேர்வாயாக வெனத், தன்பிரிவின்மை கூறித் தலைமகளையாயத் துய்த்தல்.

வரலாறு. சூளாமணியும்பர். (உகூ)

நின்றுவருந்தல் என்பது.

தலைமகளையாயத்துய்த்துத். தானவ்விடத்தினின்று, அப்புனத்தியல்பு கூறித் தலைமகன் பிரிவாற்றாது வருந்தா நிற்றல்.

வரலாறு. பொய்யுடையார்க்கரன். (௩௦)

௯. பாங்கற்கூட்ட முற்றும்.

இடந்தலைப்பாடு.

பொழிலிடைச்சேற விடந்தலைசொன்ன
வழியொடுகூட்டி வகுத்திசினோரே.

என்பது,

பொழிலிடைச் சேறலொன்றும் இடந் தலைப்பாட்டிற்கே யுரியது, இதனையுமேலைப் பாங்கற் கூட்டமுணர்த்திய சூத்திரத்தில், ஈங்கிவை நிற்ப இடந்தலை தனக்கு மெனக்கூறியவாறே, மின்னிடைமெலிதன்முதல் நின்றுவருந்த லீறாகக் கூறிய கிளவிகளோடு கூட்டி, இடந்தலைப்பாடா மென்றியம்புக. அவை பாங்கற் கூட்டத்திற்கும் இடந்தலைப்பாட்டிற்கும் உரியவாமா றென்னை யெனின்; பாங்கற் கூட்ட நிகழாதாயின் இடந்தலைப்பாடு நிகழும், இடந் தலைப்பாடு நிகழாதாயின் பாங்கற்கூட்ட நிகழுமென் றுணர்க.



பொழிலிடைச்சேறல் என்பது.

இயற்கைப்புணர்ச்சியிறுதிக்கட்சென்று எய்துதற்கருமைநினைந்துவருந்தாநின்றதலைமகன், இப்புணர்ச்சி நெருநலுமென்னறிவோடுகூடியமுயற்சியான்வந்ததன்று, தெய்வந்தரவந்தது, இன்னும் அத்தெய்வந்தானே தரும்,யாம்பொழிலிடைச்செல்வேமெனத். தன்னெஞ்சொடுகூறாநிற்றல்.

வரலாறு. என்னறிவால்வந்த (க)

க௦. இடந்தலைப்பாடு முற்றும்.

மதியுடம்படுத்தல் வருமாறு.

இரண்டனுளொன்றாற் சென்றெய்திய பின்னர்த் தெருண்டுவரைதலைத்தெருளானாயின்,அவள் கண்ணாற் காட்டப்பட்ட காதற்றோழியை வழிபட்டுச் சென்றெய்து தன்முறைமையென்ப. வழிபடுமாறு-தெற்றெனத் தன்குறை கூறாதிரந்து வைத்துக், கரந்த மொழியாற்றன் கருத்தறிவித்து, அவளையை யவுணர்வினளாக்கி, அதுவழியாகநின்று தன்குறைகூறல்.

சேறறுணிதலுஞ் சிந்தாம்வினாதலும்
பெருமான்வழிபதி பெயர்பிறவினாதலு.
மொழிபெறாதியம்பலுங் கருத்தறிவித்தலு
மிடைவினாதலு மிவையிரு நான்கிரண்டு
மடவரறோழிக்குமதியுடம்படுத்தல்.

என்பது,

பாங்கியிடைச்சேறல், குறையுறத்துணிதல், வேழம்வினாதல், கலைமான்வினாதல், வழிவினாதல், பதிவினாதல், பெயர்வினாதல், மொழிபெறாதியம்பல், கருத்தறிவித்தல், இடைவினாதல் ஆகிய பத்து மதியுடம்படுத்தல்.

அவற்றுள்,

பாங்கியிடைச்சேறல் என்பது.

இரண்டனுளொன்றாற் சென்றெய்திப் புணர்ந்து நீங்கிய தலைமகன், இனியிவளைச் சென்றெய்து தலன்றி, யாமவள் கண்ணாற்காட்டப்பட்ட காதற்றோழிக்கு நங்குறையுள்ளது சொல்வேமென்று அவளைநோக்கிச் செல்லல்.

வரலாறு. எளிதன்றினிக்கனி. (க)

## குறையுறத்துணிதல் என்பது.

பாங்கியைக்கிளைந்து செல்பவன்-தெய்வத்தினருளால் அவ்விருவருமோரிடத் தெதிர்நிற்பக் கண்டு, இவளிவட்குச் சிறந்தாள், இனியென் குறையுள்ளது சொல்வேனெனத் தன்குறை கூறத்துணியாமற்...

வரலாறு. குவளைக் கருமகட்.                (உ)

## வேழம் வினுதல் என்பது.

குறையுறத்துணியா நின்றவன் - என்குறையின்னதென்று இவளுக்கு வெளிப்படக் கூறுவேனாயின், இவண்மறுக்கவுங்கூடுமெனவுட்கொண்டு, என்குறையின்னதென்று இவடானே யறியுமளவுங் கரந்தமொழியாற் சில சொல்லிப்பின் குறையுறுவதே காரியமென, வேட்டைகருதிச் சென்றானாக, அவ்விருவருழைச் சென்று தன் காதன்றோன்ற, இவ்விடத்தொரு யானை வரக்கண்டீரோவென வினுவல்.

வரலாறு. இருங்களியாயின்.                (௩)

## கலைமான் வினுதல் என்பது.

வேழம் வினவியுட்புகுந்த பின்னர், தான் கண்ணைவிடர்ப்பட்டமை தோன்ற, நும்முடைய கண்கள் போலும் கணைபொருதலான் உண்டாகியபுண்ணொடு, இப்புனத்தின்கண் ஒரு கலைமான் வரக் கண்டீரோவெனக் கலைமான் வினவாநிற்றல்.

வரலாறு. கருங்கண்ணனையறி.                (ச)

## வழி வினுதல் என்பது.

கலைமான் வினவியவன் கருத்துவேறெனத் தோழியறிய, அதனொடுமாறுபடநின்று, அதுகூறீராயின், நும்மூர்க்குப்போகுநெறி கூறுமினென்று வழிவினவாநிற்றல்.

வரலாறு. சிலம்பணிகொண்ட.                (ரு)

## பதி வினுதல் என்பது.

மாறுபடநின்றுவழி வினவவும் அதற்கு மறுமொழி கொடாதாளை யெதிர்முகமாகநின்று, வழிகூறீராயின், நும் பதிகூறல் பழியன்றே அது கூறுவீராமினென்று அவர்பதிவினவல்.

வரலாறு. ஒருங்கடமூவெயி.                (சு)



## பெயர் வினுதல் என்பது.

பதிவினவவும் அதற்கொன்றுங் கூறாதாளை, நும் பதிகூறுதல் பழியாயின், அதனை யொழிமின், நும் பெயர் கூறுதல் பழியன்றே அது கூறுவீராமினென்று அவர்பெயர் வினவல்.

வரலாறு. தாரென்னவோங்கும்.                (எ)

## மொழிபெறாது கூறல் என்பது.

பெயர் வினவவும் வாய்திறவாமையின், இப்புனத்தார் எதிர்கொள்ளத்தக்க விருந்தினரோடு வாய்திறவாமை விரதமாகவுடையார், அதுவன்றி வாய்திறக்கின் மணிசிந்துமென்பதனைச் சரதமாகவுடையார், ஆதலினிவ்விரண்டனுளொன்று தப்பாதெனக்கூறி மொழிபெறாது கூறல்.

வரலாறு. இரதமுடைய.                (அ)

## கருத்தறிவித்தல் என்பது.

நீயிர்வாய் திறவாமைக்குக் காரணமுடையீர், அதுகிடக்க, இத்தழைநும் அல்குற்குத்தகுமாயின் அணிவீரெனத்தழைகாட்டிநின்றுதன்கருத்தை யறிவியாநிற்றல்.

வரலாறு. வின்னிறவாணுதல்.                (௯)

## இடைவினுதல் என்பது.

தழைகாட்டித் தன்கருத்து அறிவித்து, அது வழியாகநின்று, நும்மல்குலும் முலையும் அதிபாரமாயிராநின்றன, இவையிவ்வாறு நிற்றற்குக் காரணம் யாதோவென்று அவரிடை வினவாநிற்றல்.

வரலாறு. கலைக்கிழகலல்குல்.                (க0)

கக. மதியுடம்படுத்தன் முற்றும்.

## இருவருமுள் வழியவன்வரவுணர்தல் என்பது.

தலைமகளும் தோழியுமுள்வழிச்சென்று, தலைமகன் கரந்தமொழியால் தன்கருத்தறிவிக்கத், தோழியவனினைவறியாநிற்றல்.

ஐயமுறிதலு மறிவுநாடலு
மையறுதோழி யவன்வரவுணர்தல்,

என்பது,

ஐயுறுதல் அறிவுநாடல் இரண்டும் இருவருமுள் வழியவன்வரவுணர்தலாம்.

## ஐயுறுதல் என்பது.

தலைமகன் தழைகொண்டுநின்று, காந்தமொழியால் தன்கருத்தறிவிக்க, மேனியொளியிலனாய், இப்புனத்தினின்றும் போகாது, யானையோடேனம் வினவி, இவ்வாறுபொய்கூறிய இவன் யாவனோவெனத், தோழி அவனையையுற்றுக்கூறல்.

வரலாறு. பல்லிலனாகப்பகலை. (௧)

## அறிவுநாடல் என்பது.

இவன்யாவனோவென்று ஐயப்படுகின்றதோழி, பேராராய்ச்சியளாதலின், அவள்கூறியவழியேநாடாது வந்துதங்களிடைக்கேமுடிதலினிவர்சொல்லிருந்தவாற்றான் ஆழமுடைத்தாய் இருந்ததென்று அவனினைவறிதல்.

வரலாறு. ஆழமன்னோவுடைத்து. (௨)

௧௨. இருவருமுள்வழி யவன்வரவுணர்தன் முற்றும்.

## முன்னுறவுணர்தல்.

வாட்டம்வினாதன் முன்னுறவுணர்தல்
கூட்டியுரைக்குங் குறிப்புரையாகும்.

என்பது,

வாட்டம் வினாதலொன்று முன்னுறவுணர்தல். அஃது தலைமகனிங்ஙனம் வினாயதற்கெல்லாந் தோழிமறுமொழிகொடாளாகத் தலைமகன் வாடினான், வாடவே தலைமகளும் அதுகண்டுவாடினாளாதலால், இருவர்வாட்டமும் வினாவப்படுதல். அன்றியும், முன்னர்த்தலைமகன் வாட்டத்தைப் பாங்கன் வினாயதுபோலத் தலைவிவாட்டத்தையும் பாங்கிவினாதல். முன்னுற்றதனையுணர்தலானே இதற்கு முன்னுறவுணர்தலெனப்பெயராயிற்று.

## வாட்டம்வினாதல் என்பது.

தலைமகன்மதியுடம்படுத்து வருந்தாநிற்பக்கண்டு, எம்பெருமானென்பொருட்டால் இவ்வாறிடர்ப்படுகிறானெனத், தலைமகள் தன்னுள்ளேகவன்றுவருந்த, அதுகண்டு, சுனையாடிச்சிலம்பெதிர் அழைத்தோ; பிறிதொன்றினாலோ; நீவாடியதென்னோவெனத், தோழிதலைமகள்வாட்டம் வினவல்.

வரலாறு. திருத்தம்பயின்ற. (௩)

௧௩. முன்னுறவுணர்தல் முற்றும்.



## குறையுறவுணர்தல் என்பது.

தலைமகன்குறையுறத், தோழி அதனைத்துணிந்துணராநிற்றல்.

குறையுற்று நிற்றலுமவன் குறிப்பறிதலு
மவள்குறிப்பறிதலுமகநினைவெண்ணலுங்
கூறியநான்குங் குறையுறவுணர்வே.

என்பது,

குறையுற்றுநிற்றல், அவன்குறிப்பறிதல், அவள்குறிப்பறிதல், இருவர்நினைவுமொருவழியுணர்தல் ஆகிய நான்குங் குறையுறவுணர்தலாம்.

## குறையுற்று நிற்றல் என்பது.

தலைமகள்வாட்டங்கண்டு ஐயுறுநின்ற தோழியிடைச்சென்று, யானுங்களுக்கெல்லாத் தொழிலுக்கும் வல்லேன், நீயிர் வேண்டுவதொன்று கூறுமின், அது செய்யக்குறையில்லையெனத், தாழ்ந்த சொல்லால் தலைமகன்றன்னினைவுதோன்ற ஐயுறக்கூறல்.

வரலாறு. மடுக்கோ கடலின். (௧)

## அவன்குறிப்பறிதல் என்பது.

குறையுறு நின்றவன்முகத்தே தலைமகளது செயல்புலப்படக்கண்டு, இவ்வண்ணல் குறிப்பு இவளிடத்ததெனத், தோழிதலைமகனினைவு துணிந்துணராநிற்றல்.

வரலாறு. அளியமன்னும். (௨)

## அவள்குறிப்பறிதல் என்பது.

தலைமகனெண்ணமறிந்ததோழி, இவளிடத்திவனினைவேயன்றி இவனிடத்திவளெண்ணமும் உண்டோவெனத்தலைமகளைநோக்க, அவண்முகத்தேயும் அவன்செயல்புலப்படக்கண்டு, இவ்வொண்ணுதல் குறிப்பும் ஒன்றுடைத்தென, அவளுடையவெண்ணமுந்துணிந்துணராநிற்றல்.

வரலாறு. பிழைகொண்டொருவி. (௩)

## இருவர் நினைவுமொருவழியுணர்தல் என்பது.

இருவர்நினைவுங்கண்டு இன்புறுதோழி, இவ்விடத்திருவரும்வந்தகாரியம் இவன்முகமாகிய தாமரைக்கண் இவள்கண்ணாகியவண்டு

இன்பத்தேனைப்பருகியெழில் பெறவந்தவித்தன்மையல்லது பிறிதில்லையென, அவ்விருவர்நினைவுந் துணிந்துரையாநிற்றல்.

வரலாறு. மெய்யேயிவற்கில்லை. (௮)

௧௪. குறையுறவுணர்தன் முற்றும்.

நாண நாட்டம்,

இனிமுன்னர், நன்னிலை நாணமென்றுகூறிய நாணநாட்டமென்பது-இருவர்நினைவும் ஐயமறத்துணிந்த தோழி, அவர்கூட்டமுண்மையறிவது காரணமாகத்தலைமகளை நாணநாட்டாநிற்றலாம்.

பிறைதொழுகென்றலும் பின்னுமவளை
யுறவெனவேறு படுத்தி யுரைத்தலுஞ்
சுனையாடல்கூறிநகைத்தலுமாங்குப்
புணர்ச்சியியம்பலும் பொதுவெனக்கூறி
மதியுடம்படுதலுமாகிய வைந்தும்
நாணநாட்ட நடுங்கநாட்டம்
புலிமிசைவைத்துப் புகறலென்ப.

என்பது,

பிறைதொழுகென்றல், வேறுபடுத்திக்கூறல், சுனையாடல்கூறி நகைத்தல், புணர்ச்சியுரைத்தல், மதியுடம்படுதல் ஐந்தும் நாணநாட்டமாம்; புலிமிசைவைத்துக்கூறலொன்றும் நடுங்கநாட்டமாம்.

பிறைதொழுகென்றல் என்பது.

பிறையைக்காட்டித் தான் றொழுது நின்று, நீயுமிதனைத் தொழுவாயாகவெனத், தோழி தலைமகள் புணர்ச்சிநினைவறியாநிற்றல்.

வரலாறு. மைவார் கருங்கண். (௧)

வேறுபடுத்திக்கூறல் என்பது.

பிறைதொழாது தலைசாய்த்து நாணிநிலங்கிளையா நிற்பக்கண்டு, பின்னுமிவள் வழியே யொழுகி யிதனையறிவோமென வுட்கொண்டு, நீபோய்ச் சுனையாடிவாவென்ன, அவளுமதற்கிசைந்து போய் அவளோடு தலைப்பெய்துவர, அக்குறிப்பறிந்து, அவளை வரையணங்காகப் புனைந்து வேறுபடுத்திக் கூறல்.

வரலாறு. அக்கின்றவாமணி. (௨)



சுனையாடல் கூறிநகைத்தல் என்பது.

வேறுபடுத்திக்கூற நாணல்கண்டு, சுனையாடினாலிவ்வா றழிந்தழியாத குங்குமமும் அளகத்தப்பிய தாதும் இந்நிறமுந்தருமாயின், யானுஞ் சுனையாடிக்காண்பேனெனத், தோழி தலைமகளோடு நகையாடல்.

வரலாறு. செந்நிறமேனிவெண். (௩)

புணர்ச்சியுரைத்தல் என்பது.

சுனையாடல் கூறி நகையாடிய தோழி-அதுகிடக்க, நீயாடிய அப்பெரிய சுனைதான், கண் சிவப்ப, வாய்விளர்ப்ப, அளி தொடரும் வரைமலரைச் சூட்டவற்றோ; சொல்வாயாகவெனப், புணர்ச்சியுரையாநிற்றல்.

வரலாறு. பருங்கண்கவர்கொலை. (௪)

மதியுடம்படுதல் என்பது.

பலபடியு நாணநாடிக் கூட்டமுண்மை யுணர்ந்ததோழி-இம்மலையிடத்து, இருவர்க்கு மின்பதுன்பங்கள் பொதுவாய் வாராநின்றன, அதனாலிவ்விருவர்க்கு முயிரொன்றே யெனவியந்துகூறல்.

வரலாறு. காகத்திருகண்ணிற். (௫)

நாணநாட்ட முற்றும்.

நடுங்கநாட்டம் என்பது.

கூட்டமுண்மை யுணர்ந்தனளாயினும், தலைமகள் பெருநாணினளாகலானும், தான் சொல்லாடாது அவடனைக்கொண்டே கேட்பது காரணமாக நெருங்கிநின்று, ஒரு புலி ஒருவனை யெதிர்ப்பட்டதெனத் தோழியவளை நடுங்க நாடல்.

வரலாறு. ஆரவிருவர். (௬)

௧௫. நாணநாட்ட முற்றும்.

மடற்றிறம் என்பது.

நடுங்கநாடவும், பெருநாணினளாதலின், தலைமகடன்குறை கூறமாட்டாது நிற்ப, இனியிவன் இறந்துபடவுங் கூடுமென வுட்கொண்டு, தலைமகனுடன் சொல்லாடத் தொடங்கிய தோழி, தானும் பெருநாணினளாதலிற் பின்னும் தலைமகன் குறையுறவேண்டிநிற்ப, அந்நிலைமைக்கண் தலைமகன்சென்று, இந்நாளெல்லாம் என் குறை நின்னான் முடியுமென்று நின்னைவந்திரந்தேன், இது நின்னான் முடியாமையின், யான் மடலூர்ந்தாயினும் இக்குறை முடித்துக் கொள்வேனெனத் தோழிக்குக்கூறல்.

என்னை,

முன்னுறவுணரினு மவன்குறையுற்ற
பின்னாலல்லது கிளவிதோன்றாது.

என்றாராகலின்.

ஆற்றாதுரைத்தலு முலகின்மேல் வைத்தலும்
தன்றுணிபுரைத்த லொடுவகையுரைத்தலு
மருளாலரிதென னடையாலரிதென
லவயவமெழுத லரிதெனவிலக்கலு
முடம்படாதுவிலக்கலு முடம்பட்டுவிலக்கலுந்
திடம்படவொன்பதுஞ் செப்புங்காலை
வடம்படுமுலைமேன் மடலாகும்மே.

என்பது,

ஆற்றாதுரைத்தல், உலகின்மேல் வைத்துரைத்தல், தன்றுணிபுரைத்தல், மடலேறும் வகையுரைத்தல், அருளாலரிதெனவிலக்கல், மொழிநடையெழுதலரிதென விலக்கல், அவயவமெழுதலரிதென விலக்கல், உடம்படாதுவிலக்கல், உடம்பட்டுவிலக்கல், இவை யொன்பது மடற்றிறமாம்.

ஆற்றாதுரைத்தல் என்பது.

தலைமகண்மேன்மடற்றிறங் கூறுகின்றாராகலின், அதற்கியைவுபா அவ்விருவருமுழைச்சென்று, நீயிரருளாமையி னென்னுயிரழிகின்றது. இதனை யறிமினெனத், தலைமகன் றனதாற்றாமைமிகுதியைக் கூறல்.

வரலாறு. பொருளாவெனைப்புகுந். (க)

உலகின்மேல் வைத்துரைத்தல் என்பது.

ஆற்றாமைகூறி, அது வழியாகநின்று, ஆடவர்தம் முள்ளமாகிய மீன் மகளிர்கண்வலைப்பட்டால், அதனைப்பெறுதற்கு வேறுபாயமில்லாதவிடத்து, மடலூர்ந்தும் அதனைப்பெறுவரென, உலகின்மேல் வைத்துக் கூறாநிற்றல்.

வரலாறு. காய்சின வேலன்ன. (உ)

தன்றுணிபுரைத்தல் என்பது.

முன்னுலகின்மேல் வைத்துணர்த்தி, அதுவழியாகநின்று, என்னையும் ஒருபெண்கொடி பிறரிகழ மடலேறப்பண்ணுகின்றதென, முன்னிலைப் புறமொழியாகத் தன்றுணிபு கூறாநிற்றல்.



வரலாறு. விண்ணைமடங்க. (௩)

மடலேறும் வகையுரைத்தல் என்பது.

தன்றுணிபு கூறவும் பெருநாணினளாதலிற் சொல்லாடாததோழிக்கு, வெளிப்படத், தான் நாணிழந்தமை தோன்றநின்று, யானுனை நின்னூர்த்தெருவே மடலுங்கொண்டுவருவேன், பின்வருவது காணெனத், தலைமகன்றான் மடலேறும்வகை கூறாநிற்றல்.

வரலாறு. கழிகின்றவென்னையும். (௪)

அருளாலரி தெனவிலக்கல் என்பது.

தலைமகன் வெளிப்படநின்று மடலேறுவேனென்று கூறக் கேட்ட தோழி-இனியிவன் மடலேறவுங் கூடுமெனவுட்கொண்டு, தன்னிடத்து நாணைவிட்டு வந்தெதிர்நின்று, நீர் மடலேறினால் உம்முடையவருள் யாரிடத்ததாமென்று, அவனதருளை எடுத்துக்கூறி விலக்காநிற்றல்.

வரலாறு. நடனும்வணங்கும். (௫)

மொழிநடையெழுத லரிதெனவிலக்கல் என்பது.

அருளெடுத்து விலக்கவும் தன்வழி நில்லாமைகண்டு, அவன் வழியொழுகி விலக்குவாளாக, நுமதருள் கிடக்க, மடலேறுவார் மடலேறுதன் மடலேறப்படுவார் உருவெழுதிக்கொண்டன்றே; நுமக்கவண் மொழிநடையெழுத முடியாதாகலின், நீயிர் மடலேறுமாறென்னோவென விலக்கல்.

வரலாறு. அடிச்சந்தமால்கண். (௬)

அவயவமெழுத லரிதெனவிலக்கல் என்பது.

அவள் சொன்னடை கிடக்க, இவை தாமெழுத முடியுமோ; முடியுமாயின் யான் சொன்னபடியே தப்பாமலெழுதிக் கொண்டு வந்தேறுமென்று அவளவயவங் கூறாநிற்றல்.

வரலாறு. யாழு மெழுதி. (௭)

உடம்படாது விலக்கல் என்பது.

எழுதலாகாமை கூறிக் காட்டி,அது கிடக்க, நும்மை யாம்விலக்குகின்றேமல்லேம், யான் சென்று அவணிலைமை யறிந்துவந்தாற் பின்னர் நீயிர் வேண்டிற்றைச் செய்யும், அவ்வளவும் நீவிர் வருந்தாதொழியுமெனத், தானுடம்படாது விலக்காநிற்றல்.

வரலாறு. ஊர்வாயொழிவாய். (அ)

## உடம்பட்டு விலக்கல் என்பது.

உடம்படாதுமுன்பொதுப்படவிலக்கி, முகங்கொண்டு, பின்னர்த்தன்னோடவளிடைவேற்றுமையின்மை கூறி, யானின் குறைமுடித்துத்தருவேன், நீவருந்தவேண்டாவெனத் தோழிதானுடம்பட்டு விலக்கல்.

வரலாறு. பைங்காணரவன். (ஆ)

கசு. மடற்றிற முற்றும்.

## குறைநயப்புக்கூறல் என்பது.

தலைமகனைமடல் விலக்கிக் குறைநேர்ந்ததோழி, தலைமகளைக் குறைநயப்பிக்க அவன்குறைகூறாநிற்றல்.

குறிப்பறிதலோடு மென்மொழிகூறலும்
விரவிக்கூறலு மறியாள்போறலும்
வஞ்சித்துரைத்தலும் புலந்துகூறலும்.
வன்மொழிகூறலுமனத்தொடு நேர்தலும்
சொன்னவிரு நான்குந்துறை குறைநயப்பென
மன்னியபொருளில் வகுத்திசினோரே.

என்பது,

குறிப்பறிதல்-மென்மொழியாற் கூறல்-விரவிக்கூறல்-அறியாள்போறல் - வஞ்சித்துரைத்தல் - புலந்துகூறல்-வன்மொழியாற் கூறல்-மனத்தொடுநேர்தல் "ஆகியவெட்டும் குறைநயப்பித்தலாம்.

## குறிப்பறிதல் என்பது.

தலைமகனது குறைகூறத் துணியாநின்ற தோழி, தெற்றெனக் கூறவேனாயின், இவள் இதனை மறுக்கவுங்கூடுமென வுட்கொண்டு, நம்புனத்தின்கட் சேயினது வடிவையுடையராய்ச் சினவேலேந்தி, ஒருவர் பலகாலும் வாராநின்றார், வந்துநின்றொன்றுரைப்பதுஞ் செய்யார், அவரிடத்து யாஞ்செய்யத்தக்கது யாதெனத், தானறியாதாள் போலத், தலைமகளோடுசாவி, அவணினைவறியா நிற்றல்.

வரலாறு. தாதேய்மலர்க்குஞ்சி. (க)



## மென்மொழியாற்கூறல் என்பது.

நினைவறிந்து முகங்கொண்டு, அதுவழியாகநின்று, ஒரு பெரியோன் வாடியமேனியனும் வாடாததழையனுமாய், நம்புனத்தைவிட்டுப்போவதுஞ் செய்கின்றிலன், தன்குறையின்னதென்று வெளிப்படச் சொல்வதுஞ் செய்கின்றிலன், இஃதென்னமாயமோவறிகின்றிலேனெனத், தோழிதானதற்குநொந்துகூறல்.

வரலாறு. வரிசேர் தடங்கண்ணி. (உ)

## விரவிக்கூறல் என்பது.

வன்மொழியாற்கூறின் மனமெலியுமென்றஞ்சி, ஓரலவன்தன் பெடைக்கு நாவற்கனியை நல்கக்கண்டு, ஒருபெருந்தகை, பேய்கண்டாற்போல நின்றான், அந்நிலைமையை நீ கண்டாயாயின்; உயிர்வாழமாட்டாய்; யான்வன்கண்மையேனாதலினாற்றியுளேனாய்ப் போந்தேனென, மென்மொழியோடு சிறிதுவன்மொழிபடக் கூறாநிற்றல்.

வரலாறு. நீ கண்டனையெனின். (ங)

## அறியாள்போறல் என்பது.

பேய்கண்டாற்போல நின்றானெனத், தலைமகனிலைமை கேட்ட தலைமகள் - பெருநாணினளாதலினிதனை யறியாதாளைப்போல, இஃதொருகடல் வடிவிருந்தவாறு காணாயெனத், தானொன்றுகூறாநிற்றல்.

வரலாறு. சங்கந்தருமுத்தி. (ச)

## வஞ்சித்துரைத்தல் என்பது.

நாணினாற்குறை நேரமாட்டாது வருந்தாநின்றதலைமகள், இவளும்பெருநாணினளாதலினென்னைக் கொண்டேகூறுவித்துப்பின் முடிப்பாளாய் இராநின்றாள், இதற்குயானொன்றுஞ்சொல்லாதொழிந்தாலெம்பெருமானிறந்துபடுவனென உட்கொண்டு, தன்னிடத்து நாணினைவிட்டுப், பாங்கற் கூட்டம் பெற்றுத்தோழியிற்கூட்டத்திற்குத் துவளாநின்றானென்பது தோன்றப், பின்னும் வெளிப்படக்கூற மாட்டாது, மாயவன்மேல்வைத்து வஞ்சித்துக் கூறாநிற்றல்.

வரலாறு. புரங்கடந்தானடி. (ரு)

## புலந்துகூறல் என்பது.

வெளிப்படக்கூறாது வஞ்சித்துக் கூறுதலான், என்னோடிதனை வெளிப்படக்கூறாயாயின், நின்காதற்றோழியர்க்குவெளிப்படக்கூறி,

அவரோடு சூழ்ந்து, நினக்குற்றது செய்வாய், யான்சொன்னவறியாமையை நின்னுள் ளத்துக்கொள்ளாது மறப்பாயாக, யான் வேண்டுவேதிதுவேயெனத், தோழிதலைமகளோடுபுலந்து கூறுநிற்றல்.

வரலாறு. உள்ளப்படுவேனவுள்ளி. (௬)

வன்மொழியாற்கூறல் என்பது.

புலந்து கூறுகின்றதோழி, அக்கொடியோனருளுருமையான், மெய்யிற்பொடியுங்கையிற் கிழியுமாய்மடலேறத்துணியா நின்றான், அக்கிழிதானின்னுடைய வடிவென்றுரையுமுளதாயிருந்தது, இனி நீயுநினக்குற்றது செய்வாயாக, யானறியேனென, வன்மொழியாற் கூறுநிற்றல்.

வரலாறு. மேவியந்தோளுடு (௭)

மனத்தொடுநேர்தல் என்பது.

ஆற்றாமையான் மடலேறத் துணிகின்றானெனத்தோழியால் வன்மொழிகூறக்கேட்ட தலைமகள், அதற்குத் தானாற்றாளாய்த், தலைமகனைக்காணவேண்டித், தன் மனத்தொடு கூறிநேரா நிற்றல்.

வரலாறு. பொன்னூர் சடையோன். (௮)

௧௭. குறைநயப் பித்தன் முற்றும்.

சேட்படை என்பது.

தலைமகளைக்குறைநயப்பித்துத்தன்னிறையைகூட்டங் கூட்டலுறுந் தோழி, தலைமகனதுபெருமையும் தன்முயற்சி யருமையும் தோன்றல் காரணமாகவும், இத்துணையருமை யுடையாள் இனிநமக்கெய்துதற்கு அருமையுடையளென இதுவேபுணர்ச்சியாக நீட்டியாது விரையவரைந்து கோடல்காரணமாகவும், தலைமகனுக்கியையமறுத்துக் கூறல்.

தழைகொண்டுசேறலுந் தகாதெனமறுத்தலும்
நிலத்தின்மைகூறலு நினைவறிவுகூறலும்
படைத்துமொழிதலும் பனியதிருதலியை
யெடுத்துநாணுரைத்தலு மிசையாமைகூறலும்
செவ்வியிலளென்றலுஞ் சேட்படநிறுத்தலும்
அவ்வினியமொழிநீயவட்குரையென்றலும்
குலமுறைகிளத்தலுங் கோதண்டத்தொழில்
வலிசொல்லிமறுத்தலு மற்றவற்கிரங்கலும்



சிறப்பின்மைகூறலுஞ் சிறியளென்றுரைத்தலு
மறைத்தமைகூறி நகைத்துரைசெய்தலும்
நகைகண்டுமகிழ்தலு நானவடன்னை
அறியேனென்றலு மவயவங்கூறலும்
கண்ணயந்துரைத்தலுங் கையுறையெதிர்தலும்
முகம்புகவுரைத்தலு முகங்கண்டுகூறலும்
வகுத்துரைத்தலொடு வண்டழையவட்கு
மிகுத்துரைசெய்து விரும்பிக்கொடுத்தலும்
தழைவிருப்புரைத்தலுந் தானிருபத்தா
றிழைவளர்முலையாயிவை சேட்படையே.

என்பது,

தழைகொண்டுசேறல்-சந்தனத்தழைதகாதென்று மறுத்தல்-நிலத்தின்மைகூறிமறுத்தல் - நினைவறிவுகூறிமறுத்தல்-படைத்துமொழியான்மறுத்தல்-நாணுரைத்துமறுத்தல் - இசையாமைகூறிமறுத்தல்-செவ்வியிலளென்றுமறுத்தல்-காப்புடைத்தென்றுமறுத்தல்-நீயேகூறென்றுமறுத்தல்-குலமுறைகூறிமறுத்தல்-நகையாடிமறுத்தல்-இரக்கத்தொடுமறுத்தல்-சிறப்பின்மைகூறிமறுத்தல் - இளமைகூறிமறுத்தல் - மறைத்தமைகூறிநகைத்துரைத்தல்-நகைகண்டுமகிழ்தல் - அறியாள்போன்றுநினைவுகேட்டல் - அவயவங்கூறல் - கண்ணயந்துரைத்தல்- தழையெதிர்தல் - குறிப்பறிதல்-குறிப்பறிந்துகூறல்-வகுத்துரைத்தல் -தழையேற்பித்தல் - தழைவிருப்புரைத்தல் - ஆகிய விருபத்தாறுஞ் சேட்படையாம்.

தழைகொண்டுசேறல் என்பது.

மேற்சேட்படை கூறத்துணிந்த தோழியிடைச்சென்று, அவள் குறிப்பறிந்து, பின்னுங்குறையுறவுதோன்ற நின்று, நும்மாலருளத்தக்காரையலையாதே இத்தழைவாங்கிக்கொண்டு என்குறைமுடித்தருளுவீராமென்று, மறுத்தற்கிடமறச், சந்தனத்தழைகொண்டு தலைமகன்செல்லாநிற்றல்.

வாலாறு. தேமென்கிளவிதன். (௧)

சந்தனத்தழை தகாதென்றுமறுத்தல் என்பது.

தலைமகன் சந்தனத்தழைகொண்டுசெல்ல, அது வழியாகநின்று, சந்தனத்தழையிவர்க்குவந்தவாறென்னோவென்று ஆராயப்படுவான், இத்தழையெமக்காகாதெனத், தோழிமறுத்துக்கூறல்.

வாலாறு. ஆரத்தழையரா. (௨)

### நிலத்தின்மைகூறிமறுத்தல் என்பது.

சந்தனத்தழைதகாதென்றதல்லது மறுத்துக்கூறியவாறன்றெனமற்றொருதழை கொண்டுசெல்ல, அதுகண்டு இச்குன்றிலில்லாத தழையையெமக்குநீர்தந்தால், எங்குடிக்கிப்பொழுதேபழியாம், ஆதலானத்தழையெமக்காகாதெனமறுத்துக்கூறல்.

வரலாறு. முன்றகர்த்தெல்லா. (௩)

### நினைவறிவுகூறிமறுத்தல் என்பது.

இத்தழைதந்நிலத்துக்கு உரித்தன்றென்றதல்லது மறுத்துக் கூறியவாறன்றென உட்கொண்டு, அந்நிலத்திற்குரியதழைகொண்டு செல்ல, அதுகண்டுதானுடன் பட்டாளாய், யானசென்று அவள் நினைவறிந்தால் நின்னெதிர்வந்துகொள்வேன், அதல்லது கொள்ளப் பயப்படுவேனென மறுத்துரைத்தல்.

வரலாறு. யாழார் மொழிமங்கை. (௪)

### படைத்து மொழியான் மறுத்தல் என்பது.

நினைவறிந்தல்ல தேலே மென்றது, மறுத்துக்கூறிய வாறன்று. நினைவறிந்தால் ஏற்பேமென்ற வாறாமெனவுட்கொண்டு நிற்பச், சிறிது புடைபெயர்ந்து, அவள் நினைவறிந்தாளாகச் சென்று, இத்தழையானேயன்றி யவளும் விரும்புமாயினும், இது குற்றாலத்துத் தழையாதலான், இத்தழை யிவர்க்கு வந்தவாறென்னோவென ஆராயப்படு மாதலான், இத்தழை யெமக்காகாதென்று மறுத்துக் கூறாநிற்றல்.

வரலாறு. எழில்வாயிளவஞ்சி. (௫)

### நாணுரைத்து மறுத்தல் என்பது.

பலபடியுந் தழைகொண்டுசெல்ல, மறுத்துக்கூறிய வழி, இனித்தழையொழிந்து, கண்ணியைக் கையுறையாகக்கொண்டு சென்றால், அவள் மறுக்கும் வகையில்லை யெனக்கழுநீர் மலரைக் கண்ணியாகப் புனைந்துகொண்டுசெல்ல, அதுகண்டு, செவிலியர் சூட்டிய கண்ணியின்மேல் யாறொன்று சூட்டினுநாணாநிற்பள், நீர்கொணர்ந்தவிக் கண்ணியை, யாங்ஙனஞ் சூடுமெனத் தலைமகள் நாணுரைத்து மறுத்துக் கூறாநிற்றல்.

வரலாறு. உறுங்கண்ணிவந்த. (௬)



### இசையாமை கூறி மறுத்தல் என்பது.

தலைமகள் நாணுரைத்து மறுத்ததோழி, அவனுணங்கிடக்க, யாங்கள் வேங்கைமலரல்லது தெய்வத்திற்குரிய வெறிமலர் சூடவஞ்சுது மாதலான், இக்கண்ணியெங்குலத்திற் கிசையாதென மறுத்துக்கூறல்.

வரலாறு. நறமனைவேங்கையின். (௭)

### செவ்வியில ளென்று மறுத்தல் என்பது.

அணங்கலர் தங்குலத்திற் கிசையாதென்றதல்லது மறுத்துக்கூறியவாறன்றென மாந்தழையோடு மலர்கொண்டு செல்ல, அவைகண்டுடன் படாளாய், அன்னம், பிணை, கிள்ளை, தந்தொழில்பயில, இன்று செவ்வி பெற்றன வில்லை, அது கிடக்க, என்னுழைநீர் வந்தவாறும்யானுமக்குக் குறைநேர்ந்த வாறுமின்னு மறிந்திலள், அதனாற் செவ்விபெற்றாற் கொணருமென மறுத்துக் கூறாநிற்றல்.

வரலாறு. கற்றிலகண்டன்ன. (௮)

### காப்புடைத்தென்று மறுத்தல் என்பது,

செவ்வியிலளென்றது, செவ்விபெற்றாற் குறையில்லை யென்றாளாமென உட்கொண்டு நிற்பக், கதிரவன் மறைந்தான்,இவ்விடங் காவலுடைத்து, நும்மிடனுஞ் சேய்த்து, எம்மையன் மாருங்கடியர், யாந்தாழ்ப்பின், அன்னையுமுனியும், நீரும்போய் நாளைவாருமென இசைய மறுத்துக்கூறல்.

வரலாறு. முனிதருமன்னையும். (௯)

### நீயேகூறென்றுமறுத்தல் என்பது.

இவளிவ்விடத்து நிலைமையை மறையாதெனக் குறைப்பாளா யது என்கட்கிடந்த பரிவினானன்றே, இத்துணைப் பரிவுடையாளெனக்கிது முடியாமையில்லையெனத் தலைவனுட்கொண்டுபோய்ப் பிற்றைஞான்று செல்லத், தோழி-யான் குற்றேவன் மகளா கலிற்றுணிந்து சொல்லமாட்டுகின்றிலேன், இனி நீயே சென்று நின் குறையுள்ளது கூறெனத்தான் உடன் படாது மறுத்துக் கூறல்.

வரலாறு. அந்தியின் வாயெழில். (௧௦)

### குலமுறைகூறிமறுத்தல் என்பது.

நீயே கூறெனச் சொல்லக்கேட்டு, உலகத் தொருவர்கணொருவரொருகுறை வேண்டிச் சென்றால்; அக்குறை நீயே முடித்துக்கொள்

ளென்பாரில்லை, அவ்வாறன்றி, இவளிந்நாளெல்லா மென்குறை முடித்துத் தருவேனென் றென்னை யவமே யுழற்றி, இன்று நின்குறை நீயே முடித்துக்கொள்ளென்று நின்றாளெனத் தலைமக னாற்றாது நிற்ப, அவனை யாற்றுவிப்பது காரணமாக, நீர் பெரியீர், யாஞ்சிறியே மாதலா னெம்மோடு நுமக்குச்சொல்லாடு தறகாதெனக் குலமுறை கூறி மறுத்துரைத்தல்.

வரலாறு. தெங்கம் பழங்கமு. (கக)

நகையாடிமறுத்தல் என்பது.

இவள் குலமுறை கிளத்தலான் மறுத்துக் கூறியவாறன்றென மனமகிழ்ந்து நிற்ப, இனி இவனாற்றுவானென உட்கொண்டு, பின்னுந் தழை யெதிராதெம்மை யன்மாரே வுங்கண்டறிவேம், இவ்வையர்கையிலேப் போலக்கொலையாற்றிண்ணியது கண்டறியே மென, அவனேவாடல் கூறி, நகையாடி மறுத்துக்கூறல்.

வரலாறு. சிலையொன்று. (கஉ)

இரக்கத்தொடுமறுத்தல் என்பது.

இவளென்னுடனே நகையாடுகின்றது தழைவாங்குதற்பொருட்டென உட்கொண்டுநிற்பப், பின்னையுந்தழையேலாது இவ்வையரிவ்வாறு மயங்கிப்பித்தழையா நிற்றற்குக் காரணமென்னோவென்று, அதற்கிரங்கி மறுத்துக்கூறல்.

வரலாறு. மைத்தழையா. (கங)

சிறப்பின்மைகூறிமறுத்தல் என்பது.

என்வருத்தத்திற்குக் கவலாநின்றனளிவளாதலின், எனக்கிது முடியாமையில்லையென உட்கொண்டுநிற்பத், தோழிஇக்குன்றிடத்து மாவுஞ்சுனையுமிவள்வடிவுக்கஞ்சி மலர்ந்தறியா வாதலான், ஈண்டில்லாதனவற்றையாம் அணியிற்கண்டாரையுறுவரென மறுத்துக் கூறல்.

வரலாறு. அக்குமரவும். (கச)

இளமைகூறிமறுத்தல் என்பது.

இவள்வடிவிற் கஞ்சிமலர்ந்தறியாவென்றதல்லது, மறுத்துக்கூறியவாறன்று, சிறப்பின்மைகூறியவாறெனஉட்கொண்டு சிறப்புடைத்தழைகொண்டுசெல்ல, அதுகண்டு, குழலுமுலையுங்குவியாத குதலைச்சொல்லிக்கு நீ கூறியகாரியஞ் சிறிதுமியை புடைத்தன்றென அவளிளமைகூறி மறுத்துரைத்தல்.



வரலாறு. உருகுதலைச்சென்ற. (கரு)

மறைத்தமைகூறி நகைத்துரைத்தல் என்பது.

இவளிளமைகூறுகின்றது தழைவாங்குதற் பொருட்டன்றாக வேண்டும், அதுவன்றி, இந்நாளெல்லாமியைய மறுத்திப்பொழுதிவள் இளையளென்றியை யாமைகூறி மறுக்கவேண்டியதென்னை, இனியிவ்வொழுக்கமிவளையொழிய ஒழுகக்கடவேனெனவுட்கொண்டுநிற்ப, நீ யென்னைமறைத்தகாரியமினி நினக்குமுடியாதென, அவனோடு நகைத்துக்கூறல்.

வரலாறு. பண்டாலியலும். (கசு)

நகைகண்டுமகிழ்தல் என்பது.

இவடன்னைமறைத்தால் முடியாதென்றது மறையாதொழிந்தான் முடியுமென்றாளாமெனத் தலைமகனுட்கொண்டு நின்று, உன்னுடைய சதுரப்பாட்டைச் சேர்ந்தமெல்லென்றநோக்கமன்றோவெனக்குச் சிறந்ததுணை, அல்லது வேறுதுணையுண்டோவென, அவளுடைய நகைகண்டு மகிழாநிற்றல்.

வரலாறு. மத்தகஞ்சேர்தனி. (கஎ)

அறியாள்போன்று நினைவுகேட்டல் என்பது.

தலைமகன்மகிழ்ச்சிகண்டு, இவன்வாடாமல் தழைவாங்குவேனெனவுட்கொண்டு, என்னுடைய தோழியொண்ணிறங்காருள்ளர், அவருள், நின்னுடைய நினைவுயார்கண்ணதோவெனத், தானறியாதாள்போன்று அவனினைவு கேளாநிற்றல்.

வரலாறு. விண்ணிறந்தார் நிலம். (கஅ)

அவயவங்கூறல் என்பது.

இன்னுமவளையிவளறிந்திலள், அறிந்தாளாயிற்றழைவாங்குவாளென உட்கொண்டுநின்று, என்னாற் கருதப்பட்டாளுக்கு, அவயவமிவையெனத் தோழிக்குத்தலைமகன் அவளுடையவவயவங்கூறல்.

வரலாறு. குவவினகொங்கை. (ககூ)

கண்ணயந் துரைத்தல் என்பது.

அவயவங்கூறியவழிக்கூறியும் அமையாது, தனக்கன்றுதோழியைக்காட்டினமைநினைந்து, பின்னும் கண்ணயந்துகூறல்.

வரலாறு. ஈசற்கியான்வைத்த. (உ0)

### தழையெதிர்தல் என்பது.

கண்ணயந்துரைப்பக்கேட்டதோழி, இவ்வாறேற்றலெங்குடிக் கேலாவாயினும் நீ செய்தவுதவிக்கும் நின்பேரன்புக்கு மேனாநின் றேனெனக்கூறி, தலைமகன் பால் நின்றுதழையெதிர்தல்.

வரலாறு. தோலாக்கரிவென். (உக)

### குறிப்பறிதல் என்பது.

தலைமகன் மாட்டுத்தழையெதிர்ந்ததோழி, இவளுக்குத் தெற் றெனக்கூறவேனாயின் இவண் மறுக்கவுங்கூடுமென உட்கொண்டு, இந்நாள் காறுந்தழையேலாமைக் குத்தக்கபொய்சொல்லி மறுத்தே ன், இன்றவனேக்கங்கண்டபின் பொய்சொல்லுநெறியறிந்திலேன், இனியவனுக்குக் கூறுமாறென்னேவெனத் தழையேற்பித்தற்குத் தலைமகள் குறிப்பறிதல்.

வரலாறு. கழைகாண்டலுஞ்சுளி. (உஉ)

### குறிப்பறிந்துகூறல் என்பது.

குறிப்பறிந்து முகநகண்டு, அது வழியாகநின்று, யானைகடிந்த பேருதவியார் கையிற்றழையும் துவளத்தகுமோ, அது துவளாமல், நாம் அவர்குறைமுடிக்கவேண்டாவோ வெனத்தோழி நயப்பக்கூறு நிற்றல்.

வரலாறு. தவளத்தகீறணி. (உங)

### வருத்துரைத்தல் என்பது.

உதவிகூறவும்பெருநாணினளாதலின், தழைவாங்கமாட்டாது நிற்ப, அக்குறிப்பறிந்து, இருவகையானு நமக்குப்பழியேறும், அதுகிட க்க, நமக்குதவிசெய்தாற்கு நாமுமுதவிசெய்யுமா றென்னேவெனத் தலைமகடழையேற்கு மாறுவருத்துக்கூறல்.

வரலாறு. ஏறும்பழிதழை (உச)

### தழையேற்பித்தல் என்பது.

தழையேலாதொழியினும் பழியேறுமாயிற்றழை யேற்பதே காரியமென உட்கொண்டுநிற்ப, அக்குறிப்பறிந்து, இத்தழை நமக் கெளியதொன்றன்று, இதனையேற்றுக் கொள்வாயாகவெனத் தோ ழிதலைமகளைத் தழையேற்பியாநிற்றல்.



வரலாறு. தெவ்வரைமெய்யெரி. (உரு)

### தழைவிருப்புரைத்தல் என்பது.

தலைமகளைத் தழையேற்பித்துத் தலைமகனுழைச்சென்று, நீ தந் ததழையை யான்சென்று கொடுத்தேன் அது கொண்டவள்செய் தது சொல்லிற்பெருகுமெனத் தலைமகன் விருப்பங்கூறல்.

வரலாறு. பாசத்தளையறுத். (உசு)

## கஅ. சேட்படை முற்றும்.

### பகற்குறி.

பகற்குறியென்பது, தலைமகளைத் தழையேற்பித்ததோழி, தலை மகனுடனவளைப் பகற்குறிக் கட்டலைப்பெய் வியாநிற்றல்.

குறியிடங்கூறலு மாடிடம்படர்தலும்
குறியிடைச்சேறலு மிடத்துய்த்துநீங்கலும்
உவந்துகூறலுமொளிர் மருங்கணைதலும்
அறிவறிவித்தலு மவனுண்மகிழ்தலும்
ஆயத்துய்த்தலுந் தோழிவந்துகூடலும்
ஆடிடம்புகுதலுந் தனிகண்டுரைத்தலும்
தடமென்முலையாள் பருவங்கூறி
வாவுவிலக்கலும் வரைவுடம்படாது
மிகுத்துரைத்தலு மெய்ம்மையுரைத்தலும்
வருத்தங்கூறலுந் தாயச்சங்கூறலும்
இற்செறிவுணர்த்தலுந் தமர்நினைவியம்பலும்
எதிர்கோள்கூறலு மேறுகோளியம்பலும்
ஏதிலார்தம்முரைகூறலு மவளொடு
கூறுவாள்போன்று தினைமுதிர்வுகூறலும்
பகல்வரல்விலக்கலும் மையுளெய்தித்
தினையொடுவெறுத்தலுஞ் சிறைப்புறமாக
வேங்கையொடுவெறுத்தலும் வெற்பமர்நாடற்குக்
கழுமலுற்றிரங்கலுங் கடிப்புனங்கையறக்
கொய்தமைகூறலும் பிரிவருமைகூறலும்
மயிலொடுகூறலும் வறும்புனங்காண்டலும்
பயில்பதிநோக்கிப் பதிமிகவாடலும்
சொன்னாலெட்டுந் தோன்றுமியற்கை
மன்னியபகற்குறி வகையாகும்மே.

என்பது,

குறியிடங்கூறல், ஆடிடம்படர்தல், குறி யிடத்துக் கொண்டு சேறல், இடத்துய்த்து நீங்கல், உவந்துரைத்தல், மருங்கணைதல், பாங்கி யறிவுகூறல், உண்மகிழ்ந் துரைத்தல், ஆயத்துய்த்தல், தோழிவந்துகூடல், ஆடிடம்புகுதல், தனிகண்டுரைத்தல், பருவங்கூறி வரவுவிலக்கல், வரைவுடம்படாது மிகுத்துக் கூறல், உண்மைகூறி வரைவுகடாதல், வருத்தங்கூறி வரைவுகடாதல், தாயச்சங்கூறி வரைவுகடாதல், இற்செறிவறிவித்து வரைவுகடாதல், தமர் நினைவுரைத்து வரைவுகடாதல், எதிர்கோள்கூறி வரைவுகடாதல், வறுகோள் கூறி வரைவுகடாதல், அயலுரை யுரைத்து வரைவுகடாதல், தினை முதிர்வுரைத்து வரைவுகடாதல், பகல்வரல்விலக்கி வரைவுகடாதல், திலையொடுவெறுத்து வரைவுகடாதல், வேங்கையொடு வெறுத்து வரைவுகடாதல், இரக்கமுற்று வரைவுகடாதல், கொய்தமைகூறி வரைவுகடாதல், பிரிவருமைகூறி வரைவுகடாதல், மயிலொடுகூறி வரைவுகடாதல், வறும் புனங்கண்டு வருந்தல், பதிநோக்கிவருந்தல், ஆகிய முப்பத்திரண்டும் பகற்குறியாம்.

குறியிடங்கூறல் என்பது.

தழைவிருப்புரைத்த தோழி, யாங்கள் விளையாடு மிடத்தொரு கரியபொழிலிரவி நுழையாவிருளாய், நடுவணோர் பளிக்குப்பாறையை யுடைத்தாயிருக்கும், அவ்விடத்து வருவாயாக வெனத் தலைமகனுக்குக் குறியிடங்கூறல்.

வரலாறு. வானுழை வாளம். (க)

ஆடிடம்படர்தல் என்பது.

தலைமகனுக்குக் குறியிடங்கூறின தோழி, யாம்புனத்தின் கட்போயூசலாடி, அருவியேற்றுவிளையாடுவேம், போதுவாயாகவெனத், தலைமகளையாயத்தோடுங் கொண்டுசென்று ஆடிடம் படராநிற்றல்.

வரலாறு. புயல்வளரூசன்முன். (உ)

குறியிடத்துக் கொண்டுசேறல் என்பது.

ஆடிடம் படர்ந்த தோழி, தலைமகனுக்குத் தான் சொன்ன குறியிடத்திவளைக் கொண்டு சென்றுய்க்கும் பொழுது, ஆயத்தாரைத் தம்மிடத்தினின்று நீக்க வேண்டுதலின், தினை காத்தன் முதலாகிய விளையாட்டுக்களைத் தான்கூறவே, அவ்வவ் விளையாட்டிற் குரியார் தலைமகள் அவ்வவ் விடங்களிலே வருவளெனக் கருதித் தோழிசொன்னவகையே, அவ்வவ்விளையாட்டு விருப்பினாலெல்லாரும் பிரிவர், அவ்வகை, ஆய வெள்ளத்தைப் பிரிவித்துத், தமியளாய்நின்ற தலைமகளையுங்கொண்டு, யாமும் போய் மயிலாடல் காண்பேமென அக்குறியிடத்துச்சேறல்.

வரலாறு. தினைவளங்காத்து. (ங)



இடத்துய்த்துநீங்கல் என்பது.

குறியிடைக்கொண்டு சென்ற தோழி, யான் அவ்விடத்துச் சென்று நின்குழற்குப்பூக்கொய்துவருவேன், அவ்விடம், மூங்கின்முத்துதிர்தலால்நினது மெல்லடிக்குத் தகாதாதலால் நீ யென்னோடு வாராதிங்கே நின்று பூக்கொய்வாயாக வெனத், தலைமகளைக் குறியிடத்து நிறுத்தித் தானீங்கா நிற்றல்.

வரலாறு. நரல்வேயின நின. (ச)

உவந்துரைத்தல் என்பது.

தோழி தலைமகளைக் குறியிடை நிறுத்தி நீங்காநிற்பத் தலைமகன் சென்றெதிர்ப்பட்டு, இக்குவட்டை மாசுணப்பள்ளியாகவும் என்னைத் திருமாலாகவும் நினைந்தோ, நீ இப்பொழிற் கண்வந்து நின்றதெனத், தலைமகளையுவந்து கூறல்.

வரலாறு. படமா சுணப்பள்ளி. (ரு)

மருங்கணைதல் என்பது.

உவந்துரைப்பக் கேட்ட தலைமகள், பெருநாணினளாதலிற் கண்புதைத்தொரு கொடியினொதுங்கி வருந்தாநிற்பச், சென்று சார்தலாகாமையின், தலைமகன் அவ்வருத்தந்தணிப்பான் போன்று, முலையொடு முனிந்து, அவளிறுமருங்குளுங்கியணையா நிற்றல்.

வரலாறு. தொத்தீன் மலர்ப்பொழில். (சு)

பாங்கியறிவுரைத்தல் என்பது.

மருங்கணை விறுதிக் கட்டலை மகளையந்நீர, அவளைக் கோலஞ்செய்து, இது நின்றோழி செய்த கோலமே, நீ கலங்காதொழிகெனத், தலைமகன்றான் தோழியோடு தலைப்பெய்தமை தோன்றக்கூறல்.

வரலாறு. அளிநீடளகத்தின். (எ)

உண்மகிழ்ந்துரைத்தல் என்பது.

பாங்கியறிவுரைப்பக் கேட்டதலைமகள் இனி நமக்கொருகுறையில்லையென வுட்கொண்டு முகமலர, அம்முகமலர்ச்சி கண்டு, அவளைக் கழுநீர்மலராகவும் தான் அதனறவைப் பருகும் வண்டாகவும் புனைந்து, தலைமகன்றன்னுண் மகிழ்ந்து கூறாநிற்றல்.

வரலாறு. செழுநீர் மதிக்கன்னி. (அ)

## ஆயந்துய்த்தல் என்பது.

மலரளிமேல்வைத்து மகிழ்வுற்றுப் பிரிகின்ற தலைமகன், யாம் இத்தன்மையேமாதலின் நமக்குப்பிரிவில்லை, இனிப்பொழிலிடத்து விளையாடுமோரயம் பொலிவுபெறப்போய், அவரோடு சேர்ந்து விளையாடுவாயெனத், தலைமகளை ஆயத்துச்செலுத்தல்.

வரலாறு. கொழுந்தாரகைமுகை. (௯)

## தோழிவந்துகூடல் என்பது.

தலைமகனைப்பிரிந்த தலைமகள், தானும் பூக்கொய்யாநின்றாளாக, பிரிவாற்றாமையானும், பெருநாணினானும், தமோறியரும் புகளைப் பறிப்ப, யானின் குழற்காம்பூக் கொண்டுவந்தேன், நீவிரல்வருந்த அரும்புகளைப்பறிக்க வேண்டாவெனத் தோழிவந்துகூடல்.

வரலாறு. பொன்னனையான்றில்லை. (௧௦)

## ஆடிடம்புகுதல் என்பது.

கொய்து[illegible]ந்த மலருங் குழற்கணிந்து, இனிநின் சிறுமருங்குல் வருந்தாமல் மெல்லச்செல்வாயெனத், தோழி தலைமகளையுங்கொண்டு ஆடிடம்புகாநிற்றல்.

வரலாறு. அறுகானிறைமலர். (௧௧)

## தனிகண்டுரைத்தல் என்பது.

தலைமகளை யாயத்துய்த்துத் தலைமகன்பாற் சென்று, ஈதெம்மூர், இதன்கண்யாம் அருந்தும் தேனும், கிழங்கும் பருகி, இன்றெம்மொடுதங்கி, நாளைநின்னூருக்குப் போவாயென, உலகியல் கூறுவான்போன்று வரைவு பயப்பக்கூறல்.

வரலாறு. தழங்குமருவியெம் (௧௨)

## பருவங்கூறிவரவுவிலக்கல் என்பது.

உலகியல் கூறுவான்போன்று குறிப்பால்வரைவு கடாவி, இனியிவ்வாறொழுகாது வரைவொடுவருவாயெனத், தலைமகன் பருவங்கூறித் தலைமகனைத் தோழி வரவுவிலக்கல்.

வரலாறு. தன்னிமணி சந்தம். (௧௩)



## வரைவுடம்படாதுமிகுத்துக்கூறல் என்பது.

பருவங்கூறி வரைவுகடாய தோழிக்கு, அமராவதியினும் இம்மாதர்க் கொப்பில்லையென நான்முகன் பயந்த பிள்ளையை யான்வரையுந் துணையெளியளாக, நீ கூறுகின்ற தென்னோவெனத், தலைமகன் வரைவுடம்படாது தலைமகளை மிகுத்துக் கூறல்.

வரலாறு. மாடஞ்செய்பொன். (௧௪)

## உண்மைகூறி வரைவுகடாதல் என்பது.

வரைவுடம்படாது மிகுத்துக்கூறிய தலைமகனுக்கு, எங்களுக்குத் தாயுந் தந்தையுங் கானவர், யாங்கள் புனங்காப்போஞ் சிலர், நீர் வரைவுவேண்டாமையினெம்மைப் புனைந்து கூறல் வேண்டுவதில்லையெனத், தோழி தங்களுண்மை கூறி வரைவுகடாதல்.

வரலாறு. வேய்தந்தவெண் முத்தம். (௧௫)

## வருத்தங்கூறி வரைவுகடாதல் என்பது.

உண்மைகூறி வரைவுகடாய தோழி, வரையாமைநினைந்து அவள் வருந்தாநின்றாள், வரைவென்று கருதநீயிர் வருந்தாநின்றீர், இவ்வாறு நும்முள்ள மாறுபடநிகழ்தலின், இருவர்க்குமிடையேயான் வருந்தாநின்றேனெனத், தலைமகனுக்கு வருத்தங்கூறி வரைவுகடாதல்.

வரலாறு. மன்னுந் திருவருந்தும். (௧௬)

## தாயச்சங்கூறி வரைவுகடாதல் என்பது.

வருத்தங்கூறி வரைவுகடாய தோழி, எம்முடையவன்னை அவள் முலைமுதிர்வுகண்டு, இவள் சிற்றிடைக்கொரு பற்றுக்கண்டிலேமென்றஞ்சாநின்றாள், இனிமகட்பேசுவார்க்கு மறுது கொடுக்கவுங் கூடுமெனத், தாயச்சங்கூறி வரைவுகடாதல்.

வரலாறு. பனித்துண்டஞ்சூடும். (௧௭)

## இற்செறிவறிவித்து வரைவுகடாதல் என்பது.

தாயச்சங்கூறி வரைவுகடாய தோழி, எம்மன்னை அவளையுற்றுநோக்கித் திருமலைக்கட்புறம் போய் விளையாடவேண்டாவெனக் கூறினாள், இனியிற் செறிப்பாள்போலுமென, இற் செறிவறிவித்து வரைவுகடாதல்.

வரலாறு. சவிளையாட. (௧௮)

தமர்நினைவுரைத்து வரைவுகடாதல் என்பது.

இற்செறிவறிவித்துவரைவுகடாய தோழி, அவண்முலை தாங்க மாட்டாது இடைவருந்து வதனைக்கண்டு, எமரிற்செறிப்பாராக நினையா நின்றார், அயலவருமகட்பேச நினைக்கின்றாரெனத், தமர் நினைவுரைத்து வரைவுகடாதல்.

வரலாறு. சுற்றுஞ்சடைக்கற்றை. (௧௯)

எதிர்கோள்கூறி வரைவுகடாதல் என்பது.

தமர் நினைவுரைத்து வரைவுகடாய தோழி, நீவரைவொடுவரின், அன்னையுமையன் மாருமயல வருநின்வரவெதிர் கொள்வார், இனிப் பல நினையாது, பலருமறியவரைவொடு வருவாயாகவென, எதிர்கோள்கூறி வரைவுகடாதல்.

வரலாறு. வழியுமதுவன்னை. (௨௦)

ஏறுகோள்கூறி வரைவுகடாதல் என்பது.

எதிர்கோள்கூறி வரைவுகடாய தோழி, எம்முடையவையன்மார், அவளுடைய முலையின் பெருமையும் இடையின் சிறுமையும் கண்டு, எம்மூர்க்கண், விடையின் மருப்பைத்திருத்திவிட்டார், இனியடுப்பனவறியேமென, ஏறுகோள் கூறி வரைவுகடாவா நிற்றல்.

வரலாறு. படையயர் கருங்கண்ணி. (௨௧)

அயலுரையுரைத்து வரைவுகடாதல் என்பது.

ஏற்கோள்கூறி வரைவுகடாய தோழி, அயலவர் நாளைப்பொன் புனையப் புகுதாநின்றார், இதற்குத் தீவினையேன் கூறுவதென்னோவெனத், தான் முன்னிலைப் புறமொழியாக அயலுரை யுரைத்து வரைவுகடாவா நிற்றல்.

வரலாறு. உருப்பனையன்னகை. (௨௨)

தினைமுதிர்வுரைத்து வரைவுகடாதல் என்பது.

அயலுரையுரைத்து வரைவுகடாய தோழி, இவ்வேங்கை தினைப்புனங்கொய்கவென்று சோதிடஞ் சொல்லலைப் பொருந்தி, எம்மைக் கெடுவித்தது, இனி நமக்கேனல் விளையாட்டில்லையெனச், சிறைப்புறமாகத் தலைமகளோடு கூறுவாள் போன்று தினைமுதிர்வுரைத்துவரைவுகடாதல்.



வரலாறு. மாதிடங்கொண்டம். (௨௩)

பகல்வரல்விலக்கி வரைவுகடாதல் என்பது.

சிறைப்புறமாகத் தினைமுதிர்வுரைத்து வரைவுகடாய தோழி, எதிர்ப்பட்டு நின்று, இப்பெருங்கணியார் நமக்கு நோவுதகப் பருவஞ் சொல்லுவாராயிருந்தார், எம்மையன் மாரிவர் சொற்கேட்டுத் தினையைத் தடிவாராயிருந்தார், எமக்குமினித்தினைப் புனங்காவலில்லை, நீரினிப்பகல்வரல் வேண்டாவெனப், பகல்வரல்விலக்கி வரைவுகடாதல்.

வரலாறு. வடிவார் வயற்றில்லை. (௨௪)

தினையொடுவெறுத்து வரைவுகடாதல் என்பது.

பகல்வரல் விலக்கி வரைவுகடாய தோழி, இத்தினைக்காவறலைக் கீடாக நாமவனை யெதிர்ப்படலாமென்று நினைந்து தினையை வித்திக் காத்தோம், அதுபோய்த் தீவினையை வித்திக் காத்ததன் விளைவையுமுண்டாகி முடிந்ததெனச், சிறைப்புறமாகத்தினையொடு வெறுத்து வரைவுகடாதல்.

வரலாறு. நினைவித்துத்தன்னை. (௨௫)

வேங்கையொடுவெறுத்துவரைவுகடாதல் என்பது.

தினையொடுவெறுத்து வரைவுகடாயதோழி, இவ்வேங்கையரும் யஞான்றேயரும் பறக்கொய்தே மாயினிவரின்று நம்மைக்கெடுப்பான் வேண்டி இத்தினை கெடமுயலுமாறு முண்டோ, யாமது செய்யப்பெற்றிலே மென, வேங்கையொடு வெறுத்து வரைவுகடாதல்.

வரலாறு. கனைகடற்செய்தகு. (௨௬)

இரக்கமுற்றுவரைவுகடாதல் என்பது.

வேங்கையொடு வெறுத்து வரைவுகடாய தோழி, யாமவனை யெதிர்ப்படலாமென்றின் புற்றுவளர்த்த தினைத் திரளிப் புனத்தின் கணில்லாவாயிருந்தன, இனி நாமவனை யெதிர்ப்படுமாறென்னோவெனச், சிறைப்புறமாகத் தலைமகனுக் கிரக்க முற்று வரைவுகடாதல்.

வரலாறு. வழுவாலிய. (௨௭)

கொய்தமைகூறிவரைவுகடாதல் என்பது.

இரக்கமுற்று வரைவுகடாய தோழி, எதிர்ப்பட்டு நின்று, இப்புனத்துத் தினையுள்ளதின்று தொடர்பறக்கொய் தற்றது, எமக்குமினிப்புனங்காவலில்லை, யாமுமக்கறிவுரைக்கின்றே மல்லேம், நீரேயறிவீரெனத் தினைகொய்தமை கூறி வரைவுகடாதல்.

வரலாறு. பொருப்பர்க்கியாமொன்று. (உஅ)

### பிரிவருமைகூறிவரைவுகடாதல் என்பது.

கொய்தமை கூறி வரைவுகடாய தோழி, இப்புனத்துப் பயின்ற கிளிகடமக்குத் துப்பாகாதகாலத்துந் தினைத்தாளை விடாதிராநின்றன, நாம்போனால் நங்காதலர் இவ்விடத்தேவந்து நம்மைத் தேடுவாரோவெனச், சிறைப்புறமாகப் பிரிவருமை கூறி வரைவுகடாதல்.

வரலாறு. பரிவுசெய்தாண்டம். (உகூ)

### மயிலொடுகூறிவரைவுகடாதல் என்பது.

பிரிவருமை கூறி வரைவுகடாய தோழி, பிரிவாற்றாமையோடு தலைமகளையுங் கொண்டு புனங்காவலேறிப்போகாநின்றாள், கணியார் நினைவின்று முடிந்தது, யாங்கள் போகின்றோம், இப்புனத்தொருவர்வந்தாலிங்கு நின்றும் போனவர்கள், துணியாதன துணிந்து போனாரென்று, அவர்க் குரைமின் என, மயிலொடு கூறி வரைவு கடாதல்.

வரலாறு. கணியார்கருத். (௩௦)

### வறும்புனங்கண்டுவருந்தல் என்பது.

தலைமகளுந் தோழியும் புனங்காவலேறிப் போகத், தலைமகன் புனத்திடைச்சென்று நின்று, இப்புனம் யாமுன் பயின்றதன்றோ, இஃதிருக்கின்றவா றென்னோவென்று, அதன் பொலிவழிவு கூறித் தலைமகளைத் தேடிவருந்தல்.

வரலாறு. பொதுவினிற்றீர். (௩க)

### பதிநோக்கிவருந்தல் என்பது.

வறும் புனத்திடை வருந்திய தலைமகன், இவ்வாறு அணித்தாயினும், நம்மாற் செய்யலாவதொன்றில்லை யென்று, அவளிருந்த பதியை நோக்கித் தன்னெஞ்சோடு சாவிவருந்தல்.

வரலாறு. ஆனந்தமாக்கடல். (௩உ)

கக. பகற்குறி முற்றும்.

### இரவுக்குறி என்பது.

பகற்குறி புணர்ந்து விலக்கப்பட்ட தலைமகன் தெருண்டுவரைதலைத்தெளியானாயின், பின்னையும், தோழியைத் தலைப்பட்டிரவுக்குறி வேண்டிச் சென்றெய்தல்.



என்னை,

களவினுட்டவிர்ச்சி கிழவோற்கில்லை,

என்றாராகலின்,

இரவுக்குறிவேண்டலு மாற்றருமைகூறலும்
நின்றுநெஞ்சுடைதலு நிலைகண்டுநேர்தலும்
உட்கோள்வினாதலு முட்கொண்டுவினாதலும்
குறியிடங்கூறலுங் குறியேற்பித்தலும்
இரவரவுரைத்தலு மேதங்கூறலும்
குறைதனைநேர்தலுங் குறைநயப்புரைத்தலும்
மயின்மேலிசைத்து வரவுணர்ந்துரைத்தலும்
தாய்துயிலறிதலுந் தலைவிதுயிலெடுத்தலும்
இடத்துய்த்துநீங்கலுந் தளர்வகன்றுரைத்தலும்
மருங்கணைதலொடு முகங்கண்டுமகிழ்தலும்
பள்ளியிடத்துய்த்தலும் பள்ளியிடத்துய்த்து
வரைவுகடாவி வரவுவிலக்கலும்
வரைவுடம் படாதாற்றாதுரைத்தலும்
அதரிடைச்செலவிற் கிரக்கங்கூறலும்
இருளறநிலவு வெளிப்படவருந்தலும்
வேற்றுக்குறிகூறலுங் கடலிடைவைத்துத்
துயரறிவித்தலும் தோழியுமின்றித்
தானேகிடந்து தனிமையுற்றாற்றும்
காமமிக்க கழிபடர்கிளவியும்
காப்புச்சிறை மிக்ககையறுகிளவியும்
ஆறுபார்த்துற்றவச் சக்கிளவியும்
தன்னுட்கையா றெய்திடுகிளவியும்
நிலைகண்டுரைத்தலு நெடுங்கடற்சேர்த்தலும்
அலாறிவித்தலு மாறைந்தோடு
மூன்றா மிரவுக்குறியென மொழிப.

என்பது,

இரவுக்குறி வேண்டல், வழியருமைகூறி மறுத்தல், நின்று நெஞ்சுடைதல், இரவுக்குறிநேர்தல், உட்கோள்வினாதல், உட்கொண்டு வினாதல், குறியிடங்கூறல், இரவுக்குறியேற்பித்தல், இரவரவுரைத்தல், ஏதங்கூறிமறுத்தல், குறைநேர்தல், குறைநேர்ந்தமைகூறல், வரவுணர்ந்துரைத்தல், தாய்துயிலறிதல், துயிலெடுத்துச்சேறல், இடத்துய்த்து நீங்கல், தளர்வகன்றுரைத்தல், மருங்கணைதல், முகங் கண்டுமகிழ்தல், பள்ளியிடத்துய்த்தல், வரவுவிலக்கல், ஆற்றாதுரை

த்தல், இரக்கங்கூறி வரைவுகடாதல், நிலவு வெளிப்படவருந்தல், அல்லகுறியறிவித்தல், கடலிடைவைத்துத் துயரறிவித்தல், காமமிக்க கழிபடர் கிளவி, காப்புச்சிறைமிக்க கையறு கிளவி, ஆறுபார்த்துற்றவச்சக் கிளவி, தன்னுட்கையாறெய்திடு கிளவி, நிலைகண்டுரைத்தல், இரவுறுதுயரங்கடலொடு சேர்த்தல், அலரறிவுறுத்தல், ஆகிய முப்பத்துமூன்று மிரவுக்குறியாம்.

இரவுக்குறிவேண்டல் என்பது.

பதிநோக்கி வருந்திய தலைமகன், இற்றை யிரவிற்கியானுங்கள் சீறூர்க்கு விருந்து, என்னையேற்றுக் கொள்வாயாகவெனத், தோழியை இரவுக்குறி வேண்டல்.

வரலாறு. மருந்து நம்மல்லற். (௧)

வழியருமைகூறி மறுத்தல் என்பது.

தலைமகனிரவுக்குறிவேண்ட, யாங்கள் வாழும்பதியேற்றிழிவுடைத்தாகலின், அவ்விடத்து நினக்குச் சிந்தைக்குமேறற்கரிதெனத், தோழி வழியருமைகூறி மறுத்தல்.

வரலாறு. விசும்பினுக்கேணி. (௨)

நின்று நெஞ்சுடைதல் என்பது.

வழியருமைகூறக்கேட்ட தலைமகன், எய்தற்கரியாளை விரும்பி நீ மெலிகின்றவிதற்குயானாற்றேனெனக்கூறி, தனதிறந்து பாடுதோன்ற நின்று, தன்னெஞ்சுடைந்து வருந்தல்.

வரலாறு. மாற்றேனெனவந்த. (௩)

இரவுக்குறி நேர்தல் என்பது.

தலைமகனெஞ்சுடைந்து வருந்தக்கண்டு, இவனிறந்துபடவுங்கூடுமெனவுட்கொண்டு, நீயாளிகணிரைத்து நின்றியானை களைத்தேடுமிரவின் கண்வந்து மீள்வேனென்னு நின்றாய், இதற்குத் தீவினையேனியம்புவதெவனோவென்று, மறுத்தவாய்பாட்டால் தோழி இரவுக்குறி நேர்தல்.

வரலாறு. கூளிநிரைக்கரின். (௪)

உட்கோள்வினாதல் என்பது.

இரவுக்குறிநேர்ந்த தோழி, தங்கணிலத்துமக்கள் கோலத்தனாய் வருதற்கவனுட்கொள்வது காரணமாக, நின்னூரிடத்தார் எம்மலர்சூடி, எச்சாந்தணிந்து, எம்மரநிழலின் கீழ்விளையாடுபவெனத் தலைமகனைவினாதல்.



வரலாறு. வரையன்றொருகால். (௫)

உட்கொண்டுவினாதல் என்பது.

கேட்டவினாவை யுட்கொண்டு, அந்நிலத்து மக்கள் கோலத்தனாய்ச் செல்வானாக, நின்னூரிடத்து இராப்பொழுது, நுமரெம்மலரைச் சூடி, எச்சாந்தை யணிந்து, என்ன மரநிழலின் கீழ்விளையாடுபவெனத், தலைமகன் தோழியைவினாதல்.

வரலாறு. செம்மலராயிரம். (௬)

குறியிடங்கூறல் என்பது.

உட்கொண்டு வினவிய தலைமகனுக்கு, யாங்கள் சந்தனச் சாந்தணிந்து, சுனைக்காவிகள்சூடித், தோகைகடியிலும் வேங்கைப்பொழிற்கண் விளையாடுவேம், அவ்விடத்து நின்வரவறியமயிலெழுப்புவாயாகவெனத், தோழி குறியிடங்கூறல்.

வரலாறு. பனைவளர்கைம்மா. (௭)

இரவுக்குறியேற்பித்தல் என்பது.

தலைமகனுக்குக் குறியிடங்கூறித் தலைமகளுழைச்சென்று, அந்திக் காலத் தோரலவன்றன் பெடையொடு பயிலக் கண்டு, ஒரு பெரியோன் வருத்தமிக்குச் சென்றான், அதற்குப்பின் அவன் சேர்துயிலறிந்திலேனெனத், தோழி அவனாற்றாமை கூறித் தலைமகளையிரவுக்குறியேற்பித்தல்.

வரலாறு. மலவன்குரம்பையை. (௮)

இரவரவுரைத்தல் என்பது.

அலவன்மேல்வைத்து, இரவுக்குறியேற்பித்த முகங்கொண்டு, அது வழியாக நின்று, வேட்கைமிகவால், யானைகணெடுங் கச்சிங்கந்திரியுமலைச் சரியிடத்து வரவேண்டிச்சொன்னான், இதற்கியாஞ்செய்வதென்னோ வெனத், தோழிதலைமகளுக்குத் தலைமகனிரவரவுரைத்தல்

வரலாறு. மோட்டங்கதிர்முலை. (௯)

ஏதங்கூறிமறுத்தல் என்பது.

தலைமகனிர வரவுகேட்ட தலைமகள், தனக்கவன் செய்ததலையளியும், உதவியும் நினைக்கின்ற உள்ளத்தளாய், அரிதிரண்டு நின்று

யானை வேட்டஞ்செய்யும் வல்லிருட்கண், வள்ளலைவா வென்றுகூறத் தகுமோவென, ஏதங்கூறிமறுத்தல்.

வரலாறு. செழுங்கார்முழவதிர். (௧௦)

குறைநேர்தல் என்பது.

ஏதங்கூறி மறுத்த தலைமகள், அவனுற்றுறுகிய நிலைமைகேட்டு, யான் புனலிடைவீழ்ந்து கெடப்புக, என்னுயிர்தந்த பெரியோர்க்குச் சிறியேன் சொல்லுவதறியேனென வுடம்பட்டு நேர்தல்.

வரலாறு. ஓங்குமொருவிடம். (௧௧)

குறைநேர்ந்தமைகூறல் என்பது.

தலைமகளைக் குறைநயப்பித்துத் தலைமகனுழைச்சென்று, இற்றையாமத்தெல்லா நின்னருண்மேனிற்கவேண்டித் துன்பமுற்றேன்,நீ கருதியதும் முடிந்ததெனத், தோழி தலைமகனுக்கவள் குறைநேர்ந்தமைகூறல்.

வரலாறு. ஏனற்பசுங்கதிர். (௧௨)

வரவுணர்ந்துரைத்தல் என்பது.

தலைமகனுக்குக் குறைநயப்புக் கூறியதோழி, யாம் விளையாடிய பொழிலிடத்து வேங்கைமேலுண்டாகிய மயிலினமின்புற்றுத் துயில்பெயராநின்றன, இதற்குக் காரண மென்னோவென, அவன் வரவறிந்துகூறல்.

வரலாறு. முன்னுமொருவர். (௧௩)

தாய்துயிலறிதல் என்பது.

தலைமகன் வரவுணர்ந்து, தலைவியைக்கொண்டு செல்லக்கருதிய தோழி, யாம்விளையாடிய பொழிலிடத்தோர் யானை நின்றாசலைத்தள்ளியது, அதற்கியாஞ் செய்வதென்னோவெனத் தாய் துயிலறிதல்.

வரலாறு. கூடாரரணெரி. (௧௪)

துயிலெடுத்துச்சேறல் என்பது.

தாய் துயிலறிந்ததோழி, குவளைப்பூக்கண் மலர்கின்றன, அவை நின்கண்ணையொக்குமாயிற் காண்பாயெனத் துயிலெடுத்துச்சேறல்



வரலாறு. விண்ணுக்குமேல்வியன். (௧௫)

இடத்துய்த்துநீங்கல் என்பது.

துயிலெடுத்துக்கொண்டு சென்று,அக்குறியிடத்து நிறுத்தி, இவை நின்கண்கள் வென்ற குவளைமலர், இவற்றைக் காண்பாயாக, யானின்குழற்குச் சந்தனத்தழை கொய்யாநின்றேனெனத், தான் சிறிதகலல்.

வரலாறு. நந்திவரமென்னும். (௧௬)

தளர்வகன்றுரைத்தல் என்பது.

தோழி குறியிடைநிறுத்தி நீங்கத் தலைமகனெதிர்ப்பட்டு, நும்முடைய கமலக்கோயில், கதிர்வன் வருவதன்முன், நீரே திறந்துகொண்டோ போந்தது, இப்பொழிலிடைவந்து நடந்ததென்னோவெனத், தலைமகளைப் பெருமபான்மை கூறித் தன்றளர்வுநீங்கல்.

வரலாறு. காமனைவென்றகண். (௧௭)

மருங்கணைதல் என்பது.

பெரும்பான்மைகூறக் கேட்டதலைமகள் பெருநாணினளாதலிற் றன்முன்னிற்கலாகாது நாணித்தலையிறைஞ்சிவருந்தச், சென்று சார்தலாகாமையின், தனதாதரவு மிகவாலவ் வருத்தந் தணிப்பான் போன்று, முலையொடு முனிந்து, அவளிறு மருங்குருங்கிச் சென்றணைதல்.

வரலாறு. அகிலின்புகைவிம்மி. (௧௮)

முகங்கண்டுமகிழ்தல் என்பது.

மருங்கணை விருதிக்கட்டலை மகண்முகமகிழ்ச்சிகண்டு, இவளும்யானும், மலருமதியுமெனத், தலைமகன்றன் னயப்புணர்த்தி மகிழ்தல்.

வரலாறு. அழுந்தேனரகத்தி. (௧௯)

பள்ளியிடத்துய்த்தல் என்பது.

மலர்மதிமேல்வைத்துக்கூறி மகிழ்வுற்றுப் பிரிகின்றவன், இப்பொழி லிடைஇனித் தனியேநின்று நீலப்பூக்களைக் கொய்யாது, நின்னரிய தோழியோடு உன்னுயத் திடைச்சென்று துயில் பயில்வாயெனத் தலைமகளைப் பள்ளியிடத்துச்செலுத்தல்.

வரலாறு. சுரும்புறுநீலங்கொய். (௨0)

## வரவுவிலக்கல் என்பது.

தோழி தலைமகளைப் பள்ளியிடத்திற் சேர்த்திச்சென்று, இக்கல்லதர் இவள் காரணமாக, நினக்கெளிதாயிற்றாயினும், இனி இவ்வாறொழுகற்பாலையல்லை யென, வரைவு பயப்பக் கூறித் தலைமகனை வரவுவிலக்கல்.

வரலாறு. நற்பகற்சோமன். (௨௧)

## ஆற்றாதுரைத்தல் என்பது.

வரைவுகடாவி வரவுவிலக்கின தோழிக்கு வரைவுடம்படாது, பின்னும் களவொழுக்கம் வேண்டி, யான்முன் செய்ததவப்பயனாலெனக் கெய்தலாம்வண்ணம், திருமகளிவ் வாறு கொடிச்சியாயிருந்தாளெனக் கருதியேயென இன்னுயிர் நிற்பது, இத்தன்மை யாளை யான்வரையும் துணையெளியளாக நீ கூறுகின்றதென்னெனத், தலைமகன்றன தாற்றாமைதோன்றக்கூறல்.

வரலாறு. பைவாயரவரை. (௨௨)

## இரக்கங்கூறிவரைவுகடாதல் என்பது.

களவுவிரும்பி வரைவுடம்படாத தலைமகனுக்கு, நீ செல்லுநெறிக்கணினக்கிடையூறுண்டா மென்னுமச்சத்தால், அவளழுதிரங்காநின்றாளென்று, நீ சென்றமையறிய நின்குறி காட்டுவாயெனத், தலைமகள் இரக்கங் கூறி வரைவுகடாதல்.

வரலாறு. பைவாயரவும். (௨௩)

## நிலவு வெளிப்படவருந்தல் என்பது.

இரக்கங்கூறி வரைவுகடாய தோழி, பிற்றை ஞான்றலவனிரவுக் குறியிடைவந்து நிற்ப, நிலவு வெளிப்பாட்டாற் சென்றெதிர்ப்படமாட்டா மற்றாங்கள் வருந்தாநின்றமை சிறைப்புறமாக மதியொடு புலந்து கூறல்.

வரலாறு. நாகந்தொழ வெழில். (௨௪)

## அல்லகுறியறிவித்தல் என்பது.

குறியல்லாத குறியெதிர்ப்பட்டு மீண்டமை பிற்றை ஞான்று தலைமகன் சிறைப்புறம்வந்து நிற்பத், தோழி தலைமகளுக்குரைப்பாள் போன்று, அன்னத்தின்மேல் வைத்தறிவித்தல்.



வரலாறு. மின்னங்கலரும். (௨௫)

## கடலிடைவைத்துத் துயரறிவித்தல் என்பது.

தலைமகளிரவுறுதுயராம், தலைமகன் சிறைப்புறமாக, இவள் வாடநீயிரைகின்றாய், இது நினக்கு நன்றோவெனத் தோழி கடலொடு புலந்து கூறல்.

வரலாறு. சோத்துன்னடியமென். (௨௬)

## காமமிக்க கழிபடர்கிளவி என்பது.

தலைமகனைக் காணலுற்று வருந்துகின்ற தலைமகள், தனது வேட்கை மிகவாற் கேளாதனவற்றைக் கேட்பனவாகவிளித்து, நீங்களே நுளைதுற்று அழிகின்றாயென்று, ஒருகால் வினவுகின்றிலீர், இது நுங்காதன்மையென அவற்றொடு புலந்துகூறல்.

வரலாறு. மாதுற்றமேனி. (௨௭)

## காப்புச்சிறைமிக்க கையறுகிளவி என்பது.

காமமிக்கெதிர்ப்பட விரும்பிய தலைமகன், இவ்விடையீடெல்லா ந்தி யொருவழியான் வந்தாராயினும், இஞ்ஞாளி குரைக்கின்றமையின், யாமிவரை யெதிர்ப்படுதலரிதெனக், காப்புச்சிறைமிக்கு வருந்தல்.

வரலாறு. இன்னறவார்பொழில். (௨௮)

## ஆறுபார்த்துற்றவச்சக்கிளவி என்பது.

சிறைப்புறமாகத் தலைமகளாற்றாமை கூறக்கேட்ட தலைமகன் குறியிடைச்சென்று நிற்பத், தோழி யெதிர்ப்பட்டு, நீ கான்யாறு பலவு நீந்திக், கைவேல் துணையாக அஞ்சாது வந்தால், யாங்களிச்சோலையிடத்துண்டாகிய தெய்வத்துக் கஞ்சுவேம், அதனாலிவ்விருளிடை வரற்பாலை யல்லையெனத், தங்கள் அச்சங்கூறி வரவுவிலக்கல்.

வரலாறு. தாருறுகொன்றையன். (௨௯)

## தன்னுட்கையாறெய்திடுகிளவி என்பது.

தலைமகனைக் காணலுற்று வருந்திய தலைமகள், இக்கண்டல் சான்றாகக் கொண்டிப் புன்னையிடத்துக்கலந்த கள்வனை யிவ்விடத்துவரக் கண்டிலையோ; துணையில்லாதேற்கொரு சொல்லருளாயென்று, தன்னுட்கையாற்றை மதியொடுகூறி வினாதல்.

வரலாறு. விண்டலையாவர்க்கும். (௯௦)

### நிலைகண்டுரைத்தல் என்பது.

தலைமகள் தன்னுட் கையாற்றை மதியொடுகூறி வருந்துகின்றமை சிறைப்புறமாகக் கேட்ட தலைமகன், ஆற்றாமை யானில்வரைப்பின் கட்புகுந்து நிற்ப, தோழி யெதிர்ப்பட்டு, நீயிவ்வாறு இல்வரைப்பின் கட்புகுந்து நின்றால், கண்டவர் நின்னைப் பெரும்பான்மை நினையாது மற்றொன்று நினைப்பாராயின், அவளுயிர் வாழவல்லளோ, இனியிவ்வா றொழுகற்பாலை யல்லையென, வரைவு தோன்றக்கூறல்.

வரலாறு. பற்றொன்றிலார்பற்றும். (௯௧)

### இரவுறுதுயரங்கடலொடுசேர்த்தல் என்பது.

தலைமகனை யெதிர்ப்படமாட்டாது வருந்தினதலைமகள், நுறை யிரவெல்லா மென்னைப்போல நீயுந்துன்பமுற்றுக் கலங்கிநு தெளிகின்றிலை, இவ்விடத்து நின்னையுமகன்று சென்றாருளரோவெனத், தானுறு துயரங் கடலொடு சேர்த்திக்கூறல்.

வரலாறு. பூங்கணைவேளை. (௯௨

### அலரறிவுறுத்தல் என்பது.

தலைமகளிரவுறு துயரங்கடலொடு சேர்த்திவருந்து கின்றமை சிறைப்புறமாகக் கேட்டதலைமகன், குறியிடைச்சென்று நிற்பத், தோழி யெதிர்ப்பட்டு, நின்னருளாய் நின்றவிது எங்களுக் கலராகாநின்றது, இனியிவ்வாறொழுகா தொழிய வேண்டுமென, அலரறிவுறுத்தி வரவுவிலக்கல்.

வரலாறு. அலராயிரந்தந்து. (௯௩)

௨௦. இரவுக்குறி முற்றும்.

### ஒருவழித்தணத்தல் என்பது.

இவ்வாறிரவுக்குறி புணர்ந்து அலரொழுந்ததென்று விலக்கப்பட்டபின்னர்த் தெருண்டுவரைதலைத் தெளியானாயின், அவ்வலரடங்கச், சிலநாளொருவழித் தணந்துறைதல், உடன் கொண்டுபோதல், தோழியான் வரைவு முடுக்கப்பட்டருங்கலம் விடுத்துவரைந்து கோடல் இம்மூன்றனு ளொன்றுமுறைமையாம்.

அவற்றுள்,

ஒருவழித் தணத்தல் வருமாறு,
அகன்றணைவு கூறலுமாழியொடு கேட்டலும்
ஆழியொடுபுலத்தலு மன்னமோடாய்தலும்



ஆழிக்குரைத்தலும் கூடலிழைத்தலுஞ்
சுடரொடுபுலம்பலும் பொழுதுகண்டுமயங்கலும்
பையுளெய்தலும் பரிவுற்றுரைத்தலும்
அன்னமோடழிதலும் வரவுணர்ந்துரைத்தலும்
வருத்தங்கூறலும் வருபதின்மூன்றுந்
திருத்தியவொருவழித்திறனாகும்மே.

என்பது,

அகன்றணைவுகூறல், கடலொடு வரவுகேட்டல், கடலொடு புலத்தல், அன்னமோடாய்தல், சேர்வழிநோக்கிக் கடலொடுகூறல், கூடலிழைத்தல், சுடரொடுபுலம்பல், பொழுதுகண்டுமயங்கல், பறவையொடுவருந்தல், பங்கயத்தோடு பரிவுற்றுரைத்தல், அன்னமோடழிதல், வரவுணர்ந்துரைத்தல், வருத்தமிகுதிகூறல், ஆகியபதின்மூன்றும் ஒருவழித் தணத்தலாம்.

### அகன்றணைவுகூறல் என்பது.

அலரறிவுறுத்த தோழி, இத்தன்மையை நினைந்து நீசிலநாளகன்றணைவையாயின், அம்பலுமலருமடங்கி, இப்பொழுதே யவளுக்குப் பழியில்லையாமெனத், தலைமகனுக்கிசைய அகன்றணைவுகூறல்.

வரலாறு. புகழும்பழியும். (௧)

### கடலொடு வரவுகேட்டல் என்பது.

ஒருவழித்தணத்தற் காற்றாதுவருந்திய தலைமகள், நம்மைவிட்டுப்போனவர் மீண்டு வரும்பரிசுனக் குரைத்தாரோவெனக், கடலொடு தலைமகன் வரவுகேட்டல்.

வரலாறு. ஆரம்பரந்து. (௨)

### கடலொடுபுலத்தல் என்பது.

கடலொடு வரவுகேட்ட தலைமகள், தனக்கு வாய்திறவாமையின், என்வளை கொண்டுபோனார் திறம்யான் கேட்க, நீ கூறாதொழிகின்ற தென்னெனப், பின்னுமக் கடலொடுபுலந்துகூறல்.

வரலாறு. பாணிகர் வண்டினம். (௩)

### அன்னமோடாய்தல் என்பது.

கடலொடு புலந்து கூறிய தலைமகள், புன்னையொடு புலந்து அகன்றவர் அகன்றே யொழிவரோ, யானறிகிலேன், நீயாயினுஞ் சொல்லுவாயாகவென, அன்னமோடாய்ந்து வரவுகேட்டல்.

வரலாறு. பகன்றுமறைக்கண். (௪)

## தேர்வழிநோக்கிக் கடலொடுகூறல் என்பது.

அன்னமொடுவரவுகேட்ட தலைமகள், அதுவும் வாய்திறவாமையின், இனி அவர்வருகின்றாரல்லர், எம்முயிர்க்குப் பற்றுக்கோடினியிதுவே, இதனை நீயழியாதொழிவாயென, அவன் சென்றதேர்வழி நோக்கிக் கடலொடுகூறல்.

வரலாறு. உள்ளூமுருகியு. (௫)

## கூடலிழைத்தல் என்பது.

தேர்வழிநோக்கிக் கடலொடு கூறியதலைமகள், இம்மணற்குன்றின்கண் நீத்தகன்றவனுள்ளலை, உள்ளத்தை நெகிழ்த்து இவ்விடத்தே தரவல்லையோவெனக், கூடற்றெய்வத்தை வாழ்த்திக் கூடலிழைத்து வருந்தல்.

வரலாறு. ஆழிதிருத்தும், (௬)

## கூடரொடுபுலம்பல் என்பது.

கூடலிழைத்து வருந்துகின்ற தலைமகள், துறைவர்போகுமவ்சுளறவு மென்னைவருத்துகின்றன, அதன்மேல் நீயும் போகாநின்றாய், யானினி யுய்யுமாறென்னோவெனச், செல்லாநின்ற சுடரொடு புலம்பல். (௭)

வரலாறு. சார்த்தரங் கந்திரை.

## பொழுதுகண்டுமயங்கல் என்பது.

சுடரொடு புலம்பாநின்றவள், கதிரவன் மறைந்தான், காப்பவர்சேயர், அதன்மே லிவ்விடத்து மீனுண்டவன்னங்களும் போய்த் தஞ்சேக்கைகளை யடைந்தன, இனி யானாற்றுமாறென்னோவென, மாலைப்பொழுது கண்டுமயங்கல்.

வரலாறு. பகலோன் கரந்தனன். (௮)

## பறவையொடுவருந்தல் என்பது.

பொழுது கண்டுவருந்துகின்ற தலைமகள், இந்நிலைமைக் கண்ணுமென்னுண்ணோயறியாது கண்ணோட்டமின்றித் தம்வயிறோம்புகின்றன, இஃதென்னை பாவமென, வண்டானப் பறவையொடு வருந்திக்கூறல்.

வரலாறு. பொன்னுமணியும், (௯)



## பங்கயத்தோடு பரிவுற்றுரைத்தல் என்பது.

பறவையொடுவருந்துகின்றவள், இவை என் வருத்தங்கண்டிவள் வருந்தாமல் விரையவர வேண்டுமென்று ஞாயிற்றை நோக்கித் தங் கைகுவியாநின்றன, ஆதலாலென் மாட்டன்புடையன போலுமெனப், பங்கயத்தோடு பரிவுற்றுக்கூறல்.

வரலாறு. கருங்கழி காதற். (௰)

## அன்னமோடழிதல் என்பது.

பங்கயத்தைநோக்கிப் பரிவுறுகின்றவள், உலகமெல்லாந் துயிலாநின்ற இந்நிலைமைக்கண்ணும், யான்றுயிலாமைக்குக் காரணமாகிய என்வருத்தத்தைச் சென்று அவர்க்குச் சொல்லாது, தான்றன் சேவலைப்பொருந்திக் கவற்சியின்றித் துயில்கின்றதென, அன்னத்தோடழிந்துகூறல்.

வரலாறு. மூவறழீஇய. (௧௧)

## வரவுணர்ந்துரைத்தல் என்பது.

தலைமகளன்னத்தோடழிந்து வருந்தாநிற்பத், தலைமகனொருவழித்தணந்து வந்தமை சிறைப்புறமாக வுணர்ந்ததோழி, வளைகணிறுத்த நிற்கின்றன வில்லை, நெஞ்சம்நெகிழ்ந்துருகாநின்றது, கண்கடுயிலின்றிக் கலுழாநின்றன, இவையெல்லாம் யான்சொல்லவேண்டுவதில்லை, நீயேகண்டாய், இதனைச் சென்று அவர்க்குக் கூறுவாயென, மதியொடுகூறல்.

வரலாறு. நில்லாவளை நெஞ்சம், (௧௨)

## வருத்தமிகுதிகூறல் என்பது.

சிறைப்புறமாகமதியொடு வருத்தங்கூறிச் சென்றெதிர்ப்பட்டு, வலஞ்செய்துநின்று, நீபோய் அவள்படுகின்ற வருத்தமென்னாற் கூறுமளவல்லவென, வரைவுதோன்றத் தலைமகள் வருத்தமிகுதி தோழி கூறாநிற்றல்.

வரலாறு. வளருங்கறியறி. (௧௩)

௨௧. ஒருவழித்தணத்தன் முற்றும்.

## உடன்போக்கு என்பது.

இவ்வாறொருவழித் தணத்தனிகழாதாயின் உடன்போக்கு நிகழும்.

அதுவருமாறு.

பருவங்கூறலும் படைத்துமொழிதலும்
மருவமர்கோதையை மகட்பேச்சுரைத்தலும்
பொன்னணிவுரைத்தலும் பொருள்விலைகூறலும்
அன்னமென்னடையா ளருமைகேட்டழிதலும்
தளர்வறிந்துரைத்தலுந் தாழ்குழலாடன்
னுளநினைவுரைத்தலு முடன்கொண்டுசேறலுக்
கருமையுரைத்தலு மாதரங்கூறலும்
மருவியதடங்கயல் வாழாளென்றலும்
பொருவருகற்பின் புனைநலனுரைத்தலும்
துணிந்தமைகூறலுந் துணிவுகேட்டலும்
துணிவறிவித்தலுந் தொல்லைநாண்விடலும்
துணிவெடுத்துரைத்தல் கொண்டகலெனவுரைத்தலும்
அடிவழிநினைந்து நின்றவனுளம்வாடலும்
கொடியிடையாளைக் கொண்டுசென்றுய்த்தலும்
ஓம்படுத்துரைத்தலும் வழிப்படுத்துரைத்தலும்
தேம்படுகோதையைத் திறலடுவேலோன்
பையக்கொண்டேகலும் பயங்கெடவுரைத்தலும்
மையமர்கண்ணியை வழியயர்வகற்றலும்
நெறிநனிவிலக்கலு நெறியிடைக்கண்டவர்
செறிவெடுத்துரைத்தலுஞ் சேயிழையாளுடன்
வழிவிளையாடலும் வழியெதிர்வருவோர்
எழினகரணிமை யிதுவெனவுரைத்தலும்
நகரங்காட்டலு நகரிடைப்புக்குப்
பதிபரிசுரைத்தலும் பாங்கியைக்கிட்டி
மதிநுதலாளை வளர்த்தவள்கேட்டலும்
அறத்தொடுநிற்றலு மதுகேட்டழுங்கலும்
திறப்பாடுன்னிச் செவிலிகவன்றுரைத்தலும்
அடிநினைந்திரங்கலு மதுதாய்க்குரைத்தலும்
மடவரல்போக வாடியுரைத்தலும்
கிளிமொழிக்கிரங்கலுங் கிளர்சுடர்ப்பராய்தலும்
அளிபெறுபருவத்திற் கவள்கவன்றுரைத்தலும்
நாடத்துணிதலு நற்றாய்நயந்தவர்
கூடக்கரையெனக் கொடிக்குறிபார்த்தலும்
சோதிடங்கேட்டலுஞ் சுவடுகண்டறிதலும்
ஏதமுற்றவைகண் டிரங்கியுரைத்தலும்
வேட்டமாதரைக் கண்டுவினவலும்



புறவொடுபுலத்தலுங் குரவொடுவருந்தலும்
திறலருந்தவத்தொடு செல்லாநின்ற
மாவிரதியரை வழியிடைவினவலும்
வேதியர்தம்மை விரும்பிவினாதலும்
புணர்ந்துடன்வருவோரைப் பொருந்திவினவலும்
மணந்தருகுழலாள் மன்னியநிலையொடு
வேங்கைபட்டது கண்டுவியத்தலும்
ஆங்கவரியை பணியவட்கெடுத்துரைத்தலும்
மீளவுரைத்தலு மீளாதவளுக்
கூழ்முறையிதுவென வுலகியல்புரைத்தலும்
அழுங்குதாய்க்குரைத்தலு மாகியவெல்லாம்
உழுங்கொலைவேலோ னுடம்போக்குவிரியே

என்பது,

பருவங்கூறல், மகட்பேச்சுரைத்தல், பொன்னணிவுரைத்தல், அருவிலையுரைத்தல், அருமைகேட்டழிதல், தளர்வறிந்துரைத்தல், குறிப்புரைத்தல், அருமையுரைத்தல், ஆதரங்கூறல், இறந்துபாடுரைத்தல், கற்புநலனுரைத்தல், துணிந்தமைகூறல், துணிவொடுவினவல், போக்கறிவித்தல், நாணிழந்து வருந்தல், துணிவெடுத் துரைத்தல், குறியிடங்கூறல், அடியொடுவழிநினைந் தவனுளம்வாடல், கொண்டுசென்றுய்த்தல், ஓம்படுத்துரைத்தல், வழிப்படுத்துரைத்தல், மெல்லக்கொண்டேகல், அடலெடுத்துரைத்தல், அயர்வகற்றல், நெறிவிலக்கிக்கூறல், கண்டவர்மகிழ்தல், வழிவிளையாடல், நகரணிமைகூறல், நகர்காட்டல், பதிபரிசுரைத்தல், செவிலிதேடல், அறத்தொடுநிற்றல், கற்புநிலைக்கிரங்கல், கவன்றுரைத்தல், அடிநினைந்திரங்கல், நற்றாய்க்குரைத்தல், நற்றாய்வருந்தல், கிளிமொழிக்கிரங்கல், சுடரோடிரத்தல், பருவநினைந்துகவறல், நாடத்துணிதல், கொடிக்குறி பார்த்தல், சோதிடங் கேட்டல், சுவடுகண்டறிதல், சுவடுகண்டிரங்கல், வேட்டமாதரைக்கேட்டல், புறவொடுபுலத்தல், குரவொடுவருந்தல், விரதியரை வினவல், வேதியரை வினாதல், புணர்ந்துடன் வருவோரைப் பொருந்திவினவல், வியந்துரைத்தல், இயைபெடுத்துரைத்தல், மீளவுரைத்தல், உலகியல்புரைத்தல், அழுங்குதாய்க்குரைத்தல், ஆகிய ஐம்பத்தாறுமுடன்போக்காம்.

பருவங்கூறல் என்பது.

அலரறிவுறுத்ததோழி, இவண்முலை முதிர்வுகண்டமையான் மகட்பேசுவார்க் கெமர்மாறுது கொடுக்கவுங்கூடும், அதுபடாமனிற்ப, நீமுற்பட்டு வரைவாயாகவெனத், தலைமகனுக்குத் தலைமகள் பருவங்கூறல்.

வரலாறு. ஒராகமிரண்டெழி. (௧)

## மகட்பேச்சுரைத்தல் என்பது.

பருவங்கூறியதோழி, படைத்துமொழியான் அயலவர் பலரும் மேன்மேலும் பொன்னணியக் கருதாநின்றார், நீ விரையவரைவொடு வருவாயாதல், அன்றியுடன் கொண்டு போவாயாதல், இரண்டினுளொன்றுதுணிந்து செய்யக்கருதுவாய், அதனையின்றே செய்வாயாகவெனத், தலைமகனுக்கு அயலவர்வந்து மகட்பேசல் கூறல்.

வரலாறு. மணியக்கணியும். (௨)

## பொன்னணிவுரைத்தல் என்பது.

படைத்துமொழியான் மகட்பேசல் கூறின தோழி, அறுதியாக முன்றிற்கணின்று, முரசொடு பணிலமுழங்கக் காப்பணிந்து பொன்னணியப் புகுதாநின்றார் இனி நின்கருத் தென்னோவெனத் தலைமகனுக்கயலவர் பொன்னணிவுரைத்தல்.

வரலாறு. பாப்பணியோன்றில்லை. (௩)

## அருவிலையுரைத்தல் என்பது.

பொன்னணிவுரைப்பக் கேட்டதலைமகன், யான் வரைவொடுவருதற்கு நீ முலைப்பரிசங் கூறுவாயாகவென, எல்லாவுலகமு நல்கினும், எமர் அவளுடைய சிறியவிடைக்கு விலையாகச் செப்பலொட்டார் இனிப் பெரியமுலைக்கு நீ விலைகூறுவதென்னோ வெனத், தோழிவிலையருமை கூறல்.

வரலாறு. எழும்பாலணியிறை. (௪)

## அருமைகேட்டழிதல் என்பது.

அருவிலைகேட்ட தலைமகன், நீயவளதருமை கருதாது அவளது வயவங்களி லுண்டாகிய நயத்தைப்பற்றி விடாது நடுங்காநின்றாய், இனி மதியைப்பிடித்துத் தரவேண்டி யழுமறியாக் குழவியைப்போலக் கிடந்தரற்றுவாயாக வெனத், தன்னெஞ்சோடழிந்துகூறல்.

வரலாறு. விசும்புற்றதிங்கட். (௫)



## தளர்வறிந்துரைத்தல் என்பது.

வரைவு மாட்சிமைப்படாதாயின், நீயவளையுடன் கொண்டுபோவென்பதுபயப்பக், கடலையுங்கானலையுநோக்கிக் கண்ணீர்கொண்டு, தன்னையத்தாரை யெல்லாம் புல்லிக்கொண்டாள், அவள்கருதிய தின்னதென்று தெரியாதெனத்தோழி தலைமகன் வருத்தங் கூறல்.

வரலாறு. மைதயங்குந்திரை. (௬)

## குறிப்புரைத்தல் என்பது.

வருத்தங்கூறிப் போக்குணர்த்தி, அது வழியாகநின்று, என்னைப்புல்லிக்கொண்டு தன்னுடையபூவையையும் பந்தையும் பாவையையுங்கிளியையும், இன்றென்கைத் தந்தாள், அது நின்னோடுடன்போகத் தலைக்கருதிப்போலுமெனத், தலைமகனுக்குத் தலைமகள் குறிப்புரைத்தல்.

வரலாறு. மாவைவந்தாண்ட. (௭)

## அருமையுரைத்தல் என்பது.

குறிப்புரைத்துப் போக்குடம்படுத்திய தோழிக்குக், கொங்கைபொருது நடுங்குமிடையையுடையாளது மெல்லியவடிக்கு, யான் செல்லும் வெஞ்சுரந்தகாது, அதன்மேலு மெம்பதியுஞ்சேய்த்து, அதனில் நீ கருதுகின்ற காரியமிகவுமருமையுடைத்தெனத், தலைமகன் போக்கருமை கூறுநிற்றல்.

வரலாறு. மெல்லியல் கொங்கை. (௮)

## ஆதரங்கூறல் என்பது.

போக்கருமைகூறியதலைமகனுக்கு, நின்னோடு போகப்பெறின், அவளுக்கு வெஞ்சுரமும் தண்சுரமாம், நீயருமை கூறாது அவளைக் கொண்டுபோவெனத், தோழி தலைமகளதாதரங்கூறல்.

வரலாறு. பிணையுங்கலை. (௯)

## இறந்துபாடுரைத்தல் என்பது.

ஆதரங்கூறியதோழி, நீயுடன்கொண்டு போகாயாகில், அலரானும் காவன் மிகுதியானும் நின்னை எதிர்ப்படுதல் அரிதாதலின், தடந்துறந்த கயல்போல இறந்துபடுமெனத், தலைமகள் இறந்துபாடுரைத்தல்.

வரலாறு. இங்கடலென்னீ. (௧௦)

### கற்புநலனுரைத்தல் என்பது.

தலைமகனைப் போக்குடம்படுத்திய தோழி, தலைமகளுழைச் சென்று, மகளிர்க்குப் பாதுகாக்கப்படுவனவற்றுள் நாண்போலச் சிறந்தது பிறிதில்லை. அத்தன்மைத்தாகிய நாணுங் கற்புப்போலச் சீரிய தன்றென உலகியல் கூறுவாள்போன்று, அவளுடன் போக்குத்துணியக்கற்பு நலங்கூறல்.

வரலாறு. தாயிற்சிறந்தன்று. (௧௧)

### துணிந்தமைகூறல் என்பது.

உலகியல் கூறுவாள்போன்று கற்புவழிநிறுத்தி, எம்பெருமான் நின்னை நீரில்லாத வெய்யசுரத்தேஉடன் கொண்டுபோவானாக.நினையாநின்றான். இதற்கு நின்கருத்தென்னோவெனத், தோழி தலைமகளுக்குத் தலைமகனினைவுகூறல்.

வரலாறு. குறப்பாவை நின்குழல். (௧௨)

### துணிவொடுவினாவல் என்பது.

தலைமகனினைவுகேட்ட தலைமகள், அவனினைவின் படியே துணிந்து நின்று, இந்நீரில்லாத வெய்யசுரத்தே இப்பொழுதிவர் நம்மையுடன் கொண்டுபோகைக்குக் காரணமென்னோவெனத், தோழியை வினாவல்.

வரலாறு. நிழற்றலை நீநெறி. (௧௩)

### போக்கறிவித்தல் என்பது.

இப்பொழுதவர் போகைக்குக் காரணமென்னோவென்று கேட்ட தலைமகளுக்கு, நீங்களுடலுமுயிரும் போல வொருவரை யொருவரின்றியமையீராயினீர், இத்தன்மைத்தாகிய நுங்காதலையறிந்து வைத்தும் அவற்கு வருமேதம் நினைதென்றஞ்சி, யானவனை வரவுவிலக்குவேன், அவனுமவ்வாறு வருதலையொழிந்து வரைவொடுவரின், பொன்முதலாகிய வெல்லாவற்றையு நினக்குமுலைப்பரிசம் பெறினும் நமர் நின்னைக் கொடார், கூறுமிடத்து. இதுவன்றோ நீருஞ்சுரம் போகைக்குக் காரணமென்று தோழி தலைமகனது போக்கறிவியாநிற்றல்.

வரலாறு. காயமுமாவியும். (௧௪)



### நாணிழந்துவருந்தல் என்பது.

உடன்கொண்டு போகைக்குக் காரணங்கேட்ட தலைமகள், ஒருநாளு மென்னைவிட்டு நீங்காதென்னுடனே வளர்ந்த நாண், கற்பினெதிர் நிற்கமாட்டாது தன்னைவிட்டு நீங்காத என்னைக் கழிவதாக, மகளிரெழுபிறப்பின் கண்ணுங்குடியிற் பிறவா தொழிகவெனத், தானதற்குப் பிரிவாற்றாமையான் வருந்தல்.

வரலாறு. மற்பாய்விடையோன். (௧௫)

### துணிவெடுத்துரைத்தல் என்பது.

தலைமகளைக் கற்புவழி நிறுத்திச் சென்று, நின்னொடு போதுமிடத்து, நீசெல்லுங்கற்சுரம் அவள் சிற்றடிக்கு நற்றளிராம் போலுமெனத், தோழி தலைமகனுக்கு, அவடுணி வெடுத்துக்கூறல்.

வரலாறு. கம்பஞ்செய்ந்த. (௧௬)

### குறியிடங்கூறல் என்பது.

துணிவெடுத்துரைத்த தோழி, தாழாது இவ்விருட்காலத்துக் கொண்டுபோவாயாக, யானவளைக்கொண்டுவருகிறேன், நீமுன்புவந்தெதிர்ப்பட்ட அக்குறியிடத்து வந்து நில்லெனத், தலைமகனுக்குக் குறியிடங்கூறல்.

வரலாறு. முன்னோன்மணிகண்ட. (௧௭)

### அடியொடு வழிநினைந் தவனுளம்வாடல் என்பது.

தோழி குறியிடைநிறுத்திப்போகத், தலைமகனவ்விடத்தே நின்று, அனிச்சப்பூப்போலும் அழகிய அடிகள் அழற்கடம்போதுமென்றால், இதற்கென்ன துன்பம் வந்தெய்துமோவெனத், தலைமகளடியொடு தான் போகின்ற வழிநினைந்து தன்னுள்ளம்வாடல்.

வரலாறு. பனிச்சந்திரனொடு. (௧௮)

### கொண்டுசென்றுய்த்தல் என்பது.

தலைமகன் குறியிடைநின்று, அடியொடுவழிநினைந்து தன்னுள்ளம்வாட, அந்நிலைமைக்கண், நின்னுள்ளத்துக்கருதி யதனையிப்பொழுது நினக்குத் தெய்வந்தருகின்றது, என்தோழியையுங் கொண்டுவந்தேன், நீயிவளைக் கைக்கொள்ளெனத், தோழி தலைமகளைக்கொண்டு சென்று அவனொடுகூட்டல்.

வரலாறு. வைவந்தவேலவர். (௧௯)

ஓம்படுத்துரைத்தல் என்பது.

கொண்டுசென்றுய்த்து, இருவரையும் வலஞ்செய்துநின்று, மறைநிலை திரியினும், கடல் முழுதும்வற்றினும், இவளிடத்துநின்னருடிரியாமற் பாதுகாப்பாயெனத், தோழி தலைமகளைத் தலைமகனுக் கோம்படுத்துரைத்தல்.

வரலாறு. பறக்கிருந்தும்பர். (௨௦)

வழிப்படுத்துரைத்தல் என்பது.

ஓம்படுத்துரைத்த தோழி, ஆயமு மன்னையும் பின்வாராம லிவ்விடத்தே நிறுத்தி, இவ்வூரிடத்துள்ள அலரையுமொருவாற்றானீக்கி, யானும் வந்து நுங்களைக்காண்பேனாக, நீயிருந் திருவொடு சென்று நும்பதியிடைச் சேர்வீரென, இருவரையும் வழிப்படுத்துரைத்தல்.

வரலாறு. ஈண்டொல்லையாயமும். (௨௧)

மெல்லக்கொண்டேகல் என்பது.

தோழியைவிட்டுடன் கொண்டுபோகின்றதலைமகன், நின்னொடு சேறலான், இன்று இக்காடுதிருந்தச் செய்யப்பட்டாற்போலக் குளிர்ச்சியையுடைத்தாயிருந்தது, இனிநின் சீறடிவருந்தாமற் பையச் செல்லெனத், தன்னுடைய வெள்ளத்தோடும் விளையாடு மாறுபோலத் தலைமகளைமெல்லக்கொண்டு செல்லாநிற்றல்.

வரலாறு. பேணத்திருத்திய. (௨௨)

அடலெடுத்துரைத்தல் என்பது.

மெல்லக்கொண்டு போகின்றவன், செய்த்தாகச் சிலரைவரக்கண்டு, தலைமகள்பயப்பட, நின்னையன்மாராயின் அஞ்சுவேனல்லது, நால்வகைத்தானையுந் திரண்டுவரினும், என்கையில்வடித்திலங்காநின்ற எஃகின்வாய்க்கு இரைபோதாது, இதனையிவ்விடத்தே காண்பாயாக வென்று, அவள் பயந்தீரத் தன்னடலெடுத்துரைத்தல்.

வரலாறு. கொடித்தேர்மறவர். (௨௩)



அயர்வகற்றல் என்பது.

அடலெடுத்துரைத்துப் பயந்தீர்த்துக்கொண்டு போகிறவன், இத்துன்பக் கடறுகடந்து சென்று, இப்பொழுதே நாம் நம்பதி காணப் புகாநின்றேம், இனி நமக்கொரு குறைவில்லையெனத் தலைமகள் வழிவருத்தந் தீரக்கூறாநிற்றல்.

வரலாறு. மூன்றேனருண்முன்னும். (௨௪)

நெறிவிலக்கிக்கூறல் என்பது.

அயர் வகற்றிக்கொண்டு போகின்ற தலைமகனை, இனிச்செல்லு நெறிக்கண், நன்மக்களில்லை, நீதனியை, இவள் வாடினாள், பொழுதுஞ் சென்றது, ஈண்டுத்தங்கிப் போவாயாகவென, அவ்விடத்துள்ளோர் வழிவிலக்கிக்கூறல்.

வரலாறு. விடலையுற்றாரில்லை. (௨௫)

கண்டவர் மகிழ்தல் என்பது.

நெறிவிலக்குற்று வழிவருத்தந் தீர்ந்து, ஒருவரை யொருவர் காணலுற்றின் புற்றுச்செல்லாநின்ற விருவரையுங்கண்டு, இவர்கள் செயலிருந்தவாற்றா னிப்பெருஞ்சுரஞ் செல்வதன்றுபோலும், அது கிடக்க,இது தானின் புறவுடைத்தாகியதோர் காடகச் சுவையுடைத்தாயிருந்ததென, எதிர் வருவாரின் புற்றுமகிழ்ந்து கூறாநிற்றல்.

வரலாறு. அன்பணைத் தஞ்சொல். (௨௬)

வழிவிளையாடல் என்பது.

கண்டவர் மகிழக்கொண்டு செல்லாநின்றவன், நெறிசெல்வருத்தத்தி னெகிழ்ந்த மேனியையுடைய நின்னைக்கண்டு, கண்க டம்மாற் கொள்ளும் பயன்கொண்டனம், இனிச்சிறிதிருந்து, இக்கடிங் கானகந் தண்ணென்னு மளவுஞ் செவிநிறைய நின்மொழிபருக வருவாயாகவெனத், தலைமகளுடன் விளையாடல்.

வரலாறு. கண்கடம் மாற்பயன். (௨௭)

நகரணிமைகூறல் என்பது.

இருவருந் தம்முளின்புற்றுச்செல்கின்றமை கண்டு, இனிச்சிறிது நெறிசென்று, அக்குன்றத்தைக் கடந்தால், நும்பதியாகியநகர்விளங்கித்தோன்றும், அத்துணையுங் கடிது சென்மினென, எதிர்வருவார் அவர் நகரணிமைகூறல்.

வரலாறு. மின்றங்கிடையொடு. (௨௮)

நகர்காட்டல் என்பது.

நகரணிமை கூறக்கேட்டின் புறக்கொண்டு போகுந் தலைமகன், அன்னந்துன்னிப்,பிறையணிந்து,சூலத்தை யுடைத்தாகிய மாளிகைமேற் கொடிநுடங்க, மதிறோன்றுநின்ற அப்பெரியநகர்காண் நம்முடைய நகராவதென்த்,தலைமகளுக்குத் தன்னகர்காட்டல்.

வரலாறு. மின்போற் கொடிநெடு. (௨௯)

பதிபரிசுரைத்தல் என்பது.

நகர்காட்டிக்கொண்டு சென்று, அந்நகரிடைப்புக்கு, அவ்விடத்துள்ள குன்றுகள்,வாவிகள், பொழில்கள், மாளிகைகள், தெய்வப்பதி இவையெல்லாந் தனித்தனி காட்டி, இதுகாண் நம்பதியாவதெனத், தலைமகளுக்குத் தலைமகன் பதிபரிசுரைத்தல்.

வரலாறு. செய்குன்றுவையிவை. (௩௦)

செவிலிதேடல் என்பது.

இருவரையும் வழிப்படுத்திவந்துபிரிவாற்றாதுகவலாநின்றதோழியை, எம்பிள்ளை யெங்குற்றது, நீ கவலாநின்றாய், இதற்குக் காரணமென்னோவென்று வினவிச்,செவிலி தலைமகளைத் தேடல்.

வரலாறு. மயிலெனப் பேர்ந்திள. (௩௧)

அறத்தொடு நிற்றல் என்பது.

தேடிய செவிலிக்கு, நீபோய் விளையாடச் சொல்ல, யாங்கள் போய்த் தெய்வக்குன்றிடத்தே யெல்லாரு மொருங்கு விளையாடாநின்றேமாக, அவ்விடத்தொரு பெரியோன், வழியே தார் சூடிப்போயினன், அதனைக்கண்டு, நின்மகள் அத்தாரை யென்பாவைக்குத் தாருமென்றாள், அவனும்வேண்டியது மறாது கொடுப்பானுதலிற் பிறிதொன்று சிந்தியாது கொடுத்து நீங்கினன், அன்றறியாப்பருவத்து நிகழ்ந்ததனை, உற்றார்க்குரியர் பொற்றொடிமகளிர், கொண்டார்க்குரியர் கொடுத்தாரென்பதனையின் றுட்கொண்டாள் போலும், யானித்துணையு மறிவேனென்று உடன் போக்குத் தோன்றக்கூறித், தோழி அறத்தொடுநிற்றல்.

வரலாறு. ஆளரிச்கும்மரி. (௩௨)



கற்புநிலைக்கிரங்கல் என்பது.

தோழியறத்தொடு நிற்பக் கேட்டசெவிலி, இஃதறமாயினும், இவள்பருவத்திற்குத் தகாது, அது கிடக்க, இனி அவளுக்கு நன்மையாவது அவனை வழிபடுவதல்லது பிறிதில்லை யெனக் கற்புநிலைக்கிரங்கல்.

வரலாறு. வடுத்தான்வகிர். (௩௩)

கவன்றுரைத்தல் என்பது.

கற்புநிலைக்கிரங்கிய செவிலி, செருநலைநாள் முறுவலைத்தந்து, முலைமுழுவித்தழுவி, நீ சிறிய விரகுகள் செய்ததெல்லாம், இன்றவ்வலிய காட்டைச் செல்லவேண்டிப் போலும், இதனையப் பொழுதே யறியப் பெற்றிலே னென்று,அவளை நினைந்து கவலாநிற்றல்.

வரலாறு. முறுவலக்காறந்து. (௩௪)

அடிநினைந்திரங்கல் என்பது.

நிலைமை நினைந்து கவலாநின்ற செவிலி, நுண்ணிய வடிகள் பரலையுடைய காட்டின் கட்பாவிய வாறென்னோவென, அவளடி நினைந்திரங்கல்.

வரலாறு. தாமேதமக்கொப். (௩௫)

நற்றாய்க்குரைத்தல் என்பது.

அடிநினைந்திரங்கிய செவிலி, கற்புமுதிர்வு தோன்றநின்று, என்னையிடைவிடாமற் றேடியழாநின்றபேதை யறிவு, இன்றென்னைத் தேய்வியாநின்றதென்று, அவளுடன் போனமையாற்றாது நற்றாய்க்குரைத்தல்.

வரலாறு. தழுவின கையிறை. (௩௬)

நற்றாய் வருந்தல் என்பது.

உடன்போனமை கேட்டுண்மகிழ்வோடு நின்று, ஓரேதிலன் பின்னே தன்றோழியை விட்டு, என்னையு முன்னே துறந்து, சேராதார்முன்னே வூர் அவர்தூற்ற அருஞ்சுரம் போயினள், இனியானெங்ஙன மாற்றுவேனென, நற்றாய் பிரிவாற்றாது வருந்தல்.

வரலாறு. யாழியன் மென்மொழி. (௩௭)

### கிளிமொழிக்கிரங்கல் என்பது.

பிரிவாற்றாதுவருந்துகின்றவள், அவள் போனபோக்கன்றி, இக்கிள்ளையென்னெஞ்சை யீராநின்றதெனத், தன்றாய் செலவுணர்ந்து வருந்தாநின்ற கிளிமொழி கேட்டிரங்கல்.

வரலாறு. கொன்னுனைவேலம். (௩௮)

### சுடரோடிரத்தல் என்பது.

கிள்மொழி கேட்டிரங்காநின்றவள், பெற்ற வென்னோடு நன் கிளியிருந்து வருந்த, இதனையுந் துறந்து, அறிவுமுதிர்ந்து, அழற்கடஞ் சென்றாள் முகத்தை நின்கதிர்களான் வாட்டாது, தாமரை மலர் போல மலர்த்துவாயாகவெனச், சுடரோடிரந்துகூறல்.

வரலாறு. பெற்றேனொடுங்கிள்ளை. (௩௯)

### பருவநினைந்து கவறல் என்பது.

சுடரோடிரந்து வருந்துகின்றவள், கற்பிக்கு முது பெண்டிருமின்றித், தானவனுக்குச் செய்யத்தகுங் குற்றேவல் செய்யவல்லளோ வென்று, அவள் பருவநினைந்துகவலா நிற்றல்.

வரலாறு. வைம்மலர் வாட்படை. (௪௦)

### நாடத்துணிதல் என்பது.

பருவநினைந்துகவலா நின்ற தாய்க்கு, நீகவன்றுமெலியவேண்டா, யானவள் புக்க விடம்புக்குத் தேடுவேனெனக் கூறிச், செவிலி அவளை நாடத்துணிதல்.

வரலாறு. வேயினதோளி. (௪௧)

### கொடிக்குறி பார்த்தல் என்பது.

செவிலி நாடத்துணிய, அவ்விருவரையு மிப்பொழுதே வரும் வண்ணம், நீகரைந்தால், நினக்குணங்கலை யஞ்சாதிருந்துண்ணலாம், அதுவன்றித் தெய்வத்திற்கு வைத்த நிணத்தையுடைய பலியையும் நினக்கே வரைந்துவைப்பேன், அவ்வாறு கரைவாயாகவென, நற்றாய் கொடிக்குறிபார்த்தல்.

வரலாறு. பணங்களஞ்சாலும். (௪௨)



### சோதிடங்கேட்டல் என்பது.

கொடிநிமித்தம் பெற்று, இக்கா வன்மனையின் கண்ணே யாங்கள் மணஞ்செய்ய, அவ்விருவரையு மின்னும் பெறுமாறுண்டாயினாராய்ந்து கூறுமினென, அறிவாளரைக்கிட்டிச், செவிலி சோதிடங் கேட்டல்.

வரலாறு. முன்னுங்கடுவிடம். (௪௩)

### சுவடுகண்டறிதல் என்பது.

சோதிடம் பெற்றுச் செல்கின்றவள், இம்முரம்பின்கட்கிடந்த விவை தீவினையே னெடுத்து வளர்த்த மாணிழை சீறடி, உவை அக்கள்வனடியாமெனச் சுவடு கண்டறியாநிற்றல்.

வரலாறு. தெள்வன்புனற்சென்னி. (௪௪)

### சுவடுகண்டிரங்கல் என்பது.

சுவடு கண்டறிந் தவ்விடத்தே நின்று, தவ்சின் மேன்மிதிப்பினும் பதைத்துக் கொப்புட்கொள்ளும் இக்கானமலர், இன்றொருவிடலை பின்னேபோதற்குத் தகுங்காலை யெவ்வாறொத்தனவென, அடிச்சுவடு கண்டிரங்கல்.

வரலாறு. பாலொத்தநீற்றம். (௪௫)

### வேட்டமாதரைக் கேட்டல் என்பது.

சுவடு கண்டிரங்கி அது வழியாகச் செல்கின்றவள், இவ்வாறறியாப்பருவத்தளாய்த், தனக்கியை பில்லாத சுரத்தின்கண் அயலானொருவனுடன் போந்தாள், அவளை நீகண்டாயோவென, வேட்டமாதரைக் கேளா நிற்றல்.

வரலாறு. பேதைப்பருவம்பின். (௪௬)

### புறவொடு புலத்தல் என்பது.

வேட்ட மாதரைக் கேட்டு அதுவழியாகச் செல்கின்றவள், ஏதிலனுமாய்த் தமியனுமாய வன்சொற்றுணையாக வெய்ய சுரத்தே மாதர் சென்றால், தில்லைப்புறவே, இது நினக்குத் தகுதியன்றெனக் கூறிற்றிலை, நீ வாழ்வாயாக வென்று புறவொடு புலத்தல்.

வரலாறு. புயலன் றலர்சடை. (௪௭)

## குரவொடு வருந்தல் என்பது.

புறவொடு புலந்து போகின்றவள், என்னுடைய பாவை. நினக்கு முன்னே யிக்கொதிக்குங் கடத்தைக் கடப்பக்கண்டு நின்றும், இன்னவாறு போனா ளென்றெனக்கு வாய்திறக்கின்றிலை, இது நினக்கு நன்றேவெனக் குரவொடு வாடிக்கூறல்.

வரலாறு. பாயும்விடையோன். (௪௮)

## விரதியரை வினவல் என்பது.

குரவொடு வருந்திச் செல்லாநின்றவள், பத்தியர்போல வொருபித்தி தன்பின்னே வர ஒரு பெருந்தகை முன்னே செல்லக் கண்டீரோவென, விரதியரை வினவாநிற்றல்.

வரலாறு. சுத்தியபொக்கணம். (௪௯)

## வேதியரை வினவல் என்பது.

விரதியரைவினவி அதுவழியாகப்போகின்றவள், மான்போலக் கண்ணு மயில்போலுஞ் சாயலுமுடைய மான், ஓரேந்தலோடு நும்மெதிரே வரக் கண்டீரோவென வேதியரை வினவல்.

வரலாறு. வெதிரேய் கரத்துமென். (௫0)

## புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி வினவல் என்பது.

வேதியரைவினவி அதுவழியாகப்போகின்றவள், நும்மைக்கண்டு, என்னாற் றேடப்படுகின்றார் மீண்டார்களென்று கருதி, மகிழ்ந்தேன், அதுகிடக்க, இவ்வாறு நும்மோடொத்த வொழுக்கத்தினராய் முன்னே யிருவரைப்போகக் கண்டீரோவெனப், புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி வினவல்.

வரலாறு. மீண்டாரெனவுவந். (௫௧)

## வியந்துரைத்தல் என்பது.

புணர்ந்துடன் வருவோரை வினவி அது வழியாகப் போகாநின்றவள், தன் மகணின்ற நிலையையும் அவன் கைவேலினால் வேங்கைபட்டுக் கிடந்த கிடையையுங் கண்டு, வியந்து கூறாநிற்றல்.

வரலாறு. பூங்கயிலாயம். (௫௨)



## இயை பெடுத்துரைத்தல் என்பது.

வேங்கை பட்டது கண்டு வியந்து அதுவழியாகப் போகின்றவள், எதிர் வருவோரை வினவ, அவர் நீ கூறுகின்றவரைக் குன்றத்திடைக் கண்டோம், அவ்விருவருந் தம்முளியைந்து செல்லாநின்றமை கண்டு, எல்லாவற்றையு முடையளாகிய தன் காதலியோ டொருவடிவாய் விளையாடும் புலியூரனென்றே கருதி, யாங்களெல்லா மொத்து மிகவு மவ்வெழிலைத் தொழ நினைந்தோம், அந்நன்மை சொல்லலாவதொன்றன்றென, எதிர் வருவோ ரவரியை பெடுத்துக்கூறல்.

வரலாறு. மின்றொத்திடுகழல். (௫௩)

## மீளவுரைத்தல் என்பது.

இயை பெடுத்துரைத்தவர், அவ்விருவருமோ ரிடைக்கணின்றிப் போய்த் தில்லையினெல்லையைச் சென்றணைவர், இனிநீ செல்வதன்று, மீள்வதே காரியமெனத், தேடச்செல்லாநின்ற செவிலியை மீளக் கூறல்.

வரலாறு. மீள்வது செல்வதன். (௫௪)

## உலகியல் புரைத்தல் என்பது.

மீளக்கூறவு மீளாது கவலாநின்ற செவிலிக்குச், சந்தனமும் முத்தும் சங்கும் தாம் பிறந்தவிடங்கட்கு யாதும் பயன்படாது தம்மை விரும்பி யணிவாரிடத்தே சென்று பயன்படும், அதுபோல, மகளிருந்தாம் பிறந்தவிடத்துப் பயனபடார், நீகவலவேண்டாவென உலகியல்புகூறல்.

வரலாறு. சுரும்பிவர் சந்தும். (௫௫)

## அழுங்குதாய்க்குரைத்தல் என்பது.

உலகியல்பு கூறவு மீளாது நின்று, தானெடுத்து வளர்த்தமை சொல்லிக் கவலாநின்ற செவிலியை, முன்னிலைப் புறமொழியாக, இவர் தாமில்லின்க ணெடுத்து வளர்த்தவர்போலும், அவர் போய்த் தம்மை யிருவரையுங் கூட்டுவித்த தெய்வப்பதியாகிய தில்லையிடத்துப் பழனங்களைச் சென்றணைவரெனத், தம்முட் கூறுவார்போன்று கூறி மீட்டுக்கொண்டு போகல்.

வரலாறு. ஆண்டிலெடுத்தவர். (௫௬)

௨௨. உடன்போக்கு முற்றும்.

## வரைவு முடுக்கம் என்பது.

இவ்வாறுடன்போக்கு நிகழாதாயின் வரைந்து கோடனிகழும். அது நிகழுமிடத்துத் தோழியான் வரைவு முடுக்கப்பட்டும் வரை பொருட்பிரிந்து வந்தும் நிகழும்.

அவற்றுள்,

வருத்தங்கூறலு மவன்மறுத்துரைத்தலும்
உள்ளது கூறலு மேதங்கூறலும்
பகல்வாலென்றலுந் தொழுதிரந்துரைத்தலுஞ்
சிறைப்புறங்கூறலு மந்திமேல் வைத்தலுங்
கண்டுயிலாமை கண்டாருரைத்தலும்
பகலுடம்பட்டாள் போன்றிரவரலென்றலும்
இரவுடம்பட்டாள் போன்று பகல்வரலென்றலும்
இரவும்பகலும் வரலொழிகென்றலுங்
காலங்கூறலுங் கூறுவிக்குற்றலுஞ்
செலவு கூறலும் பொலிவழி வுரைத்தலும்
வரைவுமுடுக்கென வழுத்தப்படுமே.

என்பது.

வருத்தமிகுதி கூறி வரைவு கடாதல், பெரும்பான்மை கூறி மறுத்தல், உள்ளது கூறி வரைவுகடாதல், ஏதங்கூறி யிரவர்விலக்கல், பழிவரவுரைத்துப் பகல்வரவு விலக்கல் ,தொழுதிரந்து கூறல், தாயறிவு கூறல், மந்திமேல்வைத்து வரைவு கடாதல், காவன்மேல் வைத்துக் கண்டு யிலாமைகூறல், பகலுடம்பட்டாள் போன்றிரவரவு விலக்கல், இரவுடம்பட்டாள் போன்று பகல்வரவு விலக்கல், இரவும் பகலும் வரவு விலக்கல், காலங்கூறி வரைவு கடாதல், கூறுவிக்குற்றல், செலவு நினைந்துரைத்தல், பொலிவழி வுரைத்து வரைவு கடாதல் ஆகிய பதினாறும் வரைவு முடுக்கமாம்.

### வருத்தமிகுதி கூறிவரைவுகடாதல் என்பது.

அலரறிவுறுத்ததோழி, அலரானுங் காவன்மிகுதியானும் நின்னை யெதிர்ப்பட மாட்டாதழுது வருந்துவாளிடத்து நின்னருளிருக்கின்றவா றென்னோவெனத், தலைமகள் வருத்தங்கூறித், தலைமகனை வரைவுகடாதல்.

வரலாறு. எழுங்குலைவாழையின். (க)



### பெரும்பான்மை கூறிமறுத்தல் என்பது.

வரைவுகடாவிய தோழிக்கு, யானவளைத் தெய்வமானுட மென்றறிந்து வரைந்து கோடற்கு, இக்குன்றிடத்துத் தோன்றா நின்றவிடம் தெய்வ மகளிரிடமோ, அன்றிக் குறத்தியரிடமோ கூறுவாயாக வெனத், தலைமகன் தலைமகளைப்பெரும்பான்மை கூறிமறுத்தல்.

வரலாறு. பரம்பயன்றன்னடி. (உ)

### உள்ளது கூறிவரைவு கடாதல் என்பது.

பெரும்பான்மை கூறி மறுத்த தலைமகனுக்கு, இவ்விடமெந்தையது முற்றூட்டு, எமக்குற்றார் குறவரே, எம்மைப் பெற்றாளுங் கொடிச்சியே, யாங்களும் புனங்காப் போஞ் சிலர், நீ வரைவு வேண்டாமையின் எம்மைப் புனைந்துரைக்க வேண்டுவதில்லை யெனப், பின்னும் வரைவு தோன்றத் தோழி தங்களுண்மை கூறல்.

வரலாறு. சிறுர்கவண்வாய்த்த. (ங)

### ஏதங்கூறி யிரவரவுவிலக்கல் என்பது.

உண்மையுரைத்து வரைவு கடாயதோழி, நீவரைவொடுவாராயாயின், சிங்கந்திரண்டு, தனக்குயானையாகிய வுணவுகளைத்தேடு மிருளின் கண், நினது கைவேல் துணையாக நீவந்தருளாநின்ற விஃதேயெங்களுக்குத் துன்பமாகத்தோன்றாநின்றது, இனி யிவ்விருளிடை வாராதொழி வாயென, ஏதங்கூறித் தலைமகனை யிரவரவுவிலக்கல்.

வரலாறு. கடந்தொறும் விரரண. (ச)

### பழிவரவுரைத்துப் பகல்வரவு விலக்கல் என்பது.

இவ்விருளிடை வாராதொழி கென்றது பகல்வரச் சொன்னவாறுமெனவுட்கொண்டு, பகற்குறிச்சென்று நிற்பத், தோழி யெதிர்ப்பட்டுப், பகல்வந் தெமக்குச் செய்யாநின்ற மெய்யாகிய வருள்புறத்தாரறிந்து வெளிப்பட்டுப் பழியாகப் புகுதாநின்றது,இனிப்பகல் வரவொழிவாயாக வெனப், பழிவருதல் கூறிப்பகல் வரவுவிலக்கல்.

வரலாறு. களிறுற்ற செல்லல். (ரு)

### தொழுதிரந்து கூறல் என்பது.

பகல் வரவுவிலக்கின தோழி, இவனிரவுவரவுங் கூடுமெனவுட்கொண்டு, நின்னையெதிர்ப்பட வேண்டி அழுது வருந்தாநின்ற இவள் காரணமாக,அரிக்கும் யாளிக்கும் வெருவி யானைகடிரண்டு, புடைபெ

யராத மிக்கவிருளின் கண்வாரா தொழிவாயாக வென்று நின்கழல்களைக் கையாற்றொழுது, நின்னையிரந்தேனென, வரைவுதோன்றத் தலைமகனைத் தொழுதிரந்து கூறல்.

**வரலாறு. சுழிகட்டலைமலை.** (௬)

### தாயறிவுகூறல் என்பது.

தொழுதிரந்து கூறவும், வேட்கை மிகவாற்பின்னுங் குறியிடைச் சென்றுநிற்ப, அக்குறிப்பறிந்து, நங்கானலிடத் தரையிரவின்கண் ஒருதேர் வந்ததுண்டாகக் கூடுமெனவுட்கொண்டு, அன்னை சிறிதே கண்ணுஞ் சிவந்து என்னையும் பார்த்தாள், இருந்த வாற்றானிவ் வொழுக்கத்தை யறிந்தாள் போலுமெனத், தோழிதலைமகளுக்குக் கூறுவாள்போன்று, சிறைப்புறமாகத் தலைமகனுக்குவரைவுதோன்றத் தாயறிவுகூறல்.

**வரலாறு. விண்ணுஞ் செலவழி.** (௭)

### மந்திமேல்வைத்து வரைவுகடாதல் என்பது.

சிறைப்புறமாகத் தாயறிவு கூறிச்சென் றெதிர்ப்பட்டு, ஒரு கடுவன்றன் மந்திக்கு மாங்கனியைத் தேனின் கட்டோய்த்துக் கொடுத்து நுகர்வித்துத் தம்முளின்புறுவது கண்டு, இது நங்காதலர்க்கு நம்மாட் டரிதாயிற்றென, நீவரையாமையை நினைந்தாற் றாளாயினாளென, மந்திமேல் வைத்துத் தலைமகள் வருத்தங்கூறி வரைவுகடாதல்.

**வரலாறு. வான்றோய் பொழிலெழின்.** (௮)

### காவன்மேல்வைத்துக் கண்டுயிலாமைகூறல் என்பது.

மந்திமேல்வைத்து வரைவு கடாவப்பட்ட தலைமகன், இது நங்காதலியிடத்து நமக்கரிதாயிற்றெனத் தானுமாற்றானாய் இரவுக்குறிச் சென்று நிற்ப, அந்நிலைமைக்கண், இவ்விடத்துள்ளார் இவள்காவற் பறைகேட்குந் தோறுங் கண்டுயிலாமைக்குக் காரணமென்னோ வெனத் தம்முட்கூறல்.

**வரலாறு. நறைக்கண்மலிகொன்றை.** (௯)

### பகலுடம் பட்டாள்போன்றிரவாவுவிலக்கல் என்பது.

சிறைப்புறமாகக் கண்டுயிலாமை கேட்டதலைமகன், ஆதரவுமிகவா லெதிர்ப்படலுற்று நிற்பத், தோழி யெதிர்ப்பட்டு, நீவந்தொழுகாநின்ற இப்புலாவிரவும் பொழியாமழையும் புண்ணின் கணுழையும் வேல் மலராம்படி யெங்களை வருத்தாநின்றன, இதற்கொரு மருந்தில்லையோ நும்வரையிடத்தெனப், பகலுடம்பட்டாள் போன்றிரவரவுவிலக்கல்.



**வரலாறு. கலராயினர்நினை.** (௧௦)

### இரவுடம்பட்டாள் போன்று பகல்வரவுவிலக்கல் என்பது.

இவள் மருந்தில்லையோவென்றதுயானிரவுக் குறிச்செல்லின் மழைக்கா விருளானெதிர்ப்படலருமையான், வேட்கையுற்றுப் பகற்குறியுடம்பட்டாளென வுட்கொண்டு, பகற்குறிச் செல்லாநிற்பத், தோழி யெதிர்ப்பட்டு, பகல்வந்தருளாநின்றது அவளுக்கு வருத்த முறும்படியாக மிக்கவலராகாநின்றது, அதனாற் பகற்குறிவாரற் பாலை யல்லையென, இரவுக்குறியுடம்பட்டாள் போன்றுபகற்குறி விலக்காநிற்றல்.

**வரலாறு. இறவரையும்பர்க்.** (௧௧)

### இரவும்பகலும் வரவுவிலக்கல் என்பது.

இரவுடம்பட்டாள்போன்றுபகல்வரவுவிலக்கினதோழி, நீபகல் வரின் அலர் மிகுதியானெங்களுக்கும், மிக்க பழிவந்தெய்தும், இராவரினெவ்வாற்றானு நின்னையெதிர்ப் படுதலருமையாற் சிறிதும்பயனில்லை, அதனால் நீயிருபொழுதும் வரற்பாலையல்லையென, இரவும் பகலும் வரவுவிலக்கல்.

**வரலாறு. சுழியாவருபெரு.** (௧௨)

### காலங்கூறி வரைவுகடாதல் என்பது.

இருபொழுதும் வரவு விலக்கினதோழி, மதிநிரம்பா நின்றது, வேங்கை பூவாநின்றன, இனி நினக்குவரைவொடு வருதற்குக் காலமிதுவெனக், காலங்கூறி வரைவுகடாதல்.

**வரலாறு. மையார்கதலி.** (௧௩)

### கூறுவிக்குற்றல் என்பது.

காலங்கூறி வரைவுகடாவவும் வரைவுடம்படாமையின், அவடன்னைக்கொண்டே கூறுவிப்பாளாக, அலரான் வருநாணினையும் காணாமையான் வருமாற்றாமையையும்பற்றிக் கிடந்த நம்மல்லலை, நம்மாற்றலையளிக்கப்படுவா ரிவ்வாறு வருந்து தறகாதெனத் தாமாக வறிகின்றிலராயின், நாம் சொல்லுந்தன்மைகளென்னோவெனப் புலந்து, நீயாகிலும் போய்க் கூறென்பது குறிப்பாற்றோன்றத், தலைமகன் வரைவுடம்படாமையைத் தோழி தலைமகட்குக்கூறல்.

வரலாறு. தேமாம் பொழிற்றில்லை. (௧௪)

### செலவு நினைந்துரைத்தல் என்பது.

வரைவுடம்படாமையின் தோழி தலைமகனொடு புலந்து கூறக் கேட்டு, அக்குறிப்பறிந்து, இக்கல்லதரின் கண்ணீர் வந்தவாறென்னோ வென்று வினவுவாரைப் பெற்றேமாயின், இத்தன்மையை யுடைத்தாகிய மிக்க விருளின்கண் யாமவருழைச் சேறலரிதன்று, சென்றேமாயினு மவ்வாறு சொல்லுவாரில்லையெனத், தலைமகள் செலவு நினைந்துகூறல்.

வரலாறு. வல்சியினெண்கு. (௧௫)

### பொலிவழிவுரைத்து வரைவுகடாதல் என்பது.

தலைமகடன்னை யெதிர்ப்பட லுற்று வருந்தாநின்றமை சிறைப்புறமாகக் கேட்டதலைமகன் குறியிடைவந்துநிற்பத், தோழி யெதிர்ப்பட்டு, என்னை யரதுகாவலை நீவி, நின்வயத் தளாய்நின்று, பொலிவழிந்து வருந்தாநின்றவளை நீவரைந்து கொள்ளாதிவ்வாறிகழ்ந்து மதித்தற்குக் காரணமென்னோவெனத், தலைமகள் பொலிவழிவுகூறி வரைவுகடாதல்.

வரலாறு. வாரிக்களிற்றின். (௧௬)

## ௨௫. வரைவுமுடுக்கமுற்றும்.

### வரைபொருட்பிரிதல்.

முலைவிலைகூறலும் வரைவுடம்படுத்தலும்
வரைபொருட்கேகலை யுரையுவட்கென்றலும்
நீகூறென்றலுஞ் சொல்லாதேகலும்
பிரிந்தமைகூறலு நெஞ்சொடுகூறலும்
நெஞ்சொடுவருந்தலும் வருத்தங்கண்டுரைத்தலும்
வற்புறுத்தலும் வன்புறையழிதலும்
வாய்மைகூறலு மன்னவன்மெய்யுரை
தேறாதுபுலம்பலுங் காலமறைத்துரைத்தலுந்
தூதுவரவுரைத்தலுந் தூதுகண்டழுங்கலு
மெலிவுகண்டு செவிலியுரைத்தலு
மேவியசெவிலி கட்டுவைப்பித்தலுங்
கலக்குற்றுநிற்றலுங் கட்டுவித்திகூறலும்
வேலனையழைத்தலு மின்னலெய்தலும்
விலக்கநினைத்தலு நிலைமையுரைத்தலு
மறத்தொடுநிற்றலு மையந்தீர்த்தலு



மவன்வெறிவிலக்கலுஞ் செவிலிக்குத்தோழி
யறத்தொடுநிற்றலு நற்றாய்க்குச்செவிலி
யறத்தொடுநிற்றலு தேர்வரவுரைத்தலு
மணமுரசுகேட்டு மகிழ்ந்துரைத்தலு
மையுற்றுக்கலங்கலு மவனிதிகாட்டலும்
ஆறைந்துடனே கூறியமூன்றும்
வரைபொருட்பிரிதலா மென்மனார்புலவர்.

என்பது,

முலைவிலைகூறல், வருமது கூறிவரைவுடம்படுத்தல், வரைபொருட்பிரிவை யுரையெனக்கூறல், நீயேகூறென்றல், சொல்லாதேகல், பிரிந்தமைகூறல், நெஞ்சொடுகூறல், நெஞ்சொடுவருந்தல், வருத்தங்கண்டுரைத்தல், வழியொழுகிவற்புறுத்தல், வன்புறையெதிரழிந்திரங்கல், வாய்மைகூறி வருத்தந்தணித்தல், தேறாதுபுலம்பல், காலமறைத்துரைத்தல், தூதுவரவுரைத்தல், தூதுகண்டழுங்கல், மெலிவுகண்டு செவிலிகூறல், கட்டுவைப்பித்தல், கலக்கமுற்றுநிற்றல், கட்டுவித்திகூறல், வேலனையழைத்தல், இன்னலெய்தல், வெறிவிலக்குவிக்கநினைத்தல், அறத்தொடுநிற்றலையுரைத்தல், அறத்தொடுநிற்றல், ஐயந்தீரக்கூறல், வெறிவிலக்கல், செவிலிக்குத் தோழியறத்தொடுநிற்றல், நற்றாய்க்குச் செவிலியறத்தொடுநிற்றல், தேர்வரவு கூறல், மணமுரசுகேட்டு மகிழ்ந்துரைத்தல், ஐயுற்றுக்கலங்கல், நிதிவரவுகூறிநிற்றல் ஆகிய முப்பத்துமூன்றும் வரைபொருட் பிரிதலாம்.

### முலைவிலை கூறல் என்பது.

வரைவுமுடுக்கப்பட்ட தலைமகன், யான்வரைவொடுவருதற்கு நீ சென்று அவளை யன்மாரை முலைவிலை கேட்பாயாகவென, எல்லாவற்றானு நின்வரைவை யெமரேற்றுக் கொளினல்லது விலைகூறுவராயின் அவளுக் கேழுலகும் விலைபோதாதெனத், தோழி முலைவிலைகூறல்.

வரலாறு. குறைவிற்குங்கல்விக்கும். (௧)

### வருமதுகூறிவரைவுடம்படுத்தல் என்பது.

முலைவிலைகூறியதோழி, நீவரைவொடுவாராது, இரவருள்செய்யாநின்ற விதுகெர்ப்பத்துக் கேதுவானால் நம்மெல்லார்க்கும் பொல்லாதாம், அதுபடாமலெமராற்றொடுக்கப்பட்ட வருங்கலங்களை விரைய வரவிட்டு அவளை வரைந்தெய்துவாயாகவென, மேல்வருமிடுக்கண் கூறித் தலைமகனைவரைவுடம் படுத்தாநிற்றல்.

வரலாறு. வடுத்தனநீள்வகிர். (௨)

### வரைபொருட்பிரிவையுரையெனக்கூறல் என்பது.

மேல்வருமதுகூறி வரைவுடம் படுத்தின தோழிக்கு, யான்போய்நுமர்கூறுநிதியமும் தேடிக்கொண்டு, நும்மையும் வந்துமேவுவேன், நீசென்று அவள் வாடாதவண்ணம்யான் பிரிந்தமைகூறியாற்றுவித்துக்கொண்டிருப்பாயாகவெனத், தலைமகன்றான் வரைபொருட்குப் பிரிகின்றமை கூறாநிற்றல்.

வரலாறு. குன்றங்கிடையும். (௩)

### நீயேகூறென்றல் என்பது.

பிரிவறிவிப்பக் கூறினதலைமகனுக்கு, நீயிரவுவரினும் பகற்பிரிந்து செல்லவையெனவுட்கொண்டு, நின்னோடு கூடியவப்பொழுதும் யானுயிர் வாழேனென்று நினைந்திருப்பாளுக்குத், தாழேனென்னுமுரை முன்னாக நின்பிரிவை நீயேசொல்லிப் போவாயாகவென, அவன்வினைய வருவது காரணமாகத் தோழிதலைமகள் பிரிவாற்றாமை கூறாநிற்றல்.

வரலாறு. கேழேவரையும். (௪)

### சொல்லாதேகல் என்பது.

நீயே கூறென்றதோழிக்கு, யானெவ்வாறு கூறினும் அவன் பிரிவுடம்படாளாதலினொருகாலும் வரைந்து கொள்கையில்லை, யான்வினையவருவேன், அவ்வளவும் நீயாற்றுவித்துக் கொண்டிருப்பாயாகவெனக்கூறித், தலைமகன் தலைமகளுக்குச்சொல்லாது பிரியாநிற்றல்.

வரலாறு. வருட்டிற்றிகைக்கும். (௫)

### பிரிந்தமைகூறல் என்பது.

தலைமகன் முன்னின்று பிரிவுணர்த்த மாட்டாமையின் சொல்லாது பிரியாநிற்பத், தோழிசென்று, நமராற் றடுக்கப்பட்ட வெல்லாநிதியத்தையு மொருங்குவரவிட்டு நின்னைவரைந்துகொள்வானாக அழற்கடநெறியே பொருட்டேடப்போயினான், அப்போக்கு அழற்கடஞ் சென்றமையா னமக்குத் துன்பமென்பேனோ, வரைவுகாரணமாகப் பிரிந்தானாதலின் நமக்கின்ப மென்பேனோவெனப், பொதுப்படக் கூறி, வரைவுகாரணமாகப் பிரிந்தானாதலினிது நமக் கின்பமேயெனத், தலைமகள் வருந்தாமலவன் பிரிந்தமைகூறல்.

வரலாறு. நல்லாய் நமக்குற்ற. (௬)



### நெஞ்சொடு கூறல் என்பது.

பிரிந்தமைகூறக் கேட்டுவருந்தா நின்றநெஞ்சிற்கு, நமக்கேதம் பயக்கு மொழுக்கமொழிந்து,குற்றந்தீர்ந்த முறைமையாகிய வொழுக்கத்துப் பிரிந்தவிது, நம்மைக் கெடுக்குமென்று நீகருதின். இதுவொழிய நமக்கின்புற்று வாழு முபாயம் வேறுளதோவெனத், தலைமகள் அந்நெஞ்சின் வருத்தந்தீரக் கூறல்.

வரலாறு. அருந்தும் விடமணி. (௭)

### நெஞ்சொடு வருந்தல் என்பது.

பிரிந்தமைகூறக்கேட்ட தலைமகள், அன்றவரை விடாதென்னை விட்டவர்தேர்ப் பின்சென்ற நெஞ்சம், இன்றுமவ்வாறு செய்யாதென்னை வருத்துகின்றதெனத், தன்னெஞ்சொடுவருந்தல்.

வரலாறு. ஏர்ப்பின்னை தோண்முன். (௮)

### வருத்தங்கண்டுரைத்தல் என்பது.

தலைமகடன் நெஞ்சொடுவருந்தக் கண்டதோழி, இத்தன்மைத்தாகிய வெற்பராகலிற் றாழாதுவினையவரொடுவருவாராதலால் நீயின்றுமையை யடையுதொழுவாயாக வென்று, அவள்வருத்தந்தீரக்கூறல்.

வரலாறு. கானமர் குன்றர். (௯)

### வழியொழுகி வற்புறுத்தல் என்பது.

தலைமகள் வருத்தங்கண்ட தோழி, அவளை வழியொழுகி யாற்றுவிக்கவேண்டு மனவாகலினாற் றாமைக்குக் காரணமாகியவற்றைக் கூறித், தானுமவளொடு வருத்தமுற்று, அதுகிடக்க, இம்மலர்ப் பாவையையன் னாட்கிவ்வேறு பாடுவந்தவாறென்னோ வென்று அயலவரையுறாநிற்பராதலால் நீயாற்றவேண்டுமென்று, அவள்வழியொழுகி வற்புறுத்தல்.

வரலாறு. மதுமலர்ச்சோலையும். (௧௦)

### வன்புறையெதிரழிந்திரங்கல் என்பது.

வழியொழுகி வற்புறுத்தின தோழியோடு, தலைமகன் வரைவு நீடுதலாற்றமக் கோர்பற்றுக்கோடு இன்றிவருந்துந் திருவினையுடையார்க்கு அவன் வரைவு மிகவுமினிது,யானாற்றேனெனத், தலைமகள் வன்புறை யெதிரழிந் திரங்கல்.

வரலாறு. வந்தாய்பவளையில். (௧௧)

### வாய்மைகூறி வருத்தந் தணித்தல் என்பது.

வரைவு நீடுதலான் வன்புறை யெதிரழிந்து வருந்திய தலைமகளுக்கு, அவர் சொன்னவார்த்தை நினக்குப் பொய்யென்பதே கருத்தாயின் இவ்வுலகத்து மெய்யென்பது சிறிதுமில்லையெனத், தோழி தலைமகன் வாய்மைகூறி, அவள் வருத்தந் தணியாநிற்றல்.

வரலாறு. மொய்யென்பதே யிழை. (௧௨)

### தேறாது புலம்பல் என்பது.

தலைமகன் வாய்மைகூறி வருத்தந் தணியாநின்ற தோழிக்கு, யானவர் கூறிய மொழியின்படியே மெய்ம்மையைக் கண்டுவைத்து மென்னெஞ்சமு நிறையுமென் வயமாய் நிற்கின்றனவில்லை, அதுவேயுமன்றி என்னுயிரும் பொறுத்தற் கரிதாகாநின்றது, இவையிவ்வாறாதற்குக்காரணம் யாதென்றறிகின்றிலேனெனத், தான் றேறாமை கூறிப் புலம்பாநிற்றல்.

வரலாறு. மன்செய்த முன்னாள். (௧௩)

### காலமறைத்துரைத்தல் என்பது.

தேறாமைகூறிப் புலம்புகின்ற தலைமகள், காந்தள் கருவுறக் கண்டு, இஃதவர் வரவுகுறித்த காலமென்று கலங்க, நம்முடையவையன் மார்பிணைக்கதிர் காரணமாகக் கடவுளைப்பராவ, அக்கடவுளாணையாற் காலமன்றியுங் கார்நீரைச்சொரிய, அதனை யறியாது, காலமென்றிக் காந்தள்மலர்ந்தன, நீயதனைக் காலமென்று கலங்கவேண்டாவெனத், தோழி அவளை யாற்றுவித்தற்குக் காலமறைத்துக் கூறாநிற்றல்.

வரலாறு. கருந்தினை யோம்பக். (௧௪)

### தூதுவரவுரைத்தல் என்பது.

காலமறைத்ததோழி, ஒருதூதுவந்து தோன்றாநின்றது, அஃது இன்னார் தூதென்று தெரியாதெனத், தானின்புறவோடு நின்று, அவள் மனமகிழும்படி தலைமகளுக்குத் தூதுவரவுரைத்தல்.

வரலாறு. வென்றவர் முப்புரம். (௧௫)



### தூதுகண்டழுங்கல் என்பது.

தூதுவரவுரைப்பக்கேட்ட தலைமகள், மனமகிழ்வோடு நின்று, இஃது அயலார்தூதாகையாலிவைவருவன செல்வனவாகாநின்றன, காதலர் தூதின்று வாராதிருக்கின்றதென்செயக்கருதியென்றறிகின்றிலேனென்று, ஏதிலார் தூதுகண்டழுங்கல்.

வரலாறு. வருவன செல்வன. (௧௬)

### மெலிவுகண்டு செவிலிகூறல் என்பது.

ஏதிலார் தூதுகண்டழுங்காநின்ற தலைமகளைச் செவிலி யெதிர்ப்பட்டு, அடியிற்கொண்டு முடிகாறுநோக்கி, இவள் பண்டைத் தன்மையளல்லள், இவ்வாறு மெலிதற்குச்சேயினதாட்சியிற் பட்டனள் போலுமென்றறிகின்றிலேனென்று, அவள் மெலிவுகண்டு கூறாநிற்றல்.

வரலாறு. வேயின மென்றோள். (௧௭)

### கட்டுவைப்பித்தல் என்பது.

மெலிவுகண்ட செவிலி, அவள் பருவங்கூறி, இவ்வணங்குற்ற நோயைத் தெரியவறிந்துரைமினெனக் கட்டுவித்திக் குறைத்துக் கட்டுவைப்பித்தல்.

வரலாறு. சுணங்குற்ற கொங்கைகள். (௧௮)

### கலக்கமுற்று நிற்றல் என்பது.

செவிலி கட்டுவைப்பியாநிற்ப, இவளுள்ளமோடியவாறு முழுதையும் புலப்படுத்தி, நம்மைவருத்தி, அயலாரன்று மொழியாத பழியையும் வெளிப்படக்கூறி, எம்மிடத்துண்டாகிய நாணினையுந் தள்ளி, எங்குடியினையுங் குற்றப்படுத்தியல்லவே இக்கட்டுவித்தி நிற்கப்புகுகின்றதெனத், தோழிகலக்கமுற்று நில்லாநிற்றல்

வரலாறு. மாட்டியன்றேயும். (௧௯)

### கட்டுவித்திகூறல் என்பது.

தோழி கலக்கமுற்று நில்லாநிற்ப, இருவரையும் நன்மையாகக் கூட்டுவித்ததெய்வம் புறத்தார்க்கிவ்வொழுக்கம் புலப்படாமல் தானிட்டநெல்லின் கண் முருகணங்கு காட்ட, இதனையெல்லீருங் காண்மின், இவளுக்கு முருகணங்கொழியப் பிறிதொன்றுமில்லையெனக், கட்டுவித்தி நெற்குறிகாட்டிக் கூறாநிற்றல்.

வரலாறு. குயிலிதன்றேயென். (௨௦)

வேலனையழைத்தல் என்பது.

கட்டுவித்தி-முருகணங்கென்று கூறக்கேட்டு, இப்பாலன் இக்குடியின்கட்பிறந்து நம்மை யிவ்வாறு நிற்பித்த பண்பினுக்கு, வேலன் புகுந்து வெறியுமாடுக, அதன்மேல் மறியு மறுக்கவெனத் தாயர் வேலனையழைத்தல்.

வரலாறு. வேலன்புகுந்து. (௨௧)

இன்னலெய்தல் என்பது.

வெறியாடுதற்குத் தாயர் வேலனையழைப்பக் கேட்ட தலைமகள், இருவாற்றானும் நமக்குயிர்வாழு நெறியில்லையெனத், தன்னுள்ளே கூறி யின்னலெய்தாநிற்றல்.

வரலாறு. அயர்ந்தும் வெறிமறி. (௨௨)

வெறிவிலக்குவிக்க நினைதல் என்பது.

இருவாற்றானும் நமக்குயிர்வாழு நெறியில்லை யாதலால் துறைவற்குற்றநோயைப் பிறர்சிதைக்கப்படின், நாண் துறந்தும் வெறிவிலக்கு விப்பனெனத், தலைமகடோழியைக்கொண்டு வெறிவிலக்க நினைதல்.

வரலாறு. சென்றூர்திருத்திய. (௨௩)

அறத்தொடு நிற்றலையுரைத்தல் என்பது.

நாண்டுறந்தும் மறையுரைத்தும் வெறிவிலக்குவிக்க நினைக்கின்ற தலைமகள், மேலறத்தொடு நிற்பாளாக, அயலாரேசுக, ஊர்நகுக அதுவேயுமன்றி, யாயும் வெகுள்வளாக, அதன்மேல் நீயுமென்னை முனிவாயாக, நீ தேறாயாகில் சூளுற்றுத் தருவேன், யான்சொல்லுகின்ற விதனைக் கேட்பாயாகவெனத் தோழிக்குக் கூறுநிற்றல்.

வரலாறு. யாயுந்தெறுக. (௨௪)

அறத்தொடுநிற்றல் என்பது.

அறத்தொடுநிற்பாளாக முன்தோற்று வாய்செய்து, எம்பெருமாற்குப் பழிவருங்கொல்லோ வென்னுமையத்தோடு நின்று, யாம் முன்பு ஒருநாள் கடற்கரையிடத்தே வண்டல்செய்து விளையாடாநின்றேமாக, அங்கோர்த்து, ஒரு தோன்றல், நும்வண்டல் மனைக்கு



யாம் விருந்தென்று வந்து நின்றபொழுது, நீபூக்கொய்யச் சிறிதுபுடை பெயர்ந்தாய், அந்நிலைமைக்கண், கீழ்காற்று மிகுதலால், கரைமேலேறுங் கடல், மேல்வந்துற்றது, உற, யான்தோழியோ தோழியோ வென்று நின்னை விளித்தேன், அது கண்டிரங்கி, அவன் அருளொடுவந்து தன்கையைத் தந்தான், யானும் மயக்கத்தாலே அதனை நின்கையென்று தொட்டேன், அவனும் பிறிதொன்றுஞ் சிந்தியாது, என்னுயிர்கொண்டு தந்து, என்னைக் கரைக்கண் உய்த்துப்போயினான், அன்று என் நாணினால் நினக்கு அதனைச் சொல்ல மாட்டிற்றிலேன், இன்று இவ்வாறாயின பின் இது கூறினேன், இனி நினக்கடுப்பது செய்வாயாகவெனத் தோழிக்குத் தலைமகள் அறத்தொடு நில்லாநிற்றல்.

வரலாறு. வண்டலுற்றேமெங்கண். (௨௫)

ஐயந்தீரக்கூறல் என்பது.

எம்பெருமாற்குப் பழிவருமோ வென்றையுற்று அறத்தொடு நின்ற தலைமகள் குறிப்பறிந்த தோழி, அவளையந்தீர, நங்குடிக்குப் பழிவரினுமவற்குப் பழிவாராமல் மறைத்துக் கூறுமாறென்னோ வெனத், தான்றலைமகளைப் பாதுகாத்தருறென்றக் கூறுநிற்றல்.

வரலாறு. குடிக்கலர்கூறினும். (௨௬)

வெறிவிலக்கல் என்பது.

தலைமகளை ஐயந்தீர்த்து, வெறிக்களத்தேசென்று, வேலனை நோக்கிப், புனலிடைவீழ்ந்து கெடப்புகுவந் தெடுத்துய்த்த கதிர்த்தோள் நிற்க, இந்நோய் தீர்த்தற்குப் பிறிதோருபாயத்தைக்கருதும் நின்னைப்போல, இவ்வுலகத்தின் கண்ணறி வுடையாரில்லையென, மேலறத்தொடு நிற்பாளாகத்தோழி வெறிவிலக்கல்.

வரலாறு. விதியுடையாருண்க. (௨௭)

செவிலிக்குத்தோழி யறத்தொடுநிற்றல் என்பது.

வெறிவிலக்கிநிற்ப, நீவெறிவிலக்குதற்குக் காரணமென்னோ வென்று கேட்டசெவிலிக்கு, நீபோய்ப்புனங் காக்கச்சொல்ல, யாங்கள் போய்த்தினைக்கிளி கடியாநின்றேம், அவ்விடத்தொருயானை வந்து நின்மகளை வதஞ்செய்யப்புக்கது, அதனைக்கண்டருளுடையானொருவனோடிவந்தணைத்துப் பிறிதொன்றுஞ் சிந்தியாமல் யானையைக்கடிந்து, அவளுயிர் கொடுத்துப்போயினான், அறியாப்பருவத்து நிகழ்ந்ததனை இன்றறியும்பருவமாதலான்; உற்றூர்க்குரியர் பொற்றொடி மகளிரென்பதனையுட்கொண்டு, இவ்வாறுண் மெலியாநின்றாள், இனியடுப்பதுசெய்வாயாகவெனத் தோழியறத்தொடு நிற்றல்.

வரலாறு. மனக்களியாயின்றி. (௨௮)

நற்றாய்க்குச் செவிலியறத்தொடுநிற்றல் என்பது.

தோழியறத்தொடு நிற்பக்கேட்ட செவிலி, இளையளாகிய இல்வாழ்க்கைச் செல்வத்தையுடைய இவளை என்சொல்லிப் புகழுவோம், முன்னெழு மிரண்டெயிறு முளையாத விளமைப்பருவத்தே அறிவுமுதிர்ந்தாளெனத், தலைமகள் கற்புமிகுதிதோன்ற நற்றாய்க் கறத்தொடுநிற்றல்.

வரலாறு. இளையாளிவளையென். (௨௯)

தேர்வரவுகூறல் என்பது.

நற்றாய்க்குச் செவிலியறத்தொடு நில்லாநிற்ப, அந்நிலைமைக்கண் தலைமகனது தேரொலிகேட்ட தோழி, உவகையோடு சென்று, தலைமகளுக்கவன் வரவெடுத்துக் கூறுநிற்றல்.

வரலாறு. கள்ளினமார்த்துண்ணும். (௩௦)

மணமுரசுகேட்டுமகிழ்ந்துரைத்தல் என்பது.

தோழி தலைமகளுக்குத் தேர்வரவுகூறுநின்ற அந்நிலைமைக்கண் மணமுரசுகேட்டு, மனையிலுள்ளார் இஃதிவளைநோக்கி யொலியாநின்றது மணமுரசெனவுட்கொண்டு, யாம்பூரணபொற்குடந் தோரண முதலாயினவற்றான் மனையை அலங்கரிப்போமென மகிழ்வொடு கூறுநிற்றல்.

வரலாறு. பூரணபொற்குடம். (௩௧)

ஐயுற்றுக்கலங்கல் என்பது.

மணமுரசுகேட்டவள், மகிழ்வொடு நின்றுமனையை யலங்கரிப்ப, மிகவுங் களிப்பையுடைத்தாய நமது சிறந்த நகரின் கண்முழங்கிய இப்பெரிய முரசம் யாவெவற்கோ அறிகின்றிலேனெனத், தலைமகள் கலக்கமுற்றுக்கூறல்.

வரலாறு. அடற்களியாவர்க்கும். (௩௨)

நிதிவரவுகூறுநிற்றல் என்பது.

முரசொலிகேட்டையுற்றுக் கலங்கிய தலைமகளுக்கு, நமர்வேண்டினபடியே அருங்கலங்கொடுத்து நின்னைவரைந்து கொள்வாராகு, யானைகடிந்தார், நமது கடைமுன் கொணர்ந்திறுத்தார் குறைவில்லாத நிதி, இதனை நீ காண்பாயாகவெனத், தோழி மகிழுமனத்தோடு நின்று நிதிவரவுகூறல்.



வரலாறு. என் கடைக்கண்ணினும்.

௨௪. வரைபொருட்பிரிதன் முற்றும்.

மூன்றாவது.

## கற்பொழுக் கவியல்.

பொற்பமைசிறப்பிற் கற்பெனப்படுவ
மகிழ்வுமூட லூடலுணர்த்தலும்
பிரிவும்பிறவு மருவியதாகும்.

என்பது,

அழகிய சிறப்பையுடைய கற்பென்று கூறப்படுவது மகிழ்ச்சியுமூட லூடலுணர்த்தலும் பிரிவு மிவைபோல் வனபிறவுமாம்.

மணஞ்சிறப்புரைத்தல் என்பது.

வரைந்தபின்னர் மணஞ்சிறப்புக்கூறுநிற்றல்.
மணமுரசுகூறலு மகிழ்ந்துரைத்தலும்
வழிபாடுகூறலும் வாழ்க்கைநலங்கூறலுங்
காதல்கட்டுரைத்தலுங் கற்பறிவித்தலுங்
கற்புப்பயப்புரைத்தலுங் காதன் மருவுரைத்தலுங்
கலவியுரைத்தலுங் கருதியவொன்பதும்
நலமிகுமணமிவை நாடுங்காலே.

என்பது,

மணமுரசுகூறல், மகிழ்ந்துரைத்தல், வழிபாடுகூறல், வாழ்க்கை நலங்கூறல், காதல் கட்டுரைத்தல், கற்பறிவித்தல், கற்புப்பயப்புரைத்தல், மருவுதலுரைத்தல், கலவியின்பங்கூறல் ஆகிய வொன்பதும் மணஞ்சிறப்புரைத்தலாம்.

மணமுரசுகூறல் என்பது.

வரைபொருட் பிரிந்து வந்தபின்னர், அருங்கலம்விடுத்தற்கு முன்றிற்கணின்று தலைமகனது முரசுமுழங்கக்கண்டு மகிழ்வுற்ற தோழி, நாம்துயரந்தீர நம்மில்லின் கட்புகுந்துநின்று யானை கடிந்தார்முரசு முழங்குகின்றது, இனியென்ன குறையுடையோமென, வரைவு தோன்றத் தலைமகளுக்கு மணமுரசுகூறுநிற்றல்.

வரலாறு. பிரசந்திகழும். (௧)

### மகிழ்ந்துரைத்தல் என்பது.

மணமுரசொலி கேட்டதோழி, சிலம்பன்தந்த பெறுதற்கரிய தழைகளை வாடாமல்வைத்து, அத்தழையே பற்றுக்கோடாக வாழ்ந்திருந்தாளெனத், தலைமகளைத் தன்னுள்ளே மகிழ்ந்துகூறல்.

வரலாறு. இருந்துதியென்வயின். (உ)

### வழிபாடுகூறல் என்பது.

மணஞ்செய்தபின்னர் மணமனைகாணவந்த செவிலிக்குக், காவலர் உடம்புமுயிரும்போல வொருவரை யொருவரின்றி யமையாமையாலிவள் கருத்தைக்கடவார்; கமலங்கலந்த தேனுஞ் சந்தனமரமும்போல இயைந்திவள் கற்புவழியே நிற்றலையுடையராய் இவன் வழியேநின்றொழுகா நின்றானெனத், தோழி தலைமகன் தலைமகள் வழியொழுகா நின்றமைகூறல்.

வரலாறு. சீரியலாவியும். (ங)

### வாழ்க்கை நலங்கூறல் என்பது.

மணமனைகண்ட செவிலி மகிழ்வொடு சென்று, நின் மகளுடைய இல்வாழ்க்கை நலத்துக்கு உவமைகூறில், நின்னுடைய இல்வாழ்க்கை நலமல்லது வேறுவமையில்லையென, நற்றாய்க்குத் தலைமகளது வாழ்க்கை நலங்கூறல்.

வரலாறு. தொண்டினமேவும். (ச)

### காதல்கட்டுரைத்தல் என்பது.

அவளில்வாழ்க்கை நலங்கிடக்க, அவனவண்மேல் வைத்தகாதலான் இவையேயன்றிப், பொறையர்மென்று கருதி, நுதலின் கணின்றியமையாதகாப்பாகிய பொட்டையு மணியான், இஃதவன்காதலெனத், தலைமகனது காதன்மிகுதிகூறல்.

வரலாறு. பொட்டணியானுதல். (ரு)

### கற்பறிவித்தல் என்பது.

தலைமகனதுகாதன் மிகுதிகூறின செவிலி, அதுகிடக்க, அவளவனையொழிய வேறொருதெய்வத்தைத் தெய்வமாகக் கருதாளாதலால், அவன்தன்னை வணங்காத பகைவனாச்சென்று கிட்டித்திறைகொள்ளச்சென்றாலும், திறைகொண்டுவந்து, அவளில்லத்தல்லது ஆண்டுத்தங்கியறியான், இஃத வரதியல்பெனக்கூறி, நற்றாய்க்குத் தலைமகளது கற்பறிவித்தல்.



239

வரலாறு. தெய்வம்பணி. (சு)

### கற்புப்பயப்புரைத்தல் என்பது.

கற்பறிவித்செவிலி, அவள் அவனையொழிய வணங்காமையின், அவனூருங் களிறும்வினைவயிற் சென்றால் அவ்வினைமுடித்துக்கொடுத்துவந்து, தன்பந்தியிடத்தல்லது ஆண்டுத்தங்காதாதலான், அவள் கற்பு அந்திக்காலத்து வடமீனையும் வெல்லுமென, அவள் கற்புப பயந்தமை நற்றாய்க்குக்கூறல.

வரலாறு. சிறப்பந்திகழ்தரு. (எ)

### மருவுதலுரைத்தல் என்பது.

கற்புப்பயப்புரைத்த செவிலி, வேந்தற்குற்றுழிப் பிரியினும், அவனூருந்தேரும் வினைமுடித்துத் தன்னிலையினல்லது புறத்துத் தங்காது, அவளும் அவனையொழிய மற்றோர் தெய்வமும் மனத்தானும் நினைந்தறியாள், இஃது இவர்காதலென, அவ்விருவர் காதலும் மருவுதல்கூறல்.

வரலாறு. மன்னவன்றெம்முனை. (அ)

### கலவியின்பங்கூறல் என்பது.

இருவர்காதலு மருவுதல்கூறின செவிலி; இவ்விருவருடைய காதலுங்களிப்புமின்ப வெள்ளத்திடை யழுந்தப்புகுகின்றதோருயிர் ஓருடம்பாற்றுய்த் தலாராமையான், இரண்டுடம்பைக்கொண்டு, அவ்வின்ப வெள்ளத்திடைக் கிடந்துதிளைத்ததனோடொக்கும், அதுவன்றி, அவ்வின்பவெள்ளமொரு காலத்தும் வற்றுவது முற்றுவதுஞ் செய்யாதென, நற்றாய்க்கு அவர்கலவியின்பங்கூறல்.

வரலாறு. ஆனந்தவெள்ளத். (கூ)

மணஞ்சிறப்புரைத்தல் முற்றும். 21-1-53

### ஓதற்பிரிவு என்பது.

வரைந்துகொண்ட பின்னர்த்தலைமகனுக்கு முதற்பிரிவு ஓதலாதலால் கல்வியின் மிகுதிகூறி நீங்காநிற்றல்.

ஓதல்காவல் பகைதணிவினையே
வேந்தற்குற்றுழிபொருட் பிணிபாத்தையென்
றாங்கவ்வாறே யவ்வயிற்பிரிவே.

என்பது,

ஓதற்பிரிவு, காவற்பிரிவு, பகைதணி வினைப்பிரிவு, வேந்தற்குற்றுழிப்பிரிவு, பொருள் வயிற்பிரிவு, பரத்தையிற்பிரிவு என ஆறுவகைப்படும்.

அவற்றுள்,

கல்விநலங்கூறலும் பிரிவுநினைவுரைத்தலுங்
கலக்கங்கண்டுரைத்தலுங் காதலர்தமது
வாய்மொழிகூற லாகியநான்கு
மோதற்பிரிவென வுரைத்திசினோரே.

என்பது,

கல்வி நலங்கூறல், பிரிவு நினைவுரைத்தல், கலக்கங் கண்டுரைத்தல், காதலர் தமது வாய்மொழி கூறல் ஆகிய நான்கும் ஓதற்பிரிவாம்.

கல்விநலங்கூறல் என்பது.

வரைந்துகொண்டபின்னர், ஓதற்குப் பிரியலுறுகின்ற தலைமகன், தலைமகளுக்குப் பிரிவுணர்த்துவானாக, மிகவுங் கற்றோரேஅளவில்லாத பெருமை யுடையராவரெனத், தோழிக்குக் கல்வி நலங் கூறல்.

வரலாறு. சீரளவில்லா. (௧)

பிரிவுநினைவுரைத்தல் என்பது.

கல்வி நலங்கேட்ட தோழி, அவன் பிரிதற்குறிப்பறிந்து, மிகவுங்கற்றோர் நன்மைக் கெதிரில்லாத தன்மையராவ ரென்பதனை யுட்கொண்டு, நின் புணர்முலையுற்ற புரவலர், அழற் கானத்தே போய்க், கல்வியான்மிக் காணாக்கிட்டி, அவரோடுசாவி, தங் கல்வி மிகுதி புலப்படுத்தப் பிரியாநின்றாரெனத், தலைமகனேதுதற்குப் பிரிவு நினைந்தமை தலைமகளுக்குக் கூறல்.

வரலாறு. வீதலுற்றுற்றலை. (௨)

கலக்கங்கண்டுரைத்தல் என்பது.

பிரிவு நினைவுரைப்பக்கேட்ட தலைமகளது கலக்கங்கண்ட தோழி, அன்பர் சொற்பாவிருப்பின ரென்ன, அச்சொல் இவள் செவிக்கட்காய்ந்த வேல்போலச் சென்றெய்திற்று, இனி மற்றுள்ள பிரிவை யெங்ஙனமாற்றுவளெனத் தன்னுள்ளே கூறுநிற்றல்.

வரலாறு. கற்பாமதிற்றில்லை. (௩)



வாய்மொழிகூறித் தலைமகள்வருந்தல் என்பது.

கலக்கங் கண்டுரைத்த தோழிக்கு, முன்னிலைப் புறமொழியாக, நின்னிற்பிரியேன், பிரிவுமாற்றேனென்று சொன்னவர் தாமே பிரிவராயின், இதற்கு நாம் சொல்லுவதென்னேயெனத், தலைமகனது வாய்மொழிகூறித் தலைமகள் வருந்தாநிற்றல்.

வரலாறு. பிரியசமையுமுயிர். (௪)

ஓதற்பிரிவு முற்றும்.

காவற்பிரிவு என்பது.

எல்லா வுயிர்களையும் அரசன் பாதுகாக்க வென்னும் தருமநூல் விதியான் அக் காவற்குப்பிரிதல்.

9.M.2 M.2

பிரிவறிவித்தலும் பிரிவுகேட்டிரங்கலும்
வருபவையிரண்டும் வையங்காவ
லாகுமென்மனா ரறிந்திசினோரே.

என்பது,

பிரிவறிவித்தல், பிரிவுகேட்டிரங்கல் ஆகிய இரண்டும் காவற்பிரிவாம்.

அவற்றுள்,

பிரிவறிவித்தல் என்பது.

தருமநூல் விதியால், நமருலகத்தைப் பாதுகாப்பான் பிரியக்கருதாநின்றாரெனத், தலைமகன் காவலுக்குப் பிரியக்கருதாநின்றமை தோழி தலைமகளுக்கு அறிவியாநிற்றல்.

வரலாறு. மூப்பானிளையவன். (௧)

பிரிவுகேட்டிரங்கல் என்பது.

பிரிவறிவித்த தோழிக்கு, முற்காலத்துக் குரவர்களாற் பாதுகாக்கப்படும் நம்மைவந்துயானை தெறப்புக, அதனை விலக்கி, நம் முயிர் தந்தவர், இன்று தம்மல்லதில்லாத இக்காலத்துத் தாம் நினைந்திருக்கின்றதிதுவோ, இது தமக்குத் தகுமோவெனத், தலைமகனது பிரிவு கேட்டுத் தலைமகளிரங்கல்.

வரலாறு. சிறுகட்பெருக்கை. (௨)

காவற்பிரிவு முற்றும்.

பகைதணி வினைப்பிரிவு என்பது.

தம்மிற்பகைத்த வேந்தரைப் பகையைத்தணித்து இருவரையும் பொருந்தச்செய்தலாம்.

பிரிவுகூறலும் வருத்தந்தணித்தலு
மிருபகைதணித்தற் கேகலென்ப.

என்பது,

பிரிவுகூறல், வருத்தந்தணித்தல் ஆகிய இரண்டும் பகைதணி வினைப்பிரிவாம்.

அவற்றுள்,

பிரிவுகூறல் என்பது.

ஒருவராதுள்ள மிகுதியை ஒருவர் தணித்தற்கரிதாகிய இருவேந்தர், தம்முட்பகைத்துடன் மடியப்புகுதாநின்றாரெனக்கேட்டு, அவ்விருவரையும் அடக்கவல்ல திறலுடையராதலின், அவரைப் பகைதணித்து, அவர் தம்மில் ஒன்றுபடவேண்டி நின்னைப்பிரியக் கருதாநின்றாரெனத், தலைமகன் பகைதணிக்கப் பிரியலுறுகின்றமை தோழி தலைமகளுக்குக் கூறல்,

வரலாறு. மிகைதணித்தற்கரி. (க)

வருத்தந்தணித்தல் என்பது.

தலைமகனது பிரிவுகேட்டு, உள்ளுடைந்து, தனிமையுற்று வருந்துகின்ற தலைமகளை, நின்னைவிட்டு அவர் பிரியார், நீ நெருப்பையுற்ற வெண்ணெயும், நீரையுற்ற உப்பும்போல இவ்வாறுருகித் தனிமையுற்று வருந்தாதொழியெனத், தோழி அவளது வருத்தந்தணித்தல்.

வரலாறு. நெருப்புறு வெண்ணெயும். (உ)

பகைதணி வினைப்பிரிவு முற்றும்.

வேந்தற்குற்றுழிப்பிரிவு என்பது.

ஒருவேந்தனுக்கு ஒருவேந்தன் தொலைந்துவந்தடைந்தால் அவனுக்கு உதவிசெய்யப் பிரியாநிற்றல்.

பிரிந்தமைகூறலும் பிரிவாற்றாமை
கார்மிசைவைத்தலுங் காரைநோக்கி
வருந்தியுரைத்தலு மலர்க்குழலிவை
கூதிர்கண்டுகவறலுங் குளிர்முன்பனிக்கவ
ணொந்து கூறலுநோக்கிப் பின்பனிக்
கிரங்கியுரைத்தலு மிளவேனில்கண்டவ



ளின்னலெய்தலு மிதுவவர்குறித்த
பருவமாமென வரவுகூறலும்
பருவமறைத்துரைத்தலு மறுத்துரைசெய்யலுந்
தேர்வரவுகூறலும் வினைமுற்றிநினைதலும்
நிலைமைநினைந்துரைத்தலு முகிலொடுகூறலும்
வரவெடுத்துரைத்தலு மறவாமைகூறலும்
மற்றிவையீரெட்டு முற்றுழிப்பிரிவே.

என்பது,

பிரிந்தமைகூறல், பிரிவாற்றாமை கார்மிசைவைத்தல், வானோக்கிவருந்தல், கூதிர்கண்டு கவறல், முன்பனிக்கு நொந்துரைத்தல், பின்பனிக்கிரங்கல், இளவேனில் கண்டின்னலெய்தல், பருவங்காட்டி வற்புறுத்தல், பருவமன்றென்று கூறல், மறுத்துக்கூறல், தேர்வரவு கூறல், வினைமுற்றிநினைதல், நிலைமைநினைந்து கூறல், முகிலொடுகூறல், வரவெடுத்துரைத்தல், மறவாமை கூறல் ஆகிய பதினாறும் வேந்தற்குற்றுழிப்பிரிவாம்.

அவற்றுள்,

பிரிந்தமைகூறல் என்பது.

தம்மைவந்து அடைந்த வேந்தனுக்குத் தாம் உதவிசெய்வாராக, வெய்ய போரையுடைய பாசறை மேல் நமர் சென்றார், இனி அவ்வேந்தன் பகைவராலிடப்பட்ட மதில் இன்றென்றாய் முடியுமோவென, தலைமகன் வேந்தற்குற்றுழிப்பிரிந்தமை தோழி தலைமகளுக்குக் கூறல்.

வரலாறு. போர்துகுலாய. (க)

பிரிவாற்றாமை கார்மிசைவைத்தல் என்பது.

பிரிவுகேட்ட தலைமகள், தனது வருத்தங்கண்டு, காதலர்வினைவயிற் பிரிய, நீவருந்தினால் வினைமுடியுமாறென்னோவென்ற தோழிக்கு, யான் அவர் பிரிந்ததற்கு வருந்துகின்றேனல்லேன், இக்கார்முகில் சென்று அப்பாசறைக்கண்ணே தோன்றுமாயின், நம்மை நினைந்து ஆற்றாராய், அவ்வினைமுடிக்க மாட்டாரென்று அதற்கு வருந்துகின்றேனெனக், கார்மிசைவைத்துத் தனது வருத்தங்கூறல்.

வரலாறு. பொன்னிவளைத்த. (உ)

வானோக்கிவருந்தல் என்பது.

உற்றுழிப்பிரிந்த தலைமகன், பார்ப்புக்களோடு பெடைக்குருகைச் சேவல் தன் சிறகால் ஒடுக்கிப் பனியான் வருமிக்க குளிரைப் பாதுகாக்கின்ற இரவின்கண், எனது போதரவவளுக் கென்றாய்

கொல்லோவெனத், தலைமகன் வடிவை நினைந்து வானைநோக்கி வருந்தாநிற்றல்.

வரலாறு. கோலித்திகழ்சிற. (௩)

கூதிர்கண்டு கவறல் என்பது.

விழாநின்ற பனியிடத்து எல்லாரும் நெருப்புத்திரளை மேவாநிற்ப, மலைத்திரளையேறித் துணையில்லாதாரைத் தேடும் புயலினம், நமக்கே யன்றித் தம்மையடைந்தார்க்கு உதவிசெய்யச் சென்றார்க்கும் சென்று பொருந்துமோ, பொருந்துமாயின், நம்மை நினைந்தாற்றாராய், அவ்வினை முடிக்கமாட்டாரெனத், தலைமகள் கூதிர்கண்டு கவலாநிற்றல்.

வரலாறு. கருப்பினமேவும். (௪)

முன்பனிக்கு நொந்துரைத்தல் என்பது.

மக்களே யன்றிப் புள்ளுந்தம்பெடையைச் சிறகால் ஒடுக்கிப், பிள்ளைகளையுந் தழுவி, இனஞ் சூழ வெருவாது துயிலப் பெறுகின்ற இம்மயங் கிருட்கண், இடையறாது விழாநின்ற பனியிடைக்கிடந்து வாடித் துயர்வாயாக வென்றென்னைப் பெற்றவளை நோவதல்லது, யான் யாரை நோவேனென, முன்பனிக்காற்றாது தாயொடு நொந்துகூறாநிற்றல்.

வரலாறு. சுற்றின வீழ்பனி. (௫)

பின்பனி நினைந்திரங்கல் என்பது.

இப்பெரிய பனி வையமெங்கும் பரந்து தலைவிகளைப் பரப்பியவாறு அவள் பொறுக்கு மளவன்று, அவளைச் சொல்லுகின்றதென், எனக்கு மாற்றுதலரிதென்பது போதர, மிக்க தனிமையை உடையார்க்கு இப்பனிவான் சரத்தைத் தருமாயின், அதனோடு ஒக்குமென்று, தலைமகன் தலைமகளது துயர் நினைந்திரங்காநிற்றல்.

வரலாறு. புரமன்றயர். (௬)

இளவேனில் கண்டின்னலெய்தல் என்பது.

மேலு மேலு நிறம் பெற்றிருளாநின்ற இக்குயில்கள், மாம்பொழிலைச் சுற்றும்வந்து பற்றின, இனி உயிர் வாழுமாறொன்றுங் கண்டிலேனெனத், தலைமகள் இளவேனில் கண்டின்னலெய்தல்.

வரலாறு. வாழும்படியொன்றும். (௭)



பருவங்காட்டி வற்புறுத்தல் என்பது.

தலைமகன் தான் வருதற்குக் குறித்துப்போகிய கார்ப்பருவத்தின் வரவுகண்டு கலங்காநின்ற தலைமகளுக்கு, இக்கார்வந்து வானிடத்துப் பரந்தமையால், நம்மைக்கலந்தவர் தேர், இன்றாக நாளையாக இங்கேவாரா நிற்பக்காணப்படுவதே இனியுள்ளதெனத், தோழி அப்பருவந்தன்னையே காட்டி அவளை வற்புறுத்தல்.

வரலாறு. பூண்படதென்றேகொண். (௮)

பருவமன்றென்றுகூறல் என்பது.

காரும்வந்தது, காந்தளுமலரா நின்றன, காதலர் வாராதிருந்ததென்னோவென்று கலங்கிய தலைமகளுக்கு, சிற்றம்பலத்தின் கண்ணேகுடமுழா முழங்க, அதனையறியாது காரொன்றுகொண்டு, இக்காந்தண்மலர்ந்தன, நீயிதனைப் பருவமென்று கலங்காதொழியெனத், தலைமகன் வரவுநீட்டித் தலால், தோழி அவள் கலக்கந்தீரப் பருவத்தைப் பருவமன்றெனக்கூறல்.

வரலாறு. தெளிதரற்காரொன. (௯)

மறுத்துக்கூறல் என்பது.

பருவமன்றென்றதோழிக்கு, காந்தளேயன்றி இதுவும் பொய்யோவெனத், தோன்றியின்மலரைக்காட்டி, இது பருவமேயென்று, அவளோடு தலைமகள் மறுத்துக்கூறல்.

வரலாறு. தேன்றிக்கிலங்கு. (௧௦)

தேர்வரவுகூறல் என்பது.

மறுத்துக்கூறின தலைமகளுக்குக், கொண்டல்களெட்டுத்திசைக்கண்ணும் வாராநின்றமையின், இது பருவமே, இனி உடன்றமன்னர் தம்முட்பொருந்துதலால், நம்மைக்கலந்தவர் தேர், நம்மில்லின்கண் இன்று வந்துதோன்றுமென்று, அவள் கலக்கந்தீரத்தோழி தலைமகனது தேர் வரவு கூறல்.

வரலாறு. திருமாலறியா. (௧௧)

வினைமுற்றிநினைதல் என்பது.

வேந்தற்குற்றுழிப் பிரிந்த தலைமகன், வினைமுற்றிய பின்னர், கயலையும்வில்லையும் கொண்டு, மன்கோபமுங்காட்டி, ஒரு திருமுகம் வாராநின்றது, இனிக்கடிது போதுமெனத், தேர்ப்பாகன் கேட்பத் தலைமகளது முகநினைந்துகூறல்.

வரலாறு. புயலோங்கலர்சடை. (௧௨)

நிலைமைநினைந்துகூறல் என்பது.

வினைமுற்றியபின்னர், அவண்முகங்கண்டு வாராநின்றவன், புருக்கள்தம் துணையோடு துயின்று முன்றிற்கண் விளையாடுவகண்டு, இது நமக்கரிதாயிற்றென்று, என்னிலைமை நினைந்தாற்றகில்லாளாவள், நீவிரையத்தேரைச் செலுத்துவாயாகவெனத், தலைமகளதுநிலைமை நினைந்து தேர்ப்பாகனுக்குக் கூறல்.

வரலாறு. சிறப்பிற்றிகழ். (௧௩)

முகிலொடுகூறல் என்பது.

காரோட்டங்கண்ட பாகன், அதனோடு விரையத்தேரோட்டாநிற்பான், பிரிதலால் திருந்தியு வழகெல்லாமழிந்து தன்புறு நின்றவளதுசீரிய நகரின்கண் வாராநின்ற எனது தேரின் முற்படுச்சென்றியங்காதொழிய வேண்டும், இயங்கினும், அச்தமியாள் கேட்பமுழங்கா தொழிய வேண்டுமெனத், தலைமகன் முந்துறச்செல்லாநின்ற முகிலொடுகூறல்.

வரலாறு. அருந்தோழிந்தன. (௧௪)

வரவெடுத்துரைத்தல் என்பது.

தலைமகன் முகிலோடு வாராநிற்பக் கண்டதோழி, வணங்குவாராக வுடம்பட்டவர் கொடுத்ததிறைபையும், வணங்காது மாறுபட்டவரடையாளங்களையும் தமது தேருக்குமுன்னாகக்கொண்டு, வீரமுரசார்ப்ப,ஆலியாநின்ற மாவினோடும் வந்தணுகினார், இனி நமக்கொரு குறையில்லையெனத், தலைமகளுக்கு அவன் வரவெடுத்துக்கூறல்.

வரலாறு. பணிவார்குழையெழில். (௧௫)

மறவாமைகூறல் என்பது.

வினைமுற்றிவந்து தலைமகளோடு பள்ளியிடத்தானாகிய தலைமகன், நீயிர் வினையிடத்தெம்மை மறந்நீரேயென்ற தோழிக்கு, யான் பாசறைக் கட்டாழ்த்தவிடத்தும், கண்முத்திலங்க நின்றிவளென்னுடைய நெஞ்சைவிட்டு நீங்கிற்றில ளாதலால், யான் மறக்குமாறென்னோவெனத், தானவளை மறவாமைகூறல்.

வரலாறு. கருங்குவளைக்கடி. (௧௬)

வேந்தற் குற்றுழிப்பிரிவு முற்றும்.



பொருள்வயிற்பிரிவு என்பது.

குரவர்களாற் படைக்கப்பட்ட பொருள்கொண்டு இல்லறஞ்செய்தால், அதனால் வரும்பயன் அவர்க்காமத்துணையல்லது தமக்காகாமையால், தமதுபொருள் கொண்டில்லறஞ் செய்தற்குப் பொருள்தேடப் பிரியாநிற்றல்.

வாட்டங்கூறலும் பிரிவுநினைவுரைத்தலு
மாற்றாதுபுலம்பலு மாற்றாமைகூறலுந்
திணைபெயர்த்துரைத்தலும் பொருத்தமறிந்துரைத்தலும்
பிரிந்தமைகூறலும் பிரிவாற்றாமையான் [ம்
இரவுறுதுயர்த்திற் கிரங்கியுரைத்தலும்
இகழ்ச்சிநினைந்தழிதலு முருவுவெளிப்படுதலும்
நெஞ்சொடுநோதலும் நெஞ்சொடுபுலத்தலும்
நெஞ்சொடுமறுத்தலும் நாளெண்ணிவருந்தலும்
ஏறுவரவு கண்டிரங்கியுரைத்தலும்
பருவங்கண்டிரங்கலு முகிலொடுகூறலுந்
தேர்வரவுகூறலு மிளையரெதிர்கோடலு
முண்மகிழ்ந்துரைத்தலு மோதியவிருபது
மாமதிநுதலாய் வான்பொருட்பிரிவே.

என்பது,

வாட்டங்கூறல், பிரிவு நினைவுரைத்தல், ஆற்றாதுபுலம்பல், ஆற்றாமைகூறல், திணைபெயர்த்துரைத்தல், பொருத்தமறிந்துரைத்தல், பிரிந்தமைகூறல், இரவுறு துயரத்திற்கிரங்கியுரைத்தல், இகழ்ச்சி நினைந்தழிதல், உருவுவெளிப்பட்டு நிற்றல், நெஞ்சொடுநோதல், நெஞ்சொடுபுலத்தல், நெஞ்சொடுமறுத்தல், நாளெண்ணிவருந்தல், ஏறுவரவு கண்டிரங்கியுரைத்தல், பருவங்கண்டிரங்கல், முகிலொடுகூறல், தேர்வரவுகூறல், இளையரெதிர்கோடல், உண்மகிழ்ந்துரைத்தல் ஆகிய இருபதும் பொருள்வயிற்பிரிவாம்.

அவற்றுள்,

வாட்டங்கூறல் என்பது.

பொருள்வயிற் பிரியலுறுநின்ற தலைமகன், இருமையும் பொருளானே முற்றுப்பெறு மென்றியான் பொதுவகையாற்கூற, அக்குறிப்பறிந்து, கண்பனிவர, இத்தன்மையளாய் வாடினாள், இனியென்னாற் பிரிவுரைத்தலரிது, நீ யுணர்த்துமாற்றானுணர்த்தெனத், தோழிக்குத் தலைமகளது வாட்டங்கூறல்.

வரலாறு. முனிவருமன்னரு. (௧)

## பிரிவு நினைவுரைத்தல் என்பது.

வாட்டங்கேட்ட தோழி, பொருளில்லாதார் இருமையின்கண் வருமின்பமுமறியாரென வுட்கொண்டு, அருஞ் சுரம்போய், நமர் பொருள்தேட நினையா நின்றாரெனத், தலைமகளுக்குத் தலைமகன் பிரிவு நினைவுரைத்தல்.

வரலாறு. வறியாரிருமை. (௨)

## ஆற்றாதுபுலம்பல் என்பது.

பிரிவு நினைவுரைப்பக்கேட்ட தலைமகள், இத்தோழியாகிய கொடியவள் இத்தன்மையை யறிந்திருந்தும், அன்பர் பிரிவரெனக், குவளைப்பூ வெறிதற்குவாளுறை கழித்தாற்போலக் கூறினாள், இதற்கியான் கூறுவதுண்டோவென ஆற்றாதுபுலம்பல்.

வரலாறு. சிறுவாளுகிறு. (௩)

## ஆற்றாமைகூறல் என்பது.

தலைமகள் வருத்தங்கண்டதோழி, காதலர் கானலாகிய சுரத்திற் போய்ப் பொருள் தேட நினையா நின்றாரென்று யான் கூறுமளவில், அவள் கண்ணுமுலையு முத்தும் பொன்னுந்தாரா நின்றன, இனி நீ சேட்சென்று தேடும்பொருள் யாதோவெனத், தோழி தலைமகனுக்கு அவளது பிரிவாற்றாமைகூறல்.

வரலாறு. வானக்கடிமதில். (௪)

## திணைபெயர்த்துரைத்தல் என்பது.

யான் அவற்கு நினதாற்றாமை கூறினேன், இனி அவர் நினைவறியேனென்ற தோழிக்குத், தாமெனைக் கருளைப்புலப்படுத்திய சொற்களெல்லா மறந்தோ காவலர் தீவினையேற்குப் பொருளைத்தரத்தொடங்குகின்றதெனப், பிரிவுள்ளிப், பாலை நிலத்தணுகிய தலைமகனை மருத நிலத்தணுக்கிக், தலைமகள் புலந்து கூறுநிற்றல்.

வரலாறு. சுருடருசெஞ்சடை. (௫)

## பொருத்தமறிந்துரைத்தல் என்பது.

திணைபெயர்த்துக் கூறின தலைமகளுக்கு, யாமெல்லாஞ் சொன்னேமாயினும், காதலர்க்கு நினைவுபொருள் மேலாயிருந்தது, இனி யானுரைப்பதென்னேயெனாத், தோழி தலைமகனது பொருத்த மறிந்து அதற்குத் தானேர்ந்துகூறல்.

வரலாறு. மூவர்நின்றேத்த. (௬)



## பிரிந்தமைகூறல் என்பது.

பொதுவகையானுணர்த்தினேமாயின், இனித்தீயது பிற்காண்டின்றேமெனத் தலைமகனுணர்த்தாது பிரியாநிற்ப, நின்முன்னின்று பிரிவுணர்த்தினால் நீ மேனியொளிவாடுவையென உட்கொண்டு, பொருண் முடித்துக் கடிதின்மீள்வாராக நால்வகைத்தானையோடு நம் மன்னர் வினைவயிற்சென்றாரெனத், தோழி தலைமகளுக்குத் தலைமகன் பிரிந்தமைகூறுநிற்றல்.

வரலாறு. தென்மாத்திசைவசை. (௭)

## இரவுறுதுயரத்திற் கிரங்கியுரைத்தல் என்பது.

பிரிவுகேட்ட தலைமகளதாற்றா முகங்கண்ட தோழி, இவ்வுறப் புக்குறையோடெங்குந் திரிந்தினைத்து அருக்கன்தேர் வருதல்யாண்டையது, இவளாற்றுதல் யாண்டையது எனை, அவளிரவுறுதுயரத்திற்குத் தானிரக்கமுற்றுக்கூறல்.

வரலாறு. ஆழியொன்றீரடி. (௮)

## இகழ்ச்சி நினைந்தழிதல் என்பது.

தோழி இரக்கமுற்றுக் கூறுநிற்ப, முற்காலத்து அவருலகின் மேல் வைத்துணர்த்தியவழி நீட்டித்துப் பிரிவாராயினும் இப்பொழுதைக்கு இவர் பிரியாரெனயான் அவர் பிரிவிகழ்ந்திருந்தேன், முன்னின்று பிரிவுணர்த்தினால் இவளுயிர் தரியாளென்று அவருணர்த்து தலையிகழ்ந்துபோனார், அத்தன்மையவாகிய இரண்டிகழ்ச்சியு மென்னையித் தன்மைத்தாக அழிவியாநின்றனவெனத், தலைமகளிகழ்ச்சி நினைந்தழியாநிற்றல்.

வரலாறு. பிரியாரெனவிகழ்ந். (௯)

## உருவுவெளிப்பட்டுநிற்றல் என்பது.

தலைமகளிகழ்ச்சி நினைந்தழியாநிற்பத், தானுணர்த்தாது பிரிந்தமையுட்கொண்டு பொருள்வலித்த நெஞ்சொடு செல்லாநின்ற தலைமகன், காணுந்திசைதோறுங் கயலையும் வில்லையுஞ் சிவந்தகனியையு முலையையுங்கொண்டொரு பூங்கொடிதோன்றா நின்றதெனத், தலைமகளுருவை நினைந்து, மேற்போகமாட்டாது மீளலுற்றுச் சுரத்திடை நில்லாநிற்றல்.

வரலாறு. சேணுங்கிகழ்மதிற். (௰)

## நெஞ்சொடுநோதல் என்பது.

மீளாநினைந்த தலைமகன், பின்னும் பொருண்மேற் செல்லாநின்ற உள்ளத்தனாய் நின்ற மீளமாட்டாது, இவ்விரண்டனுள்ளிப்பொழுது நீயேதுக்குப்போக முயல்கின்றாயெனத், தன்னெஞ்சொடு நொந்து கூறல்.

வரலாறு. பொன்னணியீட்டிய. (௧௧)

## நெஞ்சொடுபுலத்தல் என்பது.

நெஞ்சொடுநொந்து கூறுகின்றவன், பேயிடத்துஞ் செய்தலரிதாம் பிரிவை இவளிடத்தே யெளிதாக்குவித்துச் செய்த்தாகிய இவ்விடத்துப்போந்த நினதுசிக்கனவுக் கஞ்சத்தக்கதெனப், பின்னுமந் நெஞ்சொடு புலந்துகூறுநிற்றல்.

வரலாறு. நாய்வயினுள்ள. (௧௨)

## நெஞ்சொடுமறுத்தல் என்பது.

நெஞ்சொடுபுலந்துகூறிப் பின்னும் பொருண்மேற்செல்லா நின்றவுள்ளத்தொடு தலைமகனை நினைந்து, இத்தன்மைத்தாகிய பொன்னை விட்டு வேறு பொன்றேடிபோ எம்மை வாழச்செய்வது, இதற்கு யாமுடம்படேம், காமே கடக்கவெனச், செலவுடம்படாது பொருள் வலித்த நெஞ்சொடு மறுத்துக்கூறல்.

வரலாறு. திமேவியநிருத். (௧௩)

## நாளெண்ணிவருந்தல் என்பது.

தலைமகன் வரவுநீட்ட நினைந்து வருந்தாநின்ற தலைமகளது வருத்தங்கண்டதோழி, இவளையுறப் போனவர்போன நாளையெண்ணுந் தன்மையாற் பவகாலிடுதலின்கிலனுங் குழிந்து விரலுந்தேய்ந்ததென அவன் சென்றநாளெண்ணி வருந்தாநிற்றல்.

வரலாறு. தெண்ணீரணிசிவன். (௧௪)

## ஏறுவரவு கண்டிரங்கியுரைத்தல் என்பது.

பொருண்முற்றித் திரும்பியதலைமகன், மாலையிறுகொடுவாரா நின்ற ஏறு வரவுகண்டு, இச்சிறந்தசெக்கர் மாலை அவள் பொறுக்குமளவன்றெனவிரங்கிக் கூறுநிற்றல்.

வரலாறு. சுற்றம்பல மின்னைக (௧௫)



## பருவங்கண்டிரங்கல் என்பது.

ஏறுவரவு கண்டிரங்கிவருந் தலைமகன், இம்மேகங்களொன்றோடொன்று தம்மில் விரவுதலால் பொழில்கடோறு மயில்கள் கூடியாடாநின்ற இக்கார் காலத்து அவளென்னை நினைந்தாற்றாளெனப் பருவங் கண்டிரங்கல்.

வரலாறு. கண்ணுழையாது. (௧௬)

## முகிலொடுகூறல் என்பது.

பருவங்கண்டிரங்கி விரைவில் வருந் தலைமகன், இவ்விடத்தெல்லாம் முற்பட்டாயாயினும், முதுபெண்டிர் திரண்டு அவள் இன்னாமையை நீக்கற்கு இல்லுறை கடவுட்குப் பூசனை செய்யாநிற்கும் நீணகரத்திற்கு என்னின் முற்படாதொழிவாயாகவென, முற்பட்டுப் போகு முகிலொடு கூறல்.

வரலாறு. அற்படு காட்டினில். (௧௭)

## தேர்வரவுகூறல் என்பது.

பொருள் வயிற்பிரிந்த தலைமகன், முகிலொடுவந்து புகாநிற்ப, இம்முகில் இவள் ஆவியை வெகுளாநின்ற காலத்தொரு தேர்வந்து காத்தமையால், இனிவரக் கடவதனை வெல்லுமாறு இல்லையெனத் தோழி தலைமகளுக்குத் தேர் வரவு கூறல்.

வரலாறு. பாவியை வெல்லும். (௧௮)

## இளையரெதிர்கோடல் என்பது.

தோழி தலைமகட்குத் தேர் வரவு கூறாநிற்ப, இந்நிலைமைக்கண், இனி இவளாவி செல்வதற்குமுன்னே நீதியோடன்பர் தேர் வந்தது, இனி ஊழின் வலியது வேறொன்றும் இல்லையெனப் பொருண் முடித்து வாராநின்ற தலைமகனைச் சென்றிளைய ரெதிர்கோடல்.

வரலாறு. யாழின்மொழிமங்கை. (௧௯)

## உண்மகிழ்ந்துரைத்தல் என்பது.

பொருண்முடித்து இளைஞர் எதிர்கொள்ளவந்து புகுந்த தலைமகன், தலைமகளுடன் பள்ளியிடத்தனாயிருந்து, இம்மானைப்பிரிந்து பொருள்தேடயான் வெய்ய சுரஞ்சென்ற துன்பம் எல்லாம் இவள் கொங்கைகளென்னுறுப்புக்களிடைமூழ்க, இப்பூவணைமேல் அணையாமுன்னம் துவள்வுற்றதெனத் தன்னுள்ளே மகிழ்ந்துகூறல்.

வரலாறு. மயின்மன்னு சாயலிய். (௨௦)

பொருள்வயிற்பிரிவு முற்றும்.

## பரத்தையிற் பிரிவு என்பது.

தலைமகளை வரைந்து எய்தியபின்னர், வைகலும் பாலே நுகர்வானொருவன் இடையே புளிங்காடியும் நுகர்ந்து அதனினிமையை அறிந்தாற்போல, அவளுகர்ச்சி இனிமை அறிதற்குப் புறப்பெண்டிர் மாட்டுப் பிரியாநிற்றல்; அல்லதூஉம், பண்ணும் பாடலு முதலாயின காட்டிப் புறப்பெண்டிர் தன்னைக்காதலித்தால் தான் எல்லார்க்குந் தலைவனாகலின், அவர்க்கும் இன்பஞ் செய்யப் பிரியாநிற்றல் என்றுமாம், அல்லதூஉம், தலைமகளை ஊடலறிவித்தற்குப் பிரிதல் என்றுமாம். இவ்வாறொழிந்து தனக்கு இன்பம் வேண்டிப் பிரிவனாயின், இவனுக்குத் தலைமகள் என்னும் பெயரோடு மாறுபட்டுத் தனது பெருமையோடு மாறுபடா நிற்கும்.

கண்டவர்கூறலுங் காதற்றோழி
பொறையுவந்துரைத்தலும் பொதுப்படக்கூறி
வாடியழுங்கலுமாறு கொண்டவனொடு
கனவிழந்துரைத்தலும் விளக்கொடுவெறுத்தலும்
வாரம்பகர்ந்து வாயின்மறுத்தலும்
பள்ளியிடத்தூடலும் பணிமொழியாடன்
செவ்வணிவிடுக்க வில்லோர் கூறலும்
அயலறிவுரைத்தவளழுக்கமெய்தலும்
செவ்வணிகண்டவாயிலவர்கூறலும்
மனைபுகல்கண்ட வாயிலவர்கூறலு
முகமலர்ச்சிகூறலு முனிவகென்னெனக்
காலநிகழ்வுரைத்தலுங் கலவியெய்தலை
யெடுத்துப்பகர்வுங் கலவியைக்கருதிப்
புலத்தலுங்குறிப்பறிந்து புலந்தமைகூறலும்
வாயிலவர்வாழ்த்தலும் புனல்வரவுரைத்தலுந்
தேர்கண்டுமகிழ்தலுஞ் சேடியர்விழவிற்
றம்முளுரைத்தலுந் தன்னைவியத்தலும்
நகைத்துக்கூறலு நாணங்கண்டியம்பலும்
பாணன்வரவுரைத்தலும் பாங்கியியற்பழித்தலு
முன்னுயரியற்பழித்தலு மொண்ணுதலாளவற்
கியற்படமொழிதலு மியல்புநினைந்துரைத்தலும்
வாயில்பெறாதுமகன்றிறநினைதலும்
வாயிற்கணின்றுதோழிக்குரைத்தலும்
வாயில்வேண்டத்தோழிகூறலும்



மன்னியதோழி வாயில்வேண்டலு
மனையவர்மகிழ்தலும் வாயின்மறுத்தலும்
பாணனொடுவெகுடலும் பாணன்புலத்தலும்
விருந்தொடுசெல்லத் துணிந்தமைகூறலு
மூடறணிவித்தலு மணைந்தவழியூடலும்
புனலாட்டுவித்தமை கூறிப்புலத்தலுங்
கலவிகருதிப் புலவியியம்பலு
மிகுத்துரைத்தூடலும் விறல்வேற்காளை
யூடனீட வாடியுரைத்தலும்
துனியொழிந்துரைத்தலு நுகமொன்றில்லாப்
புதல்வன்மேல்வைத்துப் புலவிதீர்தலுங்
கலவியிடத்தூடலு முன்னிகழ்வியம்பலும்
பரத்தையைக்கண்டமை பயன்படக்கூறலு
மூதியமெடுத்துரைத் தூடறீர்த்தலு
மெண்ணொன்றிவை பரத்தையிற்பிரிவெனப்
பண்ணேர்மொழியாய் பகர்ந்திசினோரே

என்பது,

கண்டவர் கூறல், பொறையுவந்துரைத்தல், பொதுப்படக் கூறி வாடியழுங்கல், கனவிழந்துரைத்தல், விளக்கொடு வெறுத்தல், வாரம் பகர்ந்து வாயின் மறுத்துரைத்தல், பள்ளியிடத்தூடல், செவ்வணி விடுக்க வில்லோர் கூறல், அயலறிவுரைத்தவளழுக்கமெய்தல், செவ்வணிகண்ட வாயிலவர்கூறல், மனைபுகல்கண்ட வாயிலவர்கூறல், முகமலர்ச்சிகூறல், காலநிகழ்வுரைத்தல், எய்தலெடுத்துரைத்தல், கலவி கருதிப்புலத்தல், குறிப்பறிந்து புலந்தமைகூறல், வாயிலவர் வாழ்த்தல், புனல்வரவுரைத்தல், தேர்வரவுகண்டு மகிழ்ந்தகூறல், புனல் விளையாட்டிற் றம்முளுரைத்தல், தன்னை வியந்துரைத்தல், நகைத்துரைத்தல், நாணுதல் கண்டு மிகுத்துரைத்தல், பாணன் வரவுரைத்தல், தோழி இயற்பழித்தல், உழையரியற் பழித்தல், இயற்படமொழிதல், நினைந்து வியந்துரைத்தல், வாயில் பெறாது மகன்றிறநினைதல், வாயிற்கணின்று தோழிக்குரைத்தல், வாயில் வேண்டத் தோழிகூறல், தோழிவாயில் வேண்டல், மனையவர்மகிழ்தல், வாயின் மறுத்துரைத்தல், பாணனொடு வெகுடல், பாணன்புலந்துரைத்தல், விருந்தொடு செல்லத் துணிந்தமை கூறல், ஊடறணிவித்தல், அணைந்தவழியூடல், புனலாட்டுவித்தமை கூறிப்புலத்தல், கலவிகருதிப் புலத்தல், மிகுத்துரைத்தூடல், ஊடனீடவாடியுரைத்தல், துனியொழிந்துரைத்தல், புதல்வன்மேல் வைத்துப் புலவிதீர்தல், கலவியிடத்தூடல், முன்னிகழ் வுரைத்தூடல் தீர்த்தல், பரத்தையைக்கண்டமை கூறிப்புலத்தல், ஊதியமெடுத்துரைத்தூடல் தீர்த்தல், ஆகிய நாற்பத்தொன்பதும் பரத்தையிற் பிரிவாம்.

அவற்றுள்,

## கண்டவர் கூறல் என்பது.

தலைமகன் பரத்தையர் சேரிக்கட் செல்லாநிற்ப, அப்பரத்தையர் அவனை யொருங்கு எதிர்கொண்டு சுற்றும் பற்றிப்போர் செய்யாநின்றமையின், இஃது இவன் காதலி மாட்டென்றுமென, அவ்விடத்துக்கண்டவர் தம்முட் கூறாநிற்றல்.

வரலாறு. உடுத்தணிவாளர. (௧)

## பொறையுவந்துரைத்தல் என்பது.

தலைமகனைப் பரத்தையர் எதிர்கொண்டமை கேட்ட தலைமகள், நெஞ்சுடைந்து, புறத்து வெளிப்படாமற் பொறுத்தமைகண்ட தோழி, யான் இவ்வாறாகவுங் கலங்காது நின்ற பெரும் பொறையாட்டியை. யானின்று பேசுவன வென்னென்று, அவளை உவந்து கூறாநிற்றல்.

வரலாறு. சுரும்புறு கொன்றையன். (௨)

## பொதுப்படக்கூறி வாடியழுங்கல் என்பது.

பொறை யுவந்துரைத்த தோழிக்கு, முன்னிலைப் புறமொழியாகத், தமது நலங்கவரக் கொடுத்து, வேறு துணையின்மையிற் றமதுணையையே தமக்குத் துணையாகக்கொண்டு கிடந்த என்னைப்போல, உயிர்தேய்வார் இனி யாவரோ வெனப், பொதுப்படப் பரத்தையர்க்கிரங்குவாள் போன்று, தலைமகன் கொடுமை நினைந்து உரைத்து வாடியழுங்கல்.

வரலாறு. அப்புற்றசென்னியன். (௩)

## கனவிழந்துரைத்தல் என்பது.

தலைமகன் கொடுமை நினைந்து கிடந்து வாடிய தலைமகள், கனவிடைவந்து, அவன் மார்புதரத், தான தனை நனவென்று மயங்கிப் புலந்து, அவனோடு புணராதிழந்தமையைத் தோழிக்கு இயம்பாநிற்றல்:

வரலாறு. தேவாசுரர். (௪)

## விளக்கொடு வெறுத்தல் என்பது.

கனவிழந்தமைகூறி வருந்திய தலைமகள், நீயாயினுங் கலந்தவர்க்குப் பொய்முகங் காட்டிக் கரத்தல் பொருத்தமன் றென்றிலையேயென், விளக்கொடு வெறுத்துக் கூறாநிற்றல்.



வரலாறு. செம்முகநீலம். (௫)

## வாரம்பகர்ந்து வாயின்மறுத்துரைத்தல் என்பது.

விளக்கொடு வெறுத்து வருந்திய தலைமகள், தலைமகன் பரத்தையிற் பிரிந்துவந்து வாயிற்கணிற்ப, வண்டோரனையராடவர், பூவோரனையர் மகளிராதலான், யாமுமவன் தலையளிபெற்ற பொழுதேற்றுக் கொள்வதன்றோ நமக்குக்காரியம், நாம் அவனொடு பலக்கற்பாலே மல்லேமென்று வாயினோர் வித்தார் [illegible] லையுந் தோறும் அவ்விடத்து வளைத்துவைத்து, வேண்டினார் கொள்ள அமையும், யான்மன்னனைப் பரத்தையர்க்கு உறாவரையாகக் கொடுத்தேனென, மறுத்துரையாநிற்றல்.

வரலாறு. பூங்குவளைப்பொலி. (௬)

## பள்ளியிடத்தூடல் என்பது.

வாயின்மறுத்த தலைமகள், ஆற்றாமையே வாயிலாகப் புக்குப் பள்ளியிடத்தானாகிய தலைமகனோடு, நின்னை யிடைவிடாது நுகர்தற்கு முற்காலத்துத் தவஞ் செய்யாத தீவினையேனை நோவாது, இன்றிவ்வாறாகிய நின்னை நோவதென்னோ, அது கிடக்க, நின்காதலிமார், புறமே கற்றுநினக்குப் புதிதாகச் செய்த அப்புல்லுந் தலையாஞ் செய்யமாட்டோம், அதனால் எம்மைத் தொடாதே, எம்கலையை விடுவாயாகவென, கலவிகருதிப் புலவாநிற்றல்.

வரலாறு. தவஞ்செய்திலாதவெந். (௭)

## செவ்வணிவிடுக்க வில்லோர்கூறல் என்பது.

இக்கொங்கைகள்தாங்கித் தளராநின்ற மருங்குலை யுடைய இவள்வருந்த, இவ்வாயத்தார் முன்னே அப்பரத்தையர் மனைக்கண், இப்பேதை இக்குறி அறிவிக்கச் செல்லாநின்ற இஃது, நமக்கு மிகவும் இளி வரவுடைத்தெனச், செவ்வணிவிடுக்க விரையாநின்ற இல்லோர் தம்முட் கூறாநிற்றல்.

வரலாறு. தணியுறப்பொங்கு. (௮)

## அயலறிவுரைத்தவளழுக்கமெய்தல் என்பது.

இல்லோர் செவ்வணிவிடுக்க நினையாநிற்ப, அயலார் முன்னே இவளால் இக்குறியறிந்தவிடத்து, ஒருத்தி நமக்குத்தர நாம் அவனை யெய்தும்படியாயிற்று நம்முடைய பெண் தன்மையென, அயலறிவுரைத்துத் தலைமகள் அழுக்கமுற்றுக் கூறல்.

வரலாறு. இரவணையும். (௯)

### செவ்வணிகண்டவாயில்வர் கூறல் என்பது.

தலைமகளிடத்து நின்றுஞ் செவ்வணி செல்லக்கண்டு, நம்மூரற் குலகியலாறுரைப்பான் வேண்டிச், செம்மலரும் செம்பட்டும் செஞ்சாந்தும், நமது திருவையுடைய மனையின்கண்வந்து தோன்றின வெனப், பரத்தைவாயிலவர் தம்முண் மதித்தியம்பாநிற்றல்.

வரலாறு. அயர்ந்த [illegible] (௧௦)

### மனைபுகல்கண்டவாயிலவர்கூறல் என்பது.

செவ்வணிகண்ட தலைமகன், பரத்தை யிடத்து நின்றும்வந்து தடையின்றி மனைவயிற்புகுதா நிற்ப, பண்டிரவும் பகலும் வாயில் பெறாது நின்றுணங்கும் இக்காவலையுடைய கடையை இத்துணைக் காலத்திற் கழித்து, வாயிலின்றிப் புகுதாநின்றான், மனைக்கடன் பூண்டலால் இனிப்புலந்தடங்காதார் ஒருவருமில்லையெனத், தலைமகள்வாயில்வர் தம்முட்கூறாநிற்றல்.

வரலாறு. குராப்பயில் கூழை. (௧௧)

### முகமலர்ச்சிகூறல் என்பது.

பரத்தையிற்பிரிந்த தலைமகன், செவ்வணிகண்டு வந்தானென்றியம்புமளவில், தலைமகள் கண்கள்சிவந்தன, அப்புலவி சோகத்தெதிர் காதலனுக்க, அச்சிவப்பாறி, முகம் அலர்ந்தமையை அவ்விடத்துக் கண்டவர்தம்முட்கூறல்.

வரலாறு. வந்தான் வயலணி. (௧௨)

### காலநிகழ்வுரைத்தல் என்பது,

பரத்தையிற்பிரிந்து வந்த தலைமகன், ஆற்றாமையைத் தலைமகணீக்காதிருப்ப, வண்டுதுமல்லிகைப்போதானும் அந்திப்பிறையானும் கங்குற்பொழுதானும் ஆற்றாளைப் புகுதராநின்றான், இனிநீ புலக்கற்பாலையல்லையென, உழையர் கூறாநிற்றல்.

வரலாறு. வில்லிகைப்போதின். (௧௩)

### எய்தலெடுத்துரைத்தல் என்பது.

பரத்தையிற்பிரிந்துவந்த தலைமகன், பூப்புநிகழ்ந்த கிழத்தியைப் புலவிதீர்த்து, இன் புறப்பண்ணியெய்தலுற்று மகிழ்ந்தமையை, அவ்விடத்துள்ளாரெடுத்துரைத்தல்.



வரலாறு. புலவிதீர்திரைபொர. (௧௪)

### கலவிகருதிப்புலத்தல் என்பது.

புலவிதீர்த்தின் புறப்புணரப்பட்டு மயங்கிய தலைமகள், தனக்கவன் செய்த தலையளியை நினைந்திவ்வாறருளு மற்றொரு ஞான்று பிறர்க்குமாமென்வுட்கொண்டு, பொருமியழுது, பின்னுமவனொடு கலவி கருதிப் புலத்தல்.

வரலாறு. செவ்வாய்துடிப்ப. (௧௫)

### குறிப்பறிந்துபுலந்தமைகூறல் என்பது.

புலவிதீர்ந்து கலுழ்ந்து புணர்ந்து தானுமவனுமே யாய்ப்பள்ளியிடத் தாளாகிய தலைமகள், பின்னும் ஒருகுறிப்பு வேறுபாடு கண்டு புலந்து, இப்பள்ளி பலரைப் பொருதென்றிழிய, இப்பொழுது இவள் இவ்வாறிழிதற்குக் கருதிய குறிப்பென்னை கொல்லோ வென, உழையர் தம்முட் கூறாநிற்றல்.

வரலாறு. மலரைப்பொருவடி. (௧௬)

### வாயிலவர்வாழ்த்தல் என்பது.

செவ்வணி விடுக்கப், பூப்பியற் செவ்விகெடாமல் மெலிவறிந்து இவளது பொலிவோடு வந்தமையால், இவன்மெய்யே தக்கவாய்மைய னெனத், தலைமகனை வாயிலவர் வாழ்த்தல்.

வரலாறு. வில்லைப்பொலிநுதல். (௧௭)

### புனல்வரவுரைத்தல் என்பது.

தலைமகளுடன் மனைவயிற்றங்கி யின்புறுநின்றவன் தோள்களைப் பரத்தையர் பொருந்தி மகிழப், புதுப்புனல்வந்து பரந்தது, இனிப்புனலாட்டினால் இவன் காதலிபுலக்கும் போதுமென், வையத்தார் தம்முட் புனல்வரவு கூறாநிற்றல்.

வரலாறு. குன்முதிர் துள்ளும். (௧௮)

### தேர்வரவுகண்டுமகிழ்ந்துகூறல் என்பது.

புனல்வரவு கேட்ட தலைமகன், புனலாட்டு விழவிற்குப் பரத்தையர்சேரிக்கட் செல்லாநிற்ப, இவனைப் புணர்தற்குத் தக்க தவத்தினை முற்காலத்தே செய்தீர்கள், தேர்வந்து தோன்றிற்று, இனிச் சென்றிவன் தேரைத் தோய்மினெனத், தேர்வரவுகண்டு பரத்தையர் தம்முண் மகிழ்ந்துகூறல்.

வரலாறு. சேயேயெனமன்னு. (௧௯)

## புனல்விளையாட்டிற்றம்முளுரைத்தல் என்பது.

தலைமகனுடன் புனலாடாநின்ற பரத்தையர் சேடிமார் அரமங்கையரைப்போலப் புனலாடாநின்றா அவ்வவரேயென்று விளித்து, நாமெல்லாம் இத்தன்மையேமாக வானரமங்கையரென்று கூறுமாறு மற்றொருத்திவந்து இவனைத் திரித்துக்கொள்ளக் கொடுத்துப் பின் வருந்தாது முன்னுறக் காப்போமெனத் தம்முட்கூறல்.

வரலாறு. அரமங்கையரென. (௨௰)

## தன்னைவியந்துரைத்தல் என்பது.

சேடிமார் பின்வருந்தாது முன்னுறக் காப்போமென்று தம்முட் கூறுவதனைக் கேட்டு, இவனை யமைப்புல்லும் பரத்தையர் மாட்டிவனருள் செல்லாமல் விலக்கேனாயின், என் மாட்டிவனைத் தந்தழா நின்ற இவன் மனைக்கிழத்தியாகின்றேனெனப், பரத்தைத் தலைவி தன்னை வியந்துரைத்தல்.

வரலாறு. கனலூர் சணைதணை. (௨௧)

## நகைத்துரைத்தல் என்பது.

பரத்தைத்தலைவி தன்னை வியந்து கூறினாளென்று கேட்டதலைமகன், எங்கைச்சியார் தமக்குமொரு தங்கைச்சியார் தோன்றின பொழுதே தம் இறுமாப்பொழியத் தம்முடைய இணை முலைகளின் இறுமாப்பும் ஒழியப்புகாநின்றன. இதனை அறியாது தம்மைத்தாம் வியக்கின்ற தென்னோவெனப், பரத்தையைநோக்கி நகைத்துக் கூறுநிற்றல்.

வரலாறு. இறுமாப்பொழியுமன். (௨௨)

## நாணுதல்கண்டுமிகுத்துரைத்தல் என்பது.

தலைமகனைப்பரத்தையர் வசம் புனலாடவிட்டுச், சூடுவோரின்றிச் செப்பின்கண் இட்டடைத்துத் தமியேவைகும் பூப்போல் வாள், இஃது அவனுக்குத்தகாத பழியாமெனக்கருதி நாணிஅதனை மறைத்திருந்தமைகண்ட தோழி, இவளது கற்பும் நலனும் நல்லபகுதியையுடையனவாயிருந்தன வென, அவணலத்தை மிகுத்துக் கூறுநிற்றல்.

வரலாறு. வேயாதசெப்பின். (௨௩)



## பாணன்வரவுரைத்தல் என்பது.

நாளோடு தனியிருந்து வருந்துகின்ற தலைமகளுக்கு, இராப்பொழுதின் கட்சென்று திசைபைக்கட்கும் வாவல் இரை தேருங்காலமன்மையால், பகற்பொழுதின் கணுழையுமரம்போலுந் தமியோமையறியாது விறலியும் பாணனும் நம்வேந்தற்குத் துயிலெழுமங்கலம்பாடவந்து நின்றானெனத், தோழிபாணன் வரவுகூறல்.

வரலாறு. விறலியும் பாணனும். (௨௪)

## தோழியியற்பழித்தல் என்பது.

பாணன் வரவுரைத்த தோழி, இவள்வருந்த அயலாரிடத்து நல்குதலால், எம்முடையவள்ளல் இன்று தக்கிருந்திலனெனத், தலைமகனை யியற்பழித்தியம்பல்.

வரலாறு. திக்கினிலங்கு. (௨௫)

## உழையரியற்பழித்தல் என்பது.

தோழி தலைமகனையியற்பழித்துக் கூறுநிற்பக்கேட்டு, தன்மாட்டன்புடை நெஞ்சத்தையுடைய இவள் பேறற, இதற்குப் பிரியாமையின் வயலூரன் வரம்பிலனென், உழையர் அவனை யியற்பழித்துக் கூறுநிற்றல்.

வரலாறு. அன்புடைநெஞ்சத். (௨௬)

## இயற்படமொழிதல் என்பது.

தலைமகனை இயற்பழித்தவர்க்கு, அன்று நம்பொருட்டாக, நம்புனத்தின் கண்ணே மாந்தழையேந்தி வந்தார் இன்றென் நெஞ்சத்தின் கண்ணார், அதுகிடக்க, மறந்து உறங்கினேனாயின், அமளியிடத்து வந்தென்பயோ தரத்தைப் பிரியாதார், இத்தன்மையாரை நீங்கள் கொடுமை கூறுகின்றதென்னோவெனத், தலைமகள் அவனை இயற்படமொழிதல்.

வரலாறு. அஞ்சார் புரஞ்செற்ற. (௨௭)

## நினைந்துவியந்துரைத்தல் என்பது.

புனலாடப்பிரிந்த பரத்தையிடத்தொழுகாநின்ற தலைமகன், யான் தன்னை நினையாது வேறொன்றன் மேலுள்ளத்தைச் செலுத்தும் வழியுந்தானென்னை நினைந்து என்னுள்ளம் புகாநின்றாள், அவ்வாறன்றி யான் தன்னை நினையுந்தோறும் பள்ளத்துப் புகும் புனல்

போல நிறுத்தவில்லாதென் மனத்தாளாகாநின்றாள், ஆதலால் பிரிந்திருத்தல் மிகவும் அரிதென்த், தலைமகளை நினைந்து வியந்து கூறல்.

வரலாறு. தெள்ளம்புனற்கங்கை. (உஅ)

வாயில்பெறுதுமகன்றிறநினைதல் என்பது.

பரத்தையிற்பிரிந்து நினைவோடுவந்த தலைமகன், வாயிற் கணின்று, இத்தன்மையாளென்னை வந்தணைகின்றிலன், யானின்றி வண்டுறையுங் கொங்கையை யெவ்வாறு நண்ணுவதென்று வாயில்பெறுது மகன்றிற நினையாநிற்றல்.

வரலாறு. தேன்வண்டுறைதரு. (உகூ)

வாயிற்கணின்று தோழிக்குரைத்தல் என்பது.

வாயில் பெறுது மகன்றிற நினையாநின்ற தலைமகன், நல்ல நாட்டுப் பொலியும் மகளிர்தங் கண்ணிணையான் வந்த வச்சத்தால் வந்தமயக்கத்தால் உண்டாகிய வாட்டத்தை நீக்காத இவ்விரதம் யாதாமென, வாயில்வேண்டித் தோழிக்குக் கூறுநிற்றல்.

வரலாறு. சயல்வந்திகண்ணியர். (௩௦)

வாயில்வேண்டத் தோழிகூறல் என்பது.

வாயில்வேண்டிய தலைமகனுக்குப் பண்டுநீர் வரும்வழியிடை வருமேதமும் இருளும் எண்ணாது கன்னற அகன்ற வீற்றுவையொத்து எம்மாட்டுவருதிர், என்று எம்பொருந்தாதார் தெருவே அன்றெம்மாட்டு ஊர்ந்து வந்த தேர்மேலேறிப் போகாநின்றீர், இதுவன்றோ எம்மாட்டு நுமதருளெனத் தோழி அவன் செய்தி கூறுநிற்றல்.

வரலாறு. கூற்றுயினசினை. (௩௧)

தோழி வாயில்வேண்டல் என்பது.

தலைமகளுக்கு அவன் செய்தது கூறிச்சென்று, அன்று நம்புனத்தின் கண்ணே வந்தியானைகடிந்த விருந்தினர் தாம்தம் பெருமையை நினையாது இன்று நம்வாயிற்கண்வந்து, வேட்கைப்பெருக்கந் தம்மிடத்துச் சிறப்பநின்று ஒன்றும் வாய்திறக்கின்றிலர், இதற்கியான் செய்யுமாறென்னோவெனத், தலைமகளைத் தோழி வாயில்வேண்டல்.

வரலாறு. வியந்தலை நீர்வையம். (௩௨)



மனையவர் மகிழ்தல் என்பது.

தோழிவாயில்வேண்டத் தலைமகடுனித்த நோக்கங் கண்டு ஓகைகொண்டு செல்லவேண்டிக் காதலன் வந்தானென்றியம்பு மளவில், இவளுடைய காவியங்கண்கள் தழுநீர்ச்செவ்வியை வெளவுதல் கற்றனவென, மனையவர் தம்முண்மகிழ்ந்து கூறல்.

வரலாறு. தேவியங்கண்டிகழ். (௩௩)

வாயின் மறுத்துரைத்தல் என்பது.

மனையவர் துனிகண்டு மகிழாநிற்ப, இவனை நமக்குத்தந்தபின்னர் நம்முடைய ஆயத்தார் முன்னே நங்காதலரின்று நங்கடையைக் கண்டார், இதுவன்றோ நம்மாட்டவரருளெனத் தோழிக்குத் தலைமகள் வாயின் மறுத்துக்கூறல்.

வரலாறு. உடைமணிகட்டி. (௩௪)

பாணனொடு வெகுளல் என்பது.

தோழிக்கு வாயின்மறுத்த தலைமகள், நின்னிடத்து அவர் நீங்காத அருள் பெரியரென்று நீ சொல்லவேண்டுமோ, அது கிடக்க, கொற்சேரியிலூசிவிற்றுப், புலையா, எம்மில்லத்து நின்னுடைய நல்ல நல்ல பொய்யைப் பொருந்தி நிற்கலுற்றோ நீ போந்ததென, வாயில் வேண்டிய பாணனொடு வெகுண்டுகூறல்.

வரலாறு. மைகொண்ட கண்டார். (௩௫)

பாணன் புலந்துரைத்தல் என்பது.

தலைமகள் வெகுண்டு உரையாநிற்ப, நின்புருவம் செரிய, வாய் துடிப்ப, என்னை யெறிதற்குக் கல்லெடுக்கவேண்டா, நினது கரிய கண்களின் சிவப்பாற்றுவாயாக, நீ வெகுளப்படுவதன்று, நினக்குப் பல்லாண்டு செல்வதாக, யான் வேண்டியவிடத்துப்போக நின் அடியை வலங்கொள்ளாநின்றேனென, வாயில் பெறுமையிற் பாணன் புலந்துகூறல்.

வரலாறு. கொல்லாண்டிலங்கும். (௩௬)

விருந்தொடுசெல்லத் துணிந்தமைகூறல் என்பது.

வாயில்பெறுது பாணன்புலந்து நீங்க, யாவருக்கும் வாயினேராது வெகுண்டுரைத்தலால், தழல்வேல்போல் மிளிர்ந்து முத்தம் பயக்கும் இவளுடைய கண்கள், விருந்தொடு வந்தானென்று உரை

க்குமளவிற்பண்டை நிறமாகிய கருங்குவளையது செவ்விபரந்த, என்னமனையறக் கிழத்தியோவென இல்லோர் தம்முட்கூறல்.

வரலாறு. மத்தக்கரியுரி. (௩௭)

ஊடறணிவித்தல் என்பது.

விருந்தேற்றுக்கொண்ட தலைமகனுழைச்சென்று, நம்முடைய தோன்றலைத்தனக்குத் துணையாகக் கொண்டுவந்து தோன்றலால் நினதுளத்துக் கவற்சியை யொழிந்தினி நம்மரசற்குக்குற்றேவல் செய்வாயாகவெனத், தோழி அவளை ஊடறணிவியாநிற்றல்.

வரலாறு. கவலங்கொள் பேய்த்தொகை. (௩௮)

அணைந்தவழியூடல் என்பது.

தோழியரானூடறணிவிக்கப்பட்டுப் பள்ளியிடத்தாளாகிய தலைமகள், நீசெய்கின்ற விதனை யறியில் நின் காதலிமார் நின்னை வெகுள்வர், அதுகிடக்க, யாம் மேனி முழுதும் சிறுவனால் உண்டாக்கப்பட்ட பால்புலப்படூஉந் தன்மையையுடையேம், அதன்மேல்யாமும் நீ செய்கின்ற இக்கள்ளத்தை விரும்பேம், அதனால் எங்காலைத்தொடாதொழி எங்கையை விடுவாயாக வெனத், தலைமகன் தன்னை யணைந்தவழி யூடல்.

வரலாறு. சேருன்றிகழ்வயற். (௩௯)

புனலாட்டுவித்தமை கூறிப்புலத்தல் என்பது.

அணைந்தவழியூடாநின்ற தலைமகளூட றீராநின்ற தலைமகனோடிவர் செய்த பிழையெல்லாம் பொறுக்கலாம் பலருமறிய வொருத்தியைப் புனலாட்டுவித்து அது செய்யாதார்போல் வென்மனையின் கணிவர்வந்து நிற்கின்ற விஃதெனக் குப்பொறுத்த லரிதெனத் தணிக்கத் தணியாது பரத்தையைப் புனலாட்டுவித்தமை கூறிப் புலத்தல்.

வரலாறு. செந்தார் நறுங்கொன்றை. (௪௦)

கலவிகருதிப்புலத்தல் என்பது.

புனலாட்டுவித்தமைகூறிப் புலவாநின்ற தலைமகள், ஊடறீர்க்க நுதலுந் தோளுமுதலாயினவற்றைத் தைவந்து வருடித் தலையளி செய்யாநின்ற தலைமகனோடெம்முடைய் சிறிய வில்லின்கண் வந்தன்று நீயிர்செய்த தலையளி யெங்கட்கன்று வேண்டுதுமாயினும் இன்று உமது திருவருளெங்கட்கு நீயிர்வந்த வித்துணையுமமையும், வேறுநீயிர் தலையளி செய்யவேண்டுவதில்லையெனக், கலவிகருதிப் புலத்தல்.



வரலாறு. மின்றுன்னிய செஞ்சடை. (௪௧)

மிகுத்துரைத்தூடல் என்பது.

கலவிகருதிப் புலவாநின்ற தலைமகள், புணர்தல் உறுநின்ற தலைமகனுடனீர்விழுமிய நாட்டு விழுமிய நல்லூர்விழுமிய குடியுள்ளீர், வெம்போல்வாரிடத்திவ்வாறு புணர்தல் விரும்புதலுமக்கு விழுமிய வல்லவென, மிகுத்துரைத்தூடல்.

வரலாறு. செழுமியமாளிகை. (௪௨)

ஊடனீடவாடியுரைத்தல் என்பது.

தணிக்கத் தணியாது மிகுத்துரைத்துத் தலைமகண் மேன்மேலூடாநிற்ப, அன்றம் மலையிடத்துத் தன்னை யெய்துதற் கோருபாயமின்றி வருந்தாநிற்ப, யானுய்யும் வண்ணந் தன்னிணைமலர்க்கண்ணினதினிய நோக்கத்தைத்தந்தருளி யென்னைத் தன் வயமாக்கிய நம்பெண்ணமுதமதவன்று, இது நம்மை வருத்துவதோர் மாயமாமெனத் தன்னெஞ்சிற்கியம்பி யூடனீடத் தலைமகன்வாடல்.

வரலாறு. திரிந்தேனுயகின்ற. (௪௩)

துனியொழிந்துரைத்தல் என்பது.

ஊடனீடலால் தலைமகன் தாற்றுவாயில் கண்ட தலைமகள், அன்று நீக்குன்றிட்டத்து மிக்கவிருளின்கண்ணே அரிதிரண்டு யானை வேட்டஞ் செய்யுமதாகத்துத் தமது வேலே துணையாகவந்தியல்பைப் பொருந்திய வன்மை நமக்குத் தந்தவர்க்கின்று நாமுட்டம்படாது நிற்குமிந்நிலைமை யென்றுமெனத், துனியொழிந்தவனோடு புணர்ச்சிக் குடம்படாதுநிற்றல்.

வரலாறு. இயன்மன்னு மன்புதந். (௪௪)

புதல்வன்மேல்வைத்துப் புலவிதீர்தல் என்பது.

துனியொழித்துக் கூடிப் பிரிந்தவழிப் பின்னும் பரத்தை மாட்டுப் பிரிந்தானென்றுகேட்டுப் புலந்து வாயின் மறுக்க, வாயிற்கணின்று விளையாடுகின்றபுதல்வனை யெடுத்தணைத்துத் தம்பலமிட்டு முத்தங்கொடுத்து அது வாயிலாக்கொண்டு தலைமகன் செல்லாநிற்ப, அப்புதல்வனை வாங்கி யணைத்துக்கொண்டு, அவன் வாயிற்றம்பலந் தன்மெய்யிற் படுதலா னெல்லார்க்கும் பொதுவாகிய தம்பலத்தைக் கொண்டு வந்தோ நீ யெம்மைக் கொண்டாடுவது, அதுகிடக்க, இதனை நினக்குத்தந்தவா றியம்புவாயாகவெனப், புதல்வன்மேல் வைத்துத் தலைமகள் புலவிதீராநிற்றல்.

வரலாறு. கதிர்த்தகனகமன்றும். (௪௫)

### கலவியிடத்தூடல் என்பது.

புதல்வனைவாயிலாகப் புக்குப்புலவி தீர்த்துப் புணராநின்ற தலைமகனைத் தலைமகளொரு காரணத்தால் வெகுண்டவன் மார்பகத்து தைப்ப, அவ்வெகுடல் தீரவேண்டி அவனவள் காலைத்தன்றலைமேலேற்றுக்கொள்ள, அது குறையாகவவன் புலந்தழாநின்றமையை யவ்விடத்துழையர் தம்முட்கூறல்.

வரலாறு. சிலைமலிவாணுதல். (சுசு)

### முன்னிகழ்வுரைத்தூடறீர்த்தல் என்பது.

கலவியிடத்தூடியதலைமகளுக்கு, யாங்கொடிய நெறியைச் சென்று சிறிய வூரின் கண்மேயதட்பள்ளியினிச்செறிந்த மெல்லிய முலைகளென் மார்பிடைவந்தடர்க்கத் தங்கிய சிறிய துயிற்கு மாறு கண்டிலம், அதனை நீயுள்ளியுமறிதியோவென, முன்னிகழ்வுரைத்துத் தலைமகனவளை யூடறீராநிற்றல்.

வரலாறு. ஆறூர் சடைமுடி. (சுஎ)

### பரத்தையைக்கண்டமை கூறிப்புலத்தல் என்பது.

முன்னிகழ்வுரைத் தூடறீர்த்தின் புறப்புணர்ப்பட்ட தலைமகள், பிறர்க்கு நீயிவ்வாறின்பஞ் செய்தியென்றுகூற, நின்னையொழிய யான் வேறொருத்தியையுமறியேனென்ற தலைமகனுக்கு நின்பரத்தை போகாநின்றவள் நம்வாயிற்கணின்று தேருருட்டி விளையாடிய புதல்வனைக்கண்டு நின்மகனென்றுறையுற்றுத் தழுவ, நீயையுறவேண்டா, அவன் உன்மகன், உறவு மெய்யாகிய உறவே, ஈதும் உனதில்லமே ஈண்டுவருவாயாகவென்று யான் கூற, அதுகேட்டுத் தானாணிப்போயினள், யானவளையறியேனாக, நீ மாயங் கூறவேண்டுவதில்லையெனத், தான் பரத்தையைக் கண்டமைகூறிப் பின்னுமவனொடுபுலத்தல்.

வரலாறு. ஐயுறவரய்நம். (சுஅ)

### உதிமெடுத்துரைத் தூடறீர்த்தல் என்பது.

பரத்தையைக்கண்டமை கூறிப்புலந்து வேறுபட்ட தலைமகளுக்கு, இத்தன்மையளாயாவர்க்கு மூதியமாகலின், அன்பானன்றியருளாற் பரத்தையர்க்குந் தலையளி செய்யவேண்டுமன்றே, புறப்பெண்டிரைப்போலயாமவனொடு புலக்கற்பாலே மல்லேம், அவன் வரும்பொழுதெதிர்தொழுதும், போம்பொழுது புறந்தொழுதும், புதல்வனைப் பயந்திருக்கையன்றோ நமக்குக் கடனெனத், தோழி, தலைமகனதாகிய மெடுத்துரைத்தவளை யூடறீர்த்தவனோடு பொருந்தச் செய்யாநிற்றல்.

வரலாறு. காரணி கற்பகம். (சுகூ)

கற்பொழுக்கவியன் முற்றும்.

பொருளதிகாரம் முற்றும்.

---

நான்காவது.

## யாப்பதிகாரம்.

---

### உறுப்பியல்.

தற்சிறப்புப்பாயிரம்.

எலாந்தாமாக விருக்கும்பொருளெது
வதனடிமலர்தொழு தறைகுவன்யாப்பே.

என்பது,

பிருதிவிமுதலிய வைம்பெரும் பூதங்களு மவற்றுட்டோன்றிய சராசரங்களுமாக விருக்கும்பொரு ளெதுவோ அப்பொருளினடியாகிய மலரை வணங்கி யாப்பிலக்கணத்தைக்கூறுவேனென்க

நெடில்குறிறனியாநின்று மொற்றடுத்து
நடைபெறுநேரசை நால்வகையானே.

என்பது,

நெட்டெழுத்துத் தனித்தும், குற்றெழுத்துத் தனித்தும், நெட்டெழுத் தொற்றடுத்தும், குற்றெழுத் தொற்றடுத்தும் வருவது நேரசை.

வரலாறு. போதுசாந்தம் பொற்பவேந்தி
யாதிநாதற் சேர்வோர்
சோதிவானந் துன்னுவோரே. (க)

குறிலிணைகுறினெடி றனித்துமொற்றடுத்து
நெறிமையினான் காய்வருநிரையசையே.

என்பது,

குறிலிணைந்து தனித்தும், குறினெடிலிணைந்து தனித்தும், குறிலிணைந் தொற்றடுத்தும், குறினெடி லிணைந்தொற்றடுத்தும், வருவது நிரையசை.

வாலாறு. அணிதிகழ லசோகமர்ந் தருணெறி நடாத்திய
மணிதிக ழவிரொளி வரதனைப்
பணிபவர் பவநனி பரிசறுப்பவரே. (உ)

நேர் நேர் தேமா நிரைநேர்புளிமா
நிரை நிரை கருவிளம் நேர் நிரை கூவிள
மாகுநாற் சீரு மகவற்குரிய.

என்பது,

நேரசையும் நேரசையும் கூடினால் தேமா
நிரையசையும் நேரசையும் கூடினால் புளிமா
நிரையசையும் நிரையசையும் கூடினால் கருவிளம்
நேரசையும் நிரையசையும் கூடினால் கூவிளம்.

ஆகிய நான்குசீரும் ஆசிரியப்பாவிற்குரியன.

வரலாறு. குன்றக்குறவன் காதன் மடமகள்
வரையர மகளிரைப் புரையுஞ்சாயல
ளைய ளரும்பிய முலையள்
செய்ய வாயினள் மார்பினள் சுணங்கே. (௩)

ஈரசைநாற்சீ ரீற்றினுநேரசை
விளைந்துகாயெனவரல் வெண்பாக்குரிய.

என்பது,

இரண்டசையானாகிய நாற்சீரின திறுதியினும் நேரசையடைந்து, தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காயென மூன்றசையான் வருகிற நான்குசீரும், வெண்பாவிற்குரியன.

வரலாறு, யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாதவாறு. (௪)

நிரையசையடைந்து கனியெனநேர்வது
வஞ்சிக்குரியவாம் வழுத்துங்காலே.

என்பது,

இரண்டசையானாகிய நான்குசீரினதிறுதியினும் நிரையசையடைந்து தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி யென மூன்றசையான் வருகிற நான்குசீரும் வஞ்சிப்பாவிற்குரியன.

வரலாறு. பூந்தாமரைப் போதலமரத்
தேம்புனலிடை மீன்றிரிதரும்
வளவயலிடைக் களவயின்மகிழ்



வினைக்கம்பலை மனைச்சிலம்பவும்
மனைச்சிலம்பிய மணமுரசொலி
வயற்கம்பலைக் கயலார்ப்பவும், நாளும்,
மகிழுமகிழ்தூஉங்கூரன்,
புகழ்த லானாப் பெருவண்மையனே (௫)

தண்ணிழறண்பூ நறுமபூநறுநிழல்
புணர்ந்துவருவது பொதுச்சீராகும்.

என்பது,

தண்ணிழலடைந்து, தேமாந்தண்ணிழல், புளிமாந் தண்ணிழல், கருவிளந்தண்ணிழல், கூவிளந்தண்ணிழல் எனவும், தண் பூவடைந்து, தேமாந்தண் பூ, புளிமாந்தண் பூ, கருவிளந்தண் பூ, கூவிளந்தண் பூ எனவும், நறும் பூ வடைந்து தேமாநறும் பூ, புளிமாநறும் பூ, கருவிளநறும் பூ, கூவிளநறும் பூ எனவும், நறுநிழலடைந்து தேமாநறுநிழல், புளிமாநறுநிழல், கருவிளநறுநிழல், கூவிளநறுநிழல் எனவும் நான்கசையான்வருகிற பதினாறுசீரும் பொதுச் சீர்க்குரியன.

வரலாறு. அள்ளற்பள்ளத் தகன்சோணாட்டு
வேங்கைவாயின் வியன்குன்றூரன். (௬)

ஓரசைநின்றுஞ் சீராகும்மே.

என்பது,

நேரசைதனித்துநின்று நாள் எனவும், நிரையசை தனித்து நின்று மலர் எனவும், சீராகும்.

வரலாறு. பாலொடு தேன்கலந்தற் றேபனிமொழி
வாலெயிறூறிய நீர், நாள்,
நன்றறிவாரிற் கயவர்திருவுடையர்
நெஞ்சத்தவலமிலர், மலர். (௭)

காய்முன்னேரே வெண்சீர்வெண்டளை
மாமுன்னிரையும் விளமுன்னேரு
மியற்சீர்வெண்டளை யென்மனார்புலவர்.

என்பது,

காய்முன்னேர்வருவது வெண்சீர்வெண்டளை.

வரலாறு. யாதானு நாடாமாலூராமாலென்ஞெருவன்
சாந்துணையுங் கல்லாதவாறு.
மாமுன்னிரையும் விளமுன்னேரு
மியற்சீர்வெண்டளை.
வரலாறு. பா... மதுங்கலந்தற்றேபனிமொழி
வாலெயிறூறியநீர். (அ)

மாமுன்னேர் நேரொன்றியவகவற்
றளையாம்விள முன்னிரை நிரையொன்றிய
வகவற்றளை யாமாயுங்காலே.

என்பது,

மாமுன்னேர்வருவது நேரொன்றிய வகவற்றளை.

வரலாறு, போதுசாந்தம் பொற்பவேந்தி
யாதிநாதற்சேர்வோர்
சோதிவானந் துன்னுவோரே.
விளமுன்னிரைவருவது நிரையொன்றியவகவற்றளை
வரலாறு. அணிநிழல சோகமர்ந்தருணெறி நடாத்திய
மணிதிகழவி ரொளிவரதனைப்
பணிபவர்பவநனி பரிசறுப்பவரே. (க)

கனிமுன்னேரொன்று தவஞ்சித்தளை
யொன்றியதளை நிரைவரினாகும்மே.

என்பது,

கனிக்குமுன்னேர்வருவது ஒன்றுதவஞ்சித்தளை, நிரைவருவது
ஒன்றியவஞ்சித்தளை.

வரலாறு. பூந்தாமரைப் போதலமரத்
தேம்புனலிடை மீன்மிரிதரும்
வள்வயலிடைக் களவயின்மகிழ். (கo)

காய்முன்னிரைவரிற் கலித்தளையாகும்.

என்பது,

காய்க்குமுன்னர் நிரைவருவது கலித்தளை.



வரலாறு.

செல்வப்போர்க்கதக் கண்ணன்செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை... பமபா
யெல்லைநீர்வியன்கொண் மூவிடை...ழையு மதியம்போன்
மல்லலோங்கெழில் யா...ருமம்பாய்ந் தோளித்ததே. (கக)

பொதுச்சீர்ப்பூக் காயாகுநிழல்கனி
யாகுமென்மனா ரறிந்திசினோரே.

என்பது,

பூவிற்குமுன்னர் நேரசைவரின் வெண்சீர்வெண்டளை-நிரைய
சைவரிற்கலித்தளை - நிழலிற்குமுன்னர் - நிரையசை வரினொன்றி
ய வஞ்சித்தளை நேரசைவரினொன்றுதவஞ்சித்தளையாகும். (கஉ)

அகவற்சீரற் றுகுமோரசைச்சீர்.

என்பது,

நான்முன்னர் நேரசைவரின், நேரொன்றிய வகவற்றளை, நிரை
யசைவரின் இயற்சீர்வெண்டளை, மலர்முன்னர் நிரையசைவரின்,
நிரையொன்றிய வகவற்றளை, நேரசைவரின் இயற்சீர் வெண்டளை
யாகும்.

வரலாறு. வந்துழிக்காண்க. (கந)

இருசீரான்வரல் குறளடியெனவே.

என்பது,

அடிகடோறும் இரண்டுசீராகவருவது குறளடியாகும்.

வரலாறு. திரைத்தசாலிகை நிரைத்தபோனிரந்
திரைப்பதேன்கூளே விரைக்கொண்மாலையாய். (கச)

முச்சீரான் முடிவதுசிந்தடியே

என்பது,

அடிகடோறு மூன்று சீராகவருவது சிந்தடியாகும்,

வரலாறு. இருதவேற்றுமை யின்மையாற்
சுருதிமேற்றுறக்கத்திறை.
டரிது வேற்றுமையாகவே
கருது வேற்றடக்கையிறைய். (கரு)

நாற்சீரான்வர லளவடியாகும்.

என்பது,

அடிகடோறு நாலுசீராகவருவது அளவடியாகும்.

வரலாறு. உலகெலாமுணர்ந் தோதற்கரியவ
னிலவுலாவிய நீர்மலிவேணிய
னலகில் சோதியனம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்திவணங்குவாம். (கசு)

ஐஞ்சீரான்வரு வதுநெடிலடியே.

என்பது,

அடிகடோறுமைந்து சீராகவருவது, நெடிலடியாகும்.

வரலாறு. ஒழுகு தீம்புனற்சிறைசெய் மோதையுமுழுநர்
குழுவின் சும்மையுமுழத்தியர் குரவையினார்ப்புங்
கழனிவாழ்கெனவாண் முளைவித்துநர் கலிப்பு
மழைமுழக்கொடுமாறுகொண் டொலித்தனமாதோ.

அறுசீர்முதலா யிருசீரடிகடை
யாகவருவது கழிநெடிலாகும்.

என்பது,

ஆறுசீர் முதலாகப்பதின் சீரிறுதியாகவருவது, கழிநெடிலடியாகும்.

வரலாறு.

பூவாய் நெடுங்கோட்டுறுபசுந்தேன் கைகான்முடங்குபொறியிலிதன்
னுவாயொழுகிற்றெனவுலக மளந்தமாலு நான்முகனுங்
காவாயென நின்றேத்தெடுப்பத்தானே வந்தென் கரதலத்தின்
மேவாவமர்ந்த மாமணியைத்தொழுது விணைக்குவிடைகொடுப்பாம்.
பிறவும்வந்துழிக்காண்க. (கஅ)

வெள்ளைக்கிரண்டடி சிறுமையாகும்.

என்பது,

வெண்பாவிற்கு இரண்டடி சிறுமையாகும்.

வரலாறு. புறங்குன்றி கண்டனையரேனுமகங்குன்றி
மூக்கிற்கரியாருடைத்து. (கக)



அகவற்கொருமூன் றடிசிறுமையே.

என்பது,

ஆசிரியப்பாவிற்கு மூன்றடி சிறுமையாகும்.

வரலாறு. போதுசாந்தம் பொற்பவேந்தி
யாதிநாதர்சேர்வோர்
சோதிவானந் துன்னுவோரே. (உ0)

வஞ்சிப்பாவு மவற்றோரற்றே.

என்பது,

வஞ்சிப்பாவிற்கும் மூன்றடிசிறுமையாகும்.

வரலாறு. செங்கண்மேதி கரும்புழக்கி
யங்கணீலத் தலரருந்திப்
பொழிற்காஞ்சி நிழற்றுயிலுஞ், செழுநீர்,
நல்வயற்கழனியூரன்
புகழ்தலீனுப் பெருவண்மையனே (உக)

கலிப்பாவிற்கொரு நாலடிசிறுமை
யாகுமென்மனா ரறிந்திசினோரே.

என்பது,

கலிப்பாவிற்கு நான்கடி சிறுமையாகும்.

வரலாறு.

செல்வப் போர்க்கதக்கண்ணன் செயிர்த்தெறிந்தசினவாளி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போ
யெல்லை நீர்வியன்கொண் மூவிடைநுழையு மதியம்போன்
மல்லலோங்கெழில் யானைமருமம்பாய்ந் தொளித்ததே. (உஉ)

பெருமையுனாப்போன் பெற்றித்தாகும்.

என்பது,

நான்குபாவிற்கும்பெருமை கவி கூறுவோனறிவினளவேயாம்.
வரலாறு. வந்துழிக்காண்க. (உங)

அடிதொறுமுத லெழுத்தணைந்து வரலடி
மோனையென்மனார் முழுதுணர்ந்தோரே.

என்பது,

அடிதோறு முதலெழுத்தொன்றிவருவது, அடிமோனைத் தொடையாகும்.

வரலாறு. மாவும் புள்ளும் வதிவயிற்பட
மாநீர்விரிந்தபூவுங்கூம்ப
மாலைதொடுத்த கோதையுங்கமழ்
மாலைவந்தவாடை
மாயோளின்னுயிர்ப் புறத்திறுத்தற்றே. (உச)

இறுதியசையெழுத் தேனுமொன்றுவ
தடியியைபாமென வறையப்படுமே.

என்பது,

இறுதி அசையேனும் எழுத்தேனும் ஒன்றிவருவது அடியியைபுத்தொடையாகும்.

வரலாறு. இன்னகைத் துவர்வாய்க் கிளவியுமணங்கே
நன்மாமேனிச் சுணங்குமா ரணங்கே
யாடமைத்தோளி யூடலுமணங்கே
யரிமதர்மழைக்கணு மணங்கே
திருநுதற்பொறித்த திலகமுமணங்கே. (உரு)

இரண்டாமெழுத்தொன்றுவதெதுகையே.

என்பது,

அடிதோறும் இரண்டாமெழுத் தொன்றிவருவது அடி யெதுகைத் தொடையாகும்.

வரலாறு. காலாழ்களரினரி யடுங்கண்ணஞ்சா
வேலாண் முகத்த களிறு. (உசா)

முரணத்தொடுப்பது முரண்டொடையாகும்.

என்பது,

அடிதோறுந் தம்முண் மறுதலைப்படத் தொடுப்பது அடி முரண்டொடையாகும்.



வரலாறு. இருள்பரந்தன்னமா நீர்மருங்கி
னிலவுகுவித்தன்ன வெண்மணலொருசிறை
இரும்பினன்ன கருங்கோட்டுப்புன்னை
பொன்னினன்ன நுண்டாதுறைக்குஞ்
சிறுகுடிப்பரதவர் மடமகள்
பெருமதர் மழைக்கணு முடையவாலணங்கே. (உஎ)

அளபெடுத் தொன்றுவ தளபெடைத் தொடையே.

என்பது,

அடிதொறு மளபெடுத்துவருவது அடியளபெடைத் தொடையாகும்.

வரலாறு. ஓஒதல் வேண்டுமொளி மாழ்குஞ் செய்வினை
யாஅது மென்னுமவர். (உஅ)

அந்தமுதலாத் தொடுப்பதந்தாதி.

என்பது,

இறுதி யெழுத்தேனும் அசையேனும் சீரேனும் அடியேனும் மற்றோரடி முதலில் வருவது அந்தாதித்தொடையாகும்.

வரலாறு. உலகுடன் விளக்கு மொளிதிக ழவிர்மதி
மதிகவளனிக்கும் வள்ளெழுமுக்குடை
முக்குடைநீழற் பொற்புடையாசன
மாசனத்திருந்த திருந்தொளியறிவனை
யறிவுசேருள்ள மோடருந்தவம்புரிந்து
துன்னியமாந்த தென்ப
பன்னருஞ்சிறப்பின் விண்மிசையுலகே. (உகூ)

ஓரடிமுழுதுமொரு சொல்லேவரத்
தொடுப்பதிரட்டைத் தொடையெனப்படுமே.

என்பது,

ஓரடிமுழுவதும் ஒருசொல்லே வருவது இரட்டைத் தொடையாகும்.

வரலாறு. ஒக்குமே யொக்குமே யொக்குமே யொக்கும்
விளக்கினுட் சிறெறி யொக்குமே யொக்குங்
குளக்கொட்டிப் பூவினிறம். (௩௦)

செந்தொடை யொவ்வாத்திறத்தனவாகும்.

என்பது,

மோனைமுதலியன பிறவும் ஒவ்வாது வருவது செந்தொடையாகும்.

வரலாறு. பூத்தவேங்கை வியன் சினையேறி
மயிலினமகவுநாட
னன்னுதற்கொடிச்சிமனத்தகத்தோனே. (௬௧)

இணையிருசீர்மிசை யெய்துவதாகும்.

என்பது,

முதலிரு சீர்க்கண்ணு மோனை முதலியவைந்தும் வருவது இணைத் தொடையாகும்.

வரலாறு.

அணிமலரசோகின் றளிர்நலங் கவற்றி, இணைமோனை
மொய்த்துடன் றவழு முகிலே பொழிலே, இணையியைபு
பொன்னின் அன்ன பொறிசுணங் கேந்தி, இணையெதுகை
சிறடிப் பேரகல் அல்கு லொல்குபு, இணைமுரண்
தாஅட் டாஅ மரைமல ருழக்கி, இணையளபு. (௬௨)

பொழிப்பிடையிட்டுப் போதுவதென்ப.

என்பது,

முதற்சீர்க் கண்ணும் மூன்றாஞ் சீர்க்கண்ணும் மோனைமுதலாயின ஐந்தும் வருவது பொழிப்புத்தொடையாகும்.

வரலாறு.

அரிக்குரற் கிண்கிணி அரற்றுஞ் சீறடி, பொழிப்புமோனை
மற்றத னயலே முத்தூரழ் மணலே, பொழிப்பியைபு
பன்னருங் கோங்கி னன்னலங் கவற்றி, பொழிப்பெதுகை
சுருங்கிய நுசுப்பிற் பெருவடந் தாங்கி, பொழிப்புமுரண்
பூஉக் குவளைப்போ ஒதருந்தி, பொழிப்பளபு. (௬௩)

இருசீரிடையிட்டா தியுமந்தமு
மொன்றி னொரூஉவென்றுரைத்தினோரே.

என்பது,

நடுவிருசீர்க்கண்ணுமின்றி முதற்சீர்க்கண்ணும் ஈற்றுச் சீர்க்கண்ணும் மோனைமுதலாயின ஐந்தும்வருவது ஒரூஉத்தொடை.



வரலாறு.

அம்பொற் கொடிஞ்சி நெடுந்தேர் அகற்றி, ஒரூஉமோனை
கிழலே யினியத னயலது கடலே, ஒரூஉவியைபு
அன்னம் பயிலிய தாமரை அன்ன, ஒரூஉவெதுகை
குவிந்து சுணங் கரும்பிய கொங்கை விரிந்து, ஒரூஉமுரண்
காஅய்ச் செந்நெல் கறித்துப் போஒய், ஒரூஉவளபு. (௬௪)

இறுதிச் சீரொழித்தெல்லாந் தொடுப்பது
கூழையென்மனார் குறிப்புணர்ந்தோரே.

என்பது,

ஈற்றுச் சீர்க்கணின்றி ஒழிந்தமூன்று சீர்க்கண்ணு மோனைமுதலாயின ஐந்தும் வருவது கூழைத்தொடை.

வரலாறு.

அகன்ற அல்குல் அந்நுண் மருங்குல், கூழைமோனை
மாதர் நகிலே வல்லேயியலே, கூழையியைபு
கன்னிற மென்முலை மின்னிடை வருத்தி, கூழையெதுகை
சிறிய பெரிய நறுமலர்க் கோதை, கூழைமுரண்
மாஅத் தாஅண் மோஒட் டெருமை, கூழையளபு. (௬௫)

முதலயற்சீரொழித் தேனையசீரெலா
மியையத்தொடுப்பது மேற்கதுவாயே.

என்பது,

முதலயற் சீர்க்கணின்றி ஒழிந்த மூன்று சீர்க்கண்ணு மோனை முதலாயின ஐந்தும் வருவது மேற்கதுவாய்த்தொடை.

வரலாறு.

அரும்பிய கொங்கை அவ்வளை அமைத்தோள், மேற்கதுவாய்மோனை
வில்லே நுதலே வேற்கண் கயலே, மேற்கதுவாயியைபு
என்னையும் இந்நக்கண் துன்றவித் தின்னடை, மேற்கதுவாயெதுகை
வெள்வளைத் தோளுஞ் சேயரிக் கருங்கணும், மேற்கதுவாய் முரண்
தேஎம்புனலிடைச் சேஎர்பாஅல், மேற்கதுவாயளபு. (௬௬)

ஈற்றயற்சீரொழித் தெல்லாந்தொடுப்பது
கீழ்க்கதுவாயின் கிழமையதாகும்.

என்பது,

ஈற்றயற் சீர்க்கணின்றி ஒழிந்தமூன்று சீர்க்கண்ணு மோனைமுதலாயின ஐந்தும் வருவது கீழ்க்கதுவாய்த்தொடை.

வரலாறு.

அவிர்மதி அனைய திருநுதல் அரிவை, கீழ்க்கதுவாய் மோனை
பல்லே தளவம் பாலே சொல்லே, கீழ்க்கதுவாயியைபு
அன்ன மென்பெடை போலப் பன்மலர், கீழ்க்கதுவாயெதுகை
இருக்கையு நிலையு மேந்தெழி லியக்கமும், கீழ்க்கதுவாய்முரண்
மீஇனு அர்ந்துகளுஞ் சீஇர், கீழ்க்கது வாயளபு. (கூஎ)

முழுவது மியைவது முற்றெனப்படுமே.

என்பது,

நாற்சீர்க்கண்ணும் மோனைமுதலாயின ஐந்தும் வருவது முற்றுத்தொடை.

வரலாறு.

அயில்வேல் அனுக்கி அம்பலத்து அமர்ந்த, முற்றுமோனை
புயலே குழலே மயிலே யியலே, முற்றியைபு
கன்னியம் புன்னை யின்னிழற் றுன்னிய, முற்றெதுகை
துவர்வாய்த் தீஞ்சொலு முவந்தெனை முனியா, முற்றுமுரண்
ஏஎ ராஅ னீஇ ரூஉரன்; முற்றளபு. (கூஅ)

உறுப்பியன்முற்றும்.

இரண்டாவது,

## செய்யுளியல்.

வெண்பாவளவடி வேண்டப்படுமே.

என்பது.

வெண்பாவெல்லாம் ஓரடி நாற்சீரான் வரப்பெறும்.

வரலாறு. நுனிக்கொம்பரேறினார் அஃதிறந்தூக்கின்
உயிர்க்கிறுதியாகிவிடும்.

அவற்றுள்,

உரத்தெழு செப்பலோசையைத்தழுவி
யிரண்டடியாயீற்றடி முச்சீர்
யொருவிகற்பானு மிருவிகற்பானும்
வருவதுகுறள் வெண்பாவெனப்படுமே.



என்பது,

முற்கூறியவற்றுள் குறள்வெண்பா உரத்தினின்றெழுகின்ற செப்பலோசையைத்தழுவி இரண்டடியாய் ஈற்றடி மூச்சீராய் ஒருவிகற்பானும் இருவிகற்பானும் வருவது.

வரலாறு. கற்றதனாலாய பயனென்கொல்வாலறிவ
னற்றாடொழா அரெனின், ஒருவிகற்பு
யாதானு நாடாமாலூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாதவாறு, இருவிகற்பு. (உ)

இடையிற்றனிச் சொற்பெற்றிருகுறளா
யொருவிகற்பானு மிருவிகற்பானும்
வருவது நேரிசைவெண்பாவாகும்.

என்பது,

இரண்டுகுறள் வெண்பாவாக நடுவிற்றனிச் சொற்பெற்று ஒருவிகற்பானும் இருவிகற்பானும் வருவது நேரிசை வெண்பாவாகும்.

வரலாறு. திருமுடியிற் கண்ணியுமாலையும் பாம்பு
திருமார்பிலாரமும் பாம்பு, பெருமான்,
திருவரையிற் கட்டிய கச்சையும்பாம்பு
பொருப்புயத்திற் கங்கணமும்பாம்பு, ஒருவிகற்பு,
நீலமணிமிடற்றனீண்ட சடைமுடிய
னூலணிந்த மார்பனுதல் விழியன், தோலுடையன்,
கைம்மான்மறியன் கனன்மழுவன் கச்சாலை
யெம்மானிமையோர்க்கிறை, இருவிகற்பு. (ங)

தனிச்சொலின்றி யொருவிகற்பானும்
தனிச்சொலின்றி யிருவிகற்பானும்
தனிச்சொலின்றிப் பலவிகற்பானும்
தனிச்சொற்பெற்றுப் பலவிகற்பானும்
தனிச்சொன் மூன்றுமடியிற்றழுவி
யிருவிகற்பானும் வருவதின்னிசையே.

என்பது,

தனிச்சொலின்றி யொருவிகற்பானும், தனிச்சொலின்றி யிருவிகற்பானும், தனிச்சொலின்றிப் பலவிகற்பானும், தனிச்சொற்பெற்றுப் பலவிகற்பானும், தனிச்சொல் மூன்றுமடியிற் பெற்றுவருவது இன்னிசை வெண்பாவாகும்.

வாலாறு. துகடீர்பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றெட்டுப்
பகடுநடந்தகூழ் பல்லாரோடுண்க
வகடுறயார்மாட்டு நில்லாது செல்வஞ்
சகடக்கால்போலவரும், ஒருவிகற்பு
உயர்நிலத்திற்பிறந்த வுப்பிலாச்சான்றோர்
விளைநிலத்தி னெல்லின் விழுமிதாக் கொள்வர்.
கடைநிலத்தோராயினுங் கற்றுணர்ந் தோரைத்
தலைநிலத்துள் வைக்கப்படும், பலவிகற்பு
பிறவும் வந்துழிக்காண்க. (௪)

அடியடிதோறுந் தனிச்சொற்பெற்று
வருவதுமதனியல்பாமென மொழிப.

என்பது,

அடிகடோறுந்தனிச்சொற்பெற்றுவருவதுஇன்னிசைவெண்பா.

வாலாறு. மழையின்றி மாநிலத்தார்க்கில்லை, மழையும்,
தவமிலானில் வழியில்லை, தவமும்,
அரசிலானில்வழியில்லை, அரசனும்,
இல்வாழ்வா னில்வழியில். (௫)

நேரிசைபோல விரண்டாமடியிற்
றனிச்சொற்பெற்றொரு விகற்பத்தானுந்
தனிச்சொற்பெற்றிரு விகற்பத்தானு
மூன்றடியாக முடிவதுநேரிசைச்
சிந்தியலென்மனார் தெளிந்திசினோரே.

என்பது,

நேரிசைவெண்பாவைப்போல இரண்டாமடியிற் றனிச்சொற் பெற்று மூன்றடியாக ஒருவிகற்பானும் இருவிகற்பானும் வருவது நேரிசைச் சிந்தியல் வெண்பாவாகும்.

வாலாறு. அறிந்தானையேற்றி யறிவாங்கறிந்து
சிறந்தார்க்குச் செவ்வனுரைப்பச், சிறந்தார்
சிறந்தமையாராய்ந்து கொண்டு, ஒருவிகற்பு,
நற்கொற்றவாயி னறுங்குவளைத் தார்கொண்டு
சுற்றும்வண்டார்ப்பப் புடைத்தானே, பொற்றேரான்
பாலை நல்வாயின்மகள், இருவிகற்பு. (௬)

இன்னிசைபோலத் தனிச்சொலின்றி
யொருவிகற்பானும் பலவிகற்பானும்
வருவதின்னிசைச் சிந்தியலாகும்.



என்பது,

இன்னிசை வெண்பாவைப்போலத் தனிச்சொலின்றி மூன்றடியாக ஒருவிகற்பானும் பலவிகற்பானும் வருவது இன்னிசைச் சிந்தியல்வெண்பாவாகும்.

வாலாறு. நறுநீல நெய்தலுங் கொட்டியுந் தீண்டிப்
பிறநாட்டுப் பெண்டிர் முடிநாறும்பாரி.
பறநாட்டுப்பெண்டிரடி, ஒருவிகற்பு,
சுரையாழவம்மி மிதப்பவரையானை
யானைக்கு நீத்து முயற்குநிலையென்ப
கானகநாடன்சுனை, பலவிகற்பு. (எ)

இருகுறள்சவலை யொருவிகற்பாகும்.

என்பது,

இரண்டுகுறள் வெண்பாவாக ஒருவிகற்பொடு வருவது சவலை வெண்பாவாகும்.

வாலாறு. திருமுடியிற் கண்ணியுமாலையும்பாம்பு
திருமார்பிலாரமும் பாம்பு
திருவரையிற் கட்டிய கச்சையும்பாம்பு
பொருபுயத்திற் கங்கணமும்பாம்பு. (அ)

பாதம்பலவரிற் பஃறொடையாகும்.

என்பது.

நான்கடிக்குமேல் எழடியிறுதியாகவருவது பஃறொடைவெண்பாவாகும்.

வாலாறு. சேற்றக்கானிலஞ் செருவென்ற வேல்வேந்தன்
கூற்றுறழ்மொய்ம்பிற்பகழி பொருகயல்
தோற்றந்தொழில்வடிவு தம்முற்றமோறும்
வேற்றுமையின்றியே யொத்தனமாவேட
ராற்றுக்கா லாட்டியர்கண். (கூ)

அடிவரையின்றித் தனிச்சொற்பெற்றும்
பெறாதும்வருவது கலிவெண்பாவே.

என்பது,

எண்ணிறந்த வடிகளையுடைத்தாய் தனிச்சொற்பெற்றும் பெறாதும் வருவது கலிவெண்பாவாகும்.

**வாலாறு.** வந்துழிக்காண்க. (௯௦)

நேர்நாணிரை மலர்தே மாக்காசு
புளிமாப்பிறப் பெனப்புகலப்படுமே.

என்பது,

நேரசையிறின் நாளெனவும், நிரையசையிறின் மலரெனவும், தேமாவிறின் காசெனவும், புளிமாவிறின் பிறப்பெனவும் பெயர்பெறும்.

**வாலாறு.** பாலொடு தேன்கலந்தற் றேபணிமொழி
வாலெயிறூறிய நீர், நாள்,
கற்றதனலாய பயனென்கொல்வாலறிவ
னற்றொடொழா அரெனின், மலர்,
தோன்றிற்புகழொடு தோன்றுகவஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று, காசு,
அகரமுதலவெழுத் தெல்லாமாதி
பகவன்முதற்றே யுலகு, பிறப்பு. (௯௧)

செப்பலோசையிற் சிறக்கும்வெண்பாவே.

என்பது,

வெண்பாச் செப்பலோசையைப்பெறும். (௯௨)

அதுதான்,

ஏந்திசை தூங்கிசையொழுகிசை யெனவொரு
மூன்றுவகைப்படு மொழியுங்காலே.

என்பது,

அச்செப்பலோசை ஏந்திசைச் செப்பலெனவும், தூங்கிசைச் செப்பலெனவும், ஒழுகிசைச் செப்பலெனவும் மூன்றுவகைப்படும்.

வெண்சீர்வெண்டளையான் வரும்பாவே
ஏந்திசைச் செப்பலென்மனார் புலவர்.

என்பது,

வெண்சீர் வெண்டளையான் வருஞ்செய்யுள் ஏந்திசைச் செப்பலோசையாகும்.



**வாலாறு.** யாதானு நாடாமா லூராமாலென்னொருவன்
சாந்துணையுங் கல்லாதவாறு. (௯௪)

இயற்சீர்வெண்டளையான் வரும்பாவே
தூங்கிசையாமெனச் சொல்லப்படுமே.

என்பது,

இயற்சீர் வெண்டளையான் வருஞ்செய்யுள் தூங்கிசைச் செப்பலோசையாகும்.

**வாலாறு.** பாலொடுதேன் கலந்தற்றே பணிமொழி
வாலெயிறூறியநீர். (௯௫)

வெண்சீரியற்சீர் விரவியொழுகுவ
தொழுகிசையென்மனாருணர்ந்திசினோரே.

என்பது,

வெண்சீர் வெண்டளையும் இயற்சீர் வெண்டளையும் விரவிவருஞ்செய்யுள் ஒழுகிசைச் செப்பலோசையாகும்.

**வாலாறு.** கற்றதனலாய பயனென்கொல்வாலறிவ
னற்றொடொழா அரெனின். (௯௬)

இரண்டடியா யீற்றடிசீர்குறைநவுஞ்
செந்துறைப்பாட்டிற் சிதைந்துவருநவுஞ்
சந்தழிகுறளுந் தாழிசைக்குறளே.

என்பது,

இரண்டடியாய் முதலடியளவிற்கு இறுதியடியொரு சீரோனுஞ்சிலசீரோனுங் குறைந்து வருவனவும் செந்துறைப்பாவிற் சிதைந்துவருவனவும் குறள் வெண்பாவிரேசை கெட்டுவருவனவும் குறட்டாழிசையாகும்.

**வாலாறு.**

நண்ணுவார்வினைநைய நாடொறு நற்றவர்க் கரசாய ஞானநற்
கண்ணினுனடியை யடைவார்கள் கற்றவரே, ஈற்றடிகுறைவு
பிண்டியினீழற் பெருமான் பிடர்த்தலை [தைவு
மண்டிலந்தோன்று மால்வாழியன்றாய், குறட் செந்துறைச்சி
வண்டார் பூங்கோதை வரிவளைக்கைத் திருநுதலாள்
பண்டைய ளல்லள்படி, குறள் வெண்பாவிற் சிதைவு. (௯௭)

தம்முள்ளளவொத்த ளவடியிரண்டாய்
விழுமியபொருளு மொழுகியவோசையு
மாய்வரல்குறள்வெண் செந்துறையாகும்.

என்பது;

தம்முளளவொத்து நாற்சீரடி யிரண்டாய் விழுமிய பொருளும் ஒழுகிய வோசையுமாய் வருவது குறள்வெண் செந்துறை யாகும்.

வரலாறு. கொன்றை வேய்ந்த செல்வ னடியிணை
யென்றுமேத்தித் தொழுவோமியாமே. (௧அ)

மூன்றடியாயீற்றடி முச்சீராய்
வருநவுமொரு பொருண்மேன் மூன்றடுக்கி
வருநவும் வெள்ளொத் தாழிசையாகும்.

என்பது,

மூன்றடியாய் ஈற்றடி முச்சீராகவருவனவும் ஒரு பொருண் மேன் மூன்றடுக்கவருவனவும் வெண்டாழிசையாகும்.

வரலாறு. நண்பிதென்று தீயசொல்லார்
முன்புநின்று முனிவுசெய்யார்
அன்புவேண்டுபவர். ஈற்றடிமுச்சீர்
அன்றுயறங்கொனலங்கிளர் சேட்சென்னி
யொன்றுருடைபுறம்போல நலங்கவர்ந்து
துன்றுன்றுறந்துவிடல்.
ஈடியறங்கொனலங்கிளர் சேட்சென்னி
கூடாருடைபுறம்போல நலங்கவர்ந்து
நீடான்றுறந்துவிடல்.
பாவாயறங்கொனலங்கிளர் சேட்சென்னி
மேவாருடைபுறம்போல நலங்கவர்ந்து
காவான்றுறந்துவிடல். ஒரு பொருண்மேன் மூன்றடுக்கு. (௧௯)

மூன்றடிமுதலாயேழடி காறும்வந்
தீற்றடிசிற்சில சீர்தபகிற்பினும்
வேற்றொலிவிரவினும் வெண்டுறையாகும்

என்பது,

மூன்றடிமுதல் ஏழடியிறுதியாகவும்வந்து சிலசீர் ஈற்றடியிற் குறைந்துவரினும் வேற்றொலிவிரவினும் வெண்டுறையாகும்.



வரலாறு.

தாளாளரல்லாதார் தாம்பல ராயக்காலென்னுமென்னும்
யாளியைக்கண்டஞ்சி யானையதன்கோடிரண்டும்
பீலிபோற்சாய்ந்து விடும்பிளிற்றியாங்கே. பிறவும்வந்தழிக்காண்க.

அளவடியாய் நான்கடி மூன்றடியா
யடியடிதோறும் தனிச்சொற்பெற்று
வருவதுவெளி விருத்தம் மாகும்மே.

என்பது,

நாற்சீரடி நான்கடியேனும் மூன்றடியேனும் வந்து அடிக டோறுந் தனிச்சொற்பெற்று வருவது வெளிவிருத்தமாகும்.

வரலாறு.

ஆவாவென்றேயஞ்சின ராழ்ந்தாரொருசாரார்
கூகூவென்றே கூவிளிகொண்டா ரொருசாரார்
மாமாவென்றே மாய்ந்தனர் நீந்தாரொருசாரார்
ஏகீர்நாகிரொன்செய்த மென்றாரொருசாரார்.
மூன்றடி வந்தழிக்காண்க. (௨௧)

அகவலோசை யொடுமள வடித்தாய்
வருவதகவற் பாவெனமொழிப.

என்பது,

அகவலோசையைத் தழுவி நாற்சீரடியாக வருவது ஆசிரியப் பாவாகும். (௨௨)

அதுதான்.

ஈற்றயலடிமுச் சீராய்வருவது
நேரிசையகவற் பாவாகும்மே

என்பது,

அவ்வாசிரியப்பா ஈற்றுக்கயலடி மூன்று சீராகவருவது நேரிசை யகவற்பாவாகும்.

வரலாறு. போதுசாந்தம் பொற்பவேந்தி
யாதிநாதற் சேர்வோர்
சோதிவானந் துன்னுவோரே. (௨௩)

எல்லாவடியுமொத்து நினிலமண்டில
வகவலென்மனார் அறிந்திசினோரே.

என்பது,

அடிகளெல்லா மொத்துவருவது நிலமண்டில வகவற்பாவாகும்.

வரலாறு. கடம்பணி தொடையன் மிடைந்த தடந்தோள்
வன்றிறலெஃக மேந்தியவலவன்
கொன்றையன் சடிலத்தரசான் மன்ற
பற்றினர்பையுட் பற்றிதென்னே. (உ௪)

ஆதியுமந்தமு மளவடியாகி
குறளடிசிந்தடி யென்றாங்கிரண்டு
மிடைவரலிணைக்கு றளாசிரியம்மே.

என்பது,

முதலடியும் கடையடியும் நாற்சீரடியாய் இடையடி இருசீரடியும் முச்சீரடியுமாய் வருவது இணைக்குறளகவற்பாவாகும்.

வரலாறு. நீரின்றண்மையுந் தீயின்வெம்மையுஞ்
சாரச் சாரச் சார்ந்து
தீரத்தீரும்
சாரனுடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத்தீரத் தீர் துர் பொல்லாதே. (உ௫)

மூன்றடிமுதலா முடிந்தெலாவடியு
மிடைகடைமுதலா யெடுத்தானு
மோசையும்பொருளு முவைாதுவருவன
வடிமறிமண்டிலவ கவலாகும்மே.

என்பது,

மூன்றடிமுதலாகப் பலவடிகளானு முடிந்தெல்லாவடிகளையு முதலிடைகடையாக வைத்துக்கூறினு மதனோசையும் பொருளுங் கெடாது வருவது அடிமறி மண்டிலவக வற்பாவாகும்.

வரலாறு. தீர்த்தமென்பது சிவகங்கையே
மூர்த்தியம்பலக் கூத்தனதுருவே
யேத்தருந்தல மெழிற்புலியூரே. (உ௬)



மூன்றடி யொத்துவருவது மொருபொருண்
மேன்மூன்றடுக்கி வருவதுமகவற்
றாழிசையாமெனச் சாற்றப்படுமே.

என்பது,

மூன்றடியாக மூன்றடியுமொத்து வருவதும் ஒரு பொருண்மேன் மூன்றடுக்கிவருவதும் அகவற்றாழிசையாகும்.

வரலாறு. வானுறநிமிர்ந்தனை வையகமளந்தனை
பான்மதிவிடுத்தனை பல்லுயிரோம்பினை
நீனிறவண்ண நின்னிறை கழறெழுதனம், தனி
கன்றுகுணிலாக்கனி யுகுத்தமாயவ
னின்றுநம்மானுள் வருமேலவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோதோழி,
பாம்புகயிறாக்கடல் கடைந்தமாயவ
னீங்குநம்மானுள் வருமேலவன்வாயி
லாம்பலந்தீங்குழல் கேளாமோதோழி;
கொல்லையஞ் சாரற்குருந் தொசித்தமாயவ
னெல்லிநம்மானுள் வருமேலவன்வாயின்
முல்லையந்தீங்குழல் கேளாமோதோழி. (உ௭)

அளவடியாயீற்றயலடி குறைநவு
மீற்றயலடி குறைந்திடை மடக்காக
வருநவுமிடையிடை குறைந்துவருநவு
மிடையிடைகுறைந்திடை மடக்காய்வருநவு
மகவற்றுறையென வறையப்படுமே.

என்பது,

நான்கடியாயீற்றயலடி குறைந்துவருவதும் ஈற்றயலடி குறைந்திடை மடக்காகவருவதும் இடையிடை குறைந்துவருவதும் இடையிடை குறைந்திடை மடக்காகவருவதும் அகவற்றுறையாகும்.

வரலாறு.

களைபொருகான் யாற்றங்கல்லத ரெம்முள்ளிவரு வீராயின்
அளையிருள்யாமத்தடுபுலியே றஞ்சியகன்றுபோக
நளையுறுமோ நுங்கைவேலஞ் சுதறும்மை
வளையரமங்கையர் வெள்வுதலஞ் துமவாரலேயோ.
பிறவும் வந்துழிக்காண்க. (உ௮)

கழிநெடிலடி நான்கொத்தி றினகவல்
விருத்தமென்மனார் மெய்யுணர்ந்தோரே.

என்பது,

ஆறுசீர் முதல் பதின்சீரிறுதியாகிய கழி நெடிலடி நான்கடியா யொத்துவருவது அகவல் விருத்தமாகும்.

வரலாறு.

பையரவணிந்த வேணிப் பகவனேயனையதங்க
ளையனும் வியாழப்புத்தேளா யிடையடைந்தானகச்
செய்யதாள்வழி பாடின்றித் தேவர்கோ னிருந்தானந்தோ
னைதயலார் மயலிற் பட்டார் தமக்கொருமதிதானுண்டோ.
பிறவும் வந்துழிக்காண்க. (௨௧)

அகவலேந்திசைய கவறூங்கிசை
யகவலொழுகிசை யகவன்மூவகைப்படும்.

என்பது,

அகவலோசை யேந்திசையகவலும் தூங்கிசையகவலும் ஒழுகிசையகவலு மென மூன்றுவகைப்படும். (௩௦)

அவற்றுள்,

நேரொன்றாசிரியத் தளையான்வர
லேந்திசையகவ லெனப்படுமெனலே.

என்பது,

முற்கூறியவற்றுள் நேரொன்றாசிரியத் தளையான் வருவது ஏந்திசையகவலோசையாகும்.

வரலாறு. போது சாந்தம் பொற்பவேந்தி
யாதிநாதற் சேர்வோர்
சோதிவானந் துன்னுவோரே. (௩௧)

நிரையொன்றாசிரியத் தளையான்வரல்
தூங்கிசையகவலெனச் சொலப்படுமே.

என்பது,

நிரையொன்றாசிரியத் தளையான் வருவது தூங்கிசைய கவலோசையாகும்.

வரலாறு. அணிநிழல் அசோகமர்ந்தருணெறி நடாத்திய
மணிதிகழவி ரொளிவரதனைப்
பணிபவர் பவநனி பரிசறுப்பவரே. (௩௨)



இவ்விருதளையும் பிறவுமயங்கி
வருவதொழுகிசையாம் வழுத்திடினே.

என்பது,

நேரொன்றியவகவற்றளையும் நிரையொன்றிய வகவற்றளையும் பிறதளைகளும் விரவிவருவது ஒழுகிசையகவலோசையாகும்.

வரலாறு. குன்றக்குறவன் காதன்மடமகள்
வரையரமகளிர்ப் புரையுஞ்சாயல
ளையளரும்பிய முலையள்
செய்யவாயினள் மார்பினள் சுணங்கே. (௩௩)

அளவடியாய்த் துள்ளலமைந்துவருவது
கலியாமென்மனார் கற்றுணர்ந்தோரே.

என்பது,

அடிநாற்சீராய் துள்ளலோசையை யுடைத்தாய்வருவது கலிப்பாவாகும். (௩௪)

அதுதான்,

தரவுதாழிசைதனிச் சொற்சுரிதக
மெனுநான் குறுப்பினதொத் தாழிசைக்கலி.

என்பது,

அக்கலிப்பாவினுள் ஒருதரவும் மூன்றுதாழிசையும் தனிச்சொல்லுமாகிய நான்குறுப்போடும் வருவது, நேரிசையொத் தாழிசைக் கலிப்பாவாகும்.

வரலாறு.

வாணெடுங்கண்பனி கூரவண்ணம் வேறாய்த்திரிந்து
தோணெடுந்தகைதுறந்து துன்பங்கூர் பசப்பினவாற்
பூணெடுங்கு முலைகண்டும் பொருட்பிரிதல் வலிப்பவோ
சூருடைய கடுங்கடங்கள் சொலற்கரிய வென்பவாற்
பீருடைய நலந்தொலையப் பிரிவரோபெரியவரோ
சேணுடையகடுங் கடங்கள் செலற்கரியவென்பவா
நாணுடைய நலந்தொலைய நடப்பரோ நல்லவரோ
சிலம்படைந்தவெங்கானஞ் சிலவேயென்பவாற் [கு
புலம்படைந்த நலந்தொலையப்போவரோபொருளிலரே,எனவாங்
அருளொனு மிலராய்ப் பொருள்வயிற்பிரிவோர்
பணநெடுங்காலமும் வாழியர்
பொன்னெடுந்தேரொடுந் தானையிற்பொலிந்தே. (௩௫)

அளவடி சிந்தடி குறளடியாகு
மசையடியாகிய வம்போதரங்க
வுறுப்பைத்தாழிசை தனிச்சொற்கிடையிற்
கொண்டுதரவு தாழிசையம்போ
தரங்கந்தனிச்சொற் சுரிதகமென்னு
மைந்துறுப்பொடும் வரலம்போதரங்க
வொத்தாழிசைக கலியென முறைதரினே.

என்பது;

நாற்சீரடியும் முச்சீரடியும் இருசீரடியும் ஆகியவம்போதரங்க வுறுப்பைத் தாழிசைக்குந் தனிச்சொற்கு நடுவிற்கொண்டு தரவுதாழிசை அம்போதரங்கம் தனிச்சொல் சுரிதகமாகிய ஐந்துறுப்பையு முடைத்தாய் வருவது அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பாவாகும்.

வரலாறு.

கெடலரு மாமுனிவர் கிளர்ந்துடன் றொழுதேத்தக்
கடல் கெழுகனை சுடரிற் கலந்தொளிரும் வாலுளைய
வழலவிர் சுழல் செங்கணரி மாவாய் மலைந்தானைத்
தாரொடு முடிபிறத்த மணியப் பொடிபொங்க
வார்புனல் விழி குருதியகலிட முடனனைப்பக்
கூருகிரான் மார்பிடந்த கொலைமலி தடக்கையோய்
முரசதிர் வியன்மதுரை முழுவதுந் தலைபனிப்பப்
புரைதொடித் திரடிண்டோள் போர்மலைந் தமரமன்னர்
அடியொடு முடியிறப் புண்டயர்ந் தயர்நிலஞ்சேரப்
பொடியொடு வெங்களத்துப் புடைத்தது நின்புகழாமோ
கலியொலி வியனுலகங் கலந்துட னனி நடுங்க
வலியியல விராழிமா றெறிந்த மருட்சோர்வு
மாணுதா ருடம்பொடு மறம்பிதிர வெதிர்கலங்கிச்
சேணுய ரிருவிசும்பிற் செகுத்தது நின்சினமாமோ
படுமணி யினநிரைகுள் பரந்துட னிரிந்தோடக்
கடுமுர ணெதிர் மலைந்த காரொலி யெழிலேறு
வெரிகொடு மருப்பொசிய வீழ்ந்து திறம்வேறாக
வெருமலி பெருந்தொழுவி னிறுத்தது நின்னிகலாமோ
இலங்கொளி மரகத மெழின்மிகு வியன்கடல்
வலம்புரித் தடக்கைமா அனின் னிறம்
விரியிணர்க் கோங்கமும் வெந்தெரி பசும்பொனும்
பொருகளிறட் டோய் புரையு நின்னுடை
கண்கவர் கதிர்முடி கனலுஞ் சென்னியை
தண்சுடருறுபகை தவிர்த்த வாழியை
யொலியியலுவண மோங்கிய கொடியினை



வலிமிகு சக்கடமாற்றிய வடியினை.
போரவுணர்க் கடந்தோய்நீ
புணர்மருதம் பிளந்தோய் நீ
நீரகல மளந்தோய் நீ
நிழறிகழும் படையோய் நீ.
ஊழிநீ யுலகுநீ யுருவநீ யருவுநீ
யாழிநீ யருளுநீ யறமுநீ மறமுநீ.

எனவாங்கு,

அடுதிறலொருவ நிற்பரவுதுமெங்கோன்
றொழுகடற்கொடும்பூட் பகட்டெழின்மார்பிற்
கயலொடுகலந்த சிலையுடைக்கொடுவரி
புயலுறழ்தடைக்கப் போர்வேலச்சுதன்
றொன்றுமுதிர் கடலுலகமுழுது
மொன்றுபுரிதிகிரி யுருட்டுவோனெனவே. (௩௬)

தாழிசையம் போதரங்கக்கிடையே
யாரகமடைந்து முன்றரவுதாழிசை
யாரகமம்போதரங் கந்தனிச்சொற்
சுரிதகமாறொடு தோன்றுவவண்ணக
வொத்தாழிசைக் கலியாமுறைதரினே.

என்பது,

அம்போதரங்கத்துக்கும் தாழிசைக்கும் நடுவே அராகவுறுப்புப் பெற்றுத் தரவு தாழிசை அராகம் அம்போதரங்கம் தனிச்சொல் சுரிதகம் ஆகிய ஆறுறுப்போடும் வருவது வண்ணகவொத்தாழிசைக் கலிப்பாவாகும்.

வரலாறு.

விளங்குமணிப்பசும் பொன்னின் விரித்தமைத்துக் கதிர்கான்று
துளங்குமணிக் கனைகழற்கார்றுறுமலர் நறும்பைந்தார் [றுங்
பருஉத்தடக்கை மதயானைப் பணையெருத்தின் மிசைத்தோன்
குரூஉக்கொண்ட மணிப்பூணோய் குறையிரந்து முந்நாட்கண்
மாயாதவனப்பினையாய் மகிழ்வார்க்கு மல்லார்க்குந்
தாயாகித்தலையளிக்குந் தண்டுறையூரகேள்.
காட்சியாற்கலப்பெய்தி யெத்திறத்துங் கதிர்ப்பாகி
மாட்சியாற்கறியாதமர பொத்தாய்கரவினாற்
பிணிநலம்பெரிதெய்திப் பெருந்தடந்தோள்வனப்பழிய
வணிநலந்தனியே வந்தருளுவதமருளாமோ.
அன்பினலமிழ்தளை இயற்றிவினாற்பிறிதின்றிப்
பொன்புனைபூணகம் ப்சப்பெய்தப் பொழிலிடத்துப்·

பெருவரைத்தோளருளுதற் கிருளிடைத்தமியையாய்க்
கருவரைத்தோள் கதிர்ப்பிக்குங் காதலுங்காதலோ.
பாங்கனையேவாயிலாப் பல்காலும்வந்தொழுகும்
தேங்காதகாவினையுந் தெளியாதவிருளிடைக்கட்
குடவரைவேய்த்தோளிணைகள் குளிர்ப்பிப்பான்றமியையாத்
தடமலர்த்தாரருளுகின்றகுதியுந்தகுதியோ.
தாதுறமுறிசெறி தடமலரிடையிடைத் தழலெனவிரி
வனபொழில், போதுறுநறுவிரை புதுமலர்தெரிதரு
கருநெய்தல்விரிவனகழி, தீதுறுதிறமறுகெனகனி
முனிவனதுணையொடு பிணைவனதுறை, மோதுறு
மொலிகலிநுரைதரு திரையொடுகழி தொடர்புடையதுகடல்.
கொடுந்திறலுடையன சுறவேறுகோட்பதனு
விடுங்கழியிராவருதல் வேண்டாவென்றிசைத்திலமோ,
கருநிறத்துறதொழிற்கராம் பெரிதுடைமையா
விருணிறத்தொருகானி விராவாரலென்றிலமோ.
நாணொடுகழிந்தன்றாற் பெண்ணரசிநலத்தகையே
துஞ்சலுமொழிந்தன்றாற் றொடித்தோளிதடங்கண்ணே;
அறற்றொடுகழிந்தன்றா லாரிருளுமாயிழைக்கே
நயப்பொடுகழிந்தன்றானனவது நன்னுதற்கே,
அத்திறத்தாலசைந்தன தோளலர்தற்குமெலிந்தனகண்
பொய்த்துரையாற்புலர்ந்தது முகம்பொன்னிறத்தாறபோர்த்த
அழலினுலசைந்தனநகையணியினுலொசிந்ததிடை [னமுலை
குழலினுனிமிர்ந்ததுமுடிகுறையினுற் கோடிற்றுநிறை
உட்கொண்ட தகைத்தொருபா லுலகறிந்தவலற்றொருபால்
கட்கொண்டறளித் தொருபால் கழிவெய்தும் படிற்றொருபால்
பரிவுறூஉந்தகைத் தொருபால் படிவுறூஉம் பசப்பொருபால்
இரவுறூஉந்துயரொருபால் இளிவந்தவெணிற்றொருபால்
மெலிவுறூஉந்தகை யொருபால் விளர்ப்புவந்தடைந்தொருபால்
பொலிவுசென்றகன் றொருபால்பொறைவந்து கூர்ந்தொருபால்
காதலிற் கதிர்ப்பொருபால் கட்படாத் துயரொருபால்
ஏதில் சென்றணைந்தொருபாலியலணிற் செறிவொருபால். எ.
இன்னதிவ்வழக்க மித்திறமிவனல [னவாங்கு,
மென்னவுமுன்னுட் டுன்னுயாகிற்
கலந்தவணிலைமை யாயினுநலந்தகக்
கிளையொடுகெழீஇ இயதளைய்விழ் கோதையைக்
கற்பொடுகொணியம் யாமே
பொற்பொடுபொலிக நும்புணர்ச்சிதானே. (கூஎ)

தரவுக்கொச்சக மொருதர வொடுபோதரும்.

என்பது,

ஒருதரவொடு வருவது தரவுக்கொச்சக் கலிப்பாவாகும்.



வரலாறு.

செல்வப் போர்க்கதக் கண்ணன் செயிர்த்தெறிந்தசினவாளி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போ
யெல்லைநீர்வியன் கொண்மூவிடை நுழைய. மதியம்போன்
மல்லலோங்கெழில் யானைமருமம் பாய்ந்தொளித்ததே (கூஅ)

தரவிணைக்கொச்சகந் தானிருதரவொடு
தனிச்சொற்சுரி தகந் தழுவியும் வருமே.

என்பது,

இரண்டுதரவும் தனிச்சொல்லும் சுரிதகமும் ஆகிய மூன்று றுப்போடும் வருவது தரவிணைக் கொச்சகக் கலிப்பாவாகும்.

வரலாறு.

வடிபடுவெவ் வேறிகழ மதராரிய நெடுந்தடங்கட்
கொடிபுனைந்தான் விற்சேவற் கொடிபுனைந்தா னீதென்னே
கடிபடுதண்டார் விரவுங்கரிய குழற்குறவர் குலம்
ஒடிவினெடுந்தவ நெறிகூர்ந்துயங்கியதாலஞ்ஞான்று
மிடிபடு நுண்ணிடைதயங்கு மின்னுரைமணந்துமென்னும்
படிபடுநீ ளருண்முறையாற் பயிலுமண மாமன்றே. (கூகூ)

தரவொரு தாழிசை மூன்று தனிச்சொற்
சுரிதக நான்கின வாகுஞ்சிஃறாழிசை.

என்பது,

ஒரு தரவும் மூன்று தாழிசையும் தனிச் சொல்லும் சுரிதகமு மாகிய நான்குறுப்போடும் வருவது சிஃறாழிசைக்கொச்ச கக்கலிப் பாவாகும்:

வரலாறு.

பரூஉத்தடக்கை மதயானைப்பணை யெருத்தின்மி
சைத்தோன்றிக், குரூஉக்கொண்ட வெண்குடைக்கீழ்க்
குடை மன்னர் புடை சூழப், படைப் பரிமான்றேரி
னொடும் பரந்துலவு மறுகினிடைக், கொடித்தா
னையிடைப் பொலிந்தான் கூடலார் கோமானே,
ஆங்கொரு சார், உச்சியார்க் கிறைவனு யுலகமெல்
லாங் காத்தளிக்கும், பச்சையா மணிப்பைம் பூட்
புரந்தரனைப் பாவித்தார், வச்சிரங் காணாத காரண
த்தான் மயங்கினரே. ஆங்கொரு சார், அக்கால
மணி நிரை காத்தருவரையாற் பனிதவிர்த்து
வச்சிரனை வடிவழித்த மாயவனைப் பாவித்தார்

சக்கரங் காணாத காரணத்தாற் சமழ்த்தனரோ,
ஆங்கொரு சார், மால்கொண்ட பகை தணிப்பான்
மாத்தடிந்து மயங்காச் செங், கோல் கொண்ட்
சேவலங் கொடியவனைப் பாவிததார், வேல் கொண்
டதின்மையால் விம்மிதராய் நின்றனரோ. அஃதான்று,
கொடித்தேரண்ணல் கொற்கைக் கோமான்
நின்புகழொருவன் செம் பூட்சேஎ
யென்று நனியறிந்தனர் பலரே தானு
மைவரு ளொருவனென் றறியலாகா
மைவரை யானை மடங்காவென்றி
மன்னவன் வாழி யென்றேத்தத்
தென்னவன் வாழி திருவொடும் பொலிந்தே. (௪௦)

தரவொன்று தாழிசையாறு தனிச்சொற்
சுரிதக நான்கின வாம்பஃறாழிசை.

என்பது,

ஒரு தரவும் ஆறு தாழிசையும் தனிச்சொல்லும் சுரிதகமும் ஆகிய நான்குறுப்போடும் வருவது பஃறாழிசைக் கொச்சகக்கலிப் பாவாகும்.

வரலாறு.

தண்மதி யேர்முகத்தாளைத் தனியிடத்து நனி கண்டாங்
குண்மதியு முடைநிறையு முடன்றளர முந்நாட் கண்
கண்மதி யொப்பிவை யின்றிக் காரிகையை நிறை கவர்ந்து
பெண் மதியின் மகிழ்ந்த நின் பேரருளும் பிறிதாமோ.
இளநல மிவள் வாட விரும்பொருட்குப் பிரிவாயேல்
தளநல முகைவெண்பற் றாழ்குழ றளர்வாளே,
தகைநல மிவள் வாடத் தரும்பொருட்குப் பிரிவாயேல்
வகைநலமிவள்வாடி வருந்தியில்லிருப்பாளோ,
அணிநலமிவள் வாடவரும்பொருட்குப் பிரிவாயேல்
மணிநலமகிழ்மேனி மாசோடுமடிவாளே.
நாம்பிரியே மினியென்று நறுநுதலைப்பிரிவாயேல்
ஓம்பிரியோ மெனவுரைத்த வுயர்மொழியும்பழுதாமோ.
குன்றளித்ததிரடோளாய் கொய்புனத்திற் கூடியநாள்
அன்றளித்தவருண் மொழியாவருளுவதுமருளாமோ,
சிலபகலுமொழியக்காற் சிலம்பொலிச் சீறடிபரவிப்
பலபகலுந்தலையளித்த பணிமொழியும்பழுதாமோ.
எனவாங்கு, அரும்பெறலிவளினுந் தரும்பொருளத
னினும், பெரும்பெறலரியன வெறுக்கையுமற்றே,
அதனால், விழுமியதறிமதிவாழி,கெழுமியகாதலிற்றரும் பொரு
ள்சிறிதே. (௪௧)



மயங்கிவருவது மயங்கிசைக் கொச்சகக்
கலியாமென்மனார் கற்றுணர்ந்தோரே.

என்பது,

தரவுமுதலிய வாறுறுப்பையும் பெற்று முறைமாறி வருவது மயங்கிசைக் கொச்சகக்கலியாகும்.

வரலாறு வந்துழிக்காண்க. (௪௨)

கலித்தளை தட்டுக்கலியொலி விரவியும்
வெண்டளை தட்டு வெள்ளொலி தழுவியு
மீற்றடிசிந்தடியாய் வரல்வெண்கலிப்
பாவாமெனப்பெயர் பகரப்படுமே.

என்பது,

கலித்தளைவிரவிக் கலியோசையைத் தழுவியும் வெண்டளை விரவி வெள்ளோசையைத் தழுவியும் ஈற்றடிமுச்சீரான் வருவது வெண்கலிப்பாவாகும்.

வரலாறு.

வாளார்ந்த மழைத்தடங்கண் வனமுலைமேல்வம்பணுங்கக்
கோளார்ந்தபூணாகங் குழைபுரளக் கோட்டெருத்தின்
மாலைதாழ்கூந்தலார்வரன் முறையான் வந்தேத்தச்
சோலைதாழ்பிண்டிக் கீழ்ச்சூழ்ந்தவர் தஞ்சொன்முறையான்
மனையறமுந் துறவறமு மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும்
வினையறுக்கும் வகைதெரிந்து வீடொடுகட்டிவையுரைத்த
தொன்மைசால்கழி குணத்தெந்துறவரசைத் தொழுதேத்த
நன்மைசால் வீடெய்துமாறு. (௪௩)

துள்ளலேந்திசை பிரிந்திசையகவ
லெனமூவகைப்படு மென்மனார்புலவர்.

என்பது,

முற்கூறியவற்றள் துள்ளலோசை, எந்திசைத்துள்ளலும் பிரிந்திசைத்துள்ளலும் அகவற்றுள்ளலு மெனமூவகைப்படும் (௪௪)

ஏந்திசைத்துள்ள லியைபின்கலித்தளை.

என்பது,

கலித்தளையான் வருஞ்செய்யுள் ஏந்திசைத்துள்ள லோசையாகும்.

வரலாறு.

திருவனையசரு நெடுங்கட்சிலை நுதலார் மயல்வலையி
லிருநிலக்கண் விழுந்துழலு மெளியவனை யெடுத்தன்பிற்
பொருவரிய நினதடியாற் புகழுரைத்துத் தினமகக்கட்
பரவவருள்புரிவாய் கொல் பசுபதி யெம்பெருமானே (சரு)

வெண்டளைதன்றளை விரவிவருவது
பிரிந்திசைத்துள லெனப்பேசப்படுமே.

என்பது,

வெண்சீர் வெண்டளையும் கலித்தளையும் விரவிவருஞ் செய்யுள் பிரிந்திசைத்துள்ள லோசையாகும்.

வரலாறு.

வாளார்ந்த மழைத்தடந்தண் வனமுலைமேல் வம்பணுங்கக்
கோளார்ந்த பூணுகங் குழைபுரளக் கோட்டெருத்தின். (சசு)

இவ்விருதளையும் பிறவுமயங்கித்
தொடருவதகவற் றுள்ளலாமெனலே.

என்பது

வெண்சீர் வெண்டளையும் கலித்தளையும் பிறதளைகளும் விரவிவருவது அகவற்றுள்ள லோசையாகும்.

வரலாறு. நேரலர் பேரோறே கிடதத்தார்கோமானே
யாரவரை மார்பாவடி யேனுயிர்க்குயிரோ
காரிருளில் யான்புலம்பக் கானகத்தில் விட்டகன்று
சாலையாயின்னுமிதுவோ நின்றண்ணளியே (சஎ)

இரண்டியாயீற் றடிநீண்டிசைப்பது
கலித்தாழிசையெனக் கருதப்படுமே.

என்பது,

இரண்டடியாக ஈற்றடி நீண்டொலிப்பது கலித்தாழிசையாகும்,



வரலாறு.

வாயிற்சிவப்பைவிழிவாங்கமலர்க்கண் வெளுப்பைவாய்வாங்கத்
தோயக்கலவியமுதளிப்பீர் தூங்கக்கபாடந் திறமினோ (சஅ)

ஒருபொருண்மேன்மூன் றடுக்கியிரண்டடி
யாகவருவஃ ததன்சிறப்பாகும்.

என்பது,

முற்கூறிய கலித்தாழிசை யிரண்டடியாய் ஒருபொருண்மேன் மூன்றடுக்கி வருவது சிறப்பாகும்.

வரலாறு.

கொய்தினை காத்துங் குழவியடுக்கத்தெம்
பொய்தற் சிறுகுடில் வாரனீயைய நலம்வேண்டின்
ஆய்தினைகாத்து மருவியடுக்கத்தெம்
மாசில்சிறுகுடில் வாரனீயையநலம் வேண்டின்.
மென்றினைகாத்து மிகுபூங்கமழ்சோலைக்
குன்றச்சிறுகுடில் வாரனீயைய நலம்வேண்டின். (சக)

ஐஞ்சீரடிநான் காயளவொத்து
வருவதுகலித்துறையாம் வழுத்திடினே.

என்பது,

ஐஞ்சீரடி நான்காகத் தம்முளளவொத்து வருவது கலித்துறையாகும்.

வரலாறு.

விலகி வில்லுமிழ் விரிகதிர் மணிபல வரன்றிப்
பொலன்முகட்டியர் பொன்னெடுங் குன்றின் வீழருவி
குலவு வெண்டிரைக் குரைகட லுடுத்த பாரிடந்தை
யலர்முலைத்தலைத்துயல் வருமார மொத்துள்தால் (ருo)

அளவடிநான்காய் வரல்கலிவிருத்தம்.

என்பது,

நாற்சீரடி நான்காகத் தம்முளளவொத்து வருவது கலிவிருத்தமாகும்.

வரலாறு.

உலகெலா முணர்ந் தோதற்கரியவ
னிலவுலாவிய நீர்மலி வேணிய
னலகில் சோதியனம் பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம். (ருக)

தூங்க லிசையனவஞ்சி மற்றவை
குறளடி சிந்தடி கொடு வருமெனலே.

என்பது,

தூங்கலோசையை யுடையனவாயிரு சீரடியும் முச்சீரடியும் பெற்று வஞ்சிப்பாவரும். (ருஉ).

இருசீரடி யெனைத்தானும் வந்து
தனிச்சொற் பெற்றகவற்சுரி தகத்தால்
வருவது குறளடி வஞ்சியாகும்.

என்பது,

இரு சீரடி பல வடியானும் வந்து தனிச்சொற் பெற்று அகவற்சுரி தகத்தால் வருவது குறளடி வஞ்சிப்பாவாகும்.

வரலாறு. பூந்தாமரைப் போதல மரத்
தேம்புன லிடைமீன் றிரிதரும்
வளவய லிடைக்கள வயின்மகிழ்
வினைக் கம்பலை மனைச் சிலம்பவு
மனைச் சிலம்பிய மண முரசொலி
வயற் கம்பலைக் கயலார்ப்பவும், நாளும்,
மகிழு மகிழ்தூஉங் கூரன்
புகழ்தலானுப் பெரு வண்மையனே. (ருங)

சிந்தடியாகத் தனிச்செற் பெற்றே
அகவற்சுரிதகத் தாலேமுடிவது
சிந்தடிவஞ்சியாஞ் செப்புங்காலே.

என்பது,

முச்சீரடியாகப் பலவடிவந்து தனிச்சொனடுவிற்பெற்று ஆசிரியச் சுரிதகத்தான் முடிவது சிந்தடிவஞ்சிப்பாவாகும்.



வரலாறு. கொடியவாலன குருகிறத்தன குறுந்தாளன
வடிவாலெயிற் றழலுளையனவள்ளுகிரன
பணையெருத்தி னிணையரி மானணையேறித
துணையிலாத்துறவு நெறிக்கிறைவனாகி
யெயினவெணினிதிருந் தெல்லோர்க்கும் [னத்
பயில்படுவினைபத் திமையிற்சொன்னோன் புணையெ
திருவுறுதிருந்தடி திசைதொழ
விரிவுறுநாற்கதி வீடுகனியெளிதே. (ருச)

தூங்கலேந்திசை பிரிந்திசையகவ
லாகுமென்மனா ரறிந்திசினோரே.

என்பது,

தூங்கலோசை, ஏந்திசைத்தூங்கலும், பிரிந்திசைத் தூங்கலும், அகவற்றூங்கலுமென மூன்றுவகைப்படும்.

வரலாறு. ஒன்றியவஞ்சித் தளையானெழுகுவ
தேந்திசைத் தூங்கலெனப்படுமெனலே.

என்பது,

ஒன்றியவஞ்சித் தளையான் வருஞ்செய்யுள் ஏந்திசைத் தூங்கலோசையாகும்.

வரலாறு. வளவயலிடைக் களவயின்மகிழ். (ருரு)

ஒன்றாதவஞ் சித்தளையானவருவது.
பிரிந்திசைத் தூங்கலெனப் பெயர்பெறுமே.

என்பது,

ஒன்றாதவஞ்சித்தளையான் வருவது பிரிந்திசைத் தூங்கலோசையாகும்.

வரலாறு. பூந்தாமரைப் போதலமர. (ருசு)

இவ்விருதளையும் பிறவும் விரவித்
தொடருவதகவற் றூங்கலாமெனலே.

என்பது,

ஒன்றியவஞ்சித்தளையும் ஒன்றாதவஞ்சித்தளையும் பிறதளைகளும் விரவிவருவது அகவற்றூங்கலோசையாகும்.

வாலாறு. பூந்தாமரைப் போதலமரத்
தேம்புனலிடை மீன்றிரிதரும்
வளவயலிடைக் களவயின்மகிழ். (நுஎ)

குறளடி நான்கா யொருபொருண் மேன் மூன்
றடுக்கி வருவது வஞ்சித்தாழிசை.

என்பது,

இருசீரடி நான்காய் ஒரு பொருண் மேன் மூன்றடுக்கி வருவது வஞ்சித்தாழிசையாகும்.

வரலாறு.

மடப்பிடியை மதவேழந் தடக்கையான் வெயின் மறைக்கு
மிடைச்சுர மிறந்தார்க்கே நடக்குமென் மனனே காண்
பேடையை யிரும்போத்துத் தோகையான் வெயின் மறைக்
கூட மிறந்தார்க்கே போமென் மனனே காண் [குங்
இரும்பிடியை யிகல்வேழம் பெருங்கையான் வெயின் மறைக்கு
மருஞ் சுரமிறந்தார்க்கே விரும்புமென் மனனே காண். (நுஅ)

இருசீரடி நான்காய் வரல் வஞ்சித்
துறையாமெனப் பெயர் சொல்லப்படுமே.

என்பது,

இருசீரடி நான்காய் வருவது வஞ்சித் துறையாகும்.

வாலாறு. காமருசித்த, சாமலிட்டத்திற்
போமனல் சொற்ற, சீர்மை யுரைப்பாம். (நுகூ)

சிந்தடி நான்காய்ச் செல்வது வஞ்சி
விருத்தமென் மனார் மெய்யுணர்ந்தோரே.

என்பது,

முச்சீரடி நான்காய் வருவது வஞ்சி விருத்தமாகும்.

வரலாறு.

ஒட்டனென் றனையும் பருஞ், சிட்டனென்று கொள் சித்தனை
துட்டனென்று சுளித்தனர், வெட்டிருந்தட மேவினர். (சுo)

புறநிலை கைக்கிளை யென்றிப் பொருண்மிசை
வெண்பா முதல்வந் தகவல் பின் வருவது
மருட்பாவெனப் பெயர் வைக்கப்படுமே.



என்பது,

புறநிலை கைக்கிளை ஆகிய பொருள்களைக் கொண்டு வெண்பா முதலில் வந்து அகவல் பின்னாக வருவது மருட்பாவாகும்.

வாலாறு.

தென்றலிடை போழ்ந்து தேனார் நறுமல்லை
மென்றின் முகை விரியு முத்த நீர்த்-தண் கோனூர்க்
குன்றமர்ந்த கொல்லேற்றானிற் புறங்காப்ப
வென்றுந் தீரா நண்பிற் றேவர்
சீர்சால் செல்வமொடு பொலிமதி சிறந்தே. (சுக)

6-3-53

செய்யுளியன் முற்றும்.

---

மூன்றாவது.

# ஒழிபியல்.

தனையுஞ்சீருந் தபவரிற்குறுகிய
இ, உ, ஐ, யு மிசைபெறுவென்ப.

என்பது,

தளையும் சீரும் கெடவருங்கால் குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஐகாரக்குறுக்கமும் அலகுகாரியம் பெறுவாம்.

வரலாறு.

சிறுநன்றி யின்றிவர்க்கியாஞ் செய்தக்காலனை, குற்றியலிகரம்,
கொன்றுகொடுநீடு குருதிபாயவும், குற்றியலுகரம்
அன்னையையானேவ தவமாம், ஐகாரக் குறுக்கம். (க)

அளபெடையாவியு மவற்றோரற்றே.

என்பது,

உயிரளபெடையும் அலகுகாரியம் பெறுவாம்.

வரலாறு.

நூறே நூறென்பானுடைக் கடைமருங் கிற்றடிக்கும். (உ)

ஆய்தமுமொற்றுமள பெழநிற்புழி
வேறலகெய்தும் விதியினவாகும்.

என்பது,

ஆய்தமும் மெய்யும் அளபெடைப்புழிக் குற்றெழுத்தின் பயத்த வாம்.

வரலாறு. எஃஃகிலங்கிய கையராயின்னுயிர்
வெஃஃகுவார்க்கில்லை வீடு, ஆய்தம்.
கண்ண்கருவிளை கார்முல்லை கூரெயிறு, மெய். (௩)

விட்டிசைத் தல்லாவிடின் முதற்றனிக்குறி
னேரசையாகாதென் மனார்புலவர்.

என்பது,

விட்டிசைத்து நின்றவழியல்லது விட்டிசையாதவழி மொழி முதற்கணின்ற தனிக்குறில் நேரசையாகாவாம்.

வரலாறு. உன்னுனெளி நிறுனைக்குபுகழ் செய்யான்
றுன்னருங்கேளிர் துயர்களையான்-கொன்னே
வழங்கான்பொருள் காத்திருப்பானேல் அ ஆ
விழந்தானென் றெண்ணப்படும். (௪)

முதனிலை யளபெடை நேர் நேராங் கடை
நிலையள பெடை நிரை நேராகும்மே.

என்பது,

தனிநிலையளபெடை - நேர் நேராகும், இறுதி நிலையளபெடை நிரை நேராகும்.

வரலாறு. ஏஎர்சிதைய-முதனிலையளபு, வழாஅ லெழாஅல், இறுதிநிலையளபு. (௫)

மாச்சீர் கலியுள் வரப்பெறுவென்ப.

என்பது,

தேமா புளிமா ஆகிய சீரிரண்டும் கலிப்பாவினுட் புகாவாம். (௬)

வரலாறு. வந்துழிக் காண்க.

விளங்கனி கலிப்பாவினுட் புகாவெனவே.

என்பது,

கருவிளங்கனி கூவிளங்கனி ஆகிய விரண்டும் கலிப்பாவினுட் புகாவாம். (௭)



அகவலிடத்து மடையப் பெறுமே.

என்பது,

மூற்கூறிய கருவிளங்கனி கூவிளங்கனி ஆசிரியப்பாவினுட் புகாவாம். (௮)

இவை நீங்கிய சீரெல்லா மயங்கும்.

என்பது,

இவை யொழிந்த சீர்களெல்லாம் எல்லாப் பாவினுள்ளும் மயங்கும். (௯)

எல்லாத் தளைகளு மிவற்றோ ரற்றே.

என்பது,

எல்லாத்தளைகளும் எல்லாப் பாவினுள்ளும் எல்லாப் பாவினத் துள்ளும் வந்து மயங்கும். (௧௦)

வெண்பாவில் வஞ்சி விரவப் பெறுவே.

என்பது,

எல்லாச் சீரும் எல்லாப் பாவினுள்ளும் பாவினத்துள்ளும் வந்து மயங்கப் பெறு மென்றாராயினும் வஞ்சிச் சீர் நான்கும் வெண்பா வினுட் புகப் பெறாவாம். (௧௧)

வெண்பா வயற்றளை விரும்பா தொழுகும்.

என்பது,

வெண்பா இயற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்டளை யும் அன்றி வேற்றுத்தளை விரவப் பெறாவாம். (௧௨)

இயற்றளை வெள்ளடி வஞ்சியின் பாதம்
அகவற் பாவினுளடையப் பெறுமே.

என்பது,

இயற்சீர் வெண்டளையான் வந்த வெண்பா வடியும் வஞ்சியடி யும் ஆசிரியப் பாவினுள் வந்து மயங்கும். (௧௩)

வஞ்சியுளகவலடி கலியடியும்
விரவிவரப் பெறும் விளம்புங்காலே.

என்பது,

வஞ்சிப் பாவினுள் ஆசிரிய வடியும் கலியடியும் வரும். (௧௪)

கலியினுள் வெள்ளடி யகவலுங் கலக்கும்.

என்பது,

கலிப்பாவினுள் வெண்பா வடியும் ஆசிரியவடியுமயங்கும்.(௧௫)

கலியினுமகவ லினுமைஞ்சீரடி
வருவது முளவெனவகுத்தனர் புலவர்.

என்பது,

கலிப்பாவினுள்ளும் ஆசிரியப் பாவினுள்ளும் ஐஞ்சீரடியும் வரப்பெறும்.

வரலாறு.

அணிகிளர் சிறுபொறியவிர் துத்திமாநாகத் தெருத்தேறி, கலிப்பா உமணர்ச்சேர்ந்து கழிந்த மருங்கினகன்றலை, ஆசிரியப்பா. (௧௬)

வருக்கநெடிலினம் வந்தாலெதுகையு
மோனையுமாமென மொழியப்படுமே.

என்பது,

வருக்கவெழுத்தும் நெடிலெழுத்தும் இனவெழுத்தும் எதுகையும் மோனையுமாக வந்தால், அவற்றை வருக்கவெதுகை நெடிலெதுகை இனவெதுகை, வருக்கமோனை நெடின்மோனை இனமோனை எனப்பெயரிட்டு வழங்கப்படும்.

வரலாறு.

நீடினர்க் கொம்பர்க் குயிலாலத்தாதூதிப்
பாடும் வண்டஞ்சிய கலும்பருவத்துத்
தோடார்தொடி நெகிழ்த்தாருள்ளார் படலொல்லா,
பாடமைச் சேக்கையுட்கண். } வருக்க வெதுகை.

ஆவாவென்றே யஞ்சினராழ்ந்தா ரொருசாரார்
கூகூவென்றே கூவிளிகொண்டா ரொருசாரார்
மாமாவென்றே மாய்ந்தனர்நீந்தா ரொருசாரார்
ஏகீர்நாகீரென் செய்துமென்றா ரொருசாரார், } நெடி லெதுகை.

தக்கார் தகவிலரென்பதவரவ
ரெச்சத்தாற் காணப்படும். } இன வெதுகை.



பகலேபல் பூங்கானற்கிள்ளை யோப்பியும்
பாசிலைக்குழவியொடு கூதாளம் விரைஇப்
பின்னும் பிணியவிழ்ந்த நன்னெடுங்கூந்தல்
பீர்ங்கப்பெய்து தேம்படத்திருகிப்
பூந்தார் மார்பபுனத்துட் டோன்றிப்
பெருவரையடுக்கத் தொருவேலேந்திப்
பேயுமறியாமாவழங்கு பெருங்காட்டுப்
பைங்கணுழுவைப் படுபகைவெரீஇப்
பொங்கு சினந்தணியாப் பூநுதலொருத்தல்
போகாதுவழங்கு மாரிருணடுநாள்
பௌவத்தன்ன பாயிருணீந்தி
யிப்பொழுது வருகுவையாயி
னற்றூர்மார்ப நீண்டலெங்கதுப்பே, } வருக்க மோனை.

ஆர்கலியுலகத்து மக்கட்கெல்லா
மோதலிற்சிறந்தன் றொழுக்கமுடைமை, } நெடின் மோனை.

கயலேருண்கண் கலுழநாளும்
சுடர்புரை திருநுதல் பசலை பாயத்
திருந்திழை யமைத்தோ ளரும்பட ருழப்பப்
போகல் வாழியை யபூத்தகொழுங் கொடி
யணிமலர் தயங்கப் பெருந்தண் வாடை வரும்
[பொழுதை. } இன மோனை. (௧௭)

ய-ர-ல-ழ விடையுறினு செனப்படுமே.

என்பது,

ய-ர-ல-ழ, இந்நான்கு மெய்களும் இடைவரல் ஆசெ துகையாகும்.

வரலாறு.

காய்மாண்ட தெங்கின் பழம் வீழக் கமுகினெற்றிப்
பூமாண்ட தீந்தேன் றொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனி சிதறி வாழைப் பழங்கள் சிந்து
மேமாங்கத மென்றிசை யாற்றிசை போயதன்றே } (ய)

கார்க்கொடி முல்லையுங் கலந்து மல்லிகை
பூக்கொடிப் பொதும்பருங் கனன் ஞாழலும் } (ர)

ஆவே றுருவின வாயினுமா பயந்த
பால்வே றுருவின வல்லவாம், பால்போல் } (ல)

வாழ்கின்றேமென்று மகிழன்மின் வாணாளும்
போகின்ற பூளையே போன்று. (௧௮) } (ழ)

அம்போதரங்க வண்ணக வொத்தாழிசைக்
கலியல்லாத கலிப்பாவினுக்குத்

தரவு மூன்றடி சிறுமை பெருமை
யுரைப்போன் குறிப்பின வாமளவின்றே.

என்பது,

அம்போதரங்க வொத்தாழிசைக் கலியும் வண்ணக வொத்தாழிசைக் கலியுமல்லாத கலிப்பாவிற்குத் தரவு மூன்றடியே சிறுமை, பெருமை பாடுவோன் பொருண்முடிவின் குறிப்பே, அளவின்றாம்.

அம்போதரங்க வண்ணகக்குஞ் சிறுமை
பெருமை தரவிலைப் பேசுங்காலை
யாறடி யென்மனா ரறிந்திசினோரே.

என்பது,

அம்போதரங்க வொத்தாழிசைக் கலிக்கும் வண்ணக வொத்தாழிசைக் கலிக்கும் பெருமை சிறுமையில்லை, தரவாறடியேயாகும்.

அடிமுதற் கட்பாப் பொருளைத் தழுவித்
தனியே நிற்பது கூனா மக்கூன்
வஞ்சியு ளிடைகடை முதலினும் வருமே.

என்பது,

அடிமுதற் கட்பாவினது பொருளைத் தழுவித் தனியே நிற்பது கூனாம், அக்கூன் வஞ்சிப்பா முதலிடை கடையாகிய மூவிடத்தினும் வரப்பெறும்.

வரலாறு.

| | |
|---|---|
| உதுக்காண், சுரந்தரனுவண்ணைச் சுவாணமாப்பூதன்<br>புரந்தரனுப்பல் புகழைப்பாடி, யிரந்தார்மாட்<br>டின்மையகல்வதுபோல விருணீங்க<br>மின்னு மணிதேர்மழை. | வெண்பா முதல். |
| அவரே, கேடில் விழுப்பொருடரு மார்பாசிலை<br>வாடாவள்ளியங் காடிறந்தோரே, | அகவல் முதல். |
| உலகினுள், பெருந்தகையார் பெருந்தகைமை பிறழாவே பிறழினும்<br>இருந்தகைய விறுவரைமேலெரிபோலச் சுடர்விடுமே, | கலிப்பா முதல். |

உலகே, முற்கொடுத்தார் பிற்கொளவும், வஞ்சிப்பா முதல்
மாவழுங்கலின் மயக்குற்றன, வழி, வஞ்சிப்பா கடை
கலங்கலா, வித்துன்ற, கலக்குற்றன, வஞ்சிப்பா நடு. (உக)



எதுகை முதலடியெல்லாம் வல்லின
மிகுவனவல்லிசையாம் விளம்பிடினே.

என்பது,

எதுகை முதலடியெல்லாம் வல்லெழுத்து மிக்குவருவன வல்லிசைவண்ணமாகும். (உஉ)

மெல்லின மிகுவன மெல்லிசையாகும்.

என்பது,

மெல்லெழுத்து மிக்குவருவன மெல்லிசை வண்ணமாகும். (உ௩)

இடையின மிகுவன விடையிசையெனலே.

என்பது,

இடையெழுத்து மிக்குவருவன இடையிசை வண்ணமாகும். ()

மூவினமு மிகுவனவொழுகிசை.

என்பது,

வல்லினமும் மெல்லினமும் இடையினமும் மிக்குவருவன ஒழுகிசை வண்ணமாகும். (உ௫)

எண்ணிவருவன வெண்ணெனப்படுமே.

என்பது,

பலவற்றையு மெண்ணிவருவன எண்ணு வண்ணமாகும். (உ௬)

உருட்டாம ராகத்தொடு வருவனவே.

என்பது,

அராகத்தொடுவருவன உருட்டுவண்ணமாகும். (உ௭)

அராகமாய் வருகுவ தன்றியடிமுத
லீறுந்தோன்றுமற் றெடுத்தெழும்பிய
வடியான்வருவன முடுகாகும்மே.

என்பது,

அராகமாய் வருவதன்றி யடிமுத லீறுந்தோன்றுமற் றெடுத்து நீண்டவடியால் வருவன முடுகுவண்ணம். (உ

நேரிறுவுரிச்சீர் மிகவந்தேந்திய
வோசையின்வருவன வேந்திசையாகும்.

என்பது,

நேரீற்றவுரிச்சீர் மிகவந்து எந்தியவோசையின் வருவன் எந்திசை வண்ணமாகும். (௪௯)

நிரையிறுவுரிச்சீர் மிக்குத்தூங்கிய
வோசையின்வருவன தூங்கிசையாகும்.

என்பது,

நிரையீற்ற வுரிச்சீர் மிகவந்து தூங்கியவோசையின் வருவன தூங்கிசைவண்ணமாகும். (௫௦)

மறுத்தறுத்தியல் வனவகைப்பாகும்மே.

என்பது,

மறுத்து, அறுத்து, வருவன, வகைப்புவண்ணமாகும். (௫௧)

முடிந்ததுபோல முடியாதுவருவன
புறப்பாட்டென்மனார் புலமையோரே.

என்பது,

முடிந்ததுபோல் முடியாதுவருவன புறப்பாட்டு வண்ணமாகும்.

முடியாததுபோன் முடிந்துவருவன
வகப்பாட்டென்மனா ரறிந்திசினோரே.

என்பது,

முடியாததுபோல முடிந்துவருவன அகப்பாட்டுவண்ணமாகும்.

அடிதொறுமளபெடை யெதுகையாக
வருவனவளபாம் வகுக்குங்காலே.

என்பது,

அடிதொறும் அளபெடை யெதுகையாக வருவன, அளபு வண்ணமாகும். (௫௪)

நூற்பாலுரைத்து வருவனபாவே.



என்பது,

நூற்பாற்கூறி வருவன, பாவண்ணமாகும். (௫௫)

அடிதொறுமெதுகை யாகவாய்தங்
கொடுவரனலிபாங் குறிக்குங்காலே.

என்பது,

அடிதொறுமாய்த மெதுகையாகக்கொண்டு வருவன நலிபுவண்ணமாகும். (௫௬)

ஓரடிக்கோரடி மத்தியில்விட்டடி
யெதுகையொன்றி யியல்வனதாவே.

என்பது,

ஓரடிக்கோரடி யிடையில்விட்டு, அடியெதுகை யுற்றுவருவன தாவுவண்ணமாகும். (௫௭)

அடிதொறுமொன்றாத் தொடையொடுவருவன
வொரூஉவெனப்பெய ருரைக்கப்படுமே.

என்பது,

அடிதோறும், ஒன்றாத தொடையொடுவருவன ஒரூஉ வண்ணமாகும். (௫௮)

குற்றெழுத்தியைந்து வருவனகுறுஞ்சீ
ராகுமென்மனா ரறிந்திசினோரே.

என்பது,

குற்றெழுத்தியைந்துவருவன, குறுஞ்சீர்வண்ணமாகும். (௫௯)

நெட்டெழுத்தியைந்து வருவனநெடுஞ்சீ
ராகுமென்மனா ரறிந்திசினோரே.

என்பது,

நெட்டெழுத்தியைந்து வருவன நெடுஞ்சீர்வண்ணமாகும். (௬௦).

நெடிலுங்குறிலு நீங்காதுவருவன
சித்திரமென்மனார் தெளிந்திசினோரே.

என்பது,

நெட்டெழுத்தும், குற்றெழுத்தும், விரவிவருவன சித்திரவண்ணமாகும். (௬௧)

யாப்பினுள்ளெழுத்துச் சொற்பொருள் யாப்பணிக்
குற்றமுமைவகை குறிக்குமானந்தமும்
வாராதுரைப்பது வழுவிலவாகும்.

என்பது,

செய்யுளில், எழுத்துக்குற்றமும், சொற்குற்றமும், பொருட்குற்றமும், யாப்புக்குற்றமும், அலங்காரக்குற்றமும், ஐவகையானந்தமும், வராமற்பாடுவது குற்றமிலவாம். (௬௨)

எழுத்துக்குற்ற மெழுத்திலக்கணத்தில்
வழுத்தியமுறையின் மாறுபட்டு
வருவதாமென வழுத்தப்படுமே.

என்பது,

எழுத்துக்குற்றமாவது, எழுத்திலக்கணத்திற் கூறிய முறையின் மாறுபட்டுவருவதாகும். (௬௩)

ஏனையகுற்றமு மிவற்றோரற்றே.

என்பது,

சொற்பொருள் யாப்பணிக்குற்றமும், அவ்வவ்விலக்கணத்தின் மாறுபட்டுவருவனவாம். (௬௪)

ஆனந்தமைவகை யறையுங்காலை
யெழுத்தினிலைபிறழ்ந்தன வெழுத்தானந்தம்.

என்பது,

எழுத்தானந்தம், சொல்லானந்தம், பொருளானந்தம், யாப்பானந்தம், அணியானந்தமாம்.

அவற்றுள்,

எழுத்துநிலை பிறழ்ந்தன எழுத்தானந்தம்.

வரலாறு. ஆழியிழைப்பப்கல் போமிரவெல்லாந்
தோழிதுணையாய்த் துயர்தீரும், வாழி
நறுமாலைத்தாராய் திரையவோ ஒ வென்றுஞ்
செறுமாலை சென்றடைந்தபோது. [தானந்தம்.
இதனுள் திரையன்திரைய ஓ ஒன அளபெடைஎழுத்



சொல்லானந்தஞ் சொன்னிலைபிறழ்ந்தன.

என்பது.

சொன்னிலைபிறழ்ந்து வருவன சொல்லானந்தம்.

வரலாறு. என்னிற்பொலிந்த திவண்முகமென்றெண்ணியே
தன்னிற்குறைபடுப் பான்றண்மதிய-மின்னி
விரிந்திலங்கு வெண்குடைச் செங்கோல்விசய
னெரிந்திலங்கு வேலினெழும்.
இதனுள்விசயனெரிந்து எனச்சொல்லானந்தம். (௬௬)

பொருணிலைபிறழ்வன பொருளானந்தம்.

என்பது,

பொருணிலை பிறழ்ந்துவருவன பொருளானந்தம்.

வரலாறு. வலிக்குமாம் மாண்டார்மனம், எனப்பொருளான
[தம் (௬௭

யாப்பினிலை பிறழ்வனயாப்பானந்தம்.

என்பது,

யாப்பினிலைபிறழ்ந்துவருவன யாப்பானந்தம்.

வரலாறு. மனுக்குமுதல்வ னிதிவாழ்வான்சிலைரா
மனுக்குநிகர்யாரைவகுப்பாம்,எனயாப்பானந்தம். (

அணிநிலைபிறழ்ந்து வருவனவணியா
னந்தமாமென நவிலப்படுமே.

என்பது,

அலங்காரநிலைபிறழ்ந்து வருன வணியானந்தம்.

வரலாறு. இந்திரனேபோலு மிளஞ்சாத்தன் சாத்தற்கு
மந்திரமேபோன்றிலங்கு மல்லாகம்.

இதனுள், சாத்தனுகிய கீழ்மகனை யரசனைப்போ லுவமித்தத
அணியானந்தம். (௬௯

வெண்பாமுதல் வஞ்சிப்பாவிறுதி
நான்குபாவினுக்கு நாளுங்கிரகமு

நிலனுங்குலனு நிறமுமிராசியு
மாகியவிருமூன் றிலக்கணப்பகுதி
குறித்தூர்முற்றுணர் குரவரென்ப.

என்பது,

வெண்பா, அகவற்பா, கலிப்பா, வஞ்சிப்பா நான்கிற்கும் நாளும், கிரகமும், நிலனும், குலனும், நிறமும், இராசியும் ஆகிய அறிலக்கணப்பகுதியைப் புலவர் குறித்தார். (௫௦)

அவற்றுள்,

வெண்பாவெண்ணிறம் விருச்சிகங்கார்த்திகை
முதலியவெழுநாண் முற்படுவிருச்சிக
மீனமிராசி விப்பிரகுலமதி
குருவேகிரகங் குழுமியமுல்லை
யிருநிலமற்றத னியல்பெனமொழிப.

என்பது,

முற்கூறியவற்றுள், வெண்பா வெண்ணிறம், கார்த்திகைமுதலியவேழும் நாள், விருச்சிகம் மீனம் இராசி, பிராமணகுலம், சந்திரன் வியாழம் கிரகம், முல்லைநிலம். (௫௧)

அகவல்செந்நிற மரையகுலமகம்
பூர்முதலிய வெழுநாண்மேடஞ்
சிங்கவிராசி செங்கதிர்செவ்வாய்
கிரகங்குறிஞ்சி நிலனாகும்மே.

என்பது,

அகவற்பா செந்நிறம், க்ஷத்திரியகுலம், மகமுதலிய வேழும் நாள், மேடம் சிங்கம் தனுசு இராசி, சூரியன் செவ்வாய் கிரகம், குறிஞ்சிநிலம். (௫௨)

கலிபொன்னிறங்குலம் காமருவணிக
மகணிநெடுநில மனுடமுதலிய
வாறுநாண்மிதுனங் கும்பந்துலாமு
மிராசிபுதன்சனி கிரகமென்றியம்புப.

என்பது,

கலிப்பா பொன்னிறம், வணிககுலம், மருதநிலம், அனுடமுதலியவாறும் நாள், மிதுனம் கும்பம் துலாம் இராசி, புதன் சனி கிரகம். (௫௩)



வஞ்சிநிறங்கறுப்பு வாருதிநெய்த
னிலங்கடைக்குலம விட்டமுதலேழு
நாளிடபங்கனி மகரமிராசி
வெள்ளியிராகு கிரகமென்ப.

என்பது,

வஞ்சிப்பா கறுப்பு நிறம், நெய்தல் நிலம், சூத்திரகுலம், அவிட்டமுதலியவேழும் நாள், இடபம் கன்னி மகரம் இராசி, வெள்ளி இராகு கிரகம். (௫௪)

ஆசுமதுரஞ் சித்திரம் வித்தார
மாகுநாற்கவி யறையுங்காலே.

என்பது,

ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரக்கவி எனக்கவிநான்குவகைப்படும். (௫௫)

அவற்றுள்,

பொருளடிபாவணி முதலியகொடுத்துப்
பாடெனப்பாடுவோனே யாசுகவியே

என்பது,

முற்கூறியவற்றுள், பொருளும், அடியும், பாவும், அணியும், முதலியவைகொடுத்துப் பாடுகவெனப் பாடுவோன் ஆசுகவி. (௫௬)

தொடையுந்தொடையின் விகற்பமுஞ்செறியச்
சொற்சுவைபொருட்சுவை தோன்றவுருவக
மாதியவணிகளோ டணிபெறப்பாடுவோன்
மதுரகவியென வழுத்தப்படுமே.

என்பது,

தொடையும் தொடைவிகற்பமும் செறியச், சொற்சுவையும் பொருட்சுவையும் விளங்க, உருவகவணிமுதலிய முப்பத்தைந்தணிகளோடு, அலங்காரம் பெறப்பாடுவோன் மதுரகவி. (௫௭)

ஏகபாத மெழுகூற்றிருக்கை
காதைக்கரப்புக் கரந்துறைச்செய்யுள்
கூடசதுக்கங் கோமூத்திரிமுத
றெரிந்துபாடுவோன் சித்திரக்கவியே.

என்பது,

ஏகபாதமும், எழுகூற்றிருக்கையும், காதைகரப்பும், கரந்துறைச்செய்யுளும், கூடசதுக்கமும், கோமூத்திரியும் இவை முதலிய வறிந்து பாடுவோன் சித்திரக்கவி. (௫௮)

மறங்கலிவெண்பா மடலூர்தலியலிசை
பாசண்டத்துறை பன்மணிமாலை
தசாங்க மும்மணிக்கோவை கிரீடை
யிவைமுதலிய விரித்திசைத்துப் பாடுவோன்
வித்தாரக்கவியாம் விளம்பிடினே

என்பது,

மறம், கலிவெண்பா, மடலூர்தல், இயல், இசை, பாசண்டத்துறை, பன்மணிமாலை, மும்மணிக்கோவை, கிரீடை இவை முதலியனபிறவும் விரித்துப்பாடுவோன் வித்தாரக்கவி. (௫௯)

என்பது,

கவியேகமகன் வாதிவாக்கியென்
றிவையொருநான்கும் புலமைக்கியல்பே.

என்பது,

கவி, கமகன், வாதி, வாக்கி இவைநான்கும் புலமைக்கியல்பு.

ஆசுமதுரஞ் சித்திரம்வித்தாரங்
கண்டுபாடுவோன் கவியாகும்மே.

என்பது:

ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரக்கவி அறிந்துபாடுவோன் கவியாகும். (௬௧)

ஞாபகஞ் செம்பொருணடையி னெப்பொருளு
மறைகுவோன்கமகனும் வழுத்துங்காலே.

என்பது,

ஞாபகம் செம்பொருணடையின் எப்பொருளையும் எடுத்துக்கூறுவோன் கமகனாகும். (௬௨)

ஏதுமேற்கோளு மெடுத்துக்காட்டித்
தன்கோணிறீஇப்பிறன்கோண் மறுப்போன்
வாதியாமென வைக்கப்படுமே.



என்பது,

ஏது, மேற்கோள், எடுத்துக்காண்பித்து, தன்கோட்பாட்டை நிறுத்திப், பிறன்கோட்பாட்டை மறுப்பவன் வாதியாகும் (௬௩)

அறம்பொருளின்பம் வீடாகியநான்கும்
கேட்போர்வேட்ப வினியனகிளத்து
மாற்றலுடையோன் வாக்கியாமெனவே.

என்பது,

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாற்பொருட்பயனையும், கேட்போர்விரும்ப இனியனகூறும் ஆற்றலுடையான், வாக்கியாகும். (௬௪)

19-3-5

மங்கலஞ்சொல்லுடனெழுத்து
தானம்பாலுணாச் சாதிநாள்கதி
கணமொருபத்துமுற் காணுவபொருத்தம்.

என்பது,

மங்கலப்பொருத்தம், சொற்பொருத்தம், எழுத்துப்பொருத்தம், தானப்பொருத்தம், பாற்பொருத்தம், உண்டிப்பொருத்தம், வருணப்பொருத்தம், நாட்பொருத்தம், கதிப்பொருத்தம், கணப்பொருத்தம் எனப்பொருத்தம் பத்துவகைப்படும். (௬௫)

அவற்றுள்,

மங்கலங்கார்புயன் மாமணிவாருதி
யாரணமுலகல ரமுதந்தேர்வய
றிங்கள்பொன்னெழுத்துத் திவாகரன்கரிபரி
கங்கைநிலந்திருக் காட்டியபிறவு
மாகுமென்மனா ரறிந்திசினோரே.

என்பது,

முற்கூறியவற்றுள், மங்கலப்பொருத்தமாவன, கார், புயல், மா, மணி, கடல், ஆரணம், உலகு, பூ, அமுதம், தேர், வயல், திங்கள், பொன், எழுத்து, சூரியன், யானை, குதிரை, கங்கை, நிலம், திரு, இவை முதலியன பிறவுமாம். (௬௬)

சீர்நனிசிதைதல் சிறப்பின்றாய்நிற்ற
லீறுதிரிதலிரும் பொருளின்மை
பலபொருள்பயத்தன் முதலியபிறவு
முதற்சீர்மொழிக்கா காவெனமொழிப.

40

என்பது,

சீர்சிதைந்து நிற்றல், சிறப்பில்லாமை, ஈறுதிரிதல், பொருளின்மை, பலபொருடருதல் இவை போல்வன பிறவு முதற்சீர் மொழிக்குக் குற்றமாகும். (௬௭)

ஐந்தொடுமூன்றேழா றொடுமூன்று
மாகுநாலாறெட்டெழுத்தாகாவே.

என்பது,

ஐந்தெழுத்து, மூன்றெழுத்து, ஏழெழுத்து, ஒன்பதெழுத்து, முதற்சீர்க்காகும், நாலெழுத்து, ஆறெழுத்து, எட்டெழுத்து, ஆகாவாம். (௬௮)

அ ஆ இ ஈ ஐயும் உ ஊ
ஔவும் எ ஏ ஒ ஓ வென்றிவை
பாலன்குமார னிராசன்மூப்பு
மரணமுறையே யைந்துமெண்ணுக
மூப்புமரணமு முதற்சீர்க்காகா.

என்பது,

அ, ஆ, பாலன், இ, ஈ, ஐ, குமரன், உ, ஊ, ஔ, இராசன், ஏ, எ, மூப்பு, ஒ, ஓ, மரணம், இவற்றில் பாலன், குமரன், இராசன் ஆம், மூப்பு, மரணம் முதற்சீர்க்காகாவாம். (௬௯)

குறிலாநெடில் பெண்ணாந்தனிநிலைமெய்
யலியாம்பெண்ணிணோ டாண்பாற்புணர்ச்சிக்
கவ்வவ்வெழுத்தா மயங்கினும்வழுவே.

என்பது,

குற்றெழுத்தெல்லாம் ஆண்பால், நெட்டெழுத்தெல்லாம் பெண்பால், ஆய்தமும் மெய்களும் பேடு, பெண்பாற்குப் பெண்பாலெழுத்தும், ஆண்பாற்கு ஆண்பாலெழுத்தும், ஆம், இருமையும் மயங்கிப் புணரிற் குற்றமாம். (௭௦)

அ இ உ எ க ச த ந ப ம வவு
மமுதெழுத்தியா யோரா ரோலா லோ
வவற்றின்ற்று மளபெடைமக்குற
ளாய்தமுநஞ் செழுத்தாமுதலாம்பின்
னாகாவென்மனா ரிந்திசினோரே



என்பது,

அ, இ, உ, எ, ஆகிய நான்குயிரும், க, ச, த, ந, ப, ம, வ ஆகிய எழுமெய்யும், அமுதவெழுத்தாம். யா, யோ, ரா, ரோ, லா, லோ, இவ்வாறுமெய்யும், ய, ர, ல, ஆகிய மூன்றுமெய்யும், உயிரளபெடையும், ஒற்றளபெடையும், மகரக்குறுக்கமும், ஆய்தமும் நஞ்செழுத்தாம். இவற்றுள் முற்கூறிய அமுதவெழுத்து நன்மையாகும். பிற்கூறிய நஞ்செழுத்தாகாவாம். (௭௧)

வருமுயிரடங்கலும் வல்லினப்புள்ளியு
மந்தணர்க்காந்த நயரபமப்புள்ளி
மன்னவர்க்காம் லவறனவணிகர்க்காம்
பின்னவர்க்காம் ழளப்பேசுங்காலே

என்பது,

பன்னிரண்டுயிரும், வல்லெழுத்தாறும், பார்ப்பாருக்காகும். த, ந, ய, ர ப, ம இவ்வாறுமெய்யும், அரசருக்காகும், ல, வ, ற, ன இந்நான்குமெய்யும் வணிகருக்காகும், ழ, ள, இவ்விரண்டு மெய்யும் சூத்திரருக்காகும். (௭௨)

ஆவிநான்கைக்கொடு நான்குமாய்ப்பிரிவது
கார்த்திகை பூராடமுத்திராடமா மெய்யிற்
ககரநான் கிரண்டு மூன்று மூன்றிவை
யோணமாதிரையிரு பூசமா முறையே
சகரநான்கைந்து மூன்றிரோ பதியச்சுவினி
பரணிஞஞாஞே ஞொவவிட்ட மேனைய
தகரமிரண் டெழுதான் கடைமூன்று
சோதிவிசாகமோ தாயவான் சதய
நவ்வரியாறுடனோடு மும்மூன்று
மனுடங் கேட்டையாய் பூரட்டாதி
பகரநான் கிரண்டொடு மாறுமுத்திராட
மத்தஞ்சித் திரைமவ்வாறிருடு மூன்று
மூன்றுமகமாயி லியம்பூரம்
யய்யாவுத்திரட்டாதி யுய்யோ
மூலம்வ்வாவிவீயுரோகணிவெவேவைவெள
மிருகசீரிடமென விளம்பினர்புலவர்.

என்பது,

அ, ஆ, இ, ஈ கார்த்திகை, உ, ஊ, எ, ஏ, ஐ. பூராடம், ஒ, ஓ, ஔ, உத்திராடம், க, கா, கி, கீ, திருவோணம், கு, கூ, திருவாதிரை, கெ, கே, கை, புணர்பூசம், கொ, கோ, கௌ, பூசம், ச, சா

ஙி, ஙீ, இரேவதி, சு, சூ, செ, சே, சை, அச்சுவினி, சொ, சோ, சௌ பரணி, ஞு, ஞூ, ஞெ, ஞொ, அவிட்டம், த, தா, சோதி, தி, தீ, து தூ, தெ. தே, தை, விசாகம், தொ, தோ, தௌ, சதயம், ந, நா, நி நீ, நு, நூ, அனுடம், நெ, நே, நை, கேட்டை, நொ, நோ, நௌ, பூரட்டாதி, ப, பா, பி, பீ, உத்திரம், பு, பூ, அத்தம், பெ, பே, பை பொ, போ, பௌ, சித்திரை, ம, மா, மி, மீ, மு, மூ, மகம், மெ, மே, மை, ஆயிலியம், மொ, மோ, மௌ, பூரம், ய, யா, உத்திரட்டாதி, யு, யோ, மூலம், வ, வா, வி, வீ, உரோகணி, வெ, வே, வை, வௌ, மிருகசீரிடமாமெனக. (௭௫)

நாயகன்முதற்பெயராதி யெழுத்தினுண்
முதற்கொண் டொன்பதொன்பதாக
மங்கலச்சொன் முதலெழுத்தினுளளவு
மெண்ணியிரண்டு நான்குமாறு
மெட்டுமொன்பதுங் காணினல்லவா
மொன்றுமூன்று மைந்துமேழுங்
காணிற்றீங்கெனக் கருதப்படுமே.

என்பது,

பாட்டுடை நாயக னியற்பெயராதி யெழுத்தினுளே முதற் கொண்டு, ஒன்பது, ஒன்பது ஆக, எடுத்த மங்கலச்சொல், முதலெ ழுத்து நாளளவுமெண்ணி, இரண்டும், நான்கும், ஆறும், எட்டும், ஒன்பதும் கண்டால் நல்லவாம், ஒன்றும், மூன்றும், ஐந்தும், ஏழும் கண்டால் தீயவாம். (௭௬)

அ, இ, உ, எ, வொடு க, ச, ட, த, பவா
மொன்பதுந்தேவர் கதியாம். ஆ
ஈ, ஊ, ஏ, ங, ஞ, ண, ந, ம, வா, மொன்பது
மாந்தர் கதி ஒ, ஓ, யரலழற
விலங்கின்கதி ஐ, ஔவொடுவளன
வைந்துநரகர் கதியாமிவற்றுண்
முன்னவைநல்லன பின்னவைதீயன.

என்பது,

அ, இ, உ, எ, க, ச, ட, த, ப, ஆகியவொன்பதெழுத்தும் தே வர்கதி, ஆ, ஈ, ஊ, ஏ, ங, ஞ, ண, ந, ம, ஆகிய வொன்பதெழுத்தும் மக்கட்கதி, ஒ, ஓ, ய, ர, ல, ழ, ற, ஆகிய ஏழெழுத்தும் விலங்கின் கதி, ஐ, ஔ, வ, ள, ன, ஆகிய, ஐந்தெழுத்தும் நரகர்கதி, இவற் றுள் முற்கூறிய தேவர்கதியும், மக்கள் கதியும் நல்லனவாம். பிற்கூ றிய விலங்கின்கதியும், நரகர்கதியும் தீயனவாம். (௭௭)



தேமாங்காயிந் திரகணம்புளிமாங்
காய்சந்திர கணங்கருவிளமென்கனி
நிலக்கணங்கூவிளங் கனிநீர்க்கணமிவை
யாகுங்கருவிளங் காயந்தரகணங்
கூவிளங்காயிரவிக் கணந்தேமாங்
கனிகாற்கணம்புளி மாங்கனிதீக்கணம்.

என்பது,

தேமாங்காய் இந்திரகணம். புளிமாங்காய் சந்திரகணம் கரு விளங்கனி நிலக்கணம். கூவிளங்கனி நீர்க்கணம். இவை நல்லன வாம். கருவிளங்காய் அந்தரகணம். கூவிளங்காய் சூரியகணம். தே மாங்கனி வாயுக்கணம். புளிமாங்கனி தீக்கணம். இவையாகாவாம்.

## பிரபந்தங்கள்.

ஓரைதிதிநிலையோக நாண்மீனிலை
வாரங்கரண நிலைவருகிரக
நிலையெழுவகையவ நிலையையுமுணர்வுற்
றவற்றையமைத்தவற்றாற் றலைமகனுக்
கடைவனவறைதல்சாதகமெனமொழிப.

என்பது,

ஓரைநிலையும், திதிநிலையும், யோகநிலையும், நாண்மீனிலையும், வார நிலையும், கரணநிலையும், கிரகநிலையும், ஆகிய வேழுறுப்புகளி னிலை யையும், சோதிடநூலால் நன்குணர்ந்து, அவற்றை அமைத்து, அவ ற்றால் தலைமகனுக்கு அடைவன கூறல் சாதகக்கவியாமெனக. (௭௮)

நீதில்காப்பே செங்கீரைதாலே
சப்பாணிமுத்தம் வாரானையம்புலி
சிறுபறைசிற்றில் சிறுதேரிவற்றை
முறையேயகவல் விருத்தத்தாலே
பப்பத்தாகப் பாடுவதாண்பாற்
பிள்ளைக்கவியிவ் வுறுப்பினிற்கடைமூன்
றொழித்துக்கழங்கம் மானையூசலென்றிவை
கூட்டிமுற்கூறியவா றுரைப்பதுவே
பெண்பாற் பிள்ளைக்கவியெனப்படுமே.

என்பது,

காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம் புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர், இவற்றை முறையே, ஆசிரிய விருத்தத்தால், பத்துப்பத்தாகக் கூறுவது ஆண்பாற் பிள்ளைக்கவி

யாகும், இவ்வுறுப்பினில், கடைமூன்றொழித்துக், கழங்கு,அம்மனை, ஊசல் என்றிவற்றைக்கூட்டி, முற்கூறியவாறே கூறுவது, பெண்பாற் பிள்ளைக்கவியாகும். (எஅ)

போர்முகத்தாயிரம் புகர்முகக்களிற்றைக்
கொன்றவனைத்தலைமகனாக்கொண்டு
கடவுள்வாழ்த்துக் கடைதிறப்புப்பாலை
காளிகோயிலும் பேயொடுகாளியும்
காளியொடுபேய்களு மூனைக்கத்தானகஞ்
சாற்றக்கருதிய தலைவன்சீர்த்தி
புலப்படவவன் வழியாகப்புறப்பொரு
டோன்றப்போர்த் தொழிலொடு வழங்கலிரும்ப
லென்றிவையெல்லா மிருசீர்முச்சீ
ரடியொழித் தனைய வடிகொடீரடிப்
பஃறாழிசையாற் பாடுவதுபரணி.

என்பது,

போர் முகத்து, ஆயிரம் யானையைக்கொன்ற வீரனைத் தலைவனாகக்கொண்டு, கடவுள்வாழ்த்து, கடைதிறப்பு, பாலைநிலம், காளிகோயில், பேய்களோடுகாளி, காளியோடுபேய்கள் கூறத் தான்சொல்லக்கருதிய தலைவன் கீர்த்திவிளங்க, அவன் வழியாகப் புறப்பொருள்தோன்ற, வெம்போர் வழங்கலிரும்பல், இவை யெல்லாம், இருசீரடி, முச்சீரடி யொழித்து, ஒழிந்தமற்றடியாக, ஈரடிப்பலதாழிசையாற்பாடுவது பரணியாகும். (எக)

வெண்பாக்கலித் துறையோடொருபோகு
முதற்கலி மூன்றுறுப்பாகமொழிந்து
வாகுவகுப்பு மதங்கமம்மனை
காலஞ்சம்பிரதங் கார்தவங்குறமறம்
பாண்களியிரங்கல் சித்தூசல்கைக்கிளை
தூதளிதழையிவை தோன்றமடக்கு
மருட்பாவகவல் வஞ்சிகலிப்பா
வகவல்விருத்தமொடுகலித்தாழிசை
கலிவிருத்தந்துறை காமருவெண்டுறை
விரவியந்தாதியாய் விளம்புங்காலைத்
தேவர்க்குநூறந் தணர்க்கைந்தொழித்த
லரசர்க்குத்தொண்ணூ றைம்பதுவசியர்க்
காறைந்துசூத்திரர்க்காகப் பகர்தல்
கலம்பகமென்மனார் கற்றுணர்ந்தோரே.



என்பது,

வெண்பா, கலித்துறை, ஒருபோகு முதற்கலி யுறுப்பாக முற்கூறி, புயவகுப்பு, மதங்கு, அம்மனை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல் என்னும் இவ்வவயவங்களையும், மடக்கு, மருட்பா, அகவற்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரியவிருத்தம், கலிவிருத்தம், கலித்தாழிசை, வஞ்சிவிருத்தம், வஞ்சித்துறை, வெண்டுறை என்னுமிவற்றால், இடையே வெண்பா, கலித்துறைவிரவி, அந்தாதித்தொடையான் முற்றுறக்கூறுங்கால், தேவர்க்கு நூறும், அந்தணர்க்குத் தொண்ணூற்றைந்தும், அரசர்க்குத் தொண்ணூறும், வைசியர்க்கு ஐம்பதும், சூத்திரர்க்கு முப்பதுமாகப் பாடுவது கலம்பகமாகும். ()

முதலகருவுரிப் பொருளொருமூன்று
மடைந்துகைக்கிளை யன்புடைக்காமப்
பகுதியவாங்கள வொழுக்கமுங்கற்பு
மியம்புதலே யெல்லையாகக்கட்டளைக்
கலித்துறைநானூற் றுற்றிணைமுதலாத்
துறையீறாகச் சொல்லப்பட்டு
மீராறகப்பாட் டுறுப்புமியையக்
கூறுவதகப்பொருட் கோவையாமற்றிஃ
தகவல்வெண்பாக் கலியடுக்கியவ்வண்ண
வஞ்சியினானும் வழுத்தப்படுமே.

என்பது,

இருவகையாகிய முதற்பொருளும், பதினான்குவகையாகிய கருப்பொருளும், பத்துவகையாகிய வுரிப்பொருளும் பெற்றுக், கைக்கிளைமுதலுற்ற அன்புடைக் காமப்பகுதியவாம் களவொழுக்கமும், கற்பொழுக்கமும் கூறலே யெல்லையாகக் கட்டளைக் கலித்துறை நானூற்றால், திணை முதலாகத் துறையீறாகக்கூறப்பட்ட பன்னிரண்டகப்பாட்டுறுப்பும் வழுவின்றித்தோன்றப்பாடுவது அகப் பொருட்கோவையாகும்; இது அகவல், வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா வண்ணம், இவற்றாலும் வழங்கப்படும். (அக)

புணர்தன்முதலிய வைந்துரிப்பொருளு
மணிபெறக்குறிஞ்சி முதலியவைந்திணை
யிணையுமியம்புவ தைந்திணைப்பாவே.

21-3-53

என்பது,

புணர்தன் முதலிய வைந்துரிப்பொருளும் விளங்கக் குறிஞ்சி முதலிய வைந்திணையையுங் கூறுவது ஐந்திணைச்செய்யுளாகும். ()

அகரமுதலா கியவ்வாமக்கர
வருக்கமொழிக்கு முதல்வருமெழுத்து
முறையேகட்டளைக் கலித்துறையாக
வழுத்துவததுவே வருக்கக்கோவை.

என்பது,

அகரமுதலாகிய வெழுத்துவருக்கம் மொழிக்கு முதலாமெழுத்துக்கட்டளைக் கலித்துறையாகப்பாடுவது வருக்கக்கோவையாகும்.

அகவல்வெண்பாக் கட்டளைக்கலித்துறையு
முறையேதொகைபெற முப்பதடுக்கி
யந்தாதித் தொடையாகச்செய்வது
மும்மணிக்கோவையா மொழியுங்காலே.

என்பது,

ஆசிரியப்பாவும், வெண்பாவும், கட்டளைக்கலித்துறையும் முறையே தொகை முப்பதுபெறவடுக்கிப் பாடுவது மும்மணிக் கோவையாகும். (௮௪)

ஆடுஉமகடூ உவாயிருபெயர்க்கு
மிகவெடுத்துரைக்கு மெய்யவயவத்தை
வெண்பாவாயினும் வெளிவிருத்தத்தி
னாயினுங்கே சாதிபாதம்
பாதாதிகேசமாகப் பாடுவ
தங்கமாலையா மாயுங்காலே.

என்பது,

ஆண்மகனுக்கும், பெண்மகளுக்கும் மிக்கெனவெடுத்துக் கூறு மவயவங்களை வெண்பாவாலாயினும், வெளி விருத்தத்தாலாயினும், பாதாதிகேசம், கேசாதிபாதம் முறைபிறழாது தொடர்வுறப்பாடுவது அங்கமாலையாகும். (௮௫)

கடவுளைப்பாடியக் கடவுடானே
காக்கவென்றகவல் விருத்தமிருநான்
கந்தாதித்தன்றகுவ தட்டமங்கலமே.

என்பது,

கடவுளைப்பாடி அக்கடவுள் காக்கவென ஆசிரியவிருத்தம் எட்டு அந்தாதித்துப்பாடுவது அட்டமங்கலமாகும். (௮௬)



கன்னியொருத்தியைக் கண்டுகேட்டுண்டுயிர்த்
தினிமையுறப்புணர்ந் ததைத் தன்னின்னுயிர்ப்
பாங்கற்குத்தலைமகன் பகர்ந்ததாக
நேரிசைக்கலிவெண் பா வானிகழ்த்துவ
தனுராகமாலையா மாயுங்காலே.

என்பது,

தலைவன், கன்னிகையொருத்தியைக்கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, இனிமையுறப்புணர்ந்ததைத் தன்னுயிர்ப்பாங்கற் குரைத்ததாக நேரிசைக்கலிவெண்பாவாற் கூறுவது அனுராகமாலையாகும். ()

இருபஃதந்தா தித்துவெண்பாவும்
கட்டளைக்கலித்துறையுங் கலந்துரைத்தல்
இரட்டைமணிமாலை யென்மனார்புலவர்.

என்பது,

முறையானே வெண்பாவும், கட்டளைக்கலித்துறையும் இருபது அந்தாதித்தொடையான் வருவது இரட்டைமணிமாலையாகும். (௮௮)

வெண்பாவகவல் வெண்பாக்கலித்துறை
யிரண்டிரண்டாக விணைத்துவெண்பா
வகவலிணைமணி மாலைவெண்பாக்
கலித்துறையிணை மணிமாலையாகும்.

என்பது,

வெண்பாவும், அகவலும், வெண்பாவும், கலித்துறையும், இரண்டிரண்டாக விணைத்துப்பாடுவது வெண்பாவகவலிணை மணிமாலையெனவும், வெண்பாக்கலித்துறை யிணைமணிமாலையெனவும் பெயர்பெறும். (௮௯)

அந்தாதித்து வெண்பாவாதிய
பாவும்பாவினமு மாகவொன்பது
செய்யுளணிபெறச் செப்புவததுதான்
நவமணிமாலையா நாடுங்காலே.

என்பது,

வெண்பாமுதலாக வேறுபட்டபாவும பாவினமுமாக வொன்பது செய்யுளந்தாதித்துப்பாடுவது நவமணிமாலையாகும். (௯௦)

அந்தாதித்து வெண்பாக்கலித்துறை
விருத்தமுமகவலும் விரவிநாற்பது
நவில்வது நான்மணி மாலையாகும்.

என்பது,

வெண்பாவும், கலித்துறையும், விருத்தமும், அகவலும் அந்தாதித்து, நாற்பது பாடுவது நான்மணிமாலையாகும். (௯௧)

அகவலடி கலியடியுமயங்கிய
வஞ்சியாற்புருடனை வாழ்த்திப்புகழ்வது
நாமமாலையா நாடுங்காலே.

என்பது,

அகவலடியும், கலியடியும் வந்துமயங்கிய வஞ்சிப்பாவால் ஆண்மகனைப் புகழ்ந்து பாடுவது நாமமாலையாகும். (௯௨)

பப்பத்தாகப் பல சந்தத்தொடு
வீரைம்பான் பாட்டியல்வததுபல
சந்தமாலையாஞ் சாற்றுங்காலே.

என்பது,

பத்துப்பத்துச் செய்யுள், வெவ்வேறுசந்தமாக நூறு செய்யுட் கூறுவது பலசந்தமாலையாகும். (௯௩)

முற்கூறியகலம் பகத்துள்வருமொரு
போகுமம்மனை யூசலும்போக்கி
யேனையவுறுப்புகளெல்லாமமையப்
பாடுவததுதான் பன்மணிமாலை.

என்பது,

முற்கூறிய கலம்பகத்துள், ஒருபோகும் அம்மனையும் ஊசலுமின்றி ஏனைய வுறுப்புக்களெல்லாம் அமையப்பாடுவது பன்மணி மாலையாகும். (௯௪)

எப்பொருண்மேலும் வெண்பாவிருபதுங்
கலித்துறை நாற்பதுங் கலந்துவருவது
மணிமாலையாகும் வழுத்துங்காலே.

என்பது,

எந்தப்பொருண்மேலும், வெண்பாவிருபதும், கலித்துறை நாற்பதும் விரவிப்பாடுவது மணிமாலையாகும். (௯௫)



அகவலடி கலிபடியுமயங்கிய
வஞ்சியினரிவையர் மாண்பையுரைப்பது
புகழ்ச்சிமாலையின் பொருளாகும்மே.

என்பது,

அகவலடியும், கலியடியும் வந்துமயங்கிய வஞ்சிப்பாவால், பெண்களின்சிறப்பைக் கூறுவது புகழ்ச்சிமாலையாகும். (௯௬)

தெரிவையெழில் குணமாக்கஞ் சிறப்பையுரைப்பது
பெருமகிழ்ச்சி மாலையெனப் பெயர்பெறுமே.

என்பது,

பெண்கள் அழகும், குணமும், ஆக்கமும், சிறப்பும் முதலியன கூறுவது பெருமகிழ்ச்சிமாலையாகும். (௯௭)

முதலாம் வருக்கவெழுத்தினுக்கொவ்வொரு
செய்யுளணிபெறச் செப்புவததுதான்
வருக்கமாலையாம் வழுத்துங்காலே,

என்பது,

மொழிக்கு முதலாகும் வருக்க வெழுத்தினுக்கு ஒவ்வொரு செய்யுட் கூறுவது வருக்க மாலையாகும். (௯௮)

சொற்சீரடியெனுங் கட்டுரைத்தொடர்பாற்
குலமுறையாற்றிய கீர்த்தியைக்கூறன்
மெய்க்கீர்த்திமாலையாம் விளம்புங்காலே.

என்பது,

சொற்சீரடி யென்னும் கட்டுரைச் செய்யுளால் குலமுறையிற் செய்த கீர்த்தியைக் கூறுவது மெய்க்கீர்த்தி மாலையாகும். (௯௯)

கடவுள் காத்தலாக வொருமூன்
றைந்தேழானு மறைவது காப்பு
மாலையென்பெயர் வைக்கப்படுமே.

என்பது,

தெய்வங் காத்தலாக மூன்று செய்யுளானும் ஐந்து செய்யுளானும் எழு செய்யுளானும் பாடுவது காப்பு மாலையாகும். (௪௦௦)

வேனிலொடு முதிர்வேனிலும்புனைந்து
விளம்புதல் வேனின் மாலையாகும்.

என்பது,

வேனிலையும் முதிர் வேனிலையும் சிறப்பித்துப் பாடுவது வேனின் மாலையாகும். (௧௦௧)

தென்றலைப்புகழ்ந்து செப்புதல்வசந்த
மாலையெனப்பெயர் வைக்கப்படுமே.

என்பது,

தென்றலை வருணித்துப் பாடுவது வசந்த மாலையாகும். (௧௦௨)

அருந்ததிக் கற்பினரிவையர்க்குள்ள
வியற்கைக் குணங்களை வகுப்பாலியம்புத
ராகைமாலையாஞ் சாற்றுங்காலே.

என்பது,

அருந்ததிக்கற்பின் மகளிர்க்குள்ள இயற்கைக் குணங்களை வகுப்பிற் கூறுவது தாரகை மாலையாகும். (௧௦௩)

அரிபிறப்பீரைந் தனையுமாசிரிய
விருத்தத்தால் விளம்புவதுற்பவமாலை.

என்பது,

திருமால் பிறப்புப் பத்தையும் ஆசிரிய விருத்தத்தால் கூறுவது உற்பவ மாலையாகும். (௧௦௪)

அகவலோசையிற்பிறழாதகவலின் முன
ரொடுத்துச்செல்லுங் கொடிப்படையியம்ப
றானைமாலைப்பெயர் தழுவுமாமெனவே.

என்பது,

அகவலோசையிற் பிறழாது ஆசிரியப் பாவால் முன்னரொடுத்துச் செல்லும் கொடிப்படையைக் கூறுவது தானை மாலையாகும். ()

ஆதிப்பாக் கலித்துறையுமகவலு
மந்தாதித்தாறைந்தியம்புவது
மும்மணிமாலையா மொழியுங்காலே.

என்பது,

வெண்பாவும் கலித்துறையும் ஆசிரியப்பாவும் அந்தாதித்து முப்பது செய்யுட் பாடுவது மும்மணி மாலையாகும். (௧௦௫)



வெண்பாவான் முன்னூறுவிரிப்பது
தண்டகமாலையாஞ் சாற்றுங்காலே.

என்பது,

வெண்பாவினால் முன்னூறு செய்யுட் கூறுவது தண்டக மாலையாகும் (௧௦௭)

ஆனிரைகவர்ந்து வருபவன்வெற்றி
விளம்புதல்வீர வெட்சிமாலை.

என்பது,

சுத்த வீரன் பகைவரூரிற் சென்று பசுநிரை கவர்ந்து வருவதை யிருத்துக்கூறுவது வெட்சி மாலையாகும். (௧௦௮)

தழுவார்கொண்ட தந்நிரைமீட்போர்
காந்தைபுனைந்து கனன்றுலவையிற்செலீஇ
மீட்பதைக்கூறல் வெற்றிக்காந்தை.

என்பது,

பகைவர்கொண்ட தந்நிரை மீட்போர் கரந்தைப் பூமாலை சூடிப் போய் மீட்பதைக் கூறுவது வெற்றிக்கரந்தை மஞ்சரியாகும். (௧௦௯)

போர்க்கெழுமன்னவர் வஞ்சிப்பூத்தொடை
யணிந்துபுறப்படு மடுபடையெழுச்சிச்
சிறப்பகவலினாற் செப்புதல்போர்க்கெழு
வஞ்சியெனப் பெயர்வைக்கப்படுமே.

என்பது,

பகைவர் மேல் போர்குறித்துப் போகின்ற வயவேந்தர் வஞ்சிப் பூமாலை சூடிப் புறப்படும் படையெழுச்சிச் சிறப்பை யாசிரியப்பாவாற் கூறுவது போர்க்கெழு வஞ்சியாகும். (௧௧௦)

விழுமியகுலமுறை பிறப்புமேம்பாட்டின்
பலசிறப்பிசையையும் வஞ்சிப்பாவால்
வழுத்தல்வரலாற்று வஞ்சியாமென்ப.

என்பது,

குலமுறை பிறப்பு முதலிய மேம்பாட்டின் பல சிறப்பையும் கீர்த்தியையும் வஞ்சிப்பாவாற் கூறுவது வரலாற்று வஞ்சியாகும். ()

போர்க்களத்திறந்த புரவிநால்வாய்
மக்களுடலையும் வாயசங்கழுகு
பேய்நாய்பசாசம் பிடுங்கிப்பருகிக்
களித்துப்பாடிய சிறப்பைக்காட்டல்
செருக்களவஞ்சியாஞ் செப்புங்காலே.

என்பது,

போர்க் களத்தில் இறந்த குதிரை யுடலையும், யானையுடலையும், மனிதருடலையும் நாயும், பேயும், பிசாசமும், காகமும், கழுகும் தின்று, களித்துப் பாடிய சிறப்பைப் பாடுவது செருக்கள வஞ்சியாகும். (௧௧௨)

காஞ்சிபுனைந்து கருதாரூர்ப்புற
மூன்றலையுரைப்பது காஞ்சிமாலை.

என்பது,

பகைவரூர்ப் புறத்துக் காஞ்சிப் பூமாலை சூடியூன்றலைக் கூறுவது காஞ்சி மாலையாகும். (௧௧௩)

கோலியமாற்றார் கோடலின்றி
நொச்சிவேய்ந்தக லெயிலோனைக்குந்திறனை
வழுத்துத னொச்சிமாலையாகும்.

என்பது,

புறத்தூன்றியபகைவர் கோடலின்றி நொச்சிப்பூமாலை சூடித் தன் மதில் காக்குந் திறங்கூறுவது நொச்சிமாலையாகும். (௧௧௪)

மாற்றாரூர்ப்புறம் வளைதரவுழிஞை
வனைந்துகாலாள் வளைப்பதுகூற
லுழிஞைமாலையா முணருங்காலே.

என்பது,

பகைவர் ஊர்ப்புறஞ்சூழ உழிஞைப்பூமாலை சூடிப்படை வளைப்பதைக்கூறுவது உழிஞைமாலையாகும். (௧௧௫)

தும்பைவேய்ந்தோனொடு சூழ்ந்துபொருவது
சொல்வதுதும்பை மாலையாகும்.

என்பது,

பகைவரொடு தும்பைப்பூமாலை சூடிப்பொருவதைக் கூறுவது தும்பைமாலையாகும். (௧௧௬)



மாற்றாரைவென்று வாகைசூடுவதை
யகவலினுரைப்பது வாகைமாலை.

என்பது,

பகைவரைவென்று புகழ்படைத்து வாகைப்பூமாலை சூடுவதை ஆசிரியப்பாவாற் கூறுவதுவாகை மாலையாகும். (௧௧௭)

யானைவயப்படுத்தி யடக்கினவருக்கு
மெதிர்பொருமியானையை யீரவெட்டி
யடக்கினவருக்கு மதட்டிப்பிடித்துச்
சேர்த்தவர்க்கும்வீரச் சிறப்பை
வஞ்சியாற்பாடுவதது வாதோரண
மஞ்சரியெனப்பெயர் வைக்கப்படுமே.

என்பது,

யானையை வயப்படுத்தி அடக்கினவருக்கும், எதிர்த்த யானையைவெட்டி அடக்கினவருக்கும், பற்றிப் பிடித்துச் சேர்த்தவருக்கும் வீரப்பாட்டின் சிறப்பை வஞ்சிப்பாவால் தொகுத்துப்பாடுவது வாதோரண மஞ்சரியாகும். (௧௧௮)

பாட்டுடைத்தலைவ னூரும்பெயரும்
பத்துமுதலாயிர மளவும்பாடி
யெண்ணாற்பெயர்பெற லெண்செய்யுளாகும்.

என்பது,

பாட்டுடைத்தலைவன் ஊரையும் பெயரையும் பத்துமுதல் ஆயிரமளவும்பாடி எண்ணாற்பெறுவது எண்செய்யுளாகும். (௧௧௯)

நெடிலடிப்பாவாற் றொகுத்தது நெடுந்தொகை
குறளடிப்பாவாற் றொகுத்தது குறுந்தொகை
கலியிற்றொகுத்தது கலித்தொகைபோல்வன
தொகைநிலைச்செய்யு ளெனச்சொலப்படுமே.

என்பது,

நெடிலடிச்செய்யுளால் தொகுத்தது நெடுந்தொகை, குறளடிச்செய்யுளால் தொகுத்தது குறுந்தொகை, கலிப்பாவால் தொகுத்தது கலித்தொகை போல்வன தொகைநிலைச் செய்யுளாகும். ()

பதினுறுகலையோ ரடியாகவைத்து
நாலடிக்கறுபானுலு கலைவகுத்துப்
பலசந்தமாக வணங்கலைவைப்பும்
வழுவாதந்தாதித்து முப்பதுசெய்யுட்
பாடுவதெட்டுக் கலையானும்வரப்பெறு
மன்றியும்வெண்பா வகவல்கலித்துறை
பப்பத்தாக வந்தாதித்துப்
பாடுவதுமா மொலியலந்தாதி.

என்பது,

பதினுறுகலையோரடியாகவைத்து, இங்ஙனம்நாலடிக்கறுபத்து நாலுகலைவகுத்துப், பலசந்தமாகவண்ணமும் கலைவைப்பும் தவறும லந்தாதித்து முப்பதுசெய்யுட்பாடுவதூஉ, சிறுபான்மை யெட்டுக்க லையானும் வரப்பெறும், அன்றியும் வெண்பா, அகவல், கலித்துறை ஆகிய இம்மூன்றையும் பத்துப்பத்தாக அந்தாதித்துப்பாடுவதும் ஒலியலந்தாதியாகும். (௧௨௧)

ஈரைந்துவெண்பாக் கலித்துறையீரைந்
தரும்பொருள் புலப்படவந்தாதித்துப்
பாடுவனபதிற் றந்தாதியாகும்.

என்பது,

பத்துவெண்பா, பத்துக்கலித்துறை, பொருட் டன்மைதோ ன்ற அந்தாதித்துப்பாடுவது பதிற்றந்தாதியாகும். (௧௨௨)

வெண்பா நூற்றிு லேனுங்கலித்துறை
நூற்றிுலேனு மந்தாதித்துரைப்பது
நூற்றந்தாதியா நுவலுங்காலே.

என்பது,

நூறு வெண்பாவினுலேனும் நூறுகலித்துறையினுலேனும் அந் தாதித்துக்கூறுவது நூற்றந்தாதியாகும். (௧௨௩)

இளமைப்பருவத் தலைமகன்குலனுங்
குடியும்பிறப்பு மங்கலம்பரம்பரை
யிவற்றுனின்று னென்பதுதோன்ற
மாதர்நெருங்கிய வீதியிடத்தவன்
பவனிவரப்பேதைமை முதலியவேழு
பருவப்பெண்களும் பார்த்துவணங்க
வுலாவந்ததாக வுன்னிநேரிசைக்
கலிவெண்பாவாற் கழறுவதுலாவே.



என்பது,

இளமைப்பருவத்தலைமகனைக் குலம், குடி, பிறப்பு, மங்கலம், பரம்பரை இவற்று னின்றுனென்பது தோன்ற, மாதர் நெருங்கிய வீதியிடத்து அவன் பவனிவரப், பேதை முதலிய ஏழு பருவப் பெண்களும் கண்டுதொழு உலாவந்ததாக, நேரிசைக் கலிவெண்பா வாற் கூறுவது உலாவாகும். (௧௨௪)

கனவிலொருத்தியைக் கண்டுகலவி
யின்பநுகர்ந்தோன் விழித்தபின்னவள்
பொருட்டுமடலூர்வே னென்பதுகலிவெண்
பாவான்முடிப்ப துலாமடலாகும்.

என்பது,

கனவி லொருபெண்ணைக்கண்டு கலவியின்பம் நுகர்ந்தோன், விழித்தபின், அவள் பொருட்டு மடலூர்வேனென்பதைக் கலிவெண் பாவால் முற்றுவிப்பது உலாமடலாகும். (௧௨௫)

அறம்பொருளின்ப மாகியபயனை
யெள்ளிமகடூஉக் காமவின்பத்தைப்
பயனெனக்கொண்டு பாட்டுடைத்தலைமக
னியற்பெயர்க்கெதுகை யியல்புநாடிப்
பகர்ந்தவ்வெதுகைப் படத்தனிச்சொலி
யின்றியின்னிசைக் கலிவெண்பாவாற்
றலைமகனிரந்து குறைபெறுது
மடலேறுவதா யீரடியெதுகை
வரப்பாடுவது வளமடலாகும்.

என்பது,

அறம் பொருளின்பமாகிய பயனை இகழ்ந்து, மங்கையர் காம வின்பத்தைப் பயனெனக்கொண்டு, பாட்டுடைத் தலைமகன் இயற் பெயர்க்குத் தக்கதை எதுகையாக நாட்டிக்கூறி, அவ்வெதுகைப் படத் தனிச்சொலின்றி; இன்னிசைக் கலி வெண்பாவாற் றலைமக னிரந்து குறை பெறுது மடலேறுவதாய், ஈரடி யெதுகையாக வரப் பாடுவது வளமடலாகும். (௧௨௬)

அகவல்வெண்பாக் கலித்துறையாகிய
விவற்றுளொன்றி லந்தாதித்தொடையா
யொருபஃதுரைப்ப தொருபாவொருபது.

என்பது,

அகவல், வெண்பா, கலித்துறை இவற்ருென்றினல் அந்தாதித்துப்பத்துப் பாடுவது ஒருபா வொருபதாகும். (௧௨௭)

அகவல்வெண்பாவு மந்தாதித்தொடையா
யிருபதிணைந்து வரவெடுத்துரைப்பது
இருபாவிருபஃ தென்மனூர்புலவர்.

என்பது,

பத்து அகவலும், பத்து வெண்பாவும் அந்தாதித் தொடையால் இருபதிணைந்து வருவது இருபா விருபதாகும். (௧௨௮)

அகவற்பாவால் விறலிபாணர்
கூத்தர்பொருநர் நால்வருளொருவர்
பரிசிற்குப்போவாரைப் பரிசு
பெற்றுவருவாராற்றிடைக்கண்டு
தலைவன்கீர்த்தியுங் கொடையுங்கொற்றமு
மறைவதாற்றுப் படையாகும்மே.

என்பது,

அகவற் பாவால், விறலி, பாணர், கூத்தர், பொருநர் இந்நால்வருளொருவர் பரிசிற்குப் போவாரைப், பரிசு பெற்று வருவோர் ஆற்றிடைக் கண்டு, தலைவன் கீர்த்தியும் கொடையும் கொற்றமும் கூறுவது ஆற்றுப்படையாகும். (௧௨௯)

அரசருமரசர் தமைப்போல்வாரு
மவைக்கணெடிது நாளாகவைகிய
வழிமருத்துவரு மந்திரிமாரு
முதலியோர்தமக்குக் கண்டுயில்கோடலைக்
கருதியுரைப்பது கண்படைநிலையே.

என்பது,

அரசரும் அரசனைப் போல்வாரும் அவைக்கணெடிது வைகிய வழி, மருத்துவரும் மந்திரிமாரும் முதலியோர்க்குக்கண்டுயில் கோடலைக் கருதிக் கூறுவது கண்படை நிலையாகும். (௧௩௦)

பாட்டுடைத்தலைமகன் பெயரைச்சார
வின்னிசைவெண்பா வெழுபானிருபஃ
தேனுமெழுபா னேனுமைம்பஃ
தேனுமுரைப்பது பெயரின்னிசையே.



என்பது,

பாட்டுடைத் தலைவன் பெயரைச் சார, இன்னிசை வெண்பாவால், தொண்ணூறேனும், எழுபதேனும், ஐம்பதேனும் பாடுவது பெயரின்னிசையாகும். (௧௩௧)

பாட்டுடைத்தலை மகனூரைச்சார
வின்னிசைவெண்பா வெழுபானிருபஃ
தேனுமெழுபா னேனுமைம்பஃ
தேனுமியம்புவ தூரின்னிசையே.

என்பது,

பாட்டுடைத்தலை மகனூரைச் சார, இன்னிசை வெண்பாவால் தொண்ணூறேனும், எழுபதேனும், ஐம்பதேனும் பாடுவது ஊரின்னிசையாகும். (௧௩௨)

பாட்டுடைத்தலைமகன் பெயரைச்சார
நேரிசை வெண்பாத் தொண்ணூறேனு
மெழுபதே னுமைம்பதேனு
மறைவது பெயர் நேரிசையாகும்மே.

என்பது,

பாட்டுடைத் தலைவன் பெயரைச் சார, நேரிசை வெண்பாவால், தொண்ணூறேனும், எழுபதேனும், ஐம்பதேனும் பாடுவது பெயர் நேரிசையாகும். (௧௩௩)

ஊரைச்சாரவுரைப்பதூர் நேரிசை.

என்பது,

பாட்டுடைத் தலைவனூரைச் சார, நேரிசை வெண்பாவால், தொண்ணூறேனும், எழுபதேனும், ஐம்பதேனும் பாடுவது ஊர் நேரிசையாகும். (௧௩௪)

வெண்பாவாற் சிறப்பித்தூரொருபான்
பாவிரித்துரைப்பதூர் வெண்பாவாகும்.

என்பது,

வெண்பாவால் ஊரைச் சிறப்பித்துப் பத்துச் செய்யுட் பாடுவது ஊர் வெண்பாவாகும். (௧௩௫)

வேலும் வேற்றலையும் விலங்காதோங்கிய
வாறுபோற்கோலொடு விளக்குமொன்றுபட்
டோங்குமாறுங்குவ தாகவுரைப்பது
விளக்குநிலையென விளம்பப்படுமே.

என்பது,

வேலும் வேற்றலையும் விலங்கா தோங்கியவாறுபோலச், சோலொடு விளக்கு மொன்றுபட் டோங்குமா றோங்குவதாகக் கூறுவது விளக்கு நிலையாகும். (௧௩௬)

நீவணங்கொருவனினைப் பாதுகாப்ப
நின்னுடைய வழி வழி நீளுவதாக
வெனவியப்புவது புறநிலையென்ப.

என்பது,

நீ வணங்குந் தெய்வம் நின்னைப் பாதுகாப்ப, நின் வழி வழி மிகுவதாகவெனக் கூறுவது புறநிலையாகும். (௧௩௭)

பெரியோர் சேணிடை வருதலாற்பிறந்த
வருத்தந்தீரவாயில் காக்கின்றோற்
கென்வரவினையிறைக்கியம் புதிநீயெனக்
கடைக்கணின்றுரைப்பது கடைநிலையாகும்,

என்பது,

சான்றோர் தூரத்தில் வருதலால் பிறந்த வருத்தந் தீர, வாயில் காக்கின்றவனுக்கு, என்வரவைத் தலைவற் கிசையெனக் கடைக்கணின்று கூறுவது கடைநிலையாகும். (௧௩௮)

கணவனொடுமனைவி கழிந்துழியவர்கட்
பட்டவழிவுப் பாக்கியமெல்லாம்
பிறருக்கெடுத் தறிவுறுத்தித்தாமு
மிறந்து படாதொழிந்த வாயத்தாரும்
வேண்மெயண பெறும் விறலியர்குழாமுந்
தனிப்படருழந்த செயலறுநிலையை
நிகழ்த்துவதுகையறு நிலையாகும்மே.

என்பது,

கணவனொடு மனைவி கழிந்துழி, அவர் கட்பட்டவழிவுப் பொருளெல்லாம் பிறர்க் கறிவுறுத்தித், தாமிறந்து படாதொழிந்த வாயத்தாரும், பரிசில்பெறும் விறலியரும் தனிப்படருழந்து செயலறு நிலையைக்கூறுவது கையறு நிலையாகும். (௧௩௯)

தலைவன்படைத்த தசாங்கநேரிசை
வெண்பாவாக விளைந்து விளம்புத
றசாங்கப்பத்தெனச் சாற்றப்படுமே.



என்பது,

நேரிசைவெண்பாவால் அரசன்படைத்த தசாங்கத்தினைப்பத்துச் செய்யுட்கூறுவது தசாங்கப்பத்தாகும். (௧௪௦)

அரசன்றசாங்க மாசிரியவிருத்த
மையிரண்டறைவது தசாங்கத்தயலே.

என்பது,

அரசன் தசாங்கத்தை யாசிரியவிருத்தத்தாற் பத்துச் செய்யுட் கூறுவது தசாங்கத்தயலாகும். (௧௪௧)

கலித்துறைபத்துங் கலித்தாழிசையும்
விருத்தமுப்பதும் வெற்புநீர்நாடு
வருணனையொடு நிலவருணனைதாமும்
வாண்மங்கலமுந் தோண்மங்கலமு
மறைகுவதரசன் விருத்தமாகும்.

என்பது,

பத்துக்கலித்துறையும் முப்பது விருத்தமும் கலித்தாழிசையுமாக, மலை கடல் நாடு வருணனையும், நிலவருணனையும், வாண்மங்கலமும், தோண்மங்கலமும் பாடிமுடிப்பது அரசன்விருத்தமாகும், இது முடிபுனைந்த வேந்தற்காம். (௧௪௨)

பார்வையைப்பத்துப் பாட்டாலுரைப்பது
நயனப்பத்தென நவிலப்படுமே.

என்பது,

கண்களைப்பத்துச் செய்யுளாற் கூறுவது நயனப்பத்தாகும்.

பருமுலைபத்துப் பாவாலறைவது
பயோதரப்பத்தெனப் பகரப்படுமே.

என்பது,

முலையைப்பத்துப் பாவாலுரைப்பது பயோதரப்பத்தாகும்.

கான்முதன் முடிவரைகலிவெண்பாவாற்
பாடுவது பாதாதிகேச
மாகுமென்மனார் புலமையோரே.

என்பது,

கலிவெண்பாவால் அடிமுதன் முடியளவும் கூறுவது பாதாதிகேசமாகும். (௧௪௫)

கலிவெண்பாவான் முடிமுதற்கால்வரை
யளத்தல்கேசாதிபாதமாகும்

என்பது,

கலிவெண்பாவான் முடிமுதலடியளவும் கூறுவது கேசாதி பாதமாகும். (கசசு)

வெண்பாவகவல் கலித்துறையகவல்
விருத்தஞ்சந்த விருத்தமிவ்வகையே
மாறிமாறியந்தாதித் தொடையாய்ப்
பாடுவதலங்கார பஞ்சகமாகும்.

என்பது,

வெண்பா, கலித்துறை, அகவல், ஆசிரியவிருத்தம், சந்தவிருத்தம் இவ்வகையே மாறி மாறி நூறுசெய்யுளந்தாதித்துப் பாடுவது அலங்காரபஞ்சகமாகும். (கசஎ)

ஐந்து விருத்தத்தாலே யொருதலைக்
காமத்தைக் கூறுவது கைக்கிளை.

என்பது,

ஒருதலைக் காமத்தை ஐந்து விருத்தத்தாற் கூறுவது கைக்கிளையாகும். (கசஅ)

அன்றியும் வெண்பாவாறைந்திரண்டு
பாடுவததன்பாற் படுமெனமொழிப.

என்பது,

ஈதல்லாமலும் முப்பத்திரண்டு வெண்பாவாற் பாடுவதுங் கைக்கிளையாகும். (கசகூ)

மேற்குலத்திற்பிறந்த மின்னைவெண்பா
வொன்பதாலும்வகுப் பொன்பதினாலும்
வழுத்துவதுமங்கல வள்ளையாகும்.

என்பது,

உயர்குலத்திற் பிறந்த மடவரலை வெண்பா வொன்பதாலும் வகுப்பொன்பதாலும் பாடுவது மங்கலவள்ளையாகும். (கருo)



ஆணும்பெண்ணு மவரவர்காதல்
பாணன்முதலிய வுயர்திணையோடுங்
கிள்ளைமுதலிய வஃறிணையோடுஞ்
சொல்லித்தூது போய்வாவெனக்
கலிவெண்பாவா லறைவதுதூது.

என்பது,

ஆண்பாலும் பெண்பாலும், அவரவர்காதலை, பாணன்முதலிய வுயர்திணையோடும், கிளிமுதலிய வஃறிணையோடும் சொல்லித் தூது போய்வாவென்னக், கலிவெண்பாவாற் கூறுவது தூதாகும்.

இடம்பொருள்கால மிவற்றிலொன்றனை
வெண்பா காற்பதால் விளம்பனாற்பது.

என்பது,

இடமும் பொருளும் காலமும் ஆகிய விவற்றுளொன்றனை நாற்பது வெண்பாவாற் கூறுவது நாற்பதாகும். (கருஉ)

கலிவெண்பாவாற் காரிகையார்கண்
கண்டவிளமைத் தன்மையையுடைய
குழமகன்றன்னைப் புகழ்ந்துகூறுவது
குழமகனெனக் குறிக்கப்படுமே:

என்பது,

கலிவெண்பாவால் பெண்கள் தங்கையிற்கண்ட இளமைத் தன்மையையுடைய குழமகனைப் புகழ்ந்துகூறுவது குழமகனாகும். ()

இருபத்தேழெழுத் தாதியாக
உயர்ந்தவெழுத்தடியினவாயெழுத்துங்
குருவுமிலகுவு மொத்துவந்தன
வளவிபற்றுண்டக மெனவுமக்கா
மொவ்வாதுமெழுத்தல கொவ்வாதும்வந்தன
வளவழித்தாண்டக மெனவும்பெயர்பெறும்.

என்பது,

இருபத்தேழெழுத்து முதலாக வுயர்ந்த வெழுத்தடியினவாய், எழுத்துங் குருவும் இலகுவு மொத்துவந்தன அளவியற்றண்டக மெனவும், எழுத்தொவ்வாதும் எழுத்தலகொவ்வாதும் வந்தன அளவழித்தாண்டகமெனவும் பெயர்பெறும். (கருச)

கோதிலோர்பொருளைக் குறித்தையிரண்டு
பாவெடுத்துரைப்பது பதிகமாகும்.

என்பது,

ஒருபொருளைக் குறித்துப் பத்துச்செய்யுளாகக் கூறுவது பதிகமாகும். (௧௫௫)

அகப்பொருளொன் றன்மேலாதல்புறப்பொரு
ளொன்றன்மேலாதல் கற்பித்தொருநூறு
செய்யுளுரைப்பது சதகமாமென்ப.

என்பது,

அகப்பொருளொன்றன்மேலாதல், புறப்பொருளொன்றன்மேலாதல்கற்பித்து, நூறுசெய்யுட்கூறுவது சதகமாகும். (௧௫௬)

பொங்குதலின்றிப் புணரியோர்நாப்ப
ணவிறல் கடனெனவவையடக்கியற்பொருளு
மருட்பாவாலுரைப்பது செவியறிவுறூஉவே.

என்பது,

பொங்குதலின்றிப் புணரியோர் நாப்பணிற்கூறல் கடனென, அவையடக்கி யற்பொருளும் மருட்பாவாற் பாடுவது செவியறிவுறூஉவாகும். (௧௫௭)

கடுவும்வேம்புங் கடுப்பனவாகிய
வெஞ்சொற்றாங்க மேவாதாயினும்
பின்னர்ப்பெரிதும் பயன்றருமென்ன
மெய்ப்பொருளுறமருட் பாவால்விளம்புதல்
வாயுறைவாழ்த்தென வைக்கப்படுமே.

என்பது,

வேம்புங்கடுவும்போல்வனவாகிய வெஞ்சொற்கள், முன்னர்த் தாங்கக்கூடாவாயினும், பின்னர்ப் பெரிதும் பயன்றருமென, மெய்ப்பொருளுற மருட்பாவாற் கூறுவது வாயுறைவாழ்த்தாகும். (௧௫௮)

வழிபடுதெய்வ நிற்புறங்காப்பப்
பழிதீர்செல்வமோ டொருகாற்கொருகாற்
சிறந்துபொலிவா யெனமருட்பாவாற்
புகல்வதுபுறநிலை வாழ்த்தெனப்படுமே.



என்பது,

வழிபடு தெய்வநின்னைப்புறங்காப்பக் குற்றமில்லாத செல்வத்தோடு ஒருகாலைக்கொருகால் சிறந்துபொலிவாயென்று மருட்பாவாலறைவது புறநிலைவாழ்த்தாகும். (௧௫௯)

காமருமுலாவற் காட்சியாலே
யடைந்தகாம மிக்காலவற்றைப்
பிறரொடுமெடுத்துப் பேசிவருந்துதல்
பவனிக்காத லாம்பகருங்காலே.

என்பது,

உலாக்காட்சியா லெய்திய காமமிக்கால், அவை பிறரொடுமொழிந்து வருந்துவது பவனிக்காதலாகும். (௧௬௦)

அகவல் விருத்தத் தானுகுதல்கலித்
தாழிசையானு னுகுதல் சுற்றத்
தோடும்பொலிக வாடூஉச
லாடாமோ வூசலூசலாகும்.

என்பது,

ஆசிரியவிருத்தத்தானுதல், கலித்தாழிசையானுதல், சுற்றத்தோடும்பொலிவதாக, ஆடூஉசல் ஆடாமோவூசல் என்றிறக்கூறுவது ஊசலாகும். (௧௬௧)

கோதிலேழுறையாக்கிக் குறுமக்கண்
முன்னின்றும் புக்கும் போந்தும் விளையாடும்
பெற்றியால் வழுவாமையொன்று
முதலாகவேழீறாய் முறையானே
யியம்புவதெழு கூற்றிருக்கையாகும்.

என்பது,

கோதிலேழுறையாக்கிக், குறுமக்கள் முன்னின்றும் புக்கும் போந்தும் விளையாடும் பெற்றியால் வழுவாமை, ஒன்றுமுதலேழிறுதியாக முறையானேபாடுவது எழுகூற்றிருக்கையாகும். (௧௬௨)

அமரரிடத்து மரசரிடத்து
நடக்குங் காரிய நாழிகையளவிற்
றோன்றியொழுகுவ தாகமுப்பானோ
டிரண்டு நேரிசை வெண்பாவியம்பல்
கடிகைவெண்பாவெனக்கருதினர்புலவர்.

என்பது,

தேவரிடத்தும் அரசரிடத்தும் நிகழுங்காரியம், கடிகையளவிற் றோன்றி நடப்பதாக, முப்பத்திரண்டு நேரிசை வெண்பாவாற் கூறுவது கடிகைவெண்பாவாகும். (௧௬௩)

நேரிசை வெண்பாவாலே நிருபன்
சின்னமாந்த சாங்கத்தினைச் சிறப்பித்து
விரித்தைம்பது தொண்ணூறெழுபதுமுப்
பது நூறெனுமெண்பட வெடுத்துரைப்பது
சின்னப்பூவெனச் செப்பினர்புலவர்.

என்பது,

நேரிசைவெண்பாவால், அரசனது சின்னமாகிய தசாங்கத்தைச் சிறப்பித்து, நூறு தொண்ணூறு எழுபது ஐம்பது முப்பது என்னும் தொகைபடக் கூறுவது சின்னப்பூவாகும். (௧௬௪)

வில்வாளொடுவேல் செங்கோல்யானை
குதிரைநாடூர் குடையிவ்வொன்பதும்
பப்பத்தகவல் விருத்தத்தாலே
யொன்பது வகையுறவுரைப்பதுவிருத்த
விலக்கணமென்மனூரியல்புணர்ந்தோரே.

என்பது,

வில் வாள் வேல் செங்கோல் யானை குதிரை நாடு ஊர் குடை இவ்வொன்பதையும் பத்துப்பத்து அகவல்விருத்தத்தால் ஒன்பதுவகையுறப்பாடுவது விருத்தவிலக்கணமாகும். (௧௬௫)

இளமைகழிந்தறிவு மிக்கோரிளமை
கழியாதவறிவின் மாக்கடமக்கு
மொழியப்படுவது முதுகாஞ்சியாகும்.

என்பது,

இளமைகழிந்து அறிவின்மிக்கோர், இளமைகழியாத அறிவின் மாக்கட்குக் கூறுவது முதுகாஞ்சியாகும். (௧௬௬)

இக்குடிபிறந்தோர்க் கெல்லாமிக்குண
மியல்பென்றுநீயு மவற்றையுடையை
யென்றுமின்னோர் போனீயுமியல்பாக
வீயென்றுமுயர்ந்தோ ரொடுத்துமற்றவனை
வாழ்த்துவதாக வழுத்தலியன்மொழி
வாழ்த்தாமென்ன வழுத்தினர்புலவர்.

என்பது,

இக்குடியிற் பிறந்தோர்க்கெல்லாம் இக்குண மியல்பென்றும், அவற்றைநீயும் இயல்பாகவுடையை யென்றும், இன்னோர்போல நீயும் இயல்பாகவீயென்றும், உயர்ந்தோரவனை வாழ்த்துவதாகக் கூறுவது இயன்மொழிவாழ்த்தாகும். (௧௬௭)

ஒழிபியன் முற்றும்.

**யாப்பிலக்கண முற்றும்.**

ஐந்தாவது

# அணியதிகாரம்.

## சொல்லணியியல்.

சுத்தமெய்ஞ்ஞானச் சுடர்மணிவிளக்கைச்
சித்தமதிருத்திச்செப்புவலணியே.

என்பது,

பரிசுத்தமாகிய மெய்ஞ்ஞான மணிவிளக்கை இதயமலரிலிருத்துதலைச்செய்து, யான் அணியிலக்கணத்தைக் கூறுவேன். ஏகாரமீற்றசை. (௧)

அக்கரமொழியடி யாவதுமாறிப்
புணர்ப்பதுமறிநிலைப் பொருளாகும்மே.

என்பது,

எழுத்தாவது, சொல்லாவது, அடியாவது மாறிப்புணர்வது மறிநிலைப்பொருளாகும்.

வரலாறு.

ஞிமிறு மிஞிறு. எழுத்தும்,
சுரையாழ அம்மி மிதப்ப. சொல்லும்,
குடம்பை தனித்தொழியப் புட்பறந்தற்றே
யுடம்போடுயிரிடைநட்பு.
} அடியும், மடங்கிவந்தமை காண்க. (௨)

அந்தமுதலாத் தொடுப்பதந்தாதி
மடக்காமென்மனூர் மறையுணர்ந்தோரே.

என்பது,

இறுதிமுதல்வரத் தொடுப்பது அந்தாதி மடக்காம்.

வரலாறு.

உலகுடன்விளக்கு மொளிதிகழவிர்மதி
மதிலைனழிக்கும் வளங்கெழுமுக்குடை
முக்குடைக்கீழற் பொற்புடையாதனம்
ஆதனத்திருந்த திருந்தொளியறிவனை
அறிவுசேருள்ளமோ டருந்தவம்புரிந்து
துன்னியமர்ந்த தென்ப
பன்னருஞ்சிறப்பின் விண்மிசையுலகே. (௩)

அக்கரமொழியடி யாவதடுக்கி
வருவதடுக்கு மடக்காகும்மே.

என்பது,

எழுத்தாவது, சொல்லாவது, அடியாவது அடுக்கிவருவது மடக்கணியாம்.

வரலாறு.

நா நா நா தங்கூடிசை நாடுந்தொழிலோவா
தா தா தார மாகவிளைத்தண் மலர்மீதே
வா வா வார்தண் சோலையில்வாழும் வரிவண்டே
யா யா யாளிற்சேர்த்து வதன்பற்கிசையாயால். } எழுத்தும்.

துப்பார்க்குத்துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை. } சொல்லும்.

ஆடுநாகமு மத்திகளும்வளை
ஆடுநாகமு மத்திகையேபுனல்
ஓடுநாகமு முற்றிடலானதி
ஓடுநாகமு மேந்திழையொத்ததே. } அடியும், அடுக்கு மடக்குமாம். (௪)

எழுத்தடிமொழியிடையிட்டு மிடாமலு
மாறிமற்றொருபொருள் வந்துவிளைவது
மடக்காமெனப் பெயர்வைக்கப்படுமே.

என்பது,

எழுத்துகள், அடிகளின்சொற்கள், இடைவிட்டும், இடைவிடாமலும்மாறி, வேறேயொருபொருள் வந்து தோன்றுவது மடக்கணியாம். (௫)

அதுதான், ஓரடிமுதலா நான்கடிகாறுஞ்
சேருமென்மனார் தெளிந்திசினோரே.

என்பது,

அம்மடக்கு, ஓரடிமுதலாக நான்கடியளவு நடக்கும்.

வரலாறு.

துறைவா துறைவார் பொழிற்றுணைவர்நீங்க
உறைவார்க்குமுண்டாங் கொல்சேவல், சிறைவாங்கிப்
பேடைக்குருகாரப் புல்லும் பிறங்கிருள்வாய்
வாடைக்குறுகாமனம். } முதலடியினும்.



கனிவாயிவள் புலம்பக் காலைநீங்கி
யினியாரினியா ரெமக்குப், பனிநா
ளிருவராத்தாங்கு முயிரன்றியெங்குண்
டொருவராந்தாங்குமுயிர். } இரண்டாமடியினும்.

தேங்கானன் முத்தலைக்குந் தில்லைப்பெருந்தகைக்கு
ஓங்காரத்துட்பொருளா மொண்சுடர்க்கு, நீங்கா
மருளாமருளா தரித்துளாக்குமாற்றம்
பொருளாம் புனைமாலையாம். } மூன்றாமடியினும்.

இவளாவுந் தீயுமிழ்வதென் கொலோதோயுங்
கலைமதமான் கட்டிற், றிவளு
மலையார்புனலருவி நீயனுகாநாளின்
மலையாமலையாநிலம். } நான்காமடியினும் மடக்கு. (௬)

எழுவாயடியிரண்டிடையீரடிமுத
லடிமூன்றாமடி யாதியடியொடு
நான்காமடி கடையீரடியிரண்டடி
நாலடியினும்வரு நாடுங்காலே.

என்பது,

முதலடிக்கண்ணும் இரண்டாமடிக்கண்ணும், நடுவிலிரண்டடிக்கண்ணும், முதலடிக்கண்ணும் மூன்றாமடிக்கண்ணும், முதலடிக்கண்ணும் நான்காமடிக்கண்ணும், இறுதியிரண்டடிக்கண்ணும், இரண்டாமடிக்கண்ணும் நான்காமடிக்கண்ணும் வரும்.

வரலாறு.

கிளையாகிளையா கிறைபோயகலா
விளையாவிளையா மிலமா, வளையாள்
குரவாருங் கூந்தற்குமுதவாய்க்கொம்பிற்
புரவாளனீபிரிந்தபோது. } முதலடியிரண்டாமடி.

குரவார் குழலாள் குவிமென்முலைதாம்
விரவாவிரவா மென்றென்ற, வுரவா
வரவாவரவா மெனகிளையாவையம்
புரவாளர்க் கீதோபுகழ். } நடுவிரண்டடி.

அடையாரடையா ரணழித்தற்கின்ன
விடையாடு நெஞ்சமேயேழை, யுடையேர்
மயிலாமயிலா மதர்நெடுங்கண்மாற்றங்
குயிலாமென் றெண்ணல்குழைந்து. } முதலடிமூன்றாமடி.

மானவாமானவா நோக்கின்மதுகரஞ்சூழ்
கானவாங்கூந்தலெங் காரிகைக்குத், தேனே
பொழியாரந்தார்மேலு நின்புயத்துமேலுங்
கழியாகழியா தரவு. } முதலடிநான்காமடி.

மாதருயிர்தாங்கவள்ளல்வருநெறியிற்
பேதுறவுசெய்யும் பெரும்பாந்தள், யாதும்
வளையாவளையா மெனுமாமதமா
விளையா விளையாவெழும்.
} இறுதியிரண்டடி.

மழையார்கொடைத் தடக்கைவாளபயனெங்கோன்
விழையார்விழையார் மெல்லாடை, குழையார்
தழையாமுனைவுங் கனியாமினமு
முழையாமுழையா முறை.
} இரண்டாமடி நான்காமடி. (எ)

எழுவாயடியொழித்தேனையவடியினுங்
கடையொழித்தேனைய காலினுமிரண்டா
மடிதவிர்த்தேனைய வடியினுமூன்று
மடியொழித்தேனையவடியினும்வருமே.

என்பது,

முதலடிதவிர மற்றைய மூன்றடிக்கண்ணும், ஈற்றடிதவிர மற்றைய மூன்றடிக்கண்ணும், இரண்டாமடிதவிர மற்றையமூன்றடிக்கண்ணும், மூன்றாமடிதவிர மற்றைய மூன்றடிக்கண்ணும் வரும்.

வரலாறு.

பாலையாழ்தன்னிற் பதிற்றிரட்டிவெய்தன்றே
மாலைவாய் மாலைவாயின்னிசை, மேலுலை
மேவலர்மேவலர் மெல்லாவிவாட்டாதோ
காவலர் காவலராங்கால்.
} முதலடிதவிர வேனைய மூன்றடி.

இறைவரவிறைவால் வளைகாத்திருந்தியா
ருறைவருறைவார் புயலா, லுறைவாய
வண்டளவுவண்டளவு நாளின்மயிலாலக்
கண்டனவினீர் பொழியுங்கண்.
} ஈற்றடிதவிர வேனையமூன்றடி.

கொடியார்கொடியார் மதின்மூன்றுங்கொன்
படியார்பனைத்தடக்கை கால்வாய்க்-கடியா [று
றரியாறரியா ரெமையாளவோதற்
கரியார் கரியார்களம்.
} இரண்டாமடிதவிர வேனைய மூன்றடி.

மலையுமலையு மகிழ்ந்துறையும் வேயுங்
கலையுங்கலையுங் கடவுள், தொலைவி
லமரியெமக்கரணமென்னுமவர் முன்னிற்
குமரிகுமரி மேற்கொண்டு.
} மூன்றாமடி தவிர வேனைய மூன்றடி. (அ)

அடிதொறுமடங்குவ தாங்கதன்சிறப்பே.



என்பது,

நாலடிக்கண்ணு மடங்கிவருவது, அம்மடக்கினது சிறப்பாகும்.

வரலாறு.

வரையவரையசரஞ் சென்றார்மார்பம்
புரையபுரையவெனப் பொன்னே, யுரைய
னனையகனையதொடை நம்மைவெய்வர்
வினையர்வினையர் விரைந்து.
} நாலடி. (க)

ஓரடிக்கண்ணொழுகிய மடக்கேழா
மவையடியாதியு மந்தமுமிடையினு
மடிமுதலிடையினுங் கடையினுமுதலினு
மிடையினுங்கடையினு முதலிடைகடையினு
மடங்குமென்மனார் மறையுணர்ந்தோரே.

என்பது,

ஓரடிக்கண் நடக்குமடக்கு, ஏழுவகைப்படும். அவை, அடிமுதலினும், அடிநடுவினும், அடியிறுதியினும், முதல் இடையினும், முதல் கடையினும், இடை கடையினும், முதல் இடை கடையினும் மடங்கிவரும்.

வரலாறு.

இளையாரிளையா ருடனாய்முலையின்
வளையாவளையா மனவேண்டுவமை
விளையாவிளையாட் டயருந்தொழிறுன்
தளையாதளையார் பொழிலின்றடமே.
} அடிமுதல்.

அளியாடுமாவங்கண் மாவங்கண்மகிழ்ந்தாறு
விளையாடுமாலந்தமாலந் தக்தாப்பிரிதும்
வளையார்தமகிழ்மான மகிழ்மானமலர்சோர
விளையாளைவெயினன்னை வெயினன்னையிடமேவா.
} அடிநடு.

வளைவாய்கிவர்ந்த வடுமாவடுமா
விளைவாய்நிவர்ந்து விரியாவிரியா
புனைவாயசும்பு புலராபுலரா
விளைவாயிருபா யிடமேயிடமே.
} அடியிறுதி.

கொண்டல்கொண் டலர்பொழிறொறும்
பண்ணையாய்ப் பண்ணையாயத்தன்னார்,
வண்டல்வண்டலர் தாதுகொண்டியற்றலின்
வருமனை மனைமுன்றிற்,
கண்டல்கண்டக மகிழ்செயவோதிமங்
கலந்துறை துறைவெள்ள,
மண்டன்மண்டல முழுதுடன்வளைதரு
வளைதரு மணிவேலை.
} முதல் இடை.

நிரையாநிரையாமணிபோனிறை கோடல்கோடல்
வரையாவரையாமிருண்மூன் வருமாலைமாலை
விரையாவிரையா வெழுமின்னொளிமேகமேக
முரையாமுரையாரினுமொல்லன முல்லைமுல்லை.

முதல் கடை.

வருகம்புளினம்புளினம் பயில்வேலைவேலை
யொருகாலுலவாவுலவா வருமோதமோத
வருகேதகைகேதகை சேர்தருமன்னமன்ன
பெருகாதனவேதன வேரசைமாதர்மாதர்.

இடைகடை.

களைகளையமுளரியரு கடை கடையாகளிர்
கதிர்மணியு மணியும்,
வளைவளையகரதலமு மடைமடையமது
மலருமலையமலைய,
விளையிளைஞர்சிலைவிர வியரியரியின்
மிசைகுவளை மலருமலரும்,
கிளைகிளைசொளிசையளிகண் மகிழ்மகிழ்செய்
கெழுதகைய மருதமருதம்.

முதல் இடை கடை. (௧௦)

முதலடியிரண்டினு மூன்றினுமுதலினு
மிடையடியிரண்டினுமுத லினுமிறுதியு
மிறுதியிரண்டினுமுத லொழித்தேனைய
வடியினுங்கடையய லல்லனமூன்றினு
மூன்றாமடியொழித் தேனையமூன்றினு
மிரண்டாமடியொழித் தேனையவடியினு
மெல்லாவடியினு மெய்துமென்ப.

என்பது,

முதலடியிரண்டினும், மூன்றாமடியினும் முதலடியினும், நடு விரண்டடியினும், முதலடியினும், கடையினும், கடையடியிரண்டினும், முதலடிதவிர மற்றமூன்றடியினும், ஈற்றயலல்லனவாகிய மூன்றடியினும், மூன்றாமடிதவிர மற்றைய மூன்றடியினும், இரண்டாமடிதவிர மற்றைய மூன்றடியினும், அடிகளெல்லா வற்றினும் வரும்.

வரலாறு.

விரைமேவுமதமாயவிடர் கூடுகெடுநாக
விரைமேவுமதமாயவிடர் கூடுகெடுநாக
வரைமேவுமெறியூடுதனி வாரண்மலைநாட
நிரைமேவுவளைச்சோர விவளாவிநிலைசோரும்.

முதலிரண்டடி.

கடன்மேவுகழிகாதன் மிகநாளுமகிழ்வார்க
ளுடன்மேவுநிறைசோர மெலிவாடனுயிர்நோவு
கடன்மேவுகழிகாதன் மிகநாளுமகிழ்வார்க
ளுடன்மேவுபெடைகூடு மறுகாலுமுரையாகொல்.

முதலடிமூன்றாமடி.



கருமாலைதொறுகாதல் கழியாதுதொழுதாலு
முருமாயமதனுக மடுமாறுபுரிவார்முன்
னுருமாயமதனுக மடுமாறுபுரிவார்முன்
வருமாயவினைதீர வொருநாளுமருளார்கொல்.

இடையடியிரண்டு.

மறைநுவல்கங்கைதாங்கினார்
நிறைதவமங்கை தாங்கினார்
குறையெனவண்டர் வேண்டவே
மறைநுவல் கங்கைதாங்கினார்.

முதலடிக் கடையடி.

கொல்லியம்பொருப்பனை மேவார்கோநக
ரில்லெரிமேவுவதி யம்பவேண்டுமோ
வல்லியந்தாமரை வனங்களாயின
வல்லியந்தாமரைவனங்களாயின.

இறுதி இரண்டடி.

வரியவாங்குழன் மாதரிளங்கொடி
யரியவாங்கய தானவனங்களே
யரியவாங்கய தானவனங்களே
யரியவாங்கய தானவனங்களே.

முதலடி தவிர மற்றைய மூன்றடி.

காமரம்பயினீர மதுகரங்
காமரம்பயினீர மதுகரங்
காமரம்பயினீர மதுகரம்
நாமரங்கையுற னினையார்நமர்.

கடையடி தவிர மற்றைய மூன்றடி.

வெண்ணிலாவிரி சோதிவிளங்கிழை
வெண்ணிலாவிரி சோதிவிளங்கிழை
யுண்ணிலாவுயிருய்குவ தெங்ஙனம்
வெண்ணிலாவிரி சோதிவிளங்கிழை.

மூன்றாமடி தவிர மற்றையமூன்றடி.

புன்னையம்பொழில் சூழ்தருகானலே
மன்னர்வந்துகம் வான்றுயர்தீர்க்கலர்
புன்னையம்பொழில் சூழ்தருகானலே
புன்னையம்பொழில் சூழ்தருகானலே.

இரண்டாமடிதவிர மற்றைய மூன்றடி.

கழுநீர்கண்ணுறும்
கழுநீர்கண்ணுறும்
கழுநீர்கண்ணுறும்
கழுநீர்கண்ணுறும்.

நான்கடி. (௧௧)

ஓரெழுத்தொடு முயிரினுமுடலினுமூ
வினத்தினும்வருமென விசைக்கப்படுமே.

என்பது,

ஓரெழுத்தினும், உயிரினும், மெய்யினும், வல்லினம், மெல்லினம், இடையினமாகிய மூவினத்தினும் வரும், அவை, ஓரெழுத்து மடக்கு, உயிர்மடக்கு, மெய்ம்மடக்கு, வல்லினமடக்கு, மெல்லினமடக்கு, இடையினமடக்கு எனப்பெயர் பெறும்.

வரலாறு.

நாநாநாதங்கூடிசை நாடுந்தொழிலோவா
தாதாதாரமாகவிளைத் தண்மலர்மீதே
வாவாவார்தண்சோலையில் வாழும்வரிவண்டே
யாயாயாளிற்சேர்த்து வதன்பற்கிசையாயால், } ஓரெழுத்து.
தாய்ராயாளாராயாடாமாறுதாராயா
யாமாராவாறுடாமாதாமா-தாவாவா
யாவாகாலாறுகாவாகாகாறுநாமா
மாலாறுமாநாதாவா. } உயிரெழுத்து.
தத்தித்தாது தூதிதாது தித்தத்துதி,
துத்தித்துதைதிதுதைத்ததா-துதுதி,
தித்தித்ததித்தித்ததாதெது தித்தித்த
தெத்தாதோதித்தித்ததாது. } மெய்யெழுத்து.
துடித்துத்தடித்துத்துடிப்பெடுத்தகோட
ளுடுத்ததொடைகடுக்கைபொற்போத்-பொடித்துத்
தொடிபடைத்ததோடுடித்ததோகைகூத்தாடக்
கடிபடைத்துக்காட்டிற்றுக்காடு. } வல்லெழுத்து.
மானமேநன்ணுமனமென்மனமென்னு
மானமான்மன்னுநனிகாணு-மீனமா
மானுமினன்மின்னிமுன்முன்னேநண்ணினு
மானுமணிமேனிமான். } மெல்லெழுத்து.
யாழியல்வாயவியலளவாயவொலி
யேழியலொல்லாவாலேலைழயுளை-வாழி
யுழையேலியலாவயில்விழியையோ
விழையேலொளியாலிருள். } இடையெழுத்து. (கஉ)

யாப்பிறுமொழிமுத லக்காந்தொடங்கி
யொவ்வோரெழுத்திடை யொழித்துவாசிக்க
வேறொருசெய்யுள் விளைப்பதுகாதை
கரப்பாமென்மனர் கற்றுணர்ந்தோரே.

என்பது,

செய்யுளிறுதி மொழிக்கு முதலாகிய வெழுத்துத் தொடங்கி, ஓரெழுத்தை நடுவினீக்கி வாசிக்க, வேறொரு பாவுண்டாகுவது காதை கரப்பணியாம்.

வரலாறு.

தாயேயாநோவவா வீருவெமதுரீ
பின்னைவெருவா வருவதொரத்தப
வெம்புகல்வேறிருத்தி வைத்திசினிச்சைகவர்
த்தாவாவருங் கலகீயே. } காதை கரப்பணி.

இதனுள் கருவார்கச்சித், திருவேகப்பத், தொருவாவென்னீ, மருவாகோயே. (கங)



ஓர்பாவினிலிருந் தோர்பாக்குரியன
வக்காம்பொருக்கிக் கொளலாகும்படி
பாடல்கரந்துறைப் பாட்டெனமொழிப.

என்பது,

ஒரு செய்யுளினின்று வேறொரு செய்யுட்குரிய வெழுத்துக்கள் பொருக்கிக் கொளலாகும்படிக்குப் பாடுவது கரந்துறைச் செய்யுளாம்,

வரலாறு.

அகலல்குற்றேரேயதரமமுதம்
பகர்தற்கரிதிடையும் பார்க்கின், முகமதிய
முத்தென்னலா முறுவன்மாதர்முழுநீல
மைத்தடங்கண் வெவ்வேறுவாள். } கரந்துறைச் செய்யுளணி.

இதனுள், அகரமுதலவெழுத்தெல்லாமாதி, பகவன் முதற்றேயுலகு. (கச)

வினாவொடுவிடையும் விரிந்துவருவது
வினாவுத்தரமென விளம்பப்படுமே.

என்பது,

வினாவும் விடையும் விரிந்து வருவது வினாவுத்தர வணியாம்.

வரலாறு.

வந்ததென்குரங்கொன்றில்லை யடைத்ததென்கடல்வாய்மந்தி
சிந்தையின்களிப்பாலென்னைத் தெரியுமோதெரியாதென்றான்
இந்தநன்னகரிலங்கை யிறைவனேதெரியுமெனறான்
விந்தைசேர்திருப்புயத்துவீடண னென்னும்வேந்தே. (கரு)

பதங்களினக்காங் களைப்பகுத்தொன்றற்
குரியவக்காங்களை மற்றொருபதத்தொடு
புணர்த்திநூதனப் பொருள்புதுக்குவதெழுத்து
வருத்தனமாமென வழுத்தப்படுமே.

என்பது,

சொற்களினெழுத்துக்களைப் பிரித்து மற்றொரு சொற்குரிய வெழுத்துக்களை வேறு சொற்களோடு சேர்த்து நூதனமான வருத்தங்களை யுண்டுபண்ணுவது எழுத்து வருத்தனவணியாம்,

வரலாறு.

ஏந்தியசங்கமு மூன்றௌடுத்ததுவும்
பூந்துகிலுமாலுந்தி பூத்ததுவும்-வாய்ந்த
வலைவிலெழுத்தடைவே யோரொன்றேயேற்றத்
தலைமலைபொன் றாமரையென்றும்.
இதனுள்-கம்-நகம்-கநகம்-கோகநகம். (௧௬)

ஒருபொருள்பயப்பதொரு மொழியிருந்தகி
லொவ்வோரக்கர மொழிகளவெவ்வேறு
சொல்லும்பொருளுந் தோன்றுவதெழுத்தழி
வாகுமென்மனா ரறிந்திசினோரே.

என்பது,

ஒருபொருளைத் தருவது ஒரு சொல்லிருந்து, அதிலே யொவ்வொரு எழுத்துக் குறைக்க, வேறு வேறு சொல்லும் பொருளும் தோன்றுவது எழுத்தழி வணியாகும். .

வரலாறு.

பொற்றாணில்வந்தசுடர் பொய்கையில்வந்தவண்ணல்
சிற்றாயன்முன்வனிதையாகி யளித்தசெம்மல்
மற்றியார்சொல்லென்னின் மலர்தூவிவணங்கிநாளும்
கற்றோர்பரவுக நகாரிககாரிகாரி. (௧௭)

இறுதிமுதலாக வெடுத்துவாசிப்பினு
மதுவேயாவதுமாலைமாற்றாகும்.

என்பது,

கடைமுதலாக வெடுத்துவாசித்தாலும் அச்செய்யுளேயாவது மாலைமாற்றணி.

வரலாறு. நீவாதமாதவா, தாமோகராகமோதா, தாவாத மாதவாநீ. ()

இதழ்குவியாவெழுத் தெடுத்துப்பாடுவ
ததுநிரோட்டக மென்றறையப்படுமே.

என்பது,

இதழ்குவியாத எழுத்துக்களாலெடுத்துப் பாடுவது நிரோட்டகவணியாம்.



வரலாறு.

சீலத்தான் ஞானத்தாற் றேற்றத்தாற் சென்றகன்ற
காலத்தாலாராத காதலான்-ஞாலத்தா
ரிச்சிக்கச் சாலச்சிறந்தடியேற்கேயினிதாங்
கச்சிக்கச் சாலைக்கனி. (௧௮)

ஒருபொருடருஞ்சொலோர் மாத்திரைகுறைய
மற்றொருபொருடரன் மாத்திரைச்சுருக்கம்

என்பது,

ஒருபொருளைத்தருஞ்சொல், ஒருமாத்திரை குறைய, வேறொரு பொருளைத் தருவது மாத்திரைச் சுருக்கவணியாம்.

வரலாறு.

நேரிழையார் கூந்தலிலோர் புள்ளிபெற நீண்மரமாம்
நீர்நிலையோர்புள்ளி பெறநெருப்பாஞ், சீரிய
காட்டொன் றொழிப்ப விசையாகு மதனுள்ளு
மீட்டொன்றொழிப்ப மிடறு.

இதனுள், ஓதி, ஒ்தி, ஏரி, எ்ரி, காந்தாரம், கந்தாரம், கந்தரம்.()

மாத்திரைச்சுருக்க மறுதலைப்படவொரு
மாத்திரையேற்றிடின் மாத்திரைவருத்தனம்.

என்பது,

மாத்திரைச்சுருக்க மாறுபடவொரு மாத்திரையேற்றினல் மாத்திரை வருத்தனம்.

வரலாறு.

நீண்மரத்திலொன்றேற நேரிழையார்கூந்தலாம்
பூநெருப்பிலொன்றேறப் பூங்குளமாம், பேணுங்
கழுத்திலொன்றேற விசைகாணுமிசையெல்லா
மெழுத்திலொன்றேறவெழூஉம்.

இதனுள் ஒதி-ஓதி-எரி-ஏரி-கந்தரம்-கந்தாரம். (௨௧)

ஒருகவிக்குட்கவி மூன்றொழுகுவது
திரிபங்கியென்மனார் தெளிந்திசினோரே.

என்பது,

ஒருசெய்யுளில் மூன்று செய்யுள் வருவது திரிபங்கியணி.

வரலாறு.

ஆதரந்தீரன்னைபோ லினியாயம்பிகாபதியே
மாதுபங்காவன்னிசேர் சடையாய்வம்புநீண்முடியாய்
ஏதமுய்ந்தாரின்னல் சூழ்வினைதீரெம்பிரானினியார்
ரோதுமொன்றேயுன்னுவா ரமுதேயும்பர்நாயகனே.
ஆதரத்தீர், மாதுபங்கா,
ஏதமுய்ந்தார், ஓதுமொன்றே. (௧)
அன்னைபோலினியாய், வன்னிசேர் சடையாய்
இன்னல்சூழ வினைதீர், உன்னுவா ரமுதே. (௨)
அம்பிகாபதியே, வம்புநீண்முடியாய்
எம்பிரானினியா, ரும்பர்நாயகனே. (௩) (௨௨)

மூன்றெழுத்தொருபெயர் முதலிடைமுறிக்கின்
முப்பெயரொதிர் முளைப்பதுதிரிபாகி.

என்பது,

மூன்றெழுத்தானாகிய ஒருசொல்லை முதலெழுத்தை நீக்க, ஒரு சொல்லும், நடுவெழுத்தை நீக்க மற்றொரு சொல்லுமாக மூன்று சொற்றோன்றுவது திரிபாகியணி.

வரலாறு.

மூன்றெழுத்துமெங்கோ முதலீற்றொருவள்ள
லேன்றுலகங்காப்பதிடை கடை-யான்றுரைப்பிற்
பூமாரிபெய்துலகம் போற்றிப்புகழ்ந்தேத்துங்
காமாரி காரிமாரி. (௨௩)

ஒருமொழிதொடர்மொழியாக வொண்பொருள்படு
மவற்றையப்பொருட் பிரமறுபொருள்
பெறச்சொலலொற்றுப் பெயர்த்தலாகும்.

என்பது,

ஒருமொழியாகவும், தொடர்மொழியாகவும் பொருள்படு மவற்றை, அப்பொருட்பிர வேறுபொருள்படக்கூறுவது ஒற்றுப்பெயர்த்தலணி.

வரலாறு.

வண்புயலைக்கீழ்ப்படுத்து வானத்தருமலைந்து
மண்குளிரச்சாயல் வளர்க்குமாங்-தண்கவிகைக்
கொங்காரலங்கலன பாயன்கொய்பொழில்சூழ்
கங்காபுரமாளிகை.

இதனுள், கங்காபுரமாளிகை - நிழலைப்பெருக்கும். கங்காபுரமாளும் - அனபாயன்கை - காவல் புரியும். (௨௪)



பாவடிதொடைகளும் படுப்பவேறு
மேவருஞ்சொற்பொருள் வேறுபடாமன்
மற்றொருபாவாய் வருவதுபிறிது
படுபாட்டெனப்பெயர் பகரப்படுமே.

என்பது,

ஒருபாவினடிகளும், தொடைகளும் வேறுபடுப்பச், சொல்லும், பொருளும் வேறுபடாது, வேறொருசெய்யுளாய் வருவது பிறிதுபடு பாட்டணி.

வரலாறு.

தெரிவருங்காதலிற் சேர்ந்தோர்விழையும் பரிசுகொண்டு
வரியளிபாட மருவருவல்லியிடையுடைத்தாய்த்
திரிதருங்காமர்மயிலியலாய கண்ணுத்தேமொழி
யரிவைதன்னேரெனலாகு மெய்ம்மையயாமாடிடமே.
தெரிவருங்காதலிற் சேர்ந்தோர்விழையும், பரிசுகொண்டு
வரியளிபாட மருவரு வல்லியிடையுடைத்தாய்த்,
திரிதருங்காமர் மயிலியலாய கண்ணுத்தேமொழி
யரிவைதன்னேரென,
லாகுமெய்யயா மாடிடமே. (௨௫)

சொல்லணிமுற்றும்.

இரண்டாவது.

## பொருளணி இயல்.

எவ்வகைப் பொருளுமெடுத்ததனியல்பை
யறைவதுதன்மையா மாயுங்காலே.

என்பது,

எவ்வகைப்பட்ட பொருள்களையுந் தெரிந்து அதனுடைய தன்மையைக்கூறல் தன்மையணியாம். (௧)

குணம்பொருடொழில் குலத்தொடு புலப்படுமே.

என்பது,

முற்கூறிய தன்மையணி, பண்பும், பொருளும், வினையும், சாதியுமாகிய நான்கனோடும் புலப்படும்.

வரலாறு.

| | |
|---|---|
| எனைத்தொன்றினிதே காண்காமந்தாம்வீழ்வார்<br>நினைப்பவருவதொன்றில். | பண்புத்தன்மை. |
| கருவியுங்காலமுஞ் செய்கையுஞ்செய்யு<br>மருவினையுமாண்டதமைச்சு. | பொருட்டன்மை. |
| சிறப்பீனுஞ்செல்வமு மீனுமறத்தினூஉங்<br>காக்கமெவனோவுயிர்க்கு. | தொழிற்றன்மை. |
| பத்தித்த கட்டகறை மிடற்றபைவிரியுந்<br>துத்திக்கவை நாத் துளையெயிற்றுப் பொய்த்தவத்தோ<br>ராகந்தானம்பலத்தா னாராவமுதணங்கின்<br>பாகத்தான் சாத்தும்பணி. | சாதித்தன்மை. (௨) |

பண்புந்தொழிலும் பயனுமென்றிவற்றி
னொன்றும்பலவும் பொருளொடு பொருள்புணர்ந்
தொப்புமைதோன்றச் செப்பினஃதுவமை.

என்பது,

குணமும், வினையும், பயனும் ஆகிய இவற்றின் ஒன்றேனும் பலவேனும் பொருளொடுபொருள் புணர்ந்துவமை தோன்றக்கூறுவது உவமையணி.

வரலாறு.

பவளந்தன்னமேனி. பண்பு.
அரிமாவன்ன வணங்குடைத்துப்பு. வினை.
மாரியன்ன வண்கை. பயன். (௩)

விழுமியகுணமுதல் விரிந்துவருவது
விரியாமென்மனார் மெய்யுணர்ந்தோரே.

என்பது,

குணமும், வினையும், பயனும், விரிந்துவருவது விரியுவமை.

வரலாறு.

பால்போலுமின்சொற் பவளம்போற் செந்துவர்வாய்ச்
சேல்போற்பிறழுந்திரு நெடுங்கண்-மேலாம்
புயல்போற்கொடைக் கைப்புனனாடன்கொல்லி
யயல்போலும் வாழ்வதவர். (௪)

அக்குணமுதலிய வடங்கிவருவது
தொகையாமெனப்பெயர் சூட்டப்படுமே.



என்பது,

முற்கூறியபண்பு முதலியமூன்றும் தொக்குவருவது தொகையுவமை.

வரலாறு.

அன்னங்கண்படுதண்பணை நீடநாடளிக்கு
மன்னர்மன்னவன் மண்டமர்கடந்தவொள்வேலின்
மின்னியாங்கவன்முரசென விண்ணிடையதிர்ந்து
பொன்னங்குன்றின்மேலவன் கொடைபோன்மெனப்பொழிந்த. (௫)

ஒருகாற்பொருளுவமாகியுமுவமை
யொருகாற்பொருளாகியுமொருதொடர்ச்சி
யிடையேபோதுவ திதரேதரமே.

என்பது,

ஒருதொடர்ச்சிக்கண், பொருள், ஒருகால் உவமையாகியும், உவமை, ஒருகால், பொருளாகியும் வருவது, இதரேதரவுவமை.

வரலாறு. களிக்குங்கயல்போலு நின்கணின்கண்போற்
களிக்குங்கயலுங்கனிவாய்த்-தளிர்க்கொடியே
தாமரைபோன்மலருநின்முக நின்முகம்போற்
றாமரையுஞ் செவ்விதரும். (௬)

உவமையைக்கூறி மறுத்துப்பொருளை
யுரைத்துமுடிப்பஃ துண்மையாமெனலே.

என்பது,

உவமைப்பொருளைச் சொல்லிப்பொருளை மறுத்துக்கூறல், உண்மையுவமை.

வரலாறு. தாமரையன்றுமுகமேயீ தீங்கிவையுங்
காமருவண்டல்ல கருநெடுங்கண்-டேமருவு
வல்லியினல்லளிவளென்மனங்கவரு
மல்லிமலர்க்கோதையாள். (௭)

புகன்றுமுன்வைத்த பொருட்குநிகர்வதோர்
பொருள்பினும்வைப்பது மறுபொருளாகும்.

என்பது,

முற்கூறிவைத்த பொருளுக்கு ஒப்பாகிய வேறொருபொருளைக் கூறிப் பின்னும் வைப்பது மறுபொருளுவமை.

வரலாறு. அன்னைபோலெவ்வுயிருந் தாங்குமனபாயா
நின்னையாரொப்பர் நிலவேந்த-ரன்னதே
வாரிபுடைசூழ்ந்த வையகத்திற்கில்லையாற்
சூரியனே போலுஞ்சுடர். (௮)

உவமையைப்புகழ்ந்து வமிப்பதுபுகழே.

என்பது,

உவமைப்பொருளைப் புகழ்ந்துகூறி உவமேயப்பொருளை வியப்பது புகழுவமை.

வரலாறு. இறையோன் சடைமுடிமேலெந்நாளுந் தங்கும்
பிறையோர் திருநுதலும்பெற்ற-தறைகடல்சூழ்
பூவலயந்தாங்கு மரவின் படம்புரையும்
பாவைநின்னல் குற்பரப்பு. (௯)

உவமையைப்பழித்து வமிப்பதுநிந்தை.

என்பது,

உவமைப்பொருளை நிந்தித்து உவமேயப்பொருளை வியப்பது நிந்தையுவமை.

வரலாறு. மறுப்பயின்ற வாண்மதியுமம் மதிக்குத்தோற்கு
நிறத்தலருமேரொக்குமேனுஞ்-சிறப்புடைத்துத்
தில்லைப்பெருமானருள்போற்றிருமேனி
முல்லைப்பூங்கோதை முகம். (௧௦)

இதற்கிஃதேயுவமென்பது நியமம்.

என்பது,

இந்தப் பொருளுக்கு இப்பொருளேயுவமை யென்றுகூறல் நியமவுவமை.

வரலாறு. தாதொன்று தாமரையே நின்முகமொப்பதுமற்
றியாதொன்று மொவ்வாதிளங்கொடியே-மீதுயர்த்த
சேலேபணியப் புலியுயர்த்த செம்பியர்கோன்
வேலே விழிக்குநிகர். (௧௧)

நியமித்தவுவமையை நீக்கிப்பிறிதொரு
பொருளொடுபுணருவத நியமமாகும்.



என்பது,

நியமித்தவுவமையை விலக்கி வேறொரு பொருளொடு புணருவது அநியமவுவமை.

வரலாறு. கௌவைவிரிதிரை நீர்க்காவிரிசூழ் நன்னாட்டின்
மௌவல்கமழுங் குழன்மடவாய்-செவ்வி
மதுவார்கவிரே நின்வாய்போல்வதன்றி
யதுபோல்வ துண்டெனினுமாம். (௧௨)

ஐயுற்றிருமையு மறைகுவதைய
வுவமையென்மனாருணர்ந்திசினோரே.

என்பது,

உவமானப்பொருளையும் உவமேயப்பொருளையும் ஐயமுற்றுக் கூறுவது ஐயவுவமை.

வரலாறு. தாதளவிவண்டு தடுமாறுந் தாமரைகொல்
மாதர்விழியுலவு வாண்முகங்கொல்-யாதென்
றிருபாற்கவர் வுற்றிடையூசலாடி
யொருபாற் படாதென்னுளம். (௧௩)

ஐயுற்றதனையனையறிந்து துணிவது
தேற்றமென்மனார் தெளிந்திசினோரே.

என்பது,

ஐயுற்றபொருளைத் தெளிந்து துணிவது தேற்றவுவமை.

வரலாறு. தாமரை நாண்மலருந் தண் மதியால் வீறழியுங்
காமர் மதியுங் கறைவிரவு-மாமிதனாற்
பொன்னைமயக்கும் பொறிசுணங்கி னார்முகமே
யென்னைமயக்குமிது. (௧௪)

புகலருமுவமையைப் பொருளதாக்கிப்
பொருளையுவமைப் பொருளதாக்கி
யுரைப்பதுவிபரீத வுவமையாகும்.

என்பது,

உவமையைப் பொருளாக்கிப் பொருளை யுவமையாக்கிக் கூறல், விபரீதவுவமை,

வரலாறு. திருமுகம் போன்மலருஞ் செய்யகமலங்
கருநெடுங் கண்போலுங் கயல்௧, ளரிவை
யியல்போலுமஞ்ஞை யிடைபோலுங்கொம்பர்
மயல்போலும் யாம்போம்வழி. (௧௫)

பொருளையின்னது போலுமென்றதைய
வேட்கின்றதென்னுள மென்பதுவேட்கை.

என்பது,

பொருளையின்னது போலக்கூற, எனது மனம் இச்சிக்கின்ற தெனல் வேட்கையுவமை.

வரலாறு.

நன்றுதிதென்றுணரா வென்னுடைய நன்னெஞ்சம்
பொன்றதைந்தபொற் சுணங்கிற்பூங்கொடியே-மன்றன்
மடுத்தணைந்ததா மரைநின்வாண் முகத்துக்கொப்பென்
றெடுத்தி யம்பவேண்டுகின்ற தின்று. (௧௬)

ஒருபொருட்குப் பல்லுவமுறல்பலபொரு
ளுவமையென்மனா ருணர்ந்திசினோரே.

என்பது,

ஒருபொருளுக்குப் பலவுவமைவரல் பலபொருளுவமை.

வரலாறு. வேலுங்கருவிளையு மென்மானுங் காவியுஞ்
சேலும்வடுவகிருஞ் செஞ்சரமும்-போலுமா
றேமருவியுண்டு சிறைவண்டறை கூந்தற்
காமருவு பூங்கோதைகண். (௧௭)

விகாரமோருவமையை விகாரப்படுத்திப்
பொருளையுவமித்துப் போதரலாகும்.

என்பது,

ஒருவமையை விகாரப்படுத்திப் பொருளை யுவமித்தொழுகல் விகாரவுவமை.

வரலாறு. சீதமதியி னொளியுஞ் செழுங்கமலப்
போதின்புதுமலர்ச்சியுங் கொண்டு-வேதாத்தன்
கைம்மலரானன்றிக் கருத்தால்வகுத்தமைத்தான்
மொய்ம்மலர்ப்பூங் கோதைமுகம். (௧௮)



விழுமியவொருபொருண்மே லெழும்வேட்கை
வருமனமயக்கம் புலப்படவகுத்து
மொழிவதுமோக வுவமையாகும்.

என்பது,

ஒருபொருண்மேற் றோன்றிய இச்சையினாலே வரப்பட்டமன மயக்கம் வெளிப்படவகுத்துக் கூறல் மோகவுவமை.

வரலாறு. கயல்போலுமென்றுநின் கண்பழிப்பல் கண்ணின்
செயல்போற்பிறழுந் திறத்தாற்-கயல்புகழ்வ
லாரத்தானெம்மருங்குலந்தரள வான்முறுவ
லீரத்தாலுள் வெதும்பும்யான். (௧௯)

கூடாததனைக் கூடுவதாகக்
கொண்டதனொன்றற் குவமையாக்கி
யுரைப்பதுகூடா வுவமையாகும்.

என்பது,

கூடாதவொருபொருளைக் கூடுவதாகக்கொண்டு, அதனையொன்றற்குவமையாக்கிக் கூறல் கூடாவுவமை.

வரலாறு.

சந்தனத்திற் செந்தழலுந் தண்மதியில் வெவ்விடமும்
வந்தனவேபோலுமாலும் மாற்றம்-பைந்தொடியீர்
வாவிக்கமலமலர் முகங்கண்டேக்கறுவா
ராவிக்கிலையோவரண். (௨௦)

உவமையைக்கூறி யொதுக்கிப்பொருளை
யுவமையாக்கி யுரைப்பதுபொதுநீங்
குவமையென்மனா ருணர்ந்திசினோரே.

என்பது,

உவமையைச் சொல்லிநீக்கிப் பொருளையுவமை யாக்கிக்கூறல் பொதுநீங்குவமை.

வரலாறு. திருமருவு தண்மதிக்குஞ் செந்தாமரையின்
விரைமலர்க்கு மேலாந்தகையாற்-கருநெடுங்கண்
மானேயிருளளகஞ் சூழ்ந்தநின் வாண்முகந்
தானேயுவமைதனக்கு. (௨௧)

உவமைப்பொருளுவமேயப்பொருளையும்
வேறுபாடொழித்தொன் றெனும்பொருள் விளங்க
வுரைப்பதுருவக மாமுறைதரினே.

என்பது,

உவமைப்பொருளையும் உவமேயப் பொருளையும் வேறுபாடு நீக்கி யொன்றெனும் பொருள் விளங்கக்கூறல் உருவகவணி.

வரலாறு. பிறவிப்பெருங்கட னீந்துவர்நீந்தா
ரிறைவனடி சேராதார். (௨௨)

தொகுத்துரைப்பது தொகையெனப்படுமே.

என்பது,

ஆகியவென்னு மாட்டேற்றுச்சொல்லை மறைத்துக்கூறல் தொகையுருவகம்.

வரலாறு. அங்கைமலருமடித் தளிருங்கண்வண்டுங்
கொங்கைமுகிழுங் குழற்காருந்-தங்கியதோர்
மாதர்க்கொடியுளதானன் பாவதற்கெழுந்த
காதற்குளதோ கரை. (௨௩)

விரிந்துநிற்பது விரியெனப்படுமே.

என்பது,

ஆகியவென்னு மாட்டேற்றுச்சொல் வெளிப்பட்டு நிற்றல் விரியுருவகம்.

வரலாறு. கொங்கைமுகையாக மென்மருங்குல் கொம்பாக
வங்கைமலரா வடித்தளிரா-திங்க
ளிளிகின்ற மூரலணங்காமெனக்கு
வெளிநின்ற வேனிற்றிரு. (௨௪)

தொக்கும் விரிந்துநிற்பது தொகைவிரி.

என்பது,

ஆகியவென்னு மாட்டேற்றுச்சொல் மறைந்தும் வெளிப்பட்டும் நிற்றல் தொகைவிரியுருவகம்.

வரலாறு. வையந்த கழியாவார்கடலே நெய்யாக
வெய்யகதிரோன்விளக்காகச்-செய்ய
சுடராழியானடிக்கே சூட்டுவன் சொன்மாலை
யிடராழி நீங்குகவேயென்று. (௨௫)



உருவகம் பலபொருளையுமுரூற்றுங்காற்
றம்முளியை புடைத்தாகவுருவகஞ்
செய்வதியையெனச் செப்பினர்புலவர்.

என்பது,

பல பொருள்களையும் உருவகஞ் செய்யுங்கால் தம்முளியை புடையனவாகவைத்து உருவகஞ்செய்தல் இயைபுருவகம்.

வரலாறு. செவ்வாய்த் தளிருநகைமுகிழுங் கண்மலரு
மைவ்வாரளக மதுகரமுஞ்-செவ்வி
யுடைத்தாந் திருமுகமென்னுள்ளத்துள் வைத்தா
துடைத்தாரே யன்றோதுயர். (௨௬)

இயைபிலியியை புடைத்தின்றிப்போதுவ
வாகுமென்மனா ரறிந்திசினோரே.

என்பது,

பல பொருளையுந் தம்முளியை பிலாதுருவகஞ்செய்தல் இயைபிலியுருவகம்.

வரலாறு.

தேனக்கலர் கொன்றை பொன்னாகச் செஞ்சடைமேல்
கூனற் பவளக்கொடியாகத்-தான
மழையாகக்கோடு மதியாகத்தோன்றும்
புழையார் தடக்கைப் பொருப்பு. (௨௭)

ஒன்றனங்கம்பல வற்றினுள்ளுஞ்சில
வுருவகஞ்செய்து செய்யாமலுமுரைப்பது
வியனிலையென்மனார் மெய்யுணர்ந்தோரே.

என்பது,

ஒன்றனதவயவம் பலவினுள்ளும் சிலவற்றை யுருவகஞ் செய்து, செய்யாமலும் வருவது வியனிலை யுருவகம்.

வரலாறு. செவ்வாய் நகையரும்பச் செங்கைத் தளிர்விளங்க
மைவ்வாணெடுங்கண் மதர்த்துலவச்-செவ்வி
நறவலருஞ்சோலைவாய் நின்றதேநண்பா
குறவர்மடமகளாங் கொம்பு. (௨௮)

ஒருபொரு ளுருவகஞ்செய்து மற்றப்பொருண்
மீட்டுமுருவகஞ் செய்வதுருவக
வுருவகமென்மனா ருணர்ந்திசினோரே.

என்பது,

ஒருபொருளை யுருவகஞ்செய்து அப்பொருளை மீட்டும் பிறிதொன்றாக வுருவகஞ்செய்தல் உருவகவுருவகம்.

வரலாறு.

கன்னிதன் கொங்கைக் குவடாங்கடாக் களிற்றைப்
பொன்னெடுந்தோட்குன்றே புனைகந்தா-மன்னவநின்
ணாகத் தடஞ் சேவகமாக யானைப்பல்
சோகித்தருளேறுவண்டு. (௮௯)

ஒருபொருளவயவம் பலவினுள்ளு
மொன்றனையுருவகஞ் செய்துமற்றொன்றனை
யியம்பாதகற்றுவதே காங்கமாகும்.

என்பது,

ஒருபொருளினுடைய வங்கம் பலவினுள்ளும் ஓரங்க முருவகஞ்செய்து, ஓரங்கத்தை யுருவகஞ் செய்யாதுவிடல் ஏகாங்கவுருவகம்.

வரலாறு.

காதலனைத் தாவென்றலவுங் கருநெடுங்க
ணேதிலனல்யாதென்னு மின்மொழித்தேன்-மாதர்
மருண்டமனமகிழ்ச்சி வாண்முகத்துவந்த
விரண்டினுக்கு மென்செய்கோயான். (௯௦)

ஒருபொருளவயவ மெல்லாமுருவக
மாக்கலனேகாங்கப்பொருளாகும்.

என்பது,

ஒன்றனதங்கம் பலவற்றையு முருவகஞ் செய்தல் அனேகாங்கவுருவகம்.

வரலாறு.

கைத்தளிராற்கொங்கை முகிழ்தாங்கிக்கண்ணென்னு
மைத்தடஞ் சேன்மைந்தர் மனங்கலங்க-வைத்ததோர்
மின்னுளதான் மேகமிசையுளதான் மற்றதுவு
மென்னுளதா னன்பாவினி. (௯௧)

ஒருபொருளுருவ கஞ்செய்துமற்றொருபொரு
ளுருவகஞ்செய்யா துரைத்துப்போதா
லேகதேசப்பொரு ளென்மனார்புலவர்.



என்பது,

ஒருபொருளை யுருவகஞ்செய்து வேறாகிய ஒருபொருளை யுருவகஞ்செய்யாது வரல் ஏகதேச வுருவகம்.

வரலாறு. உரனென்னுந் தோட்டி யானோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்புக்கோர்வித்து. (௯௨)

15-4-53

பலருமொருபொருளிற் பலதருமங்
களினாற் பல் பொருள்களையெடுத்துரைத்தல்
பலபடப் புனைவெனப் பகரப்படுமே.

என்பது,

ஒருபொருளிற் பலரும் பலவறங்களால் பல பொருள்களை யெடுத்துக்கூறல் பலபடப்புனைவணி.

வரலாறு.

ஆரணங்காணென்பரந்தணர் யோகியராகமத்தின்
காரணங்காணென்பர் காமுகர் காம நன்னூலதென்பர்
ஏரணங்காணென்பரெண்ண ரெழுத்தென்பரின் புலவோர்
சீரணங்காய சிற்றம்பலக் கோவையைச் செப்பிடினே. (௯௩)

ஒப்புமையா லொருபொருளை மற்றொரு
பொருளதாகப் புனைவதுமயக்க
வணியாமென்மனா ரறிந்திசினோரே.

என்பது,

ஒப்பினாலொருபொருளை வேறொரு பொருளாகக்காணல் மயக்கவணி.

வரலாறு.

மழைக்கண் மங்கையர் பயிறரமரகதமணியி
னிழைத்தசெய்குன்றிற் பைங்கதிர் பொன்னிலத்தெய்தக்
குழைத்தவைந்தரு நீழலிற் குலவுமானினங்க
டழைத்தபுல்லெனவினாவொடுதனித்தனி கறிக்கும். (௯௪)

ஒப்புமையா லொருபொருளைநோக்குபு
இதுவோவதுவோவெனச் சந்தேகப்
படுவதையப் பொருளாம்பகர்தரினே.

என்பது,

ஒப்பினொரு பொருளைப்பார்த்து, இதுவோவதுவோவெனச் சந்தேகப்படல் ஐயவணி.

வரலாறு.

அணங்குகொலாய் மயில கொல்லோகனங்குழை
மாதர்கொன்மாலு மென்னெஞ்சு. (௩௫)

ஒருபொருட்கொரு பொருளுவமையாக
வெடுத்துக்காட்டுவ தெடுத்துக்காட்டுவமை
யாகுமென்மனா ரறிந்திசினோரே.

என்பது,

ஒரு பொருளுக்கு வேறொருபொருளை உவமையாக வெடுத்துக் காட்டல் எடுத்துக் காட்டுவமை.

வரலாறு. அகரமுதல வெழுத்தெல்லாமாதி
பகவன் முதற்றேயுலகு. (௩௬)

பேசருமொரு காரியம் பிறப்பதனை
யருமையுடையன வாகக்கூறல்
கூடாமையென்மனார் குறிப்புணர்ந்தோரே.

என்பது,

ஒருகாரியம் பிறப்பதை யருமையாகக்கூறல் கூடாமையணி.

வரலாறு. அடுக்கலையோர் கையினலாயச்சிறுவ
னெடுக்குமெனலா ரறிவாரிங்கு. (௩௭)

காரணமோரிடத்திருப்பக் காரியம்
வேறொருமருங்கின் விளைவதாக
வரன்றொடர் பின்மையாம் வழுத்துங்காலே.

என்பது,

காரணமொருவிடத் திருப்பக் காரியம் வேறோரிடத்துப் பிறந்ததாய்வரல் தொடர்பின்மையணி.

வரலாறு. வேறொருமாதர்மேல் வேந்தனகநதியா
லூறுதரவிம் மாதுயிர்வாடுங்-கூறி
னிருவரோமெய் வடிவினேந்திழை நல்லா
ரொருவரோ தம்மிலுயிர். (௩௮)



பொருத்தமில் பொருட்குத் தானொருபொருத்த
மியம்புவ தகுதியின்மையாகும்.

என்பது,

பொருத்தமில்லாத பொருளுக்குத் தானொரு பொருத்தங்கூறல் தகுதியின்மையணி.

வரலாறு. பொன்போலுங் கள்ளிப்பொறி யறக்குங்கானலிலே
யென்பேதை செல்லற்கியைந்தனளே-மின்போலு
மானவேன் முட்டைக்கு மாறுயதெவ்வர்போங்
கானவேன் முட்டைக்குங்காடு. (௪-)

தகுதியாமிரு பொருட்கெக்குச சம்பந்த
மறைவது தகுதியென்றறையப்படுமே.

என்பது,

தகுதியாகிய இரண்டு பொருள்களுக்குச் சம்பந்தங்கூறல் தகுதியணி.

வரலாறு. இந்தத் தாளவடமேந்திழை நின் கொங்கைகளிற்
சந்தமுறச்சேர்தறகும். (௪௰)

அரிதொருபயனைக் கருதியதற்குப்
பகையாமுயற்சிபணல் வியப்பாகும்.

என்பது,

அரிதாகிய வொரு பிரயோசனத்தையெண்ணி அதனுக்குப் பகையாகிய முயற்சிசெய்தல் வியப்பணி.

வரலாறு. ஓதுந்திறத்தாலுயர்ந்தோர் கடாழ்குவரோப்
போதமுயர் வெய்தற் பொருட்டு. (௪௧)

ஆதாரத்தினு மாதேயத்தைப்
பெரிதாயுரைப்பது பெருமையாகும்.

என்பது,

ஆதாரப்பொருளினும் ஆதேயப்பொருளைப் பெரிதாகக் கூறல் பெருமை.

வரலாறு. உலகமுழுதடங்கு மாவிசும்பிலுன்ற
னலகில்குண மடங்காவாம். (௪௨)

ஆதேயத்தினு மாதாரத்தைச்
சிறுமையாகச் செப்புதல்சிறுமை.

என்பது,

ஆதேயப்பொருளினும் ஆதாரப்பொருளைச்சிறுமையாகக் கூறல் சிறுமையணி.

வரலாறு. விரலாழி கைவளையாய் விட்டதினியார்த்தோ
வரலாழிக்கென் செயுமெம்மாது. (௬௩)

ஆதாரம்-பெருமை. ஆதேயம்-சிறுமை.

ஒன்றற்கொன்றுபகரித்தலையுரைத்த
லொன்றற்கொன்றுதவிப்பொருளாகும்.

என்பது,

ஒன்றனுக்கொன்று பகரித்தலைக் கூறல் ஒன்றற்கொன்றுதவியணி.

வரலாறு. திங்களிரவால் விளங்குஞ் செப்புங்கதிர்த்திங்கள்
கங்குலினாலே விளங்குங்காண். (௬௪)

ஆதாரமில்லா திருப்பவாதேய
இருப்பையுரைப்பது சிறப்புநிலையாகும்.

என்பது,

ஆதாரப்பொருளில்லாதிருக்க ஆதேயப் பொருளிருக் கையைக் கூறல் சிறப்புநிலை.

வரலாறு. தின்கரனில்லாமலவன் செய்யகதிர்க
ளினிதிலங்கும் தீபத்திருந்து. (௬௫)

அடைவதுபற்பல விடங்களிலொருபொருண்
முறையிற்படர்ச்சி யாமெனமொழிப.

என்பது,

ஒருபொருள் பற்பல விடங்களி லுறைவது முறையிற் படர்ச்சி.



வரலாறு.

நஞ்சமேநீபண்டை நாளினதிபதிதன்
னெஞ்சிலிருந்தாய்கதன்பினீங்கியே-செஞ்சடிலச்
சங்கரனார் கந்தரத்திற் சார்ந்திக் கொடியோன்வாய்
தங்குதியிக் காலந்தனில். (௬௬)

இழிவாம்பொருள் கொடுத்துயர் வாகியபொருள்
வாங்குவமாற்று நிலைப்பொருளாகும்.

என்பது,

இழிவாகிய பொருளைக் கொடுத்துயர்வாகிய பொருளை வாங்கல் மாற்றுநிலை.

வரலாறு. சடாயுகிழவுடம்பைத் தான்கொடுத்துப்பெற்றான்
கெடாததொரு கீர்த்தியுடம்பு. (௬௭)

ஒருபொருளோரிடத்திலையென நீக்கி
வேறோரிடத்துள தெனவெடுத்தியம்பல்
ஒழித்துக்காட்டென வுரைக்கப்படுமே.

என்பது,

ஒரு பொருளொருவிடத்து இல்லையென்று நீக்கி வேறோரிடத் துண்டென்று கூறல் ஒழித்துக்காட்டு.

வரலாறு. சிறைபடுவபுட் குலமேயன்றி நின்மேயத்
திறைவமக்கட்குளில. (௬௮)

இகலின்மையினாலே யொருகாலங்
கூடத்தகும் பொருட்குக் கூறாங்கூறல்
கூட்டமெனப்பெயர் குறிக்கப்படுமே.

என்பது,

பகையில்லாமையா லொருகாலஞ் சேரத்தகுந்த பொருள்களுக்குக் கூட்டத்தைக்கூறல் கூட்டவணி.

வரலாறு.

நின்சீருருவும் வெளிப்படுதேனைக்கி நோக்கிவெய்துயிர்க்கு
மென்பூருகவிளமுலைமேற் புல்லுமுனிந்தாளெனவருந்து
மன்போடேநீர்த்தனன் போனகைக்கு மகன்றாயெனவெளியிற்
பின்போதரு நல்லுணர்விழந்த பித்தர்போலப் பேதுறுமால். (௬௯)

ஆற்றவொருவ னாரம்பித்தவையொரு
காரணவுதவியாற்கைப் படலதுதான்
எளிதின்முடிபென வியம்பப்படுமே.

என்பது,

ஒருவன் செய்யத்தொடங்கியகாரியம் வேறொரு காரணவுதவியாலெளிதின்முடிதல் எளிதின்முடிபணி.

வரலாறு. மதிநுதலாட்கியானூடன் மாற்றத்தொழும்போ
அழகியமுகமெல் செய்தன்மெலிந்து. (௫௰).

முன்னியகாரிய முயற்சியில்லாமற்
சித்திப்பதின்பமாஞ் செப்புங்காலே.

என்பது,

தானினைத்த காரியமுயற்சியின்றிக் கிடைத்தல் இன்பவணி.

வரலாறு. தன்னாயகன் விழைந்த தையலையேதூதாக
வன்னான் கனுய்த்தாளணங்கு. (௫௧)

கோதறவிரும்பும் பொருளைக்குறித்தே
யேதமின்முயற்சி யெடுத்ததற்கிகல்பொரு
ளடைவது துன்பமென் றறையப்படுமே.

என்பது,

தான் விரும்பிய பொருளைக்குறித்து முயற்சிசெய்து அதற்குப் பகையாகிய பொருளடைதல் துன்பவணி.

வரலாறு. சோருஞ் சுடர்விளக்கைத் தூண்டுகையிலவிந்த
தாருமிடர் கூரவகத்து. (௫௨)

ஒன்றன்குணங் குற்றங்களான் வேறொன்
றற்கவையுள வாதலையறிவித்த
லகமலர்பென்மனா ரறிந்திசினோரே.

என்பது,

ஒன்றனது குணத்தினானும் குற்றத்தினானும் வேறொன்றற்கு, அவையுளவாதல் அகமலர்ச்சியணி.



வரலாறு.

இக்கற்பினன்மூழ்கித் தகைமைசெயுமோ வெனையென்
றக்கங்கை கொள்ளுமவா. (௫௩)

ஒன்றன் குணங்குற்றங்களால் வேறொன்
றற்கவையுள வாகாமையைக்கூற
லிகழ்ச்சியென்மனா ரியல்புணர்ந்தோரே.

என்பது,

ஒன்றனது குணத்தினானும், குற்றத்தினானும் வேறொன்றற்கவையுளவாகாமையைக்கூறல் இகழ்ச்சி.

வரலாறு. ஆழவமுக்கி முகக்கினுமாழ்கடனீர்
நாழிமுகவாது நானாழி-தோழி
நிதியுங்கணவனு நேர்படினுந்தன்றன்
விதியின் பயனேபயன். (௫௪)

குற்றத்தாற் குணங்குறுகுதனோக்கி
யக்குற்றத்தினையவாவுதல்வேண்ட
லணியாமென்மனா ரறிந்திசினோரே.

என்பது,

குற்றத்தினாலே குணமுண்டாதலையறிந்து அக்குற்றத்தை விரும்பல் வேண்டலணி.

வரலாறு.

வெண்டிரு நீறுபுனையுமாதவர்க்கு விருந்துசெய்தறு பெருமிடியுங்கொண்டாடல் விரதத்திலக்கும் யாக்கையுங்கொடியனுக்கருளு நாளுளதோ. (௫௫)

பொதுக்குணத்தா லிருபொருள்களுக்குரிய
வேற்றுமை வெளிப்படாதிருப்பது மறையே.

என்பது,

பொதுமைக்குணத்தா லிரண்டுபொருள்களுக்கு உரிய வேறுபாடுதோன்றாமை மறையணி.

வரலாறு.

பேதமுறத்தோன்றாதிப் பேதையியற்கைச் சிவப்பாற்
பாதமுறவூட்டிய செம்பஞ்சு. (௫௬)

ஓதிய வொப்புமையாலிருபொருட்கு
விசேடம் விளங்காதிருப்பது பொதுமை.

என்பது,

ஒப்புமையா லிரண்டுபொருள்களுக்கு விசேடம் விளங்காதிருப்பது பொதுமையணி.

வாலாறு. வண்பதும வாவி யடைந்தமட வார்வதனம்
பண்பினறியப்படா. (௫௭)

ஓதும்பொதுக்குணத் தொப்புமையுடைய
விருபொருட்கொரு காரணத்தால் வேற்றுமை
வெளிப்படன்மறையாமையாம் விளம்பிடினே.

என்பது,

பொதுக்குணத் தொப்புமையுடைய இரண்டு பொருள்களுக்கு ஒரு காரணத்தால் வேற்றுமைதோன்றல் மறையாமையணி.

வாலாறு.

ஒழுகுறுமருவியீட்ட மொலியினுனகு வெண்டிங்கள்
பழகுறாமுடற்களங்கால் பாகசாதனன் கூர்ங்கோட்டு
மழகளிறுமிழ்மதத்தான் மலர்மிசைக்கடவுளூர்தி
யழகுறுநடையாலன்றி யறிதரப்படாவக்குன்றில். (௫௮)

உலகவழக்கைத் தழுவியுரைப்பது
உலகவழக்கு நவிற்சியாகும்.

என்பது,

உலகவழக்கைத் தழுவிக்கூறல் உலகவழக்கு நவிற்சியணி.

வாலாறு.

அண்ணனீ பேசாதைந்தாறுமாதம் வரையிற்
கண்ணைமூடிக்கொண்டிரு. (௫௯)

உலகவழக்கத்தொடு வேறொருபொருண்
மனங்கொண்டிருப்பது வல்லோர் நவிற்சி.

என்பது,

உலகவழக்கச் சொல்லோடு வேறொரு பொருளுட்கொண்டிருப்பது வல்லோர் நவிற்சியணி.



வாலாறு. பறிமலர்ப்பூங் குஞ்சியாய் பாம்பே பாம்பின்கா
லறியுமுலகத்தென்றறி. (௬௦)

குணந்தொழிலாக்கங் குலங்குறித்தொருசொல்
ஒருவயினின்றும் பலவயிற்பொருடரிற்
றீபகமூவிடத் தியலுமென்ப.

என்பது,

பண்பும் வினையும் பொருளும் சாதியும் குறித்தொருசொல் ஓரிடத்திருந்தும் பலவிடத்திருக்கும் பொருளைத்தரின் தீபகவணியாம், அது, முதலிடை கடையாகிய மூன்றிடத்திலும் புலப்படுமெனவே, முதனிலைத்தீபகம், இடைநிலைத்தீபகம், கடைநிலைத்தீபகமெனமூன்றாம், அவை, குணம், தொழில், சாதி, பொருள் என்பவற்றோடும் கூடிப் பன்னிரண்டாம்.

வாலாறு.

| | |
|---|---|
| சேந்தன்வேந்தன் றிருநெடுங்கண்டெவ்வேந்த<br>ரேந்துதடந் தோளிழிகுருதி-பாய்ந்த<br>திசையனைத்தும் வீரச்சிலை பொழிந்தவம்பு<br>மிசையனைத்தும் புட்குலமும்வீழ்ந்து. | முதனிலைச்குணத் தீபகவணி. |
| சரியும்புனை சங்குந்தண்டளிர் போன்மேனி<br>வரியுந்தனதடஞ்சூழ்வம்புந்-திருமா<br>னரந்தழுவுந் தடந்தோளனபாயன்<br>கோரந்தொழுதகொடிக்கு. | முதனிலைத் தொழிற்றீபகம். |
| தென்றலனங் கன்றுணையாஞ் சிறுகொம்பர்<br>மன்றறலைமகனும் வான்பொருண்மேற்-சென்றவர்க்<br>காற்றவிடுதூதாகுந் தங்கும்பெரும்புலவி [குச்<br>மாற்றவருவிருந்துமாம். | முதனிலைச் சாதித்தீபகம். |
| முருகவேள்சூர்மா முதறடிந்தான்வள்ளி<br>புரிகுழன்மென்மாலை புனைந்தான்-சரணளித்து<br>மேலாயவானோர்வியன் சேனைதாங்கினான்<br>வேலானிடை கிழித்தான்வெற்பு. | முதனிலைப் பொருட்டீபகம். (௬௧) |

மொழியப்பட்டபா முற்போந்த
பெயரோபின்னும் பெயர்ந்துவருவது
பின்வருநிலையெனப் பேசப்படுமே.

என்பது,

சொல்லிய செய்யுளின் முன்வந்த சொல்லேபின்னும் பெயர்ந்து பலவிடங்களினும் வருவது பின்வருநிலையணி.

வரலாறு. வைகலும்வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும்வைகலை வைகுமென்றின் புறுவர்
வைகலும்வைகற்றம் வாணாண்மேல்வைகுதல்
வைகலைவைத் துணராதார். (௬௨)

முன்வருசொல்லும் பொருளும் பலவயிற்
பின்னும்வருமெனிற் பின்வருநிலையே
கோதறு மொருபொருள் குறிப்பிற் றடுப்பது
முன்னவிலக்கென மொழியப்படுமே.

என்பது,

ஒரு பொருளைக் குறிப்பினால் விலக்குவது முன்னே விலக்கணி.

வரலாறு.

முல்லைக்கொடி நடுங்க மொய்காந்தள் கைகுலைப்ப
வெல்லையின வண்டெழுந்திரங்க-மெல்லியன்மேல்
தீவாய் நெடுவாடைவந்தாற் செயலறியேன்
போவா யொழிவாய் பொருட்கு,

விலக்கணி வன்சொல், வாழ்த்து முதலியன
பலவுள, அவைபெரும்பயனின்மையாற்கூறா
தொழிந்தனம், வந்துழிக்காண்க. (௬௩)

ஆதியிலொரு பொருளாரம்பித்தது
முடித்தற்குப் பின்னொருசொன்மொழிவது
வேற்றுப்பொருள் வைப்பாமெனமொழிப.

என்பது,

முன்னொருபொருளைத் தொடங்கி, அப்பொருண் முடித்தற்குப் பின்னொரு பொருளைக்கூறல் வேற்றுப் பொருள்வைப்பணி.

வரலாறு. புறந்தந் திருளிரியப்பொன்னேமியுய்த்துச்
சிறந்தவொளி வளர்க்குந்தேரோன்-மறைந்தாற்
புறவாழிசூழ்ந்த புவனத்தேதோன்றி
யிறவாது நிற்கின்றார் யார். (௬௪)

மாறுபடும்பொருள் வைத்துமுடிப்பது
முரணிற்றோன்றலா மொழியுங்காலே.

என்பது,

மாறுபடும் பொருளைக்கூட்டி முடிப்பது முரணிற்றோன்றல் வேற்றுப் பொருள்வைப்பு.



வரலாறு.

வெய்யகுரற்றோன்றி வெஞ்சினவேறுட்கொளினும்
பெய்யுமழை முகிலைப்பேணுவரால்-வையத்
திருள்பொழியுங் குற்றம் பலவெனினும் யார்க்கும்
பொருள்பொழிவார் மேற்றேபுகழ். (௬௫)

பொருந்தாப்பொருளைப் பொருந்தவைப்பது
மருந்தாப்பிறபொருள் வைப்பெனப்படுமே.

என்பது,

பொருந்தாதபொருளைச் சேர்த்துமுடிப்பது பிறபொருள்வைப்பு.

வரலாறு. ஆரவடமுமதி சிதசந்தனமு
மீரநிலவு மெரிவிரியும்-பாரிற்
றுதிவகையான் மேம்பட்டதுப்புரவுந்தத்தம்
விதிவகையான் வேறுபடும்.
கூடாவியற்கை யெனினுமமையும். (௬௬)

கூடும்பொருளைக் கூட்டியுரைப்பது
கூடுமியற்கையாங் குறிக்குங்காலே.

என்பது,

கூடும்பொருளைச் சேர்த்துக்கூறல் கூடுமியற்கை வேற்றுப் பொருள்வைப்பணி.

வரலாறு.

பொய்யுரையா நண்பாபுனைதேர் நெறிநோக்கிக்
கைவளைசோர்ந்தாவி கரைகுவரான்-மெய்வெதும்பப்
பூத்தகையுஞ் செங்காந்தட்பொங்கொலி நீர்ஞாலத்துத்
தீத்தகையார்க் கிதோசெயல். (௬௭)

இருமையுமியைவன விருமையியற்கை.

என்பது,

கூடாவியற்கையும் கூடுமியற்கையும் பொருந்துவன இருமையியற்கை வேற்றுப்பொருள் வைப்பணி.

வரலாறு.

கோவலர்வாய் வேய்ங்குழலையன்றிக் குரைகடலுங்
கூவித்தமியோரைக் கொல்லுமால்-பாவாய்
பெரியோரும்பேணாது செய்வரேபோலுஞ்
சிறியோர் தமக்கியற்றுந் தீங்கு. (௬௮)

உரைப்பினுங் குறிப்பினு மொப்புடையிருபொருள்
வேற்றுமைப்படவரின் வேற்றுமையாகும்.

என்பது.

சொல்லினும் குறிப்பினும் ஒப்புடைய இரண்டுபொருள் வேற்றுமைப்படவரல் வேற்றுமையணி.

வரலாறு. அங்கண்விசும்பின கனிலாப்பாரிக்குந்
திங்களுஞ் சான்றோரு மொப்பர்மற்-றிங்கண்
மறுவாற்றுஞ் சான்றோரஃதாற்றார் தெருமந்து
தேய்வரொருமாசுறின்.

வேற்றுமையெனினும் விதிரேகமெனினுமாம். (௬௯)

பொருள்வேற்றுமைப்படல் பொருள்வேற்றுமையே.

என்பது,

பொருள் வேற்றுமைப்படுவது பொருள் வேற்றுமையணி.

வரலாறு. ஓங்கலிடை வந்துயர்ந்தோர் தொழவிளங்கி
யேங்கொலி நீர்வையத்திருளகற்று-மாங்கவற்றுண்
மின்னேர்தனியாழி வெங்கதிரொன்றேனையது
தன்னேரில்லாத தமிழ். (௭௦)

சாதிவேற்றுமைப்படுவது சாதியாகும்.

என்பது,

சாதி வேற்றுமைப்படல் சாதி வேற்றுமையணி.

வரலாறு. வெங்கதிர்க்குஞ் செந்தீவிரிசுடர்க்கு நீங்காது
பொங்கு மதியொளிக்கும் போகாது-தங்கும்
வளமையான் வந்தநெறி மயங்குமாந்தர்க்
கிளமையான் வந்தவிருள். (௭௧)

குணம்வேற்றுமைப்படுவது குணமாகும்.

என்பது,

குணம் வேற்றுமைப்படல் குண வேற்றுமையணி.



வரலாறு.

சுற்றவிற் காமனுஞ் சோழப்பெருமானுங்
கொற்றப்போர்க் கிள்ளியுங்கே ழொவ்வார்-பொற்றொடி
யாழியுடையான் மகன்மாயன் சேயனே
கோழியுடையான் மகன்.

மாயன்-கறுப்பு. சேயன்-சிவப்பு.
கோழி-உறையூர். (௭௨)

முயற்சியால் வேறுபடுவதுமுயற்சி
வேற்றுமையென்மனர் மெய்யுணர்ந்தோரே.

என்பது,

முயற்சியால் வேறுபடல் முயற்சி வேற்றுமையணி.

வரலாறு.

புனனாடர் கோமானும் பூந்துழாய்மாலும்
வினைவகையான் வேறுபடுவர்-புனனாட
னேற்றெதிர்ந்து மாற்றலர்பா லெய்தியபார்மாயவனு
மேற்றிரந்து கொண்டமையா லின்று. (௭௩)

இருபொருள்புணர்ந்த வற்றியல்பெடுத்துரைப்பி
லேய்ப்பினுமுயரினு மிருபொருள்வேற்றுமை.

என்பது,

இரண்டு பொருள்கூடி அவற்றி னிலக்கணம் கூறுங்கால், ஒப்பினும் உயரினும் இருபொருள் வேற்றுமையணி.

வரலாறு. மலிதேரான் கச்சியுமா கடலுந்தம்மு
ளொலியும் பெருமையுமொக்கு-மலிதேரான்
கச்சிபடுவ கடல் படாகச்சி
கடல்படுவ வெல்லாம் படும். (௭௪)

வருபொருளொதுக்கி வேற்றுமைப்படவருவது
விலக்குவேற்றுமை யெனவிளம்பப்படுமே.

என்பது,

வருகிற பொருளை விலக்கி வேற்றுமைப்படவரல் விலக்கு வேற்றுமையணி.

வரலாறு. தம்மாற்பயன் றூக்காதியாவரையுந் தாங்குகினுங்
கைம்மாற்றுங் காலமுடைத்தன்றே-யெம்மாவி
யன்னவனையாழி யனையாயனைமலராண்
மன்னவனை மானுமோவான். (எரு)

ஒன்றன்வினையறிந் துரைக்குங்காலை
யுலகறிகாரண மொழித்துப்பிறிதொரு
காரணமியல்பினுங் குறிப்பினும்புலப்படல்
விபாவனையென்மனார் மெய்யுணர்ந்தோரே.

என்பது,

ஒன்றனது தொழிலைக்கண்டு கூறுங்காற் பலருமறியுங் காரணத்தை நீக்கி வேறொரு காரணமாக இயல்பினானும் குறிப்பினானும் தோன்றல் விபாவனையணி.

வரலாறு. தீயின்றி வேந்தமியோர் சிந்தைசெழுந்தேறல்
வாயின்றி மஞ்ஞைமகிழ்தூங்கும்-வாயிலா
ரின்றிச்சில ருடறீர்ந்தா ரமரின்றிக்
கன்றிச்சிலை வளைத்தகார். (எசு)

எண்ணியபொருண் மறைத்தேயதுபுலப்பட
வேறொருபொருளை விளம்புவதொட்டே.

என்பது,

கருதிய பொருளைத் தொகுத்து மற்றது வெளிப்படுத்தற்கு வேறொன்றைக் கூறல் ஒட்டணி.

பிறிது மொழியணியெனினுஞ் சுருக்கணியெனினு மொக்கும்.

வரலாறு. வெறிகொளி னச்சுரும்பர் மேய்ந்ததோர்காவிக்
குறைபடுதேன் வேட்டுக்குறுகு-நிறைமதுசேர்ந்
துண்டாடுந் தன்முகத்தே செவ்வியுடையதோர்
வண்டாமரை பிரிந்தவண்டு. (எள)

கவியாற்கருதப்படும் பொருளதனை
யுயர்த்திக் கூறுங்காலைநீருலக
நடையிறவாநிலை நழுவாதான்றோர்
வியப்பததிசய மென்மனார்புலவர்.



என்பது,

செய்யுளாற் கருதப்படும் பொருளை மிகுத்துக் கூறுங்கால், உலக வொழுக்கங் கெடாத நிலைமைத்தாகி, பெரியோர்வியப்பது அதிசயவணி.

பெருக்கணி யெனினுமொக்கும். (எஅ)

பொருள்வியப்புடையது பொருளெனப்படுமே.

என்பது,

பொருளாச்சரிய முடையது பொருளதிசயவணி.

வரலாறு. பண்டுபுர மெரித்ததீமேற் படர்ந்தின்று
மண்டமுகடு நெருப்பறு-தொண்டளிர்க்கை
வல்லிதழுவக் குழைந்த வடமேரு
வில்லிநுதன்மேல் விழி. (எகூ)

குணம்வியப்புடையது குணமெனப்படுமே.

என்பது,

குணமாச்சரியப்படுவது குணவதிசயம்.

வரலாறு. மாலைநிலவொளிப்ப மாதரிழைபுனைந்த
நீலமணி கணிழுலுமிழ-மேல்விரும்பிச்
செல்லுமிவள் குறித்தசெல்வன் பாற்சேர்தற்கு
வல்லிருளாகின்ற மறுகு. (அ0)

துணிபொருட்பெருக்கந் துணிவெனப்படுமே.

என்பது,

துணிந்த பொருளின் மிகுதியைக் கூறல் துணி வதிசயம்.

தொழி லதிசயமெனினு மொக்கும்.

வரலாறு. ஆளுங்கரியும் பரியுஞ் சொரிகுருதி
தோளுந்தலையுஞ் சுழித்தெறிந்து-நீளுமுயர்
வள்வார் முரசுமறிதிரை மேற்கொண்டொழுக
வெள்வா ளுறைகழித்தான் வேந்து. (அக)

திரிந்துவருவது திரிபெனமொழிப.

என்பது,

மாறுபட்டுவரல் திரிபதிசயம்.

வரலாறு. திங்கள்சொரி நிலவுசேர் வெள்ளிவள்ளத்துப்
பைங்கிள்ளை பாலென்றுவாய்மடுப்ப-அங்கயலே
காந்தர்முயக் கொழிந்தார் கைவறிதேநீட்டுவரா
லேந்திழையார் பூந்துகிலாமென்று. (அஉ)

அசரசரமிரண்டாகிய பொருளினு
மரிதியல்பால்வினை திறனலாதாங்குக்
கவிதானொருபொருள் கருதிமற்றவற்றிற்
சார்த்தியுரைப்பது தற்குறிப்பேற்றம்.

என்பது,

பெயரல்பொருளும் பெயர்பொருளுமாகிய இருபொருளினும் இயல்பாக நிகழும் தன்மையன்றிச் செய்யுள் தானொன்றை யெண்ணியவற்றின் கண்வைத்துக்கூறல் தற்குறிப்பேற்றவணி.

வரலாறு.

வேனில்வெயிற்குலர்ந்த மெய்வறுமைகண்டிரங்கி
வானின்வளஞ்சுரந்த வண்புயற்குத்-தானுடைய
தாதுமேதக்கமதுவுந் தடஞ்சினையாற்
போதுமீதேந்தும் பொழில். } அசரம்.

மண்படுதோட்கிள்ளி மதயானை மாற்றரசர் [ர்ந்து
வெண்குடையைத்தேய்த்தவெகுளியால்-விண்பட
பாயுங்கொலென்று பனிமதியம்போல்வதூஉந்
தேயுந்தெளி விசும்பினின்று. } சரம். (அங)

ஓதுமேதேனு மொருபொருட்டிறத்தா
லீதுவிளைந்த தென்றியம்புவதேது.

என்பது,

யாதேனு மொருபொருளின் திறத்தினால் ஈதுண்டானதென்று கூறல் ஏது.

வரலாறு.

எல்லைநீர்வையகத் தெண்ணிறந்தவெவ்வுயிர்க்குஞ்
சொல்லரிய பேரின்பந் தோன்றியதான்-முல்லைசேர்
தாதலைத்துவண் கொன்றைத்தாரலைத்து வண்டார்ப்பப்
பூதலத்து வீழ்ந்தபுயல். (அச)

அறிந்துவேறு யறையாதுகுறிப்பினுந்
தொழிலினுமரிதுணர் தொழிற்றிறனுட்ப
மாகுமென்மனா ரறிந்திசினோரே.



என்பது,

தெரிந்துகொண்டு வேறுபடக்கூறாமல், குறிப்பினாதல், வினையினாதல் அரிதாக நோக்கியறியும் வினைத் தன்மையையுடையது நுட்பம்.

வரலாறு.

காதலன் மெல்லுயிர்க்குக் காவல்புரிந்ததாற்
பேதையராயம் பிரியாத-மாதர்
படரிருள் கால் சீய்க்கும்பகலோனை நோக்கிக்
குடதிசையே நோக்குங்குறிப்பு. } குறிப்பு.

பாடல் பயிலும்பணிமொழி தண்பணைத்தோள்
கூடலவாவிற் குறிப்புணர்த்து-மாடவர்க்கு
மென்றீந்தொடையாழின் மெல்லவேதைவந்தா
ளின்றீங்குறிஞ்சியிசை. } தொழில். (அரு)

தான்கருதிய வெளிப்படுக்குஞ்சத்துவம்
வேறொன்றாலே விளைந்தனவாக
மறைத்துக் கூறுவதிலேசமாகும்.

என்பது,

தான்கருதியது வெளிப்படுக்கும் சத்துவங்களை வேறொன்றால் நடந்ததாக மறைத்துக்கூறல் இலேசவணி.

வரலாறு.

கல்லுயர்தோட்கிள்ளி பரிதொழுது கண்பனிசோர்
மெல்லியலார்தோழியர் முன்வேறொன்று-சொல்லுவராற்
பொங்கும்படைபரப்பி மீதெழுந்த பூந்துகள்சேர்ந்
தெங்கண் கலுழ்ந்தனவாலின்று. (அசு)

ஒன்றனைப்பழித்தும் புகழ்ந்துமுரைப்பது
மற்றதன்பாற்படும் வழுத்துங்காலே.

என்பது,

ஒன்றைப்பழித்தும் புகழ்ந்துங் கூறலும் அவ்விலேசமாம்.

வரலாறு.

ஆடன்மயிலியலியன்பனணியாகங்
கூடுங்கான்மெல்லென் குறியறியா-னாட
விளிவந்தசெய்கை யிரவாளன்யாண்டும்
விளிவந்தவேட்கையிலன். } பழிப்பு.

மேயகலவிவிளைபொழுது மெல்லென்னுஞ்
சாயரளராமற் ருங்குமாற்-சேயிழையாய்
போர்வேட்டமேன்மைப் புகழாளன்யான்விரும்பும்
தார்வேட்டதோள்விடலைதான்.
} புகழ். (௮௭)

புந்தியினிகழ்திறன் புறத்துப்புலனாய்
விளங்கலெண்வகை மெய்ப்பாட்டானு
மொழுகல்சுவையென வுரைக்கப்படுமே.

என்பது,

உண்ணிகழ் தன்மை வெளிப்படையாக விளங்க எட்டுவகை மெய்ப்பாட்டினானு நடத்தல் சுவையணி. (௮௮)

அவைதாம், அச்சமும்வீரமு மவலமுங்காமமு
மிழிப்பும்வியப்பு மெழில்படுநகையு
முருத்திரமுமென வுரைக்கப்படுமே.

என்பது,

அவை அச்சம், வீரம், அவலம், காமம், இழிப்பு, வியப்பு, நகை, உருத்திரம், என எட்டுவகைப்படும்.

வரலாறு.

சேர்ந்தபுறவினிறைதன் றிருமேனி
யீர்ந்திட்டுயர் துலைதானேறினான்-நேர்ந்த
கொடைவீரமோ மெய்ந்நிறைகுறையாவன்கட்
படைவீரமோசென்னி பண்பு.
} வீரம்.

கைந்நெரித்துவெய்துயிர்த்துக்காறளர்ந்துமெய்பனிப்ப
மையரிக்கணீர்ததும்ப வாய்புலர்ந்தா-ளையல்
சினவேல்விடலையாற்கையிழந்தசெங்கட்
புனவேழமேல்வந்தபோது.
} அச்சம்.

உடைதலையுமூளையு மூன்றடியுமென்புங்
குடருங்கொழுங்குருதி யீர்ப்ப-மிடைபேய்
பெருநடஞ்செய்பெற்றித்தே கொற்றப்போர்க்கிள்ளி
கருநடார்ச்சீறுங் களம்.
} இழிப்பு.

முத்தரும்பிச்செம்பொன் முறித்தைந்துபைந்துகிரின்
தொத்தலர்ந்துபல்கலனுஞ் சூழ்ந்தொளிருங்-கொத்தின
பொன்னேர்மணிகொழிக்கும் பூங்காவிரிநாடன் [தாம்
தன்னேர்பொழியுந்தரு.
} வியப்பு.



திங்கணுதல்வியர்க்கும் வாய்துடிக்குங்கண்சிவக்கு
மங்கைத்தளிர்நடுக்குஞ்சொல்லலையுங்-கொங்கை
பொருகாலுமூடிப் புடைபெயருங்காலு
மிருகாலுமொக்கு மிவர்க்கு.
} காமம்.

கழல்சேர்ந்தகால்விடலை காதலிமெய்தீண்டு
மழல்சேர்ந்து தன்னெஞ்சயர்ந்தான்-குழல்சேர்ந்த
தாமந்தரியா தசையுந்தளிர்மேனி
யீமந்தரிக்குமோவென்று.
} அவலம்.

கைபிசையாவாய் மடியாகண் சிவவாவெய்துயிரா
மெய்குலையாவேராவெகுண்டெழுந்தான்-வெய்யபோர்த்
தார்வேய்ந்ததோளான் மகளைத்தருகென்று
போர்வேந்தன் றூதிசைத்தபோது.
} உருத்திரம்.

நாண்போலுந்தம்மனைக்குத் தான்சேறலிந்நின்ற
பாண்போலும்வெவ்வழலிற் பாய்வதூஉங்-காண்டோழி
கைத்தலங்கண்ணாக் களவுகாண்பானொருவன்
பொய்த்தலை முன்னீட்டியற்றும் போந்து.
} நகை. (௮௯)

தன்னைப்புகழ்வது தன்மேம்பாட்டுரை,

என்பது,

தன்னைத்தானேபுகழ்வது தன்மேம்பாட்டுரையணி.

வரலாறு.

எஞ்சினாரில்லையெனக் கெதிராவின்னுயிர்கொண்
டஞ்சினாரஞ்சாது போயகல-வெஞ்சமத்துப்
போராதவராகத்தன்றிப்பிறர்முதுகிற்
சாராவென்கையிற்சரம். (௯௦)

தான்கருதிய பொருடனைக்கூறுதப்
பொருள்புலப்படப்பிறி தொன்றனைப்புகல்வது
பரியாயமெனப்பெயர் பகரப்படுமே.

என்பது,

தானெண்ணியபொருளைச் சொல்லாமல் அப்பொருள்தோன்ற வேறொருபொருளைக் கூறல்பரியாயவணி.

வரலாறு.

மின்னிகராமாதேவிரைச் சாந்துடன்புணர்ந்து
நின்னிகராமாதவிக்கீழ் நின்றருணீ-தன்னிகராம்
செந்தீவரமலருஞ் செங்காந்தட்போதுடனே
யிந்தீவரங்கொணர்வல்யான். (௯௧)

ஆக்கத்துயர்வு மகத்தினதுயர்வு
மிகுதியாக விளம்பலுதாத்தம்.

என்பது,

செல்வத்துயர்ச்சியையும், உள்ளத்துயர்ச்சியையும் மிகுத்துக் கூறல் உதாத்தவணி.

வரலாறு.

கன்றும்வயவேந்தர் செல்வம்பலகவர்ந்து
மென்றும்வறியோ ரிடர்கவர்ந்து-மொன்று
மறிவரிதாய்நிற்கு மளவினதாலந்தோ
செறிகதிர்வேற்சென்னி திரு. — செல்வமிகுதி.

மண்ணகன்றுதன்கிளையி னீங்கிவனம்புகுந்து
பண்ணுந்தவத்தியைந்துபாத்தன்று-னெண்ணிறந்த
மீதண்டர்கோன்குலையும் வெவ்வசுரர்வேரறுத்தா
கோதண்டமேதுணையாக் கொண்டு. [ன் — உதாத்தம். (௧௨)

கோதறுசிறப்பினுங் குணத்தினும்பொருளினு
முண்மையைவிலக்கி வேறொன்றாயறைகுவ
தவநுதியென்மனா ரறிந்திசினோரே.

என்பது,

சிறப்பினும், குணத்தினும், பொருளினும் உண்மையை மறுத்துப் பிறிதொன்றாகக்கூறல் அவநுதியணி.

வரலாறு.

நறைகமழ்தார்வேட்டார் நலனணியுநாணு
நிறையுநிறைதளரா நீர்மை-யறநெறிசூழ்
செங்கோலனல்லன் கொடுங்கோலன்றெவ்வடுபோர்
வெங்கோபமால் யானைவேந்து. — சிறப்பு.

மனுப்புவிமேல்வாழ மறைவளர்க்குமாரப்
பனித்தொடையற்பார்த்திபர்கோ னெங்கோன்-றனிக்கவி
தண்மைநிழற்றன்று தற்றொழுதபேதையர்க்கு [கை
வெண்மைநிழற்றாய் விடும். — குணம்.

நிலனும்விசும்பா நிமிர்காணீர்தியா
மலர்கதிராம்வான் மதியாமன்றி-மலர்கொன்றை
யொண்ணறுந்தாரா னொருவனியமானனுமா
யெண்ணிறந்த வெப்பொருளுமாம். — பொருள். (௧௩)



ஒருவகையாந்தொட ருரைபலபொருளி
னியல்புபுலப்பட வியம்பல்சிலேடை,

என்பது,

ஒருவகையாகிய தொடர்மொழி பலபொருள்களின் றன்மை தோன்றக்கூறல் சிலேடை.

வரலாறு. செம்பொன் பதின்றொடி, செம்பொன்பதின்றொடி,
செம்பு ஒன்பதின்றொடி. (௧௪)

குணந்தொழில்பொருளுடல் குலமுதலாயின
வெச்சங்காரணமாக வோர்பொருட்கு
மேம்பாடுதோன்ற விளம்பல்விசேடம்.

என்பது,

குணமும், தொழிலும், பொருளும், அவயவமும், சாதியுமுதலியன குறைபடுதல் காரணமாக ஒருபொருளுக்கு மேம்பாடு தோன்றக்கூறல் விசேடவணி.

வரலாறு.

கோட்டந்திருப்புருவங் கொள்ளாவவர்செங்கோல்
கோட்டம்புரிந்த கொடைச்சென்னி-காட்டுஞ்
சிவந்தனவில்லைத் திருந்தார்கலிங்கஞ்
சிவந்தனசெந்தீத்தெற. — குணவிசேடக்குறை.

எங்காமழைபொழியா நாளும்புனலோங்கும்
பூங்காவிரிநாடன் போர்மதமா-நீங்கா
வளைபட்டதார்க்கழல் கண்மாறெதிர்ந்ததெவ்வர்
தளைபட்டதாட்டாமரை. — தொழிற்குறை விசேடம்.

மேயசிரைபுரந்து வெண்ணெய்த்தொடுவுண்ட
வாயனார்மாறேற் றமர்புரியத்-தூய
பெருந்திருவும்பின்னுங்கொடுத்துடைத்தான் விண்மேற்
புரந்தரனும்வானேறும்போய். — சாதிக்குறை விசேடம்.

தொல்லைமறைதேர் துணைவன் பால்யாண்டுவளை
யெல்லையிருநாழிநெற்கொண்டோர்-மெல்லியலா
ளோங்குலகில்வாழு முயிரனைத்துமூட்டுமா
லெங்கொலிநீர்க்காஞ்சியிடை. — பொருட்குறைவிசேடம்.

யானையிரதம்பரி யாளிவையில்லைத்
தானுமனங்கன் றனுக்கரும்பு-தேனார்
மலரைந்தால்வென்று வடுப்படுத்தான்மார
னுலகங்கண்மூன்றுமொருங்கு. — உருப்புக்குறைவிசேடம். (௧௫)

ஒருபொருளுரைக்குங் காலகத்தெண்ணிப்
பொருண்முதலானவை யவற்றின்மிகுபொரு
ளுறவைத்தியம்புவ தொப்புமைக்கூட்டம்.

என்பது,

ஒருபொருளைக் கூறுமிடத் திதயக்கட் கருதியவற்றின் மிகுந்த பொருளைப் பொருந்தவெடுத்துக்கூறல் ஒப்புமைக் கூட்டவணி. (௯௭)

புகழினும்பழிப்பினும் புலப்படுமதுவே.

என்பது,

அவ்வொப்புமைக்கூட்டம் புகழ்தற்கண்ணும் பழித்தற்கண்ணுந்தோன்றும்.

வாலாறு.

பூண்டாங்குகொங்கை பொரவேகுழைபொருப்புந்
துண்டாததெய்வச் சுடர்விளக்கு-நாண்டாங்கும்
வண்மைசால்காஞ்சி வளம்பதியுமெங்காளு
முண்மையானுண்டிவ்வுலகு. } புகழொப்புமை.

கொள்பொருள்வெஃகிக் குடியலைக்கும்வேந்தனு
முள்பொருள்சொல்லாச் சலமொழிமாந்தரு
மில்லிருந்தெல்லை கடப்பாளுமிம்மூவர்
வல்லேமழையறுக்குங்கோள். } பழிப்பொப்புமைக்கூட்டம். ( )

முரணப்படும்பொரு ளொடுமொழியானு
முரணப்படுமியல் பாக்கமுற்றோன்றல்
விரோதமெனப்பெயர் வேண்டப்படுமே.

என்பது,

மாறுபட்டபொருளானுஞ் சொல்லானுமாறுபடுந் தன்மைவிளைவுமுன்னர்த்தோன்றல்விரோதவணி.

வாலாறு. சோலைபயிலுங் குயின்மழலைசோர்ந்தடங்க
வாலுமயிற்கணங்களார்த் தெழுந்த-ஞாலங்
குளிர்ந்தமுகில்கறுத்த கோபஞ்சிவந்த
விளர்ந்ததுணைபிரிந்தார்மெய். (௯௮)



கவிகருதியபொருள் காந்துமற்றதனை
நிந்திப்பதற்குமற் றொன்றனைநினைத்துப்
புகழ்வதுமாறு படுபுகழ்நிலையே,

என்பது

செய்யுளெண்ணிய பொருளைமறைத்து அப்பொருளை நிந்திப்பதற்கு வேறொருபொருளைப் புகழ்வது மாறுபடுபுகழ்நிலை.

வாலாறு.

இரவறியா யாவரையும் பின்செல்லாநல்ல
தருநிழலுந் தண்ணீரும் புல்லு-மொருவர்
படைத்தனவுங் கொள்ளாவிப் புள்ளிமான்பார்மேற்
றுடைத்தனவேயன்றோ தயர். (௯௯)

பழிப்பதுபோலும் பான்மையின்மேன்மை
புலப்படல்புகழாப் புகழ்ச்சியாகும்.

என்பது,

பழிப்பதுபோலும் பாகுபாட்டானொருபொருளுக்கு மேம்பாடு தோன்றல் புகழாப்புகழ்ச்சி.

வாலாறு.

போர்வேலின் வென்றதூஉம்பல் புகழிற்போர்த்ததூஉம்,
தார்மேவுதிண்புயத்துத் தாங்கியதூஉம்-சீர்நாடன்
றேரடிக்கீழ்க்காப்பதூஉஞ் செங்கட்டிருநெடுமா
லோரடிக் கீழ்வைத்தவுலகு. (௱)

ஒருவகையானொழு குவதொன்றற்குப்
பொருந்தினவொருபயன் வேறொன்றற்கு
நன்மைதீமை நாட்டுவதுநிதரிசனம்

என்பது,

ஒரு வகையானிகழ்வ தொன்றனுக்குப்பொருந்திய வொருபயன் வேறொன்றனுக்கும் நன்மையேனும் தீமையேனுந்தரல் நிதரிசனம்.

வாலாறு. பிறர்செல்வங்கண்டாற் பெரியோர்மகிழ்வுஞ்
சிறியோர்பொறுத திறமு-மறிவுறீஇச்
செங்கமலமேமலர்ந்த தேங்குமுதமேயசைந்த
பொங்கொளியோன் வீறெய்தும்போழ்து. (௧௦௧)

விழுமியவினையினும் குணத்தினுமிருபொருட்
கொருபுணர்புணர்ப்பது புணர்நிலையாகும்.

என்பது,

வினையினானும் பண்பினானும் இரண்டுபொருள்களுக்கு ஒருபுணர்ச்சியைக்கூறல் புணர்நிலையணி.

வாலாறு. வேண்டுருவங்கொண்டு கருகிவெள்பரந்து.
நீண்டமுகிலுடனே நீர்பொழிந்த-வாண்டனங்கோன்
மேவல்விரும்பும்பெரு நகையான்மெல்லாவி
காவல் புரிந்திருந்தோர்கண். (௧௦௨)

ஒன்றற்கொருபொருள் கொடுத்தொருபொருளை
வாங்கல்பரிவருத் தனமாகும்மே.

என்பது,

ஒருபொருளுக்கு ஒருபொருளைக்கொடுத்து வேறொருபொருளைப்பெறுவது பரிவருத்தனவணி.

வாலாறு. காபனைவென்றோன் சடைமதியுங்கங்கையுந்
தாமநிழலோரொன்று தாங்கொடுத்து-நாமப்
பருவாளரவின் பணமணிகடோறு
முருவாயிரம் பெற்றது. (௧௦௩)

வாழ்த்தியுரைப்பது வாழ்த்தெனப்படுமே.

என்பது,

வாழ்த்திக்கூறல் வாழ்த்தணி.

வாலாறு. மூவாத்தமிழாய்ந்த முன்னூன்முனிவாழி
யாவாழிவாழி யருமறையோர்-காவிரிநாட்
டண்ணலனபாயன் வாழியவன்குடைக்கீழ்
மண்ணுலகில்வாழிமழை. (௧௦௪)

பொருளணி முற்றும்.



மூன்றுவது.

# செய்யுளணியியல்.

தொகைநிலைகுளகமுத் தகந்தொடர்நிலையெனச்
செய்யுளால்வகைப்படுஞ் செப்புங்காலே.

என்பது,

செய்யுள் தொகைநிலைச்செய்யுள், குளகச்செய்யுள்,முத்தகச்செய்யுள், தொடர்நிலைச்செய்யுள் என நான்குவகைப்படும். (௧)

அவற்றுள்,

தொகைநிலைபலராற் சொல்லப்பட்டுப்
பலபாட்டாக வருநவுமொருவராற்
பகரப்பட்டுப் பலபாட்டாக
வருநவுமாமென வழுத்தினர்புலவர்.

என்பது,

முற்கூறியவற்றுள், தொகை நிலைச்செய்யுள், பலரானுரைக்கப்பட்டுப் பலபாட்டாக வருநவும், ஒருவரானுரைக்கப்பட்டுப் பலபாட்டாகவருநவுமாம். பலரானுரைக்கப்பட்டது நெடுந்தொகை. ஒருவரானுரைக்கப்பட்டது திருக்குறள். (௨)

அவைதாம்,

கருதருபொருளிடங் காலந்தொழிலெனு
நான்கினும்பாட்டினு மளவினுநடக்கும்.

என்பது,

முற்கூறியவை, பொருளும் இடனும் காலமுந்தொழிலும் ஆகிய நான்கனோடு, பாட்டினும் அளவினும் வரும்.

வாலாறு. பொருளாற்றொகுத்தது, புறநானூறு.
இடத்தாற்றொகுத்தது, களவழிநாற்பது.
காலத்தாற்றொகுத்தது, கார்நாற்பது.
பாட்டாற்றொகுத்தது, கலித்தொகை.
அளவாற்றொகுத்தது, குறுந்தொகை. (௩)

குளகம்பலபாட் டொருவினைகொள்ளும்.

என்பது,

குளகச்செய்யுள் பலபாட்டாய் ஒருவினையைக் கொண்டுமுடியும். ஒருவினையென்ற விதப்பான் ஒரு பெயரையுங் கொண்டுமுடியும்.

வரலாறு. வந்துழிக்காண்க. (௪)

முத்தகச்செய்யுட் டனிநின்றுமுடியும்.

என்பது,

முத்தகச்செய்யுள் தனித்துநின்றுமுடியும்.

வரலாறு. அகரமுதல வெழுத்தெல்லாமாதி
பகவன் முதற்றேயுலகு. (௫)

சொற்பொருளிருவகை தொடர்நிலையெனலே.

என்பது,

தொடர் நிலைச்செய்யுள், சொல்லினாற் றொடர்தலும் பொருளினாற்றொடர்தலுமென விருவகைப்படும். (௬)

ஒருபாவிறுதிமற் றொருபாமுதல்வரத்
தொடுப்பதுசொற்றொடர் நிலையெனப்படுமே.

என்பது,

ஒருசெய்யுளிறுதி மற்றொருசெய்யுண்முதலிலே வரத்தொடுப்பது சொற்றொடர்நிலை.

வரலாறு. கலம்பகமுதலியவைகளிற்காண்க. (௭)

காப்பியம்பெருங்காப் பியமெனவிருவகைப்
படும்பொருட்டொடர் நிலைபகருங்காலே.

என்பது,

பொருட்டொடர்நிலை சிறுகாப்பியமெனவும் பெருங்காப்பிய மெனவும் இரண்டுவகைப்படும். (௮)

அவற்றுள்,

அறம்பொருளின்பம் வீடாகியநான்கும்
புலப்படல்பெருங் காப்பியப்பொருளாகும்



என்பது,

அறமும், பொருளும், இன்பமும், வீடும் ஆகிய நான்குபொருளும் தோன்றல் பெருங்காப்பியம். (௯)

அறமுதனான்கினுங் குறைபாடுடையது
காப்பியமென்று கருதப்படுமே.

என்பது,

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கனுள் சில குறைந்து வருவது சிறுகாப்பியம். (௧௦)

சமாதிசிலீட்ட மாலேசஞ்சமதை
பொருட்டெளிவின்பம் புலன்சுகுமாரதை
யுதாரங்காந்திமற் றென்பதுமொன்றும்
வைதருப்பநெறி யாம்வழுத்திடினே.

என்பது,

சமாதியும், சிலீட்டமும், ஆலேசமும், சமதையும், பொருட்டெளிவும், இன்பமும், புலனும், சுகுமாரதையும், உதாரமும், காந்தியும் ஆகியபத்தும் வைதருப்பநெறி. (௧௧)

அவற்றுள்,

ஒன்றன்பாலுண் டாகியகுணமற்
றொன்றன்பாலுள வாகவுரைப்பது
சமாதியெனப்பெயர் சாற்றப்படுமே.

என்பது,

முற்கூறியவற்றுள், ஒருபொருளின்கணுளவாயிருக்கிற குணம் வேறொருபொருளின்கணுளவாகக்கூறல் சமாதிச்செய்யுள்.

வரலாறு. காலையரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலைமலரு மிந்நோய். (௧௨)

சிலீட்டஞ்சொற் செறிவுடையதாகும்.

என்பது,

சொற்களடர்த்தியுடையது சிலீட்டச்செய்யுள்.

வரலாறு. பற்றுகபற்றற்றான் பற்றினையப்பற்றைப்
பற்றுகபற்றுவிடற்கு. (௧௩)

ஆலேசந்தொகை யதிகமாகுதலே.

என்பது,

தொகைச்சொற்கள் அதிகமாகவரல் ஆலேசச்செய்யுள்.

வரலாறு. சுவையொளியூறோசை நாற்றமென்றைந்தின்
வகைதெரிவான் கட்டேயுலகு. (௧௪)

எழுத்துநான்கடியு மொத்தியல்வதுசமதை.

என்பது,

நான்கடியுமெழுத்துக்களொத்துவரல் சமதைச்செய்யுள்.

வரலாறு.

வருங்குன்றமொன்றுரித்தோன் றில்லையம்பலவன்மலயத்
திருங்குன்றவாணரிளங்கொடியே யிடரொய்தலெம்மூர்ப்
பருங்குன்றமாளிகைநுண்களபத் தொளிபாயநும்மூர்க்
கருங்குன்றம்வெண்ணிறக் கஞ்சுகமேய்க்குங்கனங்குழையே. (௧௫)

பொருளாலறிவது பொருட்டெளிவாகும்.

என்பது,

பொருளாலறிதல் பொருட்டெளிவுச்செய்யுள்.

வரலாறு. காமமுழந்து வருந்ினார்க்கேம
மடலல்ல தில்லைவலி. (௧௬)

மொழிதருமுற்றிய மோனையைப்பெறுவன
வின்பமென்மனா ரியல்புணர்ந்தோரே.

என்பது,

முற்றுமோனையைப்பெறல் இன்பச்செய்யுள்.

வரலாறு. துப்பார்க்குத்துப்பாய துப்பாக்கித்துப்பார்க்குத்
துப்பாயதூஉமழை. (௧௭)

உதாரமீகையைப் புகழ்ந்துரைப்பதாமெனலே

என்பது,

கொடையைப்புகழ்ந்து கூறல் உதாரச்செய்யுள்.



வரலாறு. இலனென்னுமெவ்வ முரையாமையீதல்
குலனுடையான் கண்ணேயுள. (௧௮)

பொருள்புலப்படல் புலனாமெனமொழிப.

என்பது,

பொருள் வெளிப்படத்தோன்றல் புலச்செய்யுள்.

வரலாறு. நன்றிமறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றேமறப்பது நன்று. (௧௯)

வன்கணமொழிதா வருஞ்சுகுமாரதை.

என்பது,

வல்லெழுத்துக்களின்றிவரல் சுகுமாரதைச்செய்யுள்.

வரலாறு. யானையால்யானையை மேவுவரான்
வினையால் வினைமையுமாம். (௨௦)

பொருட்பொலிவாற் புகழ்ந்துரைப்பதுகாந்தி

என்பது,

பொருண்மிகுதியால் புகழ்ந்துரைத்தல் காந்திச்செய்யுள்.

வரலாறு. தாம்வீழ்வார் மென்றோட்டுயிலினினிதுகொ
றாமரைக்கண்ணானுலகு. (௨௧)

எழுவாய்நதிப்புன லெனப்பயனிலையொடு
முடிவனவாற்று நீராமெனமொழிப.

என்பது,

அடிமுதலாற்று நீரைப்போல இறுதியோடுமுடிவன ஆற்று நீர்ப்பொருள்கோட் செய்யுள்.

வரலாறு. சொல்லருஞ் சூற்பசும்பாம்பின் றோற்றம்போன்
மெல்லவே கருவிருந்தீன்றுமேலலார்
செல்வமேபோற்றலை நிறீஇத்தேர்ந்தநூற்
கல்விசேர்மாந்தரினிறைஞ்சிக் காய்த்தவே. (௨௨)

ஏற்றபொருளுக் கியையுமொழிகளை
மாற்றியோரடியுள் வழங்கன்மொழிமாற்றே.

என்பது,

தன்னையேற்ற பொருள்களுக்குப் பொருந்திய சொற்களைமாற்றியோரடிக்குள் வழங்கல் மொழிமாற்றுப்பொருள்கோட்செய்யுள்.

வரலாறு. சுரையாழவம்மி மிதப்பவரையானைய
யானைக்குநீத்து முயற்குநிலையென்ப
கானகநாடன் சுனை. (௨௩)

அடியெலாந்தன்னிலை மாறிமுதலினு
மீற்றினுமிடையினு மெடுத்துச்சரிப்பினு
மோசையும்பொருளு மொழுகாதவருவன
அடிமறிமாற்றென வறையப்படுமே.

என்பது,

எல்லாவடிகளும் தன்னிலைமாறி முதலினும் கடையினும் நடுவினும் எடுத்துச் சரிப்பினும் அவ்வோசையும் பொருளுங் கெடாதுவரல் அடிமறிமாற்றுப் பொருள்கோட் செய்யுள்.

வரலாறு. கற்றகழிநூலுங் கைகூடாமுற்றிற்கு
முற்றபொருளுமொழிந்தகவு-நர்சுருதி
யோதலும்போய்ப்பெற்றவொளி நீத்திகழ்வாங்குத்
தாதனுளத்தழன்றக்கால். (௨௪)

பெயரும்வினையுமாஞ் சொல்லையும்பொருளையு
நிரனிறையாக நிறுத்திமற்றெருபொரு
ணேரும்பொருள்கோ ணிரனிறையாகும்.

என்பது,

பெயரும் வினையுமாகிய சொல்லையும் பொருளையும் நிரனிறையாக நிறுத்தி, வேறுபொருணேரும் பொருள்கோள் நிரனிறைப்பொருள்கோட் செய்யுள்.

வரலாறு. கொடிகுவளைகொட்டை நுசுப்புண்கண்மேனி. (௨௫)

இயற்பாவிறுமொழி யிடையினுமுதலினுங்
கூட்டிப்பொருளைக் கொள்ளுவதளைமறி
பாப்பாமெனப்பெயர் பகரப்படுமே.

என்பது,

செய்யுளிறுதிமொழியை இடையினும் முதலினும் கூட்டிப்பொருளைக்கொள்வது அளைமறிபாப்புப் பொருள்கோட் செய்யுள்.





வரலாறு.

தாழ்ந்தவுணர்வினராய்த் தாளுடைந்து தண்டூன்றித் திரிவார்தாமும்
சூழ்ந்தவினையாக்கை சுடவிளிந்து நீரகத்து சுழல்வார்தாமும்
மூழ்ந்தபிணிகலியமுன் செய்தவினையென்றே முனிவார்தாமும்
வாழ்ந்தபொழுதினேவானெய்து நெறிமுன்னி முயலாதாரே. (௨௬)

எழுவாயிறுதி நிலைமொழிதம்முட்
பொருணோக்குடையது பூட்டுவில்லாகும்.

என்பது,

முதல் இறுதிநிலை மொழிப்பொருள் நோக்குடையது பூட்டுவிற்பொருள்கோட் செய்யுள்.

வரலாறு. திறந்திடுங்கை வேன்முருகன் சீரடியைக்காணி
லறந்திகழுமாங்கக் கதவு. (௨௭)

இடைமொழிமுதலினு மீற்றினுமெய்தித்
தருவதுபொருளைத் தாப்பிசையாகும்.

என்பது,

நடுவேநின்றசொல் முதலினும் கடையினும் சென்று பொருளைத்தருவது தாப்பிசைப்பொருள் கோட்செய்யுள்.

வரலாறு. உண்ணாமையுள்ளதுயிர் நிலையூனுண்ண
வண்ணாத்தல் செய்யாதளறு. (௨௮)

யாப்பினுட்பற்பல வடிகளினின்ற
இருமொழிகளைப்பொரு ளேற்குமிடத்துக்
கூறுவகொண்டு கூட்டாகுமென்ப.

என்பது,

செய்யுளடிகள் பலவினுநின்ற சொற்களைப் பொருளேற்குமிடத்து எடுத்துக்கூறல் கொண்டு கூட்டுப்பொருள் கோட்செய்யுள்.

வரலாறு. ஆலின்மேற்பாயுங் குவளைகுளத்தலரும்
வாலினெடிய குரங்கு. (௨௯)

ஒருபொருள்பயவா தொருவித்தோன்றல்
பிரிபொருட்சொற் றொடர்ப்பெய்பாகுமே.

என்பது,

ஒருபொருளைப்பயவாமல் நீங்கித்தோன்றல் பிரிபொருட்சொற்றொடர்வழு.

வரலாறு.

கொண்டன்மிசைமுழங்கக் கோபப்பிறந்தனவால்
தெண்டிரைநீரெல்லாந் திருமுனியே-யுண்டுமிழ்ந்தான்
வஞ்சியார்கோமான் வரவொழிகமற்றிவளோர்
பஞ்சியார் செஞ்சீறடி. (௬0)

பித்தமயக்கினும் பெருங்குடிவெறியினும்
வழுவின்றென்மனார் மறையுணர்ந்தோரே.

என்பது,

பித்தினன்மயங்கியவிடத்தும் கள்ளுண்டு களித்தவிடத்தும் குற்றமன்று.

வரலாறு. காமருருவங்கலந்தேன்யான் சாங்கேயன்
வீமனெதிர்நின்று விலக்குமோ-தாமரைமேன்
மால்பொழியவந்தா ரருகர்மதுவுடனே
பால்பொழியுமிவ்வூர்ப்பனை. (௬௧)

அணியிலக்கணம் முற்றும்.

## முத்துவீரியம்

முற்றிற்று.

௹

## முத்துவீரியம்.

### பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழைபாடு. | திருத்தம். |
|---|---|---|---|
| உ | க | அப்ப்ாயிரம் | அப்பாயிரம். |
| ச0 | உ௫ | கடைஎிஹும். | கடையினும். |
| கக | எ | நிலையல் | நிலையில். |
| ,, | அ | இறுதி | (இ-ள்.) இறுதி. |
| ,, | ,, | மேலே. | மேலே, |
| ௬க | உக | நடந்த்ான் | நடந்தான். |
| ௬எ | கஎ | தோணறும் | தோன்றும். |
| ,, | ௬க | வானேக்கிவழு | வானேக்கிவழு. |
|  | ௬ | எலரந்தாமாக | எலாந்தாமாக. |
|  | ௬0 | பாவும | பாவும். |

P31
MC9
162935